தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை 1979-80

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

©
தமிழ்நாடு அரசு
1981

தமிழ்நாடு அரசின் சார்பாக எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பெற்றது.

UC5-2

(1735)

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS

உள்ளடக்கம்.

	பக்கம்.
முன்னுரை.	vii
1979—80 ஆண்டில் சீர்பெருமக்கள் வருகை	xiii
நிர்வாகம்	xxvii
ஆளுநரின் சுற்றுப்பயணம்	xxviii
தமிழ்நாடு சட்டப் பேரவை	xxxvii
தமிழ்நாடு சட்ட மேலவை	xliii
அத்தியாயம் 1—வேளாண்மைத்துறை.	
வேளாண்மை	1
கால்நடை வளர்ப்பு	11
பால் பண்ணை வளர்ச்சி	16
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்	17
அத்தியாயம் 2—வணிக வரி மற்றும் அறநிலையத்துறை.	
பத்திரப் பதிவு	22
முத்திரைத் தாள்கள் (அஞ்சல் துறை சாராதது)	25
எஸ்டேட் நிலவரி ஏற்பாடுகள்	26
வணிக வரிகள்	28
தமிழ் நாடு விற்பனை வரி மேல்முறையீடு நடுவர் மன்றம்	31
இந்து-சமய அறக்கட்டளைகள்	32
வக்ஃபு	34
அத்தியாயம் 3—கூட்டுறவுத் துறை	
கூட்டுறவு	35
அத்தியாயம் 4—கல்வித் துறை	
பள்ளிக் கல்வி	44
கல்லூரிக் கல்வி	50
சட்டக் கல்வி	53

அத்தியாயம் 4—கல்வித் துறை—தொடர்ச்சி.

	பக்கம்
தொழில் நுட்பக் கல்வி	53
அரசுத் தேர்வுகள்	57
பொது நூலகப் பணி	60
கன்னிமாரா பொது நூல்கம்	61
அரசு அரும் பொருட்காட்சியகங்கள்	62
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்	65
தொல்பொருள் ஆய்வு	68
தேசிய மாணவர் படை	70
தமிழ் வளர்ச்சி	72
அத்தியாயம் 5—நிதித் துறை.	
நிதி	78
மதிப்பீடு, செயல்முறை ஆய்வுத்துறை	82
கணக்கு கருவூல இயக்குநர் அலுவலகம்	86
அரசுப் புள்ளிவிவரத் தொகுப்பு நிலையம்	87
சிறுசேமிப்பு	93
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்	95
மாநில வணிகத் திட்டங்கள்	98
மாநிலத் திட்டக் குழு	102
உள்ளாட்சி நிதித்தணிக்கை	104
அத்தியாயம் 6—உணவுத் துறை.	
உணவுப் பொருள் வழங்கல்	107
தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்	110
அத்தியாயம் 7—வன, மீனளத் துறை.	
வனம்	113
சின்கோனா	117
மீனளம்	120
மரம் வளர்ப்பு விழா	123

அத்தியாயம் 8—மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறை.

	பக்கம்.
பிறப்பு—இறப்பு	124
தொற்றுநோய்த் தடுப்பு	125
மருத்துவம்—குடும்பநலம்	130
மனநலம்	139
மருத்துவக் கல்வி	140
கிங் நிலையம், கிண்டி	141
இந்திய முறை மருத்துவ இயக்குநர் அலுவலகம்	143
சுற்றுப்புறச் சுகாதாரம்	147

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS

அத்தியாயம் 9—உள் துறை.

சிவில் நீதிமன்றம்	148
குற்றவியல் நீதிமன்றம்	152
மதுவிலக்கு ஆயத்தீர்வை	153
தமிழ் நாடு காவல்துறை	155
சென்னை நகரக் காவல்	159
குற்றத் தடய ஆய்வகம்	163
சிறைகள்	165
ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்கள்	168
நன்னடத்தைப் பிரிவு	175
தீயணைப்புப் பணி	177
இடவசதிக் கட்டுப்பாடு	180
சிவில் பாதுகாப்பு	181
திரைப்பட இயல்	182

அத்தியாயம் 10—வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	186
நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டம்	189
சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகாரமன்றம்	190
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	193

	பக்கம்.
அத்தியாயம் 11—தொழில் துறை.	
மாநில மண்ணியல்	195
தொழில் வணிகம்	198
தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், கூத்தாநல்லூர்	206
தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்	206
தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்	210
தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்	212
தமிழ்நாடு சிறுதொழில் கழகம்	213
தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகம்	215
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்	221
கைத்தறிகள், நெசவாலைகள்	227
தமிழ்நாடு நெசவாலைக் கழகம்	230
கதர் கிராமத் தொழில்கள்	231
தமிழ்நாடு மட்பாண்ட நிறுவனம்	233
தமிழ்நாடு கனிவள நிறுவனம்	236
தமிழ்நாடு உப்புக் கழகம்	238
தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம்	239
தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம்	240
தமிழ்நாடு திரையரங்கு நிறுவனம்	241
கொதிகலன்கள்	243
கரும்பு இயக்குநர் அலுவலகம்	244
தமிழ் நாடு சர்க்கரை நிறுவனம்	245
பட்டு வளர்ப்பு	247
அத்தியாயம் 12—தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத் துறை.	
தொழிலாளர் நலன்	249
வேலைவாய்ப்புப் பயிற்சி	255
விலை விவரம் புள்ளியியல்	259
அத்தியாயம் 13—சட்டத் துறை	
சட்டமியற்றுமுறை	266

அத்தியாயம் 14—பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத் துறை—

பக்கம்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழு 288

தமிழ்நாடு சிவில் பணிகள் கூட்டுக் குழு 291

ஒழுக்கக் கண்காணிப்பு இலஞ்ச ஒழிப்பு 292

சிவில் பணிப் பயிற்சி 299

ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம் 302

அத்தியாயம் 15—பொதுத் துறை

முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு 304

புகார் பிரிவு 304

முன்னாள் இராணுவ வீரர் இயக்குநர் அலுவலகம் 305

தேர்தல்கள் 309

செய்தி, மக்கள் தொடர்பு 313

சுற்றுலா 318

கர்நாட்டிக் உதவித் தொகைகள் 319

கணக்கெடுப்பு நிறுவனம் 320

வட்டாரப் படை 321

மொழிபெயர்ப்பு 323

அத்தியாயம் 16—பொதுப்பணித் துறை

நீர்ப் பாசனம் 324

நிலத்தடி நீர் இயக்குநர் அலுவலகம் 332

தமிழ்நாடு மின் வாரியம் 335

மின் ஆய்வாளர் அலுவலகம் 338

பொதுப் பணிகள் கட்டிடங்கள்) 340

அத்தியாயம் 17—வருவாய்த் துறை

நில வருவாய் 344

நிலமற்ற ஏழைகளுக்கு நிலப் பட்டாக்கள் 344

நிலச் சீர்திருத்தம் 345

நகர்ப்புற நிலவரி 357

	பக்கம்
வேளாண்மை வருமானவரி	362
நிலவளவை நில ஆவணங்கள்	363
மனு நீதித் திட்டம்	365
புயல் வெள்ளம்	366
முதியோர் ஓய்வூதியத் திட்டம்	371
பர்மா-இலங்கை அகதிகள் மறுவாழ்வு	373

அத்தியாயம் 18—ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை.

ஊராட்சி வளர்ச்சி	381
வன ஊராட்சி	387
உள்ளாட்சி நிர்வாகம்	388
சென்னை மாநகராட்சி	391
மதுரை மாநகராட்சி	393
தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம்	396
பூமிதானமும் கிராமதானமும்	398
நகராட்சித் தேர்தல்	399

அத்தியாயம் 19—சமூக நலத் துறை

சமூக நலம்	400
ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன்	410
பின்தங்கிய வகுப்பினர் நலன்	416

அத்தியாயம் 20—போக்குவரத்துத் துறை

போக்குவரத்துக் கழகம்	424
மோட்டார் வண்டிகள் நிர்வாகம்	427
மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம்	431
சிறு துறைமுகங்கள்	432
நெடுஞ்சாலை கிராமப்பணிகள்	434
தேசிய நெடுஞ்சாலை	437
எழுதுபொருள்-அச்சுத் துறை	440
பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்	442

முன்னுரை.

இந்த அறிக்கை 1979-80 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டின் நிர்வாகம் பற்றிய முக்கியக் கூறுகளை எடுத்துக் கூறுகிறது. அரசுத் துறைகள் அனைத்தும் சீராக முன்னேறி வந்திருப்பதை இவ்வறிக்கையின் வாயிலாக அறியலாம். பட்டுப்பூச்சி வளர்ப்பு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு திரைப்படத் தொழில் பிரிவு ஆகியவை இந்த ஆண்டு அறிக்கையில் புதிதாக இடம் பெற்றுள்ளன.

இவ்வாண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் சிறந்த முறையில் நிர்வாகம் நடைபெற்றிட இரண்டாகப் பிரிக்கப்பட்டது. புதிய மாவட்டத்திற்குப் "பெரியார் மாவட்டம்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இம்மாவட்டத்தின் தலைமை இடம் ஈரோடு.

1979-80 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் இயல்பான அளவிற்கு மழை பெய்தது. பாசனத் திட்டங்களின் நீர்கோள் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை நன்கு பெய்தது. சூன் திங்களில் உரிய நாளில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிடப்பட்டது. குறுவை அறுவடை பெரும்பயன் அளித்திட இது பெரிதும் உதவியது. அக்டோபர் திங்கள் கடைசி வாரத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது. மாநிலம் முழுதும் பரவலாகப் பெய்து, ஆறுகள் பலவற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. பாசன ஏரிகளில் உடைப்புகள் ஏற்பட்டன. ஆயினும் இச்சேதம் பரவலாக இருந்தாலும் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட சேதத்தைப்போல் அவ்வளவு மிகுதியாக இல்லை. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை அரசு உடனடியாக மேற்கொண்டு மக்களின் துயரைத் துடைத்தது.

சட்டத்தைச் செயல்படுத்துதல், ஒழுங்கைப் பேணிக் காத்தல், குற்றங்கள் நிகழா வண்ணம் தடுத்தல், துப்புத்துலக்குதல் ஆகியவை குறித்து 1979-80-ல் போதிய கவனம் செலுத்தப்பட்டது.

கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களும் ஏனையோரும் புயலாலும் வெள்ளத்தினாலும் அடிக்கடித் தொல்லைக்கு ஆளாகின்றனர். இதனைப் போக்க புயலுக்கு இலக்காகும் முக்கிய இடங்களில் புயல்-வெள்ளக் காப்பிடங்கள் பலவற்றைக் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டது. இவ் வாண்டில் 14 புயல்-வெள்ளக் காப்பிடங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் 2.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 50 இடங்களில் இத்தகைய காப் பிடங்களை ஒவ்வொன்றும் ரூபாய் 3 இலட்சம் செலவில் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இப்பணி நடந்தேறி வருகிறது.

இவ்வாண்டில், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, பெரியார், கோயம்புத்தூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஆறு தொழில் மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 14 மாவட்டத் தொழில் நிலையங்கள் இருந்தன. இத்தொழில் மையங்களின் வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் 5,632 தொழிற் பிரிவுகள் நிறுவப் பட்டிருந்தன. இவை 1979-80 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கி விட்டன; அல்லது உற்பத்தியைத் தொடங்க ஆயத்தமாயிருந்தன. அத் தொழிற் பிரிவுகளில் சுமார் 67,684 பேர் வேலை வாய்ப்பு பெற்றனர்.

வேளாண்மைக் காரியங்களுக்காக அதிகம் பேருக்கு மின்சாரம் வழங்கு வதில் தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் மின்னிணைப்பின் நிறுவனத் திறன் 2,719 மெகாவாட் ஆகும். இந்த அளவு மின்சாரம் தென் பிராந்தியத்தில் உள்ள மின் இணைப்புகளிலேயே இதுதான் மிகவுயர்ந்த நிறுவனத் திறன் பெற்றதாகும். இந்தியா முழுமைக்கும் எடுத்துக்கொண்டால், தமிழ்நாடு இந்தியாவில் மூன்றாம் இடத்தை வகிக் கிறது. மகாராட்டிரம், உத்திரப் பிரதேச மாநிலங்கள் முதல் இரு இடங் களை வகிக்கின்றன. இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் மொத்த அளவு 10,414 மில்லியன் யூனிட்டுகளாகும். புதிதாக சுமார் 2.59 இலட்சம் பேருக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. இதனையும் சேர்த்து மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் மொத்த எண்ணிக்கை 39.97 இலட்சம் ஆகும். இதில் 1.67 இலட்சம் குடிசை வாழ்வோருக்கு அளிக்கப்பட்ட மின் இணைப்பும் அடங்கும். இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் வாழும் சிற்றூர்கள் அனைத்திற்கும் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் இம்மாநிலத்தில் 10+2+3 என்னும் கல்வி முறை கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து 1979-80 ஆம் கல்வி ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பு (P.U.C.) கல்லூரிகளிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அரசினர் கல்லூரிகள் 43-லும், அரசு மானிய உதவி பெறும் 88 கல்லூரிகளிலும் பற்பல புதிய பாட முறைகள் கொண்டு வரப்பட்டன.

இவ்வாண்டில் நமது மாநிலத்தில் 27,662 தொடக்கப் பள்ளிகளும், 5,685 நடுநிலைப் பள்ளிகளும், 2,088 உயர்நிலைப் பள்ளிகளும், 1,138 மேல் நிலைப் பள்ளிகளும் இருந்தன. இந்த 36,573 பள்ளிகள் அனைத்திலும் பயின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 51,13,241 ; மாணவிகளின் எண்ணிக்கை 37,65,697 ஆகும். பள்ளி செல்லும் வயதடைந்த பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 65,80,800 ஆகும். இதில் பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 62,27,764 ஆகும். இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டில் 94.25 சதவிதமாயிருந்ததற்கு மாறாக இவ்வாண்டில் 95.64 சதவிதமாயுள்ளது.

இம்மாநிலத்தில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இருந்தன. இது நாடு முழுவதிலுமுள்ள மொத்தக் கைத்தறிகளின் எண்ணிக்கையில் ஏறத்தாழ 1/6 பங்காகும். 13.34 இலட்சம் கைத்தறி நெசவாளர் இருந்தனர். கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசு ரூ. 974.07 இலட்சம் செலவிட்டது. 12,500 விசைத்தறிகள் இருந்தன. இவற்றுக்குப் பஞ்சாலைத் துறை ஆணையாளர் உரிமம் வழங்கியிருந்தார். ஜனதா வேஷ்டி, லுங்கிகள், புடவைகள் நெய்வதில் 10,000 தறிகள் ஈடுபட்டிருந்தன. 11.16 மில்லியன் ஜனதா வேட்டிகள், லுங்கிகள், புடவைகள் தயாரிக்கப்பட்டு கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

இம்மாநிலத்தில் 31—3—1980 நிலவரப்படி 79,490 பேர் முதியோர் உதவித் தொகை பெற்றுவந்தனர். இந்த உதவித் தொகை 1—4—1979-லிருந்து ரூபாய் 20-லிருந்து ரூபாய் 25 ஆக உயர்த்தப்பட்டது. 22,500 ஆதரவற்ற விதவைகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்பட்டது. 11,980 உடலூன

முற்றோர் இருந்தனர். முதியோர் உதவித் தொகை பெறும் அனைவருக்கும் சுதந்திர தினத்தன்றும் பொங்கல் பண்டிகையின்போதும் கைத்தறி வேட்டி, புடவைகள் வழங்கும் திட்டம் இவ்வாண்டில் கொண்டுவரப்பட்டது.

உணவுப் பொருள்களை வழங்கிட தமிழகம் முழுவதும் சுமார் 17,000 சில்லறை விற்பனைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகமோ கூட்டுறவு சங்கங்களிலோ பொது பங்கீட்டு முறையின் கீழ் நடத்தின. 106 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. இன்றியமையாப் பொருட்களை வழங்குவதற்காக "கிராமத்திற்கு ஒரு கடை" என்ற திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடை ஒன்றைத் தொடங்கியது ஒரு சிறந்த அம்சமாகும்.

நிலமற்ற 29,928 பேருக்கு 29,838.06 ஏக்கர் பயிரிடத்தக்க நிலம் ஒப்படை செய்யப்பட்டது. 19,651 பேருக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

குடும்ப நலத் திட்டம் கட்டாயப்படுத்தப்படாமலும் நிர்ப்பந்தமின்றியும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் 30,488 ஆண்களுக்கும் 1,15,033 பெண்களுக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

பட்டுப் பூச்சி வளர்ப்பதற்காக புதிய துறை ஒன்று இயக்குநர் ஒருவரின் கட்டுப்பாட்டில் 1—4—1979 அன்று ஏற்படுத்தப்பட்டது. ரூ. 3 கோடி மதிப்புள்ள சுமார் 1.06 லட்சம் கி. கி. பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதால் கிராமப் பகுதிகளில் 50,000 பேருக்கு முழு நேர வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள 25.70 மில்லியன் கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இடைவிடாமல் அந்தந்தக் கிராமங்களுக்கு மிக அண்மையிலேயே வழங்குவதுதான் கிராமப்புற குடிநீர் வழங்கு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குடிநீர் வழங்கும் 10 புதிய திட்டப்பணிகளும், முன்பே மேற்கொள்ளப்பட்ட இரு திட்டங்களின் மேம்பாட்டுப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 2.60 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

அரசின் பல்வேறு துறைகள் ஆற்றியுள்ள பணிகளும் அவற்றின் சாதனைகளும் இந்த அறிக்கையின் பல்வேறு அத்தியாயங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவ்வெளியீடு மிகவும் பயனுள்ளதாக அமையுமென நம்புகிறோம்.

கா. திரவியம்,

அரசுத் தலைமைச் செயலாளர்.

தலைமைச் செயலகம்,

சென்னை-9,

22—9—1981.

1979 - 80 ஆம் ஆண்டில் சிர் பெருமக்கள் வருகை,

1979-80 ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர் குடியரசுத் துணைத் தலைவர் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தது பற்றிய விவரங்கள்.

நாள்	
1979 ஏப்ரல் 11 முதல் 13 வரை.	இந்தியக் குடியரசுத் தலைவர் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் வருகை தந்தார். சென்னை-விஜயவாடா மின்சார இருப்புப்பாதையைத் தொடங்கி வைத்தார். சென்னையில் புதிய புறநகர் இரயில் தொடக்க-முடிவிடத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.
1979 ஜூலை 4—5 ..	இந்தியக் குடியரசுத் தலைவர் சென்னைக்கும் நெய்வேலிக்கும் வருகை தந்தார். நெய்வேலியில் இரண்டாம் சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்கிவைத்தார்.
1979 டிசம்பர் 5 முதல் 7 வரை.	இந்தியக் குடியரசுத் தலைவர் சென்னை, சிதம்பரம், பாண்டிச்சேரிக்கு வருகை தந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவைத் தொடங்கி வைத்தார்.
1980 பிப்ரவரி 15 ...	இந்தியக் குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தார்.
1979 ஏப்ரல் 13—15 —	இந்தியப் பிரதம அமைச்சர், சென்னை, திருநெல்வேலிக்கு

	வருகை தந்தார். சென்னை நேரு விளையாட்டு மைதானத்தில் அனைத்திந்திய தொடக்க ஆசிரியர் கூட்டமைப்பு மாநாட்டைத் தொடங்கி வைத்தார். திருநெல்வேலி, மதுரை திரவியம், தாயுமானவர் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார். கன்னியாகுமரி விவேகானந்தா நினைவாலயத்திற்கு அருகில் சிறு பாறையில் திருவள்ளுவர் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்லும் புதிய இருப்புப் பாதையில் முதல் இரயிலைத் தொடங்கி வைத்தார்.
1979 ஜூன் 4	இந்தியப் பிரதம அமைச்சர் சென்னைக்கு வருகை தந்தார்.
1979 நவம்பர் 24 ...	இந்தியப் பிரதம அமைச்சர் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலத்திற்கு வருகை தந்தார். கலைவாணர் அரங்கத்தில் திரு. பக்தவச்சலம் படத்தைத் திறந்து வைத்தார்.
1980 சனவரி 1	இந்தியப் பிரதம அமைச்சர் கோயம்புத்தூருக்கும், சென்னைக்கும் வருகை தந்தார்.
1980 பிப்ரவரி 29 ..	இந்தியப் பிரதம அமைச்சர் சென்னைக்கு வருகை தந்தார்.
1979 டிசம்பர் 18—22 ..	இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் வருகை

தந்தார். புயலால் பாதிக்கப் பட்ட கிராம மக்களுக்கு பாது காப்பு அளிப்பதற்காக இந்தியச் செஞ்சிலுவை சங்கம் முட்டுக் காட்டில் கட்டிய புகலிடம் ஒன்றைத் தொடங்கி வைத்தார். டாக்டர் இராஜமன்னார், திரு. பக்ருதீன் அலி அகமது படங் களைத் திறந்து வைத்தார். சென்னையில் மியூசிக் அகாடமி யின் 53 ஆம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

1979-80 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுக்கு வருகை தந்த வெளி நாட்டுப் பிரமுகர்களின் விவரங்கள்.

1-4-1979—2-4-1979 .. க்யூபா அறிவியல்—தொழில் நுட்ப மாநிலக் குழுத் தலைவர், டாக்டர் ஜெயிலி மரீன் எல்லோ வியாடின் ரெல்மா வெளி விவகார அமைச்சர் பாலத் தீவுகள், திரு. அப்துல்சத்தார் நியூசிலாந்து அவைத் தலைவர் திரு. ஜெ. கே. ஹாரிகன் சென்னைக்கு வருகை தந்தனர்.

5-4-1979—8-4-1979 .. வியட்நாம் பிரதிநிதிகள் குழு சென்னை, தஞ்சாவூர், மதுரைக்கு வருகை தந்தது.

7-4-1979 .. .. ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச் சர் திரு. ஏ. சி. எஸ். அமீது சென்னைக்கு வருகை தந்தார்.

7-4-1979—9-4-1979 .. ருமேனியா வனம் — கட்டிட அமைச்சர் திரு. ஜார்ஜ் லாசர் சென்னைக்கு வருகை தந்தார்.

15-4-1979	மாட்சிமை தங்கிய கிரீஸ் நாட்டு அரசி சென்னைக்கு வருகை தந்தார்.
24-4-1979—26-4-1979..	ஸ்ரீலங்கா கிராமத் தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டைமான் சென்னைக்கு வருகை தந்தார்.
24-4-1979—25-4-1979..	சிரியா, போக்குவரத்து அமைச்சர் மேதகு டாக்டர் சலின் யாசின் சென்னைக்கு வருகை தந்தார்.
1-5-1979	ஜாமயக்கர் இளைஞர் விளை யாட்டுத் துறை அமைச்சர் திரு. உகயூக் ஸ்மால் ஜாமய்க்கா சென்னைக்கு வருகை தந்தார்.
14-5-1979	ஜாமய்க்கா தேசியப் பேரவைத் தலைவர் திரு. ஆர். நபியாட்டோ சென்னைக்கு வருகை தந்தார்.
4-5-1979—5-5-1979 ..	மாலத்தீவுகள் வெளி விவகார அமைச்சர் திரு. பதுல்லா சமால் சென்னைக்கு வருகை தந்தார்.
19-5-1979—20-5-1979 ..	ஸ்ரீலங்கா தொழில் துறை துணை அமைச்சர் திரு. டென்சில் பெர்ணாண்டோ சென்னைக்கு வருகை தந்தார்.
21-5-1979—22-5-1979.. 25-5-1979—26-5-1979	சேசெல்லி அரசின் நிலையான செயலாளர் (நிதித் துறை) திரு. கை. மாரேல் சென்னைக்கு வருகை தந்தார்.
6-6-1979—9-6-197: .	ஜப்பான் தூதுவர் திரு. மாசோ கனசாவா சென்னைக்கும், கொச்சினுக்கும் வருகை தந்தார்.

6–6–1979—9–6–1979 ..	ஜப்பான் பிரமுகர்கள் 13 பேர் அடங்கிய குழு சென்னைக்கு வருகை தந்தது.
15–6–1979—16–6–1979 ..	மலேசியா போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மாணிக்க வாசகம் சென்னைக்கு வருகை தந்தார்.
2–8–1979—5–8–1979 ..	பிரெஞ்சு தூதுவர் திரு. ஆண்டிரி ரோஸ் சென்னை, பாண்டிச்சேரி மாமல்லபுரத்திற்கு வருகை தந்தார், தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்தித்தார், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்களுடன் விருந்துண்டார். இந்திய பிரெஞ்சு கலாச்சார நிறுவனத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டார், பாண்டிச்சேரி லெப்டினன்ட் கவர்னருடன் விருந்துண்டார்.
7–8–1979—13–8–1979 ..	உலக வங்கியில் இந்தியா, பங்களாதேஷ், ஸ்ரீலங்கா நிர்வாக இயக்குநர் திரு. சையது தயாமன் சென்னைக்கு வருகை தந்தார்.
20–8–1979—12–9–1979 ..	ஸ்ரீலங்கா வட்டார வளர்ச்சித் துறை அதிகாரி திரு. இராஜ துரை சென்னை, இராமேஸ்வரம், திருத்தணி திருப்பதி, புட்ட பத்தி, பெங்களூர், சிதம்பரத்திற்கு வருகை தந்தார்.
26–8–1979—27–8–1979 .. *30–8–1979*	பங்களாதேஷ் அவைத் துணைத் தலைவர் திரு. சுல்தான் அகமது சௌத்ரி சென்னைக்கு வருகை தந்தார்.
28–8–1979—4–9–1979 ..	இந்தியாவிள்ள அமெரிக்க தூதுவர் திரு. இராபர்ட் கொஹின்

	சென்னை, கோயம்புத்தூருக்கு வருகை தந்தார், தமிழ்நாட்டு ஆளுநர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோரைத் சந்தித்தார்.
5-9-1979—8-9-1979 ..	இந்தியாவிலுள்ள ஸ்ரீலங்கா தூதர் திரு. டி. பி. பனாபொக்கே சென்னை, சூலூர்பேட்டைக்கு வருகை தந்தார். தமிழ்நாடு ஆளுநர் செல்வி பி. டி. சரஸ்வதி ஆகியோரைச் சந்தித்தார். சூலூர்பேட்டையில் ஸ்ரீலங்கா அகதிகளைச் சந்தித்தார்.
8-9-1979—10-9-1979..	மாட்சிமை தங்கிய ஸ்பெயின் நாட்டு அரசி அசாபியா சென்னைக்கு வருகை தந்தார்.
14-9-1979—19-9-1979..	ஷை
8-9-1979—10-9-1979 .. ***14-9-1979— 19-9-1979***	மாட்சிமை தங்கிய ஸ்பெயின் நாட்டு அரசியின் தாயார் சென்னைக்கு வருகை தந்தார்.
17-9-1979—22-9-1979..	மாலத் தீவு குடியரசுத் தலைவர் திரு. மௌமூம் அப்துல் சுயாம், சென்னைக்கு வருகை தந்தார்.
20-9-1979—27-9-1979..	மாட்சிமை தங்கிய கிரீஸ் நாட்டு அரசி சென்னைக்கு வருகை தந்தார்.
26-9-1979—28-9-1979..	நெதர்லாந்து தூதுவர் திரு. லியோபாட் சென்னை, மகாபலி புரத்திற்கு வருகை தந்தார். நெதர்லாந்து தூதரகம் துறை முகப் பொறுப்புக் கழக

அலுவலகம், சென்னைப் பல்கலைக் கழகம், இ. பெ. தொழிற்சாலை, வியாசர்பாடியிலுள்ள சமூக நல நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

28–9–1979—29–9–1979.. மாலத்தீவு வெளி விவகார அமைச்சர் திரு. பதுல்லா ஜமீல் சென்னைக்கு வருகை தந்தார்.

13–10–1979—15–10–1979 சீனப் பத்திரிகைப் பிரதிநிதிகள் ஐவர் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் வருகை தந்தனர். கபாலீச்வரர் கோயில், இந்து பத்திரிகை அலுவலகம், இந்திய தொழில் நுட்பவியல் நிறுவனம். (I.I.T.) வள்ளுவர் கோட்டம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். இந்து பத்திரிகையைச் சேர்ந்த என். இராம், அளித்த விருந்தில் கலந்து கொண்டனர்.

12–10–1979—15–10–1979. கென்யா குடியரசுத் தூதுவர் திரு. கெடாங்கா சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் வருகை தந்தார். அசோக் லேலாண்ட், இரயில் பெட்டி தொழிற்சாலை, இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம், அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம், இந்துஸ்தான் பொறியியல் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றைப் பார்வையிட்டார். கென்யா மாணவர்களைச் சந்தித்தார்.

15-10–1979—16–10–1979. மாலத்தீவு வெளி விவகார அமைச்சார் திரு. பதுல்லா ஜமீல், சென்னைக்கு வருகை தந்தார்,

2-11-1979—5-11-1979. லெனின் கிராட் வட்டாரக் கலாச்சாரத் துறைத் தலைவர் திரு. டிராஃப்மோவ் தலைமையில் 50 பேர் அடங்கிய உடேகன் நடனக்குழு சென்னைக்கு வருகை தந்தது.

6-11-1979 .. இந்தியாவிலுள்ள பின்லாந்து நாட்டுத் தூதுவர் திரு. ரிஸ்டோ இல்மாரி அண்டிரோ ஹைலாரினன் சென்னைக்கு வருகை தந்தார்.

5-11-1979—11-11-1979. ருமேனியா, மெக்ஸிகோ பிரிட்டன் அமெரிக்கா, ஸ்பெயின், பாகிஸ்தான், அர்ஜென்டைனா, செக்கோஸ் லாவியா, ஜெர்மன் நாடுகளைச் சேர்ந்த 9 பேர் அடங்கிய வெளிநாட்டு அணு அறிவியல் பிரதிநிதி குழு சென்னைக்கு (கல்பாக்கம்) வருகைதந்தது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலுள்ள அணு ஆற்றல் திட்டங்களைச் செயல் படுத்தல், பராமரித்தல் பற்றிய கருத்தரங்கில் பங்கு கொண்டது.

17-11-1979—20-11-1979. இந்தோனேஷியா தூதுவர் மேதகு வைஸ் அட்மிரல் சியான்சுல் பாஹிரி சென்னைக்கு வருகை தந்தார். கமல் இன்ஜினியரிங் கம்பெனி, மணலி, காஸ்டிக் சோடா, ஆஷ் கம்பெனி, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய ரசாயன பொறியியல் நிறுவனம், I. C. F. ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

2-12-1979 .. ஆசியா பசிபிக் உதவி நிர்வாகி வட்டார இயக்குநர் திரு. ஆண்ட்ருஜோசப் சென்னைக்கு வருகை தந்தார்.

2-12-1979—13-12-1979.. ஸ்ரீலங்கா அமைச்சர் திரு. இராஜதுரை சென்னை, பெங்களூர், சிதம்பரத்திற்கு வருகை தந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவில் பங்கு கொண்டார்.

8-12-1979 .. மாலத்தீவுகள் சுகாதார அமைச்சர் திரு. முஸ்திபா ஹூசேன் சென்னைக்கு வருகை தந்தார்.

12-12-1979—14-12-1979 நாட்டிடை அணுசக்தி இயக்குனர் டாக்டர் எக்லண்டு அவரது துணைவியார் மற்றும் 2 பேர்களும் சென்னை,கோவளம்,காஞ்சிபுரம், கல்பாக்கம், மகாபலிபுரத்திற்கு வருகை தந்தனர். கல்பாக்கம் ஆராய்ச்சி நிலையத்தையும் பார்வையிட்டனர்.

14-12-1979—15-12-1979. ஐக்கிய நாடுகள் சபை சார்புச் செயலாளர் ஜெனரல் அரசியல் திரு. மிக்கில் டெமிடிரிவிக் சிடென்கோ சென்னைக்கும் மகாபலிபுரத்திற்கும் வருகை தந்தார். அரசினர் அரும்பொருள் காட்சியகம், மெரீனா, பாம்பு பூங்கா ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

24-12-1979—28-12-1979 திரு. இப்ராஹிம் சாயிப் (மாலத்தீவுகளின் முன்னால் அமைச்சர் தற்போது மாலத்தீவு குடியரசுத் தலைவரின் முதுநிலை ஆலோசகராக உள்ளார்) சென்னைக்கு வருகை தந்தார்.

நாள்	
4-1-1980—12-1-1980	திரு. இப்ராஹிம் சாயிப் (மாலத் தீவுகளின் முன்னாள் அமைச்சர் தற்போது மாலத்தீவு குடியரசுத் தலைவரின் முதுநிலை ஆலோசகராக உள்ளார்) சென்னைக்கு வருகை தந்தார்.
5-1-1980—6-1-1980	மலேசியா தேர்தல் கமிஷன் செயலாளர் திரு. அப்துல் ரஷீது பின் ஹஜி அப்துல் ரஹ்மான் ஏனைய 4 பேரும் சென்னைக்கும் சென்னையிலுள்ள வாக்குச் சாவடிகளுக்கும் வருகை தந்தனர். சென்னை மாநகராட்சி ஆணையாளருடன் விவாதித்தனர்.
7-1-1980—17-1-1980	ஸ்ரீலங்கா கல்வி அமைச்சர் திரு. ஹிசாங்கா விஜயரத்னே, சென்னை, உதகமண்டலம், கோத்தகிரி ஆகிய இடங்களுக்கு வருகை தந்தார்.
17-1-1980—23-1-1980	மலேசியா துணைப் பிரதம அமைச்சர் டாட்டோ செரி டாக்டர் மஹாத்து பின் முகம்மது சென்னைக்கு வருகை தந்தார்.
20-1-1980	ஸ்ரீலங்கா தொழில்துறை அமைச்சர் திரு. விரால் மாத்யூ சென்னைக்கு வருகை தந்தார்.
25-1-1980—27-1-1980	அமைச்சர், அயல்நாட்டு வாணிகம் அனைத்து நாட்டு பொருளாதார கூட்டுறவு மாநிலச் செயலாளர் திரு. அலக்ஜான்ட்கு மர்பாரி டிஸ்கா சென்னைக்கு வருகை தந்தார்.

நாள்	
29–1–1980—30–1–1980	பெல்ஜியம் கூட்டுறவு வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. எஸ் கின்ஸ், சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரத்திற்கு வருகை தந்தார்,
1–2–1980—4–2–1980	மலேசியா பணிகள் - பொதுநலன் அமைச்சர் திரு. சாமிவேலு சென்னைக்கு வருகை தந்தார்.
3–2–1980	ஸ்ரீலங்கா கலாச்சார அமைச்சர் திரு. இ.எல்.பி. ஹுருல்லி சென்னைக்கு வருகை தந்தார்.
12–2–1980—14–2–1980.	ஜான்சியாரிலிருந்து தொழில் துறை அமைச்சர் ஒருவர் உட்பட ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, துருக்கி, நார்வே, பிரிட்டன், சீனா, கயானா, ஆஸ்திரேலியா, கனடாவிலிருந்து ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதிகள் கோயம்புத்தூருக்கும் சென்னைக்கும் (எண்ணூர்) வருகை தந்தனர். திருவள்ளூர், இந்துஸ்தான் மோட்டார்ஸையும், மாதவரம் சதர்ன் அலாய் நிறுவனத்தையும் பார்வையிட்டனர்.
10–2–1980—12–2–1980.	ஈரான், பெல்ஜியம், சந்த், யூகோஸ்லேவியாவிலிருந்து ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதிகள் சென்னைக்கு வருகை தந்தனர். எண்ணூர் வார்ப்படச்சாலை, திருவள்ளூர், இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம், லூகாஸ்

நாள்	
	டிவிஎஸ், இந்தியன் பிஸ்டன்ஸ், எண்ணூர் அசோக் லேலாண்ட் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.
16–2–1980—18–2–1980	சேசெல்வி வேளாண்மை அமைச்சர் கார்ல் செயின்ட் சுங்கே சென்னைக்கு வருகை தந்தார். தேனாம்பேட்டையிலுள்ள தோட்டக்கலைச் சங்கம், பாம்பு பூங்கா, தாம்பரத்திலுள்ள சென்னை கிறித்துவக் கல்லூரி பண்ணை ஆகியவற்றைப் பார்வையிட்டார்.
17–2–1980	ஸ்ரீலங்கா தூதுவர் திரு. டி. பி. பனாபொக்கே சென்னைக்கு வருகை தந்தார்.
26–2–1980—28–2–1980	மெக்கா புனித மசூதியின் தலைமை இமாம் ஷேக் முகமது பின் சபியால் சென்னைக்கு வருகை தந்தார். பெரிய மேட்டு மசூதியில் நடைபெற்ற தொழுகையில் கலந்து கொண்டார். வட ஆற்காடு, உம்ராபாத் என்ற இடத்தில் புதிய மசூதி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.
6–3–1980—8–3–1980	டென்மார்க் நாட்டு நாடாளுமன்ற பிரதிநிதிகள் 15 பேர் அடங்கிய குழு சென்னை, திருக்கோயிலூர், திருவண்ணாமலைக்கு வருகை தந்தது. டானிஷ் மிஷன் மருத்துவ மனையையும், திருவண்ணாமலையிலுள்ள திருக்கோயிலூர் கோயிலையும் பார்வையிட்டது.

நாள்.	
24–3–1980 31–3–1980—1–4–1980	ஸ்ரீலங்கா கடற்படை கமாண்டர் ரியர் அட்மிரல் ஆட்பெர்ரா சென்னை, கோவளத்திற்கு வருகை தந்தார்.
25–3–1980—26–3–1980 27–3–1980	சிங்கப்பூர் இராணுவப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் வின்ஸ்டன்லி கூ சென்னை, கோயம்புத்தூர், வெல்லிங்டனுக்கு வருகை தந்தார். வெலிங்டன் இராணுவப் படைப் பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டார்.
27–3–1980—16–4–1980	மாட்சிமை தங்கிய கிரீஸ் நாட்டு அரசி பிரிடெரிகா சென்னைக்கு வருகை தந்தார்.
29–3–1980—16–4–1980	ஸ்ரீலங்கா நிதித்துறை அமைச்சர் திரு. நிசன்கா விஜயரத்னே இராமேஸ்வரம், மாமல்லபுரம், திருத்தணி, சென்னை, திருப்பதி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார்.
19–4–1980—5–5–1980 ..	ஸ்ரீலங்கா, கிராம வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.எஸ். தொண்டைமான், இராமேஸ்வரம் மண்டபம், எம். புதூருக்கு (இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம்) வருகை தந்தார்.
10–11–1979—16–11–1979	ஐக்கிய நாடுகள் துயர்தணிப்பு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி திரு. கினாஸ் வியிமிங் துயர்தணிப்பு பணிக்காக மனையைத் தெரிந்தெடுப்பதற்கு

நாள்.	
	இஞ்சம்பாக்கம், மாமல்லபுரம், பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரத்திற்கு வருகை தந்தார்.
2–6–1979 ..	வியட்நாம் குடியரசு இராஜாங்க அமைச்சர் திரு. நீ கூயன் கொதாக் சென்னைக்கு வருகை தந்தார்.
2–6–1979 ..	க்யூபா, வெளிவிவகாரத் துணை அமைச்சர் திரு. ரிக்கார்டோ அல்காம் சென்னைக்கு வருகை தந்தார்.
28–2–1980—2–3–1980..	ஹங்கேரி, ஆவணக்காப்பகம் துறை இயக்குநர், திரு. ஜோசப் கென்யார், சென்னை மாமல்ல புரத்திற்கு வருகை தந்தார். சென்னை, ஆவணக் காப்பகத் துறை இயக்குநருடன் விவாதித்தார். அரும்பொருள் காட்சியகத்தையும், பிரம்மஞான சங்கத்தையும் பார்வையிட்டார்.

நிர்வாகம்.

அறிக்கை ஆண்டில் தமிழ்நாட்டின் ஆளுநராக திரு. பிரபுதாஸ பட்வாரி பதவியில் இருந்துவந்தார். கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிலான அமைச்சரவை 16—2—1980 வரை இருந்தது :—

திருவாளர்கள்.

1. கி. மனோகரன்
2. ச. இராமச்சந்திரன்
3. கே. ஏ. கிருஷ்ணசாமி
4. எஸ். டி. சோமசுந்தரம்
5. க. உரா. எட்மண்ட்
6. இராம. வீரப்பன்
7. க. நாராயணசாமி முதலியார்
8. செ. அரங்கநாயகம்
9. கா. காளிமுத்து
10. எஸ். இராகவானந்தம்
11. சி. பொன்னையன்
12. ப. குழந்தைவேலு
13. கா. இராசா முகமது
14. ஆர். சவுந்தரராசன்
15. செல்வி பி. டி. சரஸ்வதி
16. திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

2—2—1980 வரை திரு. பெ. சவுந்திரபாண்டியன் அமைச்சரவையில் இருந்தார். அன்று அவர் அமைச்சரவையிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார்.

17—2—1980 அன்று தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி நிறுவப்பட்டது.

ஆளுநரின் சுற்றுப் பயணம்.

மாநிலத்திற்குள்.

ஏப்ரல், 1979.—தமிழக ஆளுநர் அவர்கள் ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாளன்று அரிமா சங்கத்தின் ஆறாவது மாவட்ட மாநாட்டைத் துவக்கி வைத்து, மதுரையிலுள்ள மனநலம் குன்றிய குழந்தைகள் இல்லமான "அன்பகத்தை" பார்வையிட்டார். பிற்பகலில், மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் சத்துணவுத் திட்டத்தைக் கண்ணுற்றார். (இராமநாதபுரம் மாவட்டம்) கம்பிக்குடி கிராமத்தைச் சேர்ந்த அரிசனக் குடியிருப்பில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஒன்றைத் திறந்து வந்தார். 14-ம் நாள் மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சருடன் கன்னியாகுமரி சென்றார். தலைமை அமைச்சர் திருவள்ளுவர் நினைவுப் பாறையை 15-ம் நாளன்று தொடங்கி வைத்த விழா விற்கு ஆளுநர் தலைமை தாங்கினார்.

மே, 1979.—7—5—1979 அன்று கோயம்புத்தூர் பி. எஸ. ஜி. தொழில் நுட்பக் கல்லூரியில் மேல்நிலைக் கல்விச் சிறப்பு மாநாடு ஒன்றைத் துவக்கி வைத்தார்.

ஜூன், 1979.—2-ம் நாளன்று (மதுரை மாவட்டம்) காந்திகிராமம் கிராமப் புற நிறுவனத்தில் அந்தர் பாரதி அனைத்திந்திய இளைஞர் முகாமைத் துவக்கி வைத்தார். தமிழ்நாடு மகளிர் நலச்சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பின்னர் 3 ஆம் நாளன்று கதர்—கிராமத் தொழில்கள் துறை பொருட்களின் விற்பனைக்காக புதிய விற்பனைக் கூடம் ஒன்றைத் துவக்கி வைத்தார்.

ஜூலை, 1979.—4 ஆம் நாளன்று நெய்வேலிக்குக் குடியரசுத் தலைவருடன் சென்று இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியையும் இரண்டாவது மின் நிலையத்தையும் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார். 7 ஆம் நாளன்று நரேந்திர நகரில் (பழனி வட்டம்) தொழில் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டக் குடியிருப்பு ஒன்றுக்கு அடிக்கல் நாட்டியதுடன் (வேடசந்தூர் வட்டம்) அலச்சன் பாறையூரில் பாய் நெசவுத் தறிகளையும் தொடங்கி வைத்தார். 21 ஆம் நாளன்று பெரும்புதூரில் "ஸ்ரீ ராமானுஜரும் அவரது சமூகத் தத்துவமும்" என்பது குறித்து அகில இந்தியக் கருத்தரங்கு ஒன்றைத்

தொடங்கி வைத்தார். 24-ம் நாள் பிற்பகல் மன்னார்புரத்தில் (திருச்சிராப் பள்ளி மாவட்டம்) பார்வையற்றோர் மறுவாழ்வு இல்லத்தைப் பார்வையிட்டு பார்வையற்ற பெண்களுக்குப் பிரெயில் பொருள்கள் (Braile kits) வழங்கினார். 29 ஆம் நாளன்று கோபிச்செட்டிப்பாளையத்தில் உழவர்கள் மன்ற ஆண்டுக் கூட்டத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு சர்வோதய சங்கத்தின் கதர் விற்பனைக் கூடத்தைத் திறந்து வைத்தார்.

ஆகஸ்டு, 1979.—11 ஆம் நாளன்று சாத்தான் குளத்திலும் திருச்செந்தூரி லும் மறைந்த திரு. கு. காமராஜ் அவர்களின் சிலையைத் திறந்து வைத்தார். (கன்னியாகுமரி மாவட்டம்) ஆரம்பொலியில் புதிய மாதிரி சர்க்கா நிலையம் ஒன்றுக்கு புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்தார்.

செப்டம்பர், 1979.—3—9—1979 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் மதுக் கரையில் கையினால் சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கி வைத்தார்; கோயம்புத்தூர் இந்திய தொழில் வர்த்தகக் கழகத்தின் பொன்விழாவைத் தொடங்கி வைத்தார். 10 ஆம் நாள் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கருவேப்பிலைப்பாளையம், திருக்கோயிலூர், விழுப் புரம், தமுதாளி, மைலம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். தமிழ்நாடு சர்வோதைய மண்டல், தமிழ்நாடு பசு பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் சார்பில் 16-9-1979 அன்று திருச்சிராப்பள்ளியில் மாநில அளவிலான கிராம சுயராஜ்ய மாநாட்டைத் திறந்துவைத்தார். செப்டம்பர் 23 ஆம் நாளன்று "காஞ்சீபுரம் ஜேசிஸ்" ஆதர்வுடன் "சுயவேலைவாய்ப்பு—சிறுதொழில்" கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். பக்தவச்சலம் பல்தொழில் பயிற்சி பள்ளியின் நிறுவனர் நாள் விழாவில் கலந்துகொண்டார்.

அக்டோபர், 1979.—அக்டோபர் 1 ஆம் நாளன்று சென்னிமலை நெசவாளர் கூட்டுறவுச் சங்க (கோயம்புத்தூர் மாவட்டம்) விழாவில் கலந்து கொண்டார். அதே தினத்தன்று பிற்பகல் சிவகிரி, பவானி ஆகிய இடங்களுக்கு வருகை தந்து முறையே சர்வோதயா சங்கம் ரோட்டரி கிளப் ஏற்பாடு செய்த விழாக் களில் கலந்து கொண்டார்.

நவம்பர், 1979.—நவம்பர் 16 ஆம் நாளன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்தார்

டிசம்பர், 1979.—டிசம்பர் 6 ஆம் நாளன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக பொன்விழா நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். டிசம்பர் 9 ஆம் நாள் வந்தவாசியில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டில் கலந்துகொண்டார். 16 ஆம் நாள் செவப்பூருக்கு (திருச்சி மாவட்டம்) வருகை தந்து இன்ப சேவா சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். 17—12—1979 அன்று திருச்சிராப்பள்ளி, சீதா லட்சுமி இராமசாமி கல்லூரி யில் புதியக் கட்டிடத் தொகுதி ஒன்றைத் திறந்து வைத்தார். 22 ஆம் நாள் பிற்பகல் முத்தனாம்பட்டி கிராமத்தில் (மதுரை மாவட்டம்) கிராம இளைஞர் பிரிவைத் தொடங்கிவைத்தார். 27 ஆம் நாள் இராணிப் பேட்டை திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் நிறுவன தொழிற்சங்கத்தின் பொன் விழா நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார்.

ஜனவரி, 1980.—மதுரை மாவட்டம் கீரனூர் கிராமத்தில் உள்ள மேயர் பொறுப்புக் கழகத்தின் ஆதாவின்கீழ் 19 ஆம் நாளன்று நிலமேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணியைத் தொடங்கிவைத்து ஒட்டன் சத்திரத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கு "பாங்கு ஆப் இந்தியாவின்" கடன் உதவியை வழங்கினார்; மதுரையில் மகளிர் உயர் நிலைப் பள்ளியின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்தார். 31 ஆம் நாளன்று சேலத்தில் தமிழ்நாடு மாநில விளையாட்டுக் குழுவால் நடத்தப்பட்டப் பொங்கல் விழா விளையாட்டுகளைத் தொடங்கிவைத்தார்.

பிப்ரவரி, 1980:—5 ஆம் நாளன்று (கோயம்புத்தூர் மாவட்டம்) பெரிய நாயக்கன் பாளையத்தில் கல்வியில் ஒழுக்கம் சமூகம் (ஆன்மீக) கூறுகள் குறித்த தேசியக் கருத்தரங்கு ஒன்றைத் தொடங்கிவைத்து கோயம் புத்தூரில் பணியாளர்களுக்கானக் கல்வித் திட்டத்தின்கீழ் வட்டாரத் தகுதிப் பரிசுகளை வழங்கினார். வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டார்.

பிப்ரவரி, 1980—9 ஆம் நாளன்று காட்பாடி ஆக்சிலியம் கல்லூரியில் வெள்ளி விழாவில் கலந்து கொண்டார். 10 ஆம் நாளன்று ஸ்ரீரங்கம் சிருங்கேரி மடத்தைச் சேர்ந்த வேத பலன் வித்தியாலயாவிற்கு அடிக்கல் நாட்டினார்; திருச்சிராப்பள்ளியில் செவிலியர் இல்லம் ஒன்றைத் தொடங்கிவைத்தார்.

பிப்ரவரி 17 ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளியில் மூல்ஜி இராம்ஜி பொறுப்புக் கழகத்தின் குழந்தைகள் காப்பகம் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

மார்ச், 1980.—9-3-1980 அன்று கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்தார். 29-3-1980 அன்று கோயம்புத்தூரில் அரசுக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். அன்று பிற்பகல் மதுரை சென்று தமிழ் அறிஞர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

(ஆ) பிற மாநிலங்களில் :

மே, 1979.—மே 20 முதல் 25 வரை குஜராத் மாநிலத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

ஜூன், 1979.—11-6-1979 அன்று டில்லியில் நடைபெற்ற அரிசன சேவா சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பங்குகொண்டார். 28 ஆம் நாளன்று ஸ்ரீ கொச்சி வைஷ்ணவ மகஜன் ஆதரவில் கொச்சியில் நடைபெற்ற ஒரு நிகழச்சியில் கலந்துகொண்டார்.

அக்டோபர், 1979.—அவர், அக்டோபர் 8 ஆம் நாள் பாட்னாவில் இராஜாங்க மரியாதையுடன் நடைபெற்ற திரு. ஜெயப்பிரகாஷ் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டார். அவர் 14 ஆம் நாள் முதல் 22 ஆம் நாள் முடிய குஜராத்தில் இருந்தவண்ணம் அகமதாபாத், பரோடா, இராஜ்காட் ஆகிய இடங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

நவம்பர், 1979.—நவம்பர் 2 ஆம் நாள் பம்பாயில் நடைபெற்ற அனைத் திந்திய பிரம்மஞான சங்க நூற்றாண்டு விழா மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். 19 ஆம் நாளன்று கேரள காந்திஸ்மாரக் நிதியின் ஆதாவில் நடைபெற்ற காந்தியடிகள் பற்றிய புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு திருவனந்தபுரத்தில் யோகா கருத்தரங்கம் ஒன்றைத் தொடங்கிவைத்தார். 20 ஆம் நாளன்று திருவனந்தபுரத்தில் கேரளப் பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். 25 ஆம் நாளன்று பூனாவில் சாது வாஸ்வானிஜியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்தார்.

மார்ச், 1980.—15-ம் நாளன்று உள்துறை அமைச்சகம் டில்லியில் கூட்டி சட்டம் ஒழுங்குபற்றிய மாநாட்டில் கலந்துகொண்டார்.

நகரில் ஆளுநர் அவர்களின் முக்கிய நிகழ்ச்சிகள் :

ஏப்ரல், 1979.—5-ம் நாளன்று இரண்டாண்டிற்கொருமுறை நடைபெறும் இந்திய தொழுநோயியல் வல்லுநர்கள் சங்க மாநாட்டைத் தொடங்கி வைத்தார். 6 ஆம் நாளன்று அனைத்திந்திய மகளிர் உணவுக் குழுவின் ஆண்டு மாநாட்டைத் துவங்கிவைத்தார். 10-ம் நாளன்று ஐ.என்.எஸ். நீலகிரிக் கப்பலில் இந்திய கப்பற்படையினர் மனநலங்குன்றிய குழந்தைகளுக்காக அளித்த விருந்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். 30-ம் நாளன்று காந்தி அமைதி நிலையத்தைத் தொடங்கிவைத்தார்.

மே, 1979.—1-5-1979 அன்று அலுவலக ஆட்சிமுறை நிருவாகம் குறித்த பொருட்காட்சி ஒன்றையும் கருத்தரங்கையும் தொடங்கிவைத்து அனைத்து இந்திய நிறுவாகச் சங்க (A.I.M.A.) வெகுமதிகளை வழங்கினார். அன்று மாலை மாநிலத் திரைப்படப் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார். மே திங்கள் 8 ஆம் நாளன்று, அவர் உலக செஞ்சிலுவை நாளைத் தொடங்கி வைத்தார். ராஜாஜி பிறந்த தின நூற்றாண்டு விழாக் குழு ஆதாவில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டிற்கு அவர் 27-5-1979 ஆம் நாளன்று தலைமை தாங்கினார். இவ்விழாவில் குஜராத், தமிழ்நாடு மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டனர். அன்று மாலை கதர் கிராமத் தொழில்கள் பொருட்காட்சியைத் தொடங்கிவைத்தார்.

ஜூன், 1979.—8-6-1979 ஆம் நாளன்று அவர், தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கத்தின் "டான்சி" நிறுவனத்தின் ஆதரவில் குடிசைத் தொழில்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்றை அவர் 21-6-1979 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். 26ஆம் நாளன்று அவர் ஆந்திர வர்த்தக சபையின் பொன் விழாவைத் தொடங்கி வைத்தார். அவர் 30-6-1979 ஆம் நாளன்று தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவு பொதுக் குழுக் கூட்டத்திற்கும் தலைமைத் தாங்கினர்.

சூலை, 1979.—சூலைத் திங்கள் 2 ஆம் நாளன்று அவர் வில்லிங்டன் அறப் பொறுப்புக் கழகப் பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். 8-7-1979 ஆம் நாளன்று அவர் அஞ்சல் மேற்பார்வையாளர்கள் சங்கம் ஈராண்டுக்கு ஒருமுறை நடத்துகிற மூன்றாவது அனைத்து இந்திய மாநாட்டைத் தொடங்கிவைத்தார். சூலைத் திங்கள் 10 ஆம் நாளன்று சென்னை பல்கலைக் கழகத்தின் ஆதரவில் தொழிற்பயிற்சி கல்வி வாழ்க்கைத் தொழில் குறித்த தகவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். 16 ஆம் நாளன்று தென்னிந்திய கப்பல் சொந்தக்காரர்களின் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். சூலை 23 ஆம் நாளன்று சென்னை பத்திரிகைக் குழுவின் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். 27 ஆம் நாளன்று "மின் சக்தி சிக்கனமாகப் பயன்படுத்துவது—மாற்று வழிவகைகள்" என்பது பற்றிய தேசிய கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார்.

ஆகஸ்ட், 1979.—4 ஆம் நாளன்று அவர் இந்திய வணிக-தொழில் சபைக் கூட்டமைப்புக் குழுவின் உறுப்பினர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். 6 ஆம் நாளன்று அவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கொரியா நாட்டுப் புகைப்படங்கள் வண்ண ஓவியங்கள் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். 14 ஆம் நாளன்று ரஷிய தூதரகத்தின் ஆதரவில் அவர் 32-வது ஆண்டு இந்திய சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டார்; 25-8-1979 ஆம் நாளன்று அவர் இந்திய ஓவர்சீஸ் வங்கி அதிகாரிகள் சங்கத்தின் எட்டாவது ஆண்டு மாநாட்டைத் தொடங்கி வைத்தார். 26 ஆம் நாளன்று உலக ஒற்றுமை நாளைத் தொடங்கிவைத்தார்.

செப்டம்பர், 1979.—செப்டம்பர் 1 ஆம் நாளன்று அவர் அனைத்து இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆண்டு மாநாட்டைத் தொடங்கிவைத்தார்; 2 ஆம் நாளன்று சுருக்கெழுத்தர்கள் சங்கத்தின் ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்தார். 4 ஆம் நாளன்று வில்லிங்டன் அறநிலையம், இந்தியக் கலாச் சார ஆராய்ச்சிப் பொறுப்புக் கழகம் ஆகியவற்றின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். 8 ஆம் நாளன்று வரதட்சணை முறை சமுதாயத்தில் நிலவும் ஒரு சமூகச் சீர்கேடு-அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். 14 ஆம் நாளன்று அவர்

அரிசன வகுப்பினர் பழங்குடியினர் நல பொறுப்புக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். பாலிமர் பொறியியல்-தொழில் நுட்பவியலில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த கருத்தரங்கை 22 ஆம் நாளன்று தொடங்கிவைத்தார். 27-9-1979 ஆம் நாளன்று அவர் "சுய-வேலை வாய்ப்பு" குறித்த கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். "அரசியலில் சமயம் ஆக்கபூர்வமாகச் செயல்படுமா அல்லது அழிவுப்பாதையில் இட்டுச் செல்லுமா"? என்பது குறித்த கருத்தரங்கை செப்டம்பர் 28 ஆம் நாளன்று அவர் தொடங்கிவைத்தார். பல்கலைக் கழகத்தில் லோக்நாயக் ஜெயபிரகாஷ் நாராயணன் அரசியல் மெய்விளக்கியல் நிறுவனத்தின் தொடக்க விழாவிற்குத் தலைமைத் தாங்கினார். மாலையில் சென்னை பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார். 29-9-1979 ஆம் நாளன்று அவர் தென்னிந்திய வர்த்தகச் சபையின் ஆண்டு பொதுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அக்டோபர், 1979.—அவர் 1 ஆம் நாளன்று டாக்டர் அன்னி பெசன்ட் நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்தார். அக்டோபர் 2 முதல் 8 ஆம் நாள் வரையில் காந்தி மண்டபத்தில் காந்தி ஜெயந்தி விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயல் நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவர் ஜெயபிரகாஷ் மறைவை முன்னிட்டு கடைசி நாளைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் விழாக்களில் கலந்துகொண்டார். 3 ஆம் நாளன்று அவர் வன விலங்கு வார விழாவைத் தொடங்கிவைத்தார். "குழந்தைகளுக்கும் பள்ளிச் செல்லும் வயதடையாத சிறார்களுக்கும் தேவைப்படும் உணவுகள்" என்பது குறித்த கருத்தரங்கை 4 ஆம் நாளன்று தொடங்கிவைத்தார். 31 ஆம் நாளன்று அவர் வேளாண் வர்த்தக நிருவாகத் திட்டத்தை தொடங்கிவைத்தார்.

நவம்பர், 1979.—3-11-1979 ஆம் நாளன்று அவர் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவின் ஆதரவில் "Resource persons camps" என்ற முகாமைத் தொடங்கிவைத்தார். அவர் 6—11—1979 ஆம் நாளன்று தலைமை நீதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். 8-11-1979 ஆம் நாளன்று அவர் தனிச்சிறப்புடையதும் பாராட்டத்தக்கதுமான பணிக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கங்களையும் காவல் துறைப் பதக்கங்களையும் காவல்

துறை அதிகாரிகளுக்கு வழங்கினார். அவர் 10 ஆம் நாளன்று இந்திய இயற்கை விதிகள்-ஒழுங்கமைதி நிறுவன ஆதரவில் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார்; மகளிர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் ஆதரவில் "குழந்தை" என்பது பற்றிய கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். 13-11-1979 ஆம் நாளன்று அவர் சர் சி. பி. ராமசாமி ஐயர் நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்தார். அவர் 14-11-1979 ஆம் நாளன்று இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆண்டு பொதுக் குழு கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்; மாலையில் அனைத்து இந்தியக் கூட்டுறவு வார விழாவைத் தொடங்கிவைத்தார். 22 ஆம் நாளன்று அவர், இந்திய சாலைகள்-போக்குவரத்து மேம்பாட்டுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

டிசம்பர், 1979.—டிசம்பர் 4 ஆம் நாளன்று அவர், கப்பற்படை தின வரவேற்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பெரம்பூர் இரயில் பெட்டித்தொழிற்சாலையில் வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முதல் பெட்டியை 13-12-1979 ஆம் நாளன்று கொடியசைத்து அனுப்பி வைத்தார். 15ஆம் தேதியன்று அவர் இராஜாஜி பற்றிய உரையரங்குக்குத் தலைமைத் தாங்கினார். 19—12—1979 அன்று 47-வது தென்னிந்திய இசை மாநாட்டைத் தொடங்கிவைத்தார். 20-12-1979 அன்று சென்னை மாநகருக்குரிய புதிய ஷெரிப்புக்குப் பதவி பிரமாணம் செய்துவைத்தார். 23 ஆம் தேதியன்று சமூகச் சேவை கில்டு சர்வீஸ் (Guild Service) நிலையத்தில் (பால விஹார்) பாலர் பள்ளி வெள்ளி விழாவை அவர் தொடங்கிவைத்தார். 25-12-1979 அன்று பிளேட்டோ கோட்பாடும் கீழ்த்திசை சமயக் கோட்பாடும் கலந்து புதிய சமயக் கோட்பாடு ஆய்வு (Neo Platoric Studies) பற்றிய அனைத்து நாட்டுக் கருத்தரங்கை அவர் தொடங்கிவைத்தார்; இராஜாஜியின் 101 ஆவது பிறந்த நாள் விழாவையும், இராஜாஜி அற மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவையும் தொடங்கிவைத்தார். 26 ஆம் தேதியன்று அவர் செயின்ட் ஜான்ஸ் ஆம்புலன்சின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். 27-12-1979 அன்று கிறித்துவர் கல்லூரியில் இந்திய வேதாந்த சங்கத்தின் 54-வது கூட்டத்தைத் தொடங்கிவைத்தார். 28 ஆம் தேதியன்று "பிறந்த இல்லம் பற்றிய பொருட்காட்சி"யைத் தொடங்கிவைத்தார். 29-12-1979 அன்று இந்திய இரசாயனத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தென்

மண்டல் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்; அதே நாளன்று அனைத்திந்திய ஆங்கில ஆசிரியர்கள் மாநாட்டின் 39-வது ஆண்டுக் கூட்டத்தை அவர் தொடங்கிவைத்தார்.

ஜனவரி, 1980.—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை ஜனவரி 2 ஆம் தேதியன்று அவர் தொடங்கி வைத்தார். 7—1—1980 அன்று அவர், "பாலிமர் அறிவியல், பாலிமர் பொருட்கள் குறித்த புதிய பார்வைகள்" பற்றிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். ஒருங்கிணைக்கப்பட்ட நிதிகளின் மாநில நிர்வாகக் குழு கூட்டத்திற்கு 10 ஆம் தேதியன்று அவர் தலைமைத் தாங்கினார். சனவரி 16 ஆம் தேதி திருவள்ளுவர் தினத்தன்று திருவள்ளுவர் பற்றிய புத்தகம் ஒன்றை இவர் வெளியிட்டார். சோவியத் கலாச்சார நிலையத்தில் 20 ஆம் தேதியன்று சோவியத் இந்திய திரைப்படக் கலைபண்பாட்டு விழாவைத் தொடங்கி வைத்தார். 23 ஆம் தேதியன்று இந்திய சுவிசேஷ திருச்சபையின் வெள்ளி விழாவை அவர் தொடங்கி வைத்தார். 26—1—1980 அன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற ஆதரவில் கலைஞர்களுக்கு அரசு விருதுகள் வழங்கினார்.

பிப்ரவரி, 1980.—அவர் பிப்ரவரி 4 ஆம் தேதியன்று "வழிகாட்டுதலும் ஆலோசனை நல்குதலும்" (Guidance and counselling) பற்றிய கருத்தரங்கு ஒன்றைத் தொடங்கிவைத்தார். சமஸ்கிருத மொழியின் பட்ட மேற்படிப்புத் துறையின் வெள்ளி விழாவை அவர் துடங்கி வைத்தார். 15-2-1930 அன்று அவர் தமிழ்நாடு கிறித்துவக் கல்வி மன்றத்தின் நூற்றாண்டு விழாக் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். 19 ஆம் தேதியன்று அவர் தமிழ்நாடு சுற்றுப்புறச் சுகாதாரக் குழு கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். 21-2-1980 அன்று அவர் "உயிரணுப்பெருக்கமும் பண்பு விளக்கமும்" (Cell proliferation and differentiation) பற்றிய உரையரங்கைத் துடங்கி வைத்தார். 23—2—1980 அன்று தமிழ்நாடு செவிலியர்-மருத்துவச்சிய குழுவின் பொன் விழாவைத் தொடங்கிவைத்தார். 26 ஆம் தேதியன்று பல் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கிவைத்தார்.

மார்ச், 1980.—இரண்டாவது அனைத்திந்திய மருத்துவ மாநாட்டை 8 ஆம் தேதியன்று அவர் தொடங்கி வைத்தார். வணிகவியல் ஆசிரியர்களின்

மாநில அளவிலான மாநாட்டிற்குத் தலைமைத் தாங்கினார்; அதே நாளன்று மாலை, ஷேக்ஸ்பியர் காலம் பற்றிய பொருட்காட்சி தொடர்பாக பிரிட்டிஷ் கவுன்சிலில் நடத்திய விழாவில் கலந்து கொண்டார். 24—3—1980 அன்று சென்னை சமூகப் பணி பள்ளிக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்து பட்டமளிப்பு விழா உரையாற்றினார்.

இவ்வாண்டில் ராஜ் பவனில் தங்கிய முக்கிய விருந்தினர்கள் வருமாறு :—

1. இந்தியக் குடியரசுத் தலைவர்
2. இந்தியப் பிரதமர்
3. கேரள மாநில ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம்
4. இந்தியத் தலைமை நீதிபதி
5. சிக்கிம் மாநில ஆளுநர் திரு தினேஷ் அவரது குழுவும்
6. குஜராத் மாநில முதலமைச்சர் திரு. பாபுபாய் அஜ. படேல்
7. மக்கள் அவைத்தலைவர்—திரு. கே. எஸ் ஹெக்டே
8. எதிர்க் கட்சித் தலைவர்—திரு ஜகஜீவன் ராம்
9. ஆந்திர பிரதேச ஆளுநர்—திரு. கே. சி. ஆப்ரஹாம் அவரது குழுவும்
10. கர்நாடக மாநில ஆளுநர்—திரு. கோவிந்த் நாராயண்
11. பத்திரிகை கமிஷன் தலைவர்—திரு ஜஸ்டிஸ் பி. கே. கோஸ்வாமி தலைவர்
12. புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு பி. டி. குல்கர்னி
13. மிஜோராம் முதலமைச்சர் பிரிக் டி. சைலோவும் அவரது குழுவும்
14. இராஜ்யசபை துணைத்தலைவர் திரு ராம் நிவாஸ் மிர்தா
15. சிக்கிம் ஆளுநர் திரு. பி. பி. லால்
16. அருணாசல பிரதேச துணை நிலை ஆளுநர் திரு. ஆர். என். ஹால்டிபூர்.

தமிழ்நாடு சட்டப் பேரவை.

பேரவைக் கூட்டத்தொடர்.

மேற்கண்ட கால அளவில் பேரவைக் கூட்டத் தொடர்களை தொடங்கி வைக்கப்பெற்ற மற்றும் இறுதி செய்யப்பெற்ற தேதிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

1. ஆறாவது பேரவை 26-10-1979 முதல் 10-11-79
ஐந்தாவது கூட்டத் தொடர் முடிய அதாவது 26-10-79
27-10-79 29-10-79 முதல்

31-10-79 முடிய 2-11-79 3-11-79, 5-11-79 முதல் 10-11-79 முடிய 13 நாட்கள் பேரவை நடைபெற்றது. 30-11-79 ஆம் தேதியிலிருந்து ஐந்தாண்டு கூட்டத் தொடர் இறுதி செய்யப்பெற்றது.)

2. ஆறாவது பேரவை ஆறாவது கூட்டத் தொடர் — 1-2-1980 முதல் 13-2-1980 முடிய அதாவது 1-2-80 2-2-80, 4-2-80 முதல் 7-2-80, 11-2-80 முதல் 13-2-1980, வரையிலான 9 நாட்கள் நடைபெற்றது.

இந்திய குடியரசுத் தலைவர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 356 ஆவது பிரிவின்கிழ் 17-2-1980 ஆம் தேதியன்று பிறப்பித்த பேரவையின் மூலம் தமிழ்நாடு ஆறாவது சட்டமன்றப் பேரவை கலைக்கப் பெற்றது. தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பெற்றது.

17-2-1980 ஆம் தேதியன்று நிலவரப்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கட்சி நிலவரம்.

அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	125
திராவிட முன்னேற்றக் கழகம்	48
இந்திய தேசியக் காங்கிரஸ் (இ)	27
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்)	12
ஜனதா	7
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி	5
இந்திய தேசிய பார்வர்டு பிளாக்	2
தமிழ்நாடு உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி	2
பார்வட்டு பிளாக்	1
முஸ்லீம் லீக்	1
சுயேட்சை	1
(நியமன உறுப்பினர்)	1
மாண்புமிகு பேரவைத்தலைவர்	1
காலி இடங்கள்	2
மொத்தம்	235

ஆளுநர் உரை.

தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் 30-1-1980 ஆம் தேதி யன்று உரையாற்றினார்கள்.

இரங்கல் குறிப்புகள் இரங்கல் தீர்மானங்கள்.

இடைக்கால அளவில் சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள் சிலரின் மறைவுக்காக 14 இரங்கல் குறிப்புகள் கொண்டுவரப்பெற்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் இரங்கல் குறிப்புகளை அறிவித்ததும் மறைந் தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் எல்லா உறுப்பினர்களும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.

இக்கால அளவில் ஏழு இரங்கல் தீர்மானங்கள் அதாவது லோகநாயகர் திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், டாக்டர் பி. வி. ராஜமன்னார், மவுண்ட் பேட்டன் பிரபு ஆகியோர்களின் மறைவு குறித்தும் மற்றும் திருவாளர்கள் ச. சுப்பையா, பி. கே. மூக்கையா தேவர், தே. ஞானசிகாமணி, என். சுப்ப ராயன் ஆகிய நான்கு பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவி காலத்திலேயே மறைந்ததை குறித்தும் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மறைந்த வர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அன்று பேரவை ஒத்தி வைக்கப் பெற்றது.

நிதி நிலை அலுவல்கள்.

1979-80 ஆம் ஆண்டிற்கான செலவினங்கள் பற்றிய முதல் துணை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் 27—10—1979 ஆம் தேதியன்று பேரவைக்கு அளித்தார். அது குறித்து 31—10—1979 ஆம் தேதியன்று விவாதித்து அவையில் வாக்கெடுப்பிற்கு விடப்பெற்று கோரிய தொகைகள் முழுமையாக வழங்கப் பெற்றன.

சட்டமியற்றும் அலுவல்கள்.

இக்கால அளவில் பேரவையில் அறிமுகப்படுத்தப்பெற்ற 50 சட்ட முன் வடிவுகளில் 41 சட்டம் முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று நிறைவேற்றப் பட்டது. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட

முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 74/1970) என்கிற ஒன்று மட்டும் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது. மேலும் அவசரச் சட்டத்தையே திரும்பப் பெற்றுக்கொண்டதால் 1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 58/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

அரசுத் தீர்மானங்கள்.

அரசுத் தீர்மானங்கள் இரண்டு பேரவையில் கொண்டுவரப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

அரசின் கொள்கைகளை நிராகரிக்கும் தீர்மானங்கள்.

அரசின் கொள்கையை நிராகரித்து பல்வேறு உறுப்பினர்களால் கொடுக்கப்பெற்ற 22 தீர்மானங்களில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. க. அன்பழகன் அவர்கள் கொடுத்த எல்லாக் கருத்துக்களையும் உள்ளடக்கிப் பொதுப்படையாக அமையப்பெற்ற தீர்மான அறிவிப்பு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது. அமைச்சரவையில் கொள்கையை நிராகரிக்கும் பின்வரும் தீர்மானத்தை அவையின் அனுமதியுடன் திரு. க. அன்பழகன் அவர்கள் கொண்டு வந்தார்கள் :—

" தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குமுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப் பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது ".

இத்தீர்மானம் குறித்து 27—10—1979, 29—10—1979, 30—10—1979, 3—11—1979, 5—11—1979, 6—11—1979, ஆகிய தேதிகளில் விவாதிக்கப் பெற்றது. இவ்விவாதத்தில் 23 உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். விவாதத்திற்கு முதலமைச்சர் பதிலளித்தார். 8—11—1979 ஆம் தேதியன்று விவாதம் முடிவுற்றதற்குப் பின்னர் இத்தீர்மானம் அவையின் வாக்களிப்பிற்கு விடப்பெற்றது. வாக்களிப்பு விவரம் வருமாறு :—

ஆதரவாக	**56**
எதிராக	**144**
நடுநிலைமையாக	**5**

எனவே தீர்மானம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

சட்டமன்றப் பேரவை விதிகளின் 54-வது விதி

சட்டமன்றப் பேரவை விதிகளின் 54-வது விதி (பழைய விதி 41)-வின் கீழ் மாண்புமிகு அமைச்சர்கள் அளித்த விவர அறிக்கைகள்.

இக்கால அளவில் சட்டமன்றப் பேரவை விதிகளின் 54-வது விதியின் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து கொண்டு வரப்பெற்ற 39 கவன ஈர்ப்பு தீர்மானங்கள் குறித்த மாண்புமிகு அமைச்சர்கள் தங்களது விவர அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்துள்ளார்கள்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

இக்கால அளவில் ஒரே ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் மட்டும் பேரவையில் எழுப்பப்பட்டது. ஆனால் உறுப்பினர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் ஆகியோரின் விளக்கத்திற்கு பின்னர் இத்தீர்மானத்தை எழுப்புவதற்கான அனுமதி மறுக்கப்பெற்றது.

சட்டமன்றப் பேரவையின் 106ஆம் விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கை :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 106 ஆம் விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர்கள் 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தனர்.

சட்டமன்றப் பேரவையின் 107 ஆம் விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கை :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 107 ஆம் விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர்கள் 3 அறிக்கைகளை பேரவைக்கு அளித்துள்ளனர்.

வினாக்கள்.

இக்கால அளவில் பேரவையில் விடையளிக்கப்பெற்ற உடுக்குறியிட்ட மற்றும் குறுகியகால வினாக்கள், விடைகள் வைக்கப் பெற்ற உடுக்குறியிடாத வினாக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் வருமாறு :—

உடுக்குறியிட்ட வினாக்கள்	292
குறுகிய கால வினாக்கள்	11
அவையில் விடைகள் வைக்கப்பெற்ற உடுக்குறியிடாத வினாக்கள்.	1355

பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள் :

355 ஏடுகள் பேரவையில் வைக்கப்பெற்றன. அதன் விபரம் பின் வருமாறு :—

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்	265
ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் மற்றும் ஏனைய ஏடுகள்	90

தமிழ்நாடு சட்ட மேலவை.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை அதன் மாண்புமிகு தலைவர் உட்பட 63 உறுப்பினர்களைக் கொண்டதாகும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் நிலவரப்படி சட்ட மன்ற மேலவையில் 47 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். 16 இடங்கள் காலியாக இருந்தன. இந்த 47 இடங்களில் 16 பேர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் 12 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் 5 பேர் இந்திய தேசிய காங்கிரஸையும் (இ) 3 பேர் பட்டதாரி ஆசிரியர்கள் முற்போக்கு அணியையும் 2 பேர் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியையும் சேர்ந்தவர்களாவர், தவிர ஐக்கியக்கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலா ஒருவரும் சுயேச்சைகள் 5 பேரும் இருந்தனர்.

நடைபெற்ற கூட்டத்தொடர் :

இவ்வாண்டில் இரண்டு கூட்டத்தொடர்கள் நடைபெற்றன. சட்ட மேலவையின் 56 ஆவது கூட்டத்தொடர் 11 நாட்களும், 57 ஆவது கூட்டத் தொடர் 10 நாட்களும் நடந்தன.

ஆளுநர் உரை :

மேதகு ஆளுநர் அவர்கள் 30—1—1980 ஆம் நாளன்று 57-வது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் சட்டமன்றத்தின் இரு அவைகளையும் ஒன்றாக கூட்டி உரை நிகழ்த்தினார். ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது 8 நாட்கள் விவாதம் நடைபெற்றது. நன்றி தெரிவிக்கும் தீர்மானம் திருத்தங்கள் ஏதுமின்றி நிறைவேறியது.

இரங்கல் குறிப்புரைகள் :

பின்வரும் நபர்கள் இயற்கை எய்தியது குறித்து இரங்கல் தெரிவிக்கப் பட்டது:—

1. திரு. அலெக்சாண்டர் ஞானமுத்து, சட்ட மன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்,

2. திரு. ஆர். கோவிந்தராஜிலு, சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்.

3. திரு. சுப்பராயன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.

4. திரு. P. K. மூக்கையா தேவர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.

5. திரு. D. ஞானசிகாமணி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.

6. திரு. T. S. இராமசாமி அய்யர், சட்டமன்றப் மேலவை முன்னாள் உறுப்பினர்.

7. திரு. S சுப்பையா, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்

8. திரு. K. R. காந்த், கூட்டு சென்னை மாகாணத்தின் முன்னாள் அமைச்சர்.

இரங்கல் தீர்மானங்கள் :

பின்வரும் நபர்கள் இயற்கை எய்தியது குறித்து இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. திரு. லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண்

2. திரு. மௌண்ட் பேட்டன் பிரபு, இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரல்.

3. டாக்டர் P. V. இராஜமன்னார், தமிழ்நாடு முன்னாள் ஆளுநர்.

நிதி அலுவல்கள் :

அறிக்கையாண்டில், 197-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முத துணை விவர அறிக்கை மேலவையில் விவாதிக்கப்பட்டது.

அரசுத் துறைச் சார்ந்த சட்ட முன்வடிவுகள் :

அறிக்கையாண்டில், சட்டப் பேரவை நிறைவேற்றிய 41 சட்ட மு வடிவுகள் மேலவையின் இசைவுக்காக அல்லது பரிவுரைக்காகப் பெறப்பட் அவை எவ்விதத் திருத்தம் அல்லது பரிவுரை இன்றி நிறைவேற்றப்பட்டன.

வினாக்கள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் 504, உடுக்குறியிடாத வினாக்கள் 27, 2 குறுகி கால வினாக்கள் ஆகியவை வரப்பெற்றதில் உடுக்குறியிட்ட 108 வினாக்க

உடுக்குறியிடாதது 2 வினாக்கள் அனுமதி மறுக்கப்பட்டன. உடுக்குறியிட்ட 23 வினாக்கள் உறுப்பினர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. அனுமதிக்கப் பட்ட 365 வினாக்களில் உடுக்குறியிட்ட 212 வினாக்களுக்கும் குறுகிய கால வினா ஒன்றுக்கும் அவையில் பதிலளிக்கப்பட்டது. உடுக்குறியிடாத 23 வினாக்களுக்கான பதில்கள் அவை முன் வைக்கப்பட்டன.

அமைச்சர்கள் அளித்த விளக்க அறிக்கைகள் :

அறிக்கையாண்டில், அவசர, பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் சட்டமன்ற மேலவை விதிகளின் 42(1) ஆம் விதியின் கீழ் அமைச்சர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது அவர்கள் 21 விளக்க அறிக்கைகள் அளித்தனர்.

சட்டமன்ற மேலவையின் 82ஆம் விதிகளின் கீழ் அமைச்சர்கள் 2 விளக்க அறிக்கைகள் அளித்தனர்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

சட்டமன்ற மேலவையில் 23 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. மாண்புமிகு மேலவைத் தலைவர் அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனைத்திற்கும் அனுமதி மறுத்தார்.

உரிமைப் பிரச்சினைகள்.

அறிக்கையாண்டில், உறுப்பினர்கள் 5 உரிமைப் பிரச்சினைகளை எழுப்பினர்.

மாண்புமிகு மேலவைத் தலைவருக்குப் பாராட்டு.

சட்டமன்ற மேலவைத் தலைவர் மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியதை ஒட்டி மேலவையில் 27—10—1979 ஆம் நாளன்று உறுப்பினர்கள் அவருக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

அத்தியாயம் I

வேளாண்மைத்துறை.

வேளாண்மை.

பொது.—வேளாண்மைத் துறை வேளாண்மைத் துறை இயக்குநரின் பொறுப்பில் தொடர்ந்து இருந்து வந்தது. வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளைக் கவனிப்பதற்கென ஒருவரும், வேளாண்மை விரிவாக்கப் பணிகளை கவனிப்பதற்கென ஒருவரும் ஆக மொத்தம் இரு கூடுதல் இயக்குநர்கள் இயக்குநருக்கு உதவி புரிந்தனர். மேலும் 6 இணை இயக்கு நர்களும் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் வேளாண்மைத் தொழில் நுட்பத் துறைக்குப் பொறுப்பு வகித்தனர். இணை இயக்குநர் ஒருவர், தலைமையிடத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பொறுப்பு வகித்தார். மாவட்டங்கள் வேளாண்மைத்துறை துணை இயக்குனர்களின் பொறுப்பில் இருந்தன. வேளாண்மைத் துறையை நெறிப்படுத்தி, மேற்பார்வையிட்டு, அத்துறைப் பணிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்துக்கும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் இருந்தனர். இத் துறையின் வேளாண்மை பொறியியல் பிரிவு, தலைமைப் பொறியாளரின் (வே.பொ.) பொறுப்பில் இருந்தது.

பருவ நிலை.—1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் பாசனத் திட்டங்கள் மேற்சொல்லப்பட்ட நீர்க்கோள் பகுதிகளில் தென்மேற்கு பருவ மழை நன்கு பெய்தது. மழை பெய்ததன் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் அதிக அளவு நீர் தேக்கி வைக்கப்பட்டதால், ஜுன் திங்களில் குறித்த நாளில் பாச னத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டது ; இது குறுவைப் பயிர் அறுவடைக்குப் பெரிதும் உதவியது. பல மாவட்டங்களில் காலங் கடந்த மழை பெய்ததால் மானாவாரிப் பயிர்களைப் பொறுத்தமட்டில் பருவமழை மோசமாகவே இருந்தது. இதனால், பெரும்பாலான மாவட்டங்களில் சிறுதானியங்கள் நிலக் கடலை பருத்தி முதலிய மானாவாரிப் பயிர்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அளவும் விளைச்சல் அளவும் கணிசமான அளவுக்குக் குறைந்தது. பின்னர் பெய்த மழையின் காரணமாக காய்ந்த அந்த நிலங்களில் சிறுதானியம் பயிர்

செய்யப்பட்டு முந்தைய குறைவு பின்னர் சரிக்கட்டப்பட்டது. அக்டோபர் திங்கள் கடைசி வாரத்தில் வடகிழக்குப் பருவமழை பரவலாகப் பெய்தது. அதன் காரணமாக பல ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பாசன ஏரிகளிலும் வெள்ளப் பெருக்கால் உடைப்பு ஏற்பட்டது. வெள்ளத்தால் பரவலாக சேதமேற்பட்டபோதிலும் முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்டதைப் போல பெருமளவுக்குச் சேதமேற்படவில்லை.

துயர் துடைப்புப் பணிகள்.—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு, பின்வரும் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டது. சிறு உழவர் களுக்கும் பயிரிடும் குத்தகைத்தாரர்களுக்கும் அரசு ரூ. 3.10 இலட்சம் பெறுமான 156.85 டன் நெல், சிறுதானிய விதைகளை இலவசமாக வழங்கியது இவையன்றி ரூ. 0.013 இலட்சம் மதிப்புள்ள 494 தென்னங்கன்றுகளும் அவர் களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. வெள்ளத்தால் பயிர்கள் சேத முற்றதன் காரணமாக மீண்டும் பயிரிடும்பொருட்டு, வெற்றிலைக்கென ரூ. 5,747 இலட்சமும், வாழைக்கென ரூ. 0.356 இலட்சமும், கரும்புப் பயிருக்கென ரூ. 0.014 இலட்சமும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. சிறு உழவர்களுக் காகவும், பயிரிடும் குத்தகைக்காரர்களுக்காகவும் மண்மேடிட்ட 801.68 ஹெக்டேர் நிலம் இலவசமாகச் சீராக்கப்பட்டது. மேலும் 57 கிணறுகளி லிருந்து மணல் இலவசமாக அகற்றப்பட்டது. பிற உழவர்களுக்கு இதன் பொருட்டு 50 சதவீதம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

மாநில விதைப் பண்ணை.

இம்மாநிலத்தில் மொத்தம் 48 மாநில விதைப் பண்ணைகள் இருந்தன. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த குடுமியான்மலையில் அமைந்த அண்ணா பண்ணையிலுள்ள பெரிய அளவிலான விதைப் பண்ணையும் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நவலக்கு என்னுமிடத்திலுள்ள பெரிய அளவிலான விதைப் பண்ணையும் அடங்கும். மாநில விதைப் பண்ணைகளின் மொத்தப் பரப்பு 3,317 ஏக்கர்.

வேளாண் இடுபொருள்கள்.

விதைகளைக் கொள்முதல் செய்தலும் வழங்கலும்.—1979-80 ஆம் ஆண்டில் 1135 டன் நெல்லும், 196 டன் கல்வகைச் சிறுதானியங்களும், 642 டன் உயர் ரகச் சிறுதானியங்களும் கொள்முதல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 7970

டன் நெல்லும், 224 டன் பல்வகைச் சிறு தானியங்களும், 674 டன் உயர் ரக சிறுதானிய விதைகளும் வழங்கப்பட்டன.

உரம் வழங்கல்.—1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் 3.25 இலட்சம் டன் நைட்டிரஜனும், 0.97 இலட்சம் டன் பாஸ்பரமும், 1.06 இலட்சம் டன் பொட்டா சியமும் அடங்கிய இரசாயன உரங்கள் 4,105 கூட்டுறவுச் சங்கங்கள் மூல மாகவும் 9,559 தனியார் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாகவும் வழங்கப் பட்டன.

தரக் கட்டுப்பாடு.

1979-80 ஆம் ஆண்டின் சாதனை:—

1. பகுப்பாய்வு செய்யப்பட்ட உர மாதிரிகளின் எண்ணிக்கை.	7,648
2. குறைவான தரமுடையவை எனக் கண்டறியப்பட்ட உர மாதிரிகள்.	619
3. தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்கள்.	175
4. ரத்து செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ்	49
5. வழங்கப்பட்ட கண்டனக் குறிப்புகள்	1341
6. பதிவு செய்யப்பட்டவை	8

பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.—1979-80 ஆம் ஆண்டுக்காலத்தில், பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இத்துறை ஆறு திட்டங்களை நிறை வேற்றியது.

பயிர்ப் பாதுகாப்பு—இரசாயன மருந்துகளைக் கொள்முதல் செய்தலும், வழங்குதலும்.

பயிர்ப் பாதுகாப்பு இரசாயன மருந்துகள் வாங்கும் வகையில் 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 351.060 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் பொடி மருந்துகள் 7,430 மெட்ரிக் டன்னும், திரவ மருந்துகள் 1,86,056 லிட்டரும் வேளாண் பொருள் கிடங்குகள் மூலமாக வழங்கப்பட்டன.

1979-80 ஆம் ஆண்டில் பயிர் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் செய்முறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பு.

இந்த ஆண்டில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நடந்தேறிய பணிகளின் விவரம் வருமாறு:—

பணியின் வகை.	பின்வருவனவற்றின் கீழ்க் கொண்டுவரப்பட்ட பகுதி (பணி மேற்கொள்ளப்பட்ட பகுதியின் பரப்பு) (எக்டேர் இலட்சத்தில்)
(அ) உணவுப் பயிர்கள்	51.113
(ஆ) உணவுப் பயிரல்லாத பிற பயிர்கள்	26.444
(இ) களைகளை அகற்றுதல்	0.397
(ஈ) எலிக் கட்டுப்பாடு	5.970
(உ) விதையைப் பக்குவப்படுத்தல்	21.085

பருப்பு வகைகள் குறித்த செய்முறை முன்னோடித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் அடுத்தடுத்துள்ள நிலப் பகுதியில் சுமார் 1300 எக்டேர் நிலப்பரப்பில், செய்முறை விளக்கம் மேற்கொள்ளப்பட்டது. இதன்பொருட்டு பருப்பு வகைகளைப் பயிரிடும் உழவர்களுக்கு இடுபொருள் செலவு வகையில் எக்டேர் ஒன்றுக்கு 150 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு இரசாயன மருந்துகள் 25 சதவீத உதவித் தொகை அடிப்படையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டன. இதனால் 23.681 எக்டேர் நிலப் பரப்புக்கு பயிர் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. எக்டேர் ஒன்றுக்கு குறைந்தது 15 ரூபாய் உதவித் தொகை பெறுவதற்கு உட்பட்டதாகும். குறைந்த விலையில் கையினால் இயங்கும் பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்கள் மொத்தம் 291 வழங்கப்பட்டன. [யூனிட்டு ஒன்றுக்கு குறைந்தது 50 ரூபாய் உதவித் தொகை பெறுவதற்கு உட்பட்டதாகும்.]

எண்ணெய் வித்துக்கள் குறித்த முனைப்புத் திட்டம்.—இத்திட்டம், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், பெரியார், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டம், மாநில அரசுத் திட்டமாகும். 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில், இத்திட்டத்தின் கீழ் அடைந்த சாதனைகளின் விவரம் வருமாறு :—

1. துறை மூலமாகத் தரமான விதைகளை வழங்குதல் (டன்களில்).

நிலக்கடலை	2077
எள்	34
ஆமணக்கு	24

2. துறை வாங்கிய தரமான விதைகள் (டன்களில்).

நிலக்கடலை	2275
எள்	31
ஆமணக்கு	12

எண்ணெய் வித்துக்கள் தீவிர சாகுபடி வளர்ச்சித் திட்டம்—

மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டது.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டம், கோயம்புத்தூர், பெரியார், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இவ்வாண்டில் நிலக் கடலை 3,610 இலட்சம் எக்டேர் பரப்பிலும், எள் 0.326 இலட்சம் எக்டேர் பரப்பிலும் பயிர் செய்யப்பட்டதோடு 38,234 எக்டேர் நிலத்தில் மருந்துப் தெளிக்கப்பட்டது.

சூரியகாந்தி சாகுபடி வளர்ச்சித் திட்டம்—

இது மத்திய அரசு நிதியுதவி பெறும் ஒரு திட்டமாகும். இத்திட்டம், சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம் மாநிலம் முழுவதிலும் செயல்பட்டது. 0.31 இலட்சம் எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டது. 380 டன் வித்துக்கள் வழங்கப்பட்டன.

தென்னங்கன்று வளர்ப்பு (அடங்கல்) திட்டம்—

நல்ல தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்காக இம்மாநிலம் முழுவதிலும் 23 தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் செயல்பட்டன. இவ்வாண்டில் 17.99 இலட்சம் நெற்றுகள் வாங்கப்பட்டு, 14.42 இலட்சம் கன்றுகள் வழங்கப்பட்டன.

சிறந்த நாற்றுப் பண்ணையை அமைப்பதற்குரிய திட்டம்—

சிறந்த நாற்றுப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டது. நெட்டை, குட்டை வகைகளைச் சேர்ந்த நாற்றுகள் 60 எக்டேர் பரப்பிலும், நெட்டை ரகத்தைச் சேர்ந்தவை எல்லையோரப் பகுதிகளிலும் பயிரிடப்பட்டன. இவ்வாண்டில் 1.425 இலட்சம் நெற்றுகள் வாங்கப்பட்டன.

கரும்பு சாகுபடி வளர்ச்சித் திட்டம்—

இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கும் வெல்ல ஆலைகளுக்கும் உதவிகரமாக இருக்கும் வகையில் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படும் பகுதியின் பரப்பளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு கரும்பு சாகுபடி வளர்ச்சித் திட்டம் இம்மாநிலத்தில் 1949-லிருந்து செயல்படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில், 1.65 இலட்சம் எக்டேரில் 20.16 இலட்சம் டன் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது.

பருத்தி சாகுபடி வளர்ச்சித் திட்டம்—

தமிழ் நாட்டில் ஆறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. பாசனம் பெறும் பகுதியில் 50 சதவீதமும், மானாவாரிப் பகுதியில் 30 சதவீதமும், துறை விதைகளைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டன. 3,701.34 குவிண்டால் விதைகள் துறை மூலம் வழங்கப்பட்டன. 26,524 எக்டேர் நிலப் பரப்பில் பருத்திச் செடிகள் மீது மருந்துகள் தூவப்பட்டது. பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் 5,125 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டன. மருந்து தூவும் கருவி ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையில் 470 மருந்து தூவும் கருவிகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

நல்ல மகசூல் தரும் தானிய ரகங்கள் சாகுபடி திட்டம்—

இத்திட்டம், நீலகிரி மாவட்டம் நீங்கலாக தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 1966-67 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் எய்திய சாதனைகள் வருமாறு:—

தொடர் எண்.	பயிர்.		சாதனை. (எக்டேர் இலட்சத்தில்)
1	நெல்—		
	(அ) ஐ. ஆர். ரகங்கள்	..	21.48
	(இ) ஏனைய உயர் விளைச்சல் தரும் வகைகள்.		2.11
	மொத்தம்	..	23.59
2	சிறு தானியங்கள்—		
	(அ) சோளம்	..	2.07
	(இ) கம்பு	..	2.30
	(உ) கேழ்வரகு	..	1.74
	(எ) மக்காச்சோளம்	..	0.39
	மொத்தம்	..	6.50

தீவிர வேளாண்மைத் திட்டம் :

தீவிர வேளாண்மைத் திட்டம் தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாடு முழுவதிலும் செயல்படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில், 1218 நெருக்கமான வட்டார மாதிரிப் பண்ணைகள் நிறுவப்பட்டு, அவை சிறந்த முறையில் பண்ணைகள் பற்றிய பிரச்சாரம் செய்துள்ளன. இவ்வாண்டில், தீவிர வேளாண்மைத் திட்டத்தின்கீழ் எய்தப்பெற்ற சாதனைகள் வருமாறு :—

தொடர் எண்.	பயிர் வகை.		சாதனை (எக்டேர் இலட்சத்தில்.)
1	நெல்		18.38
2	சோளம்		1.13
3	கம்பு		1.18
4	கேழ்வரகு		1.35
5	நிலக்கடலை		1.58
6	பருத்தி		0.59
	மொத்தம்	..	24.21

தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம், தஞ்சாவூர் :

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் கீழ் இருந்தது. இத்திட்டம், 1960 ஆம் ஆண்டிலிருந்து செயல் பட்டது. இவ்வாண்டில், குறுவை, 4.12 இலட்சம் ஏக்கரிலும், சம்பா, 7.32 இலட்சம் ஏக்கரிலும், தாளடி நெல் 3.42 இலட்சம் ஏக்கரிலும், பருப்பு வகைகள் 2.53 இலட்சம் ஏக்கரிலும், சோளம், கேழ்வரகு, பருத்தி முதலியவை 2.70 இலட்சம் ஏக்கரிலும் பயிரிடப்பட்டன இவ்வாண்டில் விதை நெல் 1,241 டன்களும், பருப்பு வகை விதைகள் 959.093 டன்களும் சிறு தானிய வகை விதைகள் எண்ணெய் வித்துக்கள், தழை உரச் செடி விதைகள் 196.068 டன் களும் வழங்கப்பட்டன.

வேளாண்மை ஆராய்ச்சி—

வேளாண்மைத் துறையின் கீழ் 16 ஆராய்ச்சி சோதனை நிலையங்களும், துணை நிலையங்களும் இருந்தன. இம்மாநிலத்திலுள்ள முக்கிய பயிர் வகைகள் தொடர்பாக பயிர் மேம்பாடு, பயிர் நிருவாகம், பயிர்ப் பாதுகாப்பு, மண் அறிவியல் ஆகியவை குறித்தத் தீவிர ஆராய்ச்சி இந்நிலையங்களில் நடத்தப்பட்டன.

மண் பரிசோதனைப் பணி—

இம்மாநிலத்தில் மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் பதின்மூன்றும், மண்பரிசோதனை இயல் ஆய்வுக் கூடங்கள் மூன்றும், உழவர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் மண், நீர் ஆகியவற்றின் மாதிரிகளைப் பெற்று ஆய்வு செய்தன. மேலும் 1979-80 ஆம் ஆண்டில் மண் பரிசோதனை இயல் ஆய்வுக் கூடங்களில் 12ஐ ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாண்டில் இந்த ஆய்வுக்கூடங்கள் 7.04 இலட்சம் எண்ணிக்கையுள்ள மண் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்துள்ளன.

பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வுக் கூடங்கள்—

துறையும், தனியார் முகவரமைப்புகளும் உழவர்களுக்கு வழங்கிய பல பயிர் பாதுகாப்பு இரசாயன மருந்துகள் குறித்தும் போதிய கட்டுப் பாட்டினை வகிப்பதற்காக, ஏழு பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டன. இவ்வாண்டில், 15 829 பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகள் குறித்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

உரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள் :

இரசாயன உரங்கள் குறித்துத் தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்ய, வெவ்வேறு வழங்கல் முனைகளிலிருந்து உரங்களின் மாதிரிகள் கொண்டுவரப்பட்டு நான்கு உரச் சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாண்டில் 7,648 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

வேளாண்மைப் பள்ளிகள் :

திருச்சி மாவட்டம் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வேளாண்மைப்பள்ளி என்ற விதத்தில் 13 வேளாண்மைப் பள்ளிகள் இத்துறையின் கீழ் செயல்பட்டுவந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்ணா பண்ணை என்னுமிடத்திலுள்ள வேளாண்மைப் பள்ளி திருச்சி மாவட்டத்திற்கு உதவுகிறது. ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வோர் ஆண்டில் 30 சிறுவர்களுக்கு பயிற்சி அளித்தது. அவர்களில் ஒவ்வொருவருக்கும் சமவெளியில் உள்ளவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 70-ம் மலைப் பகுதிகளிலுள்ளவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 75-ம் உதவித் தொகையாக வழங்கப்பட்டன. பயிற்சிக் காலம் செப்டம்பர்த் திங்கள் 1ஆம் நாளிலிருந்து ஆகஸ்டு திங்கள் 31 வரையாகும்.

உழவர் பயிற்சி நிலையங்கள் :

இராணிப்பேட்டை, திண்டிவனம், ஆடுதுறை, இலால்குடி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், குடுமியான்மலை, தருமபுரி, உதகமண்டலம், நாகர்கோவில், சேலம், திருப்பதிசாரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் 14 உழவர் பயிற்சி நிலையங்கள் இருந்தன. மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பயிற்சி நிலையங்கள் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இவ்வாண்டில் நிறுவனப்பயிற்சி 268-ம் கட்புல விளக்கப்பயிற்சி (மகளிர்க்கு) 139-ம் அமைப்பாளர்களுக்கு நிறுவனப்பயிற்சி 99-ம் வேண்டும்போது அளிக்கப்படும் பயிற்சி 1,055-ம் கல்வியறிவூட்டும் திட்டம் சேர்ந்த சிறப்புப் பயிற்சித் திட்டம் 217-ம் நடத்தப்பட்டன.

வேளாண்மைச் செய்தித் திரைப்படம் தயாரித்தல் :

இவ்வாண்டில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலமாக "பூச்சி தர்பார்" (வண்ணம்) என்ற திரைப்படம் இத்துறையால் தயாரிக்கப்பட்டு, அதன் அச்சுப் பிரதிகள் வட்டார அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு உழவர்களின் நலனுக்காக திரையிடப்பட்டது.

வேளாண்மைப் பொறியியற் திட்டம் :

1979-80 ஆம் ஆண்டில், 4,921 தனியார் குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டன. இக்கிணறுகள், சுமார் 39,368 ஹெக்டேர் (மொத்தம்) நிலப்பரப் பிற்கு பாசன வசதியளித்தன.

கிணற்றுத் பாசன துளைக்கிணறுகள் :

தண்ணீர் வழங்கலைப் பெருக்குவதற்காகத் திறந்த கிணறுகளில் 2,668 நுழைக் கிணறுகள் தோண்டப்பட்டன. இக்கிணறுகள் ஏற்கெனவே பாசன வசதிகள் பெற்றுவரும் பகுதிகளுக்கு நிலையான பாசன வசதி அளிப்பதுடன் கூடுதலாக 2,134 எக்டேர் (மொத்தம்) நிலப்பரப்பிற்கு பாசன வசதி அளித்தன. 2,753 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. இக்கிணறுகள், 10,932 எக்டேர் (மொத்தம்) நிலப்பரப்பிற்குப் பாசன வசதி அளித்தன. நில வள வங்கிகள் வணிக வங்கிகள் கடனுதவி செய்தன.

வறட்சிப்பாங்கான பகுதி திட்டம் :

வறட்சிப் பாங்கான பகுதித்திட்டத்தின் கீழ் 7941 எக்டேர் நிலப்பரப்பில் மண்-நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நிலவளம்.

இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில், உழவர்களுக்கு வாடகைக்கு கொடுக்கும் வகையில் 176 டிராக்டர்களும், 150 பாம்புப் பொறிகளும் இத்துறையில் இருந்தன.

டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் டிராக்டர்கள் மொத்தம் 83,667 மணி நேரமும், பாம்புப் பொறிகள் 1,86,402 மணி நேரமும் பணிபுரிந்தன. வாடகைக் கட்டணங்கள் வாயிலாக கிடைக்கப்பெற்ற மொத்தத் தொகை ரூ. 1,89,13,380 ஆகும்.

கால்நடை வளர்ப்பு.

கால்நடை பராமரிப்புத் துறை வட்டார அடிப்படையில் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. இத்துறையின் அனைத்து நடவடிக்கைகளும் இயக்குநரை வழிகாட்டியாகக் கொண்டு, இயக்குநர் அலுவலகத்தில் ஒருங் கிணைக்கப்பட்டன. இம்மாநிலத்தில் மொத்தம் 8 கால்நடை வட்டங்களும் 59 கால்நடை பராமரிப்புப் பிரிவுகளும் இருந்தன.

கால்நடை நலப்பணிகள் :

மொத்தம் 44 கால்நடை மருத்துவ மனைகளும், 6 கால்நடை மருத்துவ மனை-முக்கிய கிராம நிலையங்களும் இருந்தன. நோய்வாய்ப்பட்ட கால் நடைகளுக்கு மருத்துவ உதவியளிக்கும் பணியில் 522 கால்நடை மருந்தகங் களும், 77 கால்நடை மருந்தகம்-முக்கிய கிராம நிலையங்களும், 10 மருத்துவ நிலையங்களும் ஈடுபட்டன. இவை தவிர, 6 கால்நடை நோய் கண்டறியும் பிரிவுகளும், 3 கால்நடை மருத்துவ இயலூர்திப் பிரிவுகளும், 13 மருத்துவ ஆய்வுக் கூடங்களும் செயல்பட்டு வந்தன. மொத்தம் 65,09,861 கால்நடை களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. இவ்வாண்டில் 48,71,632 கால்நடை களுக்குத் தடுப்பூசிப் போடப்பட்டது. 3,24,006 கால்நடைகளுக்குக் காயடிக் கப்பட்டது.

கால்நடை வளர்ப்பு :

இந்த ஆண்டில், 7 கால்நடைப் பண்ணைகளும், அயலினக் கால்நடை இனப் பெருக்கப் பண்ணை ஒன்றும் தொடர்ந்து செயல்பட்டன. பால்வள ஆணையாளரின் பொறுப்பின் கீழ் இருந்த மாதவரம் மையக் கால்நடை—அரசுப் பால் பண்ணை 1-7-1979 முதல் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றப்பட்டது. 1-4-1979 அன்றுள்ளபடி மொத்தம் 4,681 கால்நடைகள் இருந்தன. இனப்பெருக்கம் செய்யும்பொருட்டு 294 காளைகள் விற்கப் பட்டன; 139 காளைகள் துறை நிலையங்களுக்கு மாற்றப்பட்டன. இந்த ஆண்டில் 1,470 கன்றுகள் பிறந்தன. ஆண்டின் இறுதியில் இருந்த கால் நடைகளின் எண்ணிக்கை 4,551 ஆகும். மொத்தம் 20,79,894 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டது. 16,47,906 லிட்டர் பால் விற்பனை செய்யப் பட்டது.

இந்த ஆண்டில் 2 முக்கிய கிராம வளர்ச்சி வட்டாரங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு இறுதியில் 570 துணைநிலையங்களுடன் கூடிய 57 வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டன.

இந்த ஆண்டில், மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டியில் ஒன்றும் வாடிப்பட்டியில் ஒன்றுமாக இரு செயல் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. ஆண்டு இறுதியில், துணை நிலையங்களுடன் கூடிய 7 செயல் திட்டப் பிரிவுகள் செயல்பட்டன.

280 காளைகள், 280 வெள்ளை மாடுகள், 265 கறுப்பு மாடுகள் ஆகியவற்றுடன் கூடிய 59 காளை வளர்ப்பு நிலையங்கள் இருந்தன.

இந்த ஆண்டில் 4,33,977 மாடுகள் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்பட்டன. மேலும், 14,86,601 கால்நடைகளுக்குத் தடுப்பூசியும் போடப்பட்டது.

இந்த ஆண்டில் 3 கால்நடைக் கண்காட்சிகளும், 42 கால்நடை கோழி வளர்ப்புக் கண்காட்சிகளும், 26, கன்றுகள் அணிவகுப்பும் நடத்தப்பட்டன. ஹூப்ளி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட வட்டாரக் கண்காட்சியில் இத்துறைக்குரிய சிந்தி மாடுகள் பார்வைக்காக வைக்கப்பட்டன. அவைகளுக்குப் பரிசுகள் கிடைத்தன.

ஆடு வளர்ப்பு :

இந்த ஆண்டில் இரண்டு செம்மறியாட்டுப் பண்ணைகளும், 4 செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகளும் தொடர்ந்து செயல்பட்டன. இந்த ஆண்டில், 123 செம்மறியாடு வளர்ப்புப் பணிச் சங்கங்கள் பதிவுச் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 39 செம்மறியாடு இனப்பெருக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், இதற்கான விற்புத் திட்டங்களின் கீழ் 228 சங்கங்களும் இத்திட்டத்தில் வராத பிற பகுதியில் 83 சங்கங்களும் செயல்பட்டு வந்தன. இவ்வாண்டின் இறுதியில் இப்பண்ணைகளில் மொத்தம் 5,967 செம்மறியாடுகள் இருந்தன. இந்த ஆண்டில் மொத்தம் 2,639 செம்மறியாட்டுக் குட்டிகள் பிறந்தன.

கோழி வளர்ப்பு.

இந்த ஆண்டில் கோழிக் குஞ்சு பொரிக்க வைக்கும் நிலையம் இரண்டும், 29 கோழிவளர்ப்பு விரிவாக்க நிலையங்களும் தொடர்ந்து செயல்பட்டன. மேலும், இம்மாநிலத்தில், 5 கோழி இனப்பெருக்க கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன. ஆண்டு இறுதியில் கோழிக் குஞ்சு பொரிக்க வைக்கும் நிலையங் களிலும், கோழி வளர்ப்பு விரிவாக்க நிலையங்களிலும் மொத்தம் 59,462 கோழிகள் இருந்தன. மொத்தம் 49,75,658 முட்டைகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் 37,69,310 முட்டைகள் குஞ்சு பொரிக்க வைப்பதற்காகவும், உண் பதற்காகவும் விற்கப்பட்டன இனப்பெருக்கத்துக்காகவும், உண்பதற்காகவும் 2,79,455 கோழிகள் விற்கப்பட்டன.

பன்றி வளர்ப்பு.

சாத்தூரிலுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவு இந்த ஆண்டு மூடப்பட்டது. 6, பன்றி வளர்ப்பு பிரிவுகள் செயல்பட்டு வந்தன. இப்பிரிவுகளில் 31—3—1980 அன்றுள்ளவாறு மொத்தம் 279 பன்றிகள் இருந்தன. மொத்தம் 766 பன்றிக் குட்டிகள் பிறந்தன. 445 பன்றிகள் விற்கப்பட்டன.

கால்நடைத் தீவன உற்பத்தி.

கால்நடைத் தீவன உற்பத்தி நிலையங்கள் நான்கும் இவ்வாண்டும் தொடர்ந்து செயல் பட்டன. இவ்வாண்டில் 28,709 மெட்ரிக் டன்கள் தீவனமும் 30.07 லட்சம் புல் பாதுகாப்பு இடங்களும் உருவாக்கப்பட்டன.

கால்நடை உயிரியல் நுண்மப்பொருட்கள் :

மாநில மருத்துவப் பொருட்கள் கட்டுப் பாட்டதிகாரியின் அதிகார வரம் பின் கீழ் கால்நடை நோய் தடுப்பு மருத்துவ நிலையம் தொடர்ந்து செயல் பட்டது. இந்நிலையம் 3,35,278 டோசுகள் அம்மைப்பாலையும் 17,610 மி.லி. நோய் தடுப்பு மருந்தையும் 12505.7 லிட்டர் திரவ மருந்தையும் உற்பத்தி செய்தது; இந்நிலையம் முறையே 1,12,89,032 டோசுகள் அம்மைப் பாலை யும் 13,435 மி.லி. நோய் தடுப்பு மருந்தையும் 631.7 லிட்டர் திரவ மருந்தை யும் விற்பனை செய்து, இவ்விற்பனைகள் மூலம் ரூ. 6,78,877.44 பெற்றது

கோமாரி நோய் ஒழிப்புத் திட்டம்.

கோமாரி நோயை ஒழிப்பதில் 14 மாவட்டப் பிரிவுகள், 13, சோதனைச் சாவடிகள், 10, கண்காணிப்புப் பிரிவுகள் ஈடுபட்டு வந்தன. கோமாரி நோய் ஒழிப்புப் பணியாளர்களில் 62,28,856 டோசுகள் அம்மைப்பால் ஊசி போடப் பட்டது. இந்நோய் இம்மாநிலத்தில் 9 இடங்களில் ஏற்பட்டது. இதனால் 108 கால்நடைகளுக்கு இந்நோய் பாவி அவற்றில் 63 கால்நடைகள் இறந்தன.

தனித் திட்டங்கள்.

கன்று வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் 5,418 கன்றுகளை வளர்த்து நிறை வேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 51.30 இலட்சம் ரூபாய் செலவு ஏற் பட்டது.

2,822 பிரிவுகளை ஏற்படுத்துவது என்ற திட்டச் சாதனையை எய்தி, ஆடு வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 23.38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்டச் சாதனை யாக, 2022 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 30.00 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், இத்திட்டத்தின் கீழ் கோடைக்கானல் பகுதியில், தெரிந்தெடுக்கப்பட்ட 1000 கன்றுகளுக்கு உதவித் தொகை வழங்கியதன் மூலம் செயல்படுத்தப்பட்டது.

வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் மேலும் இரு முக்கிய கிராம வளர்ச்சி வட்டாரங்களும் மேலும் இரு மருத்துவ நிலையங் களும் ஏற்படுத்தப்பட்டன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் கூடுத லாக 26 வளர்ச்சி வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலை வர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் இருந்த வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை 161 ஆகும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 399 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும், 4 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும் செயல்

பட்டு வந்தன. உதக மண்டலம் மாவட்ட கால்நடை வளர்ப்புப் பண்ணைக்கு உயரின பெர்சியன் கால்நடைகள் 16, வாங்கப்பட்டன.

வரவு-செலவு.

வரவு-செலவு முறையே ரூ. 92,00,379.22-ம் ரூ. 12,09,568.72 ஆகும்.

பால் பண்ணை வளர்ச்சி.

தமிழ் நாடு பால்வள நிறுவனம், தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பொதுத் துறை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாடு அரசின் தலைமைச் செயலாளர் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். இந் நிறுவனத்தில் முழு நேர நிர்வாக இயக்குநர் ஒருவர், அலுவல் இயக்குநர்கள் நால்வர் ஆகியோர் உள்ளனர். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 5 கோடி ரூபாயாகும். தொகை வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 1,77,09,000 ஆகும். சென்னை, மதுரை ஆகிய மாநகர்களில் வாழ் வோருக்கு பால், பால்படு பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல், உற்பத்தி செய்தல், அவற்றை நியாயமான விலையில் விற்றல் ஆகியவையே இந்நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகளாகும்.

நடவடிக்கைகள்-சென்னை :—

சென்னை மாநகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 451 பால் டிப்போக்கள உள்ளன. சென்னை மாநகரில் 97 பால் விற்பனை நிலையங்கள் உள்ளன. 704.52 இலட்சம் லிட்டர் பால் வாங்கப்பட்டது. 918.45 லட்சம் லிட்டர் பாலும் 4.78 இலட்சம் கிலோ பால்படு பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டது.

மதுரை.—மதுரை மாநகரில் 174, பால் டிப்போக்களும் 35 பால் விற்பனை நிலையங்களும் உள்ளன. 276.99 இலட்சம் லிட்டர் பால் வாங்கப்பட்டது. 238.60 இலட்சம் பாலும், 15.85 இலட்சம் கிலோ பால் படு பொருள்களும் 8.76 இலட்சம் கிலோ பால்மாவும் உற்பத்தி செய்யப்பட்டன.

விற்பனை.—சென்னை, மதுரை ஆகிய இவ்விரு மாநகர்களில் 1457.08 இலட்சம் லிட்டர் பால் 15.61 இலட்சம் பால்படு பொருட்கள், 2.57 இலட்சம் கிலோ பால் மாவு ஆகியவை விற்கப்பட்டன.

மொத்த விற்பனைத் தொகை.—முந்தைய ஆண்டின் விற்பனைத் தொகை 254.09 இலட்சம் ரூபாய் என்றிருக்க இவ்வாண்டின் விற்பனைத் தொகை 2,945.44 இலட்சம் ரூபாயாக இருந்தது.

உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.—கிராம அளவிலான 2,049 உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், இவ்வாண்டில், இந்நிறுவனத்துக்கு பால் வழங்கி வந்தன. பாலைக் குளிரவைக்கும் 20 சாதனங்களும் இருந்தன.

சிறப்புத் திட்டங்கள்.—தமிழ் நாடு ஆதரவு தரும் பின்வரும் திட்டங்களை இந்நிறுவனம் தொடர்ந்து செயல்படுத்தியது.

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 87, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 80,000 லிட்டர் பால் சேகரிக்கப்பட்டது. 83 கிராமங் களிலுள்ள மக்கள் தொழில்நுட்ப இடுபொருள் வழங்குதல் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர். இதன்மூலம் சுமார் 15,000 உழவர்கள் பயனடைந்தனர்.

(ஆ) **கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம்.**—இத்திட்டத்தில் கீழ் 25,000 கலப்பினக் கன்றுகளைக் கொண்டு வருவது என்று இலக்கிட்டிருக்க, 15,395 கன்றுகள் கொண்டுவரப்பட்டன. இத்திட்டத்திற்குரிய உதவித் தொகையாக 157.95 இலட்சம் ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இ) **வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம்.**—இத்திட்டம் தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்படுகிறது.

(ஈ) **தருமபுரி மாவட்டம்.**—276, பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. தருமபுரி மாவட்டத்திலிருந்து 28,000 லிட்டர் பால் கூடுதலாக சேகரிக்கப்பட்டது. 141.25 ஏக்கர் நிலப்பரப்பில் மாட்டுத் தீவனப்புல் பயிரிடுவதற்காக மாட்டுத் தீவனப் புல்வளர்ப்பு உதவித்தொகை

பெறும் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1979-80 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 23.2 இலட்சம் ரூபாயாகும்.

(உ) இராமநாதபுரம் மாவட்டம்.—சோதனைக் கருவிகள், பால் சூவளைகள் ஆகியவற்றை வாங்கவும், போக்குவரத்து உதவித் தொகைக்காகவும் பால் குளிர வைக்கும் கருவி ஒன்றை பரமகுடியில் அமைக்கவும், பால் குளிர வைக்கும் தற்போதுள்ள நிலையங்களை விரிவாக்கவும் 1979-80 ஆம் ஆண்டில 16.508 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

கால்நடைத் தீவனத் தயாரிப்புக் கருவி.—மாதவரம் பால் உற்பத்திக் காலனியில் உள்ள கால்நடைத் தீவன தயாரிப்புக் கருவி தொடர்ந்து இயங்கி வந்தது. முந்தைய ஆண்டில் 16,175 டன் கால்நடைத் தீவனம் விற்கப்பட்டிருக்க, இவ்வாண்டில் விற்கப்பட்ட கால்நடைத் தீவனத்தின் அளவு 18,700 டன் (மதிப்பீடு).

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 12-7-1973-ம் நாளன்று தொடங்கப்பட்டது. இம்மாநிலத்தில் கோழி அபிவிருத்தி குறித்த பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதும் அவற்றைப் பொருளாதார வகையில் தனித்தியங்கக்கூடியதாக இருப்பதற்கு வகை செய்வதுமே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கோழி முட்டை, இறைச்சி விலைகளை ஒரே சீராக வைத்திருக்கவும், மற்றும் விவசாயிகளுக்குக் கனிசமான வருமானம் கிட்டுவதை உறுதிப்படுத்தவும் கோழி முட்டை, இறைச்சி வணிகத்தில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

நடவடிக்கைகள் :

இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் கீழ்க்கண்ட இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன :—

(அ) வணிகத் தன்மையுடையவை.

(ஆ) விரிவாக்கத் தன்மையுடையவை.

தீவனக் கலவை நிலையங்கள், விற்பனை நிலையங்கள் மற்றும் வீரிய இன கோழிக் குஞ்சுகள் பொரிக்கும் நிலையங்கள் (ஒன்று கோயம்புத்தூர் மாவட்டம் அரசூரிலும் மற்றொன்று மதுரை மாவட்டம் கப்பலூரிலும் உள்ளது) ஆகியவை வணிகப் பிரிவில் அடங்கும். கோழி வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள் விரிவாக்கப் பிரிவில் செயல்படுகின்றன.

கோழித் தீவனக் கலவை நிலையங்கள் :

1. நந்தனம் (சென்னை)
2. கொட்டப்பட்டு (திருச்சி)
3. கப்பலூர் (மதுரை)
4. திருப்பூர் (கோயம்புத்தூர்)

இந்நான்கு கோழித் தீவன கலவை நிலையங்களும் தொழிற்சாலை மற்றும் விவசாய சார்நிலை உற்பத்திப் பொருட்களைக் கொண்டு சரிவிகிதக் கோழி தீவனம் தயாரிக்கின்றன. இந்நிறுவனங்களில் நல்ல தரமான கோழித் தீவனம் தயாரிக்கப்படுகிறது. இத்துடன் சென்னை நந்தனத்திலுள்ள தீவன பரிசோதனை நிலையம் தீவனத் தயாரிப்பிற்காக வாங்கப்படும் பொருட்கள் மற்றும் தாயரிக்கப்படும் தீவனம் இவற்றை முறையான தரக்கட்டுப்பாடு மூலமாக ஒழுங்குபடுத்துகிறது. நந்தனத்தில் புதிதாக நிறுவப்பட்ட பெரிய தீவனக் கலவை இயந்திரம் நன்முறையில் இயங்கி வருகிறது. அறிக்கை ஆண்டுக்கான தீவனத் தயாரிப்பும் விற்பனையும் வருமாறு :—

ஆண்டு.	தயாரிக்கப்பட்ட தீவனம்	விற்பனை
		மெட்ரிக் டன்.
1979-80	7,683	7,590

டாப்கோவின் தீவனத்திற்கு ஐ.எஸ்.ஐ. (I.S.I.) முத்திரை தரப்பட்டுள்ளது.

விற்பனை மையங்கள் :—

கீழ்க்கண்ட இடங்களில் விற்பனை மையங்கள் உள்ளன :—

1. சென்னை.
2. செங்கல்பட்டு

3. வேலூர்.

4. சேலம்.

5. மதுரை.

6. திருச்சி.

7. திருநெல்வேலி.

8. கோயம்புத்தூர் (உதகமண்டலம் மற்றும் திருப்பூர்).

இவ்விற்பனை நிலையங்கள் விவசாயிகளுக்குத் தேவையான தரமான கோழிக்குஞ்சுகள், தரமான தீவனம் மற்றும் தொழில் நுணுக்கங்கள் போன்ற பணிகளை ஆற்றுவதுடன் அவர்களிடமிருந்து முட்டைகள் இறைச்சிக்கான கோழிகள் முதலியவற்றை சேகரிக்கின்றன. நிலையான கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு வாங்கப்படுவதால், இந்நிறுவனம் இரயில்வே மற்றும் பாதுகாப்புத் துறை போன்ற மத்திய அரசு நிறுவனங்கள் மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு நிலையான விலையில் விநியோகம் செய்ய முடிகிறது. கொள்முதல் தமிழக விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டு இடைத்தரகர்களில்லாமல் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது.

விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகள் :

கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் முட்டைகள் 33 பைசா வீதம் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதனால் கால்நடை வளர்ப்பு சிறப்புத்திட்ட விவசாயிகளுக்கு உடனடியான விற்பனை வாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன் "டாப்கோ" நிறுவனம் தடை இல்லாது முட்டைகளைப் பெற்று வழங்குவதும் சாத்தியமாகிறது. சென்னை நகரின் தேவைகளை சமாளிப்பதற்கும் மற்றும் பொதுவாகப் பெருகிவரும் கோழி மற்றும் முட்டை முதலியவற்றின் தேவையைக் சமாளிப்பதற்கும் ஒரு திட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது. சென்னை நகரின் முட்டை விற்பனை மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 97.66 இலட்சம் முட்டைகளாக அதிகரிக்கும் என்று கணக்கிடப்படுகிறது. அந்தமான் நிக்கோபார் தீவுகளிலுள்ள கார் நிக்கோபார் தீவுகளுக்கு 1,000 முட்டைகள் வீதம் மும்முறை கப்பல் மார்க்கமாக ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது. இம்முயற்சி அயல் மாநிலங்களுக்கு முட்டைகள் அனுப்பு வதற்கான திட்டத்தின் முன்னோடியாகும்.

பன்றி இறைச்சி மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்கள்.

கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி விற்பனையில் மட்டுமல்லாது பன்றி இறைச்சி மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்களையும் டாப்கோ விற்பனை செய்கிறது. தமிழ்நாடு அரசு கால்நடைப் பராமரிப்புத் துறையிலிருந்து பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி சம்பந்தப்பட்ட பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. டாப்கோ விற்பனையகங்களில் விற்பனையாகும் பன்றி இறைச்சி சம்பந்தப்பட்ட பொருட்கள் வருமாறு : (அ) சாமி, (ஆ) காக்டெய்ல்ஸாஸேஜஸ், (இ) ஹாட் டாக்ஸ், (ஈ) பிராங்க் பர்டர், (உ) பேகன், (ஊ) ஹாம், (எ) சிக்கன் என்-ஹாம்.

" டாப்கோ " வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன :—

1. செங்கல்பட்டு.
2. கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்).
3. பெருந்துறை (பெரியார் மாவட்டம்).
4. சேஷன் சாவடி (சேலம் மாவட்டம்).
5. டீ கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).

இவ்வைந்து மையங்களும் கோழிக் குஞ்சுகளை வளர்த்து கோழி வளர்க்கும் விவசாயிகள், அரசு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு கால்நடை வளர்ச்சித் திட்டங்கள் சரிவிகித உணவு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றிற்கு விநியோகித்து வருகின்றன. மேலும் இம்மையங்கள் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதுடன் சுற்றிலுமுள்ள கோழிகளின் நலனையும் பாதுகாக்கின்றன.

கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம் (கோழி அபிவிருத்தி).

மத்திய அரசினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை " டாப்கோ " நிறுவனம் வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படுத்தியுள்ளது. 1976-77-ல் இருந்து மூன்று வருடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இத்திட்டம் மேற்படி மாவட்டங்களில் 1,500 கோழி வளர்ப்பு நிலையங்கள் வீதம் 6,000 கோழி வளர்ப்பு நிலையங்கள் உருவாகிட

வகை செய்கிறது. 50:50 என்ற விகிதத்தில் செலவுகளை பங்கிட்டுக் கொள்ளும் முறையில் தமிழக அரசால் மத்திய அரசுடன் இணைந்து செயல் படுத்தப்படுகிறது. 31—3—1980 வரை 3,611 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டது. 1980-81-ல் இன்னும் 2,000 கோழி வளர்ப்பு நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும்.

கோழி அபிவிருத்திக்கு தமிழ் நாடு அரசு கொடுத்துள்ள சலுகைகள் :

(1) தமிழக அரசு ஏப்ரல் 1979 முதல் கோழிகளின் விற்பனையின் மீது விதிக்கப்பட்டிருந்த வணிக வரியினை தள்ளுபடி செய்துள்ளது. கோழி வளர்ப்புத் தொழில் அபிவிருத்தி அடைய மேலும் தூண்டுதல் இதன் மூலம ஏற்பட்டுள்ளது.

(2) குறைந்த பட்ச மின் கட்டணச் சலுகை கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

(3) சிறப்பு கால்நடைப் பாரமரிப்புத் திட்டத்தின்கீழ் " காப்புறுதி " திட்டம் கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி நிலை.

1978-79-ல் ரூ. 4.43 இலட்சமாக இருந்த இலாபம் 1979-80-ம் ஆண்டில் வருமானவரி மற்றும் இதர இருப்புகளுக்கும் ஒதுக்கீடு செய்வதற்கு முன் ரூ. 6.72 இலட்சம் (தோராயமாக) இலாபம் கிடைக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

அத்தியாயம் II.

வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.

பத்திரப் பதிவு.

1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 16/1908) நிர்வாகம், ஆவணங்களைப் பதிவு செய்தல் ஆகியவற்றுக்குப் பத்திரப் பதிவுத் துறை பொறுப்பு வகிக்கிறது. இந்த ஆண்டில் புதிதாக கரூர் பத்திரப் பதிவு மாவட்டம் அமைக்கப்பட்டது. கிராமப்புற மக்களின் வசதியை முன்னிட்டு கீழ்க்கண்ட நான்கு இடங்களில் துணைப் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப் பட்டன :—

(1) தாக்கநாயக்கன்பாளையம் (ஈரோடு பத்திரப் பதிவு மாவட்டம்).

(2) ஆனந்தபுரம் (விழுப்புரம் பத்திரப் பதிவு மாவட்டம்).

(3) கணியூர் (திருப்பூர் பத்திரப் பதிவு மாவட்டம்).

(4) சிறுபாக்கம் (கள்ளக்குறிச்சி பத்திரப் பதிவு மாவட்டம்).

முத்திரைத்தாள் வருமானமும் ஆவணங்களைக் குறைத்து மதிப்பிடுவதற்கெதிரான சோதனையும்.

இவ்வாண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்குச் செலுத்தத்தக்க உரிமை மாற்றுத் தீர்வை உட்பட ஆவணங்கள் குறித்து செலுத்தப்பட்ட முத்திரைத் தாள் தீர்வை ரூபாய் 28.70 கோடியாகும். இவ்வாண்டில் 16,481 ஆவணங்கள் குறைத்து மதிப்பிட்டது கண்டுபிடிக்கப்பட்டு துறை நடவடிக்கை எடுத்தது. முத்திரைத் தாள் தீர்வை, இணக்க கட்டணங்கள் வகையில் ரூ. 23.24 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இவ்வாண்டில் பத்திரப் பதிவு அதிகாரிகள் முத்திரைத்தாள் சட்டத்தின் 41-ம் பிரிவின்கீழ் ரூபாய் 3.32 கோடி 64,897 பத்திரங்கள் மூலம் வசூலிக்கப்பட்டது. இவ்வாண்டில் உரிமை மாற்றுத் தீர்வையாக ரூபாய்

13,14,04,617.25 வசூலிக்கப்பட்டது. இத்தொகையில் ரூபாய் 39,42,137.40 வசூல் செலவுகளாக துறையின் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

பத்திரப் பதிவு :

இந்த ஆண்டில் 10,64,209 பத்திரப் பதிவுகள் நடைபெற்றன. கட்டாயப் பதிவு செய்ய வேண்டியிருந்த ஆவணங்களின் எண்ணிக்கை 10,17,622 ஆகும்.

உயில்களும் தத்து ஆவணங்களும்:

இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உயில்களின் எண்ணிக்கை 19,067.

இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தத்து ஆவணங்களின் எண்ணிக்கை 11.

உயில்கள் அடங்கிய 101 உறைகள் இவ்வாண்டில் வைப்பீடு செய்யப்பட்டன.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் மொத்த மதிப்பு :

இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 641.88 கோடி.

தேடுதலும் நகல்களும்:

இவ்வாண்டில் வில்லங்கச் சான்றிதழ் வேண்டி 2,39,850 விண்ணப்பங்கள் வந்தன. இவ்வாண்டில் 1,66,428 தேடுதல் மனுக்கள் வந்தன. இவ்வாண்டில் வரப்பெற்ற பல்வகை தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 16,463 ஆகும். சான்றளிக்கப்பட்ட நகல்கள் வேண்டி இவ்வாண்டில் வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 72,730 ஆகும். பல்வகை நகல்கள் வேண்டி வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 24,292.

வருமானம் :

(அ) இந்த ஆண்டில் ஆவணங்களின் பதிவுக் கட்டணங்கள் வகையில் ரூபாய் 492.62 இலட்சம் வருமானம் கிட்டியது.

(ஆ) இவ்வாண்டில் பதிவைத் தேடுதல் வகையில் கட்டணமாக ரூபாய் 46.98 இலட்சம் வசூலாகியது.

(இ) இந்த ஆண்டில் பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் பிற வகை வருமானமாக ரூபாய் 31.72 இலட்சம் கிட்டியது.

(ஈ) இவ்வாண்டில் கிடைத்த மொத்த வருமானம் ரூபாய் 5.79 கோடியாகும்.

தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டம்.

1978-79 ஆம் ஆண்டில 9,198 சீட்டுகள் பதிவு செய்யப்பட்டிருக்க 1979-80 ஆம் ஆண்டில் 9,123 சீட்டுகள் பதிவு செய்யப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் 16,668 சீட்டுகள் இயங்கி வந்தன. 1978-79 ஆம் ஆண்டில் 16,214 சீட்டுகளே இயங்கி வந்தன, 1979-80 ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் சீட்டுகள் சட்டத்தின்கீழ் சீட்டு எதுவும் நடைபெறவில்லை.

1978-79 ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இயங்கி வந்த சீட்டுகளின் மொத்தத் தொகை ரூபாய் 10,06,98,760 ஆக இருக்க 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் அது ரூபாய் 14,29,31,568 ஆக உயர்ந்தது. திருவிதாங்கூர் சீட்டுகள் சட்டத்தின்கீழ் சீட்டுகள் எவையும் இயங்காததால் அச்சட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் இறுதியில் இயங்கிவந்த மொத்த சீட்டுத் தொகை எதுவும் இல்லை.

1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் மொத்தம் ரூபாய் 7,99,308.50 வருமானம் கிட்டியது. ஆனால் ரூபாய் 9,14,452.45 செலவாகியது. இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட கட்டணம் 1-11-1979 முதல்தான் செயலுக்கு வந்தது.

1932-ம் வருடத்திய இந்திய கூட்டாண்மை சட்டம்.

பதிவுத் துறை தலைவர் 1932-ம் வருடத்திய இந்திய கூட்டாண்மை சட்டத்தின் கீழ் பதிவாளராக தொடர்ந்து இருந்தார். நடப்பு ஆண்டில் 8,507 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. 468 நிறுவனங்கள் கலைப்பு அறிவிப்புகள் தாக்கல் செய்தன. நடப்பு ஆண்டில் மொத்த வரவுகள் ரூபாய் 1,15,339.34. மொத்த செலவு ரூபாய் 26,784.85.

முத்திரைத் தாள்கள்:

(அஞ்சல் துறை சாராதது)

இவ்வாண்டு ஒவ்வொருவகை முத்திரைத் தாள்களின் மூலம் பெறப்பட்ட வரவுகள்பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நீதித்துறையல்லாதவை.—

கணக்கு தலைப்பு.	ரூபாய்.
1. ம ற்று உண்டியல்கள் உண்டியல்	13,15,518 00
2, ஒட்டுவில்லை வருவாய் முந்திரை த ள்கள்	2,04,09,348 55
3. ஏ னய நீதித்துறையல்லாத முத்தி ரத் தாள்கள்	33,61,4 ,952 85
4. ஏனைய முத்திரைத் தாள்கள் குறித்த வரவுகள்	1,034.50
5. முத்திரையிடப்படாத தீர்வை அல்லது பே திய அளவுக்கு முத்திரைத் தாள்கள் ஒட்டப்படாத ஆவணங்கள் ..	1,83,90,778.22
6, ஏனைய சிறப்பு ஒட்டுவில்லை இனங்கள் ..	1,47,64,433.70
7. அபராதங்களும் தண்டத் தொகைகளும் ..	8,00 8 4.36
8. பல்வகை வரவுகள்	2,21,2 0 29
மொத்தம். ..	39,30,45,090.47

பி. நீதித்துறை –

முத்திரைத்தாள்கள் வாயிலாக வசூலிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணங்கள்	6,26,90,708.98
முத்திரை நகல் தாள்களின் விற்பனை ..	12,6 ,256.50
ஏனைய வரவுகள்	
அபராதங்களும் தண்டத் தொகைகளும் ..	28,425.88
பல்வகை வரவுகள்	49,611,24
மொத்தம்	6,40,30,002.60

சென்ற ஆண்டு புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் * இந்திய முத்திரை தாள் சட்டத்தின்கீழ் பத்திரங்கள் பதிவு செய்வது பொ து வாக அதிகரித்ததன் காரணமாக மொத்தத்தில் 4,78,69,648.78 ரூபாய் அதிக வருமானம் கிடைத்திருப்பது தெரியவருகிறது.

எஸ்டேட்டுகள் நிலவரி ஏற்பாடுகள்.

நிலவரி ஏற்பாட்டுத் துறை இந்த ஆண்டில் பின்வரும் சட்டங்களையும், றப்புப் பணியையும் செயல்படுத்தியது :—

மிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

இச் சட்டத்தை நிறைவேற்றும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டது. லவரி ஏற்பாட்டுப் பணியை நிறைவேற்ற வேண்டிய பகுதி எதுவும் இல்லை. றிக்கையாண்டில், இறுதி இழப்பீட்டினை முடிவு செய்தல், இறுதி இழப்பீடு ருத்தியமைத்தல் போன்ற நிலவர் ஏற்பாட்டிற்குப் பின்னுள்ள பணி மேற் காள்ளப்பட்டது. நிலுவையாகவுள்ள இனங்களை முடிவு செய்ததன் காரண ாகவும், இறுதி இழப்பிட்டினை நிர்ணயித்து, அடிப்படை ஆண்டுத் தொகை யத் திருத்தியமைத்ததன் விளைவாகவும் 31-3-1980 இறுதி வரையிலான ழப்பீட்டுத் தொகையையும் இடைக்காலத் தொகையையும் வழங்குவதற்குக் ழ்க்காணும் தொகை நிர்ணயிக்கப்பட்டது :—

	ரூபாய்.
வைப்பீடு செய்யப்பட்ட இழப்பீடு	4,864.86
வைப்பீடு செய்யப்பட்ட இடைக்காலத் தொகை	1,896.47

மிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரி யாக மாற்றுதல்) சட்டம்.

இவ்வாண்டில், கல்ராயன் மலைகளிலுள்ள கள்ளக்குறிச்சி வட்டத்தைச் சார்ந்த மூன்று ஜாகிர்கள் உட்பட 672.85 சதுர மைல் கொண்ட எட்டு இனாம் ஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டது. நிலுவையாக ள்ள இனங்களை முடிவு செய்ததன் காரணமாகவும், இறுதி இழப்பீட்டினை ர்ணயித்து, அடிப்படை ஆண்டுத் தொகையை திருத்தியமைத்ததன் விளை ாகவும், இழப்பீடு, இடைக்காலத் தொகை வழங்குதல் என்ற வகையில் கீழ்க் ாணும் தொகை நிர்ணயிக்கப்பட்டது :—

		ரூபாய்.
வப்பீடு செய்யப்பட்ட இழப்பீடு	.. ..	2,56,274.46
வப்பீடு செய்யப்பட்ட இடைக்காலத் தொகை	..	50‘825.26

தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம் (ஒழிப்பு—இரயத்துவாரியாக் மாற்றுதல்) சட்டம்.

இவ்வாண்டில், 0.62 சதுர மைல் கொண்ட ஐந்து கிராமங்களிலுள்ள சிறு இனாம்களில் ஒழிப்புச் சட்ட விதித் துறைகளின் கீழ் ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 24/1969.

இவ்வாண்டில் 125.14 சதுர மைல் கொண்ட 10 கிராமங்களைப் பொறுத்தவரையில் இச்சட்ட விதித்துறைகளின்கீழ் ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கிராமங்களின் பெரும் பகுதி, உச்ச நீதிமன்றத்தின் தடை ஆணைகளுக்கு உட்பட்டவைகளாக இருக்கிறபடியால், அத்தடை ஆணை அகற்றப்படுகிற போதுதான் நிலவரி ஏற்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

தமிழ்நாடு வரியிலா நிலவுடைமைகள் மீது ரயத்துவாரி வரி விதித்தல் சட்டம் 31/1973.—இச்சட்டத்தை செயல்படுத்த 16-10-1979 ஆம் நாளை அரசு நிர்ணயித்தது. 8 ஆம் பிரிவு அறிவிக்கையைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிற வருவாய்த் துறைப்பணி.

இவ்வகைப்பணி, தென்-ஆர்க்காடு, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மாநில அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிற பணி தொடர்பானதாகும். வருவாய்த் துறை பதிவேட்டில் நாளது வரையில் உள்ள பதிவுகளைச் செய்வதுதான் இப்பணியின் நோக்கமாகும். 1979-80 ஆம் ஆண்டு வரையில், தென்-ஆர்க்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் 2209.07 சதுர மைல் கொண்ட 881 கிராமங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டியப் பணி முடிவடைந்துள்ளது.

வணிக வரிகள்.

வணிக வரிகள் துறை, ஆணையாளரின் பொறுப்பின்கீழ் தொடர்ந்து செயல்பட்டு வந்தது ; வணிக வரிகள் துறை ஆணையாளர், வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினராகவும் இருந்தார். அவருக்கு வருவாய்த் துறை (வ.வ.) வாரியத்தின் செயலாளரும், கூடுதல் செயலாளரும் உதவிப் புரிந்தனர். இம்மாநிலத்தில் 15-4-1979 வரை வணிக வரிக் கோட்டங்கள் நான்கு இருந்தன. அவற்றுள் மூன்று கோட்டங்கள் பிரிக்கப்பட்டன : 16-4-1979 முதல் மொத்தம் 7 கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் துணை ஆணையாளர் ஒருவரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வந்தன. இயங்கும் பிரிவுகள் உட்பட புலனாய்வு பிரிவு, ஆய்வு பிரிவு, சோதனைச் சாவடிகள், கேளிக்கை வரி வசூலிக்க பறக்கும் படைகள், பிற சிறப்புப் படைகள் ஆகியவையும் ஒருங்கிணைக்கப்பட்டன. இதைத் தவிர ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குரிய முதுநிலை சம்பள விதத்தில் சம்பளம் பெறும் துணை ஆணையாளர் இருவரைக்கொண்ட புதிய "செயல்படுத்தும் பிரிவு" (Enforc m nt W g) ஒன்று சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும் 2-5-1979 முதல் செயல்பட்டு வருகின்றன. உதவி ஆணையாளரின் தலைமையின் கீழ் 26 வணிக வரி மாவட்டங்கள் இருந்தன. சில பதவிகள் 16-4-1979 முதல் வணிக வரிகள் உதவி ஆணையாளர்கள் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. வணிக வரிகள் இணை அதிகாரிகள் பதவிகள் 16-4-1979 முதல் வணிகவரி அதிகாரிகள் பதவிகளுடன் இணைக்கப்பட்டன.

செயலாக்கப்பட்ட சட்டங்கள்.—வணிக வரிகள் துறை இந்த ஆண்டில் பின்வரும் சட்டங்கள் செயல்படுவதைத் தொடர்ந்து நிருவகித்து வந்தது.

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி, எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

(6). தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(7) தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(8) தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

வணிகர்களை பதிவு செய்தல்.—வணிகர்களைப் பதிவு செய்வதற்குரிய குறைந்த அளவு விற்பனை வரம்பு 30,000 ரூபாயாகத் தொடர்ந்து இருந்தது. தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1978-79 ஆம் ஆண்டில் மொத்தம் 2,04,976 வணிகர்கள் பதிவு செய்யப் பட்டிருக்க 1979-80 ஆம் ஆண்டில் 2,30,668 வணிகர்கள் பதிவு செய்யப் பட்டனர்.

வரி விதிக்கப்பட்டோரும் வரி விதிப்பு அலுவலர்களும் (தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்).—வரி விதிப்புப் பணியை 85 மாவட்ட வணிக வரிகள் துறை அதிகாரிகளும், 236 துணை வணிக வரிகள் துறை அதிகாரிகளும், 341 உதவி வணிக வரிகள் அதிகாரிகளும் கவனித்து வந்தனர். வரி விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1978-79 இல் 1,02,795 ஆக இருந்தது. இவ்வெண்ணிக்கை 1979-80 இல் 1,04,378 ஆக அதிகரித்தது.

வரி வசூல்.—தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 218.62 கோடி வரி வசூலிக்கப் பட்டது. இச்சட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 235.13 கோடி வரி வசூலிக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்—மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1978-79 ஆம் ஆண்டில், 21,874 ஆக இருந்தது; இவ்வெண்ணிக்கை 1979-80 ஆம் ஆண்டில் 21,946 ஆக அதிகரித்தது. 1978-79 ஆம் ஆண்டில் 20,323 வரி விதிப்புகள் முடிக்கப்பட்டன. 1979-80-ல் 19,717 வரி விதிப்புகள் முடிக்கப்பட்டன 1978-79 கிடைத்த வரி வருமானம் ரூ. 49.95 கோடியாகும். 1979-80-ல் கிடைத்த வரி வருமானம் ரூ. 62.48 கோடியாகும்.

சோதனைச் சாவடிகள்—இந்த ஆண்டில் மொத்தம் 75 சோதனைச் சாவடிகள் இருந்தன. இந்த ஆண்டில் மொத்தம் 56,88,498 வண்டிகள்

சோதனைச் சாவடி வழியாகச் சென்றன. 1978-79 ஆம் ஆண்டில் சோதனைச் சாவடிகளில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 30,300 ஆகும். இவ்வெண்ணிக்கை 1979-80-ல் 38,647 ஆக அதிகரித்துள்ளது. 1978-79-ல் சோதனைச் சாவடியில் ரூ. 39.66 இலட்சம் வரியாகவும் அபராதமாகவும் வசூலிக்கப்பட்டது. 1979-80-ல் ரூ. 84.81 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் சட்டம்.—இம்மாநிலத்தில் இவ்வாண்டில் மொத்தம் 1,779 திரைப்பட அரங்குகள் இருந்தன. அவற்றில் 864 நிலையான கட்டிடங்களுடன் கூடிய திரைப்பட அரங்குகள், 83 பாதி நிலையான கட்டிடங்களுடன் கூடிய திரைப்பட அரங்குகள், 832 டூரிங் கொட்டகைகள், தமிழ் நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழும், தமிழ் நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழும், கடந்த ஆண்டு ரூ. 23.77 கோடி வசூலிக்கப்பட்டது. இந்த ஆண்டில் ரூ. 28.51 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது. இது ரூ. 4.74 கோடி அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. கேளிக்கை வரி வசூலிப்பு பறக்கும் படை 513 வழக்குகளைக் கண்டு பிடித்து, ரூ. 2.66 இலட்சம் வரி வசூலித்தது. சென்ற ஆண்டில், இவ்வகையில் ரூ. 1.98 இலட்சம் வரி வசூலித்தது.

தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரி விதிப்புச் சட்டம்.— இச் சட்டம், சென்னையிலும், உதகமண்டலத்திலும் நடக்கும் பந்தயங் களுக்குப் பொருந்தும். இதன் மூலம் 1978-79ல் ரூ. 1.99 கோடி வசூலிக்கப் பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 2.06 கோடி வசூலிக்கப்பட்டது.

தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.—மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி, இம்மாநிலத்தில் முதல் முறையாக விற்கப்படும் மோட்டார் எரி எண்ணெய்க்கு விற்கப்படும் ஒருமுனை வரியாகும். விற்கப்படும் அளவைப் பொறுத்தே வரி விதம் விதிக்கப்பட்டது. சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் உட்பட எண்ணெய்க் கம்பெனிகளிலிருந்து வரித்தொகையில் பெரும் பகுதி வசூலிக்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வரித் தொகை ரூ. 26.32 கோடியாகும். 1979-80 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வரித் தொகை ரூ. 28.21 கோடியாகும்.

தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீடு நடுவர் மன்றம்.

இத்தீர்ப்பாயம் தமிழ் நாடு விற்பனை வரி சட்டம் 1959 மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956 ஆகியவற்றின்படி இயங்கும் இரண்டாம் முறையீட்டு மன்றமாகும். இத்தீர்ப்பாய செயல் முறைகளிலும் வரை முறைகளிலு 1979-80 ஆம் நிதியாண்டினைப் பொறுத்த அளவில் எவ்வித மாற்றமும் இல்லை

தமிழ்நாட்டில் மொத்தம் நான்கு தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன இதில் மாநிலத் தலைநகரான சென்னை மாநகரத்தில் முதன்மை தீர்ப்பாயமு கூடுதல் தீர்ப்பாயமும் இயங்கி வருகிறது. மதுரை மற்றும் கோவை ஆகி முக்கிய பெருநகரங்களில் கூடுதலாக இரண்டு தீர்ப்பாயங்கள் உள்ளன.

1-4-1979 தேதியில் 2,554 முறையீடுகளும், 34 மறுபரிசீலனை மனுக்களு நிலுவையாக அனைத்து தீர்ப்பாயங்களிலும் இருந்தன. கடந்த நிதியாண்டி 3,350 முறையீடுகளும் 37 மனுக்களும் பதிவு பெற்றன. இதனால் முடிக்கப்பட வேண்டிய முறையீடுகள் 5,904 ஆகவும் மறுபரிசீலனை மனுக்கள் 71 ஆக உயர்ந்தன. இவற்றில் 3,818 முறையீடுகளும் 54 மனுக்களும் முடிக்க பட்டுள்ளன.

மேல்முறையீடு உதவி ஆணையர்கள் (வணிகவரி).—சட்டத்தின்கீழ் முத முறையீடு செய்யும் அதிகாரியாக மேல்முறையீட்டு உதவி ஆணையர்க செயல்படுகின்றனர். சென்னை நகரத்தில் 4 மேல் முறையீட்டு உதவி ஆணை யர்களும் மாவட்டங்களில் 12 மேல் முறையீட்டு உதவி ஆணையர்களு உள்ளனர்.

தமிழ்நாடு விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, தமிழ்நாடு கூடு விற்பனை வரி மற்றும் தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டங்களின் மொத்தம் 4,697 முறையீடுகள் நிலுவையாக 1-4-1979-ல் இருந்தன. நி யாண்டில் 10,157 முறையீடுகள் வரப்பெற்று முடிவுற வேண்டிய முறையீடுகள எண்ணிக்கை 14,854 ஆக ஆனது. இவற்றுள் 11,084 முறையீடுகள் முடிக் பெற்றுள்ளன.

தமிழ்நாடு விவசாய வருமான வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்.—கடந்த நிதியாண்டில் ஆரம்பத்தில் 202 முறையீடுகள் நிலுவையாக இருந்தன. இந்த ஆண்டில் 300 முறையீடுகள் பதிவுற்றன. இதன் மூலம் 502 முறையீடுகள் தீர்வு காண்பதற்கு வந்தன. இவற்றுள் 345 முறையீடுகள் முடிக்கப் பட்டுள்ளன.

இந்து சமய—அறக் கட்டளைகள்.

இந்து சமய—அறநிலையத் துறை பின்வரும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்தை பொதுவாக மேற்பார்வையிட்டு வருவதோடு கட்டுப்பாட்டு அதிகாரமும் செலுத்தி வருகிறது :—

1. கோயில்கள்	23,258
2. மடத்துக் கோயில்கள்	68
3. மடங்கள்	64
4. குறிப்பிட்ட கட்டளைகள்	1,287
5. அறக்கட்டளைகள்	193
6. சமணர் (ஜைனக்) கோயில்கள்	16
7. சமணக் (ஜைனக்) கட்டளைகள்	...
8. சமண (ஜைன) அறக்கட்டளைகள்	
	24,886

இதைத் தவிர ரூ. 200-க்குக் குறைவாக ஆண்டு வருமானமுள்ள நிறுவனங்கள் 8,161 உள்ளன. அவை சிறு நிறுவனங்களாகக் குறிப்பிடப் படுகின்றன. பங்குத் தொகை விதிப்பதற்காக அவற்றின் வருமானம் மதிப்பிடப்படுவதில்லை.

துறையின் நிதிகள் (வரவு செலவு).—ரூ. 200-க்கும் அதிகமாக ஆண்டு வருமானமுள்ள சமய நிறுவனங்கள் செலுத்தும் பங்குத் தொகை மூலமாகவும் ரூ. 1,000 மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானமுள்ள சமய நிறுவனங்களி லிருந்து வசூலிக்கப்படும் தணிக்கைக் கட்டணங்களும் இத்துறைக்கு வருவாய் தேடித் தரும் வாயில்களாகும். அறிக்கையாண்டில் பங்குத் தொகை

தணிக்கைக் கட்டணங்கள், நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தைத் திருப்பி பயர்த்தல், செண்டேஜ் கட்டணங்கள், நீதிமன்றக் கட்டணங்கள் போன்ற எல்லா இனத்திலிருந்தும் துறைக்குக் கிடைத்த வருவாய் ரூ. 84,65,793.00 ஆகும். செலவு ரூ. 1,38,82,357.13 ஆகும்.

ஆணையாளர்கள் விசாரணை நடத்துதல்.—1979-80 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 332 வழக்குகள் முடிவுறாமலிருந்தன. அறிக்கையாண்டில் 153 வழக்குகளில் விசாரணை தொடங்கப்பட்டது. ஆக இவ்வாண்டில் விசாரணையிலிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 485 ஆகும். அவற்றில் 289 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டது. 196 வழக்குகள் முடிவுறாமலுள்ளன.

நிதி.—1-4-1979 முதல் 31-3-1980 வரையுள்ள காலத்தில் "பங்குத் தொகை" என்பதன் கீழ் நிலுவை வகையிலும் நடப்புக் கேட்புக் கோரிக்கை வகையிலும் ரூ. 45,14,859.12 வரவு வந்தது. இதைத்தவிர சட்டத்தின் 93 ஆம் பிரிவின் படி வசூலித்ததன் மூலம் ரூ. 12,177.16 கிடைத்தது. தணிக்கைக் கட்டணம் என்பதன்கீழ் நிலுவை வகையிலும் நடப்புக் கேட்புக் கோரிக்கை வகையிலும் ரூ. 11,79,207.89 வசூலிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் நடவடிக்கைகள்.—கோயில்கள், சமயப் பண்பாட்டு நிலையங்களை காத்திடும் பொருட்டு அங்கு சமயப் பற்றினை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டது. கோயில்களில் பூஜைகளும் திருவிழாக்களும். தகுந்த முறையிலும் பொதுமக்களின் திருப்திக்கேற்ற வகையிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தன. அதிக வருமானமில்லாத கோயில்களிலும் பூஜைகளை முறைப்படி நடத்துவதற்காக இவ்வாண்டில் தனியாக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அறிக்கையாண்டில், பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை கோயில் நிதி ஆகியவற்றின் உதவியுடன் கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

சமய நிறுவனங்களுக்கு பெரிய அளவில் பழுதுபார்த்தலும், புதுப் பித்தலும்.—அதிக வருமானமில்லாத கோயில்களுக்கு பொதுமக்கள் அளிக்கும் நன்கொடையைக் கொண்டும் உபரியாக நிதியிருக்கும் சமய நிறுவனங் களிலிருந்து நிதிகளை மேற்சொன்ன கோயில்களுக்கு அளிப்பதன் மூலமும்

அவற்றை பழுது பார்த்து புதுபிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. அறிக்கையாண்டில் 12 நிறுவனங்களில் பரந்த அளவில் பழுதுபார்த்தல் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

சமூக நலப்பணிகள்.—அனாதை இல்லங்கள், குழந்தை நலநிலையங்கள் செவிடு-ஊமைப் பள்ளிகள், மருந்தகங்கள் (ஆயுர்வேத, ஆங்கில மருத்துவ முறை) ஆதரவற்றோர் இல்லங்கள் ஆகியவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. தற்போது 36 அன்பு இல்லங்கள் மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

கல்வி.—பல்வேறு கோயில்கள், ஆறு கல்லூரிகளையும் 20 உயர்நிலைப் பள்ளிகளையும் மூன்று நடுத்தரப் பள்ளிகளையும், 3 தொடக்கப் பள்ளி களையும் நடத்துகின்றன. 202 கோயில்களில் நூலகங்கள் உள்ளன. அறிக்கையாண்டில் "திருக்கோயில்" பத்திரிகை தொடர்ந்து வெளியிடப் பட்டது.

வக்ஃபு:

தற்போதைய வக்ஃபு வாரியம் அலுவல் சாரபற்ற தலைவர் ஒரு வரையும், பத்து உறுப்பினர்களையும் கொண்டு 7-7-1978 ஆம் நாளில் ஏற்படுத் தப்பட்டது. அவ்வாண்டிலிருந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அர சால் நியமிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழு நேரச் செயலாளர் ஒருவர் இதன் நிருவாகத்தைக் கவனித்து வந்தார். கிட்டத்தட்ட 6,000 வக்ஃபுகள் இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

நடவடிக்கைகள்.—வக்ஃபு வாரியம் மேலப்பாளையம், சேலம், பெரிய குளம் இராமநாதபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஏழை முகமதிய விதவை களுக்கு 85 தையல் இயந்திரங்களை இவ்வாண்டில் வழங்கியது. கல்வி, பெட்டிக் கடைகள் வைத்தல், குடிசைகளைப் புதுப்பித்தல் போன்ற இனங் களுக்கு இவ்வாரியம் நன்கொடையாக ரூ. 3,965-ஐ வழங்கியது. ஏழை களாகவும் வசதியற்றவர்களாகவுமுள்ள முகமதியர்களுக்குத் துணிகளையும் இவ்வாரியம் வழங்கியது. சென்னை, மத்திய சிறையில் கைதிகள் தொழுகை மேற்கொள்வதற்கு மௌலி ஒருவரையும் நியமனம் செய்துள்ளது. சென்னை வக்ஃபுவாரிய அலுவலகப் பணியாளர்களின் பயனுக்காக, அவ்வலுவலகத்தில் மசூதி ஒன்றை ஏற்படுத்தி மதகுரு ஒருவரையும் (பேஷ் இமாம்) நியமனம் செய்துள்ளது.

அத்தியாயம் III.

கூட்டுறவுத் துறை

கூட்டுறவு.

கூட்டுறவு துறையை அமைத்தல்.—மாநிலத்திலுள்ள எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் 1955 ஆம் ஆண்டு வரை கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தன. தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளருக்குரிய அதிகாரங்களை பிற துறைகளின் அல்லது சட்டப்படி அமைந்த வாரியங்களின் தலைவர்களுக்கு வழங்கியதன் மூலம் சில வகைச் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பு 1956-57-லிருந்து அவ்வப் போது அத்துறைகளுக்கு அல்லது வாரியங்களுக்கு மாற்றப்பட்டது. ஆகவே கூட்டுறவுத்துறை பதிவாளருடன் அவ்வப்பணி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்போது பத்து பதிவாளர்கள் உள்ளனர்:

பதிவாளர் கூட்டுறவுத் துறை தலைவராவர். கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமாக வேளாண்மை உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் கடன் வழங்குகின்றன. நகர்ப் புறக் கடன், வேளாண்மை விளை பொருளை விற்பனை செய்தல், பதப் படுத்துதல், வேளாண்மை இடுபொருள்களையும் நுகர் பொருள்களையும் வழங்குதல் போன்ற பணிகளையும் கவனிக்கின்றன.

வேளாண்மைக் கடன் வசதி.—மாநிலத்திலுள்ள உழவர் சமுதாயத்தினரில் சுமார் நான்கில் மூன்று பகுதியினருக்கு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், உதவி செய்துள்ளன. 1979-80 இல் இச்சங்கங்கள் ரூ. 37.16 கோடிக்குக் குறுகிய காலக் கடன்களையும் வழங்கியுள்ளது. சாகுபடி, விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் செலவு, தொழிலாளர் கூலி ஆகியவற்றுக்காக மேற்படிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில், உழவு மாடுகள், கறவை மாடுகள், கோழிகள், விசைத் தெளிப்பான்கள், வாங்க ரூ. 5.54 கோடிக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கப்பட்டது. கிணறுகள் வெட்டவும், ஏற்கெனவேயுள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும் விசையேற்றங்களை

திறுவவும், டிராக்டர் வாங்கவும், கரும்பு பிழியும் கருவி முதலியன வாங்கவும் மலைத் தோட்டங்களை மேம்படுத்தவும் தொடக்க நிலவள வங்கிகள் ரூ. 85 கோடிக்கு நீண்டக்கால கடன் வழங்கின.

கூட்டுறவு விற்பனை பதப்படுத்துதல்.—4392 வேளாண்மைப் பணி கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் 104 சில்லறை விற்பனை நிலையங்களும் இரசாயன உரங்களை வழங்கி வந்தன. 1979-80 ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ. 25.82 கோடி மதிப்பிற்கு 1.85 இலட்சம் டன் உரத்தை வழங்கின. அரசு உரத்தை விநியோகம் செய்ததில் ஏற்பட்ட செலவுத் தொகையைத் திருப்பித்தரும் வகையில் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளனத்திற்கு அரசு ரூ. 1.55 இலட்சம் உதவித் தொகை அளித்தது.

பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்கள்.—சேலம், தருமபுரி, திருச்சிராப் பள்ளி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஒன்பது பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலைப்பகுதியில் பழங்குடி மக்களுக்காக மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 38.31 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன. ரூ. 21.64 இலட்சம் மதிப்புள்ள நுகர் பொருட்களை விநியோகம் செய்துள்ளன. ரூ. 8.66 இலட்சம் மதிப்புள்ள காடுபடு சிறு பொருட்களை கொள்முதல் செய்துள்ளன. மேலும் ரூ. 5.74 இலட்சத்திற்கு வேளாண்மை பொருள்களை வழங்கியுள்ளன.

கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றம்.—இத்துறையின் நிர்வாக பொறுப்பின் கீழ் பல்வேறு வகையான 10,370 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இச் சங்கங்களில் 1,17,86,789 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 162.34 இலட்சம். அவ்வாண்டில் பழங்குடியினர் 6087 பேரை உறுப்பினர்களாகச் சேர்த்ததன் மூலம், அறிக்கை ஆண்டில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 19,214 ஆக உயர்ந்தது.

சிறப்பு வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்கள் வருமாறு :

சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.—அறிக்கையாண்டில் இம் மாநிலத்தில் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 18 இருந்தன. இச்சங்கங்களில் 9,038 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சங்கங்களில் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் ரூ. 1.55 இலட்சமாகும். அரசு ரூ. 0.33 இலட்சம் அளவிற்கு நிதி உதவி அளித்தது.

முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள்.—31-3-1980 ஆம் நாள் நில வரப்படி, இம்மாநிலத்தில் 14 முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் 2,033 உறுப்பினர்களைக் கொண்டு 0.76 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூல தனத்துடன் செயல்பட்டு வந்தன. அறிக்கையாண்டில் அரசு ரூ. 0.21 இலட்சத்தை நிதி உதவியாக அளித்தது.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம்.—இம்மாநிலத்தில் சென்னையில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றுமாக மொத்தம் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு இருந்தன. அவற்றில் 152 உறுப்பி னர்கள் இருந்தனர். அதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 0.06 இலட்சம் ஆகும். சென்னை சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம் இதுவரை 98 சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியுள்ளது. திண்டுக்கல்லில் உள்ள சங்கம் 30 சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியது. அறிக்கையாண்டில் அரசு ரூ. 0.79 இலட்சத்தை நிதி உதவியாக வழங்கியுள்ளது.

உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம்.—இச்சங்கத்தின் நோக்கம், அதன் உறுப்பினர்களுக்கு ஆதாயம் தரக்கூடிய வேலையைத் தேடித்தருவ தாகும். மாநகரில் செயல்படும் அரசு அலுவலகங்கள் ஒப்பந்தப் புள்ளி கேட்காமலேயே நாற்காலிகளில் பழுதற்ற இருக்கையை மீண்டும் பின்னும் பணியை இச்சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று அரசு ஆணை யிட்டது. இச்சங்கத்தில் செயலாளராகப் பணியாற்ற ஓர் இளநிலை ஆய்வாளரை அரசு தன் செலவில் நியமித்துள்ளது. மேலும் ரூ. 0.08 இலட்சத்தை அரசு இச்சங்கத்திற்கு நிதி உதவியாக அளித்துள்ளது.

சுகாதார கூட்டுறவுச் சங்கம்.—இரண்டு சுகாதாரக் கூட்டுறவு சங்கங்கள் 377 உறுப்பினர்களைக் கொண்டு ரூ. 0.03 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு

மூலதனத்துடன் செயல்பட்டு வந்தன. இச்சங்கங்களின் நோக்கம், குறிப்பாக கிராம மக்களுக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் மருத்துவ வசதி அளிப்பதே ஆகும். இச்சங்கங்கள் உரிய நேரத்தில், போதுமான வகையில் குறைந்த செலவில் மருத்துவ சிகிச்சை அளிக்கின்றன.

தமிழ்நாடு எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் :

இது 359 உறுப்பினர்களைக் கொண்டு ரூபாய் 0.12 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வந்தது. ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க வகையில் ரூபாய் 20,000-ஐ இச்சங்கத்திற்கு அரசு கடனாக அளித்துள்ளது.

பூந்தமல்லி கால்நடைத் தீவன உற்பத்தி விற்பனை சங்கம் :

இதில் 163 உறுப்பினர்கள் இருந்தனர். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 0.49 இலட்சம் ஆகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் :

இம்மாநிலத்தில் 15 கூட்டுறவு சங்கங்கள் இருந்தன. அவற்றில் 5,323 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 13.00 இலட்சம் ஆகும். இச்சங்கங்கள் ரூபாய் 171.00 இலட்சத்திற்கு அச்சுத் தொழிலை செய்துள்ளன.

உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் :

12 உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் 1,865 உறுப்பினர்களைக் கொண்டு ரூபாய் 1.74 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் இயங்கி வந்தன. இந்த 12 சங்கங்களில் ஆறு சங்கங்கள் அரிசன தொழிலாளர்களுக்கானவை. இவ்வாண்டில் இரண்டு உப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லாரி வாங்க அவற்றிற்கு ரூபாய் இரண்டு இலட்சம் அளவிற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது.

நடுவர் மன்றம் :

ஆண்டின் தொடக்கத்தில் 84,206 வழக்குகள் விசாரணையில் இருந்தன. இவ்வாண்டில் நடுவர் மன்றத்திற்கு 5,11,660 வழக்குகள் குறித்த குறிப்புகள்

வரப்பெற்றன். நடுவர் மன்றத்தில் 5,48,403 வழக்குகள் முடிக்கப்பெற்றன. 31-3-1980 ஆம் நாள் நிலவரப்படி 47,463 கோரிக்கை மனுக்கள் மட்டுமே விசாரணையில் இருந்தன.

நிறைவேற்றல்.—ஆண்டின் தொடக்கத்தில் 2,72,825 நிறைவேற்று மனுக்கள் முடிக்கப் பெறாமலிருந்தன. இவ்வாண்டில் 1,32,768 நிறைவேற்று மனுக்கள் வரப்பெற்றன. 44,579 நிறைவேற்று மனுக்கள் முடிக்கப்பெற்றன. 3,61,014 மனுக்கள் நிறைவேற்றப்படாமல் நிலுவையாக இருந்தன.

கலைத்தல்.—ஆண்டின் தொடக்கத்தில் 2,151 சங்கங்கள் கலைக்கப்பட வேண்டியிருந்தன. அறிக்கையாண்டில் 116 சங்கங்கள் மட்டுமே கலைக்கப் பட்டன. கலைக்கப்பட்ட 2,267 சங்கங்களில் 356 சங்கங்களை மட்டுமே மூடி விடுவது குறித்து இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆகவே, 31-3-1980 ஆம் நாள் நிலவரப்படி 1,911 கலைக்கப்பட்ட சங்கங்களுக்கு இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல், தணிக்கை கட்டணம்.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு தணிக்கைக் கட்டணம் விதிக்கப்பட்டு அவற்றிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. தணிக்கை செய்யும் பணியாளர்கள் பணியாற்றியிருக்கும் கால அளவின் அடிப் படையில் இக்கட்டணம் விதிக்கப்படுகிறது. இருப்பினும் சிலவகை சங்கங்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லையென்று அரசு விலக்களித் துள்ளது. தணிக்கைப் பிரிவுக்கு அரசு செலவிட்ட தொகையும் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மொத்தசெலவு.	வசூலிக்கப்பட்ட தொகை.	வசூல் சதவீதம்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
205.00	99.90	48.73

கிராமக் கடைத் திட்டம்.—இத்திட்டத்தின்கீழ், கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை 6,660 புதிய கடைகளை 11 ஜில்லாக்களில் திறந்துள்ளன.

இத்துடன் ஏற்கெனவே இருக்கும், 4,441 நியாயவிலைக் கடைகளை ஒரே இடத்தில் அனைத்து இன்றியமையாப் பொருட்கள் விற்கப்படும் பெரிய கடைகளாக மாற்றியுள்ளன. இவ்வாறாக கூட்டுறவுத் துறையில் 11,101 கிராமக் கடைகள் உள்ளன. இதில் முக்கிய சாதனை என்னவெனில் ஒதுக்கப்பட்ட 11 ஜில்லாக்களில் கடை திறக்கப்பட வேண்டிய கிராமம் ஒன்றுகூட கிடையாது. உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் அந்நிறுவனம் 4,053 கிராமக் கடைகளை நடத்தி வருகின்றன. கிராமக் கடைகள் பின்வரும் பொருட்களை அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய், புளி, கொத்தமல்லி, கடலெண்ணெய் ஆகியவற்றை அவசியம் விநியோகிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. கிராமக் கடைகள் மேற்சொன்ன பொருட்களை அவசியம் விற்க வேண்டியதுடன் உள்ளூர் தேவைகளுக்கேற்ப, ஏனைய இன்றியமையாப் பொருட்களும் இக்கடைகளில் விற்கப்படுகின்றன. இந்த கிராமக் கடைகளின் மூலம் இந்த ஆண்டில் 18.07 கோடி ரூபாய்க்கு சாமான்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

1904 ஆம் ஆண்டில் சென்னையில் தமிழ்நாடு நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டதிலிருந்து தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படத் தொடங்கின என்று கூறலாம். அப்போதிலிருந்து, இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் சீரான முறையில் வளர்ந்து கிராம, நகர மக்களின் தேவைகளை நன்முறையில் நிறைவு செய்கின்றன. தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். இவ்வமைப்பில் தொடக்கக் கூட்டுறவுப் பண்டசாலை அடிப்படை அமைப்பாகும். நுகர்வோர் கூட்டுறவு மொத்த பண்டசாலை—மாவட்ட கூட்டுறவு பொருள்கள் வழங்கல்—விற்பனைச் சங்கங்கள் இடைப்பட்ட அமைப்பாகும். தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டமைப்பு தலைமைச் சங்கமாகும்.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டமைப்பு.

இக்கூட்டமைப்பு, தமிழ்நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்ய 1967 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பு, துணிவகைகள், குழந்தைகள் உணவு, மளிகைச் சாமான்கள், ஒப்பனைப் பொருள்கள், விலைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்கள்

ஆகியவற்றின் விற்பனையைக் கவனிக்கின்றது. விலைக் கட்டுப்பாட்டுக்குட் பட்ட துணி வகைகள், பாடநூல்கள், சலுகை விலையில் மாணவர் குறிப்பேடுகள் ஆகியவற்றின் விற்பனைக்கு இது பொறுப்பு வகிக்கிறது. முந்தைய ஆண்டில், இக்கூட்டமைப்பு, ரூபாய் 1,328 இலட்சம் பெறுமான விற்பனையைச் செய்தது. இவ்வாண்டில் ரூபாய் 1,551 இலட்சம் மதிப்புள்ள விற்பனை செய்யப்பட்டது. இக்கூட்டமைப்பு இந்த அறிக்கையாண்டில் ரூபாய் 218.11 இலட்சம் மதிப்புள்ள துணிவகைகளை விற்பனை செய்தது. விலைக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட துணி வகைகள் விற்பனையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மாதமொன்றுக்கு ஒவ்வொன்றுக்கும் 1,500 சதுர மீட்டர் கொண்ட 1,669 பேல்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்ட அளவாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், விலைக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட துணிவகைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாண்டில் 24,478 பேல்கள் கட்டுப்பாட்டுத் துணிவகைகள் விற்கப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூபாய் 611.95 இலட்சமாகும். இவ்வாண்டில் 368.00 இலட்சம் பாடநூல்கள் கூட்டுறவுச் சங்கங்களினால் விற்கப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூபாய் 583 இலட்சமாகும். 36,589 பள்ளிகளில் பயிலும் 89 இலட்ச மாணவர்கள் இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களினால் நன்மை பெற்றுள்ளனர். 1979-80 ஆம் ஆண்டில், ரூபாய் 16.38 இலட்சம் மதிப்புள்ள சலுகைவிலைக் காகிதம் கூட்டமைப்புக்கு ஒதுக்கப்பட்டது. கூட்டமைப்பு, அதனைத் தன்னுடன் இணைந்த சங்கங் களுக்கு விற்றது. இவ்வாண்டில் ரூபாய் 21.15 இலட்சம் மதிப்புள்ள மளிகை சாமான்கள் விற்பனையாகின.

மளிகைச் சாமான்கள், ஒப்பனைப் பொருள்கள் போன்ற இன்றியமையாப் பொருள்கள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. இவ்வாண்டில் ரூபாய் 10,639.99 இலட்சம் மதிப்புள்ள சரக்குகளை அவை விற் பனை செய்துள்ளன.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டசாலைகள்.

மொத்த விற்பனை சங்கங்கள் மளிகை சாமான்கள், ஒப்பனைப் பொருள்கள் போன்ற இன்றியமையாப் பொருள்கள் அனைத்தையும் விற்பனை செய்கின்றன. இவ்வாண்டில் அவை ரூபாய் 10,639.99 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளன.

கூட்டுறவுப் பேரங்காடிகள் :

ஓரே கட்டிடத்தில் பல்வகைப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் கூட்டுறவுப் பேரங்காடிகள் கூட்டுறவு இயக்கத்திற்கே புதிய வேகத்தைக் கொடுத்துள்ளது. கூட்டுறவுப் பேரங்காடிகளினால் கூட்டுறவு இயக்கத்திலேயே பெரியதொரு புரட்சி ஏற்பட்டுள்ளது என்று கூறலாம். இவ்வாண்டில் இவை மொத்தம் ரூபாய் 3,478.38 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளன. சிறு பேரங்காடிகள் 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 1,610.44 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்தன.

தமிழ்நாட்டில் 1,085 சங்கங்கள் உரிமம் பெற்ற சிமிட்டி விற்பனையாளர்களாகச் செயல்பட்டன. இவை ரூபாய் 1,979.80 இலட்சம் மதிப்புள்ள 1,38,092 மெட்ரிக் டன் சிமிட்டியை விற்பனை செய்தன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு.

1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு (TANFED) இரு அடுக்குகள் கொண்ட கூட்டுறவு விற்பனைத் தலைமை அமைப்பாகும். இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆண்டு இறுதியில் 120 ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 196.81 இலட்சம். இவ்வாண்டில் இக்கூட்டமைப்புத் தேசிய கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புடன் இணைந்து மலைத்தோட்டப் பயிர்கள், வாசனைப் பொருள்கள் ஆகியவற்றின் விற்பனையையும் தொடர்ந்து நடத்தியது. 1979-80 ஆம் ஆண்டில் இது சிங்கப்பூர், பினாங்கு, கொழும்பு போன்ற நாடுகளுக்கு தேசிய கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு மூலமாக ரூபாய் 28.85 இலட்சம் மதிப்புள்ள மஞ்சள், முந்திரி முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.

ஐம்பது டன் நிலக்கடலை, சூரியகாந்தி விதைகள் ஆகியவற்றிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கான திட்டமொன்றை ரூபாய் 62.06 இலட்சம் செலவில் நிறுவுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு இத்தொழிலில் மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. நாளொன்றுக்கு 50 டன் புண்ணாக்கு தயாரிக்கும் திறனுள்ள எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று இதன் அருகே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இத்தொழிற்சாலை 1,016.136 மெட்ரிக் டன் நிலக்கடலையிலிருந்து 862.992 மெட்ரிக் டன் கடலெண்ணெய் தயாரித்துள்ளது.

இன்றியமையாப் பொருள்கள் விற்பனை.

இன்றியமையாப் பொருள்களின் விற்பனையிலும், தமிழ்நாடு விற்பனைக் கூட்டமைப்பு முக்கியமான பங்கு வகிக்கிறது. சென்னை மாநகரில் மண்ணெண்ணெய் விற்பனையில் இந்திய எண்ணெய்க் கழகத்திற்கு மொத்த விற்பனையாளர்களில் ஒருவராகச் செயல்பட்டு வருகிறது. தனிப்பட்ட வணிகர்கள் சில்லறை விற்பனையாளர்களுக்கு கடன் வசதியளித்த காரணத்தினால் அவர்களின் கடும்போட்டியைச் சமாளிக்க முடியாமல், கடந்த ஆண்டில், இந்த மண்ணெண்ணெய் விற்பனை மந்தமாக இருந்தது. எனினும், 1970 ஆம் ஆண்டில் முனைப்பாக நடவடிக்கை எடுத்ததனால் ரூபாய் 22.10 இலட்சம் மதிப்புள்ள 1,485 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இக் கூட்டமைப்பினால் விற்பனை செய்யப்பட்டது.

அத்தியாயம் IV

கல்வித் துறை.

பள்ளிக் கல்வி.

பள்ளிக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக்கான வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், கண்காணித்தல், நிறைவேற்றுதல் போன்ற பணிகளுக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கிறார். பள்ளிக் கல்வி இயக்குநருக்கு, மூன்று இணை இயக்குநர்கள், ஒரு நிர்வாக அதிகாரி, ஆறு துணை இயக்குநர்கள் ஆகியோர் நிர்வாகத்தில் உதவி செய்தனர். நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரி, ஒரு முதுநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோர் நிதி சம்பந்தப்பட்ட அலுவல்களில் உதவுகிறார்கள்.

மாவட்ட அமைப்பு :

வருவாய் மாவட்ட அளவில் துணை இயக்குநர்கள் பதவித் தரத்திலுள்ள முதன்மைக் கல்வி அதிகாரிகள், கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அதிகாரிகள், வட்ட அளவில், மகளிர் பள்ளிக் கல்வி ஆய்வாளர்கள் (மகளிர்), சரக அளவில் பள்ளித் துணை ஆய்வாளர்கள் ஆகியோர் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் கல்வி தொடர்பாக திட்டமிட்டு அதன் முன்னேற்றம் குறித்துக் கண்காணிக்கின்றனர். தருமபுரி, பெரியார் மாவட்டங்களில் புதிதாக ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள இரு முதன்மைக் கல்வி அதிகாரிகளின் பதவிகள் உள்பட இம்மாநிலத்தில் மொத்தம் 14 முதன்மைக் கல்வி அதிகாரிகள் உள்ளனர். சென்னை கிழக்கு, திருப்பூர் ஆகிய இரு புதிய கல்வி மாவட்டங்கள் உட்பட மொத்தம் 50 கல்வி மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கல்வி மாவட்டமும் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இந்த ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள 15 கல்வித் துணை ஆய்வாளர்கள் பதவிகள் உட்பட இம்மாநிலத்தில் மொத்தம் 411 கல்வித் துணை ஆய்வாளர்கள் உள்ளனர். ஒவ்வொருவருடைய அதிகார வரம்பின்கீழும் 60 முதல் 70 தொடக்க நடுநிலைப் பள்ளிகள் உள்ளன.

பள்ளிகள் மாணவர்கள் எண்ணிக்கை :

இந்த ஆண்டில் இம்மாநிலத்தில் 27,662 தொடக்கப் பள்ளிகள், 5,685 நடு நிலைப் பள்ளிகள், 2,088 உயர்நிலைப் பள்ளிகள், 1,138 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மொத்தம் உள்ள 36,573 பள்ளிகளில் 51,13,241 மாணவர்கள், 37,65,697 மாணவியர்கள் உள்ளனர். 6 முதல் 11 வயதுத் தொகுதியில் 65,80,80 சிறுவர்கள் பள்ளி செல்லும் வயதுடையவர்கள் என மதிப்பிடப்பட்டது. இவ களில் 62,27,764 பேர்கள் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். இது 95.64 சதவீத மாகும். கடந்த ஆண்டில் இது 94.25 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டில் மொத்தம் 2,58,462 ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்பட்டனர்.

நண்பகல் உணவு :

தமிழ்நாடு முழுவதிலும் 32,000 தொடக்கப்பள்ளிகளில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 35,00 மாணவர்களைக் கூடுதலாக சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. தோராயமா சுமார் 20 முதல் 25 இலட்சம் பள்ளிச் சிறுவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உணவளிக்கப்படுகிறது. (ஆதி திராவிடர் நலப் பள்ளிகளைச் சேர்ந்த 1.6 இலட்சம் மாணவர்களுட்பட.)

கேர் திட்டம்:

ஆண்டொன்றில் 200 நாட்களுக்கு உணவளிக்கப்படுகிறது. பள்ளிகளி நடுப்பகல் உணவு தயாரிப்பதற்காக பல்கூர் கோதுமை, C.S.M சாலெ என்ணெய் போன்ற ஊட்டச்சத்துள்ள பொருள்களை "கேர்" நிறுவன வழங்கியது. தமிழ்நாட்டிலுள்ள "கேர்" நிறுவனம் ரூபாய் 6 கோடி மதிப் புள்ள 4 கோடி பவுண்டு எடையுள்ள உணவுப் பொருள்களை வழங்கியது மாநில அரசு ரூபாய் 4.80 கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்களை வழ கியது. 1979-80 ஆம் ஆண்டில் 20.25 இலட்சம் மாணவர்களுக்கு உண வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூபாய் 480 இலட்சம் செலவிட பட்டது.

மைய சமயற்கூடம் :

இந்த ஆண்டில் 97 மைய சமயற்கூடங்களும் தொடர்ந்து செயல்பட்டன நாள்தோறும் 224 வண்டிகள் சமைத்த உணவு பள்ளிக் குழந்தைகளுக்

எடுத்துச் சென்றன. சமையற்கூட வண்டிகளைப் பராமரித்து வைத்து வருவதற்காக "விக்கிர வாண்டியில்" நிறுவப்பட்டுள்ள பணிமனை இந்த ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

வட்டாரக் கிடங்குகள் :

"கேர் (CARE) நிறுவனம் அளிக்கும் 1/3 பங்கு உதவித் தொகையுடன் தமிழ்நாட்டில் இத்துறைக்காக 10 கிடங்குகள் கட்டப்பட்டவ. இதைத் தவிர சென்னையில் நந்தனத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான கிடங்கில் "கேர்" (CARE) நிறுவனத்தின் பொருட்களும் சேமித்து வைக்கப்படுகின்றன.

"யூனிசெப்" (UNICEF) உதவியுடன் நடைபெறும் அறிவியல் கல்வித் திட்டம்.

இந்த ஆண்டில் 22 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், பள்ளித் துணை ஆய்வாளர் ஒருவர், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் பயிற்றாசிரியர்கள் ஆகியோர் யூனிசெப் உதவியுடன் நடைபெறும் அறிவியல் கல்வித் திட்டத்தில் பயிற்சி பெற்றனர். சென்னையில் வேப்பேரியிலுள்ள செயின்டு பால்ஸ் மேல்நிலைப் பள்ளியில் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு கைப்புத்தகம் ஒன்றைத் தயாரிக்கும் செய்முறைப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தொடக்கப் பள்ளிகளும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் கலந்துகொண்டன. துணை ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் :

இம்மாநிலத்தில் உள்ள 20 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இந்த ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. "யூனிசெப்" (UNICEF(நிறுவனம் நிதி உதவி அளித்ததோடு விலை மதிப்புள்ள கருவிகளையும் இந்நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தரம் உயர்த்தப் பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்காக 30 ஆய்வுக் கூட பயிற்சிக் கூட உதவியாளர்கள் பதவிகள் முப்பதுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

தொடக்கநிலை அறிவியல் கருவிகள் அடங்கிய கைப்பெட்டிகள் வழங்குதல் (UNICEF) யூனிசெப்.

நாகப்பட்டினம், இராமநாதபுரம், திண்டுக்கல் கல்வி மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குத் தொடக்க நிலை அறிவியல் கருவிகள் அடங்கிய 150 கைப் பெட்டிகளை "யூனிசெப்" (UNICEF) நிறுவனம் வழங்கியது,

மாநில அரசின் செலவில் நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பொருள்கள் வழங்குதல்.

இந்த ஆண்டில் மாநிலத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவைப் படும் அறிவியல் பொருள்கள் வாங்குவதற்காக அரசு ரூபாய் 2,00,000 வழங் கியது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நிர்வாகத்தின்கீழ் உள்ள 200 நடுநிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவியல் பாடத்தைத் திறமையாகப் பயிற்று விப்பதற்குத் தேவைப்படும் அறிவியல் பொருள்களை வாங்குவதற்காக நடு நிலைப்பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1,000 வழங்கப்பட்டது. இவ்வகையில் ரூபாய் 2 இலட்சம் செலவிடப்பட்டது. குழந்தைகள் இல்லம், இம்மாநிலத்தில் 1979-80 ஆம் ஆண்டில் புதியதாக தொடக்கப்பட்ட ஒரு இல்லத்தையும் இந்த ஆண்டில் மூடிவிடப்பட்ட இல்லமொன்றையும் கணக்கில் கொண்டு பார்த்தால், மொத்தம் 385 குழந்தைகள் இல்லங்கள் இருந்தன. இந்த இல்லங்களில் சிறுவர் களைச் சேர்க்க வேண்டுமானால் அச்சிறுவர்களின் பெற்றோர் வருமான வரம்பு மாதமொன்றுக்கு முன்பு ரூபாய் 300 ஆக இருந்தது. தற்போது அது ரூபாய் 1,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இடை நிலைக் கல்வி ஆங்கில மொழிப் பிரிவுகள் :

1979-80 ஆம் ஆண்டில் 509 உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79 ஆம் ஆண்டில் இருந்ததைப் போலவே ஆங்கிலப் பாட முறைப் பிரிவுகள் இருந்தன.

அறிவியல் கல்வி.—அறிவியல் கல்வி அளிப்பதற்காகத் தற்போதுள்ள வசதி களை மேம்படுத்தும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின்கீழ் அறிவியல் வசதி தேவைப்படும் 25 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 12 இலட்சம் ஆகும். ஒவ்வொரு பள்ளிக்கும் ரூபாய் 55,000 செலவில் ஒரு அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 18,000 மதிப்புள்ள அறி வியல் கருவிகளும் வழங்கப்பட்டன.

அறிவியல் வலம் வரும் ஆய்வுக் கூடங்கள் :

1979-80 ஆம் ஆண்டில் 1978-79 ஆம் ஆண்டில் இருந்ததைப்போன்றே 42 அறிவியல் வலம் வரும் ஆய்வுக் கூடங்கள் இருந்தன. அறிவியல் கருவிகள் பற்றாக்குறையாக உள்ள ஒவ்வொரு பள்ளிகளிலும் இவை தொடர்ந்து பயன் படுத்தப்பட்டு வருகின்றன,

கல்வி தொழில் நுட்பவியல்.—குன்னூர், திருவள்ளூர், திருப்பத்தூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், அரியலூர், சங்கரிதுர்கம், ஈரோடு, உசிலம்பட்டி, திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் ஒலி, ஒளிக் கல்வி பயிற்சி அளிக்கப் பட்டது. மூன்று நாட்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 250 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சித் திட்டம் குறித்து அதிக அளவில் அறிக்கைகள் அனுப்பியுள்ள தெரிந்தெடுத்த 13 தொடக்கப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம் அன்பளிப்பு வழங்கியுள்ள 13 பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டன. சென்னை தொலைக் காட்சி நிலையம், அடையாறு தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் 28-2-1980 முதல் 10-3-1980 வரை 12 நாட் களுக்கு ரூபாய் 11,510 செலவில் 35 ஆசிரியர்களுக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சி களுக்கு எழுதுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் 10-3-1980 முதல் 15-3-1980 வரை 50 ஆசிரியர்களுக்கு வானொலிக்கான நிகழ்ச்சிகளை எழுதுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பள்ளிகளில் ரூபாய் 71,514 செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டன. இத்தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைப்பதற்கான செலவு அந்தந்தப் பள்ளிகளின் தனிச் சம்பள நிதியிலிருந்து செய்யப்பட்டது. ரூபாய் 21,000 மதிப்புள்ள கல்வித் தொடர்பான திரைப்படங்கள் வாங்கப் பட்டன.

ஆங்கிலோ இந்தியக் கல்வி.—இந்த ஆண்டில் மகளிருக்கான பயிற்சி பள்ளியையும் சேர்த்து மொத்தம் 45 ஆங்கிலோ இந்திய பள்ளிகள் தொடர்ந்து செயல்பட்டன. இப்பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. மேலும் பள்ளி இறுதி வகுப்பு பாடமுறையை போன்ற ஒருங்கிணைப்பு பாட முறைப் படிப்பும் இந்தப் பள்ளிகளில் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டில் ஒன்பது அரசு பள்ளிகள் 33 மானியம் பெறும் பள்ளிகள், மானிய உதவி பெறாத பள்ளிகள் மூன்று ஆகியவை இருந்தன. இவற்றில் மொத்தம் 18,655 மாணவர் களும், 18,445 மாணவியர்களும் கல்வி கற்றனர்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள்.—இம்மாநிலத்தில் உள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது. இப்பள்ளிகளில் கல்விக் கட்டணம் விதிக்கப்படுகின்றன. மொத்தம் 24 மேல் நிலைப் பள்ளிகள், 9 உயர் நிலைப்பள்ளிகள் இருந்தன. இவற்றில் 11,008 மாணவர்கள், 18,356 மாணவி கள் பயின்றனர். இப்பள்ளிகளில் 167 ஆசிரியர்களும் 686 ஆசிரியைகளும் பணியாற்றினர்.

சிறப்புக் கல்வி.—பார்வையிழந்தோர், பார்வையிழந்தோர்-காது கேளாதவர், காது கேளாதோர்-ஊமைகள் முதலியவர்களுக்காக 49 பள்ளிகள் இருந்தன. உடல் ஊனமுற்ற 2,933 மாணவர்கள், உடல் ஊனமுற்ற 1,595 மாணவிகள் இப்பள்ளியில் பயின்றனர். இப்பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து சமூக நலத்துறைக்கு மாற்றப்பட்டது.

கட்டிடங்கள் சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்தல்.—இந்த ஆண்டில் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பறை, ஒரு ஆய்வுக் கூடம் ஆகியவற்றைக் கட்டுவதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் சராசரி ரூ. 1.57 இலட்சம் ரூபாய் வீதம் 274 பள்ளிகளுக்கு மொத்தம் 6.40 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் 709 மேல் நிலைப் பள்ளிகளில் வேளாண்மை சுகாதாரம் போன்றவற்றில் 1,153 வாழ்க்கை தொழில் பயிற்சி பாட முறை நடத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 91 பள்ளிகளில் 1,344 வாழ்க்கைத் தொழில் பயிற்சி பாடமுறை நடத்தப்பட்டது. 26,942 மாணவர்களுக்கு முதல் ஆண்டிலும், 25,013 மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டிலும் இப்பயிற்சி அளிக்கப் பெற்றது.

ஆசிரியர் நலனுக்கான தேசிய அமைப்பு.—ஆசிரியர் நலனுக்கான தேசிய அமைப்பு 1962 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த அமைப்பு வறுமையில் வாடும் ஆசிரியர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் உதவுகிறது. அறிக்கை ஆண்டில் ஆசிரியர் தினக் கொடிகள் விற்பனை செய்ததன் மூலமாகவும் நன்கொடைகள் மூலமாகவும் ரூ. 5.3 இலட்சம் கிடைத்தது. 1979-80 ஆம் ஆண்டில் 37 ஆசிரியர்களுக்கு ஒருமொத்த உதவித் தொகையாக மொத்தம் ரூ. 8,900 வழங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து பட்டயம் பெற்றோர்க்கும் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 162 மாணவர்கள் பயன் பெற்றனர். இத்திட்டத்திற்காக ரூ. 80,320 செலவிடப்பட்டது.

கல்வி பயில்வதற்கான ஊக்கத் தொகை.—1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,669 மாணவர்கள் பயன் பெற்றனர். இத்திட்டத்திற்காக ரூ. 20,19,535 செலவிடப்பட்டது.

ஏனைய சலுகைகள்.—முன்னாள் படைவீரர்கள், பாதுகாப்புப் படையினர், அரசியல் தியாகிகள் ஆகியோரின் குழந்தைகளுக்கு கல்விப் பொது சலுகைகளும் படிப்புதவித் தொகைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தன. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 3,34,600 செலவிடப்பட்டது.

கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல்.—1979-80 ஆம் ஆண்டில் தொடக்கக் கல்வித் திட்டத்தின் கீழ் 1,000 இடைநிலை ஆசிரியர்கள், 200 உடற்பயிற்சி ஆசிரியர்கள், 200 பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோரை நடுநிலைப் பள்ளியில் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. பகுதி நேர கைத்தொழில் பயிற்சி ஆசிரியர் பதவிகள் 200 முழுநேரப் பதவிகளாக மாற்றப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் 209 பேர், பட்டதாரி ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் 200 பேர் ஆகியோர் நியமிக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேல்நிலைப் பள்ளிகளில் பட்ட மேற்படிப்பு படித்த 2,490 பேர் ஆசிரியர்களாகவும், 400 பேர் உடற்பயிற்சி இயக்குநர்களாகவும் நியமிக்கப்பட இசைவு அளிக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி.

"கல்லூரிக் கல்வித்" துறை தொடர்ந்து கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகிறது. இயக்குநருக்கு உதவியாக இணை இயக்குநர் ஒருவரும் துணை இயக்குநர் ஒருவரும் இருந்தனர். இம்மாநிலத்திலிருந்த ஆண்கள் கல்லூரிகளின் எண்ணிக்கை 170. பெண்கள் கல்லூரிகளின் எண்ணிக்கை 63-ஆகும். இக்கல்லூரிகளில் மொத்தம் 73,907 மாணவர்களும், 48,293 மாணவிகளும் பயின்றனர். இவ்வாண்டில் இம்மாநிலத்தில் பல்வேறு கல்லூரிகளில் மொத்தம் 12,732 ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். இவ்வாண்டில் இக்கல்லூரிகளில் புதிதாக சேரும் மாணவர்களுக்காக இருந்த மொத்த இடங்கள் 61,881. 50,731 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 11,150 இடங்கள் காலியாக இருந்தன.

1979-80 ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் மொத்தம் 5 பல்கலைக் கழகங்கள் இருந்தன. அவை, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகரில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம், சென்னையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம், காந்தி கிராமத்

திலுள்ள கிராம உயர் கல்வி நிலையம் 1976-77 ஆம் ஆண்டு முதல் "பல்கலைக் கழகமாகக் கருதப்பெறும் நிறுவனமாக" இருந்து வருகிறது. சேலத்திலிருந்த ஆண்களுக்கான இரண்டு அரசுக் கலைக் கல்லூரிகளில் ஒன்று (அதாவது சேலம்-8-ல் உள்ள அரசுக் கலைக் கல்லூரி) 1979-80 முதல் மகளிர் கல்லூரியாக மாற்றப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 43 அரசுக் கல்லூரிகளிலும், 88 மானியம் பெறும் கலைக் கல்லூரிகளிலும் பல்வேறு புதிய பாட வகுப்புகள் தொடங்கப்பட்டன. தமிழ் நாட்டில் 10 + 2 + 3 கல்வி முறை கொண்டு வரப் பட்டதனால் 1979-80 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்பு நீக்கப்பட்டுவிட்டது.

தேசிய பணித்திட்டம்.—இத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 1976-77ல் 20,000 ஆக இருந்தது. இது 1979-80ல் 40,000 ஆக உயர்ந்தது. இதில் பங்கு கொண்ட மாணவர்களில் பாதி பேர் சிறப்பு முகாம் களில் கலந்து கொண்டனர். அவை ஒவ்வொன்றும் கோடை விடுமுறையில் 10 நாட்கள் நடைபெற்றன. அப்போது அவர்கள் முதியோர் கல்வி பணியிலும் ஏனைய நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு கிராமப்புற வளர்ச்சிக்கு பாடு பட்டனர்.

தேசிய மாணவர் படை.—தேசிய மாணவர் படை உள்ள கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 200 ஆகும். இதில் 19,450 மாணவர்கள் சேர்ந் துள்ளனர்.

மாணவர்களுக்கான கல்வித்திட்டம்.—கல்லூரிகளில் அரிசன பழங்குடினர்.

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி.—அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் அரிசன பழங்குடியின மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதற்காக அரசு ஏற்பளித்துள்ள திட்டம் 23 கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புத்தக வங்கித் திட்டம்.—இத்திட்டம், திட்டப் பணியின் கீழ் பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டப்பணி நிதி உதவி பெறுகிறது. ஒவ்வொரு கல்லூரிக்குமான உதவித் தொகை அக்கல்லூரி மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 210 கல்லூரிகள் புத்தக வங்கிகளை ஏற்படுத்தியுள்ளன.

...EMARA PUBLIC LIBR...

தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டவர்களுக்கு உதவித் தொகை.—1979-80 ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளில் புதுமுக வகுப்பு இல்லாததால், பட்ட வகுப்புகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் தமிழ் பயிற்று மொழி உதவித் தொகை வழங்கும் வகையில் இவ்வாண்டில் ரூ. 27,23,220-க்கு அனுமதி வழங்கப்பட்டது.

படிப்புதவித் தொகை—தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்.—1979-80 ஆம் ஆண்டில் 4,058 பேருக்கு படிப்புதவித் தொகைகள் புதுப்பிக்கப்பட்டன. 142 பேருக்கு புதிதாக வழங்கப்பட்டன. இந்த வகையில் ஆகிய மொத்தச் செலவு ரூ. 36.4 இலட்சம் ஆகும்.

தொடக்க-உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு தேசிய படிப்புதவித் தொகை.—தேசிய படிப்புதவித் திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 192 பேருக்கு படிப்புதவித் தொகைகள் புதுப்பிக்கப்பட்டன. இதற்காக ரூ. 2,00,000 செலவிடப்பட்டது.

தேசிய படிப்புதவிக் கடன் தொகை.—1979-80 ஆம் ஆண்டில் 5,822 பேருக்கு கடன் உதவித் தொகை புதுப்பிக்கப்பட்டது. 807 பேருக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 33.85 இலட்சம் செலவானது.

மாநில அரசுக் கல்லூரிப் படிப்புதவித் தொகைகள்.—1979-80 ஆம் ஆண்டில் 270 படிப்புதவித் தொகைகள் அளிக்கப்பட்டுள்ளன இதற்கு ரூ. 51,475 செலவானது.

கல்விச் சலுகைகள்.—பணியிலிருக்கும் போது இறந்துவிடும் அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கான கல்விச் சலுகைத் திட்டத்தின் கீழ் அத்தகைய அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் செலுத்திய பள்ளிக் கட்டணம், மாணவர் விடுதிக் கட்டணம் ஆகியவற்றிற்கான தொகையை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்த வகையில் 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 50,577 செலவிடப்பட்டது இத்திட்டத்தின் கீழ் 94 பேருக்கு சலுகைகள் வழங்கப்பட்டன.

வட்டார அலுவலகங்களை ஏற்படுத்தல்.—இவ்வாண்டில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஒவ்வொரு நகரிலும் ஒன்று என்ற விகிதத்தில் மொத்தம் 5 வட்டார அலுவலகங்கள் ஏற்படுத்தப்

பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரு துணை இயக்குநர் பொறுப்பில் உள்ளது. இவ்வலுவலகங்கள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள கல்லூரிகளின் பணிகளை சிறந்த முறையில் மேற்பார்வையிட்டு ஒருங்கிணைக்கும்.

வரவு-செலவுத் திட்டம்.—1978-79 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான செலவு ரூ. 21.83 கோடியாக இருந்தது. இது 1979-80 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 23.15 கோடியாக உயர்ந்து உள்ளது.

"சட்டக் கல்வி"

தமிழ் நாட்டில் சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 1953-ம் ஆண்டு சட்டக் கல்வித் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

1974-75-ம் ஆண்டில் மதுரை சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1979-80-ம் ஆண்டு வரையிலும் மூன்று தொகுதி மாணவர்கள் பி.எல். தேர்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 1979-80-ம் ஆண்டில் கோவையிலும், திருச்சியிலும் ஒவ்வொன்று விதம் இரண்டு சட்டக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாண்டு சட்டப் பட்டப் படிப்பில் 120 மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் திறனுடன் அவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மாணவர்களின் நல்னுக்காக புகழ் பெற்ற வழக்கறிஞர்களாலும் நீதிபதிகளாலும் சிறப்பு விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர்கள் தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட வாய்ப்பளிக்கும் பொருட்டு இத்துறை சட்ட ஆராய்ச்சிப் புத்தகம் வெளியிடுகிறது. சென்னை சட்டக் கல்லூரியில் ஆராய்ச்சித் தொடர்பாக தமிழ் வகுப்புகளும் நடத்தப்படுகிறது. இத்துறையின் கீழுள்ள எல்லா சட்டக் கல்லூரிகளிலும், 1979-80-ல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 2,260 ஆகும்.

தொழில் நுட்பக் கல்வி.

இம்மாநிலத்தில் 13 பொறியியல் கல்லூரிகள், 45 பல் தொழில் பயிற்சிப் பள்ளிகள், 14 மேல் நிலைப்பள்ளிகள் (வாழ்க்கைத் தொழில்) ஆகியவை உள்ளன. இவற்றில் 6 பொறியியல் கல்லூரிகள், 40 பல்தொழில் பயிற்சிப்

பள்ளிகள், 14 மேல் நிலைப் பள்ளிகள் (வாழ்க்கைத் தொழில்) ஆகியவை, தொழில் நுட்பக் கல்வித் துறையில் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. பல்வேறு நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

பொறியியல் கல்லூரிகள்	1,418
பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்	6,237
மேல்நிலைப் பள்ளி (வாழ்க்கை தொழில்)	785

இவ்வாண்டில் மதுரை, தியாகராஜர் பொறியியல் கல்லூரியில், மின் அணுவியல் தகவல் தொடர்புப் பொறியியல் குறித்து பட்டப் படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. கோயம்புத்தூர் அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் உற்பத்திப் பொறியியல் குறித்து பட்டப்படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. சென்னை, அரசு கலை கைவினைக் கல்லூரியில் பஞ்சாலை வடிவமைப்பு மட்பாண்ட வடிவமைப்பு ஆகியவற்றுடன் கூடிய தொழிற்சாலை வடிவமைப்பில் பி.எஸ்.சி. பட்டப் படிப்பும், காட்சித்-தகவல் தொடர்பு வடிவமைப்பு குறித்து பி.எஸ்.சி. பட்டப் படிப்பும் தொடங்கப்பட்டன. சென்னை, மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பரிமான அளவு குறித்துத் தகுதிப் பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டது. சென்னை முருகப்ப செட்டியார் நினைவு பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் மின் அனுவியல் (பணியிடைப் பயிற்சி) குறித்துத் தகுதிப் பட்டயப் படிப்பு ஒன்றும் கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் வடிவமைப்பு வரைபடத் தொழில் நுட்பவியலில் தகுதிப் பட்டயப் படிப்பு ஒன்றும் தொடங்கப்பட்டன. சென்னை மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் கப்பல் கட்டுமானக் கலையில் விருப்பப் படிப்பு ஏற்படுத்தப்பட்டது.

கோள்நிலை ஆய்வுக்கூடம்.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் ரூ. 2.00 இலட்சம் செலவில் கோள்நிலை ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டது. இந்த ஆய்வுக் கூடம் பொதுமக்களின் பார்வைக்காக முதலமைச்சர் 6-2-1979 அன்று திறந்துவைத்தார்.

மத்திய அரசின் நேரடி உதவி.—பல்வேறு தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மத்திய அரசின் நேரடி உதவித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு இவ்வாண்டில் மொத்தம் ரூ. 81.75 இலட்சம் உதவித் தொகை வழங்கியது. இதற்கு இணையாக மாநில அரசு அளித்த தொகை ரூ. 25.30 இலட்சம் ஆகும்.

சமுதாய பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்.—அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு பரிந்துரைத்ததின் பேரில் கிராமப்புறத்தில் தொழில் நுட்ப வசதிகளை ஏற்படுத்தும் முக்கிய அமைப்புகளாக செயல்படுவதற்கு பல்தொழில் பயிற்சி பள்ளிகள் சிலவற்றை மத்திய அரசு தெரிந்தெடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்தியாலயா பல்தொழிற் பயிற்சிப்பள்ளி, செட்டிநாடு அண்ணாமலை பயிற்சிபள்ளி, காஞ்சிபுரம் பக்தவத்சலம் பல்தொழில் பயிற்சிப் பள்ளி ஆகியவை தெரிந் தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 10.50 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

நிறுவன அளவில் மூன்று பல்தொழில் பயிற்சி பள்ளிகளுக்கும் துறை அளவில் இரண்டு நிறுவனங்களுக்கும் மூன்று பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் அளிக்கப்படும் தகுதிப் பட்டய மேற்படிப்புக்கும் தன்னாட்சி உரிமை வழங்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில் எஸ்.எஸ். மாரிச்செட்டியார் பொறுப்புக் கழகத்தின் மூலமாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குமாரபாளையத்தில் பஞ்சாலைத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தை அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புத்தக வங்கிகள்.—புத்தகங்கள் தேவைப்படும் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தொழில் நுட்ப நிறுவனங்கள் அனைத்திலும் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. அரிசன, பழங்குடி மாணவர்கள் நலனுக்காக புத்தக வங்கிகள் திட்டத்திற்கு மத்திய அரசு மானியம் வழங்கியுள்ளது.

பாடப்புத்தகங்கள்.—31 தலைப்புகளில் புத்தகங்களை எழுதும் பணி துறையால் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 7 புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. மற்றவை எழுதப்பட்டு வருகின்றன. "சிற்ப செந்நூல்" என்ற சிற்பங்கள் குறித்த தரமான பாடப் புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது.

பெண்கள் பிரிவைத் தொடங்குதல்.—நாகப்பட்டினம், வெளிப்பாளையம் எ.டி.ஜே. தர்மாம்பாள் பொறுப்புக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்தில் வலிவலம் தேசிகர் பல்தொழில் பயிற்சிப் பள்ளியிலும் ஆறுமுகசாமி நினைவுக் கல்விப் பொறுப்புக் கழகத்தின் மூலம் தூத்துக்குடி அரசு பல்தொழில் பயிற்சிப்

பள்ளியிலும் 30 மாணவிகளுடன் பெண்கள் பிரிவு ஒன்றை இவ்வாண்டில் தொடங்குவதற்கும் அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

திட்டப் பணிகளுக்குப் பரிசுகள் வழங்குதல்.—பொறியியல் கல்லூரிகள் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களில் சிறந்த திட்டப் பணிகளை தயாரிக்கின்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக இத்திட்டம் ஒவ்வோராண்டும் ரூ. 8,400-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாண்டில் அரசு பரிசுகளின் மதிப்பை ரூ. 16,800-க்கு உயர்த்தியுள்ளது.

ஆசிரியர் மேற்படிப்பும் மேற்பயிற்சியும்.—பொறியியல் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்காக, இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம் பெங்களூர், இந்திய அறிவியல் நிறுவனம் போன்ற உயர் படிப்பைக் கற்பிக்கும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இவ்வாண்டில் 5 பேர் முகமையில் அனுப்பப்பட்டனர். பல்தொழில் பயிற்சிப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள், சென்னை தொழிற் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாண்டில் 30 பேர் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆராய்ச்சியை மேம்படுத்துதல்.—தனியார் பொறியியல் கல்லூரிகளில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக, 1978-79 ஆம் ஆண்டி லிருந்து ரூ. 1.00 இலட்சம் தொடரினச் செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

சென்னை மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளியை சிங்கப்பூரிலுள்ள பணி யாளர் பயிற்சிக் கல்லூரியுடன் இணைந்த தொழில் நுட்ப நிறுவனமாக ஆக்குதல்.—மத்திய அரசு சென்னை பல்தொழில் மத்தியப் பயிற்சிப் பள்ளியை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் "இணைந்த தொழில் நுட்ப நிறுவனமாக" ஆக்குமாறு சிங்கப்பூர் தொழில் வல்லுநர் கல்விக்கான கொழும்பு திட்ட ஆசிரியர் கல்லூரிக்குப் பரிந்துரைத்துள்ளது.

வணிகவியல் தேர்வுகள்.—இம்மாநிலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வணிக வியல் கல்வி நிறுவனங்கள் 1,500 உள்ளன. துறை நடத்திய தொழில் நுட்ப வணிகவியல் தேர்வுகளை 1,50,000 மாணாக்கர்கள் எழுதினர்.

அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம், மேல் நிலைத் தேர்வு (X+2 பள்ளி இறுதிப் (எஸ்.எஸ்.எல்.சி.) பொதுத் தேர்வு, ஆதார ஆசிரியப் பயிற்சி (டி.எஸ்.எல்.சி.) முறைநிலைத் தேர்வு, சமஸ்கிருத நுழைவுத் தேர்வு செவிடர்க்கான பட்டயத் தேர்வு, வேளாண்மை—கீழ்நிலை மேல்நிலைத் தேர்வு கைத்தறி நெசவு, கீழ்நிலை மேல்நிலைத் தேர்வு போன்ற தேர்வுகளை நடத்தும் பொறுப்பை வகிக்கிறது. திட்டமிட்டப்படி எல்லா தேர்வுகளும் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. அவைகளில் முக்கியமானது பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு. பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு எழுதிய தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மேல் நிலைத் தேர்வு (10+2) முதன் முதல் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே திங்களில் நடத்தப்பட்டது. எனவே அதற்குரிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை

தேர்வின் பெயர். (1)	பருவம். (2)	தேர்வு நடைபெற்ற இடங்களின் எண்ணிக்கை. (3)	தேர்வு எழுதியவர்கள். மாணவர். (4)	தேர்வு எழுதியவர்கள். மாணவியர். (5)	மொத்தம். (6)	தேர்ச்சி பெற்றவர்கள். மாணவர். (7)	தேர்ச்சி பெற்றவர்கள். மாணவியர். (8)	மொத்தம். (9)	சதவீதம். (10)
பள்ளி இறுதி தேர்வு 1979 ஏப்ரல்	பத்தாம் வகுப்பு மாணவர்கள்	1,254	1,56,280	79,723	2,36,003	82,519	53,618	1,36,137	57.6
	பத்தாம் வகுப்பு பள்ளி மூலம் அல்லது நேரடியாக தேர்வு எழுதிய மாணவர்கள்.		18,801	5,541	24,342	138	66	204	
	பதினொன்றாம் வகுப்பு பள்ளி மூலம் அல்லது நேரிடையாக தேர்வு எழுதிய மாணவர்கள்.		8,412	2,996	11,408	40	44	84	
	1969-ம் ஆண்டு திட்டத்தின்படி தேர்வு எழுதிய மாணவர்கள்.		16,540	3,801	20,341	86	55	141	
பள்ளி இறுதி யாண்டு தேர்வு.	பத்தாம் வகுப்பு	423	43,118	11,611	54,729	74	28	102	
	பதினொன்றாம் வகுப்பு		5,006	1,651	6,657	5	2	7	
1979 அக்டோபர் தனியராக	1969 ஆண்டு வரிவு திட்டத்தின்படி தேர்வு எழுதியவர்கள்.		23,981	4,930	28,911	163	33	196	

பள்ளி இறுதி பொது தேர்வு 1980) மார்ச்சு	பத்தாம் வகுப்பு	1,186	1,54.531	8[illegible],075	2,36,606	82,545	53,731	1,36,276	57.6
	பத்தாம் வகுப்பு தனி முறையில் தேர்வு எழுதியவர்கள்.		26,463	6,748	33,211	138	105	243	
	பதினொன்றாம் வகுப்பு 1969-ம் ஆண்டு விரிவுத் திட்டத்தின்படி தேர்வு எழுதியவர்கள்.		12,187	2,553	14,740	25	4	29	

குறிப்பு.—பகுதி பகுதியாகப் தேர்வு எழுதும் திட்டத்தின் கீழ் மாணவர்கள் தனிமுறைத் தேர்வு எழுதியதால் தேர்வு முடிவுகளின் சதவிதம் கணக்கிடப்படவில்லை.

பொது நூலகப் பணி.

ஆண்டு முடிவில் பணிபுரிந்த நூலகங்களின் எண்ணிக்கை வருமாறு :—

அரசு—

மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம்), சென்னை	1
கவிமணி நிலையம் நூலகம், நாகர்கோயில்	1

உள்ளாட்சி நூலக அதிகார மன்றம்—

மாவட்ட மைய நூலகங்கள்	13
கிளை நூலகங்கள்	1,443
நூலகங்களின் மொத்த எண்ணிக்கை	1,458

இந்த நூலகங்கள் உள்ளாட்சி நூலக அதிகார மன்ற நூலகங்களைத் தவிர தஞ்சாவூர் மகாராஜா சர்போஜி சரஸ்வதி மஹால் நூலகம், மறைமலை அடிகள் நூலகம், டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் நூலகம் ஆகியவை உட்பட 85 தனியார் நூலகங்கள் தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ. 1.80 லட்சம் வரை மானியமாகப் பெற்றன. அரசினால் அளிக்கப்படும் மொத்த மானியத்தில் இது அடங்கும்.

பொது நூலகப் பணியின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

		ரூ.
1.	நூலகப் பணிக்கான செலவு	2,03,99,000
2.	இருப்பில் உள்ள நூல்கள்	79,48,151
3.	படிக்கவரும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை	2,94,63,344
4.	மொத்தத்தில் ஒரு நாள் சராசரி வாசகர்களின் எண்ணிக்கை	1,02,660
5.	நூல்கள் படிக்கப்பட்ட தடவைகளின் மொத்த எண்ணிக்கை	64,76,052
6.	உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை	8,76,192

7. புத்தகம் வழங்கப்பட்ட தடவைகளின் மொத்த எண்ணிக்கை 71,11,153

8. பயன்படுத்தப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 1,35,37,205

கன்னிமாரா பொது நூலகம்.

1886 ஆம் ஆண்டு முதல் 1891 ஆம் ஆண்டு வரை சென்னை ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபுவின் பெயரைக் கொண்டு கன்னிமாரா பொது நூலகம் 5—12—1896 இல் சென்னை அரசால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் 1948 ஆம் ஆண்டின் சென்னை பொது நூலக சட்டத்தின்கீழ் மாநில மைய நூலகமாக ஆக்கப்பட்டது. இந்தியாவில் பிரசுரமாகும் எல்லா பிரசுரங்களையும் பெறும். இந்தியாவிலுள்ள மூன்று தேசிய நூலகங்களில் ஒன்றாக இது 1955 ஆம் ஆண்டு ஆக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ நிறுவனத்தின் தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் ஸ்தாபன பிரசுரங் களின் கருவூலமாகவும் இந்நூலகம் விளங்குகிறது.

71,700 சதுர அடி வசதி கொண்ட இந்நூலகத்தில் புத்தகங்கள் வைப் பதற்கென 29,000 சதுர அடி பரப்பளவுள்ள அலமாரிகள் வைக்கப் பட்டுள்ளன. ஒரே சமயத்தில் 340 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கான இருக்கை வசதியுள்ளது. இந்நூலகம் ஆண்டுக்கு சராசரி 7,925 புத்தகங் களையும், 2,625 பருவ இதழ்களையும், 268 செய்தி தாள்களையும் பெற்று வருகிறது. இந்நூலகம் பொது மக்களுக்காக திறந்து வைக்கப்படும் நேரம் 9½ மணியிலிருந்து 12 மணியாக இவ்வாண்டு உயர்த்தப்பட்டுள்ளது. மூன்று தேசிய விடுமுறைகளான குடியரசு தினம், சுதந்திர தினம், மகாத்மா காந்திஜியின் பிறந்த தினம் ஆகிய நாட்களை தவிர்த்து அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை திறந்துவைக்கப் படுகிறது. இந்நூலகத்தில் 13,714 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் இவ்வாண்டு 1,32,836 புத்தகங்களை இரவல் பெற்று பயன்படுத்தினர். இவ்வாண்டு 1,91,522 வாசகர்கள் இந்நூலகத்தை பயன்படுத்தினர். அவர்கள் பயன்படுத்திய மொத்த புத்தகங்கள் 7,07,402 ஆகும். நூலகப் பணிக்காக

இவ்வாண்டு ஏற்பட்ட மொத்த செலவு ரூபாய் 8,87,275.98. இது ஒரு நூல் பயன்படுத்த ரூபாய் 1.25 எனவும், ஒரு வாசகர் நூலகத்தை பயன்படுத்த ரூபாய் 4.63 எனவும் ஆகிறது. ஆண்டின் இறுதியிலிருந்த மொத்த நூல்கள் கட்டப்பட்ட தொடர் வெளியிடுகளின் எண்ணிக்கை 3,20,385 ஆகும்.

அரசு அரும்பொருட்காட்சியகங்கள்.

சேலத்திலுள்ள அரும்பொருட்காட்சியகம் இவ்வாண்டில் இத்துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை, புதுக்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள அரும்பொருட்காட்சியகங்கள் மக்களுக்குக் கல்வி புகட்டு வதில் முக்கிய பணியாற்றியுள்ளன. நுழைவுக் கட்டண வசூல் பணி ஒப்பந்தக்காரரிடம் விடப்பட்டிருந்தன. இப்பணியை 4—7—1980 ஆம் நாளிலிருந்து இத்துறை மேற்கொண்டது. 1980 ஆம் ஆண்டில் நடை பெற்ற 'டான்சி' பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்றது. அங்கு, கலையில் இயற்கை, இயற்கையில் கலை' என்னும் காட்சிக் கூடங்களை இத்துறை அமைத்திருந்தது.

குழந்தைக் கலைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுபெற்ற ஓவியங்கள் 1—4—1979 ஆம் நாளிலிருந்து 10—4—1979 ஆம் நாள் வரை நூற்றாண்டு விழா காட்சிக் கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அரும்பொருட்காட்சியகத் திரை அரங்கில் சிறப்பாகக் காட்டப்படும் திரைப் படக் காட்சிகளைத் தவிர ஒவ்வொரு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிற்பகல் 3 மணியிலிருந்து 4 மணிவரை முறையான திரைப்படக் காட்சிகளும் காட்டப்பட்டன. புதுக்கோட்டை அரும்பொருட்காட்சியகத்திலுள்ள புவி உட்கூற்றியல், மானிடவியல், தாவரவியல் கலைக் கூடங்கள் இவ்வாண்டில் சீரமைக்கப்பட்டன.

தொல்பொருள் பிரிவு.

புத்தர் உருவம் பொறிக்கப்பட்ட வெண்கலச் சிலை ஒன்று தஞ்சாவூர் மாவட்டம், நாகபட்டினம் வட்டம், பிரதாபராமபுரம் கிராமத்திலிருந்தும், தவழும் கிருஷ்ணன் உருவச்சிலை ஒன்று தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கோவிந்தபுரம் கிராமத்திலிருந்தும், உலோகத் தாலான கந்தர்

சிலை ஒன்று தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், இராய பாளையத்திலிருந்தும், உலோகத்தாலான தவழும் கிருஷ்ணன் சிலை ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், பெரிய கிருஷ்ணாபுரத்திலிருந்தும், உலோகத்தாலான தேவி சிலை ஒன்று தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பழவத்தான் கட்டளையிலிருந்தும், உலோகத்தாலான கணேசர் சிலை ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோனியிலிருந்தும், பதின்மூன்று உலோகச் சிலைகள் சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், குன்னத்தூர் அக்ரகாரத்திலிருந்தும் கண்டெடுக்கப்பட்டன. மறைந்த ஓவியர் திரு. எச். வி. இராம்கோபால் வரைந்த அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், மகாராஜபுரம் விசுவநாத அய்யர், மைசூர் வாசுதேவாச்சார்யா ஆகியோரின் உருவப் படங்கள் (தைலவண்ண ஓவியம்), உடற்பகுதி மட்டும் கிடைக்கப்பெற்ற (நீர்வண்ண ஓவியம்) உருவப்படம் ஆகியவை அவர் மனைவி திருமதி எச். சாந்தாவிட மிருந்து வாங்கப்பட்டன. ஓவியத் திரைச் சீலை ஒன்று சென்னை, திரு. வி. சாரநாதனிடமிருந்து வாங்கப்பட்டது. மரத்தில் தீட்டப்பட்ட தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் அடங்கிய ஓர் இணைப்பேடு, திருவிளையாடல் புராணத்தை விளக்கும் ஓவியங்கள் அடங்கிய ஓர் இணைப்பேடு, தந்தத்தில் வரையப்பட்ட இரு ஓவியங்கள், பீடத்துடன் கூடிய தந்தத்தால் ஆன இரு செஸ் பலகைகள், பட்டுத்துணியில் தீட்டப் பட்ட ஜப்பானிய ஓவியங்கள் நான்கு, உலோகக் கண்ணாடிகள் இரண்டு, மூடியுடன் கூடிய ஒரு பீங்கான் பேழை, பண்டையத் துணிவகை ஒன்று ஆகியவை திருமதி இராஜலட்சுமி வேங்கடகிருஷ்ணனிடமிருந்து வாங்கப் பட்டன.

நாணயங்கள் பிரிவு.

இப்பிரிவில் பின்வரும் இனங்கள் உள்ளன :—

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், **சர்க்கார்** வாழவந்தியிலிருந்து தங்கத்தாலான சாமி உருவம் பொறிக்கப்பட்ட 8 நாணயங்கள், தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டையிலிருந்து இராஜ

இராஜ சோழன் காலத்திய 1,420 செப்பு நாணயங்கள், விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த 37 தங்க நாணயங்கள், கொங்கு சேரர் காலத்திய தங்க நாணயம் ஒன்று ஆகிய அரிய நாணயங்கள் கிடைக்கப்பெற்றன. நான்கு ஆவணங்கள் மீண்டும் தைக்கப்பட்டு, கலைக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப் பட்டன. கிடைத்தற்கரிய 2,420 நாணயங்கள் சோதனை செய்து பார்க்கப் பட்டன. இவைபற்றிய இரு ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்திய நாணயச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. விநாயகர் நாணயங்களைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று நாணயங்கள் பற்றிய செய்திக் குறிப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அலங்கார அழகு வேலைப்பாட மைந்த அரிய பொருள்கொள்கலன் பற்றிய கட்டுரை ஒன்று கவின் கலைச் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அலங்கார அழகு வேலைப்பாட மைந்த அரிய பொருள் கொள்கலன்கள் சிறப்புப் பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. நாணயப் புரட்சி பற்றி, அரும்பொருட்காட்சிப் பாது காவலர் வானொலியில் உரையாற்றினார்.

மானிட இயல் பிரிவு.

செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பேட்டை துணை வட்டம், மகன்கவிபுரம் கிராமத்திலுள்ள பங்காருகோட்டை என்னும் யாக்கத்திலிருந்து 13 இனங்கள், செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டை துணை வட்டம், ஆதங்கி-காவனூர் கிராமத்திலிருந்து சிறிய தங்க மோதிரங்கள் இரண்டு, தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பணையத்தூர் கிராமத்தைச் சேர்ந்த கொடி ஓடையிலிருந்து 11 இனங்கள், தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் கச்சி மயிலூர் கிராமத்திலிருந்து 10 இனங்கள், இராமநாதபுரம மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், எர்வாடி கிராமத்திலிருந்து 5 இனங்கள், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், மண்டபம் கிராமத் திலிருந்து ஒரு மோதிரம், தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், பித்தா இன்னஹள்ளி கிராமத்திலிருந்து இரு இனங்கள், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், துரையூர் கிராமத்திலிருந்து நான்கு இனங்கள், சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், பக்கநாடு கிராமத்திலிருந்து 7 இனங்கள், ஆகியவை இங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

விலங்கியல் பிரிவு :

இறந்த மயிலொன்று சென்னை, விலங்குக் காட்சியகத்திலிருந்து கிடைக்கப்பெற்று, சேகரிப்புப் பிரிவில் பதப்படுத்தப்பட்ட தோலானது இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

தாவர இயல் பிரிவு :

120 வாங்குவர் வகை தாவரங்கள் சேகரிக்கப்பட்டு உயர்ந்த நிலையில் இப்பிரிவில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

நில உட்கூற்றியல் :

குருந்தக்கல், பாக்சைட் மாட்யூல்ஸ், இரண்டு பாக்சைட் பாளம் ஆகியவை இப்பிரிவில் சேகரித்து வைக்கப்பட்டன. இக்கலைக் கூடத்திலிருந்து மரபு அற்றுப்போன பெரிய அமோனைட் படிகம் புதுப்பிக்கப்பட்டது. விலங்கின வளர்ச்சி குறித்து விளக்கி மரப்பலகைகளில் சில ஓவியங்கள் திட்டப்பட்டன, நிலவியல் காலமுறைத் திட்டம் குறித்தும் ஓவியங்கள் திட்டப்பட்டன. அரும் பொருட்காட்சியக வளவுக்குள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள மாபற்றுப்போன மரவகைகளைப் பக்குவப்படுத்திப் பாது காத்து வைத்திருப்பதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. அடித்தளத்திற்கும், முதல் மாடிக்கும் இடைப்பட்ட மாடிப் பகுதியில் இருந்து வெண் சுடர்விட்டெரிகிற விளக்குக்குப் பதிலாக, நன்கு ஒளி அளிப்பதற்காக, நுண் ஊதாக் கதிர்களைக் கொண்ட விளக்குகள் பொருத்தப்பட்டன.

குழந்தைகள் பிரிவு :

ஜெர்மானிய ஆடை அலங்காரத்தை விளக்கிக் காட்டும் கதக்களி பொம்மை ஒன்று, ஆடை அலங்காரம் செய்யப்பட்ட பொம்மைகள் இரண்டு, ஆகியவை நன்கொடையாக, சென்னை, அனைத்து நாட்டு அரிமா சங்கத் தலைவரிடமிருந்து பெறப்பட்டு இப்பிரிவில் வைக்கப்பட்டன.

தமிழ் நாடு ஆவணக் காப்பகம்.

தமிழ் நாடு ஆவணக் காப்பகம்தான் தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரியதாகும். அரசு ஆவணங்களின் களஞ்சியமாக தமிழ்நாடு ஆவணக் காப்பகம் விளங்குகிறது. இத்துறைக்கு ஆவணக் காப்பக வரலாற்று

ஆராய்ச்சி துணையாளர் தலைவராவார். ஆவணக் காப்பக இயக்குநர்—1, உதவி இயக்குநர்—2, ஆராய்ச்சி அதிகாரிகள்—2 ஆகியோரும் இருந்தனர்.

ஆவணங்கள்—ஆண்டுதோறும் வரும் ஆவணங்களும்; தகவல் அளித்தலும் :

இந்த ஆண்டில், தலைமைச் செயலகத்தில் 10 துறைகள் தொடர்பான 1975 ஆம் ஆண்டுக்கான ஆவணங்களின் 193 கட்டுகள், வருவாய்த் துறை வாரியத்தின் (நிலவரி) 1969 ஆம் ஆண்டுக்கான ஆவணங்களின் 23 கட்டுகள், வருவாய்த் துறை வாரியத்தின் (வ.வ.) 1965 ஆம் ஆண்டுக்கான ஆவணங்களின் 6 கட்டுகள். நில அளவைத் துறையின் 1958-60 ஆம் ஆண்டுக்கான ஆவணங்களின் 60 கட்டுகள் பாதுகாப்புக்காக ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்பட்டன.

தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகள் வருவாய்த் துறை வாரியம் ஆகியவற்றிடமிருந்து ஆவணங்கள் கேட்டும் தகவல்கள் கேட்டும் இந்த ஆண்டில் 90,000 கடிதங்கள் வந்தன. இவற்றில் 65,000 ஆவணங்கள் அனுப்பப்பட்டன. 60,000 ஆவணங்கள் திரும்பப் பெறப்பட்டு, வைக்கப் பட்டன. இந்த ஆண்டில் ஆவணங்கள் எவையும் நீக்கப்படவில்லை.

நூலகம் :

790 புத்தகங்களும், 60 சஞ்சிகைகளும் நூலகத்தில் சேர்க்கப்பட்டன. புத்தகங்கள் கேட்டு 8,386 கடிதங்கள் வந்தன. அவற்றில் 7,180 புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டில் 6,692 புத்தகங்கள் திரும்பப் பெறப் பட்டன. 458 பேர்களுக்கு சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்கப்பட்டன. தேடுதல், நகல் எடுத்தல் ஆகியவற்றின் கட்டணங்கள் தொடர்பாக ரூ. 2,190 வசூலிக்கப்பட்டது.

ஆராய்ச்சி அறிஞர்கள் :

ஆவணங்களைப் பரிசீலித்து தெரிந்து பார்க்க 209 ஆராய்ச்சி அறிஞர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவர்களில் 13 பேர் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற வெளி நாடுகளில் உள்ளவர்கள் ஆவர்.

வரலாற்று ஆராய்ச்சி மன்றம் :

வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாண்புமிகு கல்வி அமைச்சரைத் தலைவராகவும், அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் மூவரையும் கொண்டு 1979-ல் மீண்டும் அமைக்கப்பட்டது. அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள் இந்த ஆண்டில் தொடர்ந்து பணியாற்றினர். இந்த மன்றம் ஆண்டு தோறும் 4 படிப்புதவிக் கிழிகளை வழங்குகிறது.

ஆவணங்களைப் பாதுகாத்தல் :

இந்த ஆண்டில் சுமார் 27,385 ஆவணங்கள்/தொகுதிகளுக்கு இரசாயனப் பொறி மூலம் புகையூட்டப்பட்டன. 21,000 புத்தகங்கள் அமிலத்தன்மை நீக்கப்பட்டன. 1,51,098 ஆவணத் தாள்கள் செப்பனிடப்பட்டன. 2,388 தொகுதிகள், புத்தகங்கள் தைக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டன. 34,544 தாள்களை இந்த ஆண்டில் அடுக்கிவைக்கப்பட்டன. புகைப்பட நகல் எடுக்கும் பொறி இந்த ஆண்டில் நிறுவப்பட்டது.

மாவட்ட விவர சுவடிகள் திருத்தி அமைத்தல் :

இந்த ஆணடில் தருமபுரி மாவட்ட விவர நூல் அச்சிடுவதற்குத் தயாராக உள்ளது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட விவர நூல்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட விவர நூலின் இறுதி பார்வைப் படிகள் வரப்பெற்று அவை சரி பார்க்கப்பட்டு வருகின்றன.

வெளியீடு :

இந்த ஆண்டில் பின்வரும் பொருள்கள் தொடர்பான தெரிந்தெடுக்கப் பட்ட ஆவணங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு அவற்றிற்கு ஒப்புதல் பெற்று வெளியிடுவதற்காக அரசுக்கு அனுப்பப்பட்டன.

(1) கல்வி பயிற்று மொழி.

(2) நீல் சிலை சத்தியாக்கிரகம்.

(3) தமிழ் மொழி வரலாறு.

(4) இந்தியாவில் வழக்குரைஞர் மன்றத்தின் அமைப்பு.

"திருநெல்வேலி கலகம், சதி, ஆஷ் துரை கொலை" என்பது பற்றிய தெரிந்தெடுக்கப்பட்ட ஆவணத்திற்கு (3 தொகுதிகளில்) அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பார்வையாளர்கள் :

கள்ளிக்கோட்டை பல்கலைக் கழக மாணவர்கள் குழு. மங்களூர், கனரா கல்லூரி மாணவர் 43 பேர், சுவிடன் நாட்டு பிரதிநிதிக் குழு, அங்கேரி நாட்டு ஆவணக் காப்பக இயக்குநர் ஆகியோர் இந்த ஆண்டில் இந்த ஆவணக் காப்பகத்திற்கு வருகை தந்தனர்.

தொல் பொருள் ஆய்வு.

கல்வெட்டுப் பிரிவு :

கல்வெட்டாய்வாளர்கள் தஞ்சை வட்டத்தில் 52 ஊர்களையும், மன்னார் குடி வட்டத்தில் 295 ஊர்களையும், ஒரத்தநாடு வட்டத்தில் 265 ஊர்களையும், பட்டுக்கோட்டை வட்டத்தில் 210 ஊர்களையும் ஆய்வு செய்தனர்.

இந்த ஆண்டில் மொத்தம் ஆய்வு செய்யப்பட்ட ஊர்கள்	842
மொத்தம் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள்	436
மொத்தம் படிக்கப்பட்ட கல்வெட்டுக்கள்	525
மொத்தம் அச்சிடப்பட்ட கல்வெட்டுக்கள்	280

பழங்கலைப் பொருட்களைப் பதிவு செய்யும் பிரிவு :

தமிழ் நாட்டில் சென்னை, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டத் தலைநகர்களில் உள்ள பதிவு அலுவலர் அலுவலகங்களில் மொத்தம் 2,860 விண்ணப்பங்கள் ஆலயங்களிடமிருந்தும், சில தனியார்களிடமிருந்தும் பதிவு செய்வதற்காக வரப் பெற்றன. இவ்வேழு இடங்களிலும் மொத்தம் 3,353 பொருட்களைப் பதிவு செய்து சான்றிதழ்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

காப்புப் பிரிவு :

தென் ஆற்காடு மாவட்டம், உனகாபுரம் என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் மகாமண்டபப் பகுதி பழுது பார்க்கப்பட்டது.

அகழ்வாய்வுப் பிரிவு :

கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்றைக்கு சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு செங்கோலோச்சிய முதலாம் இராசேந்திரன் கட்டி வாழ்ந்த அரண்மனையில் அடித்தளச் சுவர்கள் வெளிப் படுத்தப்பட்டன. சுவர்கள் ஒரு மீட்டர் அகலம் உடையனவாயுள்ளன. செங் கல்லால் பல வரிசைகள் அடுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன. பக்கத்துப் பக்கத் தில் இரு சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இரு சுவர்கள் பக்கத்துப்பக்கத்தில் அமைத்து அவற்றின் மீது கட்டிடத்தின் கூரைப் பகுதியை அமைப்பது பண்டைய மரபு. அம் மரபு கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனையிலும் காணப்படுவது சோழக்காலக் கட்டிடக் கலைக்கு மேலும் ஒரு ஆதாரமாக அமைந்துள்ளது. கரூரில் அகழ்வாய்வு நடத்தப்பட்டது. உரோம நாட்டு வெள்ளி நாணயம் ஒன்றும், மது சாடிகளும், ரௌலட்டப் பானை ஓடுகளும், தமிழ் எழுத்துப் பொறித்த பானை ஓடுகளும் கிடைத்தன. கோவலன் பொட்டலில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இரு குழிகள் தோண்டப் பெற்றன. ஒரு குழியில் எட்டு முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. மேலும் சில மணிகளும், சங்கு வளையல் துண்டுகளும், செப்புக் காசுகளும் கிடைத்திருக்கின்றன. சுமார் 2,000 ஆண்டுகட்கு முன்பு இறந்தவர்களை எவ்வாறு அடக்கம் செய்திருக்கிறார்கள் என்பதை இதனால் உணர முடிகிறது. கோவை மாவட்டம், போருவாம்பட்டியில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. சோழர் காலத்திய மட்கலங்கள், பெரும் அளவில் விலையுயர்ந்த கற்களி னாலும், மண்ணாலும் செய்யப்பெற்ற மணிகள், காதணிகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டியிலும் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

செப்புத் திருமேனிகள் ஆய்வுப் பணி :

நன்னிலம், மாயவரம், சீர்காழி வட்டங்களில் 456 ஊர்களைப் பார்வை யிட்டனர். ஆய்வு செய்வதற்காக 500-க்கும் மேற்பட்ட செப்பு திருவுருக் களைப் பதிவு செய்தனர்.

வரலாற்றுக் காட்சிக்கூடங்கள் அமைத்தல் பிரிவு :

தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியிலும், இராமநாதபுர மாவட்டம் இராமநாதபுரத்திலும் காட்சிக் கூடம் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஓலைச் சுவடிகள் சேகரிக்கும் பிரிவு :

சிதம்பரம், திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நியமிக்கப்பட்டுள்ள தொல்பொருள் ஆய்வு அலுவலர்கள் ஓலைச்சுவடிகளைச் சேகரிக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்திலிருந்தும், நெல்லை மாவட்டத்திலிருந்தும் நூற்றுக்கணக்கான ஓலைச் சுவடிகள் சேகரிக்கப்பட்டன.

நிழற்படப் பிரிவு :

700-க்கும் மேற்பட்ட சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் நிழற்படம் எடுக்கப்பட்டன. ஆங்காங்கு இத்துறையால் அமைக்கப்பெறும் காட்சிகளுக்கு வேண்டிய நிழற்படங்கள் எடுக்கப்பட்டு பிரிண்டு போட்டுத் தரப்படுகின்றன.

நூல்கள் வெளியீட்டுப் பிரிவு :

மொத்தம் 13 நூல்கள் அச்சாகியிருக்கின்றன. இத்துறையால் வெளியிடப் பெறும் காலாண்டு இதழ் " கல்வெட்டு " இரண்டு வெளிக் கொணரப் பட்டுள்ளன.

நூலகம் :

இத்துறையின் நூலகத்துக்காக இந்த ஆண்டு மட்டும் 200-க்கும் மேற்பட்ட நூல்கள் வாங்கப்பெற்றன. இந்நூல்கள் வரலாறு, கல்வெட்டு, நாணய இயல் கலை, பண்பாடு ஆகியவை சம்பந்தமானவை ஆகும்.

தேசிய மாணவர் படை

சென்னையிலுள்ள தேசிய மாணவர் படை அலுவலகம் 6 தொகுதி தலைமையிடங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் இரண்டு சென்னையிலும், ஏனையவை மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி ஆகிய இடங்களிலும் உள்ளன. தேசிய மாணவர் படையில் நான்கு அணிகள் உள்ளன. அவையாவன--தரைப்படை, கப்பற்படை, விமானப்படை,

பெண்கள் பிரிவு ஆகியவையாகும். இவற்றில் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக முறையே முதுநிலை, இளநிலைப் பிரிவுகள் உள்ளன.

நடப்பாண்டில் இம்மாணவர்களின் மொத்த எண்ணிக்கை வருமாறு:—

	முதுநிலைப் பிரிவு	இளநிலைப் பிரிவு
(1)	(2)	(3)
(அ) தரைப் படை	15,720	54,050
(ஆ) கப்பற் படை	1,250	5,450
(இ) விமானப் படை	1,000	4,650
(ஈ) பெணகள் அணி	3,880	5,400

முகாம்கள் :

இவ்வாண்டு 26 முகாம்கள் நடத்தப்பட்டன. பயிற்சி முகாம்களில் 15,084 மாணவர்கள் பங்கு கொண்டனர். இவை தவிர, தமிழ் நாட்டிலிருந்து சென்ற 335 மாணவ மாணவியர் தேசிய மாணவர் படைத் தலைமை இயக்குநரால் 1979 ஆம் ஆண்டு மே/ஜூன் திங்களில் நடத்தப்பட்ட அனைத்திந்திய முகாம் களில் பங்கு கொண்டனர்.

குடியரசு தின முகாமும் அனைத்திந்திய தேசிய மாணவர் படைப் போட்டி களும் :

1980 ஜனவரியில் டில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பு, இந்தியப் பிரதமரின் அணிவகுப்பு ஆகியவற்றில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 69 மாணவர்களும் 19 மாணவிகளும் பங்கு கொண்டனர். பிற மாநிலத் தேசிய மாணவர் படைகளுக்கிடையே நிகழ்ந்த போட்டிகளில் தமிழ் நாடு அணியின் சாதனை தனிச் சிறப்பு பெற்று அமைந்தது. தமிழ்நாடு அணி 8 முதற் பரிசுகளையும் 2 இரண்டாவது பரிசுகளையும் வென்றது. மேலும் முகாம் நிறைவு விழாவின் போது இந்திய பிரதமர் தமிழ் நாட்டு மாணவர் அணி பன்மாநில அணிகளுள் முதன்மை பெற்றதற்கான விருதுக் கொடி அளித்தார்.

மலையேறும் போட்டி கொண்ட சுற்றுப் பயணங்களில் இமாசல பிரதேசம் மற்றும் எவரெஸ்ட் மலை முகட்டிற்குச் செல்லும் போட்டிகளில் பங்கு கொண்

வதற்காக தேசிய மாணவர் படையைச் சேர்ந்த இரு மாணவர்களும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சமூகப் பணிகள் :

சமூகப் பணி, தேசிய மாணவர் படை நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்த பணியாகும். இவ்வியக்கத்தை சேர்ந்த பல்வேறு தொகுதிகளின் பிரிவுகளில் மாணாக்கர்கள் சமூகப் பணிகளில் பங்கேற்றுள்ளனர்.

தமிழ் வளர்ச்சி.

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தைத் தீவிரமாகவும் செம்மையாகவும் செயற்படுத்த 10 தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் மாவட்ட நிலையில் அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து வருகின்றனர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் தலைமைத் துறைகளையும் மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டாட்சியர் அலுவலகங்களையும் ஆய்வுச் செய்கிறார். இவ்வாண்டில் 13 அலுவலகங்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களாலும் 6,155 மாவட்ட சார்நிலை அலுவலகங்கள் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களாலும் ஆய்வு செய்யப்பட்டன.

தமிழில் சிறந்த வரைவுகளும் குறிப்புகளும் எழுதுபவருக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தமிழில் சிறந்த வரைவுகளும் குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 5—8—1974 நாளும் 1352 எண்ணும் பெற்ற கல்வித் துறை அரசாணையின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்தில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதியவர்களாக அறுவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபாய் 500, வீதம் இரண்டு முதல் பரிசுகளும் ரூபாய் 300 வீதம் இரண்டு இரண்டாம் பரிசுகளும் ரூபாய் 200 வீதம் இரண்டு மூன்றாம் பரிசுகளும் மொத்தத்தில் ரூபாய் 2,000 க்குரிய பரிசுத் தொகை 16—1—1980 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது மதுரை, இராமநாதபுரம், வட ஆர்க்காடு, கன்னியாகுமரி,

திருச்சி, புதுக்கோட்டை முதலிய மாவட்டாட்சியர்களால் தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதிய அரசு ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்தத்தில் ரூபாய் 1,000-க்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழில் பயிற்சி வகுப்பு :

இவ்வாண்டில் 12 இந்திய ஆட்சி பணி 6 இந்திய காவல் பணி அலுவலர்களுக்கும் தமிழ்த் திட்டச் செயலாக்கம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேர்வு :

தமிழில் போதிய தேர்ச்சியில்லாத சென்னை மாநகரிலுள்ள அரசுப் பணியாளர்களுக்கு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தமிழ்த் தேர்வு நடைபெற்றன. மொத்தம் 13 பேர் கலந்துகொண்டு 6 பேர் தேர்ச்சி பெற்றனர். மாவட்டங்களில் 77 பேர் தேர்வில் கலந்துகொண்டு 70 பேர் தேர்ச்சி பெற்றனர்.

தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நூலாசிரியருக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் :

தமிழ் மொழியில் சிறந்த நூல்களை வெளியிட விழைபவர்களுக்கு மேற்படி திட்டத்தின்கீழ் இத்துறையின் வாயிலாகப் பொருளுதவி செய்யப்படுகிறது. அச்சிடத் தகுந்ததென வல்லுநர் குழு தேர்ந்தெடுத்த நூல்களை அச்சிடுவதற்காகும் செலவில் பாதியை ரூபாய் 5,000-க்கு மிகாமல் வழங்கி தமிழில் புதுப்புது நூல்கள் வெளிவர வழிவகுக்கப்படுகிறது. கீழ்க்காணும் நூல்களைக் குழு தேர்ந்தெடுத்து அவைகளின் வெளியீட்டிற்கு நிதியுதவி அளிக்க அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

1. மனித உள்ளம் அல்லது வள்ளுவர் பண்ணை.

2. அகதிணைக் கொள்கைகள்.

3. ஓவியக் கலை.

4. கோவேள் கட்டுரைக் கோவை.

5. யாப்பருங்கல விளக்கம்.

6. மொழியியல் கலைச் சொல்லகராதி (தமிழ்-ஆங்கிலம்).

7. துறவியின் புதையல்.

தமிழில் யுனெஸ்கோ கூரியரை வெளியிடுவதற்காகத் தென் மொழிகளின் புத்தக நிறுவனத்திற்கு ரூபாய் 4,95,000 நிதியுதவியாக வழங்கப்பெற ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு வரலாறு எழுதும் குழுவின் பணிகள் :

தமிழ் நாட்டு வரலாற்றில் இரண்டாவது தொகுதியான "சங்ககாலத் தமிழகம்" என்ற பகுதியை அச்சுக்கு விரைந்து அனுப்ப இக்குழு தற்போது நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. மூன்றாவது நான்காவது தலைப்புகளான "பல்லவர் பாண்டியர் காலத் தமிழகம்" "சோழப்பெருவேந்தர் காலத் தமிழகம்" ஆகிய நூல்களின் தலைப்புகளில் பதிப்பாசிரியர்களும் வரலாற்று அறிஞர் பெருமக்களும் தற்போது கட்டுரைகள் எழுதி வருகின்றனர்.

வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை நிறுவ அரசு நிதியுதவி அளித்தல்.

கீழ்காணும் பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு அவற்றின் எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை நிதியுதவியாக வழங்க 1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்புச் செய்து அத்தொகை வழங்கப்பட்டுள்ளது :

1.	அகில இந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர்கள் சங்கம் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்).	ஆய்வுக்கோவை நூல் வெளியீட்டிற்காக.	ரூ. 5,000
2.	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்.	தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்பு நடத்துவதற்காக.	ரூ. 15,000
3.	மொழிகள் மநிலப்பள்ளி, திருவனந்தபுரம்.	ஷை	ரூ. 15,000

4.	தென்னிந்திய மொழிகள் பள்ளி, லக்னோ.	தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்பு நடத்துவதற்காக.	ரூ. 15,000
5.	உஸ்மானியா பல்கலைக் கழகம், ஐதராபாத்.	தமிழில் பேராசிரியர் பதவி தோற்றுவிப்பதற்காக.	ரூ. 25,000
6.	திராவிட மொழிகள் பன்னாட்டுப் பள்ளி, திருவனந்தபுரம்.	கல்வி வளர்ச்சிக்காக.	ரூ. 1,36,000
7.	மாரத்வாடா பல்கலைக் கழகம், ஔரங்காபாத், மகாராஷ்டிரா.	தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்பு நடத்துவதற்காக.	ரூ. 15,000
8.	உத்கல் பல்கலைக் கழகம், புவனேஸ்வர்.	தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்பு நடத்துவதற்காக.	ரூ. 15,000
9.	இந்தூர் பல்கலைக் கழகம், இந்தூர், மத்தியபிரதேசம்.	ஷை	ரூ. 15,000
10.	ஆந்திரா பல்கலைக் கழகம், வால்டேர், ஆந்திரா.	ஷை	ரூ. 15,000
11.	திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.	தமிழ் இருக்கை நிறுவுவதற்காக.	ரூ. 10,000
12.	அந்தமான் தமிழ்ச் சங்கம், அந்தமான்.	திருமண மண்டபம் கட்டுவதற்கு.	ரூ. 50,000
13.	பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா.	பாரதி நிலையம் எனும் பெயரில் கட்டடம் கட்டுவதற்கு.	ரூ. 50,000

14.	பி. இ. எம். எல். தமிழ் மன்றம், கோவார்.	கட்டடம் கட்டுவதற்கு.	ரூ. 10,000
15.	அறிவியக்கப் பேரவை, சென்னை.	தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் குறித்த கருத்தரங்கு விழாச் செலவிற்காக.	ரூ. 1,000

சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :

பிறமொழி நூல்கள் தமிழிலும் தமிழ் நூல்கள் பிறமொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிட நீதிபதி திரு. எல். மகராசன் அவர்களின் தலைமையிலான குழு இவ்வாண்டு நான்கு முறை கூடியது.

கீழ்க்கண்ட நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது :—

1. Prophot.
2. Jannartham.
3. Pathitrupathu.
4. Squirrel in the courtyard.
5. Dance of Shiva.
6. 100 poems of Soviet Literature.

மொழி பெயர்ப்புப் பணி :

இவ்வாண்டில் கீழ்க்காணும் பணிகள் மொழி பெயர்ப்புப் பிரிவில் நடைபெற்றுள்ளன :—

மொழிப்பெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப்பட்டவை :

1. தமிழ்நாடு பதிவுத்துறை நடைமுறை நூல், பகுதி II தொகுதி 1.
2. தமிழ்நாடு பதிவுத்துறை நடைமுறை நூல், பாகம் 1.
3. தமிழ்நாடு தனிச் சம்பளம் மற்றும் படிகள் நடைமுறை நூல்.
4. தமிழ்நாடு ஊழியர் குடும்பக் காப்புத் திட்ட அறிவுரைக் கையேடு.
5. சின்கோனாத்துறை நடைமுறை நூல், தொகுதி 1.
6. சின்கோனாத்துறை நடைமுறை நூல், தொகுதி 2.

உதவி இயக்குநர் 1 (மொழிபெயர்ப்பு) அவர்களால் மொழி பெயர்க்கப் பட்டவை.—

1. அஞ்சல் துறை பெயர்ப்பலகை.
2. 1969 ஆம் ஆண்டைய பிறப்பு இறப்புச் சட்டத்தின் திருத்தச் சிட்டுகள்.
3. சென்னை விமானதளப் பெயர்ப்பலகை.
4. மதுரை வானூர்தி துறைப் பெயர்ப்பலகை.
5. அரசு நிதித்துறைச் சொற்தொடர்கட்குத் தமிழாக்கம்.
6. பணிப்பதிவேடு.
7. அறுவை சிகிச்சைக்கான விண்ணப்பப் படிவம்.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் :—

இத்திட்டத்தின் கிழ் 1979 ஆம் ஆண்டிற்கு 170 விண்ணப்பங்கள் பெறப் பட்டன. இதனை வல்லுநர் குழு ஆராய்ந்து 40 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க அரசுக்குப் பரிந்துரைத்தது. அரசு 31 தமிழறிஞர்களுக்கு மட்டுமே இந்நிதியுதவியை வழங்க ஒப்பளிப்புச் செய்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழறிஞர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு திங்களில் நிதியுதவி தொகை ரூபாய் 250 மட்டும் 16—1—1980 ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தில் நடை பெற்ற வள்ளுவர் தின விழாவில் வழங்கப்பெற்றது. இந் நிதியுதவி 1—4—1979 முதல் 31—3—1982 முடிய வழங்கப்படும்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது.—

1979 ஆம் ஆண்டிற்கான இவ்விருது பெறும் கவிஞராக காலஞ்சென்ற கவிஞர் வாணிதாசன் மற்றும் கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியோர் தேர்ந் தெடுக்கப்பட்டு அவர்களுடைய துணைவியர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

அத்தியாயம் V.

நிதித்துறை.

நிதி.

மாநில நிதி.—1979-80 ஆம் ஆண்டுக்கான வருவாய்க் கணக்கில் **வரவு,** செலவு மூலதனக் கணக்கில் செலவு குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

	(ரூபாய் ஆயிரத்தில்)
வரிமூலம் கிடைத்த மொத்த வருவாய்	5,57,19,59
வரி அல்லாத வேறு வருவாய் மொத்தம்	1,21,78,08
மொத்த உதவி மானியம்-பங்குத் தொகை	2,65,87,31
மொத்தம் வருவாய்	9,44,84,98

வருவாய்க் கணக்கில் செலவு.—

	(ரூபாய் ஆயிரத்தில்)
பொதுவானப் பணிகள்	2,31,60,37
சமூக சமுதாயப் பணிகள்	3,55,54,90
பொருளாதாரப் பணிகள்	2,37,10,25
உதவி மானியம்-பங்குத் தொகை	25,29,31
மொத்தம் செலவுகள்	8,49,54,83

மூலதனக் கணக்கு குறித்த செலவு.—

	(ரூபாய் ஆயிரத்தில்)
பொதுவான பணிகள் குறித்த மூலதனக் கணக்கு	1,21,96
சமூக-சமுதாயப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	11,74,29
பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	54,62,99
மொத்த மூலதனச் செலவு	67,59,24

ரொக்க இருப்பு.—

தமிழக அரசின் ரொக்க இருப்பு 1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி ரூபாய் (—) 175.01 இலட்சமும், 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி ரூபாய் (—) 783.06 இலட்சமும் ஆகும்.

வருவாய்க் கணக்கு.—1979-80 ஆம் ஆண்டில் தமிழக அரசின் மொத்த வருவாய் ரூபாய் 94,484.98 இலட்சமாகும். இவ்வாண்டில் செலவு ரூபாய் 84,954.83 இலட்சம். உபரித் தொகை ரூபாய் 9,530.15 இலட்சமாகும்.

மூலதனக் கணக்குகள் :—

மொத்த மூலதனச் செலவு ரூபாய் 1,759.24 இலட்சமாகும். வேளாண்மை-துணைப் பணிகளின் கீழ் ஏற்பட்ட ரூபாய் 881.63 இலட்சமும் நீர்-மின் வளர்ச்சியின் மூலதனக் கணக்கின் கீழ் ரூபாய் 1,879.80 இலட்சமும், சமூக-சமுதாயப் பணிகளின் மூலதனக் கணக்குகளின் கீழ் ரூபாய் 1,174.29 இலட்சமும் முக்கிய செலவினங்களாகும்.

சிறப்பு நிதிகள்

பஞ்ச நிவாரண நிதி.—கடுமையான வறட்சி, வெள்ளம், பஞ்சம் உட்பட ஏனைய இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இடர்பாடுகளுக்கான நிவாரணக் குறித்த செலவிற்காகவும் பஞ்சத்தைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பாதுகாக்கப்பட்ட பாசனம் அல்லது ஏனைய பணிகள் குறித்த செலவிற்காகவும் 1936 ஆம் ஆண்டு சென்னை பஞ்ச நிவாரண நிதிச் சட்டத்தின் கீழ் நிதி நிறுவப்பட்டது. இந்நிதியில் 30—9—1953 ஆம் நாள் நிலவரப்படி ரொக்க இருப்பு ரூபாய் 1,179 இலட்சமாகும். பெயரளவிலான இந்தப் இருப்புக்கு பொறுப்பை ஒதுக்க 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டத்தில் வகை செய்யப்படவில்லை. பரஸ்பர உடன்பாடு மூலம் இது தீர்க்கப்பட்டது. இந்நிதியிலுள்ள இருப்புத் தொகை முழுவதையும் தமிழக அரசுக்கு மாற்று வதற்கு 30—9—1953 அன்று இருந்த பெயரளவிலான இருப்பு முழுவதையும் தமிழ் நாட்டிற்கு மாற்ற ஆந்திர, மைசூர் அரசுகள் ஒப்புக் கொண்டன. இதன்படி 30—9—1953 ஆம் நாள் நிலவரப்படி இருந்த இருப்பு தமிழக அரசுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டது. 31—10—1956 ஆம் நாள் நில வரப்படி இறுதி இருப்பு ரூபாய் 22.11 இலட்சமாகும். இதில் ரொக்கம் ரூபாய் 2.38 இலட்சமாகும். ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 19.73

இலட்சமாகும் (வாங்கும் விலை). 1956 ஆம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின் படி சீரமைக்கப்படும் மாநிலங்களுக்கிடையே பிரித்து அளிக்கப் படும் வரையில் இருப்புத் தொகை முழுவதும் சீரமைக்கப்பட்ட தமிழ் நாட்டின் கணக்கிற்குத் தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இந்நிதியில் இருப்பு ரூபாய் 23.39 இலட்சமாகும். இதில் ரொக்கம் ரூபாய் 2.64 இலட்சமாகும். ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 20.75 இலட்சமாகும் (வாங்கும் விலை).

ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி வருவாய்க் கணக்கிலிருந்து நிதிக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்ட ஆண்டு பங்குத் தொகை ரூபாய் 859 இலட்சமென நிர்ணயிக்கப்பட்டது. இதற்கிணங்க இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான செலவுகளுக்காக வருவாய்க் கணக்கிலிருந்து இந்நிதிக்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 859 இலட்சம் மாற்றப்பட்டது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி இந்நிதியில் இருப்பு ரூபாய் 20.75 இலட்சமாகும். இதில் ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 20.75 இலட்சமும் (வாங்கும் விலை).

மாநில அரசு வாங்கும் கடன்கள்—பொதுமக்களிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் கடன்கள்

இந்த ஆய்வு ஆண்டில், தமிழக அரசு ரூபாய் 2,918.22 இலட்சம் கடனாக திரட்டியது. பொது மக்களிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் இதில் நில உச்சவரம்பு இழப்பீட்டுப் பத்திரங்களும் அடங்கும். நில உச்சவரம்பு இழப்பீட்டுப் பத்திரங்களுக்காக ரொக்கம் கொடுத்தது. பொதுமக்களிடமிருந்து திரட்டிய கடனைத் திருப்பிக் கொடுத்தது ஆகிய வகையில் நடப்பாண்டில் மொத்தம் ஏற்பட்ட செலவு ரூபாய் 1,833.80 இலட்சமாகும்.

மத்திய அரசிடமிருந்து கடன்கள் :

பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்—ஏனைய திட்டப் பணிகள் குறித்த செலவிற்காக நடப்பாண்டில் மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் உதவித் தொகை ரூபாய் 15,630.62 இலட்சமாகும்.

மூலதனம், பொறுப்புகளும், இருப்புகளும்

31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி

பொறுப்புகள்.

(ரூபாய் இலட்சத்தில்)

கடன்கள்	
மத்திய அரசுக்கு பாக்கி	8,70,73.37
பொதுமக்களிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெறும் கடன்கள்	2,37,97.53
4 சதவீத தமிழ்நாடு நில உச்சவரம்பு இழப்பீட்டு பத்திரங்கள்	2,63.90
மீட்க முடியாத சிறப்புக் கடன்கள்	1.29
ஏனைய வகையில் திரட்டப்பட்ட கடன்கள்	
வழிவகை முன் பணங்கள்	—
மிகைப்பற்று	—
ஏனைய கடன்கள்	46,92.35
ஏனைய பொறுப்புகள்	
மாநில வருங்கால வைப்புத் நிதி	
சேமிப்பு வங்கி வைப்பு நிதி	79,08.03
மொத்தம்	12,87,37.07

31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி

இருப்புகள்.

(ரூபாய் இலட்சத்தில்.)

இருப்புகள்	
கடன் முன்பணங்கள் (அரசுக்குச் செலுத்த வேண்டியவை)	5,56,55.61
மின் வாரியத்திற்குக் கடன்கள்	4,49,06.20
மூலதனச் செலவு	7,62,77.43
பண இருப்பும் முதலீடுகளும்	21,27.08
மொத்த இருப்புகள்	17,89,66.48

31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி பொறுப்புகளுக்கு மேல் உள்ள இருப்புகளின் மதிப்பு	5,02,29.25

மதிப்பீடு—செயல்முறை ஆய்வுத் துறை.

மதிப்பீடு—செய்முறை ஆராய்ச்சித் துறை, ஓர் இயக்குநரின் தலைமையில் நடைபெற்று வருகிறது. அத்துறையின் நிர்வாகத்திற்கும், பல்வேறு தொழில் நுட்பப் பிரிவுகளுக்கும் இயக்குநரே முழுப்பொறுப்பு வகிக்கிறார். இத்துறையின் தொழில் நுட்ப ஆராய்ச்சி பணிகளை, முதுநிலை, இளநிலை ஆராய்ச்சிப் பணியாளர்கள் அடங்கிய எட்டு பிரிவுகள் கவனித்து வருகின்றன.

மதிப்பீட்டு அறிக்கைகள் :

இந்த ஆண்டில் பின்வரும் ஏழு மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்து முடிக்கப்பட்டன :—

(1) சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு நுகர்பொருள் கடன் வசதி அளிப்பதில் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்கு.

(2) அரிசன/பழங்குடியினருக்கான உதவித்தொகை பெறும் இல்லங்களுக்கும் ஏனைய தொண்டு நிறுவனங்களுக்கும் மானியம் வழங்கும் திட்டம்.

(3) தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களால் கிட்டிய பயன்கள்.

(4) இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதித் திட்டத்தில் (IV ஆம் திட்டம்) காடு வளர்ப்புத் திட்டம்.

(5) தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட நீர்ச் கசிவுக் குட்டைத் திட்டம்.

(6) பாண்டிச்சேரியில் சிறு உழவர்கள் மேம்பாட்டு முகவர் அமைப்பு.

(7) டிராக்டர் பட்டறை.

தானிய வகைகள் மேம்பாட்டுத் திட்ட அறிக்கை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட அறிக்கையை திருத்தி அமைத்தல், பாசனம் குறித்த அறிக்கை இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதித் திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய அறிக்கை முதலியவற்றை தயாரிக்கும் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.

புதிய ஆய்வுகள்.—ஆண்டின் பிற்பகுதியில் பின்வரும் ஐந்து ஆய்வுகள் மதிப்பிடும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டன :—

1. கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம்.

2. சிறு மருந்தகங்கள்.

3. அரிசனங்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்த நடவடிக்கைகள்.

4. மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை.

5. சாணத்திலிருந்து வளித் தயாரிக்கும் திட்டம்.

தனி ஆய்வுகள் :

1. தமிழ்நாட்டில் பட்டுப் பூச்சி வளர்த்தல் பற்றிய விரைவான மதிப்பீட்டு ஆய்வு நடத்தி அதுகுறித்து அறிக்கை நிதித் துறை செயலாளருக்கு அனுப்பப் பட்டது.

2. உலக வங்கி பின் சத்துணவுத் திட்டத்தை மதிப்பிடும் முறை ஒன்று வகுக்கப்பட்டது.

3. வேலை வாய்ப்பு—பயிற்சி இயக்குநர் அலுவலகம் செயலாக்க விருக்கின்ற கிராமப்புறக் கைவினைஞர் மேம்பாட்டுத் திட்டம் குறித்து மதிப்பிடுதல்—மேற்பார்வையிடுதல் குறித்த அமைப்பு முறையொன்று தயாரிக்கப்பட்டது.

4. திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்ட தினைவிவரக் களஞ்சியத்தில் இடம்பெறும் பொருட்டு பொருளாதாரப் போக்கு என்னும் பொருள்பற்றிய அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.

5. தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத் திட்டம் குறித்து இரு அத்தியாயங்களைத் தயாரித்தலும் பதிப்பித்தலும். தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துகள் தர மேம்பாட்டுத் திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆராய்வது குறித்த அறிக்கைகள்.

6. தமிழ்நாட்டின் பொருளாதார நிலை குறித்த தகவல்களை கொண்ட விவரங்களை தயாரித்தல்.

7. ஏரிகளை நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தைச் சேர்ந்த ஓர் ஏரியால் பாசனம் பெறும் ஆயக்கட்டுப் பகுதியில் வேளாண் பொருளாதார ஆய்வு குறித்த முன்னோடி ஆய்வு முடிவுற்றது. அதுகுறித்த அறிக்கை அரசுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

8. கட்டிக்குளம் ஏரி குறித்த இதுபோன்ற வேளாண் பொருளாதார ஆய்வும் முடிவுற்றது.

திட்ட வடிவ அமைப்பு :

1978 ஆம் ஆண்டு இறுதியில் திட்ட வடிவ அமைப்புப் பிரிவு அமைக்கப் பட்டது. இப்பிரிவு உலக வங்கித் திட்டம் ரூபாய் 50 இலட்சத்திற்குக் குறையாமல் செலவாகும் திட்டங்கள் ஆகியவற்றை வடிவமைப்பதுடன் நிதித்துறையோ வேறு பிற தலைமை செயலகத் துறையோ துறைத் தலைவர்களோ குறிப்பிடும் திட்டங்களை வகுக்கும் பொறுப்பை ஏற்கின்றது.

இப்பிரிவு திட்டப் பொருளாதார வல்லுநரின் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவி புரிவதற்கென திட்ட அதிகாரிகளும் உள்ளனர். தமிழ்நாட்டில் மேற்கு மலைப்பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டமொன்றை வகுக்கும் பணியை இப்பிரிவு இப்போது மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டில் இப்பிரிவு பின்வரும் பணிகளையும் மேற்கொண்டது :—

1. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுத் திட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கான வழி முறைகள் தயாரிக்கப் பட்டு அவை துறைத் தலைவர்களுக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப் பட்டன.

2. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ள " ஒரு நாள் கருத்தரங்குக்கென்று பாசனம் பற்றிய பொருளாதாரம் " என்பது பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று தயாரிக்கப்பட்டது.

3. கால்நடை பராமரிப்பு இயக்குநரால் தயாரிக்கப்பட்ட " தமிழ் நாட்டில் ஆடுகள் வளர்ப்பு" என்பது குறித்த திட்ட அறிக்கை ஆய்வு செய்யப் பட்டது.

4. " ஆட்படை ஊற்றம் குறித்து பணிக்குழு கொடுத்த அறிக்கைபற்றிய கருத்துக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டன.

5. தமிழ்நாட்டில் உவர், களர் நிலங்களை பண்படுத்துவது குறித்த திட்டக் கூறுகளை விளக்கிக் கூறும் அறிக்கை ஒன்று அரசுக்கு அனுப்பப் பட்டது.

6. தமிழ்நாட்டில் வேளாண்-விளைபொருள் விற்பனை ஒருங்கிணைந்த மேம்பாடு குறித்த திட்டமொன்றை வகுக்கும் பணி முடிவுற்றது; அது குறித்த அறிக்கை ஒன்று அரசுக்கு அனுப்பப்பட்டது.

7. திருவனந்தபுரத்தில் நடைபெற்ற செயலாளர்கள் அளவிலான கூட்டத் திற்கென மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் குறித்த குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

8. 1979 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் பம்பாயில் நடைபெற்ற தொடர்பு அதிகாரிகள் கூட்டத்திற்காக (2 ஆம் கூட்டம்) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் குறித்த குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

9. உத்திரப் பிரதேசத்தின் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார நிலை மேம்பாடு குறித்து தற்காலிகமான வட்டார அமைப்பு முறைபற்றிய அறிக்கை குறித்த கருத்துகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டன.

10. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் செயலாக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்பற்றிய குறிப் பொன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

11. " வாலிநோக்கம் " என்னுமிடத்தில் சிறிய துறைமுகத்தை அமைப் பதற்கான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வு ஒன்றை நடத்துவது குறித்த செயற்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு மாநிலத் துறைமுகத் துறைக்கு அனுப்பப்பட்டது.

12. தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சிப் மலைப் பகுதியைக் காட்டும் வரைப்படங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்

பட்டின. அத்தகவல்கள் மத்திய நில அளவை அலுவலகத்திற்கு வரைப்படங் களைத் தயாரிக்கும் பொருட்டு அனுப்பப்பட்டன.

13. ஆண்டுத் திட்டத்தில் (1980-81) "வேலைவாய்ப்பு" என்னும் பொருள் பற்றிய குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

14. "சமையல் எண்ணெய் — எண்ணெய் வித்து உற்பத்தி—விற்பனை" முறையைத் திருத்தியமைத்தல் என்பது குறித்த திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது.

15. செம்மறி ஆடுகள் வளர்ப்புத் திட்டம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

16. "கோழி வளர்ப்பு" பற்றிய திட்ட அறிக்கையை திருத்தியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

17. துறைத் தலைவர்களிடமிருந்தும் மாவட்ட ஆட்சியாளர்களிட மிருந்தும் வந்த செயற்குறிப்புகளைக் கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கென திட்டப் பணிகளை வகுக்கும் பணி நடந்தேறி வருகிறது.

கணக்கு கருவூல இயக்குநர் அலுவலகம்.

கருவூலக் கணக்குத் துறை அந்தத் துறையினரின் இயக்குனரின்கிழ் செயல் பட்டு வருகிறது. அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பற்று-வரவுகள் இத்துறையின் மூலம் நடைபெறுகின்றன.

பிரித்தமைத்தல், மேல்நிலைப்படுத்துதல் மற்றும் புதிய கருவூலங்கள்.

கோயம்புத்தூர் மாவட்ட கருவூலம் இரண்டாக பிரித்தமைக்கப்பட்டு பெரியார் மாவட்ட புதிய மாவட்டக் கருவூலம் 17-9-1979 முதல் ஈரோட்டில் இயங்கி வருகிறது. மதுரை மாவட்ட கருவூலம் இரண்டாக பிரிக்கப்பட்டு புதிய மாவட்ட கருவூலம் திண்டுக்கல்லில் 24—1—1980 முதல் இயங்கி வருகிறது. சீர்காழி, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் சிதம்பரம் முதல்நிலை சார்நிலை கருவூலங்கள், தேர்வுநிலை சார்நிலை கருவூலங்களாக

மேம்படுத்தப்பட்டன. மண்டபம், ஆவுடையார் கோவில், பள்ளிப்பட்டு, சிவகிரி மற்றும் சேரன்மாதேவி ஆகிய இடங்களில் புதிய சார்நிலை, கருவூலங்கள் துவக்கப்பட்டன.

ஓய்வூதிய முன்னோடித் திட்டம் :

ஓய்வூதிய முன்னோடித் திட்டம் ஆசிரியர் குடும்ப ஓய்வு ஊதியம் பெறுபவர்கட்கு ஜூலை 1979 முதல் வெளியூர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

பிராட்மா முறை :

பிராட்மா முறையில் பொது வைப்பு நிதி விபர அட்டவணைகளைத் தயாரிக்கும் முறை அனைத்து மாவட்டங்களிலும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் நடைபெற்று வருகின்றது. இதனை ஓய்வூதிய முன்னோடித் திட்டத்திற்கும், சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர் துயர் நீக்கும் சிறு குழுவால் 920 நபர்களின் ஓய்வூதியம் பட்டுவாடா செய்வதில் உள்ள குறைகள் தீர்த்துவைக்கப்பட்டது.

கூடுதல் ஊதியக் கட்டாயச் சேமிப்புத் திட்டம், 1974 :

கூடுதல் ஊதியக் கட்டாய சேமிப்புத் (உள்ளாட்சிமன்ற பணியாளர் திட்டம்) திட்டத்தினை நிர்வகிக்கச் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இத்திட்டத்திற்குரிய (உள்ளாட்சி நிறுவனங்கள் — குறிப்பிட்டவை மட்டும்) வற்றை நிர்வகித்தல், தவணைகளையும், வட்டியினையும் திரும்ப அளிக்க அதிகாரம் அளித்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே தவிர்க்க முடியாத சிரமமான நிலைமைகளில் தவணைகளைத் திரும்ப அளிக்க ஒப்பளிப்பு செய்தல் போன்றவற்றைக் கவனிக்கின்றார். முதல் மற்றும் இரண்டாவது தவணைகளில் திரும்பத் தரவேண்டிய பழைய மற்றும் புதிய கணக்குகளுக்கு உரிய தொகை முழுமையும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

அரசுப் புள்ளி விவர தொகுப்பு நிலையம் :

வரவு-செலவு குறித்து ஆராயவும் நடைமுறைக்கேற்றவாறு வரவு-செலவுத் திட்டத்தை வகுத்துக்கொள்ளவும், அவற்றைத் திறம்பட நிர்வகிக்கவும் வேண்டிய தகவல்களை நிதித் துறைக்கு அளிக்கும் பொருட்டு மத்தியத் தகவல்

தொகுப்பு நிலையம் ஒன்றை 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழ்நாடு அரசு நிறுவியது. காவல் துறை, கல்வித் துறை, வணிகவரித் துறை முதலியன அரசின் பிற துறைகளின் தகவல் தொகுக்கும் பணித்தேவைகளை மதிப்பிடவும் தகவல் அளிக்கும் தகுந்த ஏற்பாடுகளை மேம்படுத்தி இயக்கவும் தற்போதுள்ள அரசுத் தகவல் தொகுப்பு நிலையம், 1972 ஆம் ஆண்டில் ஒரு தகவல் தொகுப்புப் பிரிவாகத் தொடங்கப்பட்டது. இந்த மத்திய வரவு-செலவுத் திட்டத் தகவல் தொகுப்பு மத்தியப் பிரிவு 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளன்று அரசுத் தகவல் தொகுப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்டது.

நடைமுறையில் பயன்படுத்தல்.

நிதியைப் பயன்படுத்தும் திட்டம் ABC :

தற்போது நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின்கீழ், 155 துணைக் கருவூலங்கள், 17 மாவட்டக் கருவூலங்கள், மூன்று சம்பளக் கணக்கு அதிகாரிகள் அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து நாள்தோறும் அரசுத் தகவல் தொகுப்பு நிலையத்திற்குப் புள்ளிவிவரங்கள் அனுப்பப்படுகின்றன. இங்கு தகவல் தொகுப்புப் பணிக்காக அனுப்பிவைக்கப்படும் பணிகளில் திங்கள் ஒன்றிற்கு ஏழு இலட்சம் நிதி நடைமுறையைப் பற்றிய கணக்குகளே பெரும்பான்மையானவையாகும். தகவல் தொகுப்பு நிலையக் கணக்குகளை முழுமைப்பெற்றதாக்க, காசோலை வழங்கப்பெறும் துறைகளின் கோட்ட அதிகாரிகள் தங்களின் கணக்குகளின் நகல் ஒன்றை அடுத்து வரும் திங்களில் 10 ஆம் நாளுக்கு முன்பாகத் தகவல் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று அரசு அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கிணங்க, 144 நிர்வாகப் பொறியாளர்கள் (பொதுப்பணித் துறை), 68 கோட்ட அதிகாரிகள் (நெடுஞ்சாலை), 67 வனக் கோட்ட அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து மாதாந்திரக் கணக்குகள் வரப்பெற்று அவை முறைப்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொகுப்புக்காகக் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் மாதாந்திரக் கணக்குகள், வருவாய், செலவு குறித்த விரிவான தலைப்பு வாரியான புள்ளி விவரங்கள் ஆகியவை கணக்குப் பொறியிலிருந்து தயாரிக்கப்பட்டிருக்கின்றன. வரிவசூல், செலவினங்கள், ஆகியவற்றை நிதித் துறை கண்காணிக்க இந்த விவர அறிக்கைகள் பெரிதும் பயன்படுகின்றன. வழிவகை முன்பண

முன்னறிவிப்பு, ஒவ்வொரு மாதத்திற்கான கணக்குகள் ஆகியவற்றைச் சரியாகத் தயாரிப்பதற்கும் இது பயன்படுகிறது.

விற்பனை வரியைப் பயன்படுத்தல் :

மாநிலத்திற்கு விற்பனை வரியின் மூலம் பெருமளவு வருவாய் கிடைக்கிறது. இத்தலைப்பின்கீழ், வரி வசூல், கணக்குகள் வைத்துவருதல், ஆகியவை முறையாக வைத்து வரவேண்டியது மிகவும் அவசியமான பணியாகும். ஏனெனில், அப்போதுதான் அரசு, வரிவசூல், நிலைமை முன்னதாகத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் தகவல்களைத் தயார் நிலையில் வைத்திருக்க இயலும். 550 வரிவிதிப்பு அதிகாரிகள் பிறப்பிக்கும் ஆணைகள் அடிப்படைத் தகவல் ஆவணங்களாகும். 2,10,000 பதிவு செய்யப்பட்ட வணிகர்கள் 1,08,000 வரி விதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு பொருள் வாரியான தனித் தனி வியாபாரத் தொகை, பகுதி வாரியாக சேர்ந்து வரும் வரித் தொகை, பல்வேறு வியாபாரத் தொகைக்கேற்ற பிரிவுகளாக வரி விதிக்கப்படுபவர்கள் போன்ற விவரங்கள், கணக்கீட்டுப் பொறியாளர்கள் கொடுக்கும் தகவல்கள் வாயிலாக சேகரிக்கப்படுகின்றன. பொருள்கள் வாரியாக வியாபாரத் தொகை, 1976-77, 1977-78, 1978-79 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டின் வருவாய் போன்றவையடங்கிய விவர அறிக்கை தயாரித்து, வருவாய் வாரியம் (வணிக வரிகள்) அரசு ஆகியோருக்கு, வரி விதிப்பைத் திருத்தியமைப்பது குறித்து முடிவெடுக்கப் பயன்படும் வகையில் உரிய நேரத்தில் தகவல்கள் வழங்கப்பட்டன. இலட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட விற்றுமுதல் உள்ள வரி விதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே முதலில் தயாரிக்கப்பட்ட அரையாண்டு விவர அறிக்கைத் தொடர்புடையதாகும். 1979-80 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட அரை ஆண்டு அறிக்கை மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு வரி விதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்புடையதாகும். ஏனெனில் விவர அறிக்கைத் தயாரிக்கும் பணியை விரைவாகவும் குறித்த காலத்தில் அனுப்புவதற்கே ஆகும்.

தேர்வு முடிவுகள் குறித்த தகவல் விவரம் :

1974 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து அரசுத் தேர்வுகள் இயக்கு நகரத்தின் பள்ளி இறுதித் தேர்வுகளின் முடிவுகள், அரசுத் தகவல் தொகுப்பு

நிறுவனத்தில் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு தேர்வு முடிவுகள் இரண்டு நிலைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவையாவன; ஓர் ஆண்டில் மார்ச்சு, அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களில் நடைபெறும் தேர்வுகளில் தேர்வுகளுக்கு முன்னால் உள்ள நிலை முதல் நிலையாகும். தேர்வுகளுக்குப் பின்னர் உள்ளது இரண்டாவது நிலை ஆகும். பெயர்ப்பட்டியல், தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு ஆகியவற்றை அச்சிடுதல் தேர்வுமையம் ஒவ்வொன்றிலும் தேவைப்படும் வினாத்தாள்கள் குறித்த விவரம் ஒவ்வொருவருக்கும் தேர்வு முடிவுகளை தனித் தனியாக அறிவிக்கும் பணி, டி.எம்.ஆர்.எஸ். (T.M.R.S.) மதிப்பெண் சான்றிதழ்கள், அச்சுப்பட்டியல், முதலியவற்றை அச்சிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றைத் தவிர, மாவட்ட வாரியாக, தேர்வு பெற்றவர்களின் சதவீதம், தேர்வு பெற்றவர்களின் மாநில வாரியான சதவீதம், உயரளவு மதிப்பெண் பெற்றவர்களின் பட்டியல் ஆதி திராவிடர், பழங்குடியினரில் தேர்வு பெற்றவர்கள் சதவீதம் ஆகியவற்றை தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. புள்ளிவிவரம் சேகரிக்கும் பணிக்காக மாவட்ட அளவிலான புள்ளிவிவரமும் இக்கணக்கீட்டுப் பொறிகளில் தயாரிக்கப்படுகிறது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே திங்களில் சுமார் 2.90 இலட்சம் மாணவர்களும், 1979 ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் திங்களில் சுமார் 56,000 மாணவர்களும் பள்ளி இறுதித் தேர்வு எழுதினர். தேர்வு முடிவுகள் சரியாகத் தயாரிக்கப் பட்டன.

சாலை போக்குவரத்து குறித்த ஆய்வு, வாய்ப்புக்கள் :

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை ஏற்படுத்த எண்ணம் கொண்டுள்ள வளங் கெழு அரசு, போக்குவரத்து வசதியற்ற கிராமப்பகுதி மக்களை நகரப்பகுதி மக்களுடன் இணைந்து வாழ வகைசெய்யும் பொருட்டு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமான ஒரு பணியாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் குறித்து மதிப்பீடு செய்து பெருமளவு நகராட்சிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்யக் கருதப்பட்டுள்ளது. இவ்வாறு ஆய்வு செய்வதற்குத் தேவையான புள்ளிவிவரங்கள் கேள்வி-பதில்கள் வடிவில் நான்கு பகுதிகளாகத் தயாரிக்கப்பட்டன. முதல் இரண்டு பகுதிகளில் சாலை வசதிகள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்பணி, நெடுஞ்சாலைகள்-

கிராமப் பணிகள் துறையின் பொறியாளர்கள் மூலம் செய்யப்பட்டது. மூன்று, நான்காம் பகுதிகள் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் வழங்கும் போக்குவரத்து வசதிகள் குறித்து தகவல்களையும் கொண்டது.

மாநில அரசு நிறுவனங்கள் :

பின்வருவனவற்றை ஏற்படுத்தும் நோக்கோடு போக்குவரத்துக் கழகங்கள் புரிந்த சேகரித்தல், பயன்பாடு பகுப்பாய்வு ஆகிய பணிகளை அரசுத் தகவல் தொகுப்பு நிலையம் ஆய்வு செய்துள்ளது :

(1) புள்ளிவிவரம் சேகரித்தல் பகுப்பாய்வு LPKL வரிசைப் படுத்தல்.

(2) பயன்பாட்டுப்பகுப்பாய்வு KM/MSD வரிசைப்படுத்தல்.

(3) நாளொன்றிற்கு ஈட்டப்படும் வருவாய் குறித்த ஊர்திவாரியான பகுப்பாய்வு.

(4) பயணம் செய்தோரின் விகிதாச்சாரம் இலாப/நட்டக் கணக்கு விபரம்.

(5) வழித்தடங்கள் வாரியான போக்குவரத்துப் பெருக்கம்.

திங்கள்தோறும் சேகரிக்கப்படும் தகவல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டு வருவதால் செயற்பாட்டின் விகிதாச்சாரம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அடுத்து வரும் ஆண்டு காலாண்டுக்குரிய தகவல்களோடு ஒப்பிடப்பட்டு வருகிறது. இதேபோன்று, உற்றுழிப்பாகங்களை தொகுத்துத் தரப்படுத்தும் செய்முறைப் பணியும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்குரிய பொதுவான பணியும் நடைபெற்று வருகிறது.

பொருட்பட்டியல் கட்டுப்பாட்டு முறை :

அன்றாடம் கையாளப்படும் பொருட்கள்பற்றி கணக்கிடுவதற்காக இம்முறை வகுக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்காணும் விவரங்கள் கழகத்தால் அளிக்கப்பட்ட தகவல்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்றன :—

1. ஆய்வு-பெறுதல் அறிக்கைகள்.
2. பண்டகசாலைகள்.

3. குறிப்பேட்டுக்கைச்சாற்றுக்கள்.

4. தொகை வழங்கல் கைச்சாற்றுக்கள்.

5. வரவுக் குறிப்புக்கள்.

ஒரு திங்களில் சுமார் 16,000 பொருட்கள் கையாளப்படுகின்றன. இது வரை கீழ்க்காணும் விவர அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

விலை குறிக்கப்பட்ட பண்டகசாலைப் பேரேடு—திங்கள் வாரியான, நிறுவனம் வாரியான பேரேடு, செலவு குறித்த விவர அறிக்கை, இருப்பு நிலைமை பற்றிய அறிக்கை, இருப்பு நிலைமைபற்றிய அறிக்கையின் சுருக்கம்; விலை விவரம் குறித்த விவர அறிக்கைகள், கொள்முதல் குறித்த குறிப்பேடு.

பொருளாதாரக் கணக்கெடுப்பு :

சுரங்கப்பணி, கல்வெட்டியெடுத்தல், தயாரித்தல், கட்டுமானம், போக்குவரத்து, பணிகள் ஆகியவை உட்பட வேளாண்மை சாராத தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் அமைப்பு நடவடிக்கைகளின் தன்மை, வேலைவாய்ப்பு ஆகியவை குறித்துக் கண்டறிய பொருளாதாரக் கணக்கெடுப்பை (1977-78) இந்திய அரசு அண்மையில் நடத்தியது. முறையான அடிப்படையில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கூலிக்கு வேலைக்கமர்த்தியுள்ள நிறுவனங்கள் அனைத்தும் இக்கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்த கணக்கிடுதலின் அளவுகள் பின்வருமாறு :—

பொருளாதாரக் கணக்கெடுப்பு :

(அ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்தியுள்ள வேளாண்மை சாராத தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை	2,98,965
(ஆ) சாதாரணமாகப் பணிபுரிவோரின் எண்ணிக்கை	23,93,394
அவர்களில் கூலியாட்களின் எண்ணிக்கை	21,07,727

(இ) நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையில்
எத்தனை நிறுவனங்கள் கிராமப்பகுதி
களில் அமைந்துள்ளனவோ அவற்றின் சதவீதம் :—

(1) நிறுவனங்களின் எண்ணிக்கை 44.8

(2) பணிபுரிவோரின் எண்ணிக்கை 38.5

(3) கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 38.7

(ஈ) புதுச்சேரி மாநிலத்திலுள்ள நிறுவனங்களின்
எண்ணிக்கை 7,000

தகவல் சேகரிக்கும் இந்நிலையம், புதுச்சேரி மாநிலம் தொடர்பான தகவலையும் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில், பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன :—

(i) தகவல் சேகரிப்புப் பணி 1979 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் முடிவுற்றது.

(ii) தகவலைச் சேகரித்து வைப்பதற்குரிய காந்த நாடாக்களை (Magnetic Taps) புள்ளிவிவரத் துறையிலிருந்து 1979 ஆம் ஆண்டு மே திங்களில் வரப்பெற்றன.

(iii) பதிவு செய்யப்பட்ட கடைசிக் குறிப்புகள் 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வரப்பெற்றன.

சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தொகுக்கும் பணி முடிக்கப்பட்டு, சரி பார்த்தல் பட்டியல்கள் புள்ளிவிவரத் துறைக்கு 1979 ஆம் ஆண்டு சூன் திங்களில் அளிக்கப்பட்டன. சரி செய்யப்பட்ட அட்டைகள் 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வரப்பெற்றன. தகவல் தொகுப்பு இரண்டாம் பட்டியல் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கொடுக்கப்பட்டது. இதோடு தொடக்க நிலையம் பகுப்பாய்வு முடிவுற்றது.

சிறுசேமிப்பு.

சிறுசேமிப்புத் திட்டத்தின் இயக்குநர், நிதித் துறையில் அலுவல் முறையில் அரசு இணைச் செயலாளராகவும் இருந்தார். இவர் சிறுசேமிப்புத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பை தொடர்ந்து வகித்து வருகிறார். தலைமை

இடத்தில் இவருக்குத் துணை இயக்குநரும், பணியாளர்களும், உதவி செய்கின்றனர். சிறு சேமிப்புத் திட்டம், மாவட்டங்கள்தோறும் கொண்டுவரப் பட்டன. இதற்கென நியமிக்கப்பட்ட சிறுசேமிப்பு மாவட்ட அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மேற்பார்வையின்கீழ் சிறுசேமிப்புப் பணியைக் கவனிக்கின்றனர். தேசிய சிறுசேமிப்புத் திட்டத்தின் மாநில ஆலோசனைக் குழு தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது. இக்குழுவின் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் ஆவார். அரசு சார்பற்ற ஒருவர் துணைத் தலைவராக இருக்கிறார். அரசு அதிகாரிகளும் அரசு சார்பற்றவர்களும் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். சிறுசேமிப்புத் திட்டத்தில் ஈட்டுப் பத்திரங்களை விற்பதற்கும் சிறு சேமிப்புக் கணக்குகளைத் தொடங்குவதற்கும் அஞ்சல் அலுவலகங்களே முக்கியமான முகவரமைப்புகளாக விளங்கின.

முகவரமைப்பு.—ஒரே மாதிரியான முகவரமைப்பு முறையின் கீழ் இவ்வாண்டு புதிதாக 566 முகவர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஆண்டு முடிய மொத்தம் 2,366 முகவர்கள் இருந்தனர். இந்த ஆண்டில் முகவர்கள் திரட்டிய தொகை ரூ. 573.55 லட்சமாகும்.

வட்டார மகளிர் சிறு சேமிப்பு முகவர்கள் திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் புதிதாக 884 முகவர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாண்டு முடிய 6,080 முகவர்கள் இருந்தனர். இத்திட்டத்தின் கீழ் முகவர்கள் திரட்டிய தொகை ரூ. 216.48 லட்சமாகும்.

பணியாளர்களின் சம்பளத்திலிருந்து சேமிக்கும் திட்டம்.—பணியாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து சேமிக்கும் திட்டத்தின்கீழ் 874 புதிய தொகுதிகள் உருவாயின. ஆண்டின் முடிவில் 10,680 தொகுதிகள் இருந்தன. மொத்தம் 12,17,294 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு திரட்டிய தொகை ரூ. 1,187.48 இலட்சமாகும்.

சேமிப்புத் திட்டம்.—இவ்வாண்டில் 534 புதிய பள்ளிக்கூடங்களில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆண்டின் முடிவில் 3,784 பள்ளிக்கூடங்கள் இத்திட்டத்தில் சேர்ந்தன. இத்திட்டத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 14,21,543 பேர். இவ்வாண்டில் இத் திட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட தொகை ரூ. 23.17 லட்சமாகும்.

விளம்பரம்.—சென்னை மாநகரிலும், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், மதுரை, நீலகிரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் திரைப்படக் காட்சி சாதனங்கள் பொருத்தப்பட்ட விளம்பர வாகனங்கள் இருந்தன. சிறுசேமிப்புத் திட்டத்தைப் பற்றி மாவட்டங்கள் முழுவதும் திரைப்படங்கள் காட்டப் பட்டன. பொது மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை வளர்க்கும்பொருட்டு மாநகரிலும் எல்லா மாவட்டங்களிலும் சிறுசேமிப்புத் திட்டம் பற்றிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

ஊக்கத் தொகை அளித்தல்.—சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் அதிகத் தொகை திரட்டி சாதனை புரிந்த 12 மாவட்டங்களுக்கு 1978-79ல் ஊக்கத் தொகையாக மொத்தத்தில் ரூ. 6,25,000 அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்தொகையை அந்தந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்காக செலவிடுவர். 1978-79 ஆம் ஆண்டில் பணியாளர்களின் சம்பளத்திலிருந்து சேமிக்கும் திட்டத்தின் மூலம் அதிகமான தொகை திரட்டிய முகவர்களுக்கும் தொகுதி தலைவர்களுக்கும் மொத்தம் 284 கைப்பைகள், பரிசாக அளிக்கப் பட்டன.

வசூல்.—இவ்வாண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் திரட்டிய மொத்தத் தொகை 4,522.68 லட்சமாகும். மாநிலத்தில் ஓராண்டில் சிறுசேமிப்பின் மூலம் திரட்டப்பட்ட தொகையில் மூன்றில் இரண்டு பங்கை கடனாகக் குறைந்த வட்டிக்கு மத்திய அரசு மாநில அரசிற்கு வழங்குகின்றது.

தமிழ்நாடு பரிசுச்சீட்டு திட்டம்.

தமிழ்நாடு பரிசுச்சீட்டு திட்டம் 15-8-1968 அன்று காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் திரு. சி. என். அண்ணாத்துரை அவர்களால் துவக்கி வைக்கப் பட்டு 12-9-1975 வரை செயல்பட்டு வந்தது. 12-9-1975ல் மேற்கூறிய திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. மீண்டும் இத்திட்டம் 7—8—1976 முதல் திரும்ப ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் கைவிடப்படுவதற்கு முன்னர், 78 குலுக்கல்கள் (67 சாதாரண குலுக்கல்கள் மற்றும் 11 சிறப்பு குலுக்கல்கள்) நடத்தப்பட்டன. கடைசி குலுக்கல் 12-9-1975 அன்று நடத்தப்பட்டது.

இத்திட்டம் மீண்டும் ஆகஸ்ட் 1976-ல் துவக்கப்பட்ட பின்னர், முதல் குலுக்கல் 30—9—1976-ல் நடத்தப்பட்டது. 1976-77, 1977-78, 1978-79 (அதாவது 31—3—1979) வரை ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 20 குலுக்கல்கள் பின்வருமாறு நடத்தப்பட்டுள்ளன :—

(1) சாதாரண குலுக்கல்கள்	14
(2) சிறப்புக் குலுக்கல்கள்	6
மொத்தம்	20

1979-80 ஆம் ஆண்டில் (அதாவது 1-4-1979 முதல் 31-3-1980 வரை) எட்டு சாதாரண் குலுக்கல்களும் மூன்று சிறப்புக் குலுக்கல்களும் நடத்தப்பட்டன. பொதுமக்கள் குலுக்கல் நடைமுறையை நேரில் பார்க்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது, திட்டம் குறித்து எண்ணப்படும் தவறான எண்ணங்களை அகற்றுவது, மற்றும் திட்டத்திற்கு பொது மக்களின் நன்மதிப்பை அதிகரிப்பது ஆகியவற்றை கருத்திற் கொண்டு மேற்கூறிய மூன்று சிறப்புக் குலுக்கல்களில் இரண்டு, சென்னை நகருக்கு வெளியில் நடத்தப்பட்டன.

1979-80 ஆண்டின் வருமானம், செலவு நிகர வரவு பற்றிய விபரம் அடியிற் கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூபாய்.
(1) மொத்த வருமானம்	4,42,18,827.87
(2) மொத்த செலவு	2,77,88,019.67
(3) நிகர வருமானம்	1,64,30,808.20

8—1—1980 அன்று நடைபெற்ற குலுக்கல்களில் கிடைத்த நிகர வருமானமான ரூ. 10,52,000 தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் சேமநல நிதிக்கு மாற்றப்பட்டது. மேற்கூறிய நிதி மாற்றம் நீங்கலாக உள்ள தொகையில் 75 சதவிதத் தொகையை தமிழ்நாடு சிறப்பு நலத்திட்டங்களுக்கு செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1979 இல் உலகெங்கும் சர்வதேச குழந்தைகள் ஆண்டு கொண்டாடப் பட்டதையொட்டி தமிழ்நாடு அரசு 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக

பிரத்தியேகமாக தனிக் குலுக்கல் ஒன்றை நடத்தியது. அதன்படி மேற்கூறிய குலுக்கல் 29-12-1979 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடத்தப் பட்டது. 14 வயது மற்றும் அதற்குட்பட்ட வயதுடைய பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு ஐசி-ஏ, ஐசி-பி, ஐசி-சி, ஐசி-டி மற்றும் ஐசி-இ ஆகிய ஐந்து வரிசைகளில் பரிசுச்சீட்டுகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டது. ஒரு பரிசுச்சீட்டின் விலை ரூ. 0.50 (பைசா ஐம்பது மட்டும்) என்று நிர்ணயிக்கப்பட்டது. பரிசு பெற்ற குழந்தை உடல் ஊன முள்ளதாக இருப்பின் மேற்கூறிய பரிசுடன் கூடுதலாக ரூ. 1,000 வழங்கப் பட்டது. அதன்படி 29-12-1979 அன்று நடைபெற்ற குழந்தைகளுக்கான தனிக் குலுக்கலுக்கான மொத்த வருவாய், செலவு மற்றும் நிகர வருமானம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	ரூ. பை.
பரிசுச்சீட்டுகள் விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை.	24,10,407.00
மொத்த செலவு (பரிசுத் தொகை பட்டுவாடா, அச்சுக் கட்டணம், விளம்பரம் மற்றும் இதர செலவுகள்).	17,74,000.00
நிகர வருமானம் (தோராயமாக)	6,36,407.00

மேற்கூறிய குழந்தைகளுக்கான தனிக் குலுக்கல் மூலம் பெறப்பட்ட நிகர வருவாய் குழந்தைகள் நலத்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு பயன் படுத்தப்படும்.

பரிசுப் பத்திரங்கள் ரூ. 100 மற்றும் ரூ. 10 ஆகிய முகமதிப்புகளில் வெளி யிடப்பட்டது. வெளியிடப்பட்ட பரிசுப் பத்திரங்களின் எண்ணிக்கை, விற்பனை செய்யப்பட்ட பரிசுப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மதிப்பு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்	வெளியிடப் பட்ட பரிசுப் பத்திரங் களின் மதிப்பு.	வெளியிடப் பட்ட பரிசுப் பத்திரங் களின் வரிசைகள்.	மொத்த பரிசுப் பத்திரங்கள்		விற்பபனை பரிசு பத்திரங் களின் மொத்த மதிப்பு ரூ.
			வெளியிடப் பட்டவை.	விற்பனை யானவை.	
1.	ரூ. 100/-	ஏ	2,00,000	1,36,364	1,36,36 400
2.	ரூ. 10/-	பி	10,00,000	8,92,039	89,20,390

மேற்கூறிய பரிசுப் பத்திரங்களுக்குரிய முகமதிப்புத் தொகை, முதல் குலுக்கல் நாளிலிருந்து 2 ஆண்டுகள் கழித்து, 4 மாதத்திற்கு ஓர் முறை நடத்தப்படும். 6 குலுக்கல்களிலும் பரிசேதும் பெறப்படாத பரிசுப் பத்திரங்களுக்கு மட்டும் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையுடன் பரிசுப் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டன.

17-1-1978 முதல் 31-3-1980 வரை பரிசுப் பத்திரங்களை ஒப்படைத்தவர்களுக்கு அவற்றிற்குரிய முகமதிப்புத் தொகையினை சார்நிலை கருவூல அலுவலர்கள் அளித்தனர். இதுவரை சுமார் 77 சதவீத பரிசுப் பத்திரங்களுக்குரிய முகமதிப்புத் தொகை திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. பரிசுப் பத்திரங்களை ஒப்படைத்து அவற்றிற்குரிய முகமதிப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முகமதிப்புத் தொகையைத் திரும்பப் பெறாத மீதமுள்ள 23 சதவீத பரிசுப் பத்திரங்கள் 1-4-1980 முதல் தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநரால் அனுமதிக்கப்படுகிறது. பரிசுப்பத்திர முகமதிப்புத் தொகை பட்டுவாடா செய்யப்பட்ட விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

காலம்.	பட்டுவாடா செய்யப்பட்ட பரிசுப் பத்திர முகமதிப்புத் தொகையின் மொத்த மதிப்பு. ரூபாய்.
(1)	(2)
(1) 17-1-1977 முதல் 31-3-1978 வரை (அதாவது 1977-78 ஆம் ஆண்டில்).	87,17,790
(2) 1978-79 ஆம் ஆண்டில்	59,93,420
(3) 1979-80 ஆம் ஆண்டில்	24,09,480
31-3-1980 வரை மொத்தம்	1,71,74,690

மாநில வணிகத் திட்டங்கள்.

கீழ்க்காணும் அரசுத் துறை அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் முதலானவைகளுக்கும் அரசு வணிகத் திட்டங்களின் முதன்மைத் தணிக்கையாளர், அக தணிக்கையாளராக உள்ளார் :—

(அ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம்.

(ஆ) தமிழ்நாடு பால்வள நிறுவனம்.

(இ) வேளாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் பராமரிக்கப்படும் இரசாயன உரங்களின் கொள்முதல் மற்றும் பங்கீட்டுத் திட்டக் கணக்குகள்.

(ஈ) அனைத்து வேளாண்மை கிடங்குகளின் அரசுத் துறை சார்ந்த கணக்குகள்.

(உ) எடைகள் மற்றும் அளவுகள் நிறுவனங்களின் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் தொழிலாளர் துறையின் சார்நிலை அலுவலர்களால் பேணப்படும் கணக்குகள்.

(ஊ) தமிழகம், உதகை, தமிழ்நாடு அரசு விருந்தினர் மாளிகை, செங்கை, அடையாறு மற்றும் தமிழ்நாடு மாளிகை, புதுடெல்லி ஆகியவற்றின் கணக்குகள்.

(எ) சிங்கோனாத் துறை முழுமைக்குமான வரவு-செலவு கணக்குகள்.

(ஏ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்.

(ஐ) படச்சுருள் தொழில் நிலையம், அடையாறு.

(ஒ) தமிழ்நாடு அரசு திரைப்படத் துறைப் பிரிவு, அடையாறு.

(ஓ) சுற்றுலா போக்குவரத்து ஆலோசனைக் குழு, கலைவாணர் அரங்கம், சென்னை.

அண்ணா கலையரங்கம், வேலூர், செய்தி-தகவல் நிலையங்கள், மதுரை, தஞ்சாவூர், மாநில செய்தி-தகல் நிலையம், சென்னை, இராஜாஜி மன்றம், சென்னை, மற்றும் சிரணி அரங்கம், சென்னை.

அறிக்கையாண்டில் கிழ்க்கண்டவாறு 1,644 நிறுவனங்களில் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது :—

(அ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், கதர் பிரிவு.	628
(ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், கிராமத் தொழில்கள் பிரிவு.	184
(இ) வேளாண்மை கிடங்குகள்.	382
(ஈ) எடை அளவு நிறுவனங்கள்.	234

(உ) தமிழ்நாடு பால்வள நிறுவனம்.	66
(ஊ) சிங்கோனாத் துறை	32
(எ) இரசாயன உரங்களின் கணக்குகள்	15
(ஏ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்	1
(ஐ) இதர நிறுவனங்கள்	102
மொத்தம்	1,644

ரூபாய் 31 லட்சம் அளவுக்கு ஒழுங்கீனமான முறைகேடுகளும், கையாடல்களும் இழப்புகளும் தணிக்கையின் பொழுது கண்டுபிடிக்கப்பட்டு, அதன் விபரங்கள் சம்பந்தப்பட்ட ஆட்சி அலுவலர்களின் கவனத்திற்கு தக்க நடவடிக்கைக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அரசால் பிறப்பிக்கப்பட்ட தனி ஆணையின்படி சென்னை, அரசு பொது மருத்துவமனை, அறுவை சிகிச்சைப் பிரிவு பண்டகசாலைக்காக கருவிகள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்கிய 1970 முதல் 1977 முடிய ஆண்டுக்கான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது. இந்த சிறப்புத் தணிக்கையில் ரூபாய் 27 லட்சம் அளவுக்கு இழப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அரசுக்கு தகுந்த மேல்நடவடிக்கைக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் சென்னை மாநகராட்சியுடன் இணைந்த அனைத்து நிறுவனங்கள், சிறப்பு நிலை, தேர்வுநிலை முதல்நிலை நகராட்சிகள் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொதுப் பண்டகசாலைகள் முதலியவைகளில் இருப்பு பொருள்கள் முன்னறிவிப்பில்லாத ஆய்வுகளின் மூலம் சோதனை செய்யப்பட்டது. இருப்புப் பொருட்கள் சரிபார்த்து முடிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, சரிபார்த்த இருப்புப் பொருட்களின் தோராய மதிப்பு, இருப்பு சரிபார்த்ததின்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட பொருட் குறைவுகள் மற்றும் மிகையாக காணப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் மதிப்பீடு முதலிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

NEMARA PUBLIC LI

இருப்புப் பொருட்கள் சரி பார்த்த நிறுவனங்களின் விவரம்.	இருப்புப் பொருட்கள் சரி பார்த்த நிறுவனங்களின் எண்ணிக்கை.	சரிபார்த்த இருப்புப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை.	குறைவுகளின் மொத்த இனங்கள்.	குறைவுகளில் மதிப்பு ரூ இலட்சத்தில்.	மிகையாகக் காணப் பட்ட பொருட்களின் மொத்த இனங்கள்.	மிகையாகக் காணப் பட்ட பொருட்களின் மதிப்பு இலட்சத்தில்.
1. அரசு நிறுவனங்கள்.	275	1,305.51	16,627	2.43	1,623	0.70
2. நகராட்சிகள்.	52	1,156.71	7,507	6.77	1,216	2.63
3. சென்னை மாநகராட்சி.	725	370.00	1,964	2.54	160	0.11
மொத்தம்.	1,052	2,832.22	2,6098	11.74	2,999	3.44

மாநிலத் திட்டக் குழு.

மாநிலத் திட்டக் குழு 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மீண்டும் அமைக்கப்பட்டது. அதன் தலைவராக முதலமைச்சரும், துணைத் தலைவராக அரசுச் சார்பற்ற ஒருவரும், அரசு அலுவலர்களும், அரசுச் சார்பற்றவர்களும் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவ்வாண்டில் தொடர்ந்து அது செயல்பட்டு வருகிறது. இக்குழுவிடம் பின்வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன :—

(அ) நவீனத் தொழில் நுட்ப முறையில் திட்டத்தினை உருவாக்கி, திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்குரிய பொருளாதார அடிப்படை யலகுகளை வரையறுத்தல்.

(ஆ) நமது நாட்டினுக்கு அப்பால் அதாவது வெளிநாடுகளில் நிகழ்ந்த போதிலும், நமது நாட்டினுள் விளைவை ஏற்படுத்தக்கூடிய முக்கிய நிகழ்ச்சிகளையோட்டி, மாநிலத்திலும், நாட்டிலும் மேற்கொள்ள வேண்டிய பொருளாதார நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி கண்காணித்துக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மதிப்பிட்டு, அது பற்றிய அறிக்கையையும், அத்துடன் உரிய ஒருங்கிணைப்பு தேவைப்படும் இடங்களில் பரிவுரைகளாயும் அரசுக்கு அனுப்புதல் ;

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் தேவைகளை ஆழ்ந்துணர்ந்து அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை ஆராய்ந்து அதற்கென நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று திட்டக் குழு தலைவரின் (முதலமைச்சர்) கருத்துரை 1978-83 ஆம் ஆண்டுக்கான ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டது. இக்குழு 27 துறைகளுக்கான வரைவுத் திட்டங்களைத் தயாரித்துள்ளது. அவற்றில் சிறப்பான துறைகள் வருமாறு :

(1) மின்சாரம்.

(2) பெரும் தொழில்கள், கனிப்பொருள்கள்.

(3) கைத்தறி, கதர் கிராமத் தொழில் உள்ளிட்ட சிறு தொழில்கள்.

(4) வேளாண்மை, சிறுபாசனம்.

(5) கால்நடை வளர்ப்பு, பால்வளம்.

(6) பிற்படுத்தப்பட்டோர் அரிசனங்கள், பழங்குடி மக்கள் நலத் திட்டம்.

(7) சமூக நல்வாழ்வு.

1978-83 ஆம் ஆண்டுகளுக்கான 6-ஆம் ஐந்தாண்டு வரைவுத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இக்குழு நடப்பாண்டில், 47 பொருள்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு குறிப்புகள் தயாரித்துள்ளது. அவற்றின்மீது உறுப்பினர்களின் கருத்துரைகளையும் பெற்று அக்குறிப்புகளை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. அவ்வாறு அரசுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்புகளில் குறிப்புகள் தயாரிக்கப்பட்ட ஒரு சில பொருள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) தமிழ்நாட்டில் படித்து வேலை வாய்ப்பற்றிருப்போர் பற்றியும், அவ்வாறுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் மிகுந்துள்ள வளைகுடா நாடுகளில், வேலைவாய்ப்பளிக்கக்கூடிய துறைகளைக் கண்டறிவதுபற்றியும் தயாரிக்கப்பட்ட குறிப்பு.

(2) கடல் நீரைக் குடி நீராக மாற்றுதல், மின் சக்தி உற்பத்தி செய்தல் குறித்த ஐ.எம்.ஐ. (I.M.I.) திட்டம் (டோக்கியோ) பற்றிய மதிப்பீடு.

(3) தமிழ் நாட்டின் கைத்தறித் தொழில் குறித்த விரிவான குறிப்பு.

(4) தொழில்களில் ஏற்பட்டுள்ள நலிவு குறித்த குறிப்பு.

(5) கைத்தறி ஆடைகள் ஏற்றுமதித் தொழில் அத்தொழிலிலுள்ள பிரச்சினைகள் குறித்த குறிப்பு.

(6) எண்ணூர் ஒருங்கிணைக்கப்பட்ட மின் திட்டம் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட செயற்குறிப்பு பற்றிய சிறு குறிப்பு.

(7) தமிழ் நாட்டில் மின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி உற்பத்தியளவை அதிகரிப்பதற்கான தேவை குறித்த அடங்கல் குறிப்பு.

(8) காட்டு வளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை வேலைவாய்ப்புக்கள் அளிக்கும் பொருட்டு கிராமப் பகுதிகளில் தொடங்குதல், வன்வளத் தொழில் கழகம் நிறுவுதல் குறித்த விரிவான குறிப்பு.

(9) நிலச் சீர்திருத்த ஆணையாளர் அலுவலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்புக்கள், அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையாகக் கொண்டு, நில உச்ச வரம்புச் சட்டம் பற்றிய குறிப்பு.

உள்ளாட்சி நிதித் தணிக்கை.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் **5,675** நிறுவனங்கள் உள்ளன. இவ்வாண்டில் செய்யப்பட்ட தணிக்கைப் பணிகள் பின்வருமாறு :

நிறுவனத்தின் வகை	தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	வருவாய் (ரூபாய் கோடியில்)	செலவு (ரூபாய் கோடியில்)
நகராட்சிகள்	105	61.03	58.74
ஊராட்சி ஒன்றியங்கள்	373	128.21	123.66
பேரூராட்சிகள்	618	18.52	18.93
பல்வேறு நிறுவனங்கள்	4579	37.95	35.18
மொத்தம்	5675	245.71	236.51

தணிக்கையின் போது தெரியவந்தவை, தணிக்கை செய்ய உற்பட்டவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	ரூபாய்
1. தணிக்கையின்போது கண்டறியப்பட்ட நிதிக் கையாடல்	3.10 இலட்சம்
2. தணிக்கையில் தெரிவிக்கப்பட்ட வருவாய் இழப்பு	27.69 இலட்சம்
3. தணிக்கையில் தெரிவிக்கப்பட்ட மிகைச் செலவு,	
4. முறைகேடான செலவு முதலியவை	35.17 இலட்சம்

இழப்புப் பொறுப்புக்குப் பதிலான அறிக்கைகள் :

1,116 எண்ணிக்கையுள்ளவையும் மாநிலத்திலுள்ள பல்வேறு உள்ளாட்சி மன்றங்களின் நிதிக்கு ஏற்பட்ட ரூபாய் 43 இலட்சம் மொத்த இழப்பு குறித் தலையுமான இழப்புப் பொறுப்புக்குப் பதிலாக அறிக்கைகள் இழப்புக்குப் பொறுப்பான நிர்வாக அதிகாரிகளின்மீது அவசியமான நடவடிக்கை எடுப்ப தற்காகச் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுக்கு அனுப்பப்பட்டன. நிர்வாக அதிகாரிகளால் புரியப்பட்ட முக்கியமான நிதி முறைகேடுகள் அவற்றின் விளை வாக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்பட்ட ரூபாய் 13.70 இலட்சம் இழப்பு ஆகியவற்றை விளக்கும் இழப்பு குறித்த 177 அறிக்கைகள் உள்ளாட்சி மன்றங் களின் பணியிலிருந்து ஓய்வுபெற்ற, ஓய்வு பெறும் நிர்வாக அதிகாரிகளின்மீது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக, நகராட்சிகள் ஆய்வாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பப் பட்டன.

மறுப்புரைகளுக்குப் பதிலளித்தல் :

நீண்டகாலமாகப் பதிலளிக்கப்படாமல் உள்ள தணிக்கை மறுப்புரை களுக்குப் பதிலளிப்பதற்குச் சிறப்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 17,979 மறுப்புரைகள் தொடர்பாக உள்ளாட்சி மன்றங்களின் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு சிறப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இழப்பு பொறுப்புக்குப் பதிலான அறிக்கைகளில் அடங்கியிருந்த 2,155 மறுப்புரை களுக்கு இவ்வாண்டில் பதிலளிக்கப்பட்டன. இழப்பு குறித்த அறிக்கைகளில் சேர்க்கப்பட்டிருந்த 913 மறுப்புரைகளுக்கு பதிலளிக்கப்பட்டன.

அறக்கட்டளைகள் :

உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆய்வாளர் ஒன்றிய அறக்கட்டளைகள் 4, மாநில அறக்கட்டளைகள் 760 ஆகியவற்றின் பொருளாளராகப் பணிபுரிந்தார். இந்த அறக்கட்டளைகளின் பெயரில் உள்ள ஈட்டுப் பத்திரங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 100.46 இலட்சம் ஆகும். இந்த ஈட்டுப்பத்திரங்களுக்குக் கிடைக்கும் வட்டி இந்த அறக்கட்டளைகளின் திட்டத்திலுள்ள விதித்துறை களின்படி, அறக்கட்டளைகளின் நிர்வாகிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது.

ஓய்வூதியத் திட்டத்தை நிர்வகித்தல் :

நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் பணி புரியும் பணியாளர்களின் ஓய்வூதியத் திட்டங்கள், ஊராட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளரால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் வரும் உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 24,481 ஆகும். இவ்வாண்டு இறுதி நிலவரப்படி இந்நிதியிலிருந்த இருப்புத் தொகை ரூபாய் 880.15 இலட்சமாகும்.

அத்தியாயம் VI.

உணவுத் துறை.

உணவு பொருள் வழங்கல்

இவ்வாண்டில், பொதுமக்களுக்கு வழங்குவதற்கெனத் தேவைப்பட்ட நெல் அரிசி இருப்புகள், வணிகர்களால் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப் பட்ட இருப்பில் 20 சதவீதம் என்னும் வீதத்தில் விதிக்கப்பட்ட லெவி மூல மாகக் கொள்முதல் செய்யப்பட்டன. வணிகர்களின் லெவி முறைக் கொள் முதல் 30—5—1979 வரை செயலில் இருந்தது. நெல் சாகுபடியாளர்கள் நெல்லுக்கு நல்ல விலையைப் பெறும்பொருட்டு, மேற்கூறிய லெவியை 1979 ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசு ரத்து செய்தது. 1—4—1979 முதல் 30—6—1979 வரையிலான காலத்தில், வணிகர்களின் லெவி மூலமாக 589 டன் அரிசியும், 17,434 டன் அரிசி கிடைக்கக்கூடிய அளவு நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டன. நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயம் கிடைக்கத்தக்க விலையை உறுதிசெய்யும் பொருட்டு, நெல் சாகுபடியாளர்களிடமிருந்து சாதாரண ரக நெல்லைக் (மோட்டா ரகம், நடுத்தர ரகம்) குவிண்டால் ஒன்று 105 ரூபாய் விலையிலும், உயர்ரக நெல்லைக் குவிண்டால் ஒன்று 109 ரூபாய் விலையிலும் வாங்கும்படி, அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தைப் பணித்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 400 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, 31—3—1980 வரையில் மொத்தம் 1,15,183 மெட்ரிக் டன் நெல்லைக் கொள்முதல் செய்தது.

கொள்முதல் விலைகள் 1—4—1979 முதல் 30—9—1979 வரையிலும், 1—10—1979 முதல் 31—3—1980 வரையிலும் வழக்கில் இருந்த நெல் கொள்முதல் விலை விவரங்கள் வருமாறு:—

1-4-79 முதல் 30-9-79 வரை.	குவிண்டால் ஒன்றுக்கு விலை ரூபாயில்.	நெல் வகை.	1-10-79 முதல் 31-3-80 வரை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய்.
மிக நேர்த்தி ரகம்	97-00	மிக நேர்த்தி ரகம்	103-00
நேர்த்தி ரகம்	94-00	நேர்த்தி ரகம்	99-00
நடுத்தரம்	89-00	சாதாரண ரகம்	95-00
மோட்டா ரகம்	85-00		

நெல் சாகுபடியாளர்களிடமிருந்து நேரடியாக நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு 1—9—1979 முதல் கொடுக்கப்பட்ட விலை :—

	ரூபாய்
நேர்த்தி ரகம்	109.00
சாதாரண ரகம்	105.00

வழங்குதல்.—பொதுப் பங்கீட்டுக் கடைகள் மூலம் இம்மாநிலம் முழுவதிலும் நுகர்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் சுமார் 17,000 சில்லறை விற்பனைக் கடைகள் செயல்படுகின்றன. கிராமப் பகுதியில் சுமார் 15,000 கடைகள் உள்ளன ; எஞ்சிய 2,000 கடைகள் நகர் பகுதியில் உள்ளன. இம்மாநிலத்தில் சுமார் 106.00 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நியாய விலைக் கடைகளில், அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், லெவி சர்க்கரை ஆகியவை மட்டுமின்றி பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மிளகாய், புளி போன்ற ஏனைய இன்றியமையாப் பொருட்களும் விற்கப்படுகின்றன. 17—12—1979 முதல் சர்க்கரை லெவி கொள்முதல் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டு அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் சர்க்கரை உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் மொத்தம் 1.57 இலட்சம் டன் அரிசி உணவுப் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டது. சாதாரணமாக அரிசியின் சில்லரை விற்பனை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபாய் 1.60 ஆகும் ; உயர்ரக அரிசியின் சில்லரை விற்பனை விலை கிலோகிராம் ஒன்றுக்கு ரூபாய் 1.85 ஆகும். லெவி கோதுமை ரூபாய் 1.40-க்கு விற்கப்படுகிறது. லெவி சர்க்கரையின் சில்லரை விற்பனை விலை கிலோகிராம் ஒன்றுக்கு ரூபாய் 2.85 ஆகும்.

கிராமந்தோறும் கடையொன்று திறக்கும் திட்டம்.—கிராமந்தோறும் கடையொன்று திறக்கும் திட்டத்தின்படி, இன்றியமையாப் பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு, வருவாய்க் கிராமங்கள் தோறும் நியாய விலைக் கடையொன்று திறப்பதென அரசு கொள்கை முடிவு எடுத்தது. இதைத்தொடர்ந்து, பெரும்பாலும் எல்லா கிராமங்களிலும் நியாயவிலைக்

கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, தரும புரி, தஞ்சாவூர், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு வாணிபக் கழகம் கடைகளை நடத்துகிறது. ஏனைய மாவட்டங்களில், கூட்டுறவுச் சங்கங்கள் கடைகளை நடத்துகின்றன.

கோதுமையும் கோதுமைப் பொருட்களும்.—லெவி கோதுமை கிலோ ரூபாய் 1.40 என்னும் விலையில் உணவுப் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர் களுக்கு விற்கப்படுகிறது. அட்டைக்குக் கோதுமை வழங்குவதில் அளவுக் கட்டுப்பாடு ஏதுமில்லை. இந்த ஆண்டில், உணவுப் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு மொத்தம் 9,438 டன் கோதுமை வழங்கப்பட்டது.

கோதுமைப் பொருட்கள் தயாரிப்பதற்காக, மத்திய அரசு, உருளை மாவு ஆலைகளுக்கு ஒவ்வொரு மாதமும் கோதுமையை ஒதுக்குகிறது. அந்த ஒதுக் கீட்டு அளவினை, மத்தியச் சேமிப்புக் கிடங்கிலிருந்து பெறவேண்டும். 1979-80-ல் 7.8 லட்சம் டன் கோதுமை உருளை ஆலைகளுக்கு ஒதுக்கப் பட்டது. 4.4 லட்சம் டன் கோதுமையை உருளை ஆலைகள் வாங்கிக் கொண்டன. கோதுமை உற்பத்திப் பொருட்களின் சில்லறை விற்பனை விலைகள் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளன, அவ்விலை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மைதா—ரூபாய் 1.90.
2. ரவை—ரூபாய் 1.90.
3. மாவு (ஆட்டா)—ரூபாய் 0.85.
4. தவிடு—ரூபாய் 0.65.

அரசு, மைதாவின் சில்லறை விற்பனை விலையைப் பின்னர் திருத்தியமைத்து, 1 கிலோவின் விலையை ரூபாய் 1.95 ஆக நிர்ணயித்துள்ளது. மாவு, தவிடு ஆகியவற்றின் மீது இருந்த விலைக் கட்டுப்பாடு, 22—11—1979 முதல் நீக்கப் பட்டுள்ளது.

லெவி சர்க்கரை :

லெவி சர்க்கரை மீது இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்ட தன் விளைவாக, அட்டைகளின் மூலம் சர்க்கரை வழங்கப்பட்டு வந்த

முறையை 16—8—1978 முதல் கைவிடுமாறு மத்திய அரசு உத்தரவிட்டது. மத்திய அரசு, லெவி சர்க்கரை விற்பனையை 17—12—1979 முதல் மீண்டும் கொண்டு வந்தது. ஒரு கிலோ ரூபாய் 2.85 என்ற விலையில் 17—12—1979 முதல் 31—3—1980 வரை அட்டைகளின் பேரில் 62,000.8 டன் லெவி சர்க்கரை வழங்கப்பட்டது.

'இந்தியன் ஆயில் கம்பெனி', 'பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்', 'இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்', 'இண்டோ பர்மா பெட்ரோலியம்' ஆகிய நான்கு நிறுவனங்களின் மூலமாக மத்திய அரசு, ஒவ்வொரு மாதமும் மண்ணெண்ணெய் ஒதுக்கி வருகிறது. 1978-79-ல் மண்ணெண்ணெய் அங்காடியில் தாராளமாக விற்கப்பட்டது. மண்ணெண்ணெய் குறைவாக ஒதுக்கப்பட்டதும், அதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதும் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் தெரியவந்தது. மண்ணெண்ணெய் போதிய அளவுக்கு கிடைக்காதிருக்கின்ற இத்தருணத்தில், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தி வருகின்ற சில்லறை விற்பனை கடைகளின் வாயிலாகப் பொதுமக்களுக்கு குடும்ப அட்டைகளின் பேரில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு கிடங்கு வசதிக் கழகம், இவ்வாண்டில் அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டது. இதில் முழு நேர நிர்வாக இயக்குநர் ஒருவர் இருப்பார். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 400 இலட்சம் ஆகும். இவ்வாண்டில், மத்திய கிடங்கு வசதிக் கழகமும், தமிழ்நாடு அரசும் சமவீத அளவில் ரூபாய் 40 இலட்சம் பங்குத் தொகை வழங்கின. இதனால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 201 இலட்சமாக உயர்ந்து உள்ளது.

கிடங்கு வசதி நிலையங்கள், கிடங்குகள்—திறன் :

இவ்வாண்டில், இக்கழகம், 7 புதிய கிடங்குகளைக் திருவள்ளூர், போரூர், திண்டிவனம், கோபிச்செட்டிப்பாளையம், காரைக்குடி, தூத்துக்குடி II, பல்லடம் ஆகிய இடங்களில் அமைத்தது. இவ்வாண்டின் இறுதியில் இக்

கழகத்தின் கிடங்குவசதி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 52 ஆகும். அவினாசி, கரூர், பல்லடம், தென்காசி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 2,700 மெட்ரிக் டன் திறனுள்ள கிடங்குகள் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்ட வாடகைக் கிடங்குகள் ஆகியவற்றின் சராசரி திறன், முந்தைய ஆண்டில் 2.48 இலட்சம் டன்களுக்கு மாறாக 2.42 இலட்சம் டன்கள் ஆகும்.

வாணிபம்.—இவ்வாண்டின் தொடக்கத்தில் இக்கழகம் 2.12 இலடசம் டன்களை இருப்பில் வைத்திருந்தது. இவ்வாண்டில் 5.23 லட்சம் டன்கள் சேமித்து வைக்கப்பட்டது. 5.75 இலட்சம் டன்கள் எடுக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் 1.60 இலட்சம் டன்கள் கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. மாத சராசரி பயன்பட்டு அளவு 1.42 இலட்சம் டன்கள் என்பது ஒரே சீராக பின் பற்றப்பட்டு வந்தது. பல்வேறு கிடங்கில் பொருட்களைப் பாதுகாப்பிற்காக வைத்தவர்கள் பயன்படுத்திய அளவு குறித்த விவரங்கள் வருமாறு :—

வரிசை எண்	கிடங்கில் பொருட்கள் வைத்திருந்தவர்களின் வகை.	1979-80	1978-79
		(சதவீதம்)	
1.	மாநில அரசும் அதன் பொறுப்பிலுள்ள நிறுவனங்களும்	26	35
2.	மத்திய அரசும் அதன் நிறுவனங்களும்	22	30
3.	கூட்டுறவுத் துறை	4	6
4.	மற்றவை	28	29
		80	100

தரக்கட்டுப்பாடும் காப்பீடும் :

1.03 இலட்சம் மெட்ரிக் டன் அளவுள்ள உணவு தானியங்கள் ரூபாய் 0.93 இலட்சம் மதிப்புள்ள இசையான பொருட்களையும் புகையுண்டாக்கும்

பொருட்களையும் பயன்படுத்தி புகையூட்டித் தூய்மைப்படுத்தப்பட்டன இருப்பு காப்பீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாண்டில் ரூபாய் 23.20 கோடி மதிப்புள்ள கையிருப்பிற்கு ரூபாய் 2.79 இலட்சம் பிரிமியத் தொகை செலுத் தப்பட்டது.

ஆய்வுப் பிரிவு, தணிக்கை, ஆதாயம்.—

திடீர் என்றும் அடிக்கடியும் ஆய்வு செய்வதற்காக ஒரு ஒழுக்கக் கண் காணிப்பு ஆய்வுப் பிரிவு ஒன்று 1—4—1979 லிருந்து அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் கணக்குகளின் தணிக்கை 1—4—1979 லிருந்து உள்ளாட்சி நிதி ஆராய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு மொத்த ஆதாயம் ரூபாய் 22.35 இலட்சமாகும்.

அத்தியாயம் VII

வன மீனளத் துறை.

வனம்.

மும்முரமாகக் காடு வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் வனப் பகுதிகளில் உற்பத்தித் திறனைப் பெருமளவுக்குப் பெருக்குவதும் அதே நேரத்தில் உயிரினங்கள் வாழுவதற்கேற்ற கவின்மிகு சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும் வனவிலங்குகளைப் பாதுகாத்து அவற்றை வளர்ப்பதும் அவசியமான இடங்களிலெல்லாம் இயற்கைக் காடுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற் கொள்ளுவதுமே வன நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாகும்.

வனத்துறையின் பொறுப்பின் கீழுள்ள மொத்த வனப்பரப்பு 21,352.409 சதுர கிலோ மீட்டராகும். அவற்றில் 17,832.469 கிலோ மீட்டர், ஒதுக்கக் காடுகள், எஞ்சிய 3,519.940 கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்கள், தேசிய வனக் கொள்கையின்படி நாட்டில் சரிசமமான நிலப் பயனுக்கு 33-1/3 சதவீதம் வனப் பகுதி இருக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படிப் பார்த்தால் இம்மாநிலத்தில் 16 சதவீதம் வனப்பகுதியாக உள்ளது.

காடுபடு பொருட்களை வழங்குதல்.

வெட்டுமரங்கள்.—பொதுவாக வெட்டுமரங்கள் வனத்துறையின் செயல் திட்டங்களுக்கேற்ப வனப் பகுதிகளிலிருந்து வனத்துறையால் வெட்டப்படுகின்றன. பின்னர், அவை அரசு விற்பனை நிலையங்கள் மூலமாக ஏலத்திற்கு விற்கப்படுகின்றன. இவ்வாண்டில் வெட்டியெடுக்கப்பட்ட வெட்டு மரத்தின் அளவு 12,215.053 மெட்ரிக் டன்னாகும். அவற்றின் விவரம் வருமாறு :—

அரசுக்குச் சொந்தமான முகவாமைப்புகள் மூலமாக	11,614.220 M3
விலைக்கு வாங்குவோர் மூலமாக	600.833 M3
உரிமையாளர்கள் மூலமாக	இல்லை
மொத்தம்	12,215.053 M3

110E-2—8

இவையன்றி 21,875 கற்பூரத்தைல மரங்களும், 56 யூக்கலிப்ட்ஸ் மரங்களும், 78,322 தேக்கு மரக் கட்டைகளும் பெறப்பட்டன, இவ்வாண்டில் 5,963.870 கன மீட்டர் வெட்டுமரங்களும் 47,771 மரக்கட்டைகளும் பொது ஏலத்தின் மூலமாக விற்பனை செய்யப்பட்டன. மேலும் 2,014,034 கன மீட்டர் வெட்டு மரங்கள் பிற துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டன.

விறகு.—அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து வெட்டு மரங்கள் வெட்டியெடுக்கப்பட்டு பொது மக்களுக்கு விறகு விற்பனை செய்யப்பட்டது. அதன் விவரம் வருமாறு :—

	டன்கள்
அரசுக்குச் சொந்தமான முகவரமைப்புகள் மூலமாக	11,763.950
விறகுகளை வாங்குவோர் மூலமாக	67,951.567
மொத்தம்	79,715.517

மரக்கூழ் மரம்.

கற்பூரத் தைல மரம்.—1979-80 ல் 53,968.00 மெட்ரிக் டன் கற்பூரத் தைல மரங்கள் திருவாளர் தென்னிந்தியா விஸ்கோஸ் லிமிடெட்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது.

மிலாறுப்பட்டை.—திருவாளர் டான் இந்தியா நிறுவனத்துக்கு டன் ஒன்றுக்கு 550 ரூபாய் வீதம் மொத்தம் 14,813.000 மெட்ரிக் டன் மிலாறு பட்டைகள் விற்பனை செய்யப்பட்டன.

மிலாறுபட்டை—திருவாளர் தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்துக்கு மொத்தம் 41,188 டன் மிலாறு பட்டைகள் டன் ஒன்றுக்கு ரூபாய் 120 வீதம் வழங்கப்பட்டன.

மூங்கில் மரங்கள்.—திருவாளர்கள் சேஷசாயி காகித ஆலைக்கு டன் ஒன்றுக்கு 22 ரூபாய் வீதம் மொத்தம் 29,101.141 மெட்ரிக் டன் மூங்கில் மரங்கள் வழங்கப்பட்டன.

யூக்கலிப்ட்ஸ் தைல மரங்கள்.—தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு மொத்தம் 10,258.750 மெட்ரிக் டன் தைல மரங்கள் டன் ஒன்றுக்கு ரூபாய் 135 விதம் வழங்கப்பட்டன.

உயர்ரகத் தைல மரங்கள்.—திருவாளர் சேஷசாயி காகித ஆலைக்கு மொத்தம் 17,712,175 மெட்ரிக் டன் உயர்ரகத் தைலமரங்களை டன் ஒன்றுக்கு 80 ரூபாய் விதம் வழங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தனுக்கு மரம்.—திருநெல்வேலி வனக்கோட்டத்திலிருந்து ரூபாய் 6,166-15 பெறுமான தனுக்கு மரம் இராஜபாளையம் திருவாளர் மெட்ராஸ் சிப் போர்ட்ஸ் நிறுவனத்திற்கென ஒதுக்கப்பட்டது.

பிறகாடுபடு பொருட்கள்.—இவ்வாண்டில் 13,73,807 கி.கி. ரப்பர் விற்பனை செய்யப்பட்டது. அதன் மூலமாக 1,62,46,590.75 ரூபாய் வருமானம் கிடைத்தது.

யானைத் தந்தம்.—மொத்தம் 160.750 கி.கி. எடையுள்ள யானைத் தந்தம் ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் மூலமாக 1,50,281.05 ரூபாய் வருமானம் கிடைத்தது.

தேன்.—இவ்வாண்டில் 2,728 கி.கி. தேன் சேகரிக்கப்பட்டது.

கால்நடைகள்.—வனப் பகுதிகளில் வெட்டுமரங்களை இழுத்து வருவதற்கும் வனவிலங்கு உய்விடங்களைக் காணச் செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்லுவதற்குமென வனத்துறை யானைகளை வளர்த்து வருகின்றது. ஆண்டு இறுதி வரையில் மொத்தம் 60 யானைகள் வளர்க்கப்பட்டு வந்தன.

விறகு.—1979-80 ஆம் ஆண்டில் ரூ. 40.42 இலட்சம் செலவிடப்பட்டது. 4645 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன.

சந்தனமரத் தோட்டங்கள்.—சந்தன மரங்கள் விற்பதன் மூலமாக இத் துறைக்கு 30 சதவீதத்திற்கும் அதிகமாக வருமானம் கிடைக்கிறது. 1979-80 ஆம் ஆண்டில் 45 ஹெக்டேர் பரப்பில் இயற்கை சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியுடன் 171 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரங்களை

வளர்க்கும் பொருட்டு ரூ. 4.98 இலட்சம் செலவிடப்பட்டது. 50 ஹெக்டேர் பரப்பில் புதர்வன முறையில் சந்தன மர வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஆதாயம் தரும் மரங்கள், தேக்கு.—தேக்கு மரம் மற்றும் பிற கடின வகை மரங்களைத் தக்க இடங்களில் வளர்த்து மாநிலத்தில் ஆதாயங்களைப் பெருக்குவதே இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும். 1979-80-ல் இத்திட்டங்களின் கீழ் 116 ஹெக்டேர் பரப்பில் புதிய மரத் தோட்டங்களை வளர்ப்பதற்காக ரூ. 4.02 இலட்சம் செலவிடப்பட்டது. 1979-80-ல் 1105 ஹெக்டேர் பரப்பில் மிலாறு மரங்கள் வளர்க்கப்பட்டன. இதன் பொருட்டு ரூ. 2.84 இலட்சம் செலவிடப்பட்டது. ரூ. 17.20 இலட்சம் செலவில் வன விலங்கு உய்விடங்கள் அடைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டம்) பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன.—

	ஹெக்டேர்	(இலட்சத்தில்)
1. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள்	24	15.82
2. கன்னியாகுமரியில் இலவங்க மரத் தோட்டங்கள்	100	5.32
3. கன்னியாகுமரியில் ரப்பர் மரத் தோட்டங்கள்	400	40.75
4. மதுரையில் மரக்கூழ் மரங்கள்	508	5.82

வனவிலங்கு உய்விடங்களுக்கெனப் பின்வரும் தொகை செலவிடப் பட்டுள்ளது. —

1. முதலைப் பண்ணைகள்	0.96 இலட்சம்
2. சிங்கவால் குரங்கிற்கெனப் புகலிடம் அமைத்தல்	0.17 இலட்சம்
3. கோடிக்கரை வனவிலங்கு உய்விடத்தை மேம்படுத்தல்	1.79 இலட்சம்
4. முதுமலை வனவிலங்கு உய்விடத்தை மேம்படுத்தல்	3.09 இலட்சம்

சின்கோனா.

சின்கோனாத்துறை ஓர் இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதன் இயக்குநர் அலுவலகம் உதகமண்டலத்தில் அமைந்துள்ளது. இத்துறைக்கு, நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூரிலுள்ள ஆனைமலையிலும் மலைத் தோட்டங்கள் உள்ளன. இத்துறை அண்மையில் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்துகின்ற வகையில் பல்வகைப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக மருந்து நறுமணச் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. இதன் வாயிலாக கிராமப்புற மக்களிடையே நலிந்த பிரிவினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் துறையில் வருவாய்களைப் பெருக்கவும் இயலும்.

மலைத்தோட்டம் :

2. இந்த ஆண்டில் 200.500 எக்டேர் பரப்பளவுள்ள நிலப்பகுதியில் சின்கோனா, ஜெரேனியம், ஏனைய மரவகைகள் ஆகியவை புதிதாக நடப்பட்டன. 32 எக்டேரில் யூகலிப்ட்ஸ் கிராண்டிஸ் மரங்களும் 15,000 டாடப் என்னும் தறுக்க மரங்களும், 800 சில்வர் ஓக் மரங்களும் நடப்பட்டன. இந்த ஆண்டில் பல்வேறு பயிர்வகைகளைச் சரியாக பராமரிப்பதற்கான வழக்கமான பருவக்கால பயிர் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு கீழ்க்காணும் மலைத் தோட்டப் பயிர் வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

	பரப்பளவு	மரங்களின் எண்ணிக்கை
1. வழங்குவதற்கான கன்றுகள் (சின்கோனா)	142.00 எக்டேர்	1,29,140
2. குருத்துக்களைக் கிள்ளி விடுதல் கிளைகளைப் பதியம் போடுதல் போன்ற மரம் வளர்ப்பு பணிகள்	61.66 எக்டேர்	1,07,210

சின்கோனா அறுவடையும் உற்பத்தியும்.—இந்த ஆண்டில் சின்கோனா அரசுத் தொழிற்சாலையில் தைலம் எடுக்கும் பணிக்காக மொத்தம் 3,20,470 கி.கி. சின்கோனாப் பட்டைகள் (உலர்ந்தவை) வரப்பெற்றன. மலைத் தோட்டங்களில் இந்த ஆண்டில் மருந்து வகைத் தைலங்கள், நறுமணத் தைலப் பொருட்கள் (தூய்மைப்படுத்தப்படாதவை) மொத்தம் 10,635 கி.கி. அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டன.

நடுவட்டத்திலுள்ள மருந்து நறுமணத் தைலங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் தூய்மைப்படுத்தப்படாத தைலங்களிலிருந்து மொத்தம் 9170 கி.கி. அளவுக்கு மருந்து நறுமணத் தைலங்கள் தூய்மைப்படுத்தப் பட்டன. மேலும், இந்த ஆண்டில் 1,49,450 கற்பூர வில்லைகள், 13,460 லிட்டர் "சினிபிரஷ்" இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன.

விற்பனை.—1979-80 ஆம் ஆண்டில் ரூ. 42,54,800-00 மதிப்புள்ள சின்கோனா உற்பத்தி பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ரூ. 23,04,207.00 மதிப்புள்ள சின்கோனா உற்பத்தி பொருள்கள் நமது நாட்டிலேயே விற்கப் பட்டன. கொய்னாப் பொருள்களை நமது நாட்டிற்குள் விற்பனை செய்தல், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றை இந்திய அரசு முறைப் படுத்தியுள்ளது. அறிக்கை ஆண்டில் ரூ. 13,48,798.05 மதிப்புள்ள மருந்து நறுமணத் தைலப்பொருள்கள் விற்கப்பட்டன. மேலும் இத்துறைக்கு சொந்தமான மலைத் தோட்டங்களிடமிருந்து கிடைக்கக் கூடிய சின்னா மோமம் ஜெய்லானிகம் இலைகள், பட்டைகள், மிளகு, பைரித்ரம் மலர்கள் முதலியவை போன்ற பல்வகைப் பொருள்களின் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 14,412.21 ஆகும்.

இந்த ஆண்டில் மலைத்தோட்டங்களிலுள்ள சில்வர் ஓக் முதலிய மரங் களை விற்றது, கால்நடை மேய்ச்சல் கட்டணங்களிலிருந்து கிடைத்த வருமானம், கட்டிட வாடகை, மனை வாடகை ஆகிய இனங்களிலிருந்து கிடைத்த வருமானம் மொத்தம் ரூ. 19,98,790.49 ஆகும். இத்துறையின் வருவாய்களைப் பெருக்குவதற்கும், உள்ளூர் பகுதி மக்களுக்கும் நலிந்த பிரிவின ருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் ஐந்தாண்டு திட்டங்களின் கீழும் சின்கோனா வளர்ச்சி தொழிற்சாலைகளை நவீனப்படுத்துதல் ஆகிய 8 திட்டங்களை இத்துறை செயற்படுத்தியுள்ளது.

அரசுக் கொய்னாத் தொழிற்சாலை ஆய்வுக்கூடம்.—மலைத்தோட்டங் களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 3,25,259 கி.கி. சின்கோனா பட்டைகள் எடை போடப்பட்டு, மாதிரி எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. வரப் பெற்ற பட்டைகளின் மாதிரிகள் இடைநிலையில் உள்ள பொருள்கள், வேலை

நிறைவுபெற்ற உற்பத்திப் பொருள்கள், நடுவட்டத்திலுள்ள மருந்து நறுமணத் தைலங்கள், தொழிற்சாலையின் உற்பத்தி இரசாயன வல்லுநரிடமிருந்து வரப் பெற்ற தைல மாதிரிகள் விலைக்கு வாங்கிய இரசாயனப் பொருள்களின் மாதிரி ஆகியவை தொடர்பான வாலாயமான பகுப்பாய்வு இந்த ஆண்டில் முடிக்கப் பட்டன.

ஆய்வுக்கூடமும் ஆராய்ச்சிப் பணியும் :

மருந்து நறுமணத் தைலப் பொருள்களை தூய்மைப்படுத்தி தரம் பிரித்து, சோதனை செய்யும் பணிகளும், அரசுக் கொய்னா தொழிற்சாலையிடமிருந்து வரப்பெற்ற கொய்னா பொருள்களில் தைலங்கள் ஆகியவற்றில் பகுதி மாதிரி களைப் பகுப்பாய்வு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவைப் போல அவ்வப்போது கொய்னா உற்பத்திப் பொருள்களின் மாதிரிகள் திடீர் சோதனைகளின் போது எடுக்கப்பட்டு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இத்துறை மேல் பழனிமலைக் குன்றுகளில் பெரும் அளவில் ஜெரேனியம் பயிர் செய்துள்ளதன் மூலம் மதுரை மாவட்டத்திலும் தன் நடவடிக்கைகளை விரிவு படுத்தியுள்ளது. தொட்ட பெட்டாவில் இயங்கி வரும் ஆராய்ச்சி நிலையம் மருந்து நறுமணத் தைல தாவரங்கள் குறித்து முனைப்பான ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது. இந்நிலையத்திலுள்ள பல் வேறு வெளிநாட்டு உள்நாட்டுத் தாவரங்கள் பார்வையாளர்கள் மற்றும் அறிவியல் வல்லுநர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

பொது :

இந்த மலைத்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பிள்ளை களுக்குக் கல்வியளிப்பதற்காகப் பள்ளிக் கூடமும் சிறு குழந்தைகளைப் பேணுவதற்காகக் குழந்தைகள் காப்பகமும் கட்டித்தர வேண்டுமென மலைத் தோட்டத் தொழிலாளர் நலச்சட்டமும், விதிகளும் வகை செய்கின்றன. மலைத்தோட்டங்களிலுள்ள பள்ளிகளும், குழந்தைக் காப்பகங்களும் துறைத் தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வந்துள்ளன. குழந்தைக் காப்பகங்களில் குழந்தைகட்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு அரசுச் செலவில் ஆடைகளும் வழங்கப்பட்டன.

மீனளம் :

1979-80 ஆம் ஆண்டில் துறை தயாரித்த திட்டங்களை செயலாக்குவதில் எல்லாவகையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. இதில் இத்துறை மேற்கண்ட இறால் வளர்ப்பு, மீன் குஞ்சு பெருக்கம் ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். மேலும், தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட மீன் விற்பனை, ஆழ் கடலில் மீன் பிடித்தல் போன்ற பணிகளையும் குறிப்பிடலாம்.

சென்னை, செங்கல்பட்டு, கடலூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி, மணிமுத்தாறு, நாகர்கோயில் ஆகிய இடங்களிலிருந்து இவ்வாண்டில் படகு வாங்கிய கடன் பாக்கியாக 23,98,615.76 ரூபாய் அசலும் 11,92,796.32 ரூபாயும் வட்டியும் வசூலிக்கப்பட்டது.

சென்னை, செங்கல்பட்டு, கடலூர், இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகர் கோயில் ஆகிய இடங்களிலிருந்து இவ்வாண்டில் நைலான் மீன்பிடி வலை வாங்க கடன் பாக்கியாக 29,463.58 ரூபாய் அசலும், 8,061.06 ரூபாய் வட்டியும் வசூலிக்கப்பட்டது.

உரிமம் வழங்கியது குறித்த விவரங்கள் :

மீன் பிடித்தலுக்கென, அறிக்கையாண்டில் மொத்தம் 14,837 உரிமங்கள் வழங்கப்பட்டன. அவ்வுரிமங்களுக்குரிய கட்டணமாக 1,68,465.60 ரூபாய் வசூலிக்கப்பட்டது.

மீனவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பு :

உள்நாட்டிலுள்ள மீனளங்களை மேம்படுத்துவதில் மீனவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டும் பொருட்டும், மீன் வளர்ப்பதில் காணப்படும் புதிய நுட்பங்களை எல்லோரும் அறியுமாறு செய்யும் பொருட்டும், மீனவர்கள் மேம்பாட்டு முகவரமைப்புகள் அமைக்கப்பட்டன. மேலும், மீன் வளர்க்கும் ஏரிகளைப் புதுப்பிக்கும் பொருட்டு நீண்டகால குத்தகை வழங்கல், குறைந்த வட்டிக் கடன்கள் வழங்கல் ஆகியவற்றுக்கு வகை செய்யும் பொருட்டும், தரமான முட்டைகள், உரங்கள் வழங்கும் பொருட்டும் மீனள விரிவாக்கம், மீனளப்

பாதுகாப்பு ஆகியவற்றில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய நுட்பங்களைக் கையாளும் பொருட்டும், மீனவர்களுக்கு இவற்றில் பயிற்சி அளிக்கும் பொருட்டும் மீன்களை விற்பனை செய்யும் பொருட்டும் இம்முகவரமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இம்முகவரமைப்புகள் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற புலன் விளக்க வரிகளில் காணும் மீனளங்கள் :

இம்மீனளங்களிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 1,33,772.30 மதிப்புள்ள மொத்தம் 99,915.250 கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப்பட்டன. அவை மக்களுக்கு நியாயமான விலையில் விற்கப்பட்டன.

சத்துணவு செய்முறைத் திட்டம் :

இத் திட்டம், செங்கல்பட்டு கோட்டத்தில் காஞ்சிபுரம், சோழவரம், குன்றத்தூர் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களில் செயலாக்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் 3 ஏரிகளும், சோழவரத்தில் 7 ஏரிகளும், குன்றத்தூரில் 7 ஏரிகளும் தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றில் இத்துறை இலவசமாக 1,25,333 மீன் குஞ்சுகளை பாதுகாத்தது.

மீன் உற்பத்தி குறித்த புள்ளிவிவரம் :

கடல் மீனளங்கள், உள்நாட்டு மீனளங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் பல்வேறு மீன்பிடி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. அவற்றின் மூலம் கிடைக்கும் உற்பத்தியின் மதிப்பீடு வருமாறு :—

உள்ளாட்டு மீன் உற்பத்தி :

1979-80 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 1,60,000 டன் மீன் உள்நாட்டு மீனளத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டது.

கடல் மீன் உற்பத்தி :

தமிழ் நாட்டில் 1979-80 ஆம் ஆண்டில், 2,16,659 டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது.

கடல் மீன்படு பொருட்கள் ஏற்றுமதி.—இவ்வாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கடல் மீன்படு பொருட்களின் விவரம் வருமாறு :—

அளவு 8,294 டன்.

மதிப்பு ரூபாய் 2,983.27 இலட்சம்.

தகவலும் விளம்பரமும் :

திரைப்படக் காட்சிகள்.—தமிழ் நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு இடங்களில் மீன் வளர்ச்சி—மீன் வளர்ப்பு தொடர்பான தொழில் பற்றிய 230 படங்களை (இருநூற்று முப்பது மட்டும்) விளம்பரம்—விரிவாக்கப் பிரிவின் திரைப்படக் காட்சிப் பிரிவு காண்பித்தது.

பொருட்காட்சி :

இத்துறையில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களின் வளர்ச்சி சாதனை, பயன் ஆகியவை, பொருட்காட்சிகளின் மூலமாகப் பொதுமக்களுக்கும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் :

இம்மாநிலத்தில், மொத்தம் 190 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தைச் செயலாக்க அரசு ஆணையிட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் பயனடையும் உறுப்பினர் 50 சதவித உதவித் தொகையும், உறுப்பினரல்லாத பயனடைவோருக்கு 33 1-3 சதவித உதவித்தொகையும் வழங்கப்படுவதேயாகும். செங்கல்பட்டு மாவட்டத்தில் வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வாங்கும் பொருட்டு ரூபாய் 4,55,565.36 வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிவளூர் ஊராட்சி ஒன்றிய மீனவர்களுக்கு 500 ரூபாய் வழங்கப்பட்டது.

மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தருதல் :

இத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில், மீனவக் குடும்பங்களுக்கு இருப்பிட வசதி அளிக்கும் பொருட்டு, கடலோரமாக அமைந்துள்ள மீன் பிடிக்கும்

தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் வாழும் கிராமங்களில் மொத்தம் 582 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மரம் வளர்ப்பு விழா.

1979-80 ஆம் ஆண்டு தீவிர மரம் வளர்ப்பு திட்ட விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

அரசு ரூபாய் 4,50,000 செலவில் 27,50,000 செடிகள் நட்டு அவற்றினை பொதுமக்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு " ஆகும் செலவில் " வழங்க ஆணை பிறப்பித்தது.

மரம் நடல், பாதுகாத்தல் பொருள்பற்றிய கட்டுரை போட்டிகள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே ரூபாய் 200, ரூபாய் 100, ரூபாய் 50 பரிசாக வழங்கப்பட்டது. மேலும் 1979-80 இல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மிக அதிக சதவீதம் உயிருள்ள மரங்களைக் கொண்டு இருக்கும் சிறந்த நிறுவனத்திற்கு சுழற்கேடயம் வழங்கப்பட்டது.

அறிக்கை ஆண்டில் மரம் நடுதல் குறித்த விரிவான வகையில் ஒட்டுப் படங்கள், தகர விளம்பர தட்டிகள், பெரிய விளம்பர பலகைகள் ஆகியவற்றின் மூலமாக விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டது.

1979-80 ஆம் ஆண்டிற்கான செடிகளின் குறி நிர்ணயம் 27,50,000 நடப்பட்டவை 25,16,000 இதில் 12,19,000 செடிகள் வரை பொதுமக்கள் அரசு அலுவலகங்கள் இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் III

மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை.

பிறப்பு-இறப்பு

1886 ஆம் வருட பிறப்பு இறப்பு திருமணப் பதிவு சட்டம் (1886 ஆம் நடத்தில் மத்திய சட்டம்).

இந்தச் சட்டத்தின் கிழ் பிறப்பு இறப்புப் பதிவுகள் விருப்பத்துக்குட் டவை. இந்த சட்டம் ஜனத்தொகையில் சிறுபாகத்தினருக்கே அமூல் கிறது. அதாவது கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர்களுக்கும் இந்திய ரிசுரிமை சட்டம் நடைமுறையில் உள்ளவர்கட்கு மட்டுமே பொருந்தும். த சட்டத்தின் கிழ் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார்கள் ணைத் தாசில்தார்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் இந்திய ிஸ்தவ திருமணச் சட்டம், 1872 இன்படி திருமணப் பதிவாளர்கள், ஆகி ார் பிறப்பு இறப்புப் பதிவாளர்கள் ஆவார்கள். இந்த பதிவாளர்கள் வரும் அவர்கள் இந்த சட்டப்படி பதிவு செய்யும் பிறப்பு இறப்பு பதிவு ின் நகல்களை ஒவ்வொரு காலாண்டும் பிறப்பு இறப்பு, திருமணங்கள் லைமைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். இவ்வாண்டில் பிறப்பு ப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. இதுபோல் முந்திய ஆண்டி ் பிறப்பு இறப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

ிழ் நாடு பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1899.

இந்தச் சட்டத்தின்படி கிராமப் புறங்களில் பிறப்பு இறப்புகள் கட்டாய க பதிவு செய்யப்படவேண்டும். வெளிநாட்டவர்கள் பொறுத்த பிறப்பு ப்பு வடிப்புகள் இவ்வலுவலகத்தில் அட்டவணை செய்து பாதுகாக்கப்படு றன. கடந்த ஆண்டில் பிறப்பு இறப்பு வடிப்புகள் ஏதும் பெறப்பட லை. இவ்வாண்டில் 1 பிறப்பு வடிப்பு பெறப்பட்டுள்ளது. இறப்பு ப்பு ஏதும் இல்லை.

திருமணங்கள்.

இந்திய கிறிஸ்துவ சட்டம் 1972 :

(அ) இந்த சட்டத்தின் கீழ் திருமணம் செய்விக்க கூடியவர்கள் வரும

(1) பிரிவு 7-ன் படி திருமணப் பதிவாளர்கள்.

(2) பிரிவு 6 மற்றும் 9-ன் படி உரியம் பெற்றவர்கள்.

(3) ரோம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து சர்ச்சுகளின் பாதிரிமார்க

(4) இதர சர்ச்சுகளில் அபிஷேகம் பெற்ற பாதிரிமார்கள்.

இவ்வாண்டில் 16,785 திருமணவடிப்புகள் பெறப்பட்டன. இவற்றில் வெளிநாட்டவர்களுக்கும் 16,700 இந்திய கிறிஸ்தவர்களுக்கும் சார்ந்தவை கடந்த ஆண்டு பெறப்பட்ட 16,760 திருமண வடிப்புகளில் 70 வெளிநாட்ட களுக்கும் 16,690 இந்திய கிறிஸ்துவர்களுக்கும் சார்ந்தவை

பிறப்பு இறப்பு திருமணச் சட்டங்கள் (தனித் திருமணச் சட்டம் இ திருமணச் சட்டம் உள்பட) கீழ் இவ்வாண்டு வருவாய் ரூ. 62,682-50 (கட ஆண்டு ரூபாய் 64,140-55). இந்த ஆண்டு செலவு ரூபாய் 51,215-62 (கட ஆண்டு ரூபாய் 46,448-45).

தொற்றுநோய் தடுப்பு.

பொது :

மக்கள் நல்வாழ்வு, நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர் இத்துறை தலைவராகத் தொடர்ந்து இருந்து வருகிறார். தலைமையிடத்தில் இ இயக்குநர் ஒருவரும் ஆறு உதவி இயக்குநர்களும் இயக்குநருக்கு உ புரிந்தனர். இயக்குநர் மருந்துகள்/இயக்குநர் மருந்துகள் கட்டுப்பாட் தலைவருமாவார். இவருக்கு உதவியாக மாநில மருந்துகள் இணைக் கட் பாட்டுத் தலைவர் செயல்பட்டார். மாவட்டங்களில் மக்கள் நல்வாழ் பணிகளை மாவட்ட சுகாதார அதிகாரிகள் கவனித்து வந்தனர். இம்மாநி திலுள்ள 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், இயக்குநரின் நிருவா கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. பூவிருந்தவல்லி, பொது சுகாதார நிலை இயக்குநரின் திருவாகத்தின் கீழ்த் தொடர்ந்து செயல்பட்டது. பொது சுகாதார இயக்குநர், பிறப்பு—இறப்பு குறித்தத் தலைமைப் பதிவா மாவார்.

காலரா நோய்.—1979-80 ஆம் ஆண்டில் 1,391 பேருக்கு காலரா நோய்க் கண்டதும் இந்நோயினால் 27 பேர் இறந்தனர். இந்நோயினால் பாதிக்கப்பட்ட 894 பேரும் இறந்தவர்களில் 15 பேரும் சென்னை மாநகரத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்தது. இம்மாநிலத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் 64 சதவீதமும் இறந்தவர்களின் எண்ணிக்கையில் 55 சதவீதமும் ஆகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட 104 பேரும் இறந்த ஒருவரும் சென்னை மாநகரை அடுத்துள்ள செங்கற்பட்டைச் (வடக்கு) சேர்ந்தவர்கள் என்றும் வடஆற்காடு மாவட்டத்தில் இந்நோயினால் 121 பேர் பாதிக்கப்பட்டனர். ஐவர் இறந்தனர் என்றும் தெரிய வந்தது. நீலகிரி மாவட்டம் முழுவதும் இந்நோயினால் பாதிக்கப்படவில்லை. காலரா நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளியில் சுகாதார அதிகாரி ஒருவர் இரு செவிலியர்கள் ஏவல் செவிலிப் பணியாளர்கள் இருவர் நோயாளிகளையும் இறந்தவர்களையும் எடுத்துச்செல்லும் வண்டியுடன் சுகாதார ஆய்வாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய வலம்வரும் மருத்துவ பிரிவு ஒன்று செயல்பட்டு, வந்தது. இம்மாநிலத்தில் தொற்றுநோய்த்தடுப்பு வலம்வரு மருத்துவம் பிரிவுகள் ஏழு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் மூன்று ஆகியவை இருந்தன. இவை நோய்ப் பரவியுள்ள பகுதிகளுக்கு ஆட்களையும் பொருட்களையும் எடுத்துச் சென்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. கொள்ளை நோய்த்தடுப்பியல் பிரிவுகள் இரண்டு அதாவது மக்கள் நல்வாழ்வு நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர் அலுவலகத்தில் ஒன்றும் சென்னை மருத்துவக் கல்லூரியில் ஒன்றும் ஆக இரண்டு பிரிவுகள் தொற்று நோய்கள் குறித்து ஆய்வுகள் நடத்தியுள்ளன. 1979 நவம்பர் டிசம்பர் திங்களில் பெரும் மழையினால் ஏற்பட்டவெள்ளப் பெருக்கால் இம் மாநிலம் பாதிக்கப்பட்டது. மொத்தம் 41 இலட்சம் காலராத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. மேலும் இந்நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளாலும் அவற்றை அடுத்துள்ள பகுதிகளிலும் நோய்ப் பரவாமல் தடுக்கும் பொருட்டு நீர்வாயில்களில் குளோரின் மருந்து கலக்கப்பட்டது.

பிளேக் என்னும் தொற்றுநோய் :

இந்நோயினால் இம்மாநிலம் பாதிக்கப்படவில்லை என்பதை இங்குக் குறிப்பிடலாம். ஆயினும் பிளேக் நோய் பரவக் கூடிய பகுதிகளிலுள்ள குடி

யிருப்பு இல்லங்கள், கிடங்குகள், கால்நடை கொட்டகைகள் ஆகிய அனைத்து பகுதிகளிலும் 10 சதவீதம் BHC யுடன் கலந்த சையனோகாஸ், புகைப் போட்டு சுத்தம் செய்தல் இன்சப்லேசன் செய்தல் ஆகிய பிளேக் நோய் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நரம்பு சிலந்தி நோய்.—நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம் கன்னியா குமரி நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப் படும் பகுதி 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின் தலையாய பணி 50 சதவிதம் டி. எல். டியைக் குடி நீர் வாயில்களில் கலந்து நீரின் மூலம் இந்நோய் பரவாமல் தடுப்பதேயாகும்.

1979-80 ஆம் ஆண்டில் 17,345 கிராமங்களும் சிற்றூர்களில் ஆய்வும் மறு ஆய்வும் செய்யப்பட்டன. 7 கிராமங்களில் மட்டுமே இத்தொற்று நோய் பரவியிருந்தது என்று தெரிய வந்தது. இந்நோயினால் 23 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பது கண்டறியப்பட்டு மருத்துவம் செய்யப்பட்டது.

சருமநோய்.—சருமநோய் ஒழிப்புத்திட்டப் பிரிவு ஒன்று சேலம் மாவட்டம் ஆத்தூரில் செயல்பட்டு வந்தது. இவ்வாண்டில் 137 கிராமங்களும் சிற்றூர் களும் ஆய்வு செய்யபப்பட்டன. 13,768 பேருக்குப் பரிசோதனை செய்யப் பட்டது. 47 பேருக்கு இந்நோய் கண்டுள்ளதெனக் கண்டறியப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டது.

மலேரியா.—இந்திய அரசு மாற்றியமைத்துள்ளவாறு மலேரியா ஒழிப்புத் தேசியத்திட்டம், இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் மலேரியா காய்ச்சலைக் கண்டறி வதற்கும் மலேரியாக் காய்ச்சலைக் கண்டறியும் பொருட்டு பரிசோதனைக்காக இரத்தத்தைச் சேகரிப்பதற்கும் திங்களுக்கு இரு முறை ஒவ்வொரு வீடாகச் சென்று பார்வையிட்டனர். அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்கள் காய்ச் சலுற்றவர்களிடமிருந்து சேகரித்த இரத்தத்தைப் பரிசோதனை செய்வதற் காக, அனைத்து தொடக்கச் சுகாதார நிலையங்களும் சோதனைக்கூடத்

தொழில்நுட்பப் பணியாளர் ஒருவரைக் கொண்டுள்ளன. இந்திய அரசின் உதவியுடன் நகர்ப்பகுதி மலேரியாத்திட்டம் நகர்ப்பகுதிகளில் நிலவியுள்ள மலேரியா அபாயம் தொடர்பாக நகரங்களில் (அதாவது சென்னை மாநகர், சேலம், இராசிபுரம், இளம்பிள்ளை, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர்) செயல் படுத்தப்பட்டு வருகிறது. மேற்சொன்ன திட்டம் 1979-ம் ஆண்டில் திருச்சி ராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய நகரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

நோய்த்தடுப்பு விரிவுத்திட்டம் (பெரிய அம்மை நோய் ஒழிப்புத் தேசியதிட்டம் முன்னர் செயல்படுத்தப்பட்டது.)

5, 6 வயதுடைய ஆரம்பப்பள்ளி சிறுவர்களுக்கு குடற்புண் நோய் வாராமல் பாதுகாப்பதற்காக இந்திய அரசு இலவசமாக வழங்கிய 4,083 குப்பிகள் கொண்ட அம்மைத் தடுப்பு மருந்து நகராட்சி சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் 9.4 இலட்சம் பேருக்கு அம்மைத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

தாய்-சேய் நலப் பணிகள்.—1979-80-ம் ஆண்டில் கிராமநகரப்பகுதிகளில் தாய்-சேய் நலப் பணிகள் திறம்பட தொடர்ந்து நடைபெற்று வந்தன. 1979-80 ஆம் ஆண்டில் சுகாதாரப் பார்வையாளர்கள் பயிற்சிப் பள்ளியில் வழக்கமான பாட வகுப்புகளில் 50 பேர்களும் ஒருங்கிணைப்புப் பாட வகுப்புகளில் 75 பேர்களும் சேர்க்கப்பட்டனர்.

பள்ளி மருத்துவ ஆய்வு.—1979-80 ஆம் ஆண்டில், 83 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், 5 நகராட்சிகளிலும் நிறைவேற்றப்பட்டப் பள்ளி மருத்துவ ஆய்வுத்திட்டத்தின் கீழ் 1,43,326 சிறுவர்களுக்கு உடற்பரிசோதனை செய்யப் பட்டது.

நோய்த் தடுப்புத் திட்டம்.—1979-80 ஆம் ஆண்டில் 0-5 வயதுள்ள 3,50,685 சிறுவர்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துணை நிலையங்கள் மூல மாகச் சுகாதாரப் பார்வையாளர்கள், முத்தடுப்பு ஊசிகள் மூன்று முறை போட்டனர்.

உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.—இவ்வாண்டில், 16,970 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 2,404 உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டவை எனக் கண்டறியப்பட்டது. அபராதங்கள் மூலம் ரூ. 4.07 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

மருந்துகள் கட்டுப்பாடு.—இவ்வாண்டில் விற்பனை நிலையங்களில் 23,639 ஆய்வுகளும் தயாரிப்பு நிறுவனங்களில் 901 ஆய்வுகளும் நடத்தப்பட்டன. மொத்தம் 4,907 விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டதோடு 7,227 உரிமங்கள் புதுப்பித்து வழங்கப்பட்டன. தயாரிப்புக்குரிய 347 உரிமங்கள் வழங்கப்பட்டன. தயாரிப்புக்குரிய 234 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன. 1940 ஆம் ஆண்டு மருந்துகள் ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்கீழ் மொத்தம் 77 சட்ட நடவடிக்கைகள் எடுக்க அனுமதிக்கப்பட்டன. 2 சட்ட நடவடிக்கைகள் 1954 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ முறைப்படுத்துதல் சட்டத்தின்கீழ் மதிக்கப்பட்டன. 138 மருத்துவமனை மருந்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உள்நாட்டு மருந்துகளைத் தயாரிப்பதற்காக 95 உரிமங்கள் வழங்கப்பட்டன. $M_1 M_2$ உரிமங்கள் வழங்குவதற்காக, வருவாய்த்துறை வாரியத்தின் செயலாளருக்கு 31 பரிந்துரைகள் செய்யப்பட்டன. உள்நாட்டு மருந்துகளைத் தயாரிப்பதற்குரிய 44 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன. ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பதற்கு 30 உரிமங்கள் வழங்கப்பட்டன. ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பதற்குரிய 58 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன.

பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்கள் :

மக்கள் நல்வாழ்வு—நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர், பிறப்பு—இறப்புகள் குறித்த தலைமைப் பதிவாளராவார். ஊராட்சிகளில் கிராம மணியக்காரர், பிறப்பு—இறப்புகள் குறித்த பதிவாளராவார். நகராட்சிகளில், சுகாதார உதவியாளர்கள் பிறப்பு—இறப்புகள் குறித்த பதிவாளர்களாவர். 1979 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

1000க்கு மக்கள் தொகை பிறப்பு விதம் 20.58 ஆகும். 100க்கு மக்கள் தொகை இறப்பு விதம் 6.71 ஆகும். இது ஆண்டின் மத்தியில் எடுக்கப்பெற்ற

புள்ளி விவரமாகும். உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்குக் குழந்தைகள் இறப்பு வீதம் 39.41 ஆகும். உயிருடன் பிறந்த மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் இறப்பு வீதம் 22.00 ஆகும். பிறப்பு—இறப்பு வீதங்களின் நம்பத் தகுந்த மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்காக மாதிரி பதிவுத்திட்டம் எனப்படும் திட்டம் ஒன்று இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு-இறப்பு வீதங்கள் வருமாறு :—

1,000 மக்கள் தொகைக்குப் பிறப்பு வீதம் 28.00 ஆகும். 1,000 மக்கள் தொகைக்கு இறப்பு வீதம் 12.00 ஆகும். உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்குக் குழந்தைகள் இறப்பு வீதம் 98.00 ஆகும்.

மருத்துவம்—குடும்பநலம்.

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட இரு தொடக்க சுகாதார நிலையங்கள் உட்பட 383 தொடக்க சுகாதார நிலையங்கள் நம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குத் தொடர்பான விவரங்கள் வருமாறு :—

உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2,441
குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	1,023
அபராதம் விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	729
சிறைத்தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	101
சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	203

அபாயகரமான தொழிற்சாலைகளைத் தொடங்குவதனால் பொது மக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளையாது என்ற வகையில் இசைவுச் சான்றிதழ் வேண்டி, அபாயகரமான, ஆபத்தான தொழில்கள் தொடங்குவதற்காக உரிமங்களுக்காக, அறிக்கையாண்டில் பல்வேறு தொழிற்சாலைகளிடமிருந்து 213

விண்ணப்பங்கள் வரப்பெற்றன. அதில் 50 தொழிற்சாலைகளுக்கு இசைவு வழங்கப்பட்டது. 67 தொழிற்சாலைகளுக்கு இசைவு வழங்க மறுக்கப் பட்டது. தொழில்களுக்கான பகுதிகள் வசிக்குமிடங்களுக்கான பகுதிகள் ஏனைய இடங்களுக்கான பகுதிகளை அறிவிக்குமாறும் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து 42 செயற் குறிப்புகள் வரப்பெற்றன. அதில் 12 இனங் களுக்கு அனுமதி வழங்கப்பட்டன. 17 செயற்குறிப்புகள் மறுக்கப்பட் டுள்ளன.

மருத்துவப் பணிகள்.

சென்னை, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத் தூர் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்ட மாவட்ட தலைமையிட மருத்துவ மனையைத் தவிர இம்மாநிலத்திலுள்ள ஏனைய மருத்துவ மனை களுக்கு, மருத்துவப் பணிகள்—குடும்ப நலத்துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார். மாவட்ட மருத்துவ அதிகாரிகள், மாவட்டங்களிலுள்ள மருத்துவ மனைகளுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் சிவில் மருத்துவர் (அறுவை சிகிச்சை) பதவித் தரத்தி லுள்ள கண்காணிப்பாளர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்றன. வெளியூர்களிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள், வட்டார மருத்துவ அதிகாரிகளின் (நிர்வாகம்) நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. மகப்பேறு—மகளிர் நோய் இயல், கண் நோய் மருத்துவம், காது-மூக்கு- தொண்டை நோய் மருத்துவம், மேகநோய் மருத்துவம், முடவியல் அறுவை சிகிச்சை, மயக்கு முறை மருத்துவம், சேய்நலம், பல் மருத்துவ மனைகள், நோயாளர் அவசர ஊர்திப்பணி நோய்க் குறியியல் சோதனை கூடம், தொழு நோய், எலும்பு உருக்கு நோய் சிகிச்சைச் சிறப்புப் பிரிவு போன்ற பலவற்றில் மருத்துவ வசதிகளை விரிவாக்கும் வகையிலும் சிறப்பு மருத்துவச் சிகிச்சைப் பணிகளை நல்கும் வகையிலும் மாவட்ட, வட்ட, வட்டம் அல்லாத மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் விரிவு படுத்தப்பட்ட சிறப்பு மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் 64 மருத்துவ அதிகாரிகளுக்கு பல்வேறு தொழுநோய் மருத்துவ நிலையங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வழக்கம் போல் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குத் தொழுநோய் உள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு 1979-80 ஆம் ஆண்டில் பள்ளி செல்லும் பாலர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது.

சோதனை செய்யப்பட்ட மாணவர்கள்	17,29,721
தொழுநோய் உள்ளதாக கண்டு பிடிக்கப்பட்ட மாணவர்கள்	21,751

குழந்தைகளுக்கு டி. டி. எஸ் மாத்திரைகள் பள்ளியிலோ, அல்லது அருகி லுள்ள தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்திலோ தரப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் (அதாவது, 1979 ஏப்ரல் முதல் 1980 சனவரி வரை) தொழுநோயைக் கண்டு பிடிப்பதில் நடத்திய சாதனைகள் வருமாறு—

கணக்கெடுக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை	66,27,445
பரிசோதனை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கை	56,12,613
தொழுநோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை	23,314

காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் :

காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டம், தமிழ் நாட்டில் 1963 ஆம் ஆண்டி லிருந்து செயலிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காசநோய் நிலையம் ஒன்று எற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள், அரசு மருந்தகங்கள், தொடக்க சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் காசநோயுற்றவர்களுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. B.C.G. காசநோய் தடுப் பூசி போடும் திட்டம், காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதி யாகும். தமிழகத்தில் மொத்தம் 22 B.C.G. குழுக்கள் செயல்படுகின்றன. இக்குழுக்கள் மாவட்ட காசநோய் தடுப்பு நிலையங்களோடு இணைக்கப்பட் டுள்ளன. B.C.G. குழுக்கள் ஒவ்வொரு கிராமமாக எடுத்துக் கொண்டு அக்கிராமத்தில் வீடுவீடாகச் சென்று ஊசி போட்டுக்கொள்ளத் தகுதிவாய்ந்த 0 முதல் 20 வயது வரையுள்ளவர்களுக்கு B.C.G. தடுப்பூசி போடப்படுகிறது.

B.C.G. குழுக்கள் செயல்படுவதை மாவட்ட காசநோய் தடுப்பு அதிகாரிகளும் கண்காணிப்புக் குழுவினரும் காலமுறைப்படி B.C.G. குழுக்கள் செயல்படு வதை மேற்பார்வையிட்டு வருகின்றனர். தமிழகத்தில் காச நோய் நோய்த் தடுப்பு விளம்பரக் குழுக்கள் இரண்டு உள்ளன. இவை, கூட்டங்கள் நடத்து வதன் மூலமும் படக்காட்சிகள் மூலமும் காசநோய்த் தடுப்பு விளம்பரம் செய்கின்றன.

தமிழகத்தில் 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் காசநோய்க் கட்டுப் பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் சாதனைகள் எய்தப்பெற்றன :—

எடுக்கப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை	2,11,162
நடத்தப்பட்ட சளி (Sputum) பரிசோதனைகளின் எண்ணிக்கை	1,44,383
காசநோயிருப்பதாகக் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக் கையும் காசநோய் சிகிச்சை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும்.	52,700
அவர்களில் சளியில் காசநோய்க் கிருமிகள் கொண்டவர்கள்	12,647
பி. சி. ஜி. காசநோய்த் தடுப்பூசி போடப்பட்டவர்கள் எண்ணிக்கை.	15,45,748

அரசு மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் திறத்தல் :

1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் மருந்தகங்களையும் அரசு மருத்துவ மனைகளையும் திறப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்தது:—

1. ஏலகிரி மலை.
2. கல்ராயன் மலை.
3. அரசனூர்.
4. குணமங்கலம்.
5. கோட்டைப் பட்டினம்.
6. நீறுமலை.
7. சின்னபனூர்.

இந்த ஆண்டில் பின்வரும் இடங்களில் இரத்த சேமிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

1. திருவள்ளூர் (செங்கல்பட்டு மாவட்டம்).
2. அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்).
3. திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்).
4. அரியலூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
5. பெரியகுளம் (மதுரை மாவட்டம்).
6. சிவகங்கை (இராமநாதபுரம் மாவட்டம்).
7. மேட்டுப்பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்).
8. மதுராந்தகம் (செங்கல்பட்டு மாவட்டம்).
9. தென்காசி (மதுரை மாவட்டம்).
10. விருத்தாசலம் (தென் ஆர்க்காடு மாவட்டம்).

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசுடைமையாக்குதல் :

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வெங்கல், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளம்பட்டு, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மண்ணடி மங்கலம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாகூரிலும், விஜயபுரத்திலும் நகராட்சி மருந்தகங்கள் ஆகியவை அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன.

படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தலும், மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றுதலும்.

1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது :—

	கூடுதலாக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை
1. அரசு தலைமையிட மருத்துவமனை, தருமபுரி	22
2. அரசு தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல்	20
3. அரசு தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி	10
4. அரசு தலைமையிட மருத்துவமனை, நாகர்கோவில்	10
5. அரசு தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்	10
6. அரசு தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்	4

இந்த ஆண்டில், 5 அரசு மருந்தகங்கள், அரசு மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன. இந்த ஆண்டில் 11, வட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கூடுதலாக 174 படுக்கைகளை அமைப்பதற்கும், 9 வட்டம் அல்லாத மருத்துவ மனைகளில் 161 படுக்கைக்களை அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் 2 மருத்துவமனைகளில் காது-மூக்கு-தொண்டை நோய் சிகிச்சை மருந்தகங்களும், 5 மருத்துவமனைகள் குழந்தைகள் நோய் சிகிச்சை மருந்தகங்களும், 5 மருத்துவமனைகளில் S.T.D. மருந்தகங்களும் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் :

இத்திட்டம் 21—10—1979 முதல் பின்வரும் பகுதிகளில் செயலாக்கப் பட்டது :—

1. அரக்கோணம்
2. சங்கரி
3. தஞ்சாவூர்.

தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டத்தின் கீழ் 4 தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளும், 107 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. 107 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங் களும், தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளும் இத்திட்டத்திற் கென வாங்கப்பட்ட கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

ஓமியோபதி :

சென்னையில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி 25 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இம் மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 116 ஆகும். அரசினர் ஓமியோபதி மருந்தகங்கள் சேலம், திண்டுக்கல் ஆகிய இடங் களில் உள்ளன.

கண் சிகிச்சை முகாம் :

1979-80 ஆம் ஆண்டில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாம்கள் நடை பெற்று கண்புரை, அறுவை சிகிச்சை, பார்த்த வெளி நோயாளிகள் இதர தகவல்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முகாம்களின் எண்ணிக்கை.	கண்புரை நோய் அறுவை சிகிச்சை செய்து கொண்டோர எண்ணிக்கை.	சிறு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் எண்ணிக்கை.	கண் பரிசோதனைகளின் எண்ணிக்கை.
50	65,769	10,887	6,314

சத்துணவுத் திட்டம் :

இவ்வாண்டில், 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் பயனடைந்த, பள்ளி வயது வாராத குழந்தைகளின் எண்ணிக்கை 80,000 ஆகும். பேறுகாலத்திற்கு முன்பும், பேறு காலத்திற்குப் பின்பும் 20,000 தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கப்பட்டது. கேர் நிறுவனம் அளித்த உதவியின் மதிப்பு ரூ. 76,81,792 ஆகும்.

இத்துறையின் நிருவாகத்தின் கீழ் 429 மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவ்வாண்டில் மேற்சொன்ன நிலையங்களிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 13,713 ஆகும். இவ்வாண்டில் 39,50,701 அக நோயாளிகளும், 56,702,302 புற நோயாளிகளும் சிகிச்சைப் பெற்றனர். அறிக்கையாண்டில் 60,338 பெரும் அறுவை சிகிச்சைகளும், 236,526 சாதாரண அறுவை சிகிச்சைகளும் நடந்துள்ளன. இவ்வாண்டில் மருந்துகள் மற்றும் சாதனங்கள் குறித்து ஏற்பட்ட செலவு ரூபாய் 733.14 இலட்சம் ஆகும்.

குடும்ப நலத் திட்டம் :

குடும்ப நலத் திட்டம். மருத்துவப் பணிகள்-குடும்ப நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவருக்கு மாவட்ட குடும்ப நல அலுவலரும் மாவட்டத்திலுள்ள தாய்-சேய் நல அதிகாரிகளும் உதவி புரிகின்றனர். பேறுக்காலப் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வாராட்சி ஒன்றிய பணியாளர்கள் கவனித்து வருகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைத் திட்டத்தின் சிறந்த பயன்களை எய்தும் பொருட்டு, மக்களுக்கு விளக்கிடும் வகையில் மாவட்டங்களில் குடும்பநல முகாம்களை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஏற்படுத்தியுள்ளனர். இக்குடும்ப நலத்திட்டத்தை செயல்படுத்துவதில் கட்டாயமோ அல்லது வலுக்கட்டாயமோ எதுவும் இல்லை.

குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைத் திட்டம்.

1979—80ஆம் ஆண்டிற்குரிய இலக்குகளும் அவற்றில் எய்தப்பட்டவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இலக்கு.		எய்தியது.	
குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை.	2,82,000	ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை	30,488
		பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை	115,033
		மொத்தம்	1,45,521

கருத்தடை.

வளையம் பொருத்தப்பட்டது	85,000	29,586
வழக்கமான கருத்தடை உறை	1,01,200	71,073

கருத்தடை செய்து கொண்டவர்களுக்கு பணம் கொடுத்தல்.

கருத்தடை செய்துகொண்ட ஆண்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 75-ம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 85-ம் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 6-ம் வழங்கப்படுகிறது.

கருத்தடை மாத்திரை வழங்கும் திட்டம்.

கருத்தடை மாத்திரை வழங்கும் திட்டம் எல்லாக் கிராம, நகர்ப் புறக் குடும்ப நலத்துறை நிலையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கருத்தடை மாத்திரை வழங்கும் திட்டத்தின் இலக்கு, எய்தப்பெற்றது ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு	இலக்கு	எய்தியது.
1979-80	32,500	3,425

மருத்துவ முறையில் கருச்சிதைவு.

1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் 148 மருத்துவ முறை கருச்சிதைவு நிலையங்கள் செயல்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் மருத்துவ முறையில் மொத்தம் 32,679 பேருக்கு கருச்சிதைவு செய்யப்பட்டன. இவற்றில் மருத்துவ முறையில் கருச்சிதைவு செய்யப்பட்ட பின்னர் 25,353 பெண்கள் கருத்தடை செய்து கொண்டனர்.

தாய்-சேய் நலத்திட்டங்கள்.

1979—80ஆம் ஆண்டிற்குத் தாய்-சேய் நலத்திட்டங்களின் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

திட்டம்.	பயன்கள் (எய்தியது)
1. முத்தடுப்பு ஊசி தொடக்க நிலை	6,31,779
2. முத்தடுப்பு ஊசி பூஸ்டர்டோஸ்	1,95,884
3. D.T. பள்ளிக் குழந்தைகள்	3,21,912
4. கருத்தறித்தத் தாய்மார்களுக்கு	3,31,590
5. பின்வருபவர்களிடையே காணப்பட்ட இரத்தச் சோகைக்கு எதிராக நோய்த்தடுப்பு ஊசி—	
1. தாய்மார்கள்	5,80,100
2. குழந்தைகள்	6,10,733
6. வைட்டமின் 'A' திரவம்	15,89,367

1979—80 ஆம் ஆண்டில் மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது.

குடும்ப நலத் திட்டத்தின் பாதுகாப்பான, சாதாரண அறிவியல் முறைகளை அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி நாடகம், திரைப்படம், செய்தித்தாள், சுவரொட்டிகள், விளம்பரங்கள் நேரடித் தொடர்பு, நேரடியாக வீட்டிற்கு வீடு சென்று பொது மக்களுக்கு விரிவாக விளம்பரம், பிரச்சாரம் செய்து தெரிவிக்கப்படுகின்றன. தமிழ் நாடு முழுவதிலும் தெரிந்தெடுக்கப்பட்ட துணை நிலையங்களில் 1,025 மறுபயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 305 நாடகங்களும், 245 பண்பாட்டு நிகழ்ச்சிகளும் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டது. 1,500 திரைப்பட சிலைடுகள் சேர்க்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள திரையரங்குகளுக்கு அளிக்கப்பட்டன. "குடும்பநலச் செய்திக் கதிர்" என்ற திங்கள் இதழ் ஒன்று அச்சிட்டு, அனைத்து குடும்பநல நிலையங்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், சட்டப் பேரவை, சட்ட மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், உள்ளூர் நூலக அதிகார மன்றத்தின் கிளைகள் முதலியவற்றிற்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மனநலம் :

சென்னை மனநல காப்பகம் தமிழகத்தில் உள்ள ஒரே மனநல காப்பகம் ஆகும். கடந்த 109 ஆண்டுகளாக பணியாற்றிவரும் இக்காப்பகம் மக்களிடையே இருந்துவரும் பீதியையும், அச்சத்தையும் போக்கி மனநலம் பாதிக்கப் பட்டவர்கள் பிற வியாதிஸ்தர்களைப்போல் பெருமளவு குணமடைய வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது.

இம்மருத்துவ மனையில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உள்ளன. அவை உள்ளிருப்பு நோயாளிகள் பகுதி மற்றும் புறப்பிணியாளர் பகுதி ஆகும். உள்ளிருப்பு நோயாளிகள் பகுதியில் 1,000 பேர்களை பிணியாளர்களாக வைத்து வைத்தியம் செய்ய வாய்ப்பு உள்ளது. 1979—80-ம் ஆண்டில் 1,893 நபர் களை இக்காப்பகத்தில் சேர்த்து அவர்களை சீரியமுறையில் பாதுகாத்து வைத்தியம் செய்யப்பட்டது. 1979-ல் சேர்க்கப்பட்ட பிணியாளர்களைக் காட்டிலும் இது 6 சதவீதம் அதிகப்படியானது, தற்சமயம் ஒரு நோயாளியை 3-லிருந்து 6 வாரங்கள் வரை மருத்துவ மனையில் வைத்து பெருமளவு குணமடைய செய்து பிறகு புறப்பிணியாளர் பகுதியில் வைத்தியத்தை தொடர்ந்து கொடுக்க வழி வகை செய்யப்படுகிறது. இம்முறையினால் பெரு மளவு நோயாளிகளைச் சேர்த்து வைத்தியம் செய்ய வாய்ப்புள்ளது. இந்த ஆண்டில் 2,055 பிணியாளர்கள் குணப்படுத்தப்பட்டு வெளியே அனுப்பப் பட்டார்கள். இப்புள்ளி விவரமானது கடந்த ஆண்டைக் காட்டிலும் 17 சத விதம் அதிகப்படியானது.

மற்றொரு பகுதியான புறப்பிணியாளர் பகுதியில் எல்லா நாட்களிலும் பிணியாளர்களை கவனிக்கவும் 24 மணி நேரமும் வைத்தியத்திற்கு ஏற்பாடும் செய்து தரப்பட்டு கடந்த ஆண்டில் சுமார் 52,000 பிணியாளர்களுக்கு வைத் தியம் செய்யப்பட்டது. குழந்தைகள் இளைய தலைமுறையினர், வயோதிகர் மற்றும் வலிப்பு வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் என தனித்தனியாகப் பிரித்து இப்பிணியாளர்களை நன்கு கவனிக்க வைத்திய முறைகள் செய்து தரப்படுகிறது.

மருத்துவக் கல்வி :

மருத்துவப் பணியாளருக்கும் ஓரளவு மருத்துவப் பணியாளருக்கும் கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகள் முதல் நிலை மருத்துவமனை ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படும் மருத்துவப் பணி, ஆராய்ச்சி மேம்பாடு போன்றவை மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் ஆட்சி வரம்பில் வரும். 8 மருத்துவக் கல்லூரிகளும், ஒரு பல் மருத்துவ மனையும், கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகள் 20-ம் கலைஞர் கருணாநிதி நகரில் முதல் நிலை மருத்துவ மனை ஒன்றும் அங்குள்ள மறுவாழ்வு செயற்கை உறுப்புகள் உற்பத்தி நிலையமும், கிண்டி கிங் நிறுவனத்திலுள்ள மக்கள் நல்வாழ்வு ஆய்வுக்கூடமும் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

வரவு-செலவு.—இவ்வாண்டு இந்த இயக்குநர் அலுவலகத்தின் மொத்த செலவு ரூ. 2,808.78 இலட்சமாகும்.

சென்னை, மருத்துவக் கல்லூரியுடன் இதுவரை ஒரு சிறப்புத் துறையாக இணைக்கப்பட்டிருந்த பல் மருத்துவக் கல்லூரி 1—5—1979-ல் தனிக் கல்லூரியாகப் பிரிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது.

படுக்கைகள்.—இவ்வாண்டு, மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 14,202 ஆகும். கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனையில் நாள் தோறும் சராசரி 15,858 அகநோயாளிகளுக்கும், 1,46,29'566 புறநோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பயிற்சி.—இந்த ஆண்டில் 1,015 மாணவர்கள் மருத்துவத்தில் பட்டப்படிப்பு பயின்றனர். 18 மாணவர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதிப்பட்டப் பாட முறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல் மருத்துவப் பட்டப்படிப்பு (பி.டி.எஸ்), மருந்தாக்கியல் பட்டப்படிப்பு (பி.பார்மசி), மகப்பேறு-மகளிர் நோயியல் தகுதிப்பட்டயம் (டி.ஜி.ஓ.), டி.எல்.ஓ கண் நோயியல் தகுதிப் பட்டயம் (டி.ஓ), மருத்துவ கதிர்வீச்சியல் தகுதிப்பட்டயம் (டி.எம்.ஆர்.டி.), மருத்துவ கதிர்வீச்சி மூலம் நோய்கண்டறிதலில் தகுதிப் பட்டயம் (டி.எம்.ஆர்.டி.), மயக்க மருந்தியலில் தகுதிப்பட்டயம் (டி.ஓ), குழந்தைகள் நலவியல் தகுதிப்பட்டயம் (டி.சி.எச்.), காசநோய் மார்பு நோயியலில் தகுதிப்

பட்டயம் (டி,டி.சி.ஓ), மேக நோயியலில் தகுதிப்பட்டயம் (டி.ஓ), கண் நோயியலில் தகுதிப்பட்டயம் (டி.சி.பி.), மன நோயியலில் தகுதிப்பட்டயம் (டி.ஓ.), டி.ஐ.பி.எம். தகுதிப்பட்டயம் பொது சுகாதாரத்தில் தகுதிப்பட்டயம், முடநீக்கியலில் தகுதிப்பட்டயம் (டி.ஆர்த்தோ) ஆகியவை இந்த ஆண்டில் நடத்தப்பட்டன. மேற்சொன்ன பாடமுறைகளில் 16 மாணவர்கள் பயின்றனர். எம்.டி., எம்.எஸ., எம்.சி.எச்., டி.எம்., டி.எம்.எஸ்., பி.எச்டி., எம்.பார்ம். போன்ற 7 பட்ட மேற்படிப்பு, பெருவல்லுநர் பாடமுறைகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு இப்பாடமுறைகளில் 397 மாணவர்கள் பயின்றனர்.

மருத்துவம் சார்ந்த பாடமுறைகள் :

மருத்தாக்கியலில் தகுதிப்பட்டயம் சி.ஆர்.ஓ., டி.ஆர்.ஏ தொழில் நுட்பப் பணியாளர் நிலை 1, நிலை 2, துப்புரவு ஆய்வாளர், பி.எஸ்ஸி. (செவிலிப் பணி), பல் சீரமைப்பு மருத்துவர், பல் நலவியல் மருத்துவர், மூக்குக்கண்ணாடி பொருத்துபவர், ஆய்வுக்கூட தொழில் நுட்பவியல், முடநீக்கியல் ஆகியவை போன்ற 12 மருத்துவத் துணைப் பாடமுறைகள் 8 மருத்துவக் கல்லூரிகளிலும் கிண்டி கிங் நிறுவனத்திலும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. மருத்துவத் துணைப் பாடமுறைகளில் 661 மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

செவிலியர்களுக்கும் இயற்கை முறை மருத்துவருக்கும் பயிற்சி அளித்தல் :

செவிலியர் பயிற்சி பெறுவதற்காக 675 பேரும் இயற்கை முறை மருத்துவப் பயிற்சி பெறுவதற்காக 12 பேரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

‘கிங்’ நிலையம் கிண்டி.

கிண்டி, ‘கிங்’ நிறுவனம் இயக்குநரின் தலைமையின் கீழ், போதுமான அளவு மருத்துவ சார் நிலைப் பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், சில ஊசி மருந்துகள் தயாரித்தல், இனப்பெருக்கத் தடுப்புச் சோதனைகள், காய்ச்சல் பற்றி ஆய்வுகள் முதலிய பணிகளைச் செய்தது. ஏனைய பிரிவுகளுடன் 18 முக்கிய பிரிவுகள் துறைகள் இந்நிறுவனத்தில் உள்ளன. இந்த ஆண்டில் இந்நிறுவனத்திலுள்ள, தெரிந்தெடுக்கப்பட்ட துறைகள் ஆற்றியுள்ள பணிகள் குறித்த விவரம் வருமாறு :—

(1) உயிரியல் பொருள் கட்டுப்பாட்டுத் துறை.—5,787 மாதிரிகள் சோதனையும் பகுப்பாய்வும் செய்யப்பட்டன. அவற்றின் முடிவுகள் தெரிவிக்கப்பட்டன.

(2) குருதி சேமிப்பு வங்கி.—இந்நிறுவனத்தில் மத்திய குருதி சேமிப்பு வங்கியில் மருத்துவர்களுக்கு இரத்தம் செலுத்துதல், இதயத்தைத் துடிக்கச் செய்தல் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. இங்கு, முறையே, $63260 \times \frac{1}{2}$ க. செ. $66777 \times \frac{1}{2}$ க. செ. குருதித் தொகுப்பு நிணநீர் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

(3) முத்தடுப்பு ஊசி மருந்து பிரிவு.—9,10,000 தடுப்பு ஊசி மருந்துகள் தயாரிக்கப்பட்டன அவற்றில் 15,92,700 மருந்துகள் (Doses) வழங்கப் பட்டனி.

(4) அம்மைப்பால் ஊசி மருந்துப் பிரிவு.—5.2 இலட்சம் குழல்கள் அம்மைப்பால் தயாரிக்கப்பட்டது. இவற்றில் 1,87,393 குழல்கள் தமிழ் நாட்டிற்கும், 3,48,451 குழல்கள் ஏனைய மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டன.

(5) வெறிநாய்க்கடி ஊசி மருந்து.—மருத்துவர்களும், மாநகர மருத்துவ மனைகளுக்கும் 16,756 ml. வெறிநாய்க்கடி ஊசிமருந்து வழங்கப்பட்டது.

(6) நோய்த்தடுப்பு ஊசிமருந்துப் பிரிவு.—80,43,298 அளவுள்ள காலரா நோய்த்தடுப்பு ஊசிமருந்து தயாரிக்கப்பட்டு 80,98, 243 CC அளவுள்ள நோய் தடுப்பு ஊசிமருந்துகளை வழங்கப்பட்டன 2,28,136 CC.TA. ஊசிமருந்து தயாரிக்கப்பட்டு, 2,41,531 க.செ. அளவுள்ள T.A. ஊசிமருந்துகள் வழங்கப் பட்டன.

(7) நிணநீர்ப்பிரிவு.—இந்த ஆண்டில் 19,875 பால்வினை நோய்த் தடுப்பு நுரையீரல் தொடர்பான சோதனைகள் செய்யப்பட்டன.

(8) நிணநீர் நிரப்பும் பிரிவு.—5,45,340 அளவுகள் இசிவு நோய்த் தடுப்பு மருந்துகளும் 45,600 இசிவு நோய் எதிர்ப்பு மருந்துகளும் இந்த ஆண் டில் தயாரிக்கப்பட்டன.

(9) மருத்துவப் பிரிவு.—2,541 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டன.

(10) கிருமி வார் பொருள் பிரிவு.—1,60,34,160 CC. (Dongl-s Broth) டக்ளஸ் பிராத் (Dongl-s Agar) டக்லஸ் எகார் முதலானவை இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

இந்திய முறை மருத்துவ இயக்குநர் அலுவலகம்.

இந்திய முறை மருத்துவ அதாவது, சித்த, ஆயுர்வேத, யுனானி முறை மருத்துவம் தொடர்பாகக் கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி ஏனைய மேம்பாடு, திட்டங்களை செயல்படுத்துவதற்கு இந்திய முறை மருத்துவ இயக்குநர் அலுவலகம் பொறுப்பு வகிக்கிறது. இந்திய முறை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை உட்பட இம்மாநிலத்திலுள்ள பல்வேறு இந்திய முறை மருத்துவ நிலையங்களின் நிர்வாகமும், நிதிநிலையும் இதன் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த இயக்குநர் அலுவலகத்தின் இதன் கட்டுப்பாட்டில் மேலும் யோகாசனம், இயற்கைமுறை வைத்தியம் என்ற இரண்டும் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை, சென்னை.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை, சென்னையில் அரும்பாக்கத்தில் 14—4—1970 அன்று தொடங்கப்பட்டது. இது தற்போது 150 படுக்கைகளுடன் செயல்படுகிறது. மூன்று மருத்துவ முறைகளில் புற நோயாளிகளுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு இம்மருத்துவமனையில் தனித்தனி பிரிவுகள் உள்ளன. தோல் சம்பந்தமான வியாதிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு சித்த முறை மருத்துவத் தில் புற நோயாளிப் பிரிவில் தனித்துறை இவ்வாண்டு இம்மருத்துவ மனையில் தொடங்கப்பட்டுள்ளது.

மருந்து தயாரிக்கும் இடம்.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை யுடன் இணைந்துள்ள மருந்து தயாரிக்கும் இடம் ஆண்டுக்கு ரூ. 6-00 இலட் சத்துக்கு மேற்பட்ட சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளை தயாரிப்பதில் ஈடுபட்டு வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலும், சென்னை மாநகரி லுள்ள 4 சித்த மருந்தகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மருந்து தயாரிப்பதை இயந்திரமயமாக்கும் பொருட்டு இயந்திரங்கள் வாங்க மத்திய அரசு ரூ. 1 இலட்சம் வழங்கியுள்ளது.

அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனை, பாளையங்கோட்டை.

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனையில் 208 படுக்கைகள் உள்ளன. இங்கு சித்த முறையில் மட்டுமே சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்மருத்துவமனையில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும், முதுநிலைப் பட்டபடிப்பு மாணவர்களுக்கும் சித்த முறையில் சிகிச்சை அளிப்பது பற்றிக் கற்பிக்கப்படுகிறது.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் ஏனைய மருத்துவ மனைகளிலும் சித்த முறை மருத்துவச் சிகிச்சை பிரிவுகள்.

அரசு இவ்வாண்டில், பின்வரும் இடங்களில் 15 சித்தமுறை மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்க அனுமதி வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம்
2. அரசினர் மருத்துவமனை, ஆரணி, வட ஆர்க்காடு மாவட்டம்
3. அரசினர் மருத்துவமனை, ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்
4. அரசினர் மருத்துவமனை, முசிரி, திருச்சி மாவட்டம்
5. அரசினர் மருத்துவமனை, பெரியகுளம், மதுரை மாவட்டம்
6. அரசினர் மருத்துவமனை, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்
7. அரசினர் மருத்துவமனை, தேன்கனிக்கோட்டை, தருமபுரி மாவட்டம்
8. அரசினர் மருத்துவமனை, சின்கோனா, கோயம்புத்தூர் மாவட்டம்
9. அரசினர் மருத்துவமனை, திருமயம், புதுக்கோட்டை மாவட்டம்
10. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்
11. அரசினர் மருத்துவமனை, சிவகாசி, இராமநாதபுரம் மாவட்டம்
12. அரசினர் மருத்துவமனை, பல்லடா, நீலகிரி மாவட்டம்
13. அரசினர் மருத்துவமனை, சேத்தமங்கலம், சேலம் மாவட்டம்

அரசு மருந்தகங்கள்.

இம்மாநிலத்தில் இந்திய முறை மருத்துவத்தில் அரசினர் மருந்தகங்களும் உள்ளன. அவைபற்றிய விவரம் வருமாறு :—

சென்னை மாநகர் அரசினர் சித்த மருத்துவ முறை மருந்தகங்கள் :

அரசினர் மருத்துவ முறை மருந்தகங்கள், தலைமைச் செயலகம், சேட் பாக்கம், சைதாப்பேட்டை, திருவெல்லிக்கேணி ஆகிய நான்கு இடங்களில் உள்ளன. இவை அனைத்தும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையுடன் இணைந்துள்ளன.

மாவட்டங்கள்.

1. அரசினர் சித்த மருத்துவ முறை மருந்தகம் ;
   சோமரசம் பேட்டை, திருச்சி மாவட்டம்.
2. அரசினர் சித்த மருத்துவ முறை மருந்தகம் ;
   வாய்மேடு, தஞ்சாவூர் மாவட்டம்.
3. அரசினர் சித்த மருத்துவ முறை மருந்தகம் ;
   ஆனந்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.
4. அரசினர் சித்த மருத்துவ முறை மருந்தகம் ;
   வாலாஜ பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.
5. அரசினர் ஆயுர் வேத மருந்தகம் ;
   புதுக்கடை, கன்னியகுமரி மாவட்டம்.
6. அரசினர் ஆயுர் வேத மருந்தகம் ;
   கடலக்குடி, கன்னியகுமரி மாவட்டம்.
7. அரசினர் ஆயுர் வேத மருந்தகம் ;
   புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
8. அரசினர் ஆயுர் வேத மருந்தகம் ;
   செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

சித்தமுறை மருத்துவக் கல்வி, முதுநிலைக் கல்வி.

30-12-1972 இலிருந்து பாளையம்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் "சித்த மருத்துவம்" சித்த குணப் பாடம் என்ற இரு பிரிவுகளில் மூன்றாண்டு முதுநிலை பட்டப்படிப்பு நடத்தப் பட்டு வருகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டவட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1979-80 இல் சித்த மருத்துவத்தில் 4 பேரும் சித்த குணபாடத்தில் ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதற்கென 1980-81 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 0.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சித்த, ஆயுர்வேத, யுனானி முறையில் மருந்து தயாரிப்பதில் பட்டப்படிப்பு.

1974-75 இல் மூன்று மருத்துவ முறையில், அதாவது ஆயுர்வேத, சித்த, யுனானி முறையில் இரண்டாண்டு பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது.

அறிக்கையாண்டில், மேற்சொன்ன வகுப்புகளில் 25 மாணவர்கள், அதாவது சித்த மருத்துவ முறையில் 18 மாணவர்களும் ஆயுர்வேத முறையில் 2 மாணவர் களும் யுனானி முறையில் 5 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில், ஆண்டு தேர்வில் 17 மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

இந்திய முறை மருத்துவர்களைப் பதிவு செய்தல்.

31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி சென்னை ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவக் கழகத்தில் 89 மருத்துவர்களும் சென்னை, இந்தியமுறை மருத்துவ மையக்கழகத்தில் 24,169 மருத்துவவர்களும் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

இவர்களில் இவ்வாண்டில் பதிவு செய்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

A. சிறப்பு	36
B. வகை	3
B1. வகை	13
B2. வகை	1
இந்திய முறை மருத்துவர் பி.ஐ.எம்.(B.I.M.)	40 மாணவர்கள்
பி.யு.எம்.எஸ் (B.U.M.S.)	1
பி.ஏ.எம் B.A.M.	1
பி.எஸ்.ஏ.எம் (B.S.A.M.)	1

இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 113.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் திட்டம், திட்டம் சாராதவை, கட்டிடத் திட்டங் களும் அடங்கும். மருத்துவ மனைகள், கல்லூரித் தலைவர்கள், மாவட்ட மருத்துவ அதிகாரிகள்/தலைமை மருத்துவ அதிகாரிகள் (சித்த முறை மருத்துவ பிரிவு) தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவ மனைகளை நிர்வகித்தும், தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்கியும் இந்திய முறை மருத்துவத்தை நன்கு மேம்படுத்த தங்களாலான உதவியை அளித்தும் வருகின்றனர்.

சுற்றுப்புற சுகாதாரம்.

தொழிற்சாலை முதலியவற்றினின்று வெளிவரும் திட, திரவ வாயுக் கழிவுப் பொருட்களினால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் மாசு போன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து ஆலோசனைக் கூறும் ஓர் அமைப்பாக சூழல் நலவியல் துறை செயல்படுகிறது. இத்துறை பொது மக்களிடமிருந்தும், பிற துறைகளிடமிருந்தும் பெறப்படும் மாசுறுதல் பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவை தீர்க்க வழிவகைகள் வகுக்கப்படுகிறது. இவ்வருடத்தில் பதினைந்து பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தொழிற்சாலைகளில் கழிவுப் பொருட்கள் அகற்றும் முறை குறித்து 24 தொழிற்சாலைகள் இவ்வாண்டு பார்வையிடப்பட்டன. சென்னை பெருநகர் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் புதிய தொழிற்சாலைகள் சூழ்நிலைப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்காது என்று சூழல் நல துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டுமென்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் விதித்துள்ளது. இந்த ஆண்டு நான்கு புதிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எரி சாராய தொழிற்சாலைகளும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் சுற்றுப்புற சூழ்நிலைக்கு அதிகமாக மாசு ஏற்படுத்துகிறது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களைச் சுத்திகரிக்கும் முறை பற்றிய அறிக்கை தோல் பதனிடும் தொழிலதிபர்களின் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ளபடி கழிவுப் பொருட்களை சுத்திகரிக்கும் முறைகளை ராணிப்பேட்டையிலுள்ள ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை மேற்கொண்டுள்ளது.

பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்போது, சூழ்நிலைப் பாதுகாப்புக்கு பாதகம் ஏற்படாத வகையில் கண்காணிக்க தமிழ்நாடு சூழ்நிலைக் காப்புக் கழகம் 1976-ல் நிறுவப்பட்டது. சூழ்நிலைப் பாதுகாப்பு பிரச்சினைகளில் பல்வேறு துறைகளையும் இணைக்கும் அமைப்பாகவும் இது செயல்படுகிறது. இப்பணியில் கழகத்திற்கு உதவ நீர் வளம் பற்றிய குழு, வீடு நகராமைப்பு, போக்குவரத்துக் குழு, சுகாதார, விளம்பரக் குழு, தொழிற் குழு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் குழு ஆகிய ஐந்து குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் இவ்வாண்டுக் கூட்டம் மேட்டூரில் 2 21 மெகவாட் அளவு நீர்மின் நிலையம் அமைப்பதால் சூழ்நிலைக்கு ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து இத்திட்டத்திற்கு அனுமதியளித்தது.

அத்தியாயம் IX

உள் துறை.

சிவில் நீதிமன்றம்.

பொது :

உயர்நீதி மன்றம்.—உயர்நீதி மன்றத்தில் 31-3-1980 ஆம் நாள் தலைமை நீதிபதி கூடுதல் நீதிபதிகள் நால்வர் உட்பட 21 நிரந்தர நீதிபதிகள் இருந்தனர். 3 நீதிபதிகளின் பதவிகள் காலியாக இருந்தன.

நீதிமன்றம்.—இந்த ஆண்டில் பின்வரும் சார்நிலை நீதிமன்றங்கள் செயல் பட்டன :—

(அ) நிரந்தர மாவட்ட நீதிபதிகள்	28
தற்காலிக மாவட்ட நீதிபதிகள்	5
(ஆ) சார்நிலை நீதிபதிகள்—நிரந்தரமானவர்கள்	70
தற்காலிகமானவர்கள்	12
(இ) மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்—	
நிரந்தரமானவை	115
தற்காலிகமானவை	7

வழக்குகள்—உயர்நீதிமன்றம் :

உயர்நீதி மன்றத்தில் இந்த ஆண்டு தொடரப்பட்ட மேல் முறையீடுகள், மனுக்கள், வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 41,163. தீர்ப்பு அளிக்கப் பட்டவை 39,500 ஆகும். 31-3-1980 அன்றுள்ளபடி முடிவுறாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 48,724 ஆகும்.

முக்கியமான வழக்குகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன :—

	1979-80 ல் தொடரப்பட்ட வழக்குகள்.	இவ்வாண்டு தீர்ப்பளிக்கப் பட்டவை.	31-3-80 அன்றுள்ளவாறு முடிவுறாமல் உள்ளவை.
(1) ரிட் மேல் முறை யீடுகள்.	548	627	845
2) இரண்டாவது மேல் முறையீடுகள்.	1823	2603	4420
(3) வரி விதிப்பு வழக்குகள்	1282	921	3821
(4) வரி மதிப்பு வழக்கு குறித்த மனுக்கள்.	368	331	384
(5) ரிட் மனுக்கள்	7158	6171	9007
(6) உச்ச நீதிமன்ற மனுக்கள்.	152	198	231
(7) தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள்	101	14	964

சார்நிலை நீதிமன்றங்கள்—கீழ்நிலை நீதிமன்றங்கள் :

(அ) மூல வழக்குகள்.—1979-80 ஆம் ஆண்டில் 1,18,235 மூல வழக்குகள் தொடரப்பட்டன. 84,351 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன. மொத்தம் 76,403 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டியிருக்கிறது.

(ஆ) சிறு வழக்குகள்.—1979-80 ஆம் ஆண்டில் 28,961 சிறு வழக்குகள் தொடரப்பட்டன. 1,882 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன. மொத்தம் 8,257 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டியிருக்கிறது.

மேல்நிலை நீதிமன்றங்கள் :

(அ) மூல வழக்குகள்.—1979-80 ஆம் ஆண்டில் 24,991 மூல வழக்குகள் தொடரப்பட்டன. 21,035 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன. மொத்தம் 26,988 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டியிருக்கிறது.

(ஆ) சிறு வழக்குகள்.—1979-80 ஆம் ஆண்டில் 2,856 சிறு வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றின் 2,980 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளன. மொத்தம் 1,734 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டியிருக்கிறது.

மேல் முறையீடுகள்.—உரிமை வழக்குப் பல்வகை மேல் முறையீடுகள், வாடகை வழக்குகள் நடுவர் மன்ற மேல் முறையீடுகள் உட்பட மாவட்ட சார்நிலை நீதி மன்றங்களில் தொடரப்பட்ட மேல்முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை 10,910 ஆகும். தீர்ப்பு வழங்கப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 11,257. இந்த ஆண்டு இறுதியில் தீர்ப்பு வழங்கப்படாமலிருந்த மேல்முறையீடுகளின் எண்ணிக்கை 10,998 ஆகும்.

சார்நிலை நீதிமன்றங்களில் 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் தொடரப்பட்ட வனைய வகை வழக்குகளின் விவரங்களையும், தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கு களின் விவரங்களையும் தீர்ப்பு வழங்கப்படாமலுள்ள வழக்குகளின் விவரங் களையும் பின்வரும் விவர அட்டவணை காட்டும் :—

	தொடரப் பட்டவை.	தீர்ப்பு வழங்கப் பட்டவை.	தீர்ப்பு வழங்கப் படாதவை.
(i) நிறைவேற்றல் மனுக்கள் மாவட்ட மேல் நிலை நீதி மன்றங்கள்	10,623	8,740	7,713
கீழ் நிலை நீதி மன்றங்கள்	57,208	42,837	18216
(ii) மூல மனுக்கள் மேல் நிலை நீதி மன்றங்கள்	6,599	5,877	4,919
கீழ் நிலை நீதிமன்றங்கள்	1,969	1,900	973
உரிமை வழக்கு வகை மாவட்ட மேல் நிலை நீதி மன்றங்கள்	1,42,318	1,39,626	31,664
கீழ் நிலை நிதி மன்றங்கள்	2,96,081	2,82,985	6,184

	தொடரப் பட்டவை.	தீர்ப்பு வழங்கப் பட்டவை.	தீர்ப்பு வழங்கப் படாதவை.
நொடிப்பு நிலை மனுக்கள் மாவட்ட மேல் நிலை நீதி மன்றங்கள்	638	524	681
கீழ் நிலை நீதி மன்றங்கள்	83	53	53
நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட வழக்குகள் மாவட்ட மேல் நிலை நீதி மன்றங்கள்	11	29	32
வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு குறித்த மனுக்கள் கீழ் நிலை நீதிமன்றங்கள்	5,259	5,142	5,370

சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—1979-80 ஆம் ஆண்டில் சென்னை, சிறு வழக்கு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 28,050. திர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 27,971. அவ்வாண்டு இறுதியில் திர்ப்பு வழங்கப்படாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 11,356 ஆகும்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள் சென்னையிலுள்ள தொழில் தகராறுகள் குறித்த நடுவர் மன்றம்.—1979-80 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட தொழில் தகராறுகள் மனுக்களின் மொத்த எண்ணிக்கை 3,215 திர்ப்பளிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 2,398. தீர்ப்பளிக்கப்படாதவற்றின் எண்ணிக்கை 2,630 ஆகும்.

பல்வகை :

(அ) நிறைவேற்றல் மனுக்கள்.—1979-80 ஆம் ஆண்டில் நிறைவேற்றல் மனுக்களிலிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 3,44,64,467.55 ஆகும்.

(ஆ) கடனாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள்.—1979-80 ஆம் ஆண்டில் கடனாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 130.

(இ) வழக்குரைஞர்கள்.—1979-80 ஆம் ஆண்டில் முதல் நிலை வழக்கு நடத்துனர்கள் 52 பேருக்கும் இரண்டாம் நிலை வழக்கு நடத்துனா 4 பேருக்கும் பட்டயங்கள் (Sanads) புதுப்பிக்கப்பட்டன.

(ஈ) இவ்வாண்டு வரவுகள், செலவுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன :—

வரவுகள் :—

(1) நீதி நிருவாகம்	ரூ. 1,80,35,726.37
(2) முத்திரைத்தாள்கள்—நீதித்துறை	ரூ. 5,30,46,000.00

செலவு :

நீதி நிருவாகம்	ரூ. 6,62,70,979.21

குற்றவியல் நீதிமன்றம்.

உயர் நீதிமன்றமே தொடர்ந்து இத்துறைக்குத் தலைமை வகிக்கிறது. மாநிலத்தில் 16 செஷன்ஸ் கோட்டங்கள் இருந்தன. மாவட்ட நீதிபதியே சம்பந்தப்பட்ட செஷன்ஸ் கோட்டத்தின் செஷன்ஸ் நீதிபதியாக இருந்தார். மாநிலத்தில் 28 செஷன்ஸ் நீதிமன்றங்கள் 60 உதவி கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றங்கள், 14 தலைமை நீதித் துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், 22 உட்கோட்ட நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், 24 நீதித் துறை முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றங்கள், 135 நீதித் துறை இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றங்கள் இருந்தன. செஷன்ஸ் வழக்குகள் இவ்வாண்டில் 1,371 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன 1,311 வழக்குகள் விசாரித்து முடிவு செய்யப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் விசாரணை முடிக்கப்படாமல் இருந்த வழக்குகள் 647 ஆகும்.

துணை நீதிமன்றங்களில் உள்ள குற்ற வழக்குகள் :

முந்தைய ஆண்டில் 9,11,914 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் இவ்வாண்டு மொத்தம் 7,17,299 வழக்குகளே தாக்கல் செய்யப்பட்டன. இவ்வாண்டில் விசாரணை செய்து முடிவு செய்யப்பட்ட வழக்குகள் 7,49,679 ஆகும். ஆண்டின் முடிவில் விசாரணை செய்து முடிவு செய்யப்படாமல் நிலுவையாக இருந்த வழக்குகள் 1,08,974 ஆகும்.

கடும் குற்ற வழக்குகள் :

கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 5,270. இவ்வாண்டில தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 5,792 ஆகும். விசாரணை செய்து முடிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,003. இவ்வாண்டின் முடிவில் 2,773 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

வன வழக்குகள்-மதுவிலக்குக் குற்ற வழக்குகள் :

கடந்த ஆண்டில் 4,712 வன வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்க, இவ்வாண்டில் 5,049 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த ஆண்டு 3,23,914 மதுவிலக்குக் குற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்க இவ் வாண்டில் 1,21,757 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வாண்டில் இ.பி.கோ. சட்டத்தின்கீழ் 2,13,732 பேர் குற்றம் சாட்டப்பட்டனர். தனிச் சட்டங்கள் உள்ளூர் சட்டங்களின்கீழ் இவ்வாண்டில் 17,088 பேர் குற்றம் சாட்டப்பட்டனர்.

மதுவிலக்கு—ஆயத்தீர்வை.

1948 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாளிலிருந்து மதுவிலக்கு தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் இருந்தது. 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாள் மதுவிலக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டு 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மீண்டும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1-9-1974 ஆம் நாளிலிருந்து தொடர்ந்து மதுவிலக்குச் செயலில் இருந்து வருகிறது.

மதுவிலக்கு—ஆயத்தீர்வை ஆணையாளர் (இவர் வருவாய் வாரியத்தின் உறுப்பினராவார்) இத்துறையின் தலைவராவார். ஆயத்தீர்வைப் பணி தொடர் பாக, ஆயத்தீர்வை துணை ஆணையாளர் இருவர் இவருக்கு உதவி புரிந்தனர். காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காவல் துறையால் (செயல் படுத்துதல்) மதுவிலக்கு விதிகள் செயல்படுத்தப்பட்டன. நிறுத்திவைத்தல், தடுக்கல் உட்பட செயற்படுத்துவது தொடர்பான முறையான பணி வழக்கமான காவல் துறை அமைப்பிடம் அதாவது மாவட்டங்களிலுள்ள காவல் துறை சூப்பிரண்டிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்னையில் மதுவிலக்கு துப்புத் துலக்கும் கழகம் ஒன்று, காவல் துறைத் துணைத் தலைவரின் (செயல்படுத் துதல்) தலைமையில் நடத்தப்பட்டு வந்தது.

பின்வரும் சட்டங்களின் நிர்வாகத்தை இத்துறை கவனிக்கிறது :—

(1) தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம்.

(2) 1955 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள், ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள் (ஆயத்தீர்வைகள்) சட்டம்.

(3) 1930 ஆம் ஆண்டு அபாயம் விளைவிக்கக்கூடிய மருந்துப் பொருள்கள் சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தயாரிப்புப் பொருள்கள் (மாநிலங்களுக்கிடையே வர்த்தகம், வாணிபம்) கட்டுப்பாட்டுச் சட்டம்.

(5) 1878 ஆம் ஆண்டு அபினிச் சட்டமும் இவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளும், உரிமங்கள், அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் போன்ற முறைப்படுத்தும் அலுவல்களை மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையும் தீர்வைகள் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிக்கும் பணியை வருவாய்த் துறையும் கவனித்து வந்தன.

உரிமங்கள்.—1956 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள் (ஆயத் தீர்வை) விதிகளின்கீழ் L1 படிவத்தில் 11 உரிமங்களும், தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் விதிகளின்கீழ் M1 படிவத்தில் 65 உரிமங்களும் இவ்வாண்டு செயலில் இருந்தன.

நடப்பாண்டில், FL1 உரிமங்கள் 22, FL2/2A உரிமங்கள் 25, FL3/3A உரிமங்கள் 29, FL 4 உரிமம் 1, FL-A உரிமங்கள் 32, FL5 உரிமங்கள் 2, FL6 உரிமம் 1 ஆகியவை இருந்தன.

வடிசாலைகள் :

இம்மாநிலத்தில் சாராவி, நியூட்ரல் சாராவி ஆகியவை தயாரிப்பதற்காக எட்டு வடிசாலைகள் இருந்தன. இவற்றின் உற்பத்தி 678 இலட்சம் லிட்டர் ஆகும். ஆனாலும் இவை 414.70 இலட்சம் லிட்டர் சாராவியை இவ்வாண்டில் உற்பத்தி செய்தன.

ஆயத்தீர்வை வருவாய் :

இவ்வாண்டு வரவு ரூபாய் 517.28 இலட்சமாகும். கடந்த ஆண்டு ஆயத்தீர்வை வருவாய் ரூபாய் 332.82 இலட்சமாகும்.

குற்றங்கள் :

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் மொத்தம் 2,29,180. குறிப்பிடத்தக்க குற்றங்கள் குறித்த விவரம் வருமாறு :—

	வழக்குகள்
1. கள்ளச் சாராயம் காய்ச்சுதல்	34,697
2. சாராவி அல்லது சாராயம் வைத்திருத்தல்	64,878
3. சாராவி அல்லது சாராய விற்பனை	25,151
4. மதுவைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல்	2,541
5. குடிபோதையிலிருத்தல்	62,566

தமிழ் நாடு மதுவிலக்கு—ஆயத்தீர்வை ஆய்வுக் கூடம் :

1-4-1979 ஆம் நாள் நிலவரப்படி இந்த ஆய்வுக் கூடத்தில் 27,759 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படாமலிருந்தன. இந்த ஆய்வுக் கூடத்திற்கு 65,030 மாதிரிகள் வந்தன. இவ்வாண்டு 77,584 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆண்டு இறுதியில் 15,205 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படாமலிருந்தன.

தமிழ் நாடு காவல் துறை.

காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் நிர்வாகத்தின்கீழ் காவல் துறை 30-5-1979 வரை தொடர்ந்து செயல்பட்டது. காவல் துறை டைரக்டர் ஜெனரல் மூன்று காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் ஆகியோரைக் கொண்ட புதிய அமைப்பு 1—6—1979 முதல் செயல்படத் தொடங்கியது. இத்துடன் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (திட்டமிடுதல்—ஒருங்கிணைப்பு) பதவிக்கு 17-3-1980 முதல் அனுமதி வழங்கப்பட்டது. காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் 14 பேர் இருந்தனர். இவர்களில் 6 பேர் வெளியூர்களில் வட்டார டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்களாக உள்ளனர். மாவட்டக்

களில் காவல் துறையினரின் பணியை ஒருங்கிணைத்து கண்காணிப்பதே இவர்களது பணி ஆகும். மாநிலத்தில் (சென்னை மாநகரம் நீங்கலாக) உள்ள காவல் படையில் ஏனைய வகைப் பணியாளர்களுடன் 2,610 சப்-இன்ஸ்பெக்டர்கள், (ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் உட்பட) 4,578 தலைமைக் காவலர்கள், 4,517 நிலை I காவலர்கள், 33,472 நிலை II காவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

குற்றங்கள்—குற்ற நிகழ்வுகள் :

மொத்த குற்றங்கள் :

1979-80 நிதியாண்டில் கொலை உட்பட சொத்து சம்பந்தமான குற்றங்கள் 31,445 நடைபெற்றன. ஆனால் அதற்கு முந்தைய ஆண்டில் 33,636 குற்றங்கள் நடைபெற்றன. எனவே, இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட 2,201 குற்றங்கள் குறைந்துள்ளன. இரயில்வே, காவல் படை, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு தென்னார்க்காடு, மதுரை வடக்கு, இராமநாதபுரம் மேற்கு, கோயம்புத்தூர், கிராமப்புறம், பெரியாறு மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் குற்றங்கள் குறைவாக நிகழ்ந்துள்ளதை அறியலாம். கொலை, வழிப்பறிக் கொள்ளை, கொள்ளை நீங்கலாக பிற எல்லா இனங்களின் கடும் குற்றம் குறைந்தது.

கொள்ளை :

கடந்த ஆண்டில் இதே கால அளவில் 159 கொள்ளைகளும் நடந்ததாக தெரிவிக்கப்பட்டது. இப்போது 200 கொள்ளைகள் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

கொலை :

இந்த ஆண்டில் 915 கொலைகள் நடந்தன. கடந்த ஆண்டில் (1978-79) 785 கொலைகள் நடந்தன. ஆகவே இந்த ஆண்டு 130 கொலை வழக்குகள் கூடுதலாகியுள்ளன. திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை வடக்கு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் கொலைகள் அதிகம் நடந்தன.

கொள்ளை :

1978-79 ஆம் ஆண்டில் 17 கொள்ளைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டில் 36 கொள்ளைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வழிப்பறிக் கொள்ளை :

சென்ற ஆண்டு 159 வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்றதாகவும் ஆனால் இவ்வாண்டு 200 வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப் பட்டது.

கன்னம் வைத்து திருடுதல் :

கடந்த ஆண்டில் கன்னம் வைத்து திருடுவதாக 9,532 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் கன்னம் வைத்து திருடியதாக 8,749 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 783 வழக்குகள் குறைந்துள்ளன. வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மேற்கு, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு கிழக்கு, திருநெல்வேலி, தென்னார்க்காடு மாவட்டங்களில் கன்னம் வைத்து திருடுவது அதிகமாக நடைபெற்றுள்ளது.

பெருந் திருட்டுகள் :

கடந்த ஆண்டில் 19,414 பெருந் திருட்டுகள் நடந்தன. இந்த ஆண்டில் 18,446 திருட்டுகளே நடந்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் 968 திருட்டுகள் குறைந்துள்ளது தெரியவரும்.

சிறு திருட்டுகள் :

1978-79 இல் இந்த வகை திருட்டுகள் 2,413 நடைபெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. இந்த ஆண்டு 1,941 திருட்டுகள் நடைபெற்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 472 வழக்குகள் குறைந்துள்ளது தெரியவரும்.

கால்நடைகள் திருடுபோதல் :

1978-79 ஆம் ஆண்டில் கால்நடைகள் திருடு போனதுபற்றி 1,316 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 1,148 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன.

வழக்குகளைக் கண்டுபிடித்தல்பற்றிய சதவீதம் :

இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 31,475 வழக்குகளில் 8,249 வழக்கு களில் தண்டனை வழங்கப்பட்டது. இதன் சதவீதம் 26.2 (தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள்) ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1978-79 இல் இதே கால அளவில் இது 24.0 சதவீதம் ஆகும்.

துப்பறி நாய் பிரிவு :

சென்னை மாநகர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் துப்பறி நாய் பிரிவு செயல்பட்டு வந்தன. துப்பறி நாய்கள் 633 வழக்குகளில் பயன் படுத்தப்பட்டன.

பாதுகாப்பு வழக்குகள் :

1978-79 இல் 8,748 பேர் மீது கி.பு.கோ. 109, 110 பிரிவுகளின்கீழ் வழக்குத் தொடரப்பட்டது. 1979-80 இல் 13,549 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. 1978-79 இல் 5,954 பேர் நன்னடத்தைப் பொறுப்பில் விடுவிக்கப்பட்டனர். 1979-80 இல் 8,514 பேர் நன்னடத்தைப் பொறுப்பில் விடுவிக்கப்பட்டனர்.

கலகங்களும் கலவரங்களும் :

இந்த ஆண்டில் ஏழு பெரும் மோதல்களும் 16 சிறு மோதல்களும் நடைபெற்றன. இவற்றில் காவல் துறையினர் தலையிட்டு அமைதி நிலைநாட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த ஆண்டில் 16 நிகழ்ச்சிகளில் கண்ணீர் புகைக்குண்டு வெடிக்கப்பட்டது. இந்த ஆண்டில் 19 நிகழ்ச்சிகளில் காவலர் துப்பாக்கியால் சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இளங்குற்றவாளிகள் :

கடந்த ஆண்டில் நடந்த சொத்து திருட்டு குற்றங்களில் 1,165 சிறுவர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது. இந்த ஆண்டில் 1,427 சிறுவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை செயற்பாடு :

குற்றப் புலனாய்வுத் துறையில் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு 1-2-1971 அன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில் 33 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. விசாரணை முடிந்தபின்னர், 31 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 22 வழக்குகளில் தண்டனையளிக்கப் பட்டது. நான்கு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப் பட்டனர். 11 வழக்குகள் மேல் நீதி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டன. இப் பிரிவில் மொத்தம் 485 வழக்குகள் இருந்தன. இவற்றில் 175 வழக்குகள் புல னாய்வில் உள்ளன. 310 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன.

சென்னை நகரக் காவல்.

சென்னை மாநகரக் காவல் பிரிவு, சென்னை, காவல் துறை கமிஷனரின் மேற்பார்வையில் செயலாற்றி வருகிறது. சென்னை மாநகரக் காவல் பிரிவு குரிய அதிகார வரம்பில் மாற்றமேதுமில்லை. இப்பிரிவில் காவலர்களின் எண் ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது 837 தலைமைக் காவலர்கள், 63 காவலர்கள் (நிலை I), 5,000 (நிலை II) காவலர்கள் ஆகியோர் பணியாற்ற வருகின்றனர். சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர் நிலை II காவலர்கள் 20 பேர் ஆகியோர் அடங்கிய மகளிர் காவல் பிரிவு சென்னை மாநகரில் செயலாற்றி வருகின்றது. இவ்வாண்டில் நிகழ்ந்த குற்ற கள் குறித்த விவர அறிக்கை வருமாறு :—

தொடர் எண்.	குற்றங்கள்	தெரிவிக்கப் பட்டவை.	துப்பு துலக்கப் பட்டவை
1.	கொலை	36	35
2.	ஆதாயம் தேடி கொலை	4	4
3.	வழிப்பறி	7	7
4.	கொள்ளை	64	44
5.	இரவில் வீடு புகுந்து திருட்டு	805	406
6.	பகலில் வீடு புகுந்து திருட்டு	103	50
7.	சைக்கிள் திருட்டு	1,350	503
8.	குழந்தைகள் நகை திருட்டு	1,125	25
9.	கைத் திருட்டு	696	424
10.	மோட்டார் வண்டிகள் திருட்டு	171	130
11.	பல் வகைத் திருட்டு	4,786	2,864
12.	கால்நடை திருட்டு	55	41
13.	நம்பிக்கைத் துரோகம்	264	80
14.	ஏமாற்றுதல்	247	61
	மொத்தம்	8709	4674

மகளிர்-சிறுமியர் விபச்சாரத் தடைச் சட்டம் :

விபச்சாரம் நடைபெறுவதைத் தடை செய்யும் பொருட்டு இச்சட்டத்தின் கீழ் பயன்தரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டின் பதிவான வழக்குகளின் விவரங்கள் வருமாறு :

வீட்டில் விபச்சாரம்	11
பிடிப்பட்ட காமத்தரகர்கள்	234
கைதான பரத்தையர்	696
தங்கும் விடுதிகளைத் திடீர்ச் சோதனையிட்டதன் மூலம் பிடிப்பட்டவர்கள்	24

குற்றங்கள் :

சென்ற ஆண்டில், பல்வேறு தலைப்புகளின்கீழ் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 8,966 ஆகும். ஆனால், இந்த ஆண்டு அவற்றின் எண்ணிக்கை 8,709 ஆக உள்ளது. ஆய்வு ஆண்டிற்கு முந்தைய ஆண்டில் 5,461 வழக்குகளுக்குத் துப்புத் துலக்கப்பட்டது. ஆய்வு ஆண்டில் 4,674 வழக்குகள் துப்புத் துலக்கப்பட்டன. முந்தைய ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் சதவிதம் 61 ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் சதவிதம் 54 ஆகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஆய்வாண்டில் நிகழ்ந்தனவாகத் தெரிவிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது தெரிய வருகிறது. இருப்பினும், கொள்ளை, இரவில் வீடு புகுந்து திருடுதல் ஆகிய குற்றங்களின் எண்ணிக்கை சற்றே உயர்ந்துள்ளது.

ஒற்றை விரல் ரேகைப் பதிவுப் பிரிவு :

சென்னை மாநகரிலுள்ள ஒற்றை விரல் ரேகைப் பதிவுப் பிரிவு, காவல் துறையினர் புலனாய்வு நடத்துவதற்கு ஏற்ற அறிவியலார்ந்த உதவியைத் தொடர்ந்து அளித்து வருகிறது. குற்றங்களைத் துப்புத் துலக்குவதில் அறிவியல் சார்ந்த புலனாய்வின் முக்கியத்துவமும், அதன் பயன்பாடும் பெரிதும் அதிகரித்துள்ளது. இப்பிரிவு மாநகரக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மிக முக்கியமான பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. குற்றம் நிகழ்ந்த இடத்தில் எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுத் தடயங்களிலிருந்து குற்றவாளி

களைச் சரியாக இனங்கண்டு கொள்வதன் மூலம் இப்பிரிவு குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பெரிதும் உதவியாயுள்ளது. விரல் ரேகைகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளின் எண்ணிக்கை 20,665.

பிச்சைக்காரர்கள் ஒழிப்புச் சட்டம் : சென்னை மாநகரில், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் 586 பேர் உட்பட, பிச்சைக்காரர்கள் 1,025 பேர் கைது செய்யப்பட்டு, பின்னர் விசாரணை செய்யப்பட்டு, சென்னை மாநகருக்குப் புறத்தே உள்ள பிச்சைக்காரர்களுக்கென அமைந்த இல்லங்களில் சேர்க்கப்படு வதற்குப் பரிந்துரைக்கப்பட்டனர். உள்ளூர்க் காவலர்களால் பிடிபட்ட இளங் குற்றவாளிகள் 2,676 பேர் விசாரணை செய்யப்பட்டனர் ; அவர்களுக்கு வயதுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

. *காவல் கட்டுப்பாட்டு அறை :* ஆய்வு ஆண்டில் காவல் கட்டுப்பாட்டு அறைப் பணியாளர்கள் தொலைபேசி எண் 100 மூலமாக 8,957 அவசர அழைப்புகள் வந்தவுடன் உடனடியாகச் சென்று ஆவன செய்தனர் ; முந்தைய ஆண்டு இவ் வாறு கவனிக்கப்பட்ட அவசர அழைப்புகளின் எண்ணிக்கை 8,644. முந்தைய ஆண்டு 576 தீவிபத்து அழைப்புகள் வந்தவுடன் உடனடியாகச் சென்று ஆவன செய்தனர். இதுபோல, ஆய்வு ஆண்டில், வந்த 542 தீவிபத்து அழைப்பு களைக் கவனித்தனர் ; கார் திருட்டு, ஸ்கூட்டர் திருட்டு, காணாமல் போன வர்கள், காணாமல் போன குழந்தைகள் பற்றிய 8,759 வானொலி அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு அவை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. சென்னை மாநகர காவல் பிரிவு இவ்வாண்டில் மொத்தம் 3,744 செய்திகளை அனுப்பியது ; 7,804 செய்திகளை வரப்பெற்றது ; இவை குறித்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அழைப்புகள், வானொலி அறிவிப்புகள் ஆகிய வற்றுக்கு உடனடி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந் நடவடிக்கை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

காவல் துறை நாய்ப்படைப் பிரிவு : சென்னை மாநகரக் காவல் துறை நாய்ப் படையில் எட்டு நாய்கள் உள்ளன. இவ்வாண்டில், நாய்ப் படைப் பிரிவு, 251 அழைப்புகளைக் கவனித்தது. அவற்றில் 118 அழைப்புகளில் நாய்கள் பயனுள்ள வகையில் துப்புத் துலக்க உதவின அதன் விவரங்கள் வருமாறு :—

குற்றத்தின் தன்மை.	நடவடிக்கை மேற் கொள்ளப்பட்ட அழைப்புகளின் எண்ணிக்கை.	அழைப்புகளுக்கு இணங்கச் சென்று துப்பு துலக்கப் பட்டவை.
1. கொலை மற்றும் ஆதாயம் கருதிக் கொலை	34	20
2. பகலிலும் இரவிலும் வீடு புகுந்து திருட்டு	201	92
3. பிற வழக்குகள்	16	6
மொத்தம்	251	118

இளங்குற்றவாளிகளுக்கு உதவுவதற்கான காவல் துறைப் பிரிவு :

இப்பிரிவு 16 வயதுக்கு உட்பட்ட ஆதாரவற்ற குழந்தைகளின் நலனுக்காக உதவுகிறது. 14 வயதுக்குட்பட்ட காணாமல் போன குழந்தைகளையும் கண்டு பிடிக்கிறது. இப்பிரிவு கவனித்த 687 வழக்குகளில் 11 இளங் குற்றவாளிகள் மீண்டும் அவர்தம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 676 இளங்குற்ற வாளிகள் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டனர். 617 பேரை நீதிமன்றம் அவர்தம் பெற்றோரிடம் மீண்டும் ஒப்படைத்தது. 59 இளங்குற்றவாளிகள் மாநகரிலுள்ள பல்வேறு சீர்திருத்த இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஊர்க் காவல் படை: இவ்வாண்டில் இப்பிரிவில் 1,689 ஆடவரும், 263 மகளிரும் இருந்தனர். காவலர்களின் காவல் பணிக்குத் துணை நிற்கும் பொருட்டும், காவலர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்காக, ஊர்க்காவலர்கள் வசிக்கும் உள்ளூர்ப் பகுதி களில் ஊர்க்காவலர்களிடம் மக்களுக்குள்ள மதிப்பை வளர்க்கும் பொருட்டும் அவர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் இரவில் ரோந்து சுற்றுதல், பந்தோபஸ்துப் பணிகள், போக்குவரத்துப் பணிகள் ஆகிய பணிகளை மேற் கொள்ளுவதன் மூலமாக உள்ளூர்க் காவல் நிலையங்களுக்கும், போக்குவரத்து நிலையங்களுக்கும் பெரிதும் உதவுகின்றனர்.

விபத்துகள் : முந்தைய ஆண்டு, வேகக் கட்டுப்பாட்டை மீறிச் சென்ற வகையில் 8,655 வாகனங்கள் பிடிபட்டன ; இந்த ஆண்டில் 7,197 வாகனங்கள் பிடிக்கப்பட்டன. சென்ற ஆண்டில், அதிகச்சுமை ஏற்றிச் சென்றமைக்காக 1,654 வாகனங்கள் பிடிபட்டன. இந்த ஆண்டில் இவ்வகை வழக்குகளின் எண்ணிக்கை 1,267 ஆகும். இந்த ஆண்டில் 1,16,291 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுக்கு 14,10,487 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது. முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,28,998 ஆகும். அவற்றுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூபாய் 15,06,778 ஆகும்.

குற்றத்தடை ஆய்வகம்.

பல்வேறு பிரிவுகளில் இவ்வாண்டு பெறப்பெற்ற ஆய்வு வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :—

பிரிவின் பெயர்.	பெறப்பெற்ற ஆய்வு வழக்குகள்
(1)	(2)
(1) உயிரியல்	
(அ) ரத்தக் கறைகள்	907
(ஆ) வித்துக் கறைகள்	198
(இ) பல்வேறுபட்டவை	122
(2) துப்பாக்கி ஆய்வியல் பிரிவு	
(அ) துப்பாக்கி உபகரணங்கள்	52
(ஆ) வெடிபொருட்கள்	35
(இ) பல்வேறுபட்டவை	24
(3) வேதியியல்	
மதுவிலக்குக்கான சிறுநீர் மற்றும் இரத்த பரிசோதனை (740 உள்ளிட்டது)	2,858
(4) ஆணைப் பிரிவு	346
(5) தேரியியல் பிரிவு	
(அ) கால்தடங்கள்	8
(ஆ) உபகரணக் குறிகள்	9

(இ) போக்குவரத்து விபத்துக்கள் 37

(ஈ) பல்வேறுபட்டவை 32

(உ) தெரியியல் 23

(ஊ) மண்டையோடுகள் 2

(6) குருதி நீரியல் பிரிவு 1,198

(7) நஞ்சியல் பிரிவு

(அ) மனித நஞ்சு 810

(ஆ) கால்நடை நஞ்சு 6

(8) ஆராய்ச்சி மற்றும் மருத்துவப் போதனை நஞ்சியல் பிரிவு 89

(9) வட்டார குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம் (மதுரை)

(அ) மனித நஞ்சு (மதுவிலக்கு சிறுநீர், இரத்தப் பரிசோதனை 1,054 மதுக்கட்டுப்பாடு 129 உள்ளிட்டது) 1,548

(ஆ) கால்நடை நஞ்சு 21

(10) வட்டார குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம், கோவை

(அ) மனித நஞ்சு (மதுக்கட்டுப்பாடு 438 உள்ளிட்டது) 2,131

(ஆ) கால்நடை நஞ்சு 9

(11) வட்டார குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம், தஞ்சை

(அ) மனித நஞ்சு (மதுவிலக்கு சிறுநீர், இரத்தப் பரிசோதனை 1,665 மதுக்கட்டுப்பாடு 319 உள்ளிட்டது) 2,771

(ஆ) கால்நடை நஞ்சு 12

(12) வட்டார குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம், நெல்லை

(அ) உயிரியல் 112

(ஆ) நஞ்சியல் (மதுக்கட்டுப்பாடு 121 உள்ளிட்டது) 201

நடமாடும் குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வக நிபுணர் ஆய்வு செய்யச்சென்ற குற்ற இடங்கள் 3,257

இவ்வலுவலகத்தின் நிழற்பட பிரிவு, ஆய்வுக்கு வரும் பொருட்களின் நிழற் படங்களை எடுக்கிறது. இவ்வாண்டு ஆரம்பத்தில் 41 ஆய்வு நிலுவையில் இருந்தன. 637 பெறப்பட்டன. இவற்றில் 627 மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது. 51 ஆய்வு வழக்குகள் 31-3-1980 அன்று நிலுவையில் இருந்தன.

குற்றஞ்சார்ந்த அறிவியல் பட்ட மேற்படிப்பு :

1978 ஆகஸ்டில் துவங்கிய 3 ஆம் பிரிவு மூலம் பட்ட மேற்படிப்பிற்கு சேர்ந்த ஆறு மாணவர்களில் ஒருவர் இடையில் விலகியதால் ஐவர் மட்டுமே நிகழ்ந்த பகுதி I தேர்வில் எல்லாப் பாடங்களிலும் தேர்வு பெற்றனர்.

இரண்டாம் பிரிவு மாணவர்கள் நால்வர் பகுதி II இறுதி தேர்வில் கலந்து கொண்டதில் மூவர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர்.

தமிழ் நாடு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆய்வகம், சென்னை-5-ம், தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம், சென்னை-4-ம், அரசாணை எண். 790, உள்துறை, நாள் 24—4—1979 மூலம் ஒரே ஆய்வகமாக இணைக்கப் பெற்ற "தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம்" என வழங்கப் பெறுகிறது.

சிறைகள்.

சிறைத் துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தொடர்ந்து அத்துறையின் தலைவராக இருக்கிறார். இம்மாநிலத்தில் இந்த ஆண்டு எட்டு மத்திய சிறை களும், பெண்களுக்கான சிறைச்சாலை ஒன்றும், சீர்திருத்தப்பள்ளி ஒன்றும், திறந்த வெளிச் சிறைச்சாலைகள் மூன்றும், தனித் துணைச் சிறைச்சாலைகள் மூன்றும் 119 துணைச் சிறைச்சாலைகளும் இருந்தன.

கைதிகள்.—இந்த ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 25,714. இந்த ஆண்டில், 3,63,968 கைதிகள் இச்சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டனர். அவர்களில் 3,00,486 பேர் விசாரணைக் கைதிகள், 63,303 பேர் சிவில் வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். 166 பேர் அரசியல் கைதிகள். 13 பேர் காப்புச் சிறையார்கள். ஆண்டு இறுதியில் மொத்த எண்ணிக்கை 16,652. அறிக்கையாண்டில், சிறைச்சாலைகளிலும் சிறைச் சாலைகளின் வெளியேயும் 79 கைதிகள் மரணமடைந்தனர். இவர்களில்

இருவர் தற்கொலை செய்துகொண்டதாகவும், ஒருவர் கொலை செய்யப்பட்டதாகவும் எஞ்சிய 76 கைதிகள் இயற்கையாக மரணம் எய்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கல்வியும் பொழுது போக்கும் :

முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் மத்தியச் சிறைச்சாலைகளிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட கைதிகளுக்கு இலக்கியக் கல்வி அளிக்கப்பட்டது. கைதிகளில் மூவர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வும் ஒருவர் புகுமுக வகுப்புத் தேர்வும், பதினெட்டு பேர் பட்டப்படிப்புத் தேர்வும் அதாவது; பி.ஏ., பி.காம். போன்ற தேர்வுகளுக்கும், இருவர் முதுகலைத் தேர்வும் எழுதினர். இவைமட்டுமின்றி, மூவர் திறந்த வெளிப் பல்கலைக் கழகத் தேர்வும், ஒருவர் புலவர் பட்டத் தேர்வும் எழுதினர் ; ஒருவர் தொடர்ந்து தனது எம்.பி.பி.எஸ். தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டார்.

கைதிகள் அஞ்சல் கல்வி மூலம் பட்ட மேற்படிப்புவரைப் படிக்கவும், அரசுச் செலவில் அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் தேர்வுகளை எழுதவும் அனுமதிக்கப்பட்டனர். அரசுச் செலவில் தேர்வு எழுத அவர்கள் மும்முறை அனுமதிக்கப்பட்டனர். அனைத்துச் சிறைச்சாலைகளிலும் நூல் நிலையங்கள் இணைக்கப்பட்டு, அங்குள்ள புத்தகங்களைக் கைதிகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அறிக்கையாண்டில் 743 புத்தகங்கள் வாங்கப்பட்டன. அவ்வாண்டில் 362 இந்து சமய உரைகளும், 265 இஸ்லாமிய சமய உரைகளும், 593 கிறித்தவ சமய உரைகளும் நிகழ்த்தப் பட்டன. மத்தியச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் கைப்பந்து, கபடி, பூப்பந்து விளையாட அனுமதிக்கப்பட்டனர். வேலூரில் உள்ள மாதில மகளிர் சிறைச்சாலையைச் சேர்ந்த பெண் கைதிகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும், சிறை விடுமுறை நாட்களிலும் “டென்னிகாயிட்” விளையாட அனுமதிக்கப்பட்டனர். வெளியில் உள்ளவர்கள் மூலமும் பல்வகை கேளிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. தொண்டுள்ளம் கொண்டவர்கள் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் கைதிகளுக்கு நல்லறிவு புகட்டும் படங்கள் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டன.

ஆலோசனைக் குழுத் திட்டம் :

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் தண்டனையை ஆய்வு செய்ய ஏற்படுத்தப்பட்ட ஆலோசனைக் குழு அறிக்கையாண்டில் 191 கைதிகளின் வழக்குகளை ஆய்வு செய்தது. இக்குழு 106 கைதிகளின் வழக்கு குறித்து பரிந்துரை செய்தது. அவர்களது வழக்குகளையும் அத்தகைய 80 வழக்கு களையும் குழு பரிந்துரை செய்யவில்லை. ஆனால் விதிகளின்கீழ் அரசுக்கு அனுப்பப்பட வேண்டியவை மட்டுமே அரசுக்கு அனுப்பப்பட்டன. 36 கைதி களை விடுதலை செய்யுமாறும், 102 வழக்குகளை தள்ளிவிடுமாறும் அரசு ஆணையிட்டது.

சீர்திருத்தப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை:

இந்த ஆண்டில் சீர்திருத்தப் பள்ளியில் நாளொன்றுக்கு சராசரியாக 168 மாணவர்கள் இருந்தனர். ஒவ்வொரு பணி நாட்களிலும் இப்பள்ளி மாணவர் களுக்கு இரண்டு மணி நேரம் இலக்கியபாடக் கல்வியும், ஐந்து மணி நேரம் வாழ்க்கைத் தொழில் கல்வியும் கற்பிக்கப்பட்டன.

சீர்திருத்தப் பள்ளி மாணவர்களுக்கு தச்சு கொல்லு பயிற்சி அளிக்கப் பட்டது. தமிழ்நாடு 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் 15 (1) பிரிவின்கீழ் அறிக்கையாண்டில், இப்பள்ளியைச் சேர்ந்த 20 மாண வர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

நல்வாழ்வுப் பணிகள் :

வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைச்சாலைக் கைதிகளுக்கும் மூன்று மத்தியச் சிறைச்சாலைப் பெண் கைதிகளுக்கும் குங்குமம், மஞ்சள், விபூதி போன்றவைகளை வாங்கிக் கொடுக்க அரசு ஆணையிட்டது. மதுரை மத்தியச் சிறைச்சாலையில் 22-1-1980 அன்று திரைப்படக் கருவி ஒன்று வாங்கப்பட்டது. தந்தை பெரியாரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவையொட்டி 4,240 மது விலக்குத் தண்டனைக் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். அனைத்து மத்தியச் சிறைச்சாலைகளிலும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் "ரக்ஷா பந்தன" விழா ஆர்வத்துடன் கொண்டாடப்பட்டது.

அறிக்கையாண்டில், வேலூர் மத்தியச் சிறைச்சாலையில் கைதிகள் சிற்றுண்டிச்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வாண்டு இறுதியில் ஐந்து மத்தியச் சிறைச்சாலைகளில் ஐந்து சிற்றுண்டிச்சாலைகள் ஏற்படுத்தப் பட்டன.

ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்கள்.

ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்கள், 1956 ஆம் ஆண்டு மகளிர்-பெண்கள், விபச்சாரத் தடைச் சட்டத்தில் பாதுகாப்பு இல்லங்களாகக் குறிப்பிடப்படு கின்றன. பாதுகாப்பு இல்லங்கள், ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம், மகளிர் மீட்பு இல்லம், ஒழுக்கக் கண்காணிப்பு மீட்பு இல்லங்கள், ஒழுக்கக் கண்கா ணிப்பு நிலையம் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

மீட்பு இல்லங்கள் (பாதுகாப்பு இல்லங்கள்) :

1956 ஆம் ஆண்டு மகளிர்-பெண்டிர் விபச்சாரத் தடைச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் விபச்சாரத்திலிருந்து மீட்கப்பட்ட 14 முதல் 21 வயதுக்குட் பட்ட பெண்களையும் சமுதாயத்தில் நல்லொழுக்கத்திற்கு ஆபத்தான நிலை யில் இருந்து பாதுகாப்பும் நிறுவனக் கவனிப்பும் தேவையாயுள்ள பெண்களை யும் அனுமதித்து சீர்திருத்தி அவர்களுக்கு நல்வாழ்வு அமைத்துக் கொடுப்பதே இம்மீட்பு இல்லங்களின் நோக்கமாகும். இம்மாநிலத்தில் மீட்பு இல்லங்கள் இரண்டும், மணமாகாத தாய்மார் இல்லங்கள் இரண்டும் உள்ளன. சென்னை யில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக (பாதுகாப்பு இல்லம்) இரண்டு மீட்பு இல்லங்களை அரசே நடத்தி வருகின்றது. மணமாகாத தாய்மார் இல்லங்கள் இரண்டில் ஒன்றை அரசு ஏற்று நடத்தி வருகின்றது. அது அரசு ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம் -- மகளிர் காப்பு இல்ல வளாகத்தில் அமைந் துள்ளது. மற்றுமொரு இல்லம், திருநெல்வேலி மாவட்டத்தில் அடைக்கல புரத்தில் அரசு நிதியுதவியுடன் தனிப்பட்ட நிறுவனத்தால் நிர்வகிக்கப்படு கிறது. இந்த நான்கு நிறுவனங்களிலும் சேர்ந்து இவ்வாண்டுத் தொடக்கத்தில் வயது வந்தவர் 143 பேரும், 5 சிறுவர்களும் இருந்தனர். வயது வந்தவர்கள் 167 பேரும், 8 சிறார்களும் அனுமதிக்கப்பட்டனர். வயது வந்தவர்கள் 185 பேரும், 7 சிறார்களும் விடுவிக்கப்பட்டனர். ஆண்டு இறுதியில் இவ்வில்லங்

களில் வயது வந்தோர் 125 பேரும் 5 சிறார்களும் இருந்தனர். அறிக்கை யாண்டில் நான்கு இல்லங்களில் இருந்தவர்களின் அன்றாட சராச வயது வந்தோர் 118 பேரும் 3 சிறார்களுமாவர்.

ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்கள் :

1956 ஆம் ஆண்டு மகளிர் பெண்டிர் விபச்சாரத் தடைச் சட்டத்தின் விதி துறைகளின்கீழ் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையி வைக்கப்படுவதற்குப் பதிலாக சீர்திருத்தப்பட்டு பயிற்சியளிக்கப்பட வேண்டு என்று உத்தரவிடப்பட்ட பெண்களும் மகளிரும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்ல களில் அனுமதிக்கப்படுகின்றனர். இம்மாநிலத்தில் இரண்டு ஒழுக்கக் கண் ணிப்பு இல்லங்கள் உள்ளன. சென்னை மாநகரில் ஒன்றும் (சென்னை அ னர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம்) மதுரையில் மற்றொன்றும் (மதுரை அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம்) உள்ளன. இவ்விரு இல்லங்களிலு ஆண்டுத் தொடக்கத்தில் வயது வந்தவர்கள் 123 பேரும் சிறார் நால்வரு இருந்தனர். வயது வந்தவர் 94 பேரும் சிறார் இருவரும் அனுமதிக்கப்பட் னர். வயது வந்தவர் 126 பேரும் சிறார் ஐவரும் விடுவிக்கப்பட்டனர். ஆண் இறுதியில் வயது வந்தவர் 91 பேரும் ஒரு குழந்தையும் இருந்தனர். 1979-ஆம் ஆண்டில் இவ்வில்லங்களில் இருந்து வயது வந்தவர்கள், சிறுவர்கள் ஆ யோரின் அன்றாட சராசரி எண்ணிக்கை முறையே 111-ம், 1-ம் ஆகும்.

ஒழுக்கக் கண்காணிப்பு மீட்பு இல்லங்கள் ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்க

இவை மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் நீதிமன்றங்கள் விசாரணை செய்யப்பட்டு வரும் பெண்களும் மகளிரும் இடைக்காலப் பா காப்பிற்காக பெண்களும் குறுகியகாலம் தங்குவதற்கான இல்லங்களாகும். இ மாநிலத்தில் அரசால் நடத்தப்பட்ட ஐந்து விழிப்புப்பணி மீட்பு இல்லங்க ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளன. இவை சேலம், கோயம்புத்தூ மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ளன. தஞ்சாவூ ஒன்றும் (தஞ்சாவூர் ஒழுக்கக் கண்காணிப்புச் சங்கத்தின் பொறுப்பில் சென்னையில் (அபய நிலையம்) மற்றொன்றுமாக இரண்டு தனியார் நிறுவன களும் உள்ளன. அபய நிலையம், சென்னை ஒழுக்கக் கண்காணிப்பு சங்க தின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வரும் சட்டபடிக்கல்லாத ஒரு நிறுவ

மாகும். புகலிடம் தேவைப்படுகிற இன்னலுக்குட்பட்ட மகளிர், பெண்டிருக்காக அபய நிலையம் உள்ளது. இதனைத் தவிர மாநகரிலுள்ள இரட்டை அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம் மகளிர் காப்பு இல்லம் ஆகியவற்றுடன் இணைந்த அபய-குறுகியகால தங்கல் நிறுவனம் ஒன்றுள்ளது. அறிக்கையாண்டில் தனிப்பட்ட முறையில் இயங்கும் இந்த ஆறு நிலையங்களிலும் அரசு ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம், மகளிர் காப்பு இல்லம், மதுரை அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம் ஆகியவற்றில் 2,180 பேர் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், முந்தைய ஆண்டில் 2,782 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

கல்வி (1) அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம், மகளிர் காப்பு இல்லம், சென்னை, மணமாகாத தாய்மார் இல்லம் :

8 ஆம் வகுப்பு வரையிலுள்ள தனிப்பட்ட பள்ளி (அரசு மகளிர் காப்பு இல்லத் தனிப் பள்ளி) ஒன்று உள்ளது. மேற்கொண்டும படிப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் 9, 10 ஆம் வகுப்பு ப்ளஸ் 2 வகுப்புகளில் சேர்ந்து பயில சென்னை, வெலிங்டன் உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் பாதுகாப்பு இல்லம், அவ்வில்லத்தில் உள்ளவர்களுக்கு 8 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிற்றுவிக்கிறது. மேலும் தையல் வேலையிலும் ஆடை தயாரிக்கும் பணியிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகின்றது. மதுரை, அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம், 5-ம் வகுப்பு வரையிலுள்ள தனிப்பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது.

வாழ்க்கை தொழிற்பயிற்சி (1)—சென்னை, அரசினர் மகளிர் காப்பு இல்லம், ஒழுக்கக் கணகாணிப்பு இல்லம், மணமாகாத தாய்மார் இல்லம் :

பொதுக் கல்வியோடு, நெசவு, தையல், பூவேலை, ஆடை தயாரித்தல், பின்னல் வேலை, பாய் பின்னுதல், நூற்றல் (அம்பர்சர்கா) ஆகிய வாழ்க்கைத் [illegible]
தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கார்களுக்கு உள்ளே போடும் உருளைகள், பூவேலை ஆயத்த உடைகள் (பனியன்கள், புடவைகள் முதலியவை) போன்ற வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மேற்கூறிய வேலைகளை எடுத்துக்கொண்டதற்குக் கிடைத்த ஊதியத்தின் ஒரு பகுதி, அவ்வேலை முறையில் செயல்படுகிறது. இப்பிரிவில் பணிபுரிபவர்களுக்கு கிடைக்கும

தொகையில் பாதி கொடுக்கப்படுகிறது. மீதி பாதித் தொகை அரசுக் கண செலுத்தப்படுகிறது. இவ்வாறாக, அவர்கள் அத்தொழில்களில் பயிற்சி கையிலேயே சம்பாதிக்கின்றனர். இவ்வாண்டில் பல்வேறு தொழில் பிரி லிருந்து கிடைத்த வருவாய் ரூபாய் 29,005.67 ஆகும். திருச்சிராப்ப பியிலுள்ள அரசினர் பாதுகாப்பு இல்லத்தில் பாய் பின்னுதல், பின்னல் வே பூவேலை, தையல், தோட்டம் வளர்த்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளி படுகிறது. இதன் மூலம் இவ்வாண்டில் கிடைத்த மொத்த வருவாய் ரூ 6,168.95 ஆகும். மதுரை, அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்ல உள்ளோருக்கு பூவேலை, பின்னல் வேலை, தையல் ஆகியவற்றில் வாழ்க் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றன. வீட்டு வேலை, தோட்டம் போ ஆகியவற்றிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வான் பல்வகை இனங்களிலிருந்து ரூபாய் 1,261.45 வருவாய்க் கிடைத்துள்ள

கல்வி சாராத பணிகள் :

சென்னை, அரசினர் மகளிர் காப்பு ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங் மணமாகாத தாய்மார் இல்லம் ஆகியவற்றில் உள்ளவர்கள் பேச்சுப் போட்டி நாடகங்கள், இசை, நடனம், பஜனைகள், முதலியவை போன்ற கல்வி ச நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். திரைப்பட நூலகம் வழங் ஒழுக்கம், கல்வி, குறித்தப் படக்காட்சிகளைக் குறிப்பிட்ட காலத்திற்செ முறை ஒலி திரைப்படக் கருவி மூலம் இவ்வில்லங்களில் உள்ளோருக்குக் கா கின்றனர். வாரந்தோறும் இவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் க களிக்கின்றனர்.

உடற் பயிற்சிக் கல்வி :

சென்னை, அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம், மகளிர் காப்பில் திருமணமாகாத தாய்மார் இல்லங்களில் உள்ளோர்க்குத் தகுதிபெற்ற உ பயிற்சி ஆசிரியைகளைக் கொண்டு உடற்பயிற்சி வகுப்புகள் நடத்தப் கின்றன.

வாழ்வுத் திட்டங்கள் :

அறிக்கையாண்டில் இவ்வில்லங்களைச் சேர்ந்த 202 பேர்களுக்கும் புது வாழ்வு அளிக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு :—

(1) பெற்றோரிடமும் கணவன்மார்களிடமும் ஒப்படைக்கப்பட்டவர்கள்.	119
(2) ஆயத்த ஆடைகள், ஓல்டால் ஆகிய தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்.	17
(3) திருமணம் செய்து கொடுக்கப்பட்டவர்கள்	16
(4) ஆசிரியர் பயிற்சி போன்று தொழிற் பயிற்சி பெற அனுப்பப்பட்டவர்கள்.	3
(5) வேலைக்கு அனுப்பப்பட்டவர்கள்	47
	202

நிதி.—இவ்வாண்டிற்கு இந்நிறுவனங்களுக்கான மொத்தச் செலவு 10,90,107.51 பல்வகை வரவுகள் உட்பட தொழிற் பிரிவுகளிடமிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 29,005.67 ஆகும்.

சீர்திருத்த நிறுவனங்கள்.—தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டத்தைச் செயல்படுத்துவது காவல் துறையாக இருப்பினும், இச்சட்டத்தின் கீழ் பிற துறைகளின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் ஆதாரவற்று கட்டுப்பாட்டுக் கடங்காத இளங்குற்றவாளிகளைப் பாதுகாத்தல், சீர்திருத்தல், புதுவாழ்வு அளித்தல் பணி சீர்திருத்த நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தப் பள்ளிகள்.—சிறுவர்களுக்கு ஏழும், சிறுமிகளுக்கு ஒன்றுமாக அரசினர் சீர்திருத்தப் பள்ளிகள் எட்டு உள்ளன. சிறுவர்களுக்கான ஏழு பள்ளிகளில் இரண்டு பள்ளிகள் இளங்குற்றவாளிகள், கட்டுப்பாட்டுக்கடங்காத சிறுவர்களைச் சேர்த்து திருத்துவதற்கான முதுநிலை சீர்திருத்தப் பள்ளிகளாகும். ஏனைய ஐந்தும் ஆதாரவற்ற குற்றவாளிக் குழந்தைகளைச் சேர்த்துக்

கொண்டு அவர்களைத் திருத்துவதற்கான இளநிலை சீர்திருத்தப் ப
களாகும். சென்னையிலுள்ள பெண்களுக்கான அரசினர் சீர்திரு
பள்ளியில் மட்டுமே சிறுமிகளும் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற
மேற்சொன்ன எட்டு அரசினர் பள்ளிகள் தவிர இம்மாநிலத்தில் அரசு மான
பெறும் பதினைந்து தனியார் சீர்திருத்தப் பள்ளிகளும் உள்ளன. இவ்வா
தொடக்கத்தில் சீர்திருத்தப் பள்ளிகள் அனைத்திலும் மொத்தம்
குழந்தைகள் இருந்தனர். மூவாயிரத்து நூற்றுமுப்பத்தொன்பது குழந்
சேர்க்கப்பட்டனர். மூவாயிரத்து ஐநூற்றுப் பதினெட்டு குழந்
வெளியேறிய பின்னர் அக்கால அளவின் முடிவில் மூவாயிரத்து அறுநூ
அறுபத்து நான்கு குழந்தைகள் இருந்தனர்.

வரவேற்பு இல்லங்கள்.—சிறுவர் சிறுமியருக்கான வரவேற்பு இல்ல
பொருத்தமான நீதிமன்றங்களில் அவர்கள் வழக்குகள் விசாரணை செ
பட்டு புலனாய்வு செய்யப்படும் கால அளவில் அச்சிறுவர் சிறுமியரு
தற்காலிகப் பாதுகாப்பு அளிக்கின்றன.

அரசினர் வரவேற்பு இல்லங்கள் ஆறு உள்ளன. சென்னையில் ஒன்
திருநெல்வேலியில் ஒன்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமரா
புதூரில் மற்றொன்றும் ஏனைய ஒன்று விழுப்புரத்திலும் உள்ளன. இவற்
தவிர வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மது
தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள 6 தனியார் வரவேற்பில்லங்கள் (சிறு
மட்டும்) இயங்கி வருகின்றன. இத்தனியார் வரவேற்பு இல்லங்களு
செங்கல்பட்டு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் சீர்திரு
பள்ளிகள் ஒவ்வொன்றுடனும் சிறுவர்களுக்கான வரவேற்பு இல்லங்கள் இ
செயல்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள பாலமந்திரின் கீழ் இயங்கி
அரசு உதவிபெறும் இளநிலை சீர்திருத்தப் பள்ளியுடன் மூன்று வயதி
கீழுள்ள குழந்தைகளுக்கான வரவேற்பில்லம் ஒன்று இயங்கி வருகி
ஆண்டுத் தொடக்கத்தில் அனைத்து வரவேற்பில்லங்களிலும் 1,146 குழந்
இருந்தனர். பெருமளவில் குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். 1
குழந்தைகள் விடுவிக்கப்பட்டப் பின்னர் ஆண்டு முடிவில் 982 குழந்
இருந்தனர்.

பிற்காப்பு இல்லங்கள்—நீண்ட காலத் தங்குதலுக்காக மூன்று பிற்காப்பு ங்கள் உள்ளன. வேலூரில் பெண்கள், சிறுமியர்களுக்காக ஒன்றும் ரை, செங்கல்பட்டில் சிறுவர்களுக்காக இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

வேலூரிலுள்ள அரசினர் பெண்கள் பிற்காப்பு இல்லம், சீர்திருத்தப் ரிகள், ஒழுக்கம் கண்காணிப்பு இல்லங்கள், வேலூரில் பெண்களுக்கான லச்சிறை ஆகியவற்றிலிருந்து வெளிவரும் பெண்களுக்குப் புகலிடம் நல்கி, ம் பயிற்சியளிக்கிறது. இப்பிற்காப்பு இல்லத்துடன் தொழிற் பயிற்சிப் (அரசினர் ஆடைகள் தைத்தல்—ஹோல்டால் தயாரித்தல் பயிற்சிப்) ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. ஆடைகள் தைத்தல்—ஹோல்டால் ரித்தல் ஆகியவற்றில் இவ்வில்ல வாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்பட்டிலுள்ள சிறுவர்களுக்கான பிற்காப்பு இல்லம், சிறுவர் சீர்திருத்தப் ரிகளிலிருந்து வெளிவரும் சிறுவர்களை ஏற்று, அவர்களுக்குத் தற்போது ளர் வேலையிலும் புத்தகம் கட்டும் பணியிலும் பயிற்சியளித்து வருகிறது. ரையிலுள்ள சிறுவர்களுக்கான பிற்காப்பு இல்லம் தென் மாவட்டங்களிலுள்ள ருத்தப் பள்ளிகளினின்று வெளிவரும் சிறுவர்களை ஏற்று அவர்களுக்கு ளர் வேலையிலும் தையற்கலையிலும் பயிற்சியளித்து வருகிறது.

சிறப்பு இல்லங்கள்.—(அ) புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூரில் பர்மா, லங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் குழந்தைகளுக்காகப் (சிறுவர், மியர்) பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட அரசினர் சிறப்பு இல்லமொன்று து. புதுக்கோட்டை மாவட்டம், மாத்தூரில் தாயகம் திரும்பிய ருக்காக அரசினர் சிறப்பு இல்லமொன்றும் நடத்தப்பட்டு வருகிறது ர், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய ஆதரவற்ற பெண்டிரை ஏற்று ரிக்கும் நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வில்லம் ஒரே த்தில் 300 பேர் இருப்பதற்கு இடவசதி கொண்டுள்ளது. புதுவாழ்வு குநர், சீர்திருத்த நிர்வாக இயக்குநர், தாயகம் திரும்பியோருக்கான ட்டத் தனித் துணை ஆட்சித் தலைவர் ஆகியோர் சிறப்பு இல்லத்தில் பதற்கு அனுமதி வழங்குகின்றனர். தையற்கலை, பாய் பின்னுதல் ன்று பயனுள்ள கைத்தொழில்கள் இல்லவாசிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. கைத்தொழில்கள் அவர்கள் இவ்வில்லங்களைவிட்டு வெளிவந்த பின்னர்

வாழ்க்கை நடத்துவதற்கு உதவியக இருக்கும். 30 வயதிற்குட்பட்ட பெண்கள் முதியோர் கல்வி வகுப்புகளுக்குச் செல்கின்றனர். 30-50 வயதிற்குள் உள்ள பெண்கள் பாய் முடைதல் வேலையில் பயிற்சி பெறுகின்றனர். இல்லவாசிகளின் குழந்தைகள் இல்லத்திலுள்ள பாலர் வகுப்பிற்குச் செல்கின்றனர். பள்ளி செல்லும் சிறுமியர் கல்வி கற்பதற்காக மாத்தூரிலுள்ள பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் குழந்தைகளுக்கான சிறப்பு இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளிக்கு நாள்தோறும் அனுப்பபடுகின்றனர்.

குழந்தை நல இல்லம், தஞ்சாவூர்.—குழந்தை நல இந்தியச் சங்கத்தின் தஞ்சாவூர் கிளையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வில்லத்தில் 1-4-1979 ஆம் நாள் நிலவரப்படி 45 பேர் இருந்தனர். இவ்வாண்டில் 11 குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். 14 குழந்தைகள் விடுவிக்கப்பட்டனர். 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி இவ்வில்லத்தில் மொத்தம் 42 குழந்தைகள் இருந்தனர். இக்குழந்தைகள் அனைவரும், இவ்வில்லத்திற்கு அண்மையிலுள்ள உள்ளூர் பள்ளிகளுக்குச் செல்கின்றனர். பள்ளியிறுதித் தேர்வு எழுதிய ஐவரில் ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றார்.

நிதி நிலை.—மொத்தச் செலவு ரூ. 3,84,000.00, வரவு ரூ. 6,31,592.88

நன்னடத்தைப் பிரிவு.

நன்னடத்தைப் பிரிவின் பணிகள்.—நன்னடத்தை அலுவலர் தொடர்ந்து நன்னடத்தை, பிற்காப்பு மற்றும் இவை தொடர்பன காரியங்கட்கு பொறுப் பேற்கின்றனர். 1958 ஆம் ஆண்டு நன்னடத்தை சட்டம் (மத்திய அரசு சட்டம்) தமிழ்நாடு சிறுவர் சட்டம், ஆகிய சட்டங்களின் கீழ் தங்களது பணிகளையாற்றுகின்றனர். மேலும், நன்னடத்தையர்கள் மேற்பார்வைக்குள், முன்னாள் மாணவர்கள், முன்னாள் பார்ஸ்டல் பள்ளி இல்லவாசிகள், பிற்காப்பு இல்லவாசிகள், விழிப்புப்பணி இல்லவாசிகள் பிற்காப்பு நலனுக்கும் அறிவுரை கழக பரிந்துரைப்படி விடுதலை செய்யப்பட்ட முன்னாள் சிறைவாசிகள் மறு வாழ்விற்கும் நன்னடத்தை அலுவலர்கள் தொடர்ந்து பொறுப்பேற்கின்றனர்

நன்னடத்தை அலுவலர்கட்கு அனுப்பப்பட்ட முன்விடுதலை ஆணைகள் 7,850. நன்னடத்தை சட்டப்படி பார்வையில் வைக்கப்பட்டோர் 1,980.

நன்னடத்தை அலுவலர் செய்த மொத்த பார்வைகள் 30,619 அலுவலகம் வந்த நன்னடத்தையர்கள் 5,029.

நன்னடத்தை அலுவலர்களிடம் அறிக்கை கேட்கப்பட்ட வழக்குகள் 6386. சிறுவர் சட்டப்படி பார்வையில் வைக்கப்பட்ட இளங்குற்றவாளிகளின் எண்ணிக்கை 839. மேற்கண்ட பார்வையில் வைக்கப்பட்ட நன்னடத்தையர்களுக்காக நன்னடத்தை அலுவலர்களின் பார்வைகள் 2,640. 8,162 மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் அனுப்பப்பட்டன. பெறப்பட்ட வருகைகள் 2,436.

மேற்பார்வையிலுள்ள முன்னாள் பார்ஸ்டல் பள்ளி இல்லவாசிகளில் மொத்த எண்ணிக்கை 28, பார்ஸடல் பள்ளிகளிலிருந்து கேட்கப்பட்ட முன்விடுதலை அறிக்கை ஆணைகளின் எண்ணிக்கை 92. நன்னடத்தை அலுவலர்களால் பார்வையிடப்பட்டவர்கள் 281. 292 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாண்டு இவ்வில்லவாசிகளுக்கான நன்னடத்தை அலுவலர்களின் பார்வைகள் 281. சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை 292.

பார்வையிலிருந்த முன்னாள் சிறைவாசிகள் எண்ணிக்கை 72. நன்னடத்தை அலுவலர்களால் பார்வையிடப்பட்ட முன்னாள் சிறைவாசிகள் 2,732 ஆகும்.

மறுவாழ்வுப் பணிகள்.—மாநிலத்தில் உள்ள அனைத்து நன்னடத்தை அலுவலர்களால் நல்வாழ்வுப் பணி பற்றிய சிறந்த முக்கிய பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(1) அரசு மற்றும் அரசு சார்ந்த பணிகளில் வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை.	68
(2) தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை.	91
(3) சிறை மீண்ட சிறைவாசிகளின் உதவி சங்கத்தில் நிதி உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை.	60
(4) அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் நிதியுதவி பெற்று சிறு தொழில்கள் துவங்க உதவப்பட்டவர்கள்.	13
(5) பிற்காப்பு நல இல்லம், விடுதி ஆகியவற்றில் அனுமதி பெற்றோரின் எண்ணிக்கை.	21

(6) ஓய்வூதியம் பெற உதவிப்பட்டவர் எண்ணிக்கை 8

(7) மருத்துவ உதவி பெற உதவப்பட்டவர் எண்ணிக்கை 59

(8) கல்வியினை தொடர உதவப்பட்டவர் எண்ணிக்கை 32

(9) சேமிப்பு நிதி கணக்கு வங்கிகளில் துவங்க உதவப்பட்டோர் எண்ணிக்கை 43

(10) சொத்து பற்றிய சச்சரவுகள் தீர்த்து வக்கப்பட்டது 28

(11) குடும்ப சச்சரவுகள் தீர்த்து வைக்கப்பட்டோர் 84

(12) சிறைப்பட்டோருக்கு கடிதம் எழுத அவர்களில் உறவினரை தூண்டியது 58

(13) சிறைப்பட்டவர்களின் குழந்தைகளை பள்ளிகள், அனாதை இல்லங்கள் மற்றும் விடுதிகளின் சேர்த்தது 32

(14) சிறைபட்டோரை நேரில் காண அவாது உறவினர்களுக்கு நிதியுதவி பெற உதவியது 7

(15) சுழற் சங்கம், அரிமா சங்கம், பள்ளி விழாக்களில் உரையாற்றினதின எண்ணிக்கை 23

நன்னடத்தை அலுவலர்களால் செய்யப்பட்ட மொத்தப் பணிகள்.—நன்னடத்தை அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த அறிக்கைகள் 35,246 ஆகும். அனைத்து நன்னடத்தை அலுவலர்களின் மேற் பார்வையிலுள்ள பார்வையாளர்களின் மொத்த எண்ணிக்கை 4,460.

நன்னடத்தை அலுவலர்களின் கண்காணிப்பிலுள்ள 41 பேரே மீண்டும் குற்றமிழைத்து தண்டிக்கப்பட்டுள்ளனர்.

தியணைப்புப் பணி.

இம்மாநிலத்தில் 109 தியணைப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில், இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொன்றும் ஒரு தியணைப்பு வண்டியுடன் கூடிய 5 தியணைப்பு நிலையங்கள், அடங்கும்.

இவ்வாண்டில் 9,538 அழைப்புகள் வந்தன, அவற்றில் 117 உண்மைக்குப் புறம்பான அழைப்புகளாயின. 1,467 அவசர அழைப்புகளும், உயிர்காப்பு அழைப்புகளும் ஆகும். எஞ்சிய 7,954 அழைப்புகள் தீ விபத்துகள் குறித்தவை. இவற்றில் 92 கடுந் தீ விபத்து (உயிர்ச் சேதம் அல்லது ரூபாய் 50,000-க்கு மேற்பட்ட உடைமைகள் இழப்பு சம்பந்தப்பட்டவை), 290 நடுத்தரத் தீ விபத்துக்கள் (ரூபாய் 10,000-க்கு மேற்பட்டு ஆனால் ரூபாய் 50,000-க்குக் குறைவான உடைமைகள் இழப்பு சம்பந்தப்பட்டவை), 7,572 சிறிய தீ விபத்துக்கள் (ரூபாய் 10,000-க்குக் குறைவான மதிப்புடைய உடைமைகள் இழப்பு சம்பந்தப்பட்டவை) ஆகும்.

இவ்வாண்டில் தீ விபத்தில் சேதமடைந்த அல்லது இழந்த உடைமையின் மதிப்பு ரூபாய் 3,38,72,481 ஆகும். காக்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரூபாய் 30,46,26,828 ஆகும். தீ விபத்துக்களில் 123 பேர் உயிரிழந்தனர். 350 பேர் காப்பாற்றப்பட்டனர்.

துறையின் அவசர மருத்துவ ஊர்திப் பணிப் பிரிவுக்கு 7,374 அழைப்புகள் வந்தன. இவற்றில் 7,088 அழைப்புகளுக்கு வாடகை பெறப் பட்டன. இதன் மூலம் துறைக்கு ரூபாய் 1,87,921 வருவாய் கிடைத்தது. 286 அழைப்புகள் இலவச அழைப்புகளாகும்.

சிறப்புப் பணிகள்.—தீயணைப்புப் பிரிவுகள் அரசு விழாக்களிலும் தனிப் பட்டோர் விழாக்களிலும் அனுப்பி வைக்கப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்தன. குறிப்பிடத்தக்க சூழ்நிலையில் அவர்கள் நீரேற்றுப் பணியி லும் ஈடுப்படுத்தப்பட்டனர். இவ்வாண்டில் அத்தகைய 179 பணிகள் மேற் கொள்ளப்பட்டு ரூபாய் 90,873 வருமானம் ஈட்டப்பட்டது.

பட்டறை—பழுதுபார்ப்பு இயலூர்திப் பிரிவுகள்.—

இத்துறை சென்னையில் பட்டறை ஒன்றை நடத்தி வருகிறது. இப் பட்டறை, துறை வண்டிகளுக்குப் பெரும் பழுதுபார்க்கும் பணியை மேற் கொள்கின்றது. வடக்கு சென்னை நீங்கலாக, கோட்டத் தலைமையிடம் ஒவ்வொன்றிலும் பழுதுபார்ப்பு இயலூரிதிப் பிரிவு ஒன்று உள்ளது. இவ் வாண்டில் பட்டறை 15 பழுதுபார்ப்புப் பணிகளையும் பழுதுபார்ப்பு இயலூர் திப் பிரிவுகள் 57 பணிகளையும் மேற்கொண்டன.

பயிற்சி.—

இவ்வாண்டு தீயணைப்புப் படையினருக்கு இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அவற்றில் 96 பேர் தேறினர். இவ்வாண்டில் தீயணைப்புப் பணி நிலைய அதிகாரிகள் 30 பேருக்கு ஒரு பயிற்சி வகுப்பும் முதன்மை தீயணைப்புப் படைவீரர் 63 பேருக்கு இரண்டு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

பரிசுகள்.—

சுதந்திர தினத்தன்று தீயணைப்புப் பணியாளர் மூவருக்கு அவர்கள் ஆற்றிய பாராட்டத்தக்க பணிக்காக ஐந்து பணிப்பதக்கங்கள் அளிக்கப்பட்டன. தீயணைப்புப் பணியாளர் மூவருக்கு அவர்கள் ஆற்றிய வீரச் செயலுக்காக தீயணைப்புப் பணிப் பதக்கம் அளிக்கப்பட்டது. தீயணைப்புப் பணி நிலைய அதிகாரிகள் இருவர், முதன்மைத் தீயணைப்புப் படைவீரர் ஒருவர், தீயணைப்புப்படை வீரர் ஒருவர் ஆகியோருக்கு அவர்கள் பாராட்டத் தக்க விதத்தில் பணியாற்றியமைக்காக முதலமைச்சர் பதக்கம் அளிக்கப் பட்டது. இவ்வாண்டு 365 அதிகாரிகளுக்கும் தீயணைப்புப் பணியாளர் களுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தீயணைப்புப் பணியாளர் நலநிதி.—

தமிழ்நாடு தீயணைப்புப் பணியாளர் நல நிதி—நலவளர்ச்சி நிறுவனம், இடர்ப்பாட்டிலுள்ள தீயணைப்புப் படை உறுப்பினர்களுக்கு நிதியுதவி அளிக் கிறது. இந்நிறுவனத்தில் 3,272 பேர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந் நிதிக்கு அரசு ரூபாய் 10,000 மானியம் அளித்தது. உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணத் தொகை ரூபாய் 10,497.35 ஆகும்.

புதிய தீயணைப்புச் சாதனங்கள்.—

மிக உயர்மான கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்தின் போது தீயணைப் பதற்கு இங்கிலாந்திலிருந்து ரூபாய் 42 இலட்சம் செலவில் " ஸ்னோர்க்கெல் " என்றழைக்கப்படும் நவீன தீயறைப்புச் சாதனம் இறக்குமதி செய்யப்பட்டது. எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் அதனைச் சுற்றிலும் ஏற்படும் பெரும் விபத்துக்களுக்காக ரூபாய் 2.79 இலட்சம் செலவில் " கிராஷ் டெண்டர்

(Crash Tender) என்றழைக்கப்படும் சிறப்புச் சாதனம் ஒன்று அந்நிலையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது, அதுபோன்ற சாதனம் ஒன்று தூத்துக்குடி அனல்மின் திட்டத் தியணைப்பு நிலையத்திற்கு வாங்கி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

இடவசதிக் கட்டுப்பாடு.

தமிழ் நாடு கட்டிட வசதிச் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 30—9—1960 அன்று செயலுக்கு வந்தது. குடியிருப்புக் கட்டிடங்கள், பிற வசதிக்கென அமைந்த கட்டிடங்கள் ஆகியவற்றை வாடகைக்கு விடுவதை முறைப்படுத்தல், வாடகையைக் கட்டுப்படுத்தல், குடியிருப்போரை நியாயமின்றி வெளியேற்றுவதைத் தடுத்தல் ஆகியவையே இச்சட்டத்தின் நோக்கமாகும். சென்னை மாநகரில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரியாக உள்ளார். மாவட்டங்களில் கோட்டாட்சியர் இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரிகளாக உள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் செயல் வரம்பிற்குள் வரும் கட்டிடங்களில் ஏற்படும் காலி இடவசதி விவர அறிக்கையை இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரிகள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். மத்திய அல்லது மாநில அரசுகளின் உபயோகத்திற்கென அல்லது அந்த அரசுகளின் கீழ் உள்ள பொது நிறுவனங்களுக்கென அல்லது ஸ்தல ஸ்தாபன நிறுவனங்களுக்கோ அல்லது அந்த அரசுகளின் கீழ் பணிபுரியும் அலுவலகங்களின் சொந்த உபயோகத்திற்கோ தேவைப்பட்டால் காலி கட்டிடங்களை அவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

சென்னை மாநகர்.

இந்த ஆண்டில், குடியிருப்பு வசதி ஒதுக்கீட்டைப் பெறும் பொருட்டு அரசுப் பணியாளர்கள் 335 பேர் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

இந்த ஆண்டில், 111 வீடுகள் இடவசதிக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தவையாக அறிவிக்கப்பட்டன. 90 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 21 வீடுகள் இடவசதிக் கட்டுப்பாடிலிருந்து விடுவிக்கப்பட்டு, மீண்டும் [illegible]யாளரி...

ஒப்படைக்கப்பட்டன. புதிதாக 2 வீடுகள் இடவசதிக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் மொத்தம் 1,460 வீடுகள் அரசுக் குத்தகை உரிமையின்கீழ் இருந்தன. 96 வீடுகள் காலியானது குறித்துத் தெரிவிக்கப்படாமல் இருந்ததுபற்றி பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆண்டில், கட்டிட வசதி சட்டத்தின்கீழ் வழக்கு ஏதும் தொடரப்படவில்லை.

சிவில் பாதுகாப்பு.

இந்திய அரசு செங்கற்பட்டு கிழக்கு காவல்துறை மாவட்டத்தின் அதிகார வரம்பிற்குள் இரண்டு மைல் சுற்றளவுக்குள் அடங்கியுள்ள சென்னை மாநகர எல்லையோரப்பகுதிகள் உட்பட 2 ஆம் நிலை உள்நாட்டு பாதுகாப்பு நகரமாக இருந்ததை 1 ஆம் நிலை உள்நாட்டு பாதுகாப்பு நகரமாக நிலை உயர்த்தியுள்ளது. எனவே, இரண்டு மைல் சுற்றளவுக்குள் அமைந்துள்ள முக்கியமான தொழிற்சாலைகள். நிறுவனங்கள் உட்பட சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதி முழுவதற்கும் உள்நாட்டு பாதுகாப்புத் திட்டங்கள் வகுப்பதோடு ஏற்பாடுகளும் செய்யவேண்டும். 1 ஆம் நிலை உள்நாட்டு பாதுகாப்பு நகரங்களில் பாதுகாப்புப் பணிகளாக மேற்கொள்ள வரையறுத்துள்ள 12 பணிகள் விவரம் வருமாறு :—

தலைமையிடம்

செய்தி தொடர்புகள்

வார்டன்

அவசரச் சிகிச்சை

தீயணைப்புப் பணி

பயிற்சி

மீட்புப் பணி

அனுப்புதல், போக்குவரத்து

வழங்கல்

சிதைந்த பொருட்களை மீட்டல்

நலப்பணி

சடலங்களை அப்புறப்படுத்துதல்

எச்சரிக்கை சங்கொலி முறைகளை செவ்வனே பராமரிக்க சென்னை மாநகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் நிலையங்களிலும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மின் நிலையங்கள், ஏனைய பணிமனைகள் போன்ற முக்கிய தொழிற்சாலைகள் அமைந்துள்ளவையும் செங்கற்பட்டு கிழக்கு காவல்துறை மாவட்ட அதிகார வரம்பிற்குள் வருகின்றவையுமான மேற்படி மாநகர எல்லையோரப்பகுதிகளில் உள்ள இடங்களிலும் உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைக்காக அபாயச் சங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மணலி மின்னிணைப்பு நிலையத்தில் 60 அடி உயர உருக்குக் கோபுரம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. அபாய சங்கை ஒலிக்கச் செய்ய அதற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான பணி உட்பட மின் பணி, பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டங்களையும் ஏற்பாடுகளையும் செயல் படுத்துகையில் அவசியம் ஏற்படுகின்றபோது காவல் துறை அதிகாரிகள் ஊர்க்காவல் படை அதிகாரிகள் ஆகியோரின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு உள்நாட்டுப் பதுகாப்புத் தனிப் பயிற்சி முறைகள் பலவற்றில் பயிற்சி பெறவேண்டி அவர்கள் நாக்பூருக்கு அனுப்பப் பட்டுவருகின்றனர்.

திரைப்பட இயல்.

திரைப்படம் காட்டுவதற்குச் சான்றிதழ்கள் அளித்தல், திரைப்படக் கருவிகள் மூலம் திரைப்படம் காட்டுவதை முறைப்படுத்தல் ஆகியவற்றுக்கு வகை செய்வதற்காக, மத்திய அரசு, 1952 ஆம் ஆண்டு திரைப்படக்கருவிகள் சட்டத்தை இயற்றியது. தமிழ் நாடு அரசும் 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரைப்பட அரங்கு (முறைப்படுத்துதல்) சட்டத்தை (சட்டம் எண் 9/1955) இயற்றியது. திரைப்பட அரங்குகளில் படங்களைக் காட்டுவதற்காகத் தனியாருக்கு உரிமங்கள் வழங்க இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி, மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரே உரிமம் வழங்கும் அதிகாரியாவார். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில்

காவல்துறை கமிஷனரே உரிமம் வழங்கும் அதிகாரியாவார். திரைப்படக் காட்சி உரிமம் வழங்குவதில் இரண்டு நிலைகள் உள்ளன. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்குதல்
2. 'சி' படிவ உரிமம் வழங்குதல்

மறுப்பின்மை சான்றிதழ்கள்—'சி' படிவ உரிமங்கள்

1979-80 ஆம் ஆண்டில் மாநிலத்தில் நிலையான ஓரளவு நிலையான டூரிங் திரைப்பட அரங்குகள் ஆகியவற்றிற்கு 349 மறுப்பின்மைச் சான்றிதழ்களும், 309 'சி' படிவ உரிமங்களும் வழங்கப்பட்டன.

உரிமம் வழங்கும் அதிகாரியின் அதிகாரங்கள்

இச்சட்டத்தின் விதித் துறைகளுக்கு இணங்காவிடினும் விதித்துறைகளை மீறினாலும் உரிமங்களை ரத்து செய்யவோ அல்லது தற்காலிகமாக ரத்து செய்யவோ உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினர் கேட்டுக்கொள்வதன் பேரில் ஒருவர் பேரிலுள்ள உரிமத்தை பிறிதொருவர் பெயருக்கு மாற்றுவதற்கும் இவர்களுக்கு அதிகாரமுண்டு.

மேல் முறையீட்டு அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்

நில நிர்வாக ஆணையாளர் மேல் முறையீட்டு அதிகாரியாக இருக்க சட்டமும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் அதிகாரமளிக்கிறது. மறுப்பின்மைச் சான்றிதழ் அல்லது 'சி' படிவ உரிமம் வழங்கப்படுவதனால் அல்லது மறுக்கப்படுவதனால் அல்லது உரிமம் புதுப்பிக்கப்படுவதனால் அல்லது மறுக்கப்படுவதனால் அல்லது உரிமம் மாற்றம் செய்யப்படுவதனால் அல்லது மறுக்கப்படுவதனால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் ஆணை பெற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நில நிர்வாக ஆணையாளருக்கு முறையீடு செய்துகொள்ளலாம். தாமதத்திற்கான போதிய காரணங்களை எடுத்துரைத்தால் வரையறுக்கப்பட்ட 30 நாட்களுக்கு மேல் 2 மாத காலத் தாமதத்திற்கு நில நிர்வாக ஆணையாளர் மன்னித்து கால நீடிப்பு வழங்கலாம். சம்பந்தப்பட்ட தரப்பினர், தாமாகவோ, அல்லது தமது வழக்கறிஞர்

மூலமாகவோ எடுத்துரைக்கும் கருத்துக்களை நில நிர்வாக ஆணையாளர் நேரடியாகவே கேட்டறிந்து மேல் முறையீடுகளை முடிவு செய்கிறார். மேல் முறையீடு முடிவு செய்யப்படும் வகையில் இடைக்காலத் தடை அளிப்பதற்கு நில நிர்வாக ஆணையாளருக்கு அதிகாரமுண்டு, மேல்முறையீட்டு அதிகாரியின் ஆணையினால் பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு மறு ஆய்வு மனு செய்து கொள்ளலாம்.

மாநில அரசின் அதிகாரங்கள்

அரசே விதிகள் இயற்றும் அதிகாரமன்றமாகும். இச்சட்டம் அல்லது விதிகளின் எந்த ஒரு விதிகளிலிருந்தும் விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கே உண்டு. மேல்முறையீட்டு அதிகாரியின் முடிவை எதிர்த்து செய்யப்படும் மறு ஆய்வு மனுக்களை அனுமதிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

திரைப்பட அரங்குகளின் வகை.

தமிழ் நாட்டில் மூன்று வகையான திரைப்பட அரங்குகள் உள்ளன :—

1. நிலையான திரைப்பட அரங்கு.
2. ஓரளவு நிலையான திரைப்பட அரங்கு.
3. டூரிங் திரைப்பட அரங்கு.

ஓரளவு நிலையான திரையரங்கு என்பது 1970 ஆம் ஆண்டு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுவகைத் திரையரங்காகும். ஏனைய எல்லாக் காரியங்களுக்காகவும் இவை நிலையான திரையரங்கு போலவே கருதப்படுகின்றன. (5 முதல் 7 ஆண்டு கால முடிவில் இது நிலையான திரையரங்காக மாற்றப்படக்கூடும்). நிலையான திரையரங்குகளுக்குப் பொருந்தும் விதிகள், ஓரளவு நிலையான திரையரங்குகளுக்கும் பொருந்தும். மேற்சொன்ன மூன்று வகைகளைத் தவிர திறந்த வெளித் திரையரங்குகளும் உள்ளன. செங்கல்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் சோமங்கலம் கிராமத்தில் 1976 ஆம் ஆண்டில் திறந்த வெளி திரையரங்கம் ஒன்று செயல்படத்தொடங்கியது.

1980ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் நிலவரப்படி, தமிழ் நாட்டில் உள்ள திரையரங்குகளின் புள்ளி விவரம் வருமாறு:—

1. நிலையான திரையரங்குகள்	867
2. ஓரளவு நிலையான திரையரங்குகள்	98
3. திறந்த வெளி திரையரங்குகள்	3
4. டூரிங் திரையரங்குகள்	915
	1,883

தமிழ் நாடு திரைப்பட அரங்குகள் சட்டத்தின் விதித்துறைகள் இவ்வாண்டில் கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட்டன.

அத்தியாயம் X.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட தனிச் சட்டப்படிக்கான ஓர் அமைப்பாகும். இவ்வாரியத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் அரசு நியமனம் செய்கின்றது.

திட்டத்தின் முன்னேற்றம்—

நலியுற்ற ஏழை மக்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1,424 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. இதற்கு ரூபாய் 39.19 இலட்சம் செலவிடப்பட்டது. குறைந்த வருமானமுடையவருக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1,507 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. இதற்கு ரூபாய் 226.95 இலட்சம் செலவிடப்பட்டது.

நடுத்தர வருமானம் உடையவருக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 842 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. இதற்கு ரூபாய் 415.83 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 936 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. 1982 தொகுதிகளுக்கான கட்டுமானப் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இதற்கு ரூபாய் 315.98 இலட்சம் செலவிடப்பட்டது.

நிலம் கையகப்படுத்தலும் புதிய சுற்றுப்புற வளர்ச்சித் திட்டங்களும்—

வீட்டு வசதி வாரியம், பெரும் நிலப்பரப்பை கையகப்படுத்தி, அவற்றை மேம்படுத்தி அவ்வப்போது சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு விற்பனை செய்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட சுற்றுப் புறப் பகுதிகள் அகலமான சாலைகள், தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட

குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், புள்ளிகள், மருத்துவ மனைகள், விளை யாட்டு இடங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற எல்லா வசதிகளையும் பெற்றுள்ளன. சென்னைமாநகரில், சாஸ்திரி நகர், இந்திரா நகர், அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், கொரட்டூர், வியாசர்பாடி, அறிஞர் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், திருவான்மியூர் போன்ற பகுதிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட் டுள்ளன. இதே போன்று மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி. ஈரோடு, திருச்செங்கோடு, வேலூர் போன்ற நகரங்களின் சுற்றுப்புறப் பகுதி களும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவ் வாண்டில், வீட்டு வசதி வாரியம், சென்னைமாநகரிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் 113.78 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது. இந்த ஆண்டில், ரூபாய் 96.03 இலட்சம் நில ஈட்டிற்காகவும், நிலத்தை வளப்படுத்து வதற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

பிறத்துறைப் பணிகள்—

ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர்ப் பகுதி வளர்ச்சி அதிகார மன்றம் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மறைமலை நகரில் ரூபாய் 235 இலட்சம் செலவில் 500 ஏக்கர் பரப்பில் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அங்கு சாலைகளை அமைத்தல், மழை நீர் வடிகால் அமைத்தல், சிறு பாலங் கள் கட்டுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப் படைக்கப்பட்டிருக்கிறது. அப்பணிகள் முடியும் தருவாயிலுள்ளது. இவை தவிர் குறைந்த அளவு வருமானத் தொகுதியினருக்கு 144 வீடுகள் கட்டும் பணியையும் வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. இவ்வாண்டில், குறைந்த வருமானத் தொகுதியினருக்கு 504 வீடுகள் கட்டும் பணியும் மேற் கொள்ளப்பட்டது. மணலியில் ரூபாய் 365 இலட்சம் செலவில் 419 ஏக்கர் பரப்பில் மற்றொரு வளர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்த சென்னை பெருநகர்ப் பகுதி வளர்ச்சி அதிகார மன்றம் கருதியுள்ளது. இப்பகுதியில் 212 ஏக்கர் பரப்பை மேம்படுத்தும் பணி வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. இவை தவிர குறைந்த அளவு வருமானத் தொகுதியினருக்கு 960

வீடுகள் கட்டும் பணியும் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவற்றில் 305 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 655 வீடுகள் கட்டும் பணி பல வேறு நிலைகளில் இருந்தன.

மனைகளும் சேவைகளும்—

வீட்டு வசதி வாரியத்தின் மனநிறைவளிக்கும் திட்டங்களில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் மனைகள் சேவைகள் குறித்த திட்டம் ஒன்றாகும். உலக வங்கி பொறுப்பு ஏற்கும் இத்திட்டத்தால் சென்னை பெரு நகர் பகுதியில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள தொகுதியினர் பெரும் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 13,467 வீட்டு மனைகள் வழங்கப்படும். இவற்றில் 9,760 வீட்டு மனைகள் வறுமைக் கோட்டிற்கும் கீழேயுள்ள தொகுதியினருக்கும் எஞ்சியுள்ளவை குறைந்த வருமான தொகுதியினருக்கும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் 932.82 இலட்சம். இத்தொகை 4 ஆண்டுகளில் செலவிடப்படும். மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகள் தவிர, சிறு தொழில்களுக்காகவும், வணிகப் பயனுக்காகவும் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரும்பாக்கத் திட்டம் முடிவடைந்துள்ளது.

ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்—

இம்மாநிலத்தில், ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதித் திட்டப்பணியை செயல் படுத்துவதற்கு முகவராக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் ரூபாய் 390.54 இலட்சம் செலவிலான திட்டத்திற்கும் மதுரையில் ரூபாய் 500.00 இலட்சம் செலவிலான திட்டத்திற்கும் மத்திய அரசு அனுமதியளித்தது. இப்பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

வீட்டுவசதி, நகர்ப் பகுதி வளர்ச்சிக் கழகத்தின் பணி—

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு முக்கிய நிதி வசதி செய்யும் நிறுவனம் புதுடெல்லியிலுள்ள வீடு மற்றும் நகர் பகுதி வளர்ச்சி கழகமாகும். இவ்வாண்டு இவ்வாரியம் ரூபாய் 12 கோடிக்கு மேலாக அனுமதி பெற்றுள்ளது.

வருவாய் வசூல்கள்—

இவ்வாண்டில் ரூபாய் 1,002.69 இலட்சம் வருவாய் வசூல் செய்யப்பட்டது.

நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டம்.

நகர், ஊரமைப்பு சட்டம், 1971, முக்கிய குறிக்கோள் நில ஒதுக்கீடு சீரான திட்டத்துக்கு வழி வகுத்தல், பகுதிகளை அபிவிருத்திகள் செய்தல், நகர கிராம நிலப் பகுதி உபயோகத்தினை நிர்ணயித்தல் ஆகியவையாகும். குறிப்பிட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட செயல்முறை திட்டம் முறையான வழி முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வாறு மாநிலத்தில் மண்டலத் திட்டங்களை மண்டலங்களுக்கும் பெரு நகரங்கள் முழுமை திட்டங்களையும் மண்டலத் திட்டங்களின் கூட்டுக் கோப்புக்கும் நகர மையங்களின் உட்பகுதி மற்றும் சுற்றிலும் விரிவு, அபிவிருத்தி திட்டங்களையும் முழுமைத் திட்டங்களில் கட்டுக் கோப்புக்குள் சிறு பகுதிகளை தொழில் அல்லது இதர நில அபிவிருத்தித் திட்டங்கள் பெரிய மற்றும் சிறிய பகுதிகளில் தயாரிக்கும் பணியினையும் இவ்வியக்ககம் மேற்கொண்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க தேவையான வழிமுறைகள் பின்பற்றுவதை சுருக்கமாக கீழ்க் கண்ட பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்டலத் திட்டங்கள் :

மண்டலத் திட்டங்கள் இவ்வியக்ககம் ஏற்கனவே தமிழ்நாடு மாநிலத்திலுள்ள எட்டு மண்டலங்களுக்கான வரைவு நிலை மண்டல அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. இத்திட்டங்களை மேலும் தெளிவுபடுத்தி காலமுறைபடுத்தும் பணி தொடர்கின்றது. இத்துறை பின்னர் (மண்டல) மாவட்ட திட்டங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு இராமநாதபுரம், தஞ்சை, மதுரை மாவட்டங்களுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது. தர்மபுரி, சேலம், மாவட்ட திட்டங்கள் தயாரிக்கும் பணி நடைமுறையில் இருந்து வருகின்றது.

வருவாய்ப் பிரிவுக்கான பிரிவு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் பணியில் இயக்ககம் செயல்படத் துவங்கியது. சிறு மண்டலத் திட்டம் மதுரை, சிதம்பரம், சிவகங்கை வருவாய் பிரிவுகளுக்கு தயாரிக்கப்பட்டது. சங்கரி, இராமநாதபுரம், வருவாய்ப் பிரிவு திட்டத் தயாரிப்பு பணி நடைமுறையில் இருந்து வருகின்றது.

மேம்பாட்டு திட்டங்கள்—

முழுமை திட்டங்கள் :

ராஜபாளையம், திருமங்கலம், கடலூர் நகரங்களுக்கான முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மண்டபம், பாம்பன், பரமக்குடி, ராமநாதபுரம், மாயவரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், ராசிபுரம், விருத்தாசலம், சிவகாசி, தேனி-அல்லிநகரம், தாராபுரம், திருப்புவனம், திருப்பூர், மேட்டுப்பாளையம், உடுமலைப்பேட்டை, தர்மபுரி, தென்காசி, கிருஷ்ணகிரி, மானாமதுரை ஆகிய நகரங்களுக்கான முழுமை திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் பொள்ளாச்சி நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் நிகழ்காலப்படுத்தும் பணி முடிவு பெற்றது. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, 23-வது பிரிவின்படி 204 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் இவ்வாண்டில் அறிவிக்கப்பட்டது. 21 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் சட்டத்தின் 29-வது பிரிவின்படி அங்கீகரிக்கப்பட்டன.

பிற பணிகள் :

தலைமையகத்தில் 1 மனைப் பிரிவு, 1 மனை உட்பிரிவு, 15 திட்ட மாற்றங்கள், 8 குடியிருப்புப் பகுதி மற்றும் தொழிற் பகுதி பிரிவு செய்தல் ஆகியவற்றினை இவ்வாண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எட்டு மண்டல அலுவலகங்களில் மொத்தமாக 1,400 மனைப் பிரிவுகளும், 105 பொதுக் கட்டிட வரைப்படங்களுக்கும், 1,576 தொழிற்சாலை வரைபடங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கட்டிடங்கள் :

இத்துறையில் 3,775 கட்டிட மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம், 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. (இச்

சட்டம் பின்னர் தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு 22 ஆம் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது). மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இந்த அதிகார மன்றத்தின் தலைவராவார். இந்த அதிகார மன்றம், தொழில் நுணுக்கம் அறிந்த வல்லுநர்களுடன் துணைத் தலைவர் தலைமையின்கீழ் இயங்கி வந்தது. இந்த அதிகார மன்றத்தில் 15 உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர் இருவரும் இருந்தனர்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தில் சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு மாவட்டத்தின் 4 நகராட்சிகள், 5 நகரியங்கள், 17 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. அறிக்கையாண்டில், இவ்வதிகார மன்றத்தின் அதிகார வரம்பு மாறாமல் இருந்தது. இந்த அதிகார வரம்பு 1,167 சதுர கிலோ மீட்டர் பரப்புக்குப் பரந்துள்ளது.

நோக்கங்கள் :

முறையான வளர்ச்சிப் பணிகளுக்குத் திட்டங்களைத் தயாரித்தல், பொது மக்கள் நேரடியாக முதலீடு செய்தல், வளர்ச்சித் திட்டத்திற்கிணங்க தனியார் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகளை முறைப்படுத்துதல், முக்கிய இடங்களில் வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்துதல் ஆகியவை இந்த அதிகார மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், இந்தியாவிலேயே முதலாவது திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 46.80 கோடியாகும். இது 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1983 மார்ச்சுக்குள் இத்திட்டம் எல்லா நிலைகளிலும் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பல்வேறு பணித் திட்டங்களை நிறைவேற்றும் முகவர்களாவன : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம், சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகம், நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை மாநகராட்சி மற்றும் மாநில காவல் துறை ஆகும்.

1979-80 ஆம் ஆண்டில் வீடு கட்ட மனைகளைத் தெரிந்தெடுத்தல், குடிசைப் பகுதி மேம்பாடு, சிறுதொழில்-குடிசைத் தொழில், தாய்-சேய் நலம், குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல், சாலை-போக்குவரத்து மேம்பாடு, பெருந்து போக்கு வரத்து, தொழில் நுட்ப உதவி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 954.52 இலட்சம் செலவிடப்பட்டது.

நிலம்/பகுதி மேம்பாடு :

மணலியில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் மறைமலை நகர், கோயம் பேட்டிலுள்ள மொத்த விற்பனை அங்காடி ஆகியவற்றில் நடைபெற்றுவரும் பணிகள் குறித்த விவரங்கள் வருமாறு :

(1) மணலி நகர்ப்புறப் பகுதி.—14.45 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையில், 11.65 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை போடும் பணி முடிக்கப் பட்டது. ஏனைய பணிகள் நடைபெற்று வந்தன. கட்ட உத்தேசிக்கப்பட்ட 3.68 கிலோ மீட்டர் நீளமுள்ள கல்கட்டுமான வடிகால்களில், 2.48 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடிகால்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மண்ணைக் கொட்டி நிரப்பும் பணி முடியும் தருவாயில் இருந்தது. வடிகாலுக்கான குழாய்கள் போடப்பட்டன. நீரேற்று நிலையத்தைக் கட்டும் பணி முடியும் தருவாயிலிருந்தது. மேல்நிலை நீர்த் தொட்டி கட்டி முடிக்கப் பட்டு நீர் வழங்குக் குழாய்கள் போடப்பட்டன.

குறைந்த வருமானத் தொகுதியினருக்காக கட்டக் கருதப்பட்ட 543 வீடுகளில், 383 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டன.

குறைந்த வருமானத் தொகுதியினருக்கான 47 வீட்டு வசதித் திட்டங்கள் நடந்தேறி வந்தன. இவ்வாண்டில் ரூபாய் 47.57 இலட்சம் செலவிடப்பட்டது.

(2) மறைமலை நகர்.—(புதிய நகரம்)தொழிற்சாலைப் பகுதி—5,144 மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போடப்பட்டன. மேல்நிலை நீர்த்தொட்டி கட்டி முடிக்கப்பட்டது. 7.3 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குடிநீர்க் குழாய்கள் போடப்பட்டன.

புறநகர்ப் பகுதி-1 இல் கரளைக் கல் பரப்பித் தார்ச் சாலை போடும் பணி நடந்தேறி வந்தது. 8,388 மீட்டர் நீளத்திற்குக் குடிநீர்க் குழாயும் 1.8 கிலோ மீட்டர் தொலைவிற்கு வடிகாலும் போடப்பட்டது. குறைந்த வருமானத் தொகுதியினருக்காக 144 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கப் பட்டன. புறநகரப் பகுதி-2-இல் குடிநீர்க் குழாய் போடப்பட்டது. சாலை போடு பணிகள் நடந்தேறி வந்தன.

புறநகர்ப் பகுதி-3-இல் தொடக்கப் பணிகள் நடந்தேறி வந்தன. 2, 3 பகுதிகளில் குறைந்த வருமானத் தொகுதியினருக்காக 504 வீடுகளும், நடுத்தர வருமானத் தொகுதியினருக்காக 30 வீடுகளும் கட்டும் பணி நடந்தேறி வந்தது. இவ்வாண்டில் ரூபாய் 32.36 இலட்சம் செலவிடப்பட்டது.

(3) கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி.—திட்டமும், நிலங் களைக் கையகப்படுத்துதலும் நடந்தேறி வந்தன.

வளர்ச்சிப் பணிகளை முறைப்படுத்துதல்—

இவ்வாண்டில் பெறப்பட்ட 1,829 விண்ணப்பங்களில், 619 விண்ணப்பங் களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 1,036 விண்ணப்பங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. 93 செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்பப்பட்டன. எஞ்சியுள்ள 81 விண்ணப்பங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தின் பரிசிலனையில் உள்ளன.

விரிவான வளர்ச்சித் திட்டங்கள்—

விரிவான வளர்ச்சித் திட்டங்கள் இரண்டிற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அரசின் ஒப்புதல் பெற வேண்டி 31 திட்டங்கள் அனுப்பப்பட்டது. 4 திட்டங்கள் குறித்துக் கருத்துக் கேட்க உரிமையாளர்கள் அழைக்கப்பட்டனர். 4 திட்டங்கள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து மறுப்புகளும் கருத்துக்களும் கேட்கப்பட்டன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

சென்னை நகரத்தில் குடிசை குடியிருப்புகளை முடிவாக மாற்றுவதற்கு சட்டபூர்வமாக தமிழ்நாட்டு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970-ல் துவக்கப் பட்டது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டு, பணிகள் 1971-72 முதல் சீராக செயல்படத் தொடங்கியது. வாரியத்தின் சாதனைகள் கடந்த ஆண்டுகளைவிட 1979-80 ஆம் ஆண்டு மிகவும் திருப்தி யளிக்கும் நிலையை அடைந்துள்ளது.

பல துறைகளில் வாரியம் செயல்பட்டமைக்கான செலவு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

வருடம்.	குடிசை மாற்று திட்டம்.	சுற்றுப் புற மேம் பாட்டு திட்டமும் விரைவு படுத்தப் பட்ட மேம்பாட்டு திட்டம்	உலக வங்கித் திட்டம்.	பழுது பார்த் தல் பரா மரிப்புத் திட்டம்.	வருவாய் ஈட்டுத் திட்டம்.	மொத் தம்.
78–79	282.52	21.00	102.00	62.11	6·13	473.76
79–80	334.29	80.61	152.65	70.81	10·00	649.05

குடிசை மாற்று திட்டத்தின் கீழ் 2,428 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்று குடியமர்த்துவதற்கான தயாரான நிலையில் உள்ளது. 1,660 குடி யிருப்புகள் முடிவுரும் தருவாயில் இருக்கிறது. அவைகள் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் குடியிருப்பதற்கு தயாரான நிலையில் ஆகிவிடும். குடிசை மாற்று திட்டத்தின்கீழ் மட்டுமல்லாமல், உலக வங்கி திட்டத்தின் கீழும் ரூபாய் 152.65 இலட்சம் செலவு செய்யப்பட்டு சுமார் 12,461 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். குடியிருப்பு பராமரிப்பு திட்டத்தின் கீழும் ரூபாய் 70.81 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்துறையிலும் கடந்த ஆண்டுகளைவிட வாரியம் நடப்பு ஆண்டில் அதிக பணம் செலவழித்துள்ளது. 1979-80 ம் ஆண்டில் வாடகை வசூல் ரூபாய் 55.75 இலட்சம். கடந்த ஆண்டுகளைவிட ரூபாய் 5 இலட்சம் கூடுதலாக பணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் XI

தொழில் துறை

மாநில மண்ணியல்.

மாநில புவியியல் பிரிவு இந்த அறிக்கை ஆண்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொண்டது. முக்கியமான விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

ஆய்வு பணிகள் :

கன்னியாகுமரி மாவட்டத்தின் கனிகள் ஆய்வு—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம், மிடலாம் போன்ற பகுதிகளில் களிமண்ணிற்கான ஆய்வு பணிகள் இவ்வருடமும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டன. தேரி அல்லது செம்பூராங்கன் மண்ணிற்குக் கீழே 15-20 மீட்டரி லிருந்து 30-32 மீட்டர் ஆழம் வரை களிமண் படிவங்கள் கிடைப்பது கண்டறி யப்பட்டுள்ளது. மேற்கூறிய ஏழு துறைகளில் மொத்தம் 151 மீட்டர் ஆழம் வரை துரப்பணம் செய்யப்பட்டன. மொத்தம் 500 களிமண் மாதிரிகள் எடுக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டம், கடன்குளம் பகுதியில் சுண்ணாம்புக்கல் ஆய்வு—

இப்பகுதியில் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்காக சாத்தியக் கூறுகளை கண்டறிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

பத்து துரப்பணத் துறைகள் 96.7 மீட்டர் ஆழத்திற்கு துரப்பணம் செய்யப்பட்டது. 94 மாதிரிக் குழிகள் தோண்டப்பட்டு சுண்ணாம்புக்கல் மாதிரிகள் எடுக்கப்பட்டன. சுண்ணாம்பு படிவத்தில் தடிமானம் 0.3 மீட்டரி லிருந்து 9.3 மீட்டர் வரை இருக்கிறதென மேற்சொன்ன சோதனைக் குழி மற்றும் துரப்பணத்தின் வாயிலாகத் தெரியவருகிறது. இவை தரை மட்டத்தி லிருந்து 0.5 மீட்டர் காரைப்படிவங்களின் கீழே கிடைக்கிறது. மொத்தம் 270 மாதிரிகள் எடுக்கப்பட்டு இரசாயன பகுப்பு ஆய்வுகள் செய்யப்பட்டன. சிமெண்ட் தயாரிக்கத் தேவையான சுண்ணாம்பு கற்களில் கால்சியம் ஆக்ஸைடு

33.35—54.74 சதவீதம் வரையிலும், சிலிகான் டை ஆக்ஸைடு மற்றும் கரையாப் பொருட்கள் 1.15—31.42 சதவீதம் வரையிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இங்கு சுமார் 3 மிலியன் டன் சிமெண்ட் தரமுடைய சுண்ணாம்புக் கற்கள் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி-திருநெல்வேலி மாவட்டங்களில் கிரிசோபெரில் ஆய்வு—

கிரிசோபெரில், சார்னக்கைட், பயோடைட் நைஸ் போன்ற பாறைகளில் ஊடுருவிய பெக்மடைட் பாறைகளில் கிடைக்கின்றது. கிரிசோபெரில் மற்றும் வேறு ஆயரணக் கற்களின் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. தடிக் காரகோளம். மகேந்திர கிரி காடுகள், மற்றும் முடவன்குளம் பகுதிகளில் இக்கற்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. கிரிசோ பெரிலுக்கான ஆய்வுகள் மேற்கொள்ள மேலும் எட்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

முடவன்குளம், கடிகாரக்கோணம் போன்ற இடங்களில் அதிக ஆழக் குழிகள் போட்டு ஆய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முடவன் குளத்தில் ஒரு பழைய ஆய்வுக் குழியில் 9 மீட்டர் ஆழம்வரை தோண்டப் பட்டது. இதிலிருந்து சுமார் 15 கிராம் பச்சை நிறமுடைய குறைந்த தரமுடைய கிரிசோபெரில் எடுக்கப்பட்டது. தடிக்காரன் கோணத்தில் ஒரு பழைய குழி 4-லிருந்து 8 மீட்டர் ஆழம் வரை தோண்டப்பட்டது. இதிலிருந்து சுமார் 20 கிராம் எடையுள்ள உடைந்த மற்றும் நொறுக்கப்பட்ட எலுமிச்சை நிறமுடைய கிரிசோபரில் எடுக்கப்பட்டது.

இப்பகுதியில் மேற்கொண்டு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிய தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்துடன் கரூர்-திண்டுக்கல் இடையே உள்ள பகுதிகளில் பாளையம் அருகே சுண்ணாம்பு கற்களுக்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1 : 4000 மற்றும் 1 : 8000 அலகுகள் கொண்ட கிராமிய வரைபடங்களில் விரிவான முறையில் சுண்ணாம்புக்கல் கொடிகள் வரைபடம் செய்யப்பட்டன. 16 வரிப்பள்ளங்கள் தோண்டப்பட்டு மாதிரிகள் எடுக்கப்பட்டன. 46 துரப்பணத்துறைகள் நிர் மானிக்கப்பட்ட கோணங்களில் துரப்பணம் செய்யப்பட்டன. மேலும் 2,000-க்கும் மேற்பட்ட துருவல் மாதிரிகளும் 800 வரிப்பள்ள மாதிரிகளும்

எடுக்கப்பட்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் இரசாயன பகுப்பாய்வகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டன.

இதுவரை நடத்திய ஆய்வுகளின்படி சிலிகா அளவு அதிகமுள்ள சுமார் 25 மில்லியன் டன் சுண்ணாம்புக் கற்கள் வெட்டியெடுக்கக்கூடும் என கண்டறியப் பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு பற்றிய ஆய்வு.—மாநிலப் புவியியல் ஆய்வுப் பிரிவும், இந்திய நிலவியல் ஆய்வுத் துறையும் சேர்ந்து கூட்டாக, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவுகளின் காரணங்களை ஆராய முற்பட்டுள்ளது மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படாதிருக்கவும், பொருள்கள் சேதமடையாதிருக்கவும் நீண்டகால பாது காப்பு நடவடிக்கைகள் பரிந்துரை செய்யத் தீவிர ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. நீலகிரி மாவட்டம் முழுவதும் 1 : 10,000 அலகில் விமானத்திலிருந்து நிழற்படங்கள் எடுக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இப்பணி தொடங்கப்பட்டது. சோலூர், கூக்கல் துறையிடையேயும் ரருண்ணிமேடு குந்தா போன்ற பகுதிகளிலும் சுமார் 230 ச.கி.மீ. பரப்பளவிற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1979 ஆம் வருடத்தில் ஆகஸ்டு-அக்டோபர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பலனாக, நிலச்சரிவுகள் ஏற்படக்கூடிய இடங்களை முன்கூட்டியே குறிப்பிட முடிந்ததால் மாவட்ட ஆட்சியாளரால் பருவ மழையின்போது நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது.

நீலகிரி மாவட்டம் மோயார் பள்ளத்தாக்கில் களிமவள ஆய்வு.—தென்குமர ஹடா, பவானிசாகர் அருகில் மாக்னசைட் படிவங்கள் கிடைப்பதாக இந்திய புவியியல் ஆய்வுத்துறை குறிப்பிட்டதற்கிணங்க, இக்களிமப் படிவத்தின் தரத்தை அறிய 1980 ஆம் வருடம் சனவரி மாதத்தில் பூர்வீக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. சில மாக்னசைட் மாதிரிகள் எடுக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்வு செய்யப்பட்டது.

மேற்கூறிய ஆய்வுகளைத் தவிர சிறிய கனிம ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டன. கோயம்புத்தூர் மாவட்டம் காரமடைக்கருகில் பெல்ஸ்பார் ஆய்வு, சேலம் மாவட்டம் திருச்சங்கோடு வட்டத்தில் வெங்கக்கல் ஆய்வு, இராமநாத

புரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதிகளில் தரிக்கல் ஆய்வு மற்றும் கடற்கரைப் பகுதியில் உப்பள நீர்பற்றிய ஆய்வு போன்றவை அவற்றில் சிலவாகும். நீலகிரி மாவட்டத்தில் மைக்கா படிவங்களுக்காக முன்னோடி ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

ஆய்வுக்கூடங்கள்.—இரசாயன பகுப்பாய்வகத்தில் பெறப்பட்ட 991 மாதிரிகளில் 764 ஆய்வு செய்யப்பட்டது. இவற்றின் மொத்தம் 5,500 கூறுகள் ஆராயப்பட்டன. தென்னாற்காடு மாவட்டம், மரக்காணம் பகுதியில் கிடைக்கும் தரம் குறைந்த சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சுண்ணாம்புச் சாந்து செய்யும் விரிவான திட்டத்திற்கான ஆய்வு இப் பகுப்பாய்வகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

சுரங்கப் பணிகள்.—மாநிலப் புவியியல் பிரிவின் ஒரு பகுதியான இப்பிரிவு கனிம உரிமை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அரசிற்குப் பரிந்துரைகள் அனுப்புகின்றது. மேலும், சுரங்கம் மற்றும் உரிமம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பங்களிலும், சட்ட நுணுக்கங்களிலும் அரசிற்குத் தனது அறிவுரைகளைத் தருகின்றது. தற்போது திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் கடலூர் போன்ற 6 இடங்களில் மண்டலச் சுரங்க ஆய்வு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

201 அங்கீகாரப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. 49 கனிம உரிம விண்ணப்பங்கள் வந்ததில் 42 விண்ணப்பங்கள் அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டன.

சிறு கனிம நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட 65 முறையீடு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

தொழில்- வணிகம்.

தொழில் துறை இயக்குநர் தொடர்ந்து அத்துறையின் தலைவராக இருந்து வருகிறார். தொழில் நுட்பப் பிரிவில் 4 இணை இயக்குநர்களும், நிர்வாகப் பிரிவில் 2 இணை இயக்குநர்களும் தலைமை இடத்தில் இயக்குநருக்கு

உதவியாக இருந்தனர். 8 தொழில் நுட்பத் துணை இயக்குநர்களும் தலைமை இடத்தில் இருந்தனர். மாவட்டங்களில், துறையின் அன்றாடப் பணிகள் தொழில்-வணிகத்துறை உதவி இயக்குநரால் கவனிக்கப்பட்டு வந்தது. துறையின் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிட வட்டாரத் துணை இயக்குநர்களும் இருந்தனர். மாவட்டத் தொழில் மையங்கள் இதற்காக நியமிக்கப்பட்ட பொது மேலாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. மாநிலத்தில், சிறுதொழில், குடிசைத் தொழில், கிராமத் தொழில் ஆகியவற்றை உருவாக்கி மேம்படுத்தும் திட்டப் பணிகளைத் துறை கவனித்து வந்தது.

மாவட்டத் தொழில் மையங்கள்.—1979-80 ஆண்டில் ஆறு மாவட்டத் தொழில் மையங்கள் மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, பெரியார், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிப் பணியைக் கோயம்புத்தூரிலுள்ள தொழில் மையம் கவனித்து வந்தது. 1979-80 ஆண்டு இறுதியில் 14 மாவட்டத் தொழில் மையங்கள் இருந்தன. மையங்கள் மேம்பாடடைந்து வரும் பகுதிகளில் இதுவரை கணிசமான அளவுக்குத் தொழில்களை உருவாக்கியுள்ளன. தொழில்கள் உருவாவதற்குப் பரந்த நோக்கில் தாராளமான நடைமுறைகளைக் கொண்டு வந்ததன் விளைவாக தொழில்களைத் தொடங்க உள்ளாட்சி மன்றங்கள் கொடுத்த அனுமதிகளின் எண்ணிக்கை 1978-79 ஆண்டில் 4,485 ஆக இருந்தது. 1979-80 ஆம் ஆண்டில் 8,611 ஆக உயர்ந்தது. மாவட்டத் தொழில் நிலையங்கள் உள்ளப் பகுதிகளில் 5,632 தொழிற் பிரிவுகள் 1979-80 ஆண்டில் உற்பத்தி செய்யத் தொடங்கின அல்லது உற்பத்தி செய்யத் தயார் நிலையில் இருந்தன. இத்தொழிற் பிரிவுகள் 67,684 பேருக்கு வேலை வாய்ப்பினை அளித்துள்ளன. 595 தொழிற் பிரிவுகளுக்குத் தொடக்கச் செலவுத் தொகைக்காக கிராமத் தொழில் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து ரூ. 49.09 இலட்சத்தை மாவட்டத் தொழில் மையங்கள் வழங்கின. 3,486 தொழிற் பிரிவுகளுக்கு வங்கிகளின் மூலமாக ரூ. 482.54 இலட்சம் வாங்கித் தந்தன. கைவினைஞர்களுக்கும், கைத்தறிப் பணியாளர்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 5,095 கைவினைஞர்களுக்கும், கைத்திறப் பணியாளர்களுக்கும் ரூ. 84.33 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.—தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பாராட்டத் தக்க அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் 389 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஆனால் 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் அவை 559 ஆக உயர்ந்தன. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1979-80-ல் 24,89.33 இலட்சம் ரூபாய்க்குப் பொருள்களை உற்பத்தி செய்தன. ரூ. 2,874.25 இலட்சத்திற்குப் பொருள்களை விற்றன. 1978-79 இல் இவை முறையே ரூ. 18,13.70 இலட்சமும் ரூ. 20,35.33 இலட்சமும் ஆகும்.

தேயிலைத் தொழிற்சாலைகள்.—1979-80 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தைச் சேர்த்து 1980 மார்ச்சு மாத இறுதியில் நீலகிரி மாவட்டத்தில் 12 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இருந்தன. நீலகிரியில் உள்ள 20,000 ஏக்கர் சிறு தேயிலைத் தோட்டத்தில் 12,434 ஏக்கர்கள் இக் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இக்கூட்டுறவுச் சங்கங்களில் 5,897 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சங்கங்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 1,20.82 லட்சமாகும். ஆய்வு ஆண்டில் 55.08 லட்சம் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. 68.96 இலட்சம் கிலோகிராம் தேயிலை 719.15 இலட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.—1979-80 இல் தீப்பெட்டித் தொழிற் சங்கங்கள் 30 அமைக்கப்பட்டதையடுத்து மாநிலத்தில் 1980 மார்ச்சு திங்கள் இறுதியில் சிறு தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 48 இருந்தன. இச் சங்கங்களில் உறுப்பினராயிருக்கும் தீப்பெட்டித் தொழிற் சாலை வைத்திருப்போருக்கு மூலப்பொருட்கள் வாங்கித் தருதல், தீப்பெட்டிக் கட்டுக்களை விற்றுக்கொடுத்தல் போன்ற வசதிகளை இச் சங்கங்கள் அளிக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டில் தீப்பெட்டித் தொழில் சங்கங்கள் ரூ. 14,27.09 இலட்சத்திற்குத் தீக்குச்சிகளை உற்பத்தி செய்தன ; ரூ. 14,83.20 இலட்சத்திற்குத் தீக்குச்சிகளை விற்றன. 1979-80 ஆம் ஆண்டில் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 31-3-1980 ஆம் நாள் நிலவரப்படி இப்படிப்பட்ட சங்கங்கள் 255 இருந்தன. 1979-80 ஆம் ஆண்டில் தொழில் கூட்டுறவுத் துறையில் கூடுதலாக 20,275 பேருக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டது.

NEMARA... LIBR...

தமிழ் நாடு மாநிலத் தொழில் கூட்டுறவு வங்கி.

தமிழ் நாட்டிலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ் நா தொழில் கூட்டுறவு வங்கி நிதி உதவி செய்கிறது. தமிழ் நாடு அரசு 3.3 இலட்சம் ரூபாயை பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இவ்வாறு பங் மூலதனத்திற்குத் தொகை வழங்கியதோடு, அசல் தொகையையும் வட்டி தொகையையும் திருப்பிச் செலுத்த மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது இவ்வங்கி, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறிப்பிட்ட கால கட களையும் ரொக்கக் கடன்களையும் வழங்கி வருகிறது. 1979-80 ஆம் ஆண்டி இவ்வங்கி 107.98 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

தோல் தொழில்.—தமிழ் நாட்டில் 400 தோல் பதனிடும் தொழிற்சாலைக உள்ளன. இதன் மூலம் இத்தொழில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது கூட்டுறவு அடிப்படையில் வாணியம்பாடியில் அமைக்கப்பட்ட முதல் பிரி 1979-80 ஆம் ஆண்டில் சுமார் 5.88 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியது.

தென்னை நார்த்தொழில்.—தொழில்-வணிகத் துறை இயக்குநர் அலுவ கத்தால் 1979 செப்டம்பரில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இவ்வாய்வின்ப இத்துறையில் 4,493 கயிறு திரிக்கும் இராட்டைகள் இயங்கி வந்தன. நால் கயிற்றுத் துறையில் மட்டும் 16,007 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர் நார்ப் பிரித்தெடுக்கும் பிரிவில் 6,900 பேர் வேலை பார்த்து வருவதா மதிப்பிடப்பட்டது. 41,077 மெட்ரிக் டன் நார் கயிறு ஆகியவை உற்பத் யாவதாக மதிப்பிடப்பட்டது.

இரசாயனப் பிரிவு.—நாட்டின் தொழிலியல் பொருளாதாரத்தி இரசாயனத் தொழில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. 30—9—1979 ஆ நாளன்று இருந்தவாறு தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட இரசாயனச் சி தொழில்களின் மொத்த எண்ணிக்கை 10,489 ஆகும்.

இரசாயனச் சோதனை-பதிப்பாய்வுக் கூடம், கிண்டி.—1979-80 ஆ ஆண்டில் 4,141 மாதிரிகள் சோதனையிடப்பட்டு சோதனைக் கட்டணமா 1.73 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

வட்டார பரிசோதனை பகுப்பாய்வுக் கூடம், மதுரை.—1979-80 ஆம் ஆண்டில் 2,885 மாதிரிகள் சோதனையிடப்பட்டு 1.23 இலட்சம் ரூபாய் கட்டணமாகப் பெறப்பட்டது.

வட்டார சோதனை பகுப்பாய்வுக் கூடம், கோயம்புத்தூர்.—1979-80 ஆம் ஆண்டில் 1,199 மாதிரிகள் சோதனையிடப்பட்டு சோதனையிடுவதற்குரிய கட்டணமாக 0.33 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

சவ்வரிசி ஆய்வுக் கூடம், சேலம்.—இவ்வாண்டில் 304 மாதிரிகள் சோதனையிடப்பட்டு 0.08 இலட்சம் ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

கிடைப்பதற்கரிதான மூலப்பொருட்கள்.—1979-80 ஆம் ஆண்டில் 3,498 மெட்ரிக் டன் பாரபின் மெழுகு, 3,815 மெட்ரிக் டன் தீக்குச்சி மெழுகு 160 மெட்ரிக் டன் இறைச்சிக் கொழுப்பு ஆகியவை ஒதுக்கப்பட்டன.

இரசாயன தொழில் தகவல் களஞ்சியம், கிண்டி.—4,495 இரசாயனத் தொழில்கள் பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவை முடிவெடுக்கும் முறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. 1980 மார்ச்சு இறுதி வரையில் தொழில் முனைவர்களுக்கு 197 திட்டத் தொகுப்புகள் வழங்கப்பட்டன: தொழில் முனைவர்களிடமிருந்து வரப்பெற்ற 740 தகவல் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வண்ணம் தொழில் நுட்பத் தகவல் அளிக்கப்பட்டது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுதொழில் பிரிவுகளிலிருந்து அத்தொழில்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

அரசினர் அறிவியல் ஆய்வாடி பயிற்சி நிலையம், கிண்டி.—கண்ணாடிப் பயிற்சி நிலையம் விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 20 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை 28 தொகுதிகளில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் 3.14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கண்ணாடிக் பொருட்களைத் தயாரித்துள்ளது.

அறிவியல் ஆய்வாடி பொருட்கள் தயாரிப்பு-பயிற்சி நிலையம், கோயம் புத்தூர்.—அறிக்கை ஆண்டில் 2.30 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன.

விருத்தாச்சலத்திலுள்ள மண்பாண்ட தொழில் நுட்பவியல் நிறுவனம்.— மண்பாண்ட தொழில் நுட்பவியல் நிறுவனம், பயிற்சி உதவித்தொகை அடிப்படையில் மண்பாண்ட தொழில் நுட்பவியலில் தொடர்ந்து தனிப்பயிற்சி அளித்து வருகிறது. இந்த ஆண்டில் 25 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அடையாறு, மதுரையிலுள்ள மின்னணுவியல் ஆய்வு, வளர்ச்சி நிலையம்.— 1979-80 ஆம் ஆண்டில் 530 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வுக் கட்டணமாக ரூ. 1,23,923 பெறபட்டது. அடையாற்றிலும் மதுரையிலும் உள்ள இந்த ஆய்வு நிலையங்கள் 127 மாதிரிகளை ஆய்வு செய்து ரூ. 25,057 வருவாய் ஈட்டியுள்ளன.

காக்கலூர் மத்திய மின்சார ஆய்வுக் கூடம்.—1979-80 ஆம் ஆண்டில் 705 மின்சார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பணிக்காக ரூ. 1,17,919 பெறப் பட்டது. கிண்டியிலுள்ள மின்னியல் மருத்துவக் கருவி பணி நிலையமும், மதுரை, கோயம்புத்தூர் தஞ்சாவூரிலுள்ள துணை நிலையங்களும் 1979-80 ஆம் ஆண்டில் கிண்டியிலுள்ள பணி நிலையம் 1,711 கருவிகளை சோதனை செய்து, பணிக் கட்டணமாக ரூ. 5.18 இலட்சத்தையும், மதுரைப் பணி நிலையம் 763 கருவிகளைச் சோதனை செய்து ரூ. 1.47 இலட்சத்தையும் கோயம்புத்தூர் பணி நிலையம் 1005 கருவிகளை சோதனை செய்து ரூ. 2.40 இலட்சத்தையும் தஞ்சாவூர் பணி நிலையம் 1,330 கருவிகளைச் சோதனை செய்து ரூ. 2.83 இலட்சத்தையும் கட்டணங்களாக வசூலித்துள்ளன.

தொழில் நுட்பக் தகவல் பிரிவுகள்.—கிண்டி, அம்பத்தூர், மதுரை, காட்பாடி, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில் நுட்பக் தகவல் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் 380 புதிய தொழில் நுட்பவியல் புத்தகங்கள் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் 19,725 தொழில் முனைவோர்களும், தொழில்நுட்ப பணியாளர்களும் குறிப்பு வசதிகளைப் பெற்றனர்.

கிண்டி, தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்.—தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கருவிகள் அச்சு வடிவமைப்புகளில் தொடர்ந்து தனிப் பயிற்சி அளித்து வருகிறது. புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்கு குளிர் சாதன, சீர்வளளி வசதி பொறியில், மின்னனுவியல் கருவிகளில் பயிற்சி அளிக்கப் படுகின்றது. 1979-80 ஆம் ஆண்டில் பல்வேறு தொழில் பயிற்சிப் பிரிவுகளில் 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தச்சு மற்றும் கொல்லுப்பட்டறை, அரக்கோணம் :

இந்த நிலையம் இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப் பட்ட பொருட்களின் மதிப்பு முறையே ரூபாய் 0.94 இலட்சமும், ரூபாய் 1.25 இலட்சமுமாகும்.

திண்டுக்கல்லில் கருவி, அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம்.—இந்த பயிற்சி நிலையங்கள் பூட்டுக்கள் தயாரிப்பதில் குறிப்பாகத் தனிப்பயிற்சி அளிக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டில் 66 பயிற்சியாளர்கள் இதில் பயிற்சி பெற்றனர்.

சுரங்கமும் மண்ணியலும்.—இம்மாநில மண்ணியல் பிரிவு பின்வரும் சுரங்க ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் களிமண் ஆய்வையும் ;

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடன்குளத்தில் சுண்ணாம்புக்கல் ஆய்வையும் கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களில் பொன் வண்ண பச்சை நில மாணிக்கக்கல் ஆய்வும்.

முடவன்குளம் தடிக்கார கோணம் பகுதிகளில் ஆய்வுப் பணியும் ;

திருச்சிராப்பள்ளி-மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த பாளையம் பகுதி களுக்கு அருகில் சுண்ணாம்புக்கல் ஆய்வும்.

நீலகிரி மாவட்ட மோயர் பள்ளத்தாக்கில் கனிவள ஆய்வும் மேற்கொள்ளப் படுகின்றன,

ஆய்வு கூடங்கள்.—இரசாயன, கனிம ஆய்வு கூடத்தில் மொத்தம் வரப்பெற்ற 991 மாதிரிகளில் 764 மாதிரிகள் குறித்து பகுப்பாய்வு செய்யப்பட்டன. செய்யப்பட்ட பகுதி பொருள் பகுப்பாய்வின் மொத்த எண்ணிக்கை 5,500 ஆகும். நுண்ணிய பகுப்பாய்வு (புவியியல் இரசாயன) ஆய்வு கூடத்தில் அந்த ஆண்டு வரப்பெற்ற மொத்த மண் மாதிரிகளின் எண்ணிக்கை 2,375 ஆகும். அவற்றில் 2052 மாதிரிகளுக்கான 8,133 பகுப்பொருள் கூறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

சுரங்கப் பிரிவின் பணிகள் :

பெரிய சிறிய அளவில் கனிப் பொருட்களை வெட்டி எடுப்பதற்கும் சலுகை பெறுவதற்கான விண்ணப்பங்களை தொழில் நுட்ப முறையில் ஆய்வு செய்யும் பணியில் புவியியல் துறையின் சுரங்கப் பிரிவு ஈடுபட்டுள்ளது. இவ்வாண்டில் ஒப்புதல் சான்றிதழ் பெறுவதற்காக 201 விண்ணப்பங்களை இப்பிரிவு பரிசீலித்தது. குத்தகை அடிப்படையில் கனிப்பொருட்கள் வெட்டியெடுப்பதற்கு 49 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. அவற்றில் 42 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி ஆணை பெறுவதற்காக அரசுக்கு அனுப்பப்பட்டன. சிறு அளவில் சுரங்கப் பொருட்கள் வெட்டியெடுக்கும் நிர்வாகம் தொடர்புடைய 65 மேல் முறையீடுகள் குறித்து இத்துறை நடவடிக்கை எடுத்தது.

தகுதிச் சான்றிதழ் வழங்கல்.

இவ்வாண்டில் ரூபாய் 997 இலட்சம் மதிப்புள்ள மூலப்பொருட்கள் மூலதனப் பொருட்கள் இரும்பு உருக்கு ஆகியவைகள் இறக்குமதி செய்வதற்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிதியுதவி :

(1) பங்கு மூலதனம், நடைமுதல் மூலதனம் ஆகியவற்றிற்கு கூட்டுறவு சங்கங்களின் தங்களது உறுப்பினர்களுக்கும் (2) கிராமத் தொழில் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகளுக்கும், (3) கயிறுத் தொழில் வளர்ச்சிக்கும் தொழில்கள் வணிகத் துறை இயக்குநர் அலுவலகம் கடன்கள் வழங்குகின்றது. 1979-80 ஆம் ஆண்டில் 1922 ஆம் ஆண்டு மாநில நிதி யுதவிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 38.45 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்; கூத்தாநல்லூர் :

நில உச்சவரம்பு சட்டம், 1961-படி [ஏசிடி 41 (1971)] உபரியாகக் கிடைத்த நிலங்களை நிர்வாகம் செய்ய தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம் நிறுவப்பட்டது. இந்த கழகத்தினிடம் சுமாராக 6,528 ஏக்கர்கள் இருக்கின்றன. இதில் 3,910 ஏக்கர்கள் சொந்த நிலம் 2,618 ஏக்கர்கள் குத்தகை நிலம். இந்த நிலங்கள் மன்னார்குடி, திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய வட்டங்களில் இருக்கின்றன. சர்க்கரை துறை இயக்குநர் அவர்களை தலைவராக கொண்ட ஒரு குழு இயக்குநர்களால் இக்கழகம் நிர்வாகம் செய்யப்படுகின்றது. நிர்வகிப்பதற்கு சாதகமாக இது 19 மையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையமும் ஒரு கரும்பு உதவியாளரின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றது.

இக்கழகம் கரும்பு, நெல் இவற்றுடன் கூட கோடைப் பயிர் வகைகளையும் பயிர் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 945 ஏக்கரில் (சென்ற ஆண்டு 1,457 ஏக்கர்) கரும்பு பயிரிடப்பட்டு 10,825 டன்கள் (சென்ற ஆண்டு 22,135 டன்) உற்பத்தி செய்திருக்கின்றது. நெல் 5,051 ஏக்கர்களில் (சென்ற ஆண்டு 4,589 ஏக்கர் பயிரிடப்பட்டு, 5,516 டன்கள் (சென்ற ஆண்டு 5,042 டன்கள்) உற்பத்தி செய்திருக்கிறது. இக்கழகம் தன்னுடைய சிறந்த கட்டுக் கோப்பாலும் சிரிய பணியினாலும் அதிக பரப்பளவில் விவசாய வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்.

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் :—

1. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2. உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 400 இலட்சம் ஆகும். இதில் ரூபாய் 350 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூபாய் 185 இலட்சமும், இந்திய அரசு ரூபாய் 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

உர விற்பனை :

விவசாயத்திற்கு இன்றியமையாததும் பெருமளவு பயன்படுத்தப்படுவதுமான உரத்தின் பெருகிவரும் தேவையை ஈடு செய்யும் வகையில் உழவர்களுக்கு தங்களுடைய தேவைக்களுக்கேற்ப நியாயமான விலையில் தரமுள்ள உரத்தை சோதனை முறையில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டால் உற்பத்தி செய்யப்படும் உரங்களை விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. கடந்த மார்ச் 1980 வரை இக்கழகம் 10,000 மெட்ரிக் டன் அளவு உரத்தை விற்பனை செய்துள்ளது.

பொறியியற் பணிகள்.

டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் விற்பனைத் திட்டம் :

1973-ம் ஆண்டுவரை இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்பனை செய்வதே இக்கழகத்தின் முக்கிய பணியாக இருந்துவந்தது. வெளிநாடுகளிலிருந்து டிராக்டர்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியவுடன் இக்கழகம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் நான்கு விதமான டிராக்டர்களை வினியோகம் செய்யத் துவங்கியது. 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை ரொக்க விற்பனையின் மூலம் ரூபாய் 581.81 இலட்சம் மதிப்புள்ள 2,804 டிராக்டர்களையும் தவணை முறைத் திட்டத்தின்கீழ் 350 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது. 1979-80-ம் ஆண்டு மட்டும் ரூபாய் 56.60 இலட்சம் மதிப்புள்ள 99 பவர் டில்லர்களையும் 46 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது.

உதிரி பாகங்கள் விற்பனை :

விவசாயிகளின் டிராக்டர்களுக்கு நியாயமான விலையில் தேவைப்பட்ட அளவு தரமுள்ள உதிரி பாகங்களை சீராக வினியோகம் செய்ய வேண்டியதின் அவசியத்தை உள்ளிட்டும் இக்கழகம் உதிரி பாகங்களை தேவையான அளவில் இருப்பில் வைத்து சென்னை, பண்ருட்டி, பொன்னேரி, மதுராந்தகம், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, மாயூரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகம் செய்து வருகின்றது.

வேலைவாய்ப்பு பெறாத வேளாண்மை பொறியியற் பட்டதாரிகளுக்கு வேளாண்மை சேவை நிலையங்களை அமைக்க பயிற்சி அளிக்கும் திட்டம்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப்பட்டயம் பெற்றோருக்கும், வேளாண்மைப் பட்டதாரிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் போன்ற தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் வேலை வாய்ப்பை தோற்றுவிப்பதாகும். மேலும் வேளாண்மைத் துறையில் வாய்ப்புள்ள கிராமப்புறம் பகுதிகளில் ஏற்படும் பணியில் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்ய ஊக்கம் ஊட்டுவதும் இத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும். இந்திய அரசு 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் தேதியிலிருந்து இத்திட்டத்தை துவங்கி பணவுதவி அளித்து வருகின்றது. இதுவரை 297 நபர்களுக்கு இக்கழகம் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளித்துள்ளது. அதில் 211 பயிற்சியாளர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு கிராமப்புறம் பகுதிகளில் வேளாண்மைச் சேவை நிலையங்களைத் துவக்கியுள்ளனர்.

பூச்சிகொல்லி மருந்து தயாரிக்கும் திட்டம்:

1972-ம் ஆண்டு இக்கழகம் பிரசித்திபெற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளில் முக்கியமான பி.எச்.சி. 10 சதவிகிதம் மற்றும் என்ட்ரின் 20 சதவிகிதம் இ.சி. போன்றவைகளை தயாரிக்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இ.சி. நிறுவனம் பூச்சிக்கொல்லி மருந்துகளை தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. ஆனால் இப்பொழுது இந்நிறுவனம் தனது சொந்தத்தில் ரூபாய் 1.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகிவரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடுகட்ட ரூபாய் 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த கழகத்தினால் இந்திய தர நிர்ணயக் கழகத்தின் விதிமுறைகளுக்குட்பட்ட தரம் உயர்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு, இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூலமும் வேளாண்மைத் துறை இயக்குநரின் விற்பனைக் கூடங்கள் மூலமாகவும் வினியோகிக்கப்படுகின்றன.

1978-79 ஆம் ஆண்டிலும், 1979-80 ஆம் ஆண்டிலும் விற்பனை செய்யப் பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

	1978-79		1979-80	
	அளவு	மதிப்பு	அளவு	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1. மருந்து பொடி தயாரிப்பு.	4,081 மெ. டன்	35.60	2,005 மெ. டன்	19.59
2. மருந்து திரவ தயாரிப்பு.	11,910 லிட்டர்	3.08	29,323 லிட்டர்	11.40

மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம் :

மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட இத்தொழிற்சாலை 1976-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் துவக்கப்பட்டது. இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனாகிய 50 மெ. டன்னிலிருந்து 60 மெ. டன் னாக உயர்த்தும்பொருட்டு 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மற்றொரு இயந்திரமும் வாங்கப்பட்டது. இந்த கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் அதனுடைய தரத்தாலும் விலையாலும் விற்பனையில் அதிக மதிப்பைப் பெற்றுள்ளன. மிக நுண்ணிய நைலான் வலையிலிருந்து மிகக் கெட்டியான நூல்களைக் கொண்ட மீன்பிடி வலைகள் வரை இங்கு தயாரிக்கப் படுகின்றன.

எண்ணெய்ப் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சப்பள்ளி :

இவ்வாலை 1978-79-ம் ஆண்டில் 475 மெ.டன். அளவுள்ள சூரியகாந்தி வித்துக்கள் பிழிந்தெடுத்ததற்கு மாறாக, 1979-80-ம் ஆண்டில் 1,100 மெ.டன். அளவுள்ள வித்துக்களை பிழிந்தெடுத்தது. 1978-79-ம் ஆண்டில் 850 மெ.டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்டு, 275 மெ.டன். எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக 1979-80 ஆண்டில் முறையே 1,200 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு 1,050 மெ. டன் எண் ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் தொடக்கத்தில் 23-3-1970 அன்று தனியார் நிறுவனமாக (பொறுப்பு வரையறைக்கப்பட்டது) பதிவு செய்யப் பட்டது. பின்னர் 21-1-1971 அன்று பொது நிறுவனமாக (பொறுப்பு வரை யறுக்கப்பட்டது) மாற்றப்பட்டது. இக்கழகத்தின் தற்போதைய பங்கு மூல தனம் ரூபாய் மூன்று கோடியாகும். சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ் நாடு அரசு வழங்கும் மூலதனப் பங்கு தவிர கடனாக ரூபாய் 3.52 கோடி பெற்றுள்ளது.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய பணிகள் வருமாறு :—

1. தொழிற்பேட்டைகளின் நிர்வாகம்.

2. சிறு தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல்.

3. மூலப் பொருட்களின் விநியோகம்.

4. சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காகவும் பெருக்கத்திற்காகவும் பல்வேறு உதவிகள் அளித்தல்.

தொழிற்பேட்டைகள் :

35,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 783 தொழிற் கொட்டகை களைக் கொண்ட அரசுக்குச் சொந்தமான 33 தொழிற்பேட்டைகள் நிர்வகிக்கப் பட்டு வருகின்றன. 704 தொழிற் கொட்டகைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 79 கொட்டகைகள் காலியாக உள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள் :

கிண்டி, அம்பத்தூர், துவக்குடி, மேட்டூர், கப்பலூர் போன்ற இடங்களில் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் உள்ளன. 1,552 ஏக்கரில் 1,191 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. கிண்டியில் உள்ள பகுதி முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகத் தொழிற்பேட்டை :

1979-80-ல் கட்டப்பட்ட 58 தொழிற்கொட்டகைகளையும் சேர்த்து பல்வேறு இடங்களில் 572 தொழிற் கொட்டகைகள் கட்டப்பட்டுள்ளன.

மிகச் சிறிய அளவில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான கொட்டகைகள் :

தீப்பெட்டி, பட்டுப்புழு வளர்ப்பு ஆகிய தொழில்களுக்கும் ஏனைய பண தொழில்களுக்கும் ஏற்றபடி பல்வேறு அளவுகளில் தனிப்பட்ட சிறு கொட்டகைகள் குறிப்பாக பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரின் பயனுக்காகக் கிராமப்புறப் பகுதிகளில் கட்டப்பட்டு ஒதுக்கப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் 519 கொட்டகைகள் கட்டப்படவிருக்கின்றன.

மூலப்பொருட்களை விநியோகித்தல் :

ஆரம்பத்தில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இரும்புக்கும் உருக்குக்கும் வழிமுறைப்படுத்தும் முகவரைமைப்பாக இருந்தது. அதன் பின்னர் தீப்பெட்டி மெழுகு, பாபின் மெழுகு, கரி மற்றும் ஏனைய அரிதான மூலப்பொருட்களும் விநியோகம் செய்யப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 1,308.00 லட்சம் மதிப்புள்ள இரும்பு, உருக்கு, தீப்பெட்டி, மெழுகு, கரி போன்ற பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை ரூ. 815.43 இலட்சமாகும்.

சிறு தொழில் உற்பத்திப் பொருட்களின் விற்பனை :

1979-80 ஆம் ஆண்டு ரூபாய் 232.41 இலட்சம் மதிப்புள்ள உற்பத்திப் பொருட்கள் 44 அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டன. மேல் நிலைப்பள்ளி முதலாண்டு, இரண்டாம் ஆண்டு வகுப்புகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்கப்பட்டன. இந்த வகையில் குறிப்பிடத்தக்க சாதனையைக் கழகம் எட்டியுள்ளது.

தமிழ் நாட்டில் 33 பின்தங்கிய வட்டங்களில் மூலதன முதலீட்டிற்கு 15 சதவீத உதவித் தொகை வழங்குதல் :

1974 எப்ரல் முதல் நாளிலிருந்து மாநிலத்தின் 33 பின்தங்கிய வட்டங்களின் முதலீட்டுக்கு உதவித் தொகை வழங்கும் மத்திய அரசுத் திட்டம்பற்றி சிறு

தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் வேலை வாய்ப்பு வசதிகள்பெற்றோரின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்டு.	பயனீட்டாளர்.	உதவித் தொகை. (ரூபாய் இலட்சத்தில்)	வேலை வாய்ப்பு.
1979-80	486	78.87	3,500

24. பின்தங்கிய வட்டங்களில் உள்ள சிறுதொழிற் பிரிவுகளுக்கு மாநிலத்தின் மூலதன உதவி.

24 வட்டங்களில் உள்ள சிறு தொழிற் பிரிவுகளுக்கு மாநிலத்தின் மூலதன உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாநில நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. பகுதி மக்கள் தொகை, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேளாண்மை வளர்ச்சி நிலை ஆகிய காரணங்களைக் கருத்திற் கொண்டு 24 வட்டங்கள் மாநில முதலீட்டு உதவித் தொகைக்குத் தகுதியுடையனவாக அறிவிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், முழுநேரத் தலைவர் ஒருவர், நிர்வாக இயக்குநர் ஒருவர் ஆகியோரது கட்டுப்பாட்டின்கீழ் தமிழ் நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. ஆலங்குளத்திலும் அரியலூரிலும் அமைக்கப்பட்ட சிமிட்டி ஆலைகளும், அரக்கோணத்தில் அமைக்கப்பட்ட சிறிய உருக்காலையும் இந் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட அரசுத் துறை நிறுவனங்களாகும். இவ்விரு சிமிட்டி ஆலைகளும், இந்த ஆண்டில் மொத்தம் 3,900 இலட்சம் டன் சிமிட்டியை உற்பத்தி செய்துள்ளன. அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு உருக்காலை 22,733 மெட்ரிக் டன் உருக்கினை உற்பத்தி செய்துள்ளது. 18,453 மெட்ரிக் டன் உருக்கினை ரூபாய் 635.31 இலட்சத்திற்கு விற்பனை செய்தது. கூட்டுத்துறையில் 14 திட்டங்கள் உற்பத்தி நிலையில் இருந்தன. 10 திட்டங்கள் நிறைவேற்றப் படும் நிலையில் உள்ளன. நான்கு திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

கூட்டுத்துறை நிறுவனமாக சதர்ன் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 7.79 கோடி இலாபம் ஈட்டியது. பாண்டியன் கெமிக்கல்ஸ லிமிடெட் 10 சதவித ஆதாயத் தொகை வழங்குவதென அறிவித்தது. அரசுத் துறை, கூட்டுத் துறை நிறுவனங்கள் அனைத்திலும் இந்த ஆண்டில் மொத்தம் ரூபாய் 630.85 இலட்சம் முதலீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டில் நிறுவனம் இடைக்காலக் கடன்கள் உட்பட நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூபாய் 6½ கோடியாகும். இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதற்கொண்டு செய்த மொத்த முதலீடு ரூபாய் 37.68 கோடியாகும்.

தமிழ்நாடு சிறு தொழில் கழகம்.

பொது.—தமிழ்நாடு சிறு தொழில் கழகம் 1965-ல் அமைக்கப்பட்டு, தமிழ் நாடு அரசு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டது. கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் முறையே ரூபாய் 10 கோடி, ரூபாய் 7.6 கோடியாகும்.

இக்கழகத்தில் உற்பத்தி, விற்பனையைக் கவனிக்க எட்டு தொழிற் பிரிவுகள் இருந்தன.

(1) **கட்டுமானம்.**—கட்டுமானப் பட்டறைகள் மூன்று இருந்தன. அவை உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூபாய் 473.20 இலட்சமாகும். விற்பனை ரூபாய் 402.95 இலட்சமாகும். தமிழ்நாடு மின்வாரியம், இரயில்வே துறை அஞ்சல் தந்தி துறை ஆகியவை அனுப்பிய தேவைக் குறிப்பு ஆணைகள், மற்றவைகளுடன் இவ்வாண்டில் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(2) **கருவிகள் அது தொடர்பான சாதனங்கள் தயாரிப்புப் பிரிவு.**—இதன் கீழ் ஆறு தொழிற் பிரிவுகள் இருந்தன. இவ்வாண்டில் உற்பத்தியும் விற்பனையும் முறையே 113.54 இலட்சம், ரூபாய் 109.03 இலட்சமாகும். கனரக வாகனத் தொழிற்சாலை, ஆவடி, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ், திருச்சிராப்பள்ளி, பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், சமூக நலத் துறை ஆகியவை அனுப்பிய தேவைக்குறிப்பு ஆணைகள் மற்றவைகளுடன் இவ்வாண்டில் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(3) தோல் தொழில் தொகுதி.—இதன்கீழ் ஐந்து தொழிற் பிரிவுகள் இருந்தன. உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 245.66 இலட்சம், ரூபாய் 202.17 இலட்சமாகும்.

(4) பொறியியல்.—இத்தொகுதியின்கீழ் 17 தொழிற் பிரிவுகள் இருந்தன. இதன் உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 325.75 இலட்சம், ரூபாய் 305.49 இலட்சமாகும். கிடங்கு வசதிக் கழகம், சென்னை மாநகராட்சி, கதர்-கிராமத் தொழில் வாரியம் ஆகியவை அனுப்பிய தேவைக்குறிப்பு ஆணைகள், மற்றவைகளுடன் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(5) மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள்.—இத்தொகுதியின்கீழ் ஒன்பது தொழிற் பிரிவுகள் இருந்தன. உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 247.11 இலட்சம், ரூபாய் 235.70 இலட்சமாகும். பொதுப்பணித் துறையின் தேவைக்குறிப்பு ஆணைகள் மற்றவைகளுடன் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(6) வார்ப்படத் தொழிற்சாலைகள்.—தொகுதியின்கீழ் நான்கு தொழிற் பிரிவுகள் இருந்தன. உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 116.90 இலட்சம், ரூபாய் 119.09 இலட்சம் ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு, ஆந்திர மாநிலம் ஆகியவற்றின் கதர் கிராமத் தொழில் வாரியங்கள், தனிப்பட்ட பெரிய-சிறிய தொழில்கள் ஆகியவை அனுப்பிய தேவைக் குறிப்பு ஆணைகள் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(7) கூட்டமைப்புத் தொழிற் பிரிவு.—இத்தொகுதியின்கீழ் மூன்று தொழிற் பிரிவுகள் இருந்தன. உற்பத்தியும், விற்பனையும் முறையே ரூபாய் 113.48 இலட்சம், ரூபாய் 90.39 இலட்சமாகும். இந்திய தொலைபேசி தொழிற் சாலைகள், பாலக்காடு, விண்வெளி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீஹரிகோட்டா ஆகியவை அனுப்பிய தேவைக்குறிப்பு ஆணைகள், மற்றவைகளுடன் ஏற்கப்பட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

(8) சிறப்பு நோக்கங்களுக்கான தொழிற் பிரிவுகள்.—உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 198.91 இலட்சம், ரூபாய் 196.60 இலட்சமாகும். இத்தொகுதியில் அடங்கும் 10 தொழிற் பிரிவுகளில், திண்டியிலுள்ள டான்சி

அச்சகம், இந்திய எண்ணெய்க் கழகத்திற்கு ரூபாய் ஆறு இலட்சம் மதிப்புக்கு படிவங்களை அச்சிட்டு வழங்கியது. சென்னை, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பயண சீட்டுகள் அச்சிடும் பணியை இந்த அச்சகம் மேற் கொண்டது. உதகமண்டலத்திலுள்ள டான்சி கடிகாரப் பிரிவு, பெங்களூர், எச்.எம்.டி. நிறுவனத்திற்காக 4,17,000 கடிகாரங்களுக்கு அவற்றின் பாகங்களை இணைத்துத் தந்தது.

தமிழ்நாடு மொபட் நிறுவனம், கழகத்தின் துணை நிறுவனமாக தொடர்ந்து இருந்தது.

தொழிலாளர்கள்.—கழகத்தின் பணியாளர்கள் 6.017 பேராவர். அவர்களில் 4,062 பேர் தொழிலாளர்கள்.

நடைமுறை விளைவுகள்.—கழகத்தின் மொத்த உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூபாய் 1,835 இலட்சம், ரூபாய் 1,661 இலட்சமாகும். இவ்வாண்டுக்கு இக்கழகம் ரூபாய் 17.53 இலட்சம் நிகர ஆதாயம் காட்டியுள்ளது.

தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக ரூபாய் ஐந்து கோடி ஒப்பிய மூலதனத்துடன் தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும் விரிவடைவதற்கும் இதுவரை இம்மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்குவ தற்குமான முக்கியக் குறிக்கோள்களுக்காக அமைக்கப்பட்டதாகும். இந் நிறுவனம் 1972 ஆம் ஆண்டு சனவரி திங்களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணிகளைத் தொடங்கியது. அதிலிருந்து 'சிப்காட்' நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர பெரிய தொழில்கள் முன்னேறவும் விரிவடையவும் ஆன

பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது. 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூபாய் 4,164.73 இலட்சம் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன் இதன மூலம் ரூபாய் 197 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து 39,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந் நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக்கூடியது ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளிலேயே பயன் படுத்தப்பட்டது என்பதாகும். இதுவரையில் அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழிற் நிறுவனங்களுக்கு மட்டும் ரூபாய் 3,826 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம்மாநிலத்தின் பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலோ மற்றவற்றிலோ ரூபாய் 223 கோடிக்கு மேலாக முதளிடு செய்வதை ஊக்குவிக்கும்.

சிப்காட் செயல்படுத்திவரும் பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் கிழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஊக்க சலுகை முனைப்புத் திட்டம் :

(அ) **தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை.**—ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வு களை சிப்காட் தொழில் முனைவோர்களுக்கு சலுகை விலையில் அளிக்கிறது.

(ஆ) **வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.**—ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக்கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின் தங்கிய ஒன்பது மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத் தில் மறைமலை நகர் தொழில் இனையத்திலும் மற்றும் குண்ணத்தூர் வட்டா ரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதிகளை சுற்றிலும் எட்டு கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளைத் தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படும்.

1978-79 மற்றும் 1979-80 வருடங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

(ரூபாய் இலட்சத்தில்.)

ஆண்டு.	முதல் பிரிவு.	இரண்டாம் பிரிவு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1978-79	59.19	94.00	153.19
1979-80	105.52	140.26	245.78

1979-80 முடிய இத்திட்டத்தின்கீழ் ரூ. 700.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட தொகை.

முதல் பிரிவு.	இரண்டாம் பிரிவு.	மொத்தம்.
(1)	(2)	(3)
56.80	96.24	153.04
47.26	137.74	185.00

நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை :

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவிதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். இந்நிறுவனம் துவக்கத்திலிருந்து 31-3-1980 வரையில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 321.18 இலட்சம் 1,336 சிறு தொழில் நிறுவனங்களுக்கும் ரூபாய் 1,576.93 இலட்சம் 230 பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் உதவித் தொகையாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 274.04 இலட்சம் வழங்கப்பட்டது. ரூபாய் 165.57 இலட்சம் ஈட்டுத் தொகையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இவைகளின் ஆண்டு குறியீடு ரூ. 250 இலட்சம் மற்றும் ரூ. 230 இலட்சமும் ஆகும்.

நேரடி நிதி உதவி தவணைக் கடன் :

அறிக்கை ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக்கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி அடியிற்கண்ட அட்டவணைகளில் காணலாம். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி உதவி பெறக்கூடிய மாநிலத்தில் இரண்டாவது நிதி ஸ்தலங்கள் செயல்பட்டு வருகிறது.

1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் செலவிடப்பட்ட தவணைக்கடன் உதவி கீழே காட்டப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்).

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப் பட்டது.	ரத்து செய்யப் பட்டது.	நிகர செல்லுப்படி யாகத்தக்கது.	வழங்கப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)
1978-79	233·96	10.00	223.96	141.85
1979-80	580.50	12.74	567.76	296.61

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம் :

ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின்கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில்நுட்ப தொழிற் அனுபவ தொழில் முனைவோர் களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல் நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது திட்டச் செலவில் 10 சதவிதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஏஜென்ட் என்ற முறையில் 31-3-1980 முடிய ரூபாய் 26.05 இலட்சம் அளவுள்ள தொகையை ஆறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது.

29-11-1979 முதல் தவணைக்கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங் களின் ஆரம்ப மூலதன நிதியுதவி பெற தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆய்வுத் தொகை ஏதும் இனி பெற வேண்டியது இல்லை என்று சிப்காட் நிர்வாக குழு தீர்மானித்துள்ளது. இச்சலுகை முதல் நடுத்தர தொழில் தொடங்கும் பொறியியல் வல்லுனர்களுக்கும் மற்றும் தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும். இத்திட்டத்தின்கீழ்

1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் ஒப்புதல் அளித்தல் வழங்குதல் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்.

ஆண்டு.	ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.	வழங்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1978-79	9.15	4.00
1979-80	12.90	21.47
	26.05	25.47

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்க்கு அளிக்கப்படும் சலுகைகள் :

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 29-11-1979 முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சத விதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல்/நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் வட்டியும் ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 11 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன் பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

வளர்ச்சி மையங்கள் :

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டை மற்றும் தர்மபுரி மாவட்டம் ஓசூரிலும் வளர்ச்சி மையங்கள் அமைத்துள்ளது.

இராணிப்பேட்டை :

அரசு 729.78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுக்க ஒதுக்கப்படுவதற்காகவிருந்த நிலப்பகுதி 551.23 ஏக்கர் ஆகும். அதில் 85 மனைகள் இருந்தன. அதில் 401.05 ஏக்கர் பரப்பளவு கொண்ட 48 மனைகள் 43 தொழில் முனைவர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 30 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கிவிட்டன. மிஞ்சிய 9 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

ஓசூர் :

1,159 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினால் கைப்பற்றப்பட்டு சிப்காட்டுக்கு கொடுக்கப்பட்டது. 1010 ஏக்கரில் அமைந்துள்ள 151 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக உள்ளது. அதில் 594 ஏக்கர் பரப்புள்ள நிலம் 61 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 16 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 16 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரையிலுள்ள புதுக்கோட்டை மாவட்டம் நத்தம்பண்ணை கிராமத்திலும் வளர்ச்சி மையங்கள் அமைக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி. தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலி மற்றும் மதுரை மாவட்டத்தில் வளர்ச்சி மையங்கள் அமைக்க திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

இந்நாட்டில், முதன் முதலாக மாநில அளவில் அமைக்கப்பட்ட நிதியுதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியையும் தொழில் மேம்பாட்டையும் பெருக்கி மேம்படுத்துவதே இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரியிலும் பரவி உள்ளது. இக்கழகத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம், இயந்திரங்கள் வடிவில் நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக நீண்டகால நடுத்தர காலக் கடன்கள் வழங்குதல்.

(ஆ) இயந்திரங்கள் வாங்குவதற்குக் தொகையைக் காலந்தாழ்த்தி செலுத்துவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தங் களுக்கு உத்தரவாதமளித்தல், எதிர் உத்தரவாதமளித்தல்.

(இ) வங்கிகள்/ஈட்டுறுதி நிறுவனங்கள்/பொதுமக்களிடமிருந்து தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதமளித்தல்.

(ஈ) தொழில் நிறுவனங்கள் பங்கு தொகைகளையும் ஈட்டுறுதி பத்திரங்களையும் பங்குத் தொகைகளை அல்லது ஈட்டுறுதி பத்திரங்களை வெளியிடுவதற்கு உத்தரவாதமளித்தல், தொகை அளித்தல்.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத் தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.

நிதியுதவியின் அளவும் விவரங்களும் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் நிதியுதவியின் அளவு வருமாறு :—

(அ) கடன்—குறைந்த அளவு ரூ. 5,000, உயரளவு ரூ. 30.00 இலட்சம். தனி உரிமையாளர் நிறுவனம், பங்கு நிறுவனங்கள் பொறுத்த வரையில் ரூ. 15.00 இலட்சம்.

ர(ஆ) தொகையை காலந்தாழ்த்தி செலுத்துவதற்கு உத்தரவாத மளித்தல்—ரூ. 30.00 இலட்சம்.

(இ) பொதுக்கடன் வெளியீட்டு பங்கிற்கு உத்தரவாதமளிப்பது நேரடியாக காலந்தாழ்த்துவது—ரூ. 25.00 இலட்சம் பொதுக்கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு மேற்படாத ஒரு தொகை இவற்றின் எது குறைவோ அது.

சிறு தொழில் துறையிலும் நடுத்தரத் தொழில் துறையிலும் (அ) புதிய தொழிற் பிரிவுகளை அமைப்பதற்கும் (ஆ) ஏற்கெனவே உள்ள பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கு/பலதிறப்படுத்துவதற்கும் (இ) ஏற்கனவே உள்ள பிரிவுகளை நவீனப்படுத்துவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும் குறுந்தொழில் துறையிலும் தொழிற்சாலைகளை அமைப்பதை ஊக்கப்படுத்தவும் பெருமளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் இந்நிறுவனம் தனிப்பட்ட திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. கடனைத் திருப்பி செலுத்த துவங்குவதற்கு நீண்டகால அவகாசம், கடனைத் திருப்பிச் செலுத்த நீண்டகால அளவு மற்றும் குறைந்த பிணையீட்டுத் தொகை போன்ற தாராள நிபந்தனைகளின்படி இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது. மேலும் பெருமளவு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடனும் வட்டாரத்தில் ஏற்றத் தாழ்வான தொழில் வளர்ச்சியைக் குறைத்து சமமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடனும் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் குறிப்பாக கிராமப் பகுதிகளில் தொடங்கப் பெறும் தொழில் பிரிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழிற் பிரிவுகளுக்குக் குறைந்த வட்டி வீதம் நீண்ட காலத்திற்குப் பின்னர் கடனை திருப்பிக் கொடுத்தல் முதலிய சலுகைகளின் அடிப்படையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்நிறுவனம் செயல்பட்டதில் 1978-79 ஆம் ஆண்டைவிட 1979-80-ல் பாராட்டத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ளது. தமிழ்நாடு அரசுக் கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில் பெருமளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்ற தலையாய நோக்கத்துடன் சிறு தொழில் துறையிலும் குறுந் தொழில் துறையிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளிலும் ஓரளவு நகர்ப் பகுதி

களிலும் அமைக்கப்படுகிற தொழில் பிரிவுகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் இந்நிறுவனம் சிறப்புரிமை அளித்து வந்துள்ளது. மேலும் பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர் தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு ஊக்கப் படுத்துவதற்கும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் இயலும் வகையில் பல புதிய திட்டங்களையும் சலுகைகளையும் இக்கழகம் கொடுத்து வந்துள்ளது.

வேலைவாய்ப்புகள் :

இந்நிறுவனத்தின் நிதியுதவி பெறும் தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை குறிப்பாக சிறு தொழில் துறையிலும் குறுந்தொழில் துறையிலும் கனிசமான அளவுக்குப் பெருகியுள்ளதால் இக்கழகத்தின் நிதியுதவியுடன் வேலைவாய்ப் புகள் பெருமளவு பெருகியுள்ளது. இவற்றால் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் பெரும் பயனடைகின்றனர். இக்கழகத்தினரால் உருவாகிய வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

	எண்ணிக்கை.
1978-79	13,517
1979-80	19,626

சிறுதொழில் துறைக்கு நிதியுதவி :

சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினரை சேர்ந்த பலர் பயனடையும் வகையில் சிறு தொழில் துறைக்குப் பெருமளவு நிதியுதவியை இந்நிறுவனம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாவன :—

நிதியுதவியின் அளவு :

குறைந்த அளவு ரூ. 5,000, உயரளவு ரூ. 30.00 இலட்சம். தனி நிறுவனங்களுக்கு உயரளவு ரூ. 30 இலட்சம். தனிபேர உடமை பங்குதாரர் உடமை நிறுவன்ங்களுக்கு கடனின் உயரளவு ரூ. 15 இலட்சம்.

வட்டி வி.தம் :

பின்தங்கிய பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 9.5 சதவீதம், ஏனைய பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 11.00 சதவீதம்.

தொகை திருப்பிச் செலுத்தும் கால அளவு : திட்டத்தின் தகுதிகளைப் பொருத்து 10 முதல் 16 வரையிலான அரையாண்டுத் தவணைகளில் கடன் தொகை திருப்பிச் செலுத்ததக்கதாகும்

மீன் பிடிக்கும் இயந்திரம் வாங்க நிதியுதவி :

மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகள் மற்றும் விசைப்படகுகள் வாங்க நிதியுதவியளிக்கும் திட்டமொன்றை 1978-79-ல் இந்நிறுவனம் தொடங்கியது. குறைந்த விதத்தில் வட்டி வசூலிப்பது, கடனைத் திருப்பிச் செலுத்த போதிய அவகாசம், குறைந்த ஈட்டுப் பொறுப்புத் தொகை முதலிய சலுகைகளுடன் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி குறித்த முக்கிய அம்சங்கள் வருமாறு :

நிதியுதவி அளவு : இயந்திர படகு விலையில் 75 சதவீதம் வரை.

வட்டி வீதம் : பின்தங்கிய பகுதிகள்—9.5 சதவீதம்—ஏனைய பகுதிகள் (5 இலட்சம் ரூபாய் வரை) 11 சதவீதம். மேற்சொன்ன இருவகை தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 12.5 சதவீதம்

திருப்பி செலுத்துவது குறித்த நிபந்தனைகளும் ஏனைய நிபந்தனைகளும் : பின்தங்கிய பகுதிகளில் ஏனைய பகுதிகளில் தொடங்கபடும் தொழிற்சாலைகளுக்கு சிறு/நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கும் என்ன நிபந்தனையோ அவையே.

ஆட்டோ-ட்ராக்/ட்ரெய்லர் வாங்க நிதியுதவி :

படித்து வேலையற்றிருப்போருக்கும் சமூகத்தில் பொருளாதார வகையில் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த ஏனையயோருக்கும் பெருமளவில் வேலை வாய்ப்பளிக்கவும் அவர்கள் சுயவேலைவாய்ப்பு பெறவும் இயலும் பொருட்டு ஆட்டோ-ட்ராக்/ட்ரெய்லர்கள் வாங்க நிதியுதவும் திட்டமொன்றை இந்நிறு வனம் வகுத்துள்ளது. இந்த நிதியுதவியின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

கடன் அளவு	20,000
காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி	சுமார் 15 சதவீதம்
வட்டி விதம்	உரிமையாளரே ஓட்டும் வண்டிகளுக்கு 11.5 சத விதம், ஏனைய வண்டிகளுக்கு 12.5 சதவிதம்
திருப்பி செலுத்துவது	3—5 ஆண்டுகள் வரை திருப்பி செலுத்த துவங்க அவகாசம் — 3 மாதங்கள்

மருத்துவ மனைகள்/தனியார் மருத்துவ மனைகள் தொடங்க நிதியுதவி :

துணிந்து முதலிடு செய்பவர்கள் தொழில் முறையில் தனியார் மருத்துவ மனைகள் தொடங்குவதற்கு நடுத்தரத் தொழில் அடிப்படையில் நிதியுதவி செய்யும் திட்டமொன்றையும் இந்நிறுவனம் தொடங்கியுள்ளது. இந்நிதியுத வியின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

நோக்கம்	நிலம் வாங்குவது, கட்டிடம் கட்டுவது, மருத்துவ சாதனமும் ஆய்வுக்கூட சாதனமும் வாங்கு வது முதலானவற்றுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கிடைக்கும்

அமைப்பு — தனிவுடமை/பங்குதாரர் உடைமை நிறுவனம்/வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கப்படும்

நிதியுதவியின் — தனியுடைமை முழு உரிமை/பங்குதாரர் உடமை நிறுவனங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வரையிலும் ஏனைய நிறுவனங்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வரையிலும் நிதியுதவி கிடைக்கும்

அரிசன/பழங்குடி மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு சிறு கடனுதவி திட்டத்தின்கீழ் வட்டி வீதத்தைக் குறைத்தல் :

அரிசன/பழங்குடி வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் சிறு கடனுதவி திட்டத்தின் மேலும் பல சலுகைகள் வழங்க இந்நிறுவனம் தீர்மானித்துள்ளது. அதன்படி இவ்வகுப்பினரிடம் ஆண்டுக்கு 8 சதவீத வட்டியும் மற்றவர்களிடமிருந்து ஆண்டுக்கு 9 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். கடன் பெறுவோர் கொண்டு வர வேண்டிய காப்பு நிதியைக் கோராமல் தள்ளுபடி செய்யலாம். தகுதி அடிப்படையில் அல்லது குறிப்பிடப்பட்ட மிகக் குறைந்த அளவு காப்புத் தொகையே நிர்ணயிக்கலாம். எளிய நிபந்தனை கடன் உதவி போன்ற நிதியுதவி திட்டத்தின்படியும் விண்ணப்பதாரரின் தொழில் திட்டத்திற்கு உதவி அளிக்கப்படும்.

கடனைத் திரும்ப வசூலித்தல் :

தன்னிடம் கடனுதவி பெற்ற நிறுவனங்களின் உற்பத்தியையும் ஆதாயத்தையும் பாதிக்கும் வகையில் மின்வெட்டு, கடன் பற்றாக்குறை, நிலக்கரி மற்றும் கல்கரி, முக்கியமான மூலப்பொருள்கள் பற்றாக்குறை முதலான இடையூறுகள் ஏற்பட்டபோதிலும் அந்நிறுவனங்களிடமிருந்து கடன் நிலுவைகளை

வசூலிப்பதில் இந்நிறுவனம் நல்ல முன்னேற்றம் காட்டியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் இந்நிறுவனம் வசூல் செய்த தொகைகள் குறித்த விவரம் வருமாறு :—

	ரூபாய் இலட்சத்தில்
1978-79	1,014.61
1979-80	1,052.51

இடையூறுகளை எதிர்நோக்கியுள்ள தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை அவசியமான இடங்களிலெல்லாம் தாராளமான நீக்குப் போக்கான அணுகு முறையை இந்நிறுவனம் பின்பற்றுகிறது. வட்டி செலுத்த அவகாசமளித்தல் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய கால வரையறையில் மாற்றம் செய்வது, வட்டி, அசல் தொகைகளுக்குத் தவணை நீடிப்பு போன்ற அவசிய மான நிவாரணங்களை அளிக்கிறது.

இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளதால் (வரி விதிப்புக்கு முன்னர்) இந்நிறுவனத்தின் ஆதாயம் சீராக உயர்ந்து வந்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் இந்நிறுவனத்திற்கு (வரி விதிப் புக்கு முன்னர்) கிட்டிய ஆதாயம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1978-79	182.72 இலட்சம் ரூபாய்
1979-80 (மதிப்பீடு)	200.00 இலட்சம் ரூபாய்

கைத்தறிகள், நெசவு ஆலைகள்.

கைத்தறி - நெசவு ஆலைத் துறை அதன் இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ்த் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. தலைமையிடத்தில் இணை இயக்குநரும் மாவட்டங்களில் உதவி இயக்குநர்களும் பணி புரிந்தனர். இத்துறை நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகித்தல், கைத்தறி மேம்பாட்டு மும்முரத் திட்டங்கள், ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள், கைத்தறி நெசவாளர்களுக் கான நல நடவடிக்கைகள், பருத்தி, நெட்டிழைப் பருத்தி நூல், பட்டு, சரிகை, சாயங்கள், இரசாயனங்கள் ஆகிய மூலப் பொருட்களை வழங்குதல், கூட்டுறவு நூற்பாலைகள், அது தொடர்பான பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை நிர்வகித்தல் போன்ற பணிகளைத் தொடர்ந்து கவனித்து வந்தது.

கைத்தறித் தொழில்.

மாநிலத்தில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இருந்தன. இது, நாட்டிலுள்ள மொத்த கைத்தறிகளில் ஆறில் ஒரு பங்கு ஆகும். தமிழ் நாட்டில் இந்த ஆண்டில் 13.34 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருந்தனர். 2.40 இலட்சம் கைத்தறிகள் அதாவது 40 சதவிதம் கூட்டுறவுத் துறையுடன் சேர்க்கப் பட்டுள்ளன. 31-3-1980 ஆம் நாள்படி 1,052 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவ்வாண்டில் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ரூபாய் 974.07 இலட்சம் செல விட்டது. இவ்வாண்டில், இந்திய ரிசர்வ் வங்கி, 13 மத்தியக் கூட்டுறவு வங்கி கள் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் மொத்தம் ரூபாய் 1,694.26 இலட்சம் கடனுதவி அளித்தது. இந்த ஆண்டில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தி ரூபாய் 52.00 கோடி மதிப்புடைய தாகும். இந்த ஆண்டு 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட புதிதாக 70 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. புதிய கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏற்கெனவே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலும் 20,000 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டனர்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்:

கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும். இச்சங்கம் மாநிலத்திற்குள்ளேயும் வெளியேயும் கிட்டத்தட்ட முக்கியமான மாநகரங்கள், நகரங்கள் அனைத்திலும் 420 விற்பனைப் பிரிவுகளை நடத்தி வந்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலைத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்காக 21 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வந்துள்ளது. விற்பனை நடவடிக்கைகளுக்காக நடைமுதல் மூலதனமாக தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மூலம் இந்திய ரிசர்வ் வங்கி இச்சங்கத் துக்கு ரூபாய் 1,200 இலட்சம் ரொக்கக் கடன் வழங்கியது. கோ-ஆப்டெக்ஸ் இவ்வாண்டில் ரூபாய் 29 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை வாங்கியது. இது விற்பனை செய்த துணியின் மதிப்பு ரூபாய் 35 கோடியாகும். இவ்வாண் டில் கோ-ஆப்டெக்ஸ் ரூபாய் 2.6 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்தது.

கூட்டுறவு நூற்பாலைகள் :

மாநிலத்தில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் இருந்தன. தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையைத் தவிர மற்ற 12 கூட்டுறவு நூற்பாலைகளும் குழுக் களை நியமனம் செய்தன. சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குழுவின் தலைவராக இருந்தனர். தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தனி அதிகாரி யைத் தலைவராகக் கொண்ட தெரிந்தெடுக்கப்பட்ட குழு ஒன்றைப் பெற் றிருந்தது. எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளும் திங்கள் ஒன்றுக்கு 8,250 இலட்சம் அளவுக்கு பருத்தி நூலை உற்பத்தி செய்தன. இந்த ஆலைகள் 1979-ல் ரூபாய் 3,370.69 இலட்சம் மதிப்புள்ள நூலை உற்பத்தி செய்தன. விற்பனை ரூபாய் 3,284.26 இலட்சமாகும். நிகர ஆதாயம் ரூபாய் 479.05 இலட்சமாகும். இந்த ஆலைகள் அனைத்திலும் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் 9 646 பேர் ஆவர். அவர்களில் 2,252 பேர் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பி யோராவர்.

செய்முறைப்படுத்தும் ஆலை :

ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு தனி செய்முறைப்படுத்தும் ஆலை. நாள் ஒன்றுக்கு 10 பொதிகளுக்குச் சாயமிடும் திறன் கொண்டதாகும். இந்த ஆலை யில் ரூபாய் 22.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட அச்சுப் பிரிவு ஒன்று இருந்தது. நவீன சாய நிலையங்கள் சேலம், வேலூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்துள்ளன.

தமிழ்நாடு கைத்தறி மேம்பாட்டுக் கழகம்:

தமிழ்நாடு கைத்தறி மேம்பாட்டுக் கழகம் ரூபாய் 282.28 இலட்சம் நடை முதல் மூலதனம் உடையதாகும். இக்கழகம், தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ரூபாய் 205.97 இலட்சத்துக்குக் கடன் வழங்கியது.

விசைத் தறிகள் :

மாநிலத்தில் 12.500 விசைத்தறிகள் உள்ளன. இவற்றுக்குத் துணை ஆணை அலுவலரால் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனதா துணி திட்டம்/கட்டுப்பாட்டு விலைத் துணி :

ஜனதா வேட்டிகள், லுங்கிகள், புடவைகள் ஆகியவற்றை நெய்வதற்காக 10,000 தறிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் 11.16 மில்லியன் மீட்டருக்கு ஜனதா வேட்டிகள், லுங்கிகள், புடவைகள் நெய்யப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

தொகுதி ஈட்டுறுதித் திட்டம் :

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அரசு ரூபாய் 34 இலட்சம் நிதியுதவி வழங்கியது. 677 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 66,382 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். இதுவரையில் 458 பேர் இறந்தனர். இதற்கு ரூபாய் 4,54,488 கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

தமிழ்நாடு நெசவாலைக் கழகம்.

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுக்காக நிறுவப்பட்டுள்ளது :—

1. நொடிப்புகளுக்குள்ளாகி மூடப்பெற்ற தனியார் மேற்பார்வையில் அமைந்த நெசவாலைகளின் மேற்பார்வையை மேற்கொள்ளுதல், அவ்வாறு மூடப்பெற்ற நெசவாலைகளினால் வேலைவாய்ப்பிழந்த தொழிலாளர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளித்தல்.

2. இம்மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் பங்கீடு செய்வதற்காக நல்ல தரமான நூலை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

3. மாதிரி நிறுவனங்களாக புதிய நெசவாலைகளை நிறுவுதல்.

4. புதிய பதனிடும் பிரிவுகளை நிறுவுதல்.

5. தொழில் நுட்பம், தொழிலாளர் நலம் முதலியவற்றிற்கு அறிவுரை வழங்குதல்.

புதுக்கோட்டையிலுள்ள காவிரி நூற்பாலையும், இராமநாதபுரம் முத்தேனத்கலில் உள்ள சோமசுந்தரம் நூற்பாலையும் இந்நிறுவனத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. மேற்கண்ட இரு ஆலைகளுக்கும் நடப்பு முதலுக்கான நிதி உதவியாக ரூபாய் 65 லட்சம் பாங்க் ஆப் தஞ்சாவூர், பாங்க் ஆப் மதுரை ஆகியவற்றின் மூலம் இந்நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிறுவனம் இவ்வாண்டு ரூபாய் 6.16 லட்சம் லாபம் ஈட்டியது. இதன் வருமானம் ரூபாய் 18.95 லட்சமாகவும் செலவு ரூபாய் 12.79 லட்சமாகவும் இருந்தது.

இந்நிறுவனம் தொழில் நுட்ப பிரிவு ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இப்பிரிவு பொறுப்புறுதி மூலம், அரசு உதவி அளித்துள்ள ஆலைகள், தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் மேற்பார்வையில் உள்ள ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவற்றின் செயல் முறைகள் பற்றிய விபரங்களை ஆய்வு செய்கின்றது. மேலும் இந்நிறுவனம் கூட்டுறவு ஆலைகளுக்கும், நிறுவனத்தின் மேலாண்மையின்கீழ் அமைந்த ஆலைகளுக்கும் நியாய விலையில் நல்ல தரமான பருத்தியினை வாங்கி பங்கீடு செய்வதனை மேற்கொள்ளும் வகையில் பஞ்சு கொள்முதல் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் பஞ்சு நூல் முதலியவைகளின் தரங்களை நிர்ணயம் செய்வதற்காக ஆய்வுப் பிரிவு ஒன்றினை கோயம்புத்தூரில் நிறுவி, அதன் மூலம் கூட்டுறவு ஆலைகள் கழகத்தின் மேலாண்மையின் கீழமைந்த ஆலைகள் முதலியவற்றிற்கு வாங்கும் பஞ்சு மேற்படி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூலின் தரம் முதலியவற்றினை ஆய்வு செய்கிறது. மேலும் இந்நிறுவனம் பத்து இடங்களில் விசைத்தறி கேந்திரங்களை பின்தங்கிய இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது. ஒவ்வொரு விசைத்தறி கேந்திரமும் 98 விசைத்தறிகளை கொண்டதாய் இருக்கும். இந்த விசைத்தறிக் கேந்திரங்களால் 1.500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

கதர் கிராமத் தொழில்கள்.

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறத்தில் வசிக்கும் கீழ் தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் ஒரே நோக்கத்துடன் இயங்கி வரும் தமிழ் நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் முன்னோடியாக இருந்து வருகிறது.

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் கிராமத் தொழில் திட்டங்களுடன் பின் வரும் சிறப்புத் திட்டங்களையும் நடப்பாண்டில் சிறப்பாக செயலாற்றியது.

1. தீவிர பழங்குடி வளர்ச்சித் திட்டம்
2. மலைப் பகுதி முன்னேற்றத் திட்டம்
3. வறட்சி நிவாரணப் பணித் திட்டம்.

நடப்பாண்டில் 28 கிராமிய நூற்புக் கூடங்கள், நார் உற்பத்தி அலகு ஒன்றும், பாம்கோலா அலகு ஒன்றும் கூடுதலாக துவக்கப்பட்டன. 26,807 பேர்களுக்கு கூடுதலாக நிலையான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. இப்பிரிவுகளின் கீழ் மொத்தம் 3,93,592 பேர் வேலைவாய்ப்பளிக்கப்பெற்றனர்.

ரூ. 66 லட்சமாக இருந்த பட்டு உற்பத்தி கடந்த ஆண்டில் ரூ. 109.78 லட்சமாக உயர்ந்தது. வழக்கமாக ஏற்றுமதி செய்யப்படும் பனைநாரும்புடன், பனை வெல்லப் பாகும் வெளிநாட்டிற்கு முன்னோடித் திட்டமாக அனுப்பப்பட்டது. பனைத் தொழிலின் கீழ் வேலைவாய்ப்புப் பெற்றோரின் எண்ணிக்கை 2.62 லட்சத்திலிருந்து 2.86 லட்சமாக உயர்ந்தது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் அலகுகளும் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் பின்வருமாறு :

கதர்.

கதர் அலகுகளின் எண்ணிக்கை	580
கதர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை	4
நூல் உற்பத்தி (மெட்டிரிக் சிட்டங்கள்)	
கிஸான்	3.83 லட்சம்
அம்பர்	2.63 லட்சம்
கிராமிய நூற்பு கூடங்கள்	217.71 லட்சம்
கதர் உற்பத்தி.	
மீட்டர்	36.35 லட்சம்
மதிப்பு ரூ.	409.71 லட்சம்
பட்டு உற்பத்தி	
மீட்டர்	1.66 லட்சம்
மதிப்பு ரூ.	109.78 லட்சம்
கதர் விற்பனை.	
மதிப்பு ரூ.	615.24 லட்சம்

வேலை வாய்ப்பு மற்றும் கூலி வழங்கியது.

	எண்ணிக்கை.	ரூபாய்.
நூற்போர்	27,743	47.09 லட்சம்
நெய்வோர்	6,645	111.77 லட்சம்
ஏனையோர்	384	10.32 லட்சம்
	34,772	169.18 லட்சம்

கிராமிய கலை மற்றும் கைவினைத் தொழில்கள்.

கிராமிய கலை மற்றும் கைவினைத் தொழில்கள்—206

கிராமத் தொழில்கள்.

அ. கிராமத் தொழில் அலகுகள்—163

ஆ. கிராமத் தொழில் சங்கங்கள்—3,308

இ. உற்பத்தி ரூ.	3,273.39 லட்சம்
ஈ. விற்பனை ரூ.	3,546.28 லட்சம்
உ. வேலை வாய்ப்பு எண்ணிக்கை	3,58,820.
ஊ. கூலி வழங்கியது	1,079.02 லட்சம்.

தமிழ்நாடு மட்பாண்ட நிறுவனம்.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் பல்வேறு பீங்கான் தொழில் பிரிவுகளை ஒருங்கிணைந்து அவற்றில் அலுவல்களை ஒரே நிர்வாகத்தின் கீழ் அமைக்க "தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்" ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் தொழில் வணிகத் துறையிடமிருந்தும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திடமிருந்தும் 8 தொழில் பிரிவுகளை எடுத்துக் கொண்டுள்ளது. இவற்றில் 3 பிரிவுகள் வணிக அடிப்படையிலானவை. மற்றவை வளர்ச்சி நோக்கமுடையவை. பலவித பொருளாதார நடங்கல்களுக்கிடையே, இந்நிறுவனம் 1979-80-ல் ரூ. 110 இலட்சத்துக்கும் மேலான உற்பத்தியை எட்டியுள்ளது.

டாசெல் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.

இப்பிரிவு துப்புரவு சாமான்கள், பீங்கான் பொருட்கள், மின்தடை சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. 1968-69-ல் ஒரு சூளை அமைக்கப்பட்டு இதன் உற்பத்தி ஒரு நாளைக்கு 3 டன்கள் விதம் அதிகரிக்கப் பட்டது. 1979-80-ல் இதன் செயல்திறன் வருமாறு :—

உற்பத்தி	984.50	டன்கள்	ரூ. 51.65	இலட்சங்கள்
விற்பனை	971.25	,,	ரூ. 47.10	,,

டாசெல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.

பொதுவாக கட்டுமான வேலைக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இவற்றில் வடிகால் வசதிக்கு தேவை யான உப்பு மெருகிட்ட கற்குழாய்களை இப்பிரிவு உற்பத்தி செய்கிறது. 1979-80 க்கான இப்பிரிவில் செயல்திறன் வருமாறு :—

உற்பத்தி	4,135	டன்கள்	ரூ. 26.05	இலட்சங்கள்
விற்பனை	4,463	,,	ரூ. 27.54	,,

டாசெல் இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

இத்தொழிற்சாலையில் உற்பத்தி மின்சக்தி கட்டுப்பட்டாலும் பழைய இயந்திரங்கள் பெரிய அளவில் பழுதடைவதாலும் மற்றும் தொழிலாளர்களின் தொந்தரவாலும் பெரிதளவும் பாதிக்கப்பட்டது. இப்பிரிவில் 1979-80-க்கான செயல்திறன் வருமாறு :—

உற்பத்தி	37.00	இலட்சம் செங்கற்கள்	ரூ. 9,20	இலட்சங்கள்
விற்பனை	28.70	இலட்சம் செங்கற்கள்	ரூ. 7.15	,,

டாசெல் தொழிற்பேட்டை மற்றும் டாசெல் பீங்கான் பணி வசதி நிலையம், விருத்தாசலம்.

தமிழ்நாட்டின் பீங்கான் தொழிலை வளர்க்கும் நோக்கத்துடன் பீங்கான் சாமான்கள் செய்பவர்களுக்கு குறைந்த வாடகையில் கொட்டகைகளை டாசெல் தொழிற்பேட்டை அளித்து வருகிறது. உலை எண்ணையால் இயங்கும் நவீன சுரங்கச் சூளை ஒன்று அமைக்கப்பட்டுள்ள டாசெல் பணி வசதி நிலையமும் வளர்ச்சி நோக்குடன் இயங்குகிறது. தொழிற்பேட்டை

யிலுள்ள தனியார் தொழில் முனைவர்கள் டாசெல் பணி வசதி நிலையத்தின் பணியினை பயன்படுத்தி பலவித பீங்கான், மின் பொருள்கள், மண் பொம்மைகள், துப்புரவு சாமான்கள் மற்றும் சிறந்த பீங்கான் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். நவீன சுரங்கச் சூளை பெருமளவிலான தரமான பொருள்களை குறைந்த செலவில் சூளையிட்டு உற்பத்தியை பெருக்க உதவுகிறது. பணிவசதி நிலையத்தில் 1979-80-க்கான செயல்திறன் வருமாறு :—

பணி வசதி நிலையம்	ரூ. 8.25 இலட்சங்கள்
சுரங்கச் சூளை	ரூ. 4.75 இலட்சங்கள்

டாசெல் கலை நிலையங்கள், பெரம்பூர் மற்றும் விருத்தாசலம்.

இவை பழமையும் புதுமையும் இணைந்த முறையில் பீங்கான் கலைப் பொருள்களை உருவாக்குவதில் பயிற்சி அளிக்கும் மற்றும் உற்பத்தி செய்யும் நிலையங்களாகும். 1979-80-க்கான இவற்றின் செயல்திறன் வருமாறு :—

	கலை நிலையம் (விருத்தாசலம்)		கலை நிலையம் (பெரம்பூர்) (ரூபாய் இலட்சங்களில்)	
உற்பத்தி	20.29 டன்கள்	ரூ 1 24	13.98 டன்கள்	ரூ. 2.41
விற்பனை	—	ரூ. 2,53	—	ரூ. 1.19

டாசெல் பீங்கான் மையம், ஓமலூர்.

கிராம ஏழைகளுக்கு வேலை கொடுக்கும் நோக்கத்துடன் இத்தொழில் மையம் ஏற்படுத்தப்பட்டது. இதில் பீங்கான் ஜாடிகள் மற்றும் மலிவான பீங்கான் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராம மக்களுக்கு பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் பயிற்சி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மையத்தின் 1979-80-க்கான செயல்திறன் வருமாறு :—

உற்பத்தி	139.56 டன்கள்	ரூ. 4.14	இலட்சங்கள்
விற்பனை	122.31 ,,	ரூ. 3.59	,,

தமிழ்நாடு கனிவள நிறுவனம்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் அரசுக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனம் 1978 ஏப்பிரலில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

1. வணிக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கனிமப் பொருள்களை முறையாகத் திட்டமிட்டு அறிவியல் முறைகளில் வெட்டியெடுத்தல்.

2. கனிமப் பொருள்களை வெட்டியெடுக்கும் பல்வேறு முகவமைப்பு களுக்குத் தொழில் நுணுக்க ஆலோசனைகள் வழங்குதல்.

3. கனிம ஆதாரங்களைக் காக்கவும் சரியான முறையில் பயன்படுத்த வும் கொள்கையைச் செயற்படுத்துதல்.

4. இம்மாநிலத்தில் தரத்தில் குறையுடைய கனிம தாதுப் பொருட்களை கண்டறிந்து அவற்றை வெட்டியெடுத்து மேம்படுத்துவதற்கும் பயன்படுத்து வதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கான நவீன தொழில் நுட்பங் களுடன் ஆராய்ச்சி-மேம்பாட்டுப் பிரிவை ஏற்படுத்துதல்.

5. மாநில—மத்திய அரசுகளுக்குச் சொந்தமான நிறுவனங்களின் உடனுழைப்புடன் திட்டங்களை நிறுவுதல்.

6. பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி அளித்தல்.

இந்நிறுவனம் தனது மூன்றாம் ஆண்டு உற்பத்தியை தொடங்கியுள்ளது பல்வேறு சுரங்கத் திட்டங்களை நிறுவியதன் மூலமும் உற்பத்தி—விற்பனை ஆகியவற்றைச் சீரமைத்ததன் மூலமும் இந்நிறுவனம் முதல் இரண்டாண்டு களில் வளர்ச்சியின் தொடக்க நிலையில் இருந்தது.

முக்கிய கனிமங்கள் வெட்டியெடுத்தல்.

ஏற்கெனவே உள்ள வளங்கள் மாநில அரசு வெட்டி எடுப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பகுதிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வெர்மி குலைட், சுண்ணாம்புக்கல் படிக்கல், பெல்ஸ்பார், ரோஜா நிற படிக்கல், சிலிக்காமணல், குளைக்களிமண் ஆகியவற்றின் பயன்கொள்வதற்காக, கனி வளத் திட்டங்களைத் தமிழ் நாடு கனிம நிறுவனம் மேற்கொண்டுள்ளது அதற்கிணங்க செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, திருச்சி, மதுரை, வட ஆர்க்காடு,

சேலம் மாவட்டங்களில் 206.93 ஏக்கர் பரப்பளவில் முக்கியமாக கனிவளங்களை வெட்டி எடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. முன்னர் தொழில் துறை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த நில உட்கூற்றியல் பிரிவின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்து வெர்மிகுலைட் சுரங்கம், 1978 ஆகஸ்டு திங்களில் தமிழ்நாடு கனிவள நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு, வெர்மி குலைட்டை தோண்டி எடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது.

தொடக்கநிலையில் செய்யவேண்டிய சுரங்கம் அமைக்கும் பணிகள் அனைத்தையும் செய்து முடித்த பிறகு, வெர்மிகுலைட்டு சுண்ணாம்புக்கல், படிக்கல், ஃபெல்ஸ்பார் ஆகியவற்றைத் தோண்டியெடுக்கும் சுரங்கங்களில் ஒரு சீரான உற்பத்தியைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் பெற்றது. அறிக்கை கால அளவில் மொத்தம் 7,483 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கருங்கல்—

கரும்பாறை தரக்கட்டுப்பாடு சீரான விரை ஆகியவற்றிற்கு வழிவகுக்க வேண்டுமென கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு வெளிநாட்டு வணிகர்களுக்கு மட்டும் கரும்பாறைகள் விற்பனை செய்யலாம் என வரையறுக்கப்பட்டது. அதிகளவு ஏற்றுமதி வாயிலாக அந்நியச் செலவாணி பெறுவதோடு இத்தொழிலில் இடைத்தரகர்களை அகற்றுவதும் இக் கொள்கையினால் உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்நிறுவனம் 1977 நவம்பரில் திண்டிவனம் வட்டத்தைச் சேர்ந்த குன்னம் கிராமத்தின் நி. அ. பு. எண் 205/2-இல் அமைந்துள்ள கரும்பாறை வெட்டி யெடுக்கும் இடத்தை டான்சி நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. சரளைக் கற்களாகப் பெரிதும் பயன்படுத்தப்படும் எரிபாறை என்ற "குன்னம்" (கருங்கல்) உலகத்திலேயே சிறந்தவையாகக் கருதப்படுகிறது. 1979-80-இல் நான்கு மாத காலமாக இந்நிறுவனம் குப்பைகளையும் வீணான கற்களையும் அங்கே அகற்றும் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டது.

பழுப்புநிறக்கற்கள்—

இந்நிறுவனம் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி நகரத்திற்கு அருகிலுள்ள செந்தாரப்பள்ளி கிராமத்தில் 80 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் பழுப்பு நிறக் கற்களை வெட்டியெடுக்கும் இடத்தைக் கையகப்படுத்தியுள்ளது. கப்பல்

கட்டணமின்றி மங்களூர் துறைமுகத்தில் கன மீட்டர் ஒன்றுக்கு ரூ. 650 (350 அமெரிக்க டாலர்) வீதத்தில் மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்றிடமிருந்து 200 கன மீட்டர் பழுப்புநிறக் கற்களை வழங்குவதற்கான தேவைக் குறிப்பு ஆணையை இந்நிறுவனம் பெற்றுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் 28 கன மீட்டர் கற்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நம் நாட்டிலேயே இப்பொருள்களை முதன் முதலில் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் முதல் நிறுவனம் தமிழ்நாட்டுக் கனிவள நிறுவனமாகும்.

தமிழ்நாடு உப்புக் கழகம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974-ம் ஆண்டு ரூ. 50 இலட்சம் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிகவும் பிற்பட்ட பகுதியான மாரியூர், வாலிநோக்கம் சதுப்பு நிலப் பகுதியை உப்பளங்களாக உருவாக்குவதற்காக நிறுவப்பட்டது. பல்வேறு சிறு உப்பு உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் தயாரித்த உப்பை விற்பனை செய்ய உதவுதல் மற்றும் தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய பணிகளுக்கு உதவுதல் போன்ற பொது சௌகரியங்களைச் செய்வது இந்நிறுவனத்தின் பணிகளாகும்.

மாரியூர்-வாலிநோக்கம் உப்பு திட்டம்:—

5,617 ஏக்கர் பரப்பளவு கொண்ட இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 145 இலட்சம் ஆகும். வாலிநோக்கம் குடாவிலுள்ள உப்பங்கழி மூலம் கடல் நீரை பெற இயலாததால் பம்புகளின் மூலம் கடல் நீர் கொண்டுவரப்படுகிறது. இந்த ஆண்டு இத்திட்டம் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தது. இத்திட்டம் முடிவடையும்போது சுமார் 100 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் சுமார் 1,000 நபர்களுக்கு வருடத்தில் 10 மாதங்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். இதுவரை 2,291 ஏக்கர் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியை சுற்றி ரூ. 13 இலட்சம் செலவில் சுமார் 24 கி.மீட்டர் நீளமுள்ள சுற்று அணைக்கரை போடப்பட்டு வெள்ளம் உட்புகா வண்ணம் தடுக்கப்பட்டுள்ளது. 1978-ல் 63 உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 33 உப்பளங்கள் தயார் செய்யப்பட்டன. 1978-ம் ஆண்டில் நிமிடத்திற்கு 10,000 காலன் பம்பு செய்யப்பட்ட கடல் நீர் 1979-ம் ஆண்டில் 20,000 காலன்களாக உயர்த்தப்பட்டது. 22,660

டன் உப்பு 1979-ல் உற்பத்தி செய்யப்பட்டு, 2,236 டன் விற்பனை செய்யப் பட்டது. 1979-ம் ஆண்டு வரை ரூ. 99 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டது.

மாவக்காடு-வடக்காடு உப்புத் திட்டம்—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு மற்றும் வடக்காடு கிராமங்களில் 5,400 ஏக்கர் பரப்பளவில் உப்பு தயாரிக்கும் பணியை 1978-ம் ஆண்டில் அரசு இந்நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இத்திட்டப் பகுதிக்காக தல எல்லை வேறுபாடு குறிப்புப் பணி 1979-ம் ஆண்டு மே திங்களில் முடிவு டைந்து, மேற்கு புறத்தில் ஏற்கெனவே உள்ள வரப்புகள் உறுதிப்படுத்தப் பட்டன. இத்திட்டத்தின் மூலம் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கழுவேலி சதுப்பு நிலத்தில் உப்பு மேம்பாடு செய்வதுபற்றி இந்நிறுவனம் ஆராய்ந்து இங்கு 1,588 ஏக்கர் நிலப் பகுதி உப்பு உற்பத்திக்கு ஏற்றதென கண்டறியப்பட்டது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் முற்றிலும் அரசுக்குச சொந்தமான நிறுவனமாகத் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் சந்தன மரத்தில் அழகுப் பொருள்கள் செய்தலில் பயிற்சி நிலையம் ஒன்றையும் மதுரையில் புதிய கைத்திறப் பயிற்சி நிலையம் ஒன்றையும் இக்கழகம் தொடங்கியுள்ளது. திருச்சிராப்பள்ளியி லுள்ள சங்கம் ஓட்டலில் புதிய விற்பனைக்கூடம் ஒன்றும் தொடங்கப்பட்டது. இக்கழகம் உயர்பயிற்சி பெறுவதற்காகப் வெவ்வேறு கைவினைப் பயிற்சி நிலையங்களுக்கு கைத்திறத் தொழிலாளர் பதின்மூவரை இவ்வாண்டு முகமையில் அனுப்பியது.

இவ்வாண்டு உற்பத்தி ரூ. 41 இலட்சமாக அதிகரித்துள்ளது. கழகத்திற்கு இவ்வாண்டு ரூபாய் 143.78 இலட்சம் விற்று முதல் கிடைத்தது. இதில் ரூபாய் 6.93 இலட்சம் பொருள்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இக்கழகம், இவ்வாண்டு தோராயமாக ரூபாய் 3 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம் :

தமிழ்நாட்டிலுள்ள 30,000 பட்டுத்தறிகளுக்கு ரூ. 65 இலட்சம் மதிப்புள்ள சரிகை 15,000 மார்க்குகள் தேவைப்படுகின்றன. இந்த பட்டுத் தறிகளுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்வதன் பொருட்டு காஞ்சிபுரத்தில் "தமிழ்நாடு சரிகை லிட்" என்ற நிறுவனம் பொதுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 6—12—1971-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனம் இயக்குநர் குழு மற்றும் நியமிக்கப் பட்ட முழுநேர நிர்வாக இயக்குநரால் நடத்தப்பட்டு வருகிறது.

பொருளாதாரம்—

இந்த ஆலையின் அங்கிகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 20 இலட்சம். இதில் ரூ. 7 இலட்சம் அரசு பங்குத் தொகையாக அளித்துள்ளது. பங்குத் தொகை யான ரூ. 7 இலட்சம் தவிர, ரூ. 2 இலட்சம் குறுகியகாலக் கடனாக அரசு அளித்துள்ளது. மேற்கண்ட ரூ. 9 இலட்சம் நிதி வசதியுடன் 20 நூற்பு இயந் திரங்கள் கொண்ட இந்த ஆலை நிறுவப்பட்டது. இது தவிர, தமிழ்நாடு தொழில் மூலதன வாரியம் சென்னை, வெள்ளி இழை தயாரிக்கும் இயந்தி ரங்கள் நிறுவ ரூ. 9 இலட்சமும் நிதி பற்றாக்குறையை நிவர்த்திக்க தமிழ்நாடு அரசு ரூ. 3 இலட்சம் கடனாக கொடுத்துள்ளன. இந்த ஆலையின் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் 1979-80-ம் வருடம் அரசு கூடுதல் பங்குத் தொகையாக ரூ. 2.50 இலட்சமும் மத்தியக்காலக் கடனாக ரூ. 2.50 இலட்சமும் அளித்துள்ளது.

உற்பத்தி மற்றும் விற்பனை.

இந்த ஆலையில் மாதத்திற்கு சராசரி 150 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்யப்பட்டது. இயங்காத நிலையில் உள்ள இயந்திரங்கள் இயக்கப்பட்டு 1979-80-ம் ஆண்டின் இறுதியில் உற்பத்தி மாதத்திற்கு சராசரி 500 மார்க்கு களாக உயர்ந்துள்ளது. உற்பத்தியாகும் சரிகையை பிரதம பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்ய மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளது. ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் :

வருடம்.	உற்பத்தி அளவு [மார்க்குகள்).	விற்பனை.	
		அளவு (மார்க்குகள்).	தொகை (ரூ. லட்சத்தில்)
1979–80	2,540	2,387	20·39

ஆலையின் வேலைத்திறன்—

சரிகை உற்பத்திக்கு தேவையான மூலப் பொருள் வெள்ளி இழை. இந்த மூலப்பொருளை இவ்வாலையிலேயே தயாரிப்பதற்கு வெள்ளி இழை தயாரிக்கும் இயந்திரங்கள் ரூ. 9 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. ஒன்பது தட்டையாக்கும் இயந்திரங்களும் 20 நூற்பு இயந்திரங்களும் இயங்கி வருகின்றன.

தமிழ் நாடு திரையரங்கு நிறுவனம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூ. 10.00 இலட்சத்தோடு 12—4—1972-லிருந்து இந்தக் கழகம் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான ஒரு தனி நிறுவனமாக 1956 கம்பெனி சட்டப்படி இயங்கி வருகிறது. பிறகு இக்கழகம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தை ரூ. 50.00 லட்சத்திற்கு உயர்த்தியிருக்கிறது. இக்கழகம் 31—3—1980-ல் ரூ. 35.00 லட்சத்தை 35,000 பங்குகளாக ஒவ்வொரு பங்கும் ரூ. 100 வீதம் 35,000 பங்குகளாக பகிர்ந்து தம் கழக பங்குதார்களுக்கு அளித்துள்ளது.

இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதின் முக்கிய குறிக்கோள்கள் :—

1. நிரந்தர, பகுதிநிலைத் திரையரங்கு, திறந்தவெளி திரையரங்கு நடமாடும் திரையரங்குகளை உருவாக்க, சொந்தமாக நிர்வாகம் செய்து நடத்துவது.

2. நிரந்தர, பகுதிநிலைத் திரையரங்கு, திறந்த வெளி திரையரங்கு மற்றும் நடமாடும் திரையரங்கு இவைகளை கட்டும் நபர்களுக்கு ஆலோசனை, உதவி, நிதிஉதவி ஆகியவற்றை அளிப்பது.

3. நிரந்தர, பகுதிநிலைத் திரையரங்கு, திறந்த வெளி திரையரங்கு மற்றும் நடமாடும் திரையரங்கு கட்டுவதற்கு பொருள் உதவி உட்பட எல்லா உதவிகளையும் அளிப்பது.

4. நிரந்தர, பகுதி நிலைத் திரையரங்கு, திறந்தவெளி திரையரங்கு மற்றும் நடமாடும் திரையரங்கு ஆகியவற்றில் அபிவிருத்தியும், கட்டு மானத்தில் புதிய முறைகளையும், நிர்வாகிப்பது பற்றியும் உதவி அளிப்பது.

5. பகுதி நிலை திரையரங்குகளை மாற்றி நிரந்தர திரையரங்குகளாக மாற்ற, திறந்தவெளி மற்றும் நடமாடும் திரையரங்கங்களை பகுதி நிலை மற்றும் நிரந்தர திரையரங்கமாக மாற்ற நிதியுதவி தொழில் நுட்ப ஆலோசனை ஆகியவற்றை அளிப்பது.

6. நிரந்தர, பகுதிநிலை திரையரங்கு, திறந்த வெளி திரையரங்கு அல்லது நடமாடும் திரையரங்கு ஆகியவற்றில் கடன் தவணையை செலுத்த தவறினால் கடன் தொகையை திருப்பி வசூலிப்பதில் அரசாங்கம் அல்லது நிதி நிர்வாகத்தினர் மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நடவடிக்கை எடுப்பது. மேற்கூறிய எந்த வகை திரை அரங்காக இருந்தாலும் கட்ட வேண்டிய தவணையை செலுத்தத் தவறினால் கம்பெனியோ அல்லது அரசாங்கமோ அத் திரையரங்கைத் தன்னுடைய பொறுப்பில் எடுத்து நடத்த நடவ டிக்கை எடுக்கும்.

கழகம் ஆற்றிய பணிகள்.

இக்கழகத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள பகுதி நிலத் திரையரங்குகள் கட்டுவதற்கான கடன்களை மக்கள் வரவேற்கிறார்கள். 31—3—1980 முடிய கடன்களுக்கான விண்ணப்பங்கள் 156 பெறப்பட்டுள்ளன. இதில் கடன் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் 102. இதில் கடன் அளிக்கப்பட வேண்டிய 35 விண்ணப்பங்கள் 31—3—1980 முடிய தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 31—3—1980 முடிய 74 விண்ணப்பங் களுக்கு கடன் அளித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிலுள்ள 12 மாவட்டங்களுக்கு ஆன ரூ. 84.83 லட்சம் ஆகும். இதில் 83.60 இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. கடன் வாங்கியவர்களில் இருவர் தங்கள் கடன்

களை முழுமையாக பெறுவதற்கு முன்பே தங்கள் கணக்குகளை முடித்துக் கொண்டனர். கழகத்தின் இம்முறையினால் தனியார் மூலதனம் ரூபாய் 2 கோடிக்கு மேல் திரையரங்குகள் கட்டுவதற்கு உள்ளன. இம்முறையிடுகள் 1,500 பேர்களுக்கு மேல் நிலையாக வேலை அளிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பலருக்கு கால நேர வேலை உள்ளது. முந்தைய ஆண்டுகளில் சிமெண்ட் பற்றாக் குறையினால் 68 பகுதி நிலைத் திரையரங்குகள் மட்டும் நடந்து வருகிறது. முந்தைய திரையரங்குகள் விரைவில் காட்சிகளைத் தொடங்க உள்ளது.

நிதி நிலவரம்.

திரையரங்கு கழகம் லாபகரமாகவே செயல்பட்டு வருகிறது. 1979-80-ல் கழகம் 0.32 லட்சம் லாபம் காட்டியுள்ளது.

கொதிக்கலன்கள்.

1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்படு பட்டியலின்படி தமிழ் நாட்டிலுள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எகனாமைசர்களின் எண்ணிக்கை 1,605 ஆகும். இவற்றில் 1,532 கொதிகலன்கள் மற்றும் எகனா மைசர்கள் உட்பட உபயோகத்திற்கான அனுமதி, கொதிகலன்கள் மற்றும் எகானமைசர்களின் நிலையை பொறுத்து இயங்குவதற்கு இத்துறையால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை.

கொதிகல ஆய்வுக் கட்டணம், கொதிகல பதிவுக் கட்டணம், கொதிகலன் தயாரிக்கப்படும் ஒவ்வொரு நிலையின் ஆய்வுக் கட்டணம், வார்வுகள், உரம், ஹெட்டர் ஆகியவைகளின் இயந்திரச் சோதனைக் கட்டணம், பற்றவைப்பவர் களுக்கு நடத்தப்படும் சோதனைக் கட்டணம், கொதிகல பணியாளர் தேர்வு களுக்கான கட்டணம் மற்றும் கொதிகல இயக்க பொறியாளர் தேர்வுக்கான கட்டணம், கொதிகல பாத்திரங்களை பரிசோதனை செய்யக் கட்டணம் ஆகிய வகையறாக்களில் வசூலிக்கப்பட்ட மொத்த கட்டணம் ரூ. 16,36,100.00.

இத்துறையில் இவ்வாண்டில் செலவழிக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 6,49,700.00.

கரும்பு இயக்குநர் அலுவலகம்.

பொதுவாக சர்க்கரைத் தொழில் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் முறையாக வளர்ச்சியடைந்து நல்ல முறையில் செயல்படுவதைத் தொடர்ந்து கவனிக்கவும் இத்தொழில் தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இயக்குநர் அலுவலகம் ஒன்றைத் தனியே ஏற்படுத்தியது. இந்த இயக்குநர் அலுவலகம் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை ஒருங்கிணைத்தல் அவற்றை மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இந்த ஆண்டில் 8 கூட்டுப்பங்கு சர்க்கரை ஆலைகள், 9 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், 2 மாநிலப் பொதுத் துறை அரசு சர்க்கரை ஆலைகள், மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 2 கூட்டுத்துறை சர்க்கரை ஆலைகள் உட்பட இம்மாநிலத்தில் மொத்தம் 20 சர்க்கரை ஆலைகள் இயங்கி வந்தன.

1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் (31—3—1980 வரை) இம்மாநிலத்தில் பிழியப்பட்ட கரும்பின் அளவு உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு பெறப்பட்ட சர்க்கரையின் அளவு ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பிழியப்பட்ட கரும்பின் அளவு. (டன்களில்)	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரையின் அளவு. (டன்களில்)	பெறப்பட்ட சர்க்கரையின் சதவீதம்.
(1)	(2)	(3)
31,09,206	2,83,454	9.12

1979-80 ஆம் சர்க்கரை ஆண்டில் கரும்பின் விலை.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் கரும்புக்குக் கொடுக்க வேண்டிய குறைந்த பட்ச விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. 1979-80 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் குறைந்த அளவு விலையைக் குவிண்டால் ஒன்றிற்கு ரூ. 12.50 என நிர்ணயித்து 8.5 சதவீதச் சர்க்கரைச் சத்துக்கு அதிகமாகக் கிடைக்கும் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக 14,7059

காசுகள் விதம் கிடைக்கும் தொகையையும் சேர்த்து மைய அரசு கரும்பு விலையை நிர்ணயம் செய்தது. 1975 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாட்டு) ஆணையின்படி வெளிச்சந்தைச் சர்க்கரை விற்பனையில் கிடைக்கும் கூடுதல் தொகையின் அடிப்படையில் கரும்பு பிழியும் பருவம் முடிவடைந்த பின்னர் கரும்புக்குக் கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்படும்.

"செஸ்" வரி வசூலிப்பு

1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் கரும்பு "செஸ்" வரியாக ரூ. 20.66 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

கரும்பாலைச் சாலை மேம்படுத்தும் திட்டம்.

1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் கரும்பாலைச் சாலை மேம்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 150 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சர்க்கரை ஏற்றுமதி.

1978-79 ஆம் ஆண்டுக்காலத்தில் நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தி யளவு 58.58 இலட்சம் டன்களாகும். இதில் 4.92 இலட்சம் டன் சர்க்கரை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. நாட்டின் உற்பத்தி பெருகியுள்ள தால் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு ஏற்பாடு செய்தது. 1978-79 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யுப்பட்ட சர்க்கரையி லிருந்து 1.66 இலட்சம் டன் சர்க்கரை இந்திய வாணிகக் கழகத்தின் மூலமாக ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்.

தமிழகத்தில் பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவும் பொருட்டு இந்திய நிறுமச் சட்டம் 1956-ன்படி "தமிழ் நாடு சர்க்கரைக் கழகம்" 1974-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. இக் கழகத்தின் வேலைகள் இயக்குநர் குழுவினால் கவனிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கழகம், கீழ்க்கண்ட இடங்களில் ஆலைகள் நிறுவுவதற்கான உரிமங்களை பெற்றிருந்தது.

1. தஞ்சாவூர்
2. பெரம்பலூர்
3. சங்கரன்கோவில்
4. திருக்கோயிலூர்
5. சிவகங்கை.

தஞ்சாவூரில் ஒன்றும், பெரம்பலூரில் ஒன்றுமாக இரு சர்க்கரை ஆலைகளை இக்கழகம் நிறுவியுள்ளது. தஞ்சாவூர் ஆலை—அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்றும், பெரம்பலூர் ஆலை—ஜவஹர்லால் நேரு ஆலை—என்றும் பெயரிடப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977 ஆண்டு பிப்ரவரி மாதத்திலும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் அரவையைத் தொடங்கின. இனிமேல் புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் மாறுபட்ட கொள்கைக்கிணங்க உளுந்தூர்பேட்டை தாலுகாவிலுள்ள பெரியசெவலை கிராமத்தில் நிறுவப்பட உள்ள மூன்றாவது சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆலை உளுந்தூர்பேட்டை கூட்டுறவு சர்க்கரை ஆலை என பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடியும் நிலையில் உள்ளது. இயந்திர தளவாடங்கள் நிர்மானப் பணிகளும் முடியும் நிலையில் உள்ளது. 1980-ம் ஆண்டு ஆலை அரவையை துவக்க பணிகள் நடந்து கொண்டு இருக்கிறது.

1979-80 ஆம் ஆண்டு பருவத்தில் சர்க்கரைக் கழகத்தின் இரு ஆலைகளின் உற்பத்தி விவரம் வருமாறு :—

விவரங்கள் (1)	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை. (2)	ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை. (3)
1. கரும்பு அரவை (டன்)	1,27.511	1,54,337
2. சர்க்கரை உற்பத்தி (குவின்டால்)	1,18,443	1,48,675

பட்டு வளர்ப்பு.

பட்டுப் புழுவைப் பெருமளவில் வளர்ப்பதற்குச் சாதகமான சூழ்நிலை வந்ததால் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி ஒரு இயக்குநரின் கீழ் பட்டுப்புழு வளர்ப்புத்துறை ஒன்று புதிதாக 1—4—1979-ல் ஏற்படுத்தப் பட்டது. இத்துறை ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாக பட்டுப்புழு வளர்ப்பு குறித்த நடவடிக்கைகளை தொழில்கள் வணிகத்துறை கவனித்து வந்தது.

முசுக்கட்டைப் பயிரிடுதல், மேம்பாட்டுப் பணிகள்.

[illegible]

நடப்பாண்டில் 8000 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டை பயிரிடப்பட வேண்டு மென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 10,051 ஏக்கர் நிலத்தில் முசுக் கட்டை பயிரிடப்பட்டது. உழவர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ. 30.67 இலட்சம் செலவில் 6,226 உழவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. பட்டுப் புழு வளர்ப்பதற்குரிய கொட்டகைகள் அமைத்தல், அதற்கான துணை கருவிகள் வாங்குதல் போன்றவற்றிற்காக 5,887 உழவர்கள் நிதி உதவி பெற்றனர். இத் திட்டத்தின் கீழ் ரூ. 54.24 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவு வங்கிகளை இத்துறை அணுகி உழவர்களுக்கு மேலும் ரூ. 25 இலட்சம் கடனுதவி வழங்க வகை செய்துள்ளது. நடப்பாண்டில் 637 குடிசைத் தொழில் பட்டுநூல் சுற்றும் பிரிவுகள் தொடங்கப் பட்டதன் பயனாக, இம்மாநிலத்தில் கச்சாப்பட்டு நூல் சுற்றும் அளவில் ஒரு இலட்சம் கிலோ அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோருக்கு ரூ. 3.38 இலட்சம் வழங்கப்பட்டது. கிராம அளவில் 14 தொழில் கூட்டுறவும் பட்டுநூல் சுற்றுச்சங்கங்கள் நிறுவப்பட்டு அவற்றுக்குக் கடனாகவும் மானிய மாகவும் ரூபாய் 8.72 இலட்சம் வழங்கப்பட்டது. உழவர்கள் கூட்டு புழுக்களை விற்கவும் வளர்ப்பவர்கள் அவற்றை வாங்கவும் வசதியாக மன்னார்குடி, புதுக்கோட்டை, களக்காடு, தென்காசி, நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் கூட்டுப்புழு அங்காடிகள் நிறுவப்பட்டன. கூடுதலாக இரண்டு பட்டுபுழு களஞ்சியங்கள் அமைக்கப்பட்டு, முட்டை உற்பத்தி 100 இலட்சத்திலிருந்து 200 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

பணியாளர் பயிற்சி விரிவாக்குதல்.

நடப்பாண்டில் சார் நிலைப் பணியாளர்களுக்குத் துறையில் பல்வேறு பணிகளில் பயிற்சியளிக்கும் பொருட்டு ஓசூரில் இத்துறையே ஒரு பயிற்சிப் பள்ளியினைத் தொடங்கியுள்ளது. 42 பட்டதாரிகளுக்கும் 88 பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கும் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் பயிற்சியளிக்கப் பட்டு அவர்கள் இத்துறையில் பணிக்கமர்த்தப்பட்டனர். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. தனியார் துறையில் பணியில் சேரும் பொருட்டு, தனி நபர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் 5 கிராமப் பகுதி பட்டு நூல் சுற்றும் பயிற்சி நிலையங்களும் 12 கட்டிட விளக்க பயிற்சி நிலையங்களும் நிறுவப்பட்டன. தஞ்சாவூர் தென்னார்க்காடு மாவட்டங்களில் துறையின் பணியை கவனிப்பதற்கென்றே தனியாக கும்பகோணத்தில் உதவி இயக்குநர் பதவி அனுமதி வழங்கப்பட்டது.

வேலை வாய்ப்பு உற்பத்தி.

நடப்பாண்டில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தியதன் பயனாக கிராமப் பகுதிகளில் 50,000 பேருக்கு நிலையான வேலை வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாநிலத்தின் பல்வேறு பட்டுப்புழு களஞ்சியங்களில் 60 முதல் 72 இலட்சம் நோயற்ற முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. மாநிலத்திலுள்ள பட்டுப்புழு வளர்ப்பவர்கள் 46.55 இலட்சம் கிலோ கூட்டுபுழுக்களை உற்பத்தி செய்தனர். இவற்றுள் 15 இலட்சம் கிலோ கூட்டு புழுக்கள் இம் மாநிலத்திற்குள்ளேயே பயன்படுத்தப்பட்டு ரூ. 3 கோடி மதிப்புள்ள 1.06 இலட்சம் கிலோ பட்டு தயாரிக்கப்பட்டது. நடப்பாண்டில் தமிழ் நாடு மாநிலப் பட்டு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு 1.54 கோடி ரூபாய் மதிப்புள்ள 51.091,56 கிலோ கச்சாப்பட்டு விற்பனை செய்தது. தமிழ் நாட்டில் பட்டு உற்பத்தித் திறன் தற்போது 3.2 இலட்சம் கிலோவிற்கு எட்டியுள்ளது.

அத்தியாயம் XII

தொழிலாளர் நல—வேலை வாய்ப்பு துறை.

தொழிலாளர் நலன்.

பொது.—தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ் தொழிலாளர் நலத் துறை செயல்பட்டது. அவருக்கு உதவியாக தொழிலாளர் நல இணை ஆணையாளர் ஒருவரும் தொழிலாளர் நலத் துறை ஆணையாளர்கள் ஐவரும் இருந்தனர். இந்த தொழிற்சாலைகள் பிரிவு தொடர்ந்து தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின் கீழ் இருந்தது. இவருக்கு உதவியாக துணை தலைமை ஆய்வாளர் இருவர் இருந்தனர்.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

அறிக்கையாண்டில் தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த இணக்க அலுவலர்களால் 1595 தொழில் தகராறுகள் தீர்த்துவைக்கப்பட்டன. 729 தொழில் தகராறுகள் சென்னை, தொழில் நடுவர் மன்றத்திற்கும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங் களுக்கும் அனுப்பப்பட்டன. பணியாளர்கள் அனுப்பிய தொழில் தகராறுகள் குறித்து வழங்கப்பட்ட தீர்ப்புகள் உட்பட சென்னை, தொழில் நடுவர் மன்றம், தொழிலாளர் நல நீதி மன்றங்கள் வழங்கிய 621 தீர்ப்புகள், நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. ஊதிய உயர்வு, ஊதியக் கொடை பணியிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுதல் முதலிய கோரிக்கைகள் தொடர்பான 8,486 புகார்களை தொழிலாளர் நலத்துறை இணக்க அலுவலர்கள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைத்தனர்.

வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

2,79,573 தொழிலாளர்கள் பங்குகொண்ட 300 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இதனால், 82,48,993 உழைப்பு நாட்கள் வீணாயின. ஊதியக் கொடை, ஊதிய உயர்வு, பஞ்சப்படி அதிகரிப்பு, தொழிலாளர்களுக்கு வேலை

வழங்காமை முதலிய பல கோரிக்கைகளுக்காக பொதுவாக வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. 12 வேலை நிறுத்தங்கள் தொடர்பாகப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 288 வேலை நிறுத்தங்களில், வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் கைவிடப்பட்டன. மூடப்பட்ட மூன்று தொழிற்சாலைகளும் இவற்றுள் அடங்கும்.

1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.

1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி 546 வழக்குகள் நிலுவையாக இருந்தன. அறிக்கையாண்டில், 802 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த 1,348 வழக்குகளில் 868 வழக்குகள் நடப்பு ஆண்டில் தீர்க்கப்பட்டன. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி 480 வழக்குகள் நிலுவையாக இருந்தன.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

இச்சட்டத்தின் கீழ் 11,568 நிறுவனங்கள் வருகின்றன. இந்நிறுவனங்களில் பணியாற்றும் 1,00,374 தொழிலாளர்கள் இச்சட்டத்தின் வரம்பின் கீழ் இருந்தனர். இவ்வாண்டுத் தொடக்கத்தில் 249 உரிமைக் கோரிக்கைகள் நிலுவையாக இருந்தன. நடப்பு ஆண்டில், ஊதியம் வழங்காமைக்காக 399 உரிமைக் கோரிக்கைகள் தொழிலாளர் இழப்பீட்டுக் கூடுதல் ஆணையாளர்முன்பு தாக்கல் செய்யப்பட்டன. நடப்பாண்டில் 447 உரிமைக் கோரிக்கைகள் முடிவு செய்யப்பட்டன. 31—3—1980 ஆம் நாள் நில்வரப்படி 201 உரிமைக் கோரிக்கைகள் இருந்தன. 1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி 318 வழக்குகள் விசாரணையிலிருந்தன. நடப்பாண்டில் 973 வழக்குகள் வரப்பெற்றன. மொத்தமுள்ள 1,291 வழக்குகளில் 797 வழக்குகள் முடிவுசெய்யப்பட்டன. 494 வழக்குகள் முடிவுறாமலிருந்தன. ரூ. 28,085.00 அபாரதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், நடப்பு ஆண்டில் 27,361 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

தொழில் சங்கங்கள் சட்டம்.

1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாட்டில் 2,850 தொழில் சங்கங்கள் இருந்தன. நடப்பாண்டில் 507 தொழில் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 3 தொழிற்சங்கங்களின் பதிவுகள் ரத்து நீக்கப்பட்டன. இரண்டு தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. 264 தொழிற்சங்கங்களின்

பதிவு ரத்து செய்யப்பட்டது. ஆண்டு இறுதியில், இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,094 ஆகும். 3,034 தொழிற்சங்கங்கள், 324 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை 31—12—1979 ஆம் நாள் நிலவரப்படி ஒழுங்குமுறை நடவடிக்கை விதிக்கோவையை ஏற்றுக்கொண்டதை எழுத்து மூலம் தெரிவித்துள்ளன.

மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

தொழிலாளர் நல அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். இக்குழு இவ்வாண்டு 14—5—1979, 23—7—1979, 19—9—1979 ஆகிய நாட்களில் கூடியது.

தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம்.

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் சென்னை மதுரை மாநகரங்கள், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் தமிழ்நாட்டில் சிறப்பாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் ஆகிய இடங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள் நிறுவனங்களின் எண்ணிக்கையும், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வருமாறு :—

இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை.	தொழிலாளர்களுடன்.	தொழிலாளர்கள் இன்றி.	இந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
2,14,013	60,932	1,53,081	2,36,497

ஆய்வுகள்.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், நடப்பாண்டில் 2,96,167 ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆண்டுத் தொடக்கத்தில் 2,731 வழக்குகள் நிலுவையாக இருந்தன. சட்டத்தின் விதிதுறைகள், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக, அறிக்கையாண்டில், 10,308 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்தம் 13,039 வழக்குகளில் 10,099 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. எஞ்சியவை 2,940 வழக்குகள். ரூ. 3,11,716.00 அபராதத்

தொகையாக வசூலிக்கப்பட்டது. ஆண்டுத் தொடக்கத்தில் துணை ஆணையாளர்களிடம் 209 மேல் முறையீடுகள் நிலுவையாக இருந்தன. 197 மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. 196 மேல்முறையீடுகள் முடிவுசெய்யப்பட்டன. எஞ்சியவை 210 மேல்முறையீடுகளாகும்.

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டம்.

பின்வரும் தொழில்களில் குறைந்தளவு ஊதியங்கள் அரசு திருத்தி நிர்ணயித்துள்ளது.

1. பொது மோட்டார் போக்குவரத்துப் பணி
2. சலவைத் தொழில்
3. வேளாண்மைத் தொழில் தொடர்பான பணிகள்.

பின்வரும் தொழில்களில் குறைந்தளவு ஊதிய விதங்கள் நிர்ணயிப்பது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க குறைந்தளவு ஊதியங்கள் ஆலோசனை குழு அமைக்கப்பட்டது.

1. செயற்கை வைரம் அறுக்கும் தொழிற்சாலைப் பணி
2. தேயிலையை விலைக்கு வாங்கி பதப்படுத்தும் தொழிற்சாலைப் பணி.

1966 ஆம் ஆண்டு பீடி, சிகரெட் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்டம்.

இச்சட்டத்தின் 6(2) பிரிவின் கீழ் தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் (ஆய்வுகள்) தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து இருந்து வந்தார்.

பதிவு செய்தல்.

தமிழ்நாட்டில் 1,514 பீடித் தொழில் வளாகங்களைக் கொண்ட வணிக முத்திரை உரிமையாளர் 705 பேர் உள்ளனர். அறிக்கையாண்டில் தொழில் வளாகங்களில் சுமார் 14,260 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். பீடி தொழிலில் சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் வீட்டிலிருந்தவண்ணம் பணிபுரிந்தனர். 1,514 தொழில் வளாகங்களில் 1,311 தொழில் வளாகங்கள் உரிமங்களைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்துள்ளன. நடப்பாண்டில், ஆய்வாளர்கள் 3,124 முறையான ஆய்வுகள், 2 விடுமுறை ஆய்வுகள், 6 திடீர் ஆய்வுகள், 4 சிறப்பு ஆய்வுகள், 48 சோதனை ஆய்வுகள் ஆகியவற்றை

நடத்தினர். ஆண்டுத் தொடக்கத்தில் 37 வழக்குகள் நிலுவையாக இருந்தன. 26 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 119 வழக்குகள் முடிவு செய்யப் பட்டன. 44 வழக்குகள் இருந்தன. அபராதமாக ரூ. 7,450 வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய-பண்டிகை) விடுமுறைகள் சட்டம்.

அறிக்கையாண்டில் 9,83,248 தொழிலாளர்களைக் கொண்டு 67,596 நிறு வனங்கள் இச்சட்டத்தின் ஆய்வு வரம்பின் கீழ் இருந்தன. ஆண்டுத் தொடக்கத்தில் 1,299 வழக்குகள் நிலுவையாக இருந்தன. 3,181 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 3,340 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. 1,140 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையாக இருந்தன. ரூ. 89,139.00 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

நடப்பாண்டில் மதுரை மாவட்டத்திலுள்ள சாத்தன் குளம் ஊராட்சிக்கு, இச்சட்டத்தின் விதித்துறைகள் நீடிக்கப்பட்டன. நடப்பாண்டில் 2,146 வழக்குகள் தொடரப்பட்டன. 1,957 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. ரூ. 93,535 அபராதத்தொகையாக வசூலிக்கப்பட்டது. தொழிலாளர் நல அலுவலர் முன்பு 66 மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. நடப் பாண்டில் 84 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன. 64,269 தொழி லாளர்கள் பணிபுரியும் 18,137 நிறுவனங்கள் இருந்தன.

1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.

1978-79 ஆம் கணக்காண்டில் ஊதியத்தில் 8.33 சதவீதம் குறைந்த அளவு ஊதியக் கொடையாக வழங்குவதற்கு வகைசெய்யும் விதத்தில் ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தைத் திருத்தியது.

எடைகளும் அளவுகளும்.

சென்னை, தொழிலாளர் நல துணை ஆய்வாளர், எடைகள் அளவுகளின் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். நடப்பாண்டில், எடைகள் அளவைகள் கட்டுப் பாட்டு அதிகாரி, 105 உற்பத்தியாளர்கள், 510 விற்பனையாளர்கள், 426 பழுது பார்ப்போர் ஆகியோருக்கு 1,041 உரிமங்களை வழங்கினார். இவற்றில்

புதிய உரிமங்களும், புதுப்பிக்கப்பட்ட உரிமங்களும் அடங்கும். இவ்வாண்டில் 20 நேர்வுகளில் ஏற்றுமதி வணிகத்தில் இரட்டை அளவு குறி கொண்ட எடைபோடும் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆண்டுத் தொடக்கத்தில், 8,101 வழக்குகள் நிலுவையாக இருந்தன. 16,744 வழக்குகள் தொடரப்பட்டன. நடப்பாண்டில் 16,179 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டு இறுதியில் 8,666 வழக்குகள் முடிவுறமல் இருந்தன. ரூபாய் 7,09,894.00 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.

ஆண்டுத் தொடக்கத்தில் 8,101 வழக்குகள் நிலுவையாக இருந்தன. 76,441 தொழிலாளர்களைக் கொண்ட 422 மலைத்தோட்டங்கள் இருந்தன. இவ்வாண்டு 15 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 19 மலைத் தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டு இறுதியில் (அதாவது 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி) மலைத்தோட்டங்களின் எண்ணிக்கையும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் முறையே 418-ம் 72,920-ம் ஆகும். நடப்பாண்டில் மலைத்தோட்ட ஆய்வாளர்கள் 1,116 முறையான ஆய்வுகள், 77 சிறப்பு ஆய்வுகள், 141 விடுமுறை (ஞாயிற்றுக்கிழமை) ஆய்வுகள், 74 திடீர் ஆய்வுகள் நடத்தினர்.

வழக்குகள்.

இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட 85 வழக்குகள் உட்பட மொத்தம் 117 வழக்குகளில் 76 வழக்குகள் முடிவுசெய்யப்பட்டன. 41 வழக்குகள் நிலுவையாக இருந்தன. ரூ. 9,435 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துச் சட்டம்.

ஆண்டுத் தொடக்கத்தில் 1,539 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 106 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இவ்வாண்டு புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 104 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இவ்வாண்டு நீக்கப்பட்டன. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1,541 ஆகும். நடப்பாண்டில் பதிவு கட்டணமாக ரூ. 4,603.90-ம் பதிவை புதுப்பித்தல் கட்டணமாக ரூ. 99,515.56-ம் வசூலிக்கப்பட்டது.

இவ்வாண்டு 78 நகல் பதிவு சான்றிதழ்கள் (Dupl cate Cer fi...c) வழங்கப்பட்டன. இவ்வாண்டு 4,434 முறையான ஆய்வுகள் நடத்தப்பட்டன. 329 வழக்குகள் தொடரப்பட்டன. 278 வழக்குகள் முடிவுசெய்யப்பட்டன. 133 வழக்குகள் நிலுவையாக உள்ளன. ரூ. 32,614 அபராதமாக வசூலிக்கப் பட்டது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

ஆண்டுத் தொடக்கத்தில் 8,731 தொழிற்சாலைகள் இருந்தன. இவ்வாண்டு 901 தொழிற்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. 446 தொழிற்சாலைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டு இறுதியில் இருந்த தொழிற்சாலைகள் 9,186. பணிபுரிந்த தொழிலாளர்கள் 5,72,718 பேர். நடப்பாண்டில், உரிமக் கட்டணமாக ரூ. 48,60,246.20 வசூலிக்கப்பட்டது.

சிறப்பு ஆய்வுகள், விடுமுறை ஆய்வுகள், திடீர் ஆய்வுகள், இரவு ஆய்வுகள் உட்பட 23,691 ஆய்வுகளை நடப்பாண்டில் ஆய்வாளர்கள் நடத்தினர். 1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி 1,852 வழக்குகள் நிலுவையாக இருந்தன. தொழிற்சாலைகள் சட்டம், அது தொடர்பான சட்டங்களின் பல்வேறு விதித் துறைகளை மீறியதற்காக, நடப்பாண்டில் 5,814 வழக்குகள் தொடரப் பட்டன. 5,453 வழக்குகள் முடிவுசெய்யப்பட்டன. ரூ. 2,06,555.00 அபராதமாக வசூலிக்கப்பட்டது. ஆண்டு இறுதியில் 2,213 வழக்குகள் நிலுவையாக இருந்தன. நடப்பாண்டில், 64 மரண விபத்துகளும் 27,100 விபத்துக்களும் ஏற்பட்டன.

தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயல்படுகின்றன. இவற்றில் ஓய்வுபெற்ற நீதித்துறை அலுவலர்களும் தொழிலார் நல அலுவலர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

வேலை வாய்ப்புப் பயிற்சி.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, வேலை வாய்ப்பும் பயிற்சியும் இயக்குனரின் கீழ் செயல்பட்டு வருகிறது. 34 வேலை வாய்ப்பகங்கள், 3 பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-வழிகாட்டிக் கழகங்கள், உடலூனமுற்றோருக்கான தனி வேலை வாய்ப்பகம் ஒன்று. தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பகம் ஒன்று, 9 துணை வேலை வாய்ப்பகங்கள் ஆகியவை தொடர்ந்து

செயல்பட்டு வருகின்றன. கிராமப் புறத்தில் வேலை தேடுபவர்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 1979-80 ஆம் ஆண்டில் இராமநாதபுர மாவட்டம், பரமக்குடியில் ஒன்றும், தருமபுரி மாவட்டம் ஓசூரில் ஒன்றுமாக துணை வேலை வாய்ப்பகங்கள் இரண்டு தொடங்கப்பட்டன. அரிசனங்கள் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட பதவிக் காலியிடங்களில் அவர்கள் நிரப்பப்படுகின்றனரா என்று பார்த்துக்கொள்வதற்கும், அவர்களுக்கான வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கும் இயக்குநர் அலுவலகத்தில் வேலை வாய்ப்புத் துணை இயக்குநர் பதவியுடன் அரிசனங்கள்/பழங்குடியினருக்காக, தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு 1979 செப்டம்பர் திங்களிலிருந்து செயல் பட்டு வருகிறது. 1979 ஏப்ரலிலிருந்து 1980 மார்ச் வரையிலான கால அளவில், தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் பல்வேறு வேலை வாய்ப்பகங்களில் வேலை வாய்ப்பு தேடி 4,19,951 பேர் பதிவு செய்திருந்தனர்; 56,786 பேர் வேலையில் அமர்த்தப்பட்டனர். 1980, மார்ச் முடிவில் வேலை வாய்ப்பகங் களின் நடப்புப் பதிவேட்டில் 10,05,880 பேர் தொடர்ந்திருந்தனர். 79,602 காலியிடங்கள் வேலை வாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. இக்கால அளவில் வேலை வாய்ப்பகங்களின் பணிகளை 21,599 தொழிலதிபர்கள் பயன் படுத்திக் கொண்டனர்.

தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பகம்.

அறிக்கையாண்டில், தொழில்-நிர்வாக நிலையில் 8,861 பேர் இவ்வலு வலகத்தில் பதிவு செய்யப்பட்டனர்; 3,530 பேர் வேலையில் அமர்த்தப் பட்டனர். 1980 மார்ச் முடிவில் மொத்தம் 14,592 பேர் நடப்புப் பதிவேட்டில் இருந்தனர்.

வேலை வாய்ப்பகத்தில் நடைபெறும் வேலைகளைக் கணக்கீட்டுப் பொறிமூலம் நடத்துதல்.

திறமையை மேம்படுத்தவும் புகார்களைத் தவிர்க்கவும், வேலை வாய்ப்பகங் களில் நடைபெறும் வேலைகளைக் கணக்கீட்டுப் பொறிமூலம் நடத்தும் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கியது. அறிக்கையாண்டில், தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இவ்வாறு கணக்கீட்டுப் பொறி மூலம் நடத்தப் பெறும் பணியை அரசுப் புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் முதற்கண் மேற் கொண்டது.

உடலூனமுற்றோருக்கான தனி வேலை வாய்ப்பகம்—

உடலூன்முற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 5 அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் 2,310 பேர் பதிவு செய்து கொண்டனர். 286 பேர் வேலையில் அமர்த்தப்பட்டனர். 31—3—1980 தேதியில் 8,103 பேர் நடப்புப் பதிவேட்டில் இருக்கின்றனர்.

பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகங்கள்—

பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் 2,155 பேர் புதிதாகப் பதிவு செய்யப் பட்டனர். 248 பேர் வேலையில் அமர்த்தப்பட்டனர். 31—3—1980 தேதியில் 3,463 பேர் நடப்புப் பதிவேட்டில் இருக்கின்றனர்.

வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம்—

இயக்குநர் அலுவலகத்திலுள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம், பர்மா இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் பயிற்சிக்கான வசதிகளை அளிக்கவும் முயன்று வருகிறது. தாயகம் திரும்பிய 154 பேர் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகப் பல்வேறு தொழிற்பயிற்சி நிறுவனத் தலைவர்களிடம் அனுப்பிவைக்கப் பட்டனர். 44 பேர் புகுமுக தொழில் நுட்ப நிறுவனப் பாட வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அப்படிப்பை முடித்த பின்னர், முறையான தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டனர். தாயகம் திரும்பிய 6 பெண்கள் வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரிலுள்ள அரசு உடைகள் ஹோல்டால் தயாரிப்புப் பிரிவில் இளநிலைச் சான்றிதழ் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்; தாயகம் திரும்பிய 8 பேர் நவீன முறை மீனளப் பயிற்சி வகுப்பில்—கொளச்சல் மீனளப் பயிற்சி நிலையத்தில் இருவரும், எஞ்சிய ஆறு பேர் நாகப் பட்டினத்திலும்—அனுமதிக்கப்பட்டனர். தாயகம் திரும்பிய 232 பேர் அரசின் பல்வேறு துறைகளிலும் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பின் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்—

இத்துறையின் பயிற்சிப் பிரிவு, தொழில் பழகுவோருக்குப் பயிற்சி அளிப்ப தற்கான வாய்ப்புள்ள இடங்களைத் தெரிவிக்கின்றது. அத்தகவல்கள் வரப்

பெறுவதன்பேரில், தொழிலதிபரிடம் தொழில் பழகுநரை அனுப்பி வைப்பதற்-காக சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டு வருகின்றன. அறிக்கையாண்டில் வேலை வாய்ப்பகங்கள் மூலம் 9,405 பேர் தொழில் பழகுநர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டம்—

தமிழ்நாட்டில் 32 தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/நிலையங்களும் ஒரு தொழிற்பயிற்சிப் பிரிவும் உள்ளன. இவற்றில் மொத்தம் 13,144 பேர் பயிற்சி பெறக்கூடிய வசதி உள்ளது. இந்தத் தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், 4 நிலையத்திலும் தொழிற்பயிற்சிப் பிரிவிலும், கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ் இந்திய அரசின் வேலை வாய்ப்பு-பயிற்சித் தலைமை இயக்குநர் வரையறுத்துள்ள பாடத் திட்டத்தின்படி, 29 பொறியியல் தொழில் களிலும் பொறியியல் அல்லாத 6 தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 19 தொழில்களுக்கான பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்; எஞ்சிய 16 தொழில்களுக்கான பயிற்சிக் காலம் ஓராண்டாகும். 1979 ஆகஸ்ட் நடந்த பயிற்சிக்கு 6,992 + 698 (தனி உபரி) இருக்கைகளுக்கு 1,47,864 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. பயிற்சிக்குச் சேர்க்கப்பட்ட 7,690 பேர்களுள், 1,344 பேர் அரிசன வகுப்பினர், பழங்குடியினர், 4,007 பேர் பின்தங்கிய வகுப்பினர், 224 பேர் தாயகம் திரும்பியோர், 135 பேர் உடலூனமுற்றோர் ஆவர். பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களில் 33-1/3 சதவீதத் தினருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பொற்கொல்லர்கள், கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி—

இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 80 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1979, ஆகஸ்டு திங்களில் நடந்த தேர்வில் 60 பேர் தேர்ச்சி பெற்றனர். ஸ்ரீமூலராமாவரம் அரசினர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் 44 பேர் சேர்க்கப்பட்டனர். இந்நிறுவனம் நாகர்கோயிலில் செயல்படுகிறது. இது, மாநில அரசு பயிற்சி முறையின்படி, நெசவுத் தொழில்களில் பயிற்சி அளிக்கின்றது. பயிற்சி முடிவில் 41 பேர் தொழில் தேர்வு எழுதி 1979 ஜூலைத் திங்களில்

35 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி வகுப்புகளில் சேர்க்கப்பட்ட அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மானியம் பெறும் தனியார்த் தொழிற் பள்ளிகள்—

தனியார் நிர்வாகத்தில் நடத்தப்படும் 75 தொழிற் பள்ளிகள், இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதிக்கோவையின்படி இவற்றுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற் பள்ளிகளில், 21 பொறியியல் தொழில்களிலும், பொறியியல் அல்லாத 8 தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாண்டில் அனைத்துத் தொழிற் பள்ளிகளிலும் 2,295 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1979 ஜூலைத் திங்களில் பொதுத் தேர்வு எழுதிய 2,050 பேர்களில் தொழில் பயிற்சித் தேர்வில் 1,995 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

விலை விவரம் புள்ளி இயல்.

புள்ளி விவரம்—

புள்ளி விவர இலாகா புள்ளி விவர கமிஷனரின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டு மொத்த விலைக் குறியீட்டெண்கள் 1970-71-ஐ அடிப்படையாக கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்த புதிய குறியீட்டெண் தொடர் 177 பொருட்களையும் அவற்றில் 509 விலை விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. குறியீட்டெண் கணக்கிட தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று பெரும் தொகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளது :—

1. முதன்மை பொருட்கள்.
2. எரிபொருள் மற்றும் மின் சக்தி.
3. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்.

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. அனைத்து பிரிவுகளுக்காக குறியீட்டெண்களையும் சேர்த்து அனைத்து பொருள் குறியீட்டெண் என்றும் கணிக்கப்படுகிறது.

1979 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டு மொத்த விலைக் குறியீட்டெண் 188.37 ஆக இருந்தது. ஏப்ரல் முதல் டிசம்பர் 1979 முடிய உள்ள மாதங்களில் சீராக உயர்ந்து டிசம்பர் 1979-ல் 218.18-ஆகக் குறைந்து பிப்ரவரி 1980-ல் 215.22-ஆக மேலும் குறைந்தது. ஆனால் மார்ச் 1980-ல் மீண்டும் 216.75 ஆக உயர்ந்தது. இது 1979 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிலவிய மொத்த விலைக் குறியீட்டெண்ணை விட 15.07 சதவிகிதம் அதிகமானது ஆகும். மேற்குறிப்பிட்டுள்ள மூன்று முக்கிய பிரிவுகளுக்கான குறியீட்டெண்களும் ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரையான ஒரு வருட காலத்தில் உயர்ந்தே உள்ளன. முதன்மைப் பொருள்கள் எரி பொருள் மற்றும் மின்சக்தி மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகிய மூன்று பிரிவுகளுக்கான குறியீட்டெண்களும் முறையே 16.5 சதவிகிதம், 19.9 சதவிகிதம் மற்றும் 14.08 சதவிகிதம் ஆக உயர்ந்துள்ளன.

நுகர்பொருள் குறியீட்டெண்கள்—

1948 ஆம் வருட குறுமக் கூலி சட்டத்தின் பிரிவு 2 (டி)-யில் ஆணையிட்டபடி தொழிலாளர் பிரிவினருக்கான நுகர்பொருள் குறியீட்டெண் சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகர்கோயில் நிலையங்களுக்கு 1960-ஐ அடிப்படையாகக் கொண்டு புள்ளியியல் ஆணையரால் தொகுத்து வெளியிடப்படுகின்றன. மேலும் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் நிலையங்களுக்கான நுகர்பொருள் குறியீட்டெண்கள் சிம்லா தொழிலாளர் செயலக இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு புள்ளியியல் ஆணையரால் வெளியிடப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் பல்வேறு நிலையங்களுக்கான நுகர்பொருள் குறியீட்டெண்கள் பற்றிய ஆய்வுரை வருமாறு:—

அடிப்படை ஆண்டு 1960—100

மாதம்.	சென்னை.	கடலூர்.	திருச்சி.	மதுரை.	கோயம்புத்தூர்.	நாகர்கோயில்.	குன்னூர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1979							
ஏப்ரல்	327	326	361	346	332	370	334
மே	327	336	361	349	343	374	336
ஜூன்	334	340	361	350	347	396	340
ஜூலை	346	359	374	356	353	408	350
ஆகஸ்ட்	349	371	379	364	358	426	354
செப்டம்பர்	352	374	379	368	363	418	360
அக்டோபர்	351	370	338	378	369	415	360
நவம்பர்	362	381	392	395	383	435	367
டிசம்பர்	370	392	401	397	394	464	381
1980							
சனவரி	362	387	404	388	389	456	380
பிப்ரவரி	362	376	406	379	388	454	376
மார்ச்	363	381	401	380	386	450	382

ஆண்டுத் தொழிற்புள்ளி விவர ஆய்வு.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டப் பிரிவு 2 (M) (i) மற்றும் (2) M( )கீழ் பதியிடப்பட்ட அனைத்து தொழிற்சாலைகளுக்கும் வருடாந்திர தொழில் ஆய்வு பொருந்தும். சென்ஸஸ் மற்றும் சென்ஸஸ் அல்லாத பகுதி களாக தொழிற்சாலைகள் பிரிக்கப்பட்டு ஆய்வு நடத்தப்படுகிறது 50-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் மின்சக்தி உபயோகிக்கும் தொழிற்சாலைகளும் சென்ஸஸ் பிரிவின் கீழ் அடங்கும். இதர தொழிற் சாலைகள் சென்ஸஸ் அல்லாத பிரிவின் கீழ் அடங்கும். 1976-77-ம் ஆண்டிற் கான தொழிற் புள்ளியியல் முடிவுகள் தொழிற்சாலை வாரியாக மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் முடிவுகள் இவ்வாண்டு 1979-80-ல் இறுதி யாக்கப்பட்டுள்ளன.

அயல்நாட்டு வாணிபம்.

1978-79-ம் ஆண்டில் தமிழக துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு விவரங்கள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. 1978-79-ம் ஆண்டில் ரூ. 652.47 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 902.81 கோடி மதிப்புள்ள பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

தமிழ்நாட்டின் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்.

ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரங்கள் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி திறன் ஆகிய விவரங்கள் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு விசையைப் பயன்படுத்தும் நிலையிலும் அல்லது 20 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு விசையை பயன்படுத்தாத நிலையிலும் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளி லிருந்து அவற்றின் விருப்பத்தின் அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. திருத்தப்பட்ட வரிசைப்படி இத்திட்டம் உற்பத்தியினால் கடும் மதிப்பின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 241 பொருட்களுக்கு விஸ்தரிக்கப்பட் டுள்ளது. தமிழ்நாட்டில் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (அடிப்படைக் குறியீடு 1970-100).

மழை அறிக்கை.

1979-80-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் கிடைக்கப்பெற்ற மழை அளவு இயல்பான மழை அளவே ஆகும். கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சராசரி மழையைவிடக் கூடுதலாக மழை பெற்றன. ஏனைய மாவட்டங்களில் இயல்பான மழையளவே பதிவானது.

தென் மேற்குப் பருவம் (ஜூன் 1979 முதல் செப்டம்பர் 1979 முடிய).

தென் மேற்குப் பருவ காலத்தில் சேலம், கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சராசரி மழை அளவை விட அதிக மழையும் எஞ்சியுள்ள மாவட்டங்களில் சராசரி மழையும் பெய்தது. மாநிலம் முழுமைக்கும் இப்பருவத்தில் சராசரி மழையே பெய்துள்ளது.

வட கிழக்குப் பருவம் (அக்டோபர் 1979 முதல் டிசம்பர் 1979 முடிய).

வட கிழக்குப் பருவத்தில் சராசரி மழை அளவை விட 34 சதவீதம் கூடுதல் மழைய மாநிலம் பெற்றது. தென்னாற்காடு, வடாற்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் சராசரி மழை அளவை விடக் கூடுதலான மழையை அனுபவித்தன. பிற மாவட்டங்களில் சராசரி மழை பெய்தது.

1979-80-ம் மாவட்ட வாரியான ஆண்டின் மொத்த மழை விவரங்கள் (ஏப்ரல் 1979 முதல் மார்ச்சு 1980 வரை)

மாவட்டம்	ஆண்டின் மொத்த மழை — சாரசரி மழை.	ஆண்டின் மொத்த மழை — பெய்த மழை.	சராசரி மழையிலிருந்து காணப்படும் வேறுபாடு (விழுக்காடு)
(1)	(2)	(3)	(4)
சென்னை	1285.6	1293.5	+ 0.6
செங்கற்பட்டு	1211.0	1144.3	— 5.5
தென்னாற்காடு	1188.9	1235.5	+ 3.9
வடாற்காடு	971.1	991.7	+ 2.1
சேலம்	842.3	948.6	—12.6
தர்மபுரி	844.3	790.0	+ 6.4
கோயம்புத்தூர்	711.5	1121.7	+ 57.7
பெரியார்	726.1	819.8	+ 12.9

(1)	(2)	(3)	(4)
திருச்சிராப்பள்ளி	867.8	986.0	+ 13.6
தஞ்சாவூர்	1168.1	1218.4	+ 4.3
புதுக்கோட்டை	922.8	862.3	— 6.6
மதுரை	854.8	1005.8	+ 17.7
ராமநாதபுரம்	839.5	917.9 *	+ 9.3
திருநெல்வேலி	814.8	1028.3 *	+ 26.2
கன்னியாகுமரி	1469.7	1523.4	— 10.0
நீலகிரி	1920.8	1827.7	— 4.8
மாநிலம்	945.7	1028.7 *	+ 8.8*

மாநில வருவாய் மதிப்பீடு.

1978-79-ம் ஆண்டின் துரித மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் மாநில வருவாய் 1970-71-ம் ஆண்டின் விலை அடிப்படையில் ரூ. 3,223.98 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இதே மதிப்பீடு 1977-78-ம் ஆண்டில் ரூ. 2,911.88 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1977-78-ம் ஆண்டைவிட 1978-79-ம் ஆண்டில் 10.7 சதவிகிதம் வருவாய் அதிகரித்துள்ளது. 1978—79-ம் ஆண்டில் தனி நபர் தலா வருமானம் 1970-71-ம் ஆண்டு விலை அடிப்படையில் ரூ. 702 எனக் கணிக்கிடப்பட்டுள்ளது. இவ்வருமானம் சென்ற ஆண்டைவிட 9.2 சதவிகிதம் அதிகரித்துள்ளது. மாநில வருவாய் வளர்ச்சிக்கு முதன்மைத் துறைகளாகிய விவசாயம் மற்றும் அதைத் சார்ந்த துறைகள் ஆகிய வனம், மீன் துறை மற்றும் கனி எனத் துறைகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. மாநிலத்தின் மொத்த வருமானத்தில் முதன்மைத் துறை மட்டும் 38.2 சதவிகிதம் பங்கு வகிக்கின்றன. இம் முதன்மைத் துறைகளின் வளர்ச்சி 1977-78-ம் ஆண்டைவிட 1978-79 ஆண்டில் 12.1 சதவிகிதம் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணம் விவசாயப் பொருட்களின் உற்பத்தி மிகுதியே ஆகும். 1978-79-ம் ஆண்டில் 83.2 இலட்சம் டன் விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அதிலும் முக்கியமாக வணிகப் பொருட்களின் (Commercial Crops) உற்பத்தி அதிகரித்துள்ளது. இரண்டாம் தர துறைகளும் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் வளர்ச்சி 1977-78-ம் ஆண்டைவிட நடப்பு ஆண்டில் 13.1 சதவிகிதம் வளர்ச்சி

கண்டுள்ளது. இவற்றுள் பதிவு பெற்ற தொழில் (Regstered M nuf ct-uring) பிரிவு முக்கிய பங்கு வகிக்கின்றன. இப்பிரிவு நடப்பு ஆண்டில் 16.2 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளது. இவைகள் தவிர்த்து மின்சாரம், வாயு மற்றும் குடிநீர் விநியோக துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இத்துறைகள் 1978-79-ம் ஆண்டில் 14.4 சதவிதம் வளர்ச்சியுடைந்துள்ளது. அதேபோல் எஞ்சியுள்ள பிற துறைகளிலும் பொதுவாக வளர்ச்சி கண்டுள்ளது. நடப்பு விலைப்படி பார்க்கும்போது 1978-79-ம் ஆண்டிற்கு தமிழ்நாட்டின் மாநில வருவாய் ரூ. 5,281.12 கோடியாகவும் தனி நபர் வருமானம் ரூ. 1,151 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் XIII

சட்டத் துறை

சட்டம் இயற்று முறை.

இவ்வாண்டில், 61 சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில் 10 புதிய சட்டங்களாகும். எஞ்சியவை திருத்தச் சட்டங்களாகும். இவ்வாண்டில் 22, அவசரச் சட்டங்களும் அதிகார முறையில் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1979).—அநாகரிகமான அல்லது ஆபாசமான நடனத்தைத் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1954) கீழ் தடை செய்யக்கருதி மேற்படி சட்டத்தில் மறுப்புக்குரிய நிகழ்ச்சி என்ற பொருள் விளக்கத்தில் மேற்படி சொன்ன நடனத்தைச் சேர்க்க வேண்டி மேற்படி சட்டம் இச்சட்டத்தினால் திருத்தப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1979).—அரசு அறிவிக்கக் கூடியவாறும், வேறு சில காரியங்களுக்கும், யாதொரு கடன் வழங்கு சங்கம், விநியோகச் சங்கம், விற்பனைச் சங்கம், பதிவு செய்யப்பட்ட ஏனைய வகைச் சங்கங்களின் உறுப்பினராக அனுமதிக்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்த ஒவ்வொருவரையும் தாமாகவே சேர்த்துக்கொள்ள வகை செய்து இச்சட்டத்தின்மூலம் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 53/1961) திருத்தப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1979)—தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு ஊராட்சிகள் பதவிக் காலத்தை நீட்டித்தல்) சட்டத்தைத் (குடியரசுத் தலைவர் சட்டம் 22/1976) திருத்துவதன் மூலம் எல்லா ஊராட்சிகளின் தலைவர்கள் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1979 மே திங்கள் முதல் தேதியிலிருந்து மேற்கொண்டும் ஐந்து திங்கள் காலத்திற்கு நீட்டிக்க இச் சட்டம் வகை செய்தது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1979).—தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 5/1977) மூலம் 359 ஊராட்சி ஒன்றிய குழுக்களில் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 1979 ஏப்ரல் 30 ஆம் தேதியிலிருந்து மேற் கொண்டும் 5 திங்களுக்கு நீட்டிக்க இச்சட்டம் வகை செய்தது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1979).—தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 35/1958) திருத்துவதன் மூலம் 374 ஊராட்சி ஒன்றியக் குழுக்களையும் மீண்டும் அமைப்பதற்கான நாளை மொத்தம் இரண் டாண்டு இரண்டு திங்களுக்கு மேற்படாத மொத்தக் காலத்திற்கு தள்ளி வைப்பதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டம் 24/1979).—தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 20/1951) பின்வரும் வகையில் இச்சட்டத்தின் மூலம் திருத்தப் பட்டது:—

(1) சட்ட மன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் இழப் பீட்டுப்படி, தொலைபேசிப் படியை உயர்த்துதல்,

(2) பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் துணைத்தலைவர், அமைச்சர்களின் பேரவைச் செயலாளர்கள், எதிர்க் கட்சித் தலைவர் ஆகி யோரின் சம்பளத்தை உயர்த்துதல், அவர்கள் விரும்பினால் எல்லா வசதிகளும் நிறைந்த வீட்டினை அவர்களுக்கு வாடகையின்றி வழங்குதல்,

(3) சட்ட மன்ற உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது அவருடைய கணவன் அல்லது மனைவியுடனோ வேறு ஒரு உறவினருடனோ இரயில்வேயில் எந்த வகுப்பிலும் ஒரு தடவையிலோ அல்லது பல தடவைகளிலோ பயணம் செய்ய இயலும் வகையில் அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் மதிப்புக்கான இரயில்வே கூப்பன்கள் வழங்குதல்.

(4) இச்சட்டத்தின் கீழ் சம்பளம் அல்லது படி பெறுவதற்குத் தகுதியுடைய உறுப்பினர்கள் அச்சம்பளம் அல்லது படி முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அவர்கள் குறிப்பிடக் கூடிய நாளிலிருந்து விட்டுக் கொடுக்கவும் அவ்வாறு விட்டுக் கொடுத்ததை உறுப்பினர்கள் ரத்து செய்து விடவும் வகை செய்தல்.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1979).—1979 ஏப்ரல் முதல் தேதி தொடங்கும் நிதியாண்டில் செய்யவிருக்கும் பணிக்களுக்காக மாநிலத்தின் தொகுதி நிதியிலிருந்து நிதி ஒதுக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1979).—1973 மார்ச்சு 31 ஆம் தேதி முடிய உள்ள நிதியாண்டில் சில பணிகளுக்காக அனுமதிக்கப்பட்ட தொகை அல்லது வழங்கிய தொகையைக் காட்டிலும் அதிகமாகத் தொகை செலவிடப்பட்டதால் அதனைச் சரிக்கட்டும் பொருட்டு மாநிலத் தொகு நிதியிலிருந்து நிதி ஒதுக்குவதற்கு அனுமதிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1979).—1974 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதி முடிய உள்ள நிதியாண்டில் சில பணிகளுக்காக அனுமதிக்கப்பட்ட தொகை அல்லது வழங்கிய தொகையைக் காட்டிலும் அதிகமாகத் தொகை செலவிடப்பட்டதால், அதனைச் சரிக்கட்டும் பொருட்டு, மாநிலத் தொகுதி நிதியிலிருந்து நிதி ஒதுக்குவதற்கு அனுமதிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1979).—கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் வனங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு வகைதொகையின்றி அழிப்பதையும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதியின்றி எவரும் மரங்களை அல்லது கோரைப்புற்களை வெட்டுதல் அல்லது காடுகளை அழிக்குமளவுக்கு அல்லது காடுகளின் பயன் குறையுமளவுக்கு யாதொரு செயலைச் செய்வதினின்றும் தடுக்கவும் அவ்வாறு தடை

செய்யப்பட்ட செயலை செய்பவருக்குத் தண்டனை அளிக்கவும் தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 27/1949) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பது அவசிய மெனக் கருதப்பட்டது. மேற்சொன்ன நோக்கத்தை இச்சட்டம் நிறை வேற்றியது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1979).—நபர்களுக்கு அழைப்பாணை விடுத்து கட்டாயமாக வரச் செய்யவும் ஆவணங்களை கட்டாயமாகத் தாக்கல் செய்யும்படி பணிக்கவும் மேல் முறையிட்டு அதிகார மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 13/1958) திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1979).—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தகுந்தவாறு திருத்துவதன் மூலம் மாநில அரசுக்கு அல்லது உள்ளாட்சி மன்றத்திற்குச் சொந்தமான நிறுவனங் கள், கட்டிடங்கள், பாலங்கள் அவை போன்றவற்றிற்கு அல்லது ஒரு கூட்டுறவு அமைப்பிற்கு அல்லது அரசு பங்கு பெற்ற நிறுவனங்களுக்கு அல்லது குறிப் பிட்ட சட்டப்படி அமைந்த வாரியங்களுக்கு உயிருடன் இருக்கும் ஒருவரின் பெயரை, அவர் நிலை என்னவாயிருப்பினும் அல்லது அவர் வகிக்கும் பதவி என்னவாயிருப்பினும் இடக்கூடாது என்பதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1979).—திறந்த வெளி சினிமா கொட்டகைகளை தற்காலிக (டூரிங்) சினிமா கொட்டகைகளுடன் சேர்க்கவும், இத்தற்காலிக (டூரிங்) சினிமா கொட்டகைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட வரி விதங்களை திறந்தவெளி திரையரங்குகளுக்கு விதிக்கவும் வகை செய்து தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 5-எ பிரிவைத் திருத்தவும் திறந்த வெளி சினிமாக் கொட்டகைகளை தனிவகை யாகக் கருதி உள்ளூர் பகுதியிலுள்ள தற்காலிக (டூரிங்) சினிமா கொட்டகை களுக்கு விதிக்கப்படும் கேளிக்கை வரி விதங்களை விதிக்க வகை செய்து

வாரம் ஒன்றுக்கு பன்னிரெண்டு காட்சிகளுக்கு விதிக்க வகைசெய்து மேற் சொன்ன சட்டத்தின் 5-பி பிரிவைத் திருத்தவும் அறிக்கை வெளியிடுவதன் மூலம் மேற்படி சட்டத்தின் அட்டவணையில் எதையாவது முன்னர் ஒரு தேதியிலிருந்து செயலுக்கு வரத்தொடங்கும் வகையில் திருத்த மேற் சொன்ன சட்டத்தின் 16-எ பிரிவின்படி அரசுக்கு அதிகாரம் அளிக்கவும் இயலும் வகையில் இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1979).—இருபது ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்துள்ள ஒருவரது மொத்த வேளாண்மை வருமானம் முந்திய ஆண்டில் ரூ. 8,000-க்கும் மேற்பட்டால் அவருக்கு வரி விதிக்கவும் வருமான வரியை இணக்க முறையில் முடிவு செய்து கொள்ள அனுமதிக்கப்படு கிற நிலப்பரப்பை 50 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 100 ஸ்டாண்டர்டு ஏக்காராக அதிகரிக்கவும், ஸ்டாண்டர்டு ஏக்கர்களை ஒருங்கு சேர்த்துக் கட்டிக்கொள் வதற்கான கோட்பாடுகளை பயிர் அடிப்படையில் திருத்தவும் எளிதாகவும் இயலும் வகையில், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 5/1955) திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1979).—மாநிலத்தின் வருவாய் வாயில்களைப் பெருக்கும் பொருட்டு கையினால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளுக்கு, 1979 மார்ச் 4 ஆம் நாளிலிருந்து 2 சதவீதம் ஒரு முனை வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. நிலுவையாக உள்ள வரியை இணக்கம் செய்வது இணக்கவரி விதத்தைக் குறைப்பது தொடர்பாக தமிழ்நாடு விற்பனை வரிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. மேலும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் டெலிபிரிண்டர்கள் என்ற தனி இனத்தைச் சேர்க்க வேண்டி இருந்தது. பலமுனை வரி விதிப்புக்கு உட்பட்ட பொருள்களை ஒருமுனை வரி விதிப்பின்கீழ் கொண்டு வருகையில் மூன்று விதமான வகையில் வசூலிப் பதற்கான தனி விதித்துறையும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று

முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 1/1959) தகுந்தவாறு திருத்துவதன் மூலம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த வேண்டியிருந்தது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/1979).—அடகுக் கடைக்காரர் ஒருவர் விதிக்கின்ற வட்டி விதத்தை அரசு அறிவிக்க அதிகாரம் அளித்து தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1943) இச்சட்டத்தினால் திருத்தப்பட்டது. அவ்வாறு அரசு குறிப்பிடும் வட்டி விதம் இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது நிர்ணயிக்கும் கடன் கொடுப்புக்கான நடப்பு வங்கி விதங்களையொட்டியதாய் இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1979).—நிலவள வங்கிகள் எந்தெந்தக் காரியங்களுக்குக் கடன் வழங்கலாம் என்பதைக் குறிப்பிடவும் மாநில அரசு ஏற்பளிக்கக்கூடிய கழகங்கள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கடன்களைப் பொறுத்த மட்டில் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்க வகை செய்யவும் வேண்டி தமிழ்நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 10/1934) திருத்த இச்சட்டம் இயற்றப்பட்டது. அனைத்துக் கழகங்கள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரையில் இச்சட்டத்தின் 4-A பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளபடி அடைமானத்தைக் கருதிப் பார்க்காமல் மாநில அரசின் உத்தரவாதத்தின் பேரில் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கவும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1979).—தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 3 (2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் நிபந்தனைகளையும் வரையறை களையும் மீறுவதை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் தண்டிக்கக் தக்க குற்ற மாக ஆக்கவும் அனுமதியின் நிபந்தனைகளையும், வரையறைகளையும் உரிய

வாறு நிறைவு செய்வதற்காக பிணைத்தொகையை வைப்பீடு செய்ய வகை செய்யவும், மேற்சொன்ன நிபந்தனைகளையும் வரையன்றகளையும் மீறுகின்ற போது, அனுமதி பெற்றிருப்பவர் வைப்பீடு செய்துள்ள பிணையத்தொகையை அல்லது அதன் ஒரு பகுதியை பறிமுதல் செய்யவும் அவ்வாறு பறிமுதல் செய்யும்படி ஆணை பிறப்பிப்பதற்குத் தகுதிவாய்ந்த அலுவரைக் குறிப்பிடவும் இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1979).—1961 ஆம் ஆண்டு வைப்புக் காப்புறுதிக் கழகச் சட்டத்தின் (மத்திய சட்டம் 47/1961) 3 ஆம் பிரிவின் (g) பகுதியின்படி கூட்டுறவு வங்கிகள், காப்புறுதி செய்யப் பட்ட வங்கிகளாகப் பதிவு செய்து கொள்ளத் தகுதி உடையனவாகச் செய்தும் அவை வைத்திருக்கும் வைப்பீடுகளும் அக்காப்புறுதித் திட்டத்தின் வரம்பிற் குள் வர வகை செய்தும் இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1979).—அட்டவணை யிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை 1979 ஜூன் திங்களுக்குப் பிறகு மேலும் 6 திங்களுக்கு நீட்டிப்பதற்காக இச் சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 39/1979).—தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை (குடியரசுத் தலைவர் சட்டம் 31/1976) செயல்படுத்துகையில் அதன் நோக்கத்தை தெளிவுபடுத்த சட்டத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியமெனத் தெரிய வந்தது. மேற்சொன்ன நோக்கத்தை எய்தும் வகையில் இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1979).—தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 40/1978) ரத்து செய்து அதற்குப் பதிலாக கடன் நிவாரணத்தைக் குறைப்பதன் மூலம் நிலையான கடன் நிவாரணம் அளிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 41/1979).—தமிழ் நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1957 விதித்துறைகளைச் செயல் படுத்துகையில் சில இடர்பாடுகள் இருந்ததாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவற்றைக் களைய இச் சட்டத்தை தகுந்தவாறு திருத்துவது அவசியமெனக் கருதப்பட்டது.

இச்சட்டத்தின் மூலம் செய்யப்பட்ட திருத்தங்கள் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

(1) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் அவர்கள் கொடுக்கும் கடன் களுக்கு விதிக்கும் வட்டி வீதத்தை அவ்வப்போது அறிவிக்க அரசுக்கு அதி காரம் அளித்தல். அவ்வாறு அறிவிக்கப்படும் வட்டி வீதம் இந்திய ரிசர்வு வங்கி அவ்வப்போது நிர்ணயிக்கும் வங்கிகள் பெறவேண்டிய நடைமுறையி லுள்ள வட்டி வீதத்திற்கேற்ப அமைய வேண்டும்.

(2) உண்மையில் வழங்கப்பட்ட கடன் தொகை அதற்கான வட்டி வீதம் முதலிய விவரங்கள் அடங்கியிராத கடன் சீட்டு, கடன் பத்திரங்களை வட்டிக்குக் கடன் கொடுப்பவர் பெற்றுக் கொள்வது ஒரு குற்றமாக ஆக்கப் பட்டுள்ளது.

(3) அதேபோன்று கடன் தொடர்பான ஆவணம் அல்லது பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குக் குறைவான தொகையைக் கொடுப்பதும் குற்றமாக ஆக்கப்பட்டுள்ளது.

(4) இந்தியக் குடிமக்களாக இல்லாதவர்கள், வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழில் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 42/1979).—மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்வி மன்றத்திற்கு ஆயுட்கால உறுப்பினர்களாக பத்து தமிழ்க் கல்வி மன்ற உறுப்பினர்களை ஒரே சமயத்தில் சேர்க்கவும், சென்னை, மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் நிர்வாகக் குழு, ஆலோசனைக் குழு, கல்வி மன்றம் ஆகியவற்றில் அலுவல் முறையில் உறுப்பினராக மருத் துவக் கல்வி இயக்குநரைச் சேர்க்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு மாநகரச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் சிவில் வழக்கு நடைமுறை சட்டக் கோவை தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணங்கள்— *தாவாக்கள் மதிப்பு திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 43/1979).—1882 ஆம் ஆண்டு மாநகரச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 15/1882) கீழான வழக்கு நடவடிக்கைகளுக்கு மேற் சொன்ன சட்டத்தைத் திருத்துவதன் மூலம் தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் தாவாக்கள் மதிப்புச் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 14/1955) பொருந்தச் செய்யவும் இதற்கேற்ப 1958 ஆம் ஆண்டு சிவில் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையைத் திருத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது.*

1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 44/1979).—*1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை அகற்றவும் அச்சட்டத்தின் விதித்துறைகளை இன்னும் சிறந்த முறையில் செயல்படுத்தவும் சென்னைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் கருத்து தெரிவித்தபடி இச்சட்டத்தை தகுந்தவாறு அளவு திருத்த இச் சட்டம் இயற்றப்பட்டது.*

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 45/1979).—*தமிழ் நாட்டுக் காடுகளிலிருந்து அட்டவணையிடப்பட்ட வெட்டு மரங்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டும், தமிழ் நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தில் சில குறைபாடுகளை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வனத்திலிருந்து அட்டவணையில் கண்டுள்ள வெட்டுமரம் எதனையும் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லும் எக் குற்றத்திற்கும் கடும் தண்டனை விதிக்க வேண்டியிருந்தது. மேற்சொன்ன நோக்கத்தை எய்த இத்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.*

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டம் (எண் 6) (தமிழ் நாடு சட்டம் 46/1979).—*1—4—1979 ஆம் நாளன்று தொடங்கிய நிதி ஆண்டின் பணிகளுக்கு மாநில தொகு நிதியிலிருந்து மேற்கொண்டும் தொகை ஒதுக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.*

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 47/1979).—வரி விதிக்கப் பெறுபவர் களுக்குள்ள இடர்பாடுகளைக் குறைத்தல், வரி வசூல் அதிகரித்தல், ஊழலை நீக்குதல் ஆகிய மூன்று நோக்கங்களை எய்துவதற்குத் தக்க மாறுதல்களை தெரிவிக்க வேண்டி விற்பனை வரிச் சட்டத்தில் வரி விதிப்பு, வரிவசூல், மேல் முறையீடு ஆகியவை தொடர்பான நடைமுறைகளை விரிவாக ஆராய 1977-ல் தமிழ் நாடு விற்பனை வரிக் குழுவை அரசு அமைத்துள்ளது. வணிகர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் களைய விற்பனை விவரக் கணக்குகள் குறித்து வரித் தொகையைத் திருப்பிக் கொடுத்தல், சோதனைச் சாவடிகளில் பின்பற்றப்படும் நடைமுறை, தண்டனைகளை விதித்தல், குறைத்தல் முதலியன குறித்து குழு சிலவற்றைப் பரிந்துரைத்தது. விற்பனை வரிக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 1/1959) தகுந்தவாறு திருத்த இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 86, 103, 120 ஆம் இனங்களும் திருத்தப்பட்டுள்ளன.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 48/1979).—அட்டவணையிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை 1979 டிசம்பர் திங்களுக்குப் பிறகு மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திற னாக்குதலும்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 49/1979).—காவல் துறையை மூன்றாகப் பிரிப்பதாலும் காவல் துறை டைரக்டர் ஜெனரல் என்ற புதிய பதவியை ஏற்படுத்துவதாலும் காவல் துறையை மூன்றாகப் பிரிப்பதற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டி தமிழ் நாடு 1859 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் சட்டமும் (மத்திய சட்டம் 24/1859) 1907 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (திருத்தச்) சட்டமும் (தமிழ் நாடு சட்டம் 3/1907) இச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டுள்ளன.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 50/1979).—தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 9/1955) கீழ் வழங்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட உரிமங்கள், அனுமதி களைப் பொறுத்தமட்டில் மேல் முறையீட்டின்போது மேல்முறையீட்டு அதிகார மன்றம் எடுத்த முடிவு அல்லது பிறப்பித்த ஆணை குறித்து மறு விசாரணை செய்ய அரசுக்கு அதிகாரம் இருக்கும் வகையில் அச்சட்டத்தைத் திருத்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள்—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 51/1979).— "உரிமையாளர்" என்பதில் மாநில அரசையும், உள்ளாட்சி மன்றத்தை அல்லது கேளிக்கை நடைபெறுவதை நிர்வகிப்பதற்குப் பொறுப்பேற்கும் ஒருவரையும் சேர்த்துக்கொள்ள இயலும் வகையில் தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 10/1934) திருத்தி யமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இரண்டாம், மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள டூரிங் திரைப்படக் கொட்டைகளுக்குப் (தற்காலிகமானவை) பொருந்தக்கூடிய, 14 திரைப்படக் காட்சிகளுக்குரிய மொத்த வசூல் திறனில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை இணக்க வரியாகச் செலுத்தவும் மேற்கூறிய சட்டத்தில் வகை செய்யப்பட் டுள்ளது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய-அறநிலையங்கள் (திருத்தங்கள்-தனி விதித்துறைகள்) திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 52/1979).— பரம்பரை முறையின் கீழ் வராத அறங்காவலர்களின் பதவியில் ஏற்பட்ட காலி யிடங்களை நிரப்ப தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு இந்து சமய-அறநிலையங் களை (திருத்தம்-தனி விதித்துறைகள்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 24/1976) 12 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கால வரை யறையை 1979 மே 31 ஆம் நாள் என்றிருப்பதை மேலும் ஓராண்டுக் காலம் நீட்டிக்கும் பொருட்டு, மேற்கூறிய சட்டத்தை திருத்த இச்சட்டம் இயற்றப் பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 53/1979.—பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைப் பாக்கித் தொகை கொடுப்பது தொடர்பான நிலையான குத்தகை நிவாரணம் கணக்கிடப்படும் வரையில் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1976) மூலம் பயிரிடும் குத்தகைகாரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை 1980 சனவரி 15 ஆம் நாள் வரையிலும் அந்நாள் உட்படவும் அளிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 979 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) (இரண்டாம் திருத்த) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 54/1979).—பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகை நிலுவையை செலுத்துவது தொடர்பாக அவர்களுக்கு நிலையான குத்தகை நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரையில், தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 17/1978) மூலம், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை 1980 சனவரி 15 ஆம் நாள் வரையில் அந்நாள் உட்படவும் அளிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆடு குதிரைப் பந்தயச் (டாப் முகவர் அமைப்புகளை ஒழித்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 55/1979).—இச்சட்டம், குதிரைப் பந்தயம் முதலியவற்றில் ஓடும் குதிரைகளைப் பொறுத்தமட்டில், டாப் முகவரமைப்புகள, பந்தயச் சீட்டுகள் விற்பனை செய்யும் முறையை ஒழிப்பதற்கு வகை செய்கிறது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 56/1979).—வணிகர்கள் சிலர், தம்மிடமிருந்து சில சரக்குகளை அல்லது வேறு பொருட்களை வாங்குவோருக்கு பரிசுகள் வழங்கினர், அல்லது பரிசுகள் வழங்கக் கருதியிருந்தனர். இப்பரிசுத் திட்டங்கள், பொருட்களை விற்பனை செய்யும் உண்மையான வணிகர்களின் வியாபாரத்தைப் பெரிதும்

பாதிக்கின்றன. மேலும், வியாபாரத்தில் பல முறைகேடுகள் நடக்கவும் வழி கோலுகின்றன. ஆகவே, வணிகர்கள் இம்மாதிரி பரிசுத் திட்டங்களை நடத்தும் முறையை தடை செய்யும் பொருட்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1979).—சென்னை மாநகராட்சிக்குச் சாதாரண தேர்தல்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான கால அளவை, 1979 மே 31 ஆம் நாளிலிருந்து மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கும் பொருட்டு இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மேலும் அவ்வாறு நீட்டிக்கப்பட்ட ஓராண்டுக் கால அளவிற்கு முன்னரே மாநகராட்சி தேர்தல்கள் முடிவடையுமாயின், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை ஆறு திங்களுக்கு மிகாமல் குறைக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1979).—நகராட்சிகள் அனைத்தின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கவும் நகராட்சி மன்றங்களுக்குரிய சாதாரண தேர்தல் முன்னரே நடைபெறுமாயின், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை ஆறு திங்களாகக் குறைப்பதற்கும் வகை செய்யும் பொருட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றச் (தனி அதிகாரிகள் நியமனம்) (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 59/1979).—கோயம்புத்தூர் நகராட்சிக்குரிய தனி அதிகாரியின் பதவிக் காலத்தை, 1979 செப்டம்பர் 30 ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் ஓராண்டுக் காலம் நீட்டிக்கவும், அந்நகராட்சிக்கான சாதாரண தேர்தல்கள் முன்னரே நடைபெறுமாயின், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை ஆறு திங்களாகக் குறைப்பதற்கும் வகை செய்யும் பொருட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமனம்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 60/1979).—ஊராட்சி நிர்வாகத்தில் விவகாரங் களை உடனுக்குடன் கவனிக்கும் பொருட்டு, அரசு ஊராட்சிகள் அனைத் திலும் 1979 செப்டம்பர் 12 ஆம் நாளன்றுள்ளபடி பதவி வகிக்கும் உறுப்பி னர்கள், தலைவர்களின் பதவிக் காலத்தை முடிவுறும்படி செய்வதெனவும்

அதற்குப் பதிலாக ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், ஊராட்சிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தவும், அலுவல்களை நிறைவேற்றவும், மேற்கொண்டும் ஓராண்டுக் காலத்துக்கு அக்கால அளவை ஆறு திங்களுககு மிகாமல் குறைப்பதற்குரிய விதித்துறையுடன் தனி அதிகாரிகளை நியமிப்பதெனவும் முடிவு செய்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) மூன்றாம் திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 61/1979).—359 ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1979 செப்டம்பர் 30 ஆம் நாளுக்குப் பின்னர் மேலும் ஓராண்டுக் காலத்துக்கு நீட்டிக்கவும் ஊராட்சிகளுக்குரிய சாதாரணத் தேர்தல்கள் முன்னதாகவே நடைபெறுமாயின், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை ஆறு திங்களாகக் குறைக்கவும் வகை செய்யும் பொருட்டு இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 62/1979).—ஊராட்சி ஒன்றியங்களை மீண்டும் அமைப்பு தற்குரிய நாளை மொத்தம் மூன்றாண்டுகள் இரு திங்கள் கால அளவுக்கு மிகாமல் ஒத்திப் போடுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ் நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 155 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதிகளின் வரம்பு நிபந்தனையைத் திருத்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 63/1979).—1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 77 ஆம் பிரிவினை தக்கவாறு திருத்தியமைப்பதன் மூலமாக, இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமத்துக்கு அல்லது அனுமதிச் சீட்டுக்கு விதிக்கப்படும் உயரளவுக் கட்டணத்தை இருபது ரூபாயிலிருந்து எழுபத்தைந்து ரூபாயாக உயர்த்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (தமிழ் நாடு) சட்டம் 64/1979.—1888 ஆம் ஆண்டு சென்னை

மாநகரக் காவல் (தமிழ்நாடு) சட்டம் 3/1888) சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் உரிமம் பெற விண்ணப்பித்துக்கொள்ளும் நபர்கள் அல்லது உரிமம் வைத்திருக்கும் நபர்கள், குறிப்பிட்ட ஒரு தொகையைக் காவல் துறை கமிஷனரிடம் பிணையத் தொகையாக வைப்பீடு செய்யவும் உரிமம் பெற்றவர், உரிமத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறி நடந்தால் அல்லது அந்நிபந்தனைகளின்படி நடக்கவில்லையானால் மேலே குறிப்பிட்ட தொகைகளைக் காவல் துறைக் கமிஷனர் பறிமுதல் செய்யவும், உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறி நடந்தமைக்காக, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரையில் உடனேயே அவ்வுரிமைத்தை தற்காலிகமாக ரத்து செய்யவும் வகை செய்யும் பொருட்டு 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 3/1888) திருத்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு ஆந்திர நிலவரி விதிப்புகள் (தரப்படுத்துதல்) (நீக்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 65/1979).—செங்கல்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகள் வட ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகள் ஆகியவற்றில் செயலில் இருந்த 1956 ஆம் ஆண்டு ஆந்திர நிலவரி விதிப்புகள் (தரப்படுத்தல்) சட்டத்தை (ஆந்திரச் சட்டம் 29/1956) இச்சட்டம் நீக்க விழைகிறது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 66/1979).—கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் தொகையை அல்லது நிலுவையாக உள்ள கேட்புத் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நபர்களின் பெயரை வெளியிடுவதற்கு வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 53/1961) திருத்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 67/1979).—இம்மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகளிலும் வைப்பீட்டுத் தொகை இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயலாக்குவது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி பரிசீலிக்க இயலும் வகையில் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவைத் திருத்த இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகளைப் பாதுகாத்தல் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 68/1979).—தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 27/1949) தற்போதுள்ள விதித்துறைகளை மேலும் கடுமையாக்கும் பொருட்டு இம்மாநிலத்தில் தனியார்க் காடுகளில் வகைதொகையின்றி மரங்கள் வெட்டப் படுவதைத் தடுக்கும் பொருட்டும், மேற்கூறிய சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவதற்காக வனப்பரப்பை 12 ஹெக்டேரிலிருந்து 2 ஹெக்டேராகக் குறைப்பதற்குக் கருதப்பட்டது. மேலும் இச்சட்டத்தின் விதித்துறைகளை செவ்விய முறையில் செயல்படுத்தும் பொருட்டும் மேற்கூறிய சட்டத்தின்கீழ் மரங்கள் வெட்டுதல் முதலியன குறித்து வரும் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் பொருட்டும், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும் வனத்துறை, வேளாண்மைத் துறை, வருவாய்த்துறை அதிகாரிகளை கொண்ட குழு ஒன்றை அமைக்கக் கருதப்பட்டது. தமிழ் நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதித்துறைகளை தககவாறு திருத்தியமைப்பதன் மூலம் மேற்கூறிய நோக்கஙகளை எய்த இச்சட்டம் நிறைவேற்றப் பட்டது.

1980 தமிழ் நாடு சட்டங்கள்.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகை கட்டுப் பாடு) திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 1/1980).—அத்தகைய கட்டிடம் காலியாகிற போதெல்லாம் அக்கட்டிடம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை கட்டிடச் சொந்தக்காரர் தமது அனுபோகத்தில் வைத்துக்கொள்ள அல்லது அக்கட்டிடம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை வாடகைக் காரர் ஒருவருக்கு வாடகைக்கு விட அல்லது அக்கட்டிடம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை யாரேனும் ஒருவர் அனுபோகத்தில் கொள்ளுமாறு அனுமதிக்க ஒட்டாமல் அக்கட்டிட சொந்தக்காரர் தடை செய்து தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1960) 3 ஆவது பிரிவை திருத்த அரசு கருதியுள்ளது. எனினும் இவ்வாறு செய்யக்கருதியுள்ள திருத்தமானது 3(3) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களுக்காக அல்லது அதில் குறிப்பிடப்பட் டுள்ள அதிகாரிகளில் ஒருவரது அனுபோகத்திற்காக அக்கட்டிடம் தேவைப்பட

வில்லை என்றால், அக்கட்டிட சொந்தக்காரர் அதனை வாடகைதாரர் ஒருவருக்கு வாடகைக்கு விடுகின்ற உரிமையை அல்லது அதனை தானே அனுபோகத்தில் கொள்ளுகின்ற உரிமையை அகற்றியது. இவற்றிற்காக இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைக்காரர் பாதுகாப்புச் (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1980).—தமிழ்நாடு 192- ஆம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 3/1922) விதித்துறைகளைத் தக்கவாறு திருத்தி அறிக்கை வெளியிடுவதன் மூலம் நகரியங்களிலுள்ள குடியிருப்புக்கல்லாத கட்டிடங்களுக்கும் மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளை நீட்டிக்க கருதப்பட்டது. மேற்சொன்ன சட்டம் ஒரே நாளிலிருந்து பகுதிகள் அனைத்திலும் செயல்படவும், மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் ஏற்கெனவே நீட்டிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள குத்தகைப் பதிவேடுகளைப் பொறுத்த வரையில் உத்தேச திருத்தச் சட்டம் தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளே முடிவான நாளாக இருக்கும் வகையிலும் மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் இனிமேல் நீட்டிக்கப்படவிருக்கிற பகுதிகளிலுள்ள குத்தகைப் பதிவேடுகளை பொறுத்தவரையில் மேற்சொன்ன சட்டம், அப்பகுதியில் எந்நாளன்று நீட்டிக்கப்படுகிறதோ, அந்நாளே முடிவான நாளாக இருக்கும் வகையிலும் மேற்படி சட்டத்தை திருத்த முடிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன நோக்கங்களை எய்தும் பொருட்டு இச்சட்டம் நிறை வேற்றப்பட்டது.

தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 3/1980).—குத்தகை நிலுவைத் தொகைகளைச் செலுத்துவது தொடர்பாகப் பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு நிலையான நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப் படுகிற வரையில் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதெனின்றும் பாதுகாத்தல்) சட்டத்தின் மூலம் (குடியரசுத் தலைவர் சட்டம் 36/1976) பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ஆம் நாள் உட்படவும் அந்நாள் வரையிலும் நீட்டிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி களிலுள்ள பயிரிடு குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரணம்) திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 4/1980).—குத்தகை நிலுவைத் தொகைகளைச் செலுத்துவது தொடர்பாக புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளி லுள்ள பயிரிடு குத்தகைகாரர்களுக்கு நிலையான நிவாரண நடவடிக்கைகள மேற்கொள்ளப்படும் வரையில் தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு புயல்—வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள பயிரிடு குத்தகைகாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டத்தின் மூலம் (தமிழ் நாடு சட்டம் 17/1978) பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை, 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 15 ஆம் நாள் வரையிலும் அந்நாள் உட்படவும் நீட்டிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 5/1980).—கடன் வாங்கியவர்கள் தாம் 4 ஆம் பிரிவின்கீழ் நிவாரணம் பெறுவதற்கு உரியவர் எனக்குறிப்பிடுகிற உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். ஆண்டு குடும்ப வருமானம் பற்றி சான்றிதழ்களை அனுப்பவேண்டும். நிவாரணம் கோரி எந்த கால அளவிற் குள் கடனாளிகள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதன் மூலம் நிலுவையாக உள்ள இனங்களில் முடிவு எடுக்கும் நடைமுறையை எளிதாக்க தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 31/1976) விதித்துறைகளை திருத்த இச்சட்டம் விழைகிறது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட (தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/1980).—தனியார் பள்ளிகள், நிதிகள் முதலியவற்றை முதலீடு செய்வதற்கு பாரத ஸ்டேட் வங்கியும் அதன் கிளை வங்கிகளும் ஏற்பளிக்கப்பட்ட வங்கிகளாகச் செயல்படும் வகையில் தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 29/1974) திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக் காரர்கள் பாதுகாப்பு நியாயவாரம் செலுத்துதல் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 7/1980).—

மத்திய அரசுக்கு அல்லது யாதொரு மாநில, அரசுக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கு தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 25/1955) தமிழ் நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைகாரர்களை (நியாயவாரம் கொடுத்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 24/1956) ஆகிய வற்றின் விதித்துறைகளிலிருந்து விலக்களித்தும் யாதொரு உள்ளாட்சி மன்றத்திற்கு அல்லது மத்திய அரசிற்கு அல்லது யாதொரு மாநில அரசுக்கு மத்திய அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலுள்ள யாதொரு நிறுவனத்திற்கு அல்லது கழகத்திற்கு அல்லது சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட யாதொரு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விலக்களித்தும் மேற்படி சட்டங்களில் குறிப்பிட்ட விதித்துறை செய்ய இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1980).—தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 94(2-எ) பிரிவை தக்கவாறு திருத்துவதன் மூலம், தகுதியுள்ள நபருக்கு தமிழ் நாடு 1965 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளின்கிழ் ஒப்படை செய்யப்பட வேண்டிய உபரி நிலங்களின் உயரளவு, பரப்பளவை தற்போதுள்ள 5 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து சாதாரண மூன்று ஏக்கர் புன்செய் நிலம் அல்லது சாதாரன 1½ ஏக்கர் நன்செய் நிலம் ஆக குறைக்கும் பொருட்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகச் (இரண்டாவது திருத்த) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 9/1980).—கல்விக் கோட்பாடுகளை உருவாக்கி ஒருங்கிணைக்கவும் கல்வி வளர்ச்சி மற்றும் பல்கலைக் கழகம் கல்வி முன்னேற்றம் ஆகியவை தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் கல்வித் துறை செயலாளரின் பணி உதவியாக இருக்கும் பொருட்டும் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் ஆட்சி மன்றம் குழுவில் மட்டும்

நியமிப்பதற்குப் பதிலாக அவ்விரு பல்கலைக் கழகங்களின் ஆட்சி குழுவில் நியமிக்கக் கருதப்பட்டது. மேற்சொன்ன பல்கலைக் கழகங்களின் நிதி தணிக்கை வரவு-செலவு ஆகியவை தொடர்பான பொருள்கள் குறித்து விவாதிக்கும் போது பயனுள்ளதாயிருக்கும் என்ற அடிப்படையில் மேற்சொன்ன பல்கலைக் கழகங்களின் நிதிக்குழுவில் கல்வித்துறை அரசுச் செயலாளருக்குப் பதிலாக நிதித்துறை அரசுச் செயலாளரை அல்லது அவரது அதிகாரம் பெற்றவரை நியமிக்கவும் கருதப்பட்டது. 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும் 1965 ஆம் ஆண்டு மதுரை காமராஜ் பல்கலைக் கழகச் சட்டத்தையும் தக்கவாறு திருத்துவதன் மூலம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1980 ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 10/1980).—தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 20/1951) திருத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.—

(1) அமைச்சரின் முதன்மை பேரவைச் செயலருக்கும் பேரவைச் செயலர்களுக்கும் மருத்துவ வசதிகளை அளித்தல்;

(2) சட்ட மன்ற உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்;

(3) முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்து தற்போது அவ்வாறு இராத ஒருவருக்கு மருத்துவ வசதிகள் அளித்தல். ஆனால் அந்த உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு அம்மருத்துவச் சலுகைகள் அளிக்கப்பட மாட்டாது;

(4) சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் தொலைபேசி வசதியளித்தல், அவற்றை நிறுவுவதற்கான செலவுகள் மட்டும் மாநில நிதிகளிலிருந்து செய்யப்படும்;

(5) ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினராக இருந்த உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம்

11/1980).—பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறு கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணை வேந்தர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வரப்பெற்றதன் பேரில் தேர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய கால அளவை நீட்டிப்பதற்கும் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளிற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், மாணவர்களுக்கும் பட்டம், பட்டயம் அல்லது ஏனைய கல்விப் பட்டங்களை வழங்கவும் வரையறுக்கப்பட்ட நாளுக்கு அதாவது 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4 ஆம் நாளுக்கு முன்னர், சென்னை, கிண்டி பொறியியல் கல்லூரியில் அல்லது 1 ஆம் விவர அட்டவணையின் (1) இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏதாவது ஒன்றில் மாணவராக உள்ள ஒவ்வொருவருக்கும் அல்லது சென்னைத் தொழில் நுட்ப நிறுவனத்தின் எம். இ. அல்லது எம். எஸ்சி. (செய்முறை கணிதம்) படிக்கும் மாணவராக உள்ள ஒவ்வொருவரும் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் அல்லது ஏற்பாடு செய்யும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதற்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிகரான பட்டம், பட்டயம் அல்லது ஏனைய கல்வி பட்டங்கள் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திய அத்தகைய தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதற்கும் வகை செய்ய தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 30/1978) திருத்தவும் கருதப்பட்டது.

(2) மேற்சொன்ன பல்கலைக் கழகத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஓர் அதிகாரி ஆசிரியர் அல்லது ஏனையவர் ஆகியோருக்கு பாதகமான வகையில் பின்னொரு நாளில் அவரது ஊதியத்தையும் ஏனைய வரையறைகள் நிபந்தனைகளை மாற்றாமலிருக்கும் வகையில் இச்சட்டத்தின் 36 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையைத் திருத்தவும் கருதப்பட்டது.

(3) பல்கலைக் கழக மானியக் குழு ஏற்படுத்திய குழுவின் பரிந்துரைகளின் பேரில் கல்வி மன்றத்தில் உள்ள பல்கலைக் கழகத்தின் பேராசிரி

யர்கள், ஆசிரியர்கள், துறைத்தலைவர்கள், நிலையங்களின் தலைவர்கள், ஆகியோருக்கு அதிக அளவில் பிரிதிநிதித்துவம் அளிக்கும் பொருட்டு சட்டத்தின் 2 ஆம் விவர அட்டவணையின் 9 ஆம் விதியில் திருத்தம் செய்யக் கருதப்பட்டது.

(4) தலைவருக்குப் பதிலாக, மேல் நிலைக் கல்வியைக் கவனிக்க கல்வித் துறை அதிகாரி ஒருவரை (அரசால் நியமிக்கப்படுவர்) சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டது.

(5) சட்டத்தின் 37 ஆம் பிரிவில் சில முக்கிய திருத்தம் செய்யக் கருதப்பட்டது.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் (தமிழ் நாடு சட்டம் 30/1978) திருத்துவதன் மூலம் மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க இச்சட்டம் இயற்றப்பட்டன.

அத்தியாயம் XIV.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு.

1—4—1979 முதல் 31—3—1980 வரையிலான காலத்தில் மாநிலப் பணியாளர் தொகுதியில் 15 வகையான தொழில் நுட்பப் பிரிவில் உட்படுத்தப்பட்ட பதவிகளில் 457 காலி இடங்களுக்கு நேரடியாக பணியாளர்கள் அமர்த்தப்பட, குழு தேர்வு நடத்தியது. தேர்வுக்குழு 457 காலியிடங்களுக்கு 423 வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. தமிழ்நாடு சட்டசபை செயலகப் பணியில் ஆங்கில நிருபர் பதவியில் மூன்றிற்கும், தமிழ்நாடு ஆவணக்காப்பகப் பொது பணியில் தரம் பிரித்தல் மற்றும் அட்டவணைப்படுத்துதலில் ஆராய்ச்சி அலுவலர் பதவி ஒன்றிற்கும் மற்றும் தமிழ்நாடு தொழிற் பணியில் தொழிற் நுட்பப் பயிற்சி மையம், கிண்டி குளிர்சாதன இயந்திரத்தை பழுது பார்க்கும் படிப்பில் துணைப் பொறியாளர் பதவி ஒன்றிற்கும், தகுதியும் பொருத்தமும். வாய்ந்த விண்ணப்பதாரர்கள் யாரும் கிடைக்கவில்லை. அதனால் அப் பதவியில் நியமிக்க தேர்வு நடக்கவில்லை. தமிழ்நாடு மின்சார ஆய்வாளர்ப் பொறியியல் உதவி மின்சார ஆய்வாளர் பதவிக்கான இரண்டு காலியிடங்களில் ஒன்றையும், தமிழ்நாடு துறைமுக அலுவலர் பதவிக்கான மூன்று காலியிடங்களில் இரண்டையும், தமிழ்நாடு சார்நிலைப்பணியில் துணை வேளாண்மை அலுவலர்ப் பதவிக்காக 416 காலியிடங்களில் 30-யும் தகுதியும் பொறுத்தமும் வாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்காத காரணத்தால், நிரப்ப முடியவில்லை. தொகுதி ஒன்றில் சேர்க்கப்பட்ட (தொழில் நுட்பம் அல்லாத) நான்கு வகையான பணிகளுக்கு பணியாளர்கள் அமர்த்தும் பொருட்டு 19 நபர்களை தேர்ந்தெடுத்தது. அதற்கான எழுத்துத் தேர்வு டிசம்பர் 1978 சனவரி 1979-ல் நடைபெற்றது.

இத் தேர்வுக் குழு சார்நிலைப் பணியில் தொழில் நுட்பம் என்று பாகுபடுத்தப்பட்ட 22 வகையான பதவிகளுக்கு 306 நபர்களை நேரடிப் பணியில் அமர்த்தும் பொருட்டு தேர்வு செய்தது. தொகுதி இரண்டில் சேர்க்கப்பட்ட

(தொழில் நுட்பம் அல்லாத) 11 வகையான பணியாளர்களுக்கு பணியாளர்கள் அமர்த்தும் பொருட்டு 174 நபர்களை தேர்ந்தெடுத்தது. அதற்கான எழுத்துத் தேர்வு டிசம்பர் 1978, பிப்ரவரி 1979-ல் நடைபெற்றது. இக்குழு மேலும் தொகுதி ஐந்தில் சேர்க்கப்பட்ட (தொழில் நுட்பமில்லாத) பதவிக்கு 56 நபர்களை நேரடியாக தேர்ந்தெடுத்தது. தொகுதி மூன்றில் சேர்க்கப்பட்ட (தொழில் நுட்பம் அல்லாத) ஐந்து வகையான பணிகளுக்கு பணியாளர்கள் அமர்த்தும் பொருட்டு 113 நபர்களை தேர்ந்தெடுத்தது. அதற்கான எழுத்துத் தேர்வு டிசம்பர் 1978, சனவரி 1979 நடைபெற்றது. இக்குழு மேலும் தொகுதிகள் 1, 1-எ, 6 மற்றும் 9 ஆகிய பணிகளில் சேர்க்கப்பட்ட பதவிகளுக்கு எழுத்துத் தேர்வுகளை நடத்தியது. இவற்றிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	தொகுதி	விண்ணப்பப் படிவங்கள் வரப் பெற்றது.	எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக் கப்பட்ட விண்ணப் பதாரர்கள் எண்ணிக்கை.	நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டவர்கள் எண்ணிக்கை.	தேர்வு செய்யப் பட்டவர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	மாநிலப் பணி.				
1.	தொகுதி 1. பணிக்கு.	1,370	1,080	65	10
2.	தொகுதி 1-A. பணிக்கு.	143	94	29	5
	சார்நிலைப் பணி.				
3.	தொகுதி 6. பணிக்கு	464	375	41	7
4.	தொகுதி 9. பணிக்கு.	15,292	12,449	1,086	337

இக்குழு மேலும் கீழ்க்காணும் பதவிகளுக்கு வரப்பெற்ற விண்ணப்ப தாரர்களின் நேரடித் தேர்விற்கு அனுமதிப்பதற்கு முன் அவர்களில் எண்ணிக்கையைக் குறைக்கும் பூர்வாங்க எழுத்துத் தேர்வுகளை நடத்தியது :—

(i) தமிழ்நாடு பொது சுகாதார பணியில் பொதுமக்கள் கல்வி மற்றும் தகவல் அலுவலர் ; (ii) தமிழ் நாடு மீன் ஆய்வாளர் பணியில் உதவி மீன் ஆய்வாளர்; (iii) தமிழ் நாடு பொது சார்பணியில் உள்ள அரசு கல்லூரிகளில் பட்டதாரி நூலகர்; (iv) தமிழ் நாடு மருத்துவ சார்பணியில் தலைமை யிடத்து மாவட்ட காசநோய் நிலையத்தில் புள்ளியியல் உதவியாளர்; (v) தமிழ் நாடு நகராட்சி ஆணையர் சார்நிலை பணியில் நகராட்சி ஆணையர் நிலை மூன்று. (vi) தமிழ் நாடு தொழில் பணியில் தொழிலாளர் அலுவலர்; (vii) தமிழ் நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியில் பூச்சியியல் உதவியாளர் மற்றும் (viii) தமிழ் நாடு பொது சார்நிலைப் பணியில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்.

இக்குழு மேலும் தனி மற்றும் துறைத் தேர்வுகளுக்கான எழுத்துத் தேர்வு களை 1979 மே, நவம்பர் மாதங்களில் நடத்தியது. அவற்றிற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை முறையே 33,513, 32,296 ஆகும். மாவட்ட உதவி ஆட்சியாளர்கள், காவல்துறை அலுவலர்கள் மற்றும் வனத் துறை அலுவலர்கள் ஆகியவர்களுக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் மொழித் தேர்வுகள் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் நடத்தப்பெற்றன.. இத்தேர்வுகளில் பங்கு கொண் டவர்களின் எண்ணிக்கை முறையே 52 மற்றும் 53 ஆகும். இக்குழு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலும் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் டேரா டூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேரத் தகுதி காண் தேர்வினை நடத்தியது. சம்பந்தப்பட்ட சார்நிலைப் பணியிலிருந்து அரசுப் பணிக்கு மாற்றல் மூலம் பணியில் அமர்த்தல் சம்பந்தமாக 60 ஆதாரக் குறிப்புகளை இக்குழு பரிசீலித்து தகுதியும் பொருத்தமும் வாய்ந்தவர்கள் பட்டியலைத் தயாரித்தது. தற்காலிக பணியில் இருக்கும் 416 நபர்களை 3 மாதத்திற்கு மேல் அப்பணியில் நீடிப்பதற்கும், அதேபோல் 288 நபர்களை 12 மாதத்திற்கு மேல் நீடிப்பதற்கும், 188 பேர்களை 18 மாதத்திற்கும், 346

பேர்களை 18 மாதத்திற்கு மேல் நீடிக்கவும் தேர்வுக்குழு தனது ஒப்புதலை வழங்கியது. மற்றும் சார்நிலைப் பணிகளில் 685 பேர்களை 3 மாதத்திற்கு மேலும் 234 பேர்களை 12 மாதங்களுக்கு மேலும் 190 பேர்களை 18 மாதங்களுக்கு மேலும் 180 பேர்களை 24 மாதங்களுக்கு மேலும் 117 பேர்களை 30 மாதங்களும் அதற்கு மேலும் சம்பந்தப்பட்ட தற்காலிக பணிகளில் நீடிக்க இத்தேர்வாணைக் குழு பின் ஏற்பினை அளித்தது. அரசாணையை மீறி 35 தகுதியற்ற நபர்களைப் பணியில் அமர்த்தியதற்கு அரசு பின் ஏற்பு அளித்தது.

மேல்முறையீடு மனுக்கள், மறு ஆய்வு மனுக்கள் சீராய்வு மனுக்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கான செய்குறிப்புகள் மற்றும் அரசு ஊழியரில் காயமுற்றோர் ஓய்வூதியம் அங்கீகரித்தல் ஆகிய 225 விவகாரங்களில் அரசுக்கு இத்தேர்வுக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது. 39 பேர்களில் பிறந்த தேதி மற்றும் சம்பந்தமாக இக்குழு அரசு மற்றும் துறை தலைவர்களால் கலந்தாலோசிக்கப்பட்டது. மாநில அரசுப் பணியில் உள்ளடங்கிய பதவிகளுக்கு 6 நபர்களை முறையாக பணியில் அமர்த்துவதற்கும் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அமர்த்துவதற்கும் சார்நிலைப் பணியில் உள்ளடங்கிய மற்ற பதவிகளுக்கு 81 நபர்கள் முறையாக் பணியில் அமர்த்துவதற்கும் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்கு விதிமுறைகளை 1954-ல் ஒழுங்கு விதிமுறை 16 (பி)-யின் பின்பகுதியின்படி இக்குழு தனது ஒப்புதலை அளித்தது.

தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழு

பொதுப்பணியில் திறமையினை அதிகரிக்கச் செய்யவும் பணியாளர்களின் நலனைக் கருதி அவர்களின் குறைகளை கவனிக்கவும் கீழ் நிலை பணிகளின் (Subordinate Service) பிரதிநிதிகளுடைய பல்வேறு கருத்துக்கள் அலுவலர்கள் ஆகியவைகளை ஒருமுகப்படுத்தவும் கருதி சிவில் பணியாளர்களை பாதிக்கும் விஷயங்களில் சிவில் பணியாளர்களின் பொதுக்குழு வேலை வாய்ப்புளிப்போம் எனும் முறையில் அரசு பணியாளர் ஆகிய இருவர் இடையேயும் அதிகபட்ச கூட்டுறவினை நிலவச் செய்வதே தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டு குழுவின் நோக்கமாகும்.

பணியாளர்களின் பணி நிலைகளை பாதிக்கும் எல்லா விஷயங்களும் குழுவின் பார்வைக்கு உட்பட்டதாகும். குழுவின் பரிந்துரைகள் தகுந்த

நடவடிக்கைக்காக அரசிற்கு தெரிவிக்கப்படுகின்றன. அப்பரிந்துரையின் மீது அரசின் இறுதி முடிவுகள் குழுவிற்கு அறிவிக்கப்படுகின்றது. பணியாளர்களின் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் ஒருவரையொருவர் சந்தித்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி பேசவும் நிர்வாகத்தை செம்மை படுத்தக் கூடிய வழிகளை வகுக்கவும் மாவட்ட கூட்டுக்குழு பயன்படுகின்றது.

அறிக்கை ஆண்டில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக்குழு மூன்று முறை கூடியுள்ளது. அக்கூட்டங்களில் 49 பொருள்களைப்பற்றி விவாதிக்கப் பட்டுள்ளது.

ஒழுக்கக் கண்காணிப்பு இலஞ்ச ஒழிப்பு

ஒழுக்கக் கண்காணிப்புத்துறை அதன் ஆணையாளரின் கீழ் தொடர்ந்து செயல்பட்டது. ஒழுக்கக் கண்காணிப்பு-இலஞ்ச ஒழிப்பு இயக்குநர் புலனாய்வு களையும், விசாரணைகளையும் நடத்தினார். துணை இயக்குநர் ஒருவரும், காவல் துறை சூப்பிரண்டுகள் மூவரும், துணை சூப்பிரண்டுகள் பதினான்கு பேரும் போதிய சார்நிலைப் பணியாளர்களும் குற்ற வழக்கு தொடர்பு அலுவலர்களும் இவருக்கு உதவினர்.

பின்வரும் மூன்று தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் மீதான விசாரணை வழக்குகளை ஒழுக்கக் கண்காணிப்பு, இலஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகம் எடுத்துக் கொள்வதற்கான வரம்புகளில் மாற்றமில்லை. அவையாவன:—

(1) C & D தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்களும் சட்டப் படிக்கான வாரியங்கள், கழகங்கள், மாநில அரசுக்குச் சொந்தமான வனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த திங்களொன்றுக்கு ரூபாய் 600-க்குக் குறை வாக அடிப்படைச் சம்பளம் பெறுகின்ற பணியாளர்களும்.

(2) A & B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்களும் (அனைத்து இந்தியப் பணி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துறைத்தலைவர்கள் (நீங்கலாக) தனிச் சட்டப்படிக்கான வாரியங்களையும் கழகங்களையும் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களையும் சேர்ந்த பணியாளர்களும் திங்களொன்றுக்கு ரூபாய் 600-ம் அதற்கு அதிகமாகவும்

அடிப்படைச் சம்பளம் பெறும் மேலாண்மை இயக்குநர்கள், தலைமை நிர்வாகப் பொறுப்பினர்கள் நீங்கலாக).

(3) அனைத்து இந்தியப் பணி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், துறைத் தலைவர்கள், தனிச் சட்டப்படிக்கான வாரியங்களையும், கழகங்களையும், மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களையும் சேர்ந்த மேலாண்மை இயக்குநர்கள், தலைமை நிருவாக அதிகாரிகள்.

ஒழுக்கக் கண்காணிப்பு-இலஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகம் இவ்வாண்டில் செய்த பணியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

தொடக்க விசாரணை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (முந்தைய ஆண்டிலிருந்தே முடிவுறாமல் இருந்தவை உட்பட).	343 பேர் தொடர்பான 217 வழக்குகள் (A & B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 166 பேரும் C,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 177 பேரும்).
முடிக்கப்பட்ட தொடக்க விசாரணைகளின் எண்ணிக்கை.	276 பேர் தொடர்பான 168 வழக்குகள் (A.,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 135 பேர். C.,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 141 பேர்).
விரிவாக நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை (முந்தைய ஆண்டிலிருந்தே முடிவுறாமலிருந்தவை உட்பட).	474 பேர் தொடர்பான 304 வழக்குகள் (A.,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 278 பேர். C.,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 196 பேர்).
விரிவாக நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை.	223 பேர் தொடர்பான 152 வழக்குகள் (A.,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 113 பேர். C.,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 110 பேர்).
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வகையில் முடிவுகள் அமைந்த விசாரணைகளின் எண்ணிக்கை.	167 பேர் தொடர்பான 113 வழக்குகள் (A.,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 83 பேர். C.,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 84 பேர்).

பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகளைத் தவிர ஏனையவை). இவற்றில் இவ்வாண்டு தொடக்கத்தில் புலனாய்வு முடிவுறாமலிருந்த வழக்குகளும் அடங்கும். பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை.	493 பேர் தொடர்பான 62 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 110 பேர். C,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 158 பேர், தனிப்பட்டோர் 225 பேர்) 348 பேர் தொடர்பான 40 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 64 பேர், C.D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 109 பேர், தனிப்பட்டோர் 175 பேர்).
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வகையில் முடிவுகள் அமைந்த விசாரணைகளின் எண்ணிக்கை.	132 பேர் தொடர்பான 31 வழக்குகள் (A,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 37 பேர். C,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 81 பேர், தனிப்பட்டோர் 14 பேர்).
கண்ணிவைத்துப்பிடித்து பதிவு செய்து புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. இவற்றில் ஆண்டுத் தொடக்கத்தில் புலனாய்வு முடிவுறாமலிருந்த வழக்குகள் அடங்கும்.	138 பேர் தொடர்பான 118 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 34 பேர். C.D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 100 பேர், தனிப்பட்டோர் 4 பேர்).
கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகளில் முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை.	98 பேர் தொடர்பான 84 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 25 பேர். C,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 70 பேர், தனிப்பட்டோர் 3 பேர்).
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வகையில் முடிவுகள் அமைந்த விசாரணைகளின் எண்ணிக்கை.	89 பேர் தொடர்பான 76 வழக்குகள் (A,B. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 24 பேர் C,D. தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 63 பேர், தனிப்பட்டோர் 2 பேர்).

தொடக்க விசாரணை.

இவ்வாண்டு 343 பேர் தொடர்பான 217 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 166 பேர், C, D தொகுதிகளைச் சேர்ந்த அரசுப் பணியாளர்கள் 177 பேர்) விசாரிக்கப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு :—

62 பேர் தொடர்பான 47 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 36 பேர், C, D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 26 பேர்) விரிவாக விசாரணைக்குரியவையாக மாற்றப்பட்டன. 214 பேர் தொடர்பான 121 வழக்குகளில் (A, B தொகுதிகளைச் சேர்ந்த பணியாளர்கள் 99 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 115 பேர்) போதுமான தகவல்கள் இல்லாத காரணத்தால் அல்லது குற்றச்சாட்டுகள் உள் நோக்கம் கொண்டவையாக அல்லது பொய்யாகச் சுமத்தப்பட்டவையாகத் தெரிய வந்ததால் மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டது. இவற்றில் 31 வழக்குகளில் தெரியவந்த நிருவாகச் சீர்கேடுகள் அல்லது முறைகேடுகள் குறித்து ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளர் அல்லது துறைத் தலைவர்கள் தாம் அவசியமெனக் கருதும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாண்டு இறுதியில் 67 பேர் மீதான 49 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 31 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 36 பேர்) முடிவுறாமலிருந்தன.

விரிவான விசாரணைகள் :

ஆய்வு ஆண்டில் 474 பேர் மீதான 304 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 278 பேர் C, D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 196 பேர்) விசாரிக்கப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு:—

167 பேர் தொடர்பான 113 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 83 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 84 பேர், நடவடிக்கை எடுக்கத்தக்க வகையிலமைந்த விசாரணை முடிவு அறிக்கைகள் அனுப்பப்பட்டன. 56 பேர் தொடர்பான 39 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 30 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 26 பேர்.

நடைபெற்ற விசாரணைகளில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான எவ்விதத் தடையமும் புலனாகவில்லை. 251 பேர் தொடர்பான 152 வழக்குகள் (A, B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 165 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 86 பேர்) ஆண்டு இறுதியில் விசாரணை முடிவுறாமலுள்ளது.

பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகள் நீங்கலாக ஏனையவை.—

ஆய்வு ஆண்டில் 493 பேர் மீதான 62 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 110 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள். 158 பேர், 225 பேர் தனிப்பட்டோர்கள்) புலனாய்வு செய்யப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு : 77 பேர் தொடர்பான 22 வழக்குகளில் (A,B தொகுதி களைச் சேர்ந்தவர்கள் 25 பேர். C, D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 52 பேர், நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில் அமைந்த விசாரணை முடிவு அறிக்கைகள் அனுப்பப்பட்டன. இவ்வழக்குகளில் புலனாய்வு தொடங்கிய போது தொடர்புடைய குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் 45 பேர் மீது (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 14 பேர் C, D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 16 பேர், தனிப்பட்டோர் 16 பேர்) சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்க சாட்சியம் ஏதுமில்லாததால் அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லை எனப் பரிந்துரைக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப் பட்டவர்களில் எஞ்சியோர் மீது நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில் அமைந்த விசாரணை முடிவு அறிக்கைகள் அனுப்பப்பட்டன. 82 பேர் தொடர்பான 9 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 3 பேர், C,D தொகுதி களைச் சேர்ந்தவர்கள் 2 பேர், தனிப்பட்டோர் 77 பேர்) நடைபெற்ற விசாரணைகளில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான எவ்விதத் தடையமும் புலனாகவில்லை. 55 பேர் தொடர்பான 9 வழக்குகளில் (A, B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 12 பேர் C, D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 29 பேர், தனிப்பட்டோர் 14 பேர்) புலனாய்வு முடிந்து, நீதி மன்றங்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாண்டில் ஒரு வழக்கின் இறுதியில் 14 பேர் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 7 பேர், தனிப்பட்டோர் 7 பேர்) தண்டிக்கப்பட்டனர். இதே வழக்கில் தொடர்புடைய எஞ்சியுள்ள 88

நபர்கள் மீது A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 10 பேர் C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தனிப்பட்டோர் 68 பேர்) புலனாய்வுக்குப் பின் இவ்வாண்டில் நீதி மன்றங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 145 பேர் தொடர்பான 22 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 46 பேர், (C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 49 பேர், தனிப்பட்டோர் 50 பேர்) புலனாய்வு நடைபெற்று வந்தது.

கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகள்.—ஆய்வு ஆண்டில் 138 பேர் தொடர்பான 118 வழக்குகள் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 34 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 100 பேர், தனிப்பட்டோர் 4 பேர்) புலனாய்வு செய்யப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு:—

62 பேர் தொடர்பான 57 வழக்குகளில் (,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 16 பேர், C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 4 பேர் தனிப்பட்டோர் 2 பேர்) புலனாய்வு முடித்து நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 27 பேர் தொடர்பான 19 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 8 பேர் C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 19 பேர்) நடுவர் மன்ற நடவடிக்கை அல்லது துறை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து விசாரணை முடிவு அறிக்கைகள் ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளருக்கு அனுப்பப்பட்டன. 9 பேர் மீதான 8 வழக்குகளில் (B தொகுதியைச் சேர்ந்தவர் ஒருவர், C,D தொகுதிகளைச் சேர்ந்த 7 பேர் தனிப்பட்டோர் ஒருவர்) நடைபெற்ற விசாரணைகளில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான எவ்விதத் தடையமும் புலனாகவில்லை. 40 பேர் மீதான 34 வழக்குகளில் (A,B தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 9 பேர் C,D தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் 30 பேர், தனிப்பட்டோர் ஒருவர், புலனாய்வு நடைபெற்று வந்தது.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளை முடிப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

1—4—1979 ஆம் நாளன்று முடிவுறாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை	114

1—4—1979 முதல் 31—3—1980 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 66

நடவடிக்கை எடுக்கத்தக்க வகையிலமைந்த விசாரணை முடிவு அறிக்கைகள் அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 41

நடைபெற்ற விசாரணைகள், நடவடிக்கை எடுப்பதற்கான எவ்விதத் தடயமும் புலனாகாத வழக்குகளின் எண்ணிக்கை 17

புலனாய்வுகளை முடித்து நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 66

31—3—1980 ஆம் நாளன்றுள்ளபடி புலனாய்வு நடந்து வரும் வழக்குகளின் எண்ணிக்கை 56

ஒழுக்கக் கண்காணிப்பு அறிக்கைகள், கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகள் விசாரணைகள், தண்டனை விதித்து திர்ப்புகள் வழங்கப்பட்டவை போன்றவை பற்றிய வகைப்படுத்திய பகுப்பாய்வு விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

	1979—1980
(1) ஒழுக்கக் கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	83
(2) இவ்வாண்டு பதிவு செய்யப்பட்ட புதிய தொடக்க விசாரணைகளின் எண்ணிக்கை	158
(3) புதிய விரிவான விசாரணைகளின் எண்ணிக்கை	153
(4) ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளருக்கு அனுப்பப் பட்ட நடவடிக்கை எடுக்கத்தக்க வகையிலமைந்த விசாரணை முடிவு அறிக்கைகளின் எண்ணிக்கை	113

(5) கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகள் நீங்கலாக பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்ட ஏனைய வழக்குகளின் எண்ணிக்கை 8

(6) நீதி மன்றத்தில் வழக்குத் தொடரக் கருதியவற்றின் எண்ணிக்கை 9

(7) தண்டனை விதித்த தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2

(8) பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் நடுவர் மன்ற நடவடிக்கையும் துறை நடவடிக்கையும் எடுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 22

(9) கண்ணிவைத்துப் பிடித்தல் 56

(10) கண்ணிவைத்துப் பிடித்த வழக்குகளில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட வழக்கு இனங்களின் எண்ணிக்கை 57

(11) தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 42

(12) கண்ணிவைத்துப் பிடித்த இனங்களில் நடுவர் மன்ற நடவடிக்கை அல்லது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 13

சிவில் பணிப்பயிற்சி.

இம்மாநிலத்தில் பயிற்சித் திட்டங்கள் அனைத்திற்கும் வழிகாட்டுதல், மேற்பார்வையிடுதல், அவற்றிற்குப் பொறுப்பு வகிப்பது ஆகியவற்றிற்காக 1977 ஆம் ஆண்டில் தனிப் பயிற்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பயிற்சிப் பிரிவுக்கு பணியாளர்-நிர்வாகச் சீர்திருத்தத் துறை பயிற்சி ஆணையாளர் அரசுச் செயலாளர் தலைமை வகிக்கிறார்.

பெரியார் மாவட்டம், பவானிசாகரில் அமைக்கப்பட்டுள்ள சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் பின்வரும் பயிற்சிகளை அளிக்கிறது :—

(1) தமிழ்நாடு நிர்வாகப்பணி தமிழ்நாடு நீதித்துறை நிர்வாகப் பணியைச் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு இரு திங்கள் கால அளவிற்கு அடிப்படைப் பயிற்சியளிக்கிறது.

(2) நிர்வாகப் பணிகளைச் செய்து பொது மக்களோடு எப்போதும் தொடர்பு கொண்டுவரும் மாநிலப் பணி II ஆம் நிலை அதிகாரிகளுக்கு இரு திங்கள் கால அளவிற்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கிறது.

(3) நிர்வாகப் பணிகளைச் செய்யாவிடினும், சிறு அலுவலகங்களை நடத்துதல், செலவு செய்தல், தணிக்கைக்கு உட்படுதல், பணியாளர்களை நிர்வகித்தல் முதலியவற்றைச் செய்துவரும் மாநிலப் பணி I ஆம் நிலை அதிகாரிகளுக்கு 3 வார கால அளவிற்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கிறது.

(4) வணிக வரித்துறை அதிகாரிகளுக்கு 2 வார கால அளவிற்கு நினைவுகூர் பயிற்சி அளிக்கிறது.

பவானிசாகர் சிவில் பணிகள் பயிற்சி நிறுவனத்தில் 31—3—1980 ஆம் நாள் வரை 6433 இளநிலை உதவியாளர்கள், 571 தொகுதி அதிகாரிகள், 355 அதிகாரிகள் வணிகவரித்துறையைச் சேர்ந்த 303 இளநிலை உதவியாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. துணை வட்டாட்சியர்களுக்கான நினைவுகூர் பயிற்சி விரைவில் தொடங்கவிருக்கிறது.

திட்டப் பணிகளின் கீழ் உள்ள பல்வேறு பயிற்சி நிறுவனங்களில் இந்திய அரசின் பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்தத் துறையால் நடத்தப்படும் பல்வேறு பயிற்சிகள், திட்டங்கள், கருத்தரங்குகள் ஆய்வரங்குகள் முதலியவற்றிற்கும் புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்களால் அளிக்கப்படும் பயிற்சிகளுக்கும் பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்தத்துறை (பயிற்சி) அதிகாரிகளை அனுப்புகிறது.

தலைமைச் செயலகத்திலுள்ள பிரிவு அலுவலர்கள் கணக்குகள் எழுதும் பயிற்சி பெறுவதற்காக ஆறு திங்களுக்கு இத்துறையல் முகமையில் அனுப்பப் படுகின்றனர்.

MARA PUBLIC

தலைமைச் செயலகத்திலுள்ள சார்புச் செயலாளர் ஒருவருக்கும் பிரிவு அலுவலர்கள் இருவருக்கும் இரு திங்கள் கால அளவுக்குச் சட்டப் பயிற்சி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தலைமைச் செயலகத்திலுள்ள பிரிவு அலுவலர்கள் இருவர் சட்டப் பயிற்சி பெறுவதற்காக செங்கல்பட்டு மாவட்டத் திற்கு முகமையில் அனுப்பப்பட்டனர்.

தலைமைச் செயலகத்தின் இளநிலை உதவியாளர்களுக்கும், நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவியாளர்களுக்கும் தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் 2 திங்கள் கால அளவிற்கு அடிப்படைப் பயிற்சியையும் இத் துறை அளித்து வருகிறது. அதிகாரிகளின் ஊர்தி ஓட்டுநர்கள், தட்டச்சர் கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியோருக்குப் பகுதிநேர பயிற்சி வகுப்பும் நடத்தப்படுகிறது.

அதிகாரிகளை பயிற்சிக்காக முகமையில் வெளி நாடுகளுக்கு அனுப்புதல், அயலிடப் பணிகளுக்கு அனுப்புதல் தொடர்பானவை குறித்து, தமிழ்நாட்டில் தகுதிகாண் பணித்தரத்திலுள்ள ஐ.ஏ.எஸ்., (I.A.S.) அதிகாரிகளுக்கு களப் பயிற்சி, மேஜிஸ்டிரேட்டு பயிற்சி அளித்தல் ஆகியவை இத்துறையின் பணி களில் அடங்கும்.

அரசு அலுவலர்களுக்கும், பொதுத்துறையினைச் சேர்ந்த பணியாளர் களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக, மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ் மெண்ட் எனப்படும் பயிற்சி நிலையம் ஒன்றினை அண்மையில் அரசு அமைத் துள்ளது. அரசு இணைச் செயலாளர் பதவித் தரத்தில் உள்ள தனி அதிகாரி ஒருவரின் கீழ் இது செயல்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பல்கலைக் கழக கலையியற் குழு உறுப்பினர்கள் பெங்களூரில் உள்ள இந்தியன், இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட்டில் (Indian Institute of Management) பெற்றவராவர். மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட் பின்வரும் ஐந்து பயிற்சி வகுப்புகளை இதுவரை நடத்தி வந்துள்ளது :—

1. அளவு குறித்த தொழில் நுட்ப யுத்தி.
2. பொருள்கள் குறித்துத் திட்டமிடுதல், கொள்முதல் செய்தல், கட்டுப் படுத்துதல்.

3. ஆட்படை ஊற்ற நிர்வாகம்—பணியாளர் நிர்வாகம்

4. பொது நிர்வாகத்தில் முக்கிய பகுதிகள்

5. பிரசசினைகள் குறித்த பகுப்பாய்வு—அளவு குறித்த அணுகுமுறை.

ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம்.

தமிழ் நாடு அரசு சிப்பந்தியின் மேல் அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறையினரின் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியின் சிபாரிசின் ஒப்படைக்கப் பட்ட விசாரணைகளை 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு சிவில் பணியாளர் (ஒழுங்கு நடவடிக்கைகள் தனி நீதிமன்ற விதிகளின்) கீழ் ஒழுங்கு நடவடிக்கை ஆணையரும் துறை ஆணையரும் விசாரணைச் செய்வர்.

ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் விசாரணைச் செய்பவை :

1. லஞ்ச ஒழிப்புத் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு விழிப்பு ஆணையரால் சிபாரிசு செய்யப்பட்ட அனைத்து அ, ஆ பிரிவு அலுவலர்களின் இலஞ்சம் ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணைகள்.

2. அரசினரின் முன் அனுமதி பெற்று, துறையினரால் அரசினரின் அ, ஆ பிரிவு அலுவலர்களின் மீது தொடரப்பட்ட கடுமையான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள்.

3. அரசினரின் பதிவுறா அலுவலர்கள் (இ, ஈ பிரிவினர்) பதிவு பெற்ற (அ, ஆ பிரிவு) அலுவலர்களோடு கூட்டாக சம்பந்தப்பட்ட மேற்கூறிய 1ல் மற்றும் 2ல் கண்ட விசாரணைகள்.

ஒழுங்கு நடவடிக்கை துணை ஆணையர் விசாரணை செய்பவை :

1. லஞ்ச ஒழிப்புத் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு விழிப்பு ஆணையரால் சிபாரிசு செய்யப்பட்ட அனைத்து இ, ஈ பிரிவு அலுவலர்களின் இலஞ்ச ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணைகள்.

2. துறையினரே கண்டு பிடித்த அரசினரின் இ. ஈ பிரிவு அலுவலர்களின் (பதிவுறா அலுவலர்களின்) மீதான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள்.

அறிக்கை ஆண்டில் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர்; துணை ஆணையர் (செய்யும் பணி விவரம் வருமாறு) :

		ஆணையர்.	துணை ஆணையர்.
1.	1-4-79-ல் முடிவுறா விசாரணைகள்.	106	59
2.	1979-80-ல் கிடைக்கப் பெற்றவை (1-4-79 முதல் 31-3-80 வரை).	117	153
3.	மொத்த எண்ணிக்கை.	223	212
4.	முடிவு செய்யப்பட்டவைகள்	109	26
5.	1-4-80-ல் முடிவுறா விசாரணைகள்.	114	186

ஆணையர் அவர்களால் முடிவு செய்யப்பட்ட 109 விசாரணைகளில் துணை ஆணையரின் விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்ட 64-ம் அடங்கும்.

அத்தியாயம் XV.

பொதுத் துறை

முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு.

முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் குறைகளை தீர்ப்பதே இப்பிரிவின் முழு நோக்கமாகும். இவ்வலுவலகம் தமிழக அரசின் தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு முதல் மந்திரியின் அலுவலகத்தின் ஒரு பகுதியாக ஒரு தனி அலுவரின் கீழ் இரண்டு பிரிவுகளாக இயங்கி வருகிறது. குறைகள் அடங்கிய மனுக்கள், முதலமைச்சர், முதலமைச்சரின் செயலர், முதலமைச்சரின் அரசிதழ் பதிவு பெற்ற நேரமுக உதவியாளர், மற்றும் தனி அலுவலர் அவர்களால் நேர்முகமாகவும், அஞ்சல் மூலமாகவும் பெறப்பட்டு அம்மனுக்கள் எந்த அதிகாரிகளால் தீர்க்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு அனுப்பப்படுகிறது "குறைகள் நிவர்த்தி செய்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டில்" மக்கள் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் குறிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் மாநிலம் 16—2—1980 முதல் 31—3—1980 வரை ஜனாதிபதி ஆட்சியில் இருந்தபோது ஆளுநரின் சிறப்பு அலுவலகமாக செயல்பட்டது.

1—4—1979 முதல் 31—3—1980 வரை 1,04,313 மனுக்கள் கிடைக்கப் பெற்று முடிக்கப் பட்டன.

புகார் பிரிவு.

பொது மக்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் குறைகளைத் தீர்க்கும் பொறுப்பு துறைச் செயலாளர்களையே சாரும். தலைமைச் செயலாளரும் மத்திய அமைச்சர்கள். பிரதம அமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பப்படும் முறையீடுகளை, முறையீட்டுப் பிரிவு தொடர்ந்து கவனித்து வருகிறது.

சம்பள பாக்கி, பயணப்படி, ஊதிய உயர்வு பாக்கிகள், ஓய்வூதியப் பயனை முடிவு செய்தல், ஆகியவை தொடர்பான முறையீட்டு மனுக்களும், பதவி

உயர்வு பணியில் மீண்டும் அமர்த்துதல், சம்பளத்தையும் பணிமூப்பு நிலையையும் நிர்ணயித்தல் முதலியவை தொடர்பான மனுக்களும் பொதுவாக அரசுப் பணியாளர்களிடமிருந்து வரப்பெற்றன. இவை தவிர, புறம்போக்கு நிலங்கள் குறித்த பட்டாக்கள் வழங்கும்படியும் அரிசனங்களுக்கும் ஏனைய பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் வீடு கட்டும் மனைகள் ஒதுக்கித் தரும்படியும் உயிர் பாதுகாப்பு அளிக்கும்படியும் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்படியும், நெல்லரைக்கும் ஆலைகள், தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்கும்படியும் சிறு அளவில் வியாபாரம் நடத்துவதற்குக் கடன் வழங்கும்படியும் வேலை வாய்ப்பு முதலியன அளிக்கும்படியும் கோரி பொதுமக்களிடமிருந்து மனுக்கள் வந்தன. தலைமைச் செயலகத்தில் உள்ள முறையீட்டுப் பிரிவுக்கு 1979-80 ஆம் ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள் மற்றும் முடிவு செய்யப்பட்ட மனுக்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

வந்த மனுக்களின் எண்ணிக்கை.	நடவடிக்கை எடுக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை.
22,583	22,583

முன்னாள் ராணுவ வீரர் இயக்குனர் அலுவலகம்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல இயக்கம் முன்னாள் படைவீரர் மற்றும் பணியிலுள்ளோர் குடும்ப நலன்களைப் பேணுவதுடன் போரில் விழுப்புண் பெற்றோர் மற்றும் உயிர்த் தியாகம் செய்தோர் கைம் பெண்களின் புனரமைப்பிற்கெனவும் பாடுபட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதி :

இந்நிதி மேதகு தமிழ்நாடு ஆளுநரை தலைவராகக் கொண்ட மேலாண்மை குழு ஒன்றால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் தேவைக்கேற்ப கடனுதவி, கல்வி ஆதாரச் சம்பளம் போன்ற உதவிகள் வழங்கப்படுவதுடன் போரில்

உயிரிழந்தோர் கைம் பெண்களுக்கு வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம் போன்ற இன்னோரன்ன நிதியுதவிகளும் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு இந்நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதியுதவி குறித்த விபரங்கள் அடியிற் குறிப்பிடப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	வழங்கப்பட்ட உதவி குறித்த விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	தொகை.
1.	1971-ம் ஆண்டில் நடந்த இந்திய பாகிஸ்தான் போரில் உயிரிழந்தோர் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை மற்றும் புத்தகங்கள்.	40	15,605·00
2.	கல்வி உபகாரச் சம்பளம் மற்றும் பயிற்சி உதவிப் பணம்.	1,104	3,83,239·63
3.	வீடு கட்ட மானியம்.	8	21,825·00
4.	திருமண மானியம்.	8	4,000·00
5.	வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம்.	137	1,20,500·00
6.	வருடாந்திர வாழ்க்கைச் செலவுப் படி.	81	50,400·00
		1,378	5,95,569.63

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி:

தமிழ் நாட்டில் உள்ள முன்னாள் படை வீரர்/அவரைச் சார்ந்தோர் மறு வாழ்வுத் திட்டங்களுக்கென இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் டிசம்பர் 7-ம் நாள் கொண்டாடப்படும் கொடி நாள் வசூல் தொகையே

இந்நிதியின் மூலதனமாகும். 31—3—1980 நாளைய கணக்குப்படி இந்நிதியின் மூலதனம் காலக்கெடு வைப்புத் தொகையாக ரூபாய் 21,47,000 மற்றும் கையிருப்புத் தொகையாக ரூபாய் 1,39,651.55 வும் ஆகும்.

இந்நிதி தமிழ்நாடு அரசு பொது (பணியாளர்) துறை துணைச் செயலாளர் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு ஒன்றினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் புனர் வாழ்வுக்கென வழங்கப்பட்ட பல்வேறு நிதியுதவி குறித்து விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

வரிசை எண்.	வழங்கப்பட்ட நிதியுதவி விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை.
1.	எவ்வித வருவாய் வாய்ப்புமின்றி வறுமையில் உழலும் முன்னாள் படைவீரர் கைம்பெண்களுக்கு வாழ்க்கைச் செலவிற்கென மாதந்திர மானியம்.	371	1,44,588·00
2.	ஊனமுற்ற முன்னாள் படைவீரர் மற்றும் கைம்பெண்கள் புனர் வாழ்விற்கென சிறு தொழில் வியாபாரம் செய்தற் பொருட்டு மொத்த மானியங்கள்.	122	47,205·01
3.	எலும்புருக்கி / தொழு நோயால் வாடும் முன்னாள் படைவீரருக்கு சம்மந்தப்பட்ட மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் காலத்திற்கு கைச்செலவுப் பணம்.	193	10,237·05
4.	மிகவும் வறுமையிலுள்ள முன்னாள் படைவீரர் அவரைச் சார்ந்தோர் உடனடி துயர் துடைக்கும் பொருட்டு மாவட்ட		

	முப்படை வீரர் வாரியங்களாலும் இயக்கத்தாலும் வழங்கப்பட்ட உடனடி நிவாரணத் தொகை.	1,812	44,457·20
5.	முன்னாள் படைவீரர் பெண் மகவு திருமணத்திற்கு மானியம்.	502	1,75,700·00
6.	இறக்கும் முன்னாள் படைவீரர் ஈமச்சடங்குக்கு மானியம்.	399	39,900·00
7.	வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/அவர்தம் கைம்பெண்களுக்கு நிவாரண உதவி.	7	2,200·00
8.	பள்ளிகள் / கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரரின் சிறாருக்குக் கல்வி உபகாரச் சம்பளம்.	1,224	1,00,757·00
9.	மாவட்ட முப்படை வீரர் வாரியங்களில் இயங்கி வரும் தையற் பயிலகங்களில் முன்னாள் படைவீரர் அவரைச் சார்ந்த பெண்களுக்கும் கைம்பெண்களுக்கும் பயிற்சி.		1,41,120·00
10.	தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி நிலையங்கள்.		5,125·00
11.	படைவீரர்கள் கடைகள் (ஜெய் ஜவான் கடைகள்)		1,41,649.00
	மொத்தம் ..	4,630	8,52,938·26

மாவட்டங்களில் இயங்கி வரும் மாவட்ட முப்படை வீரர் வாரியங்கள் முன்னாள் படைவீரர் அவரைச் சார்ந்தோருக்கு இராணுவ மத்திய நல நிதி, இந்திய செஞ்சிலுவை சங்கம் மற்றும் பல்வேறு படைப்பிரிவு நிதிகளிலிருந்து ரூபாய் 6,01,565.75யினை மானியமாகப் பெற்றுள்ளன.

நிக்கோபார் தீவுகளில் முன்னாள் படைவீரர் குடும்பங்கள் குடியேற்றம் :

இத்திட்டத்தின் கீழ் 22—4—1980 அன்று தமிழ் நாட்டைச் சார்ந்த 8 முன்னாள் படைவீரர் குடும்பங்கள் மற்ற மாநிலங்களிலுள்ள 18 முன்னாள் படைவீரர் குடும்பங்களுடன் நிக்கோபார் தீவுகளில் அவர்கள் புனரமைப்பிற்கென குடியமர்த்தப்பட்டனர். இவ்வியக்ககத்தின் பெருமுயற்சியால் இது வரை தமிழ் நாட்டிலிருந்து 68 குடும்பங்கள் நிக்கோபார் தீவுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் படைவீரருக்கு தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி :

முன்னாள் படை வீரர் விரைந்து வேலைவாய்ப்புப் பெற உதவும் பொருட்டு இவ்வியக்ககத்தால் சென்னையிலுள்ள டேட்டா மேட்டிக்ஸ் (Datamatics) தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தில் அவர்களுக்கு தொலைகாட்சி தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்மூன்று மாத கால பயிற்சி வகுப்பில் தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 17 முன்னாள் படைவீரர்கள் பயிற்சி பெற்று பயன் பெற்றனர். இத்திட்டத்திற்கு நிதியுதவி மத்திய அரசின் மத்திய புனரமைப்பு இயக்ககத்தால் வழங்கப்பட்டது.

முப்படைக்கும் ஆள் தேர்வு :

முன்னாள் படைவீரர் நலத்துறை 1979-80-ம் ஆண்டில் ஒவ்வொன்றும் 100 இளைஞர்களைக் கொண்ட 7 பயிற்சி முகாம்களைத் துவக்கியது. இவ்விளைஞர்களுக்கு படையில் சேருவதற்கென தேர்வில் வெற்றி பெறுவதற்கு என சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட 700 இளைஞர்களில் 555 பேர் (79 விழக்காடு) வெவ்வேறு படைப்பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தேர்தல்கள்.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் ஆணையாளர்—செயலாளர் தலைமையில் இயங்கும். பொதுத் (தேர்தல்கள்) துறை, நாடாளுமன்றம், சட்டப் பேரவை, சட்ட மேலவை ஆகியவற்றிற்குரிய தேர்தல்களை நடத்தும் பொறுப்பை வகித்தது. துணைத் தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் துணைச் செயலாளர் ஒருவரும் இவருக்கு உதவி

பாக பணியாற்றி வந்தார். இத்தேர்தல் பணி, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களாலும் சென்னை மாநகராட்சியில் ஆணையாராலும் கவனிக்கப் படுகிறது.

வாக்களர் பட்டியல்கள் (நாடாளுமன்றம்; சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றிற்குரியவை).

எண் 30. நாகப்பட்டினம் (தனி) நாடாளுமன்ற தொகுதி எண் 31. தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதி ஆகியவற்றுக்குரிய வாக்காளர் பட்டியல் களின் இறுதித் திருத்தப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, அவை 10—5—1979 அன்று இறுதியாக வெளியிடப்பட்டன. திரு A.V.P. ஆசைத்தம்பி அவர்கள் இறந்துவிட்டபடியால் எண் 1. சென்னை வடக்கு நாடாளுமன்றத் தொகுதிக் கான வாக்காளர் பட்டியல்களை நன்கு திருத்தியமைக்கும் பணி மேற் கொள்ளப்பட்டு, வாக்காளர் பட்டியல் கலைக்கப்பட்டதாலும், தேர்தல் ஆணைக்குழு பிறப்பித்த ஆணைகளின்படியும், எண் 1. சென்னை வடக்குத் தொகுதி, எண் 30. நாகப்பட்டினம் (தனி) தொகுதி, எண் 31. தஞ்சாவூர் தொகுதி தவிர, பிற நாடாளுமன்றத் தொகுதிகள் அனைத்திற்குப் உரிய வாக்காளர் பட்டியல்களைச் சிறப்புற திருத்தியமைக்கும் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. பின்னர், திருத்தியமைக்கப்பட்ட அந்த வாக்காளர் பட்டியல்களின் கையெழுத்துப்படிகள் 19—10—1979 அன்று இறுதியாக வெளியிடப்பட்டன. 3—11—1979 வரையில் கோரிக்கைகளும் மறுப்புரை களும் வரப்பெற்று முடிவு செய்யப்பட்டன. இறுதி துணை வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பெற்று இறுதியாக 30—11—1979 அன்று வெளியிடப்பட்டது.

1980 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை கலைக் கப்பட்டதாலும், இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவுகளின்படியும் 1—1—1980 ஐத் தகுதிப்பெறும் நாளாகக் கொண்டு அனைத்துப் பேரவைத் தொகுதிகளுக்குமான வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, வாக்குச்சாவடி வாரியான ஒருங்கிணைந்த வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. வாக்குச் சாவடி வாரியான வாக்காளர் பட்டியலின் கையெழுத்துப்படி இறுதியாக 22—3—1980 அன்று வெளியிடப் பட்டது.

1980 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் ஆகியவை தொடர்பாக இராணுவப் படை வீரர் வாக்காளர் பட்டியலின் இறுதிப் பகுதி ஒன்று சேர்க்கப்பட்டு துணைப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்த வாக்காளர் பட்டியல் 30—11—1979 அன்றும் 22—3—1980 அன்றும் முறையே வெளியிடப்பட்டது.

(1) தமிழ்நாடு கிழக்கு, மத்திய பட்டதாரிகள் தொகுதி, (2) தமிழ்நாடு மேற்கு, மத்திய பட்டதாரிகள் தொகுதி, (3) சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி, (4) மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி ஆகியவற்றிற்குரிய வாக்காளர் பட்டியல்கள் திருத்தியமைக்கப்பட்டு அவை 29—2—1980 அன்று இறுதியாக வெளியிடப்பட்டன.

தேர்தல்களை நடத்தல் :

இடைத்தேர்தல்—ஜுன் 1979.

எண் 31. தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. S. D. சோமசுந்தரம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதாலும், எண் 30. நாகப்பட்டினம் (தனி) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. S.G. முருகையன் கொலை செய்யப்பட்டதாலும் ஏற்பட்ட பதவிக் காலியிடங்களை நிரப்பும் பொருட்டு 1979 ஜுன் திங்களில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றன. வாக்குப்பதிவு 17—6—1979 அன்று நடைபெற்றது. வாக்குச்சீட்டுகள் 18—6—1979 அன்று எண்ணப்பட்டன. தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதியில் 83 சதவீத வாக்குகளும் நாகப்பட்டினம் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் 83.7 சதவீத வாக்குகளும் பதிவாயின. வாக்குச்சீட்டின் அடிச்சீட்டில் வாக்காளரின் கையெழுத்தையோ அல்லது பெருவிரல் ரேகையையோ பெறுவதும் வாக்குப்பதிவு நடத்தும் நேரத்தை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எனக் குறைத்ததும் இந்த இடைத்தேர்தலில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும்.

1980 சனவரியில் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைக்குரிய பொதுத் தேர்தல்கள்.

1980 சனவரித் திங்களில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலின் போது மொத்தம் 28,102,939 வாக்காளர்கள் இருந்தனர்.

பத்தொன்பது நாடாளுமன்றத் தொகுதிகளுக்குரிய நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 3—1—1980 அன்று நடைபெற்றது. 20, நாடாளுமன்றத் தொகுதிகளுக்குரிய தேர்தல் 6—1—1980 அன்று நடைபெற்றது. 39, நாடாளுமன்றத் தொகுதிகளிலிருந்து மொத்தம் 450 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். வேட்பு மனுக்களை திருப்பி பெறுவதற்குரிய கடைசி நாளுக்குப் பிறகு 248 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். வாக்குச் சீட்டுகள் 6—1—1980 அன்றும் 7—1—1980 அன்றும் எண்ணப்பட்டன. வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சீட்டுகளை எண்ணும் முறை மேற் கொள்ளப்பட்டது. மொத்தம் 18,767,808 வாக்காளர்கள் வாக்களித்தனர். 66.78 சதவிதம் வாக்குகள் பதிவாயின. 39, நாடாளுமன்றத் தொகுதிகளுக் குரிய தேர்தல் முடிவுகள் 8—1—1980 அன்று அதிகாலையில் அறிவிக்கப் பட்டன. தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் கட்சி வாரியான நிலைமை வருமாறு :—

கட்சியின் பெயர். (1)	வெற்றி பெற்ற இடங்கள். (2)
1. இந்திய தேசிய காங்கிரஸ்(இ)	20
2. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	2
3. திராவிட முன்னேற்றக் கழகம்	16
4. சுயேச்சை	1 *
	39

(* இந்திய யூனியன் முஸ்லீம் லீக்)

தமிழ்நாடு சட்ட பேரவைக்குரிய இடைத்தேர்தல் :

உறுப்பினர்கள் இறந்ததால் ஏற்பட்ட பதவியிடங்களுக்கு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுடன் 91, பனைமரத்துப் பட்டி 138, உசிலம்பட்டி 238, விளவன்கோடு சட்ட பேரவைத் தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடை பெற்றது. மொத்தம் 40 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். தேர்தல் மனுக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 20 பேர்

விலகிக் கொண்டபின், மீதி 20 பேர் தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் கட்சி வாரியான நிலைமை வருமாறு :—

(1) 91. பனைமரத்துப்பட்டி—அ.இ.அ.தி.மு.க.

(2) 138. உசிலம்பட்டி—ஃபார்வடு பிளாக்.

(3) 233 விளவங்கோடு—இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட்.

தமிழ்நாடு சட்ட பேரவைக் கலைக்கப்பட்டது.

ஆறாம் தமிழ்நாடு சட்ட பேரவை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாள் கலைக்கப்பட்டது. பின்னர் இம்மாநிலம் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இருந்தது.

பார்வையாளர்கள்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது நாடாளுமன்றத் தொகுதி ஒன்றில் அடங்கும் 3 சட்ட பேரவைத் தொகுதிக்கு ஒருவர் என்னும் விதத்தில் மாநில அரசின் கீழ் பணிபுரியும் 78 முதநிலை அதிகாரிகள் தேர்தல் ஆணைக் குழுவின் பார்வையாளர்களாக புதிய திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டனர்.

தேர்தல் மனு.

1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்காகத் தாரா மங்கலம் சட்ட பேரவைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட உரிமை வழக்கு மேல் முறையீட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

செய்தி—மக்கள் தொடர்பு.

பொது

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் தலைவர் அலுவல் முறையில் பொதுத் துறையின் கூடுதல் செயலாளராக இருந்தார். இத்துறை தலைமை யிடத்தில் துணை இயக்குநர்கள் மூவரையும் போதிய அளவு பணியாளர்களை யும் கொண்டு தொடர்ந்து செயலாற்றியது. இயக்குநர் அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவு, தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டது. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின்

கீழ் பணிபுரியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்கள் (செய்தி-மக்கள் தொடர்பு) இத்துறையின் பணிகளைச் செய்தனர். அரசின் கொள்கைகள், வளர்ச்சித் திட்டங்கள் அரசு ஆற்றியுள்ள சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே எடுத்துவைத்தும் மக்களிடையே இவற்றிற்கு ஏற்பட்டுள்ள ஆதரவு/எதிர்ப்பை அரசிற்குத் தெரிவித்தும் இத்துறை பணியாற்றியது.

நடவடிக்கைகள்.

(அ) பத்திரிகைகளுக்குச் செய்திக் குறிப்புகள் வெளியிடல், பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளை தொகுத்தல், அரசுத் துறைகளின் விளம்பரங்களை வெளியிடல்.

நடப்பாண்டில், பத்திரிகைகளுக்கு 698 செய்திகள், 37 குறிப்புகள் வெளியிடப்பட்டன. 121 முறை பத்திரிகையாளர்களின் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டன. புகைப் படப் பிரிவு 1,075 நிகழ்ச்சிகளைப் புகைப் படமெடுத்துள்ளது 10,760 புகைப்படங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளது. அவைகள் எத்துறை சம்பந்தப்பட்டதோ அத்துறையின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. பத்திரிகைகளில் வெளிவந்த 24,645 செய்திக் குறிப்புக்கள் முதலமைச்சரின் அலுவலகத்திற்கும் ஏனைய அமைச்சர்களின் அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டன. இயக்குநர் அலுவலகம் 38,684 விளம்பரங்களைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டது. இவ் விளம்பரங்களை வெளியிடுவதற்காக ரூ. 1,21,10,000 ரூபாய் செல்விடப் பட்டது. விளம்பரப் பணியில் ஈடுபட்டுள்ள 12 நிறுவனங்களின் பணி இதற்காக பயன் படுத்தப்பட்டது.

(ஆ) வெளியீடுகள்.

அரசுச் செய்திகளையும் நடவடிக்கைகளையும் வெளியிடுவதற்காக தொடங்கப்பட்ட தமிழ் நாடு அரசின் செய்தி இதழான "தமிழரசு" என்னும் இதழ் தொடர்ந்து வெளியிடப்பட்டது. இதன் தமிழ்ப் பதிப்பு திங்கள் இருமுறையும், ஆங்கிலப் பதிப்பு திங்கள்தோறும் வெளியிடப்பட்டன. தமிழ்ப் பதிப்பின் சாராசரி விற்பனை 47,500 இதழ்களும் ஆங்கிலப் பதிப்பின் சராசரி விற்பனை 3,000 இதழ்களும் ஆகும். நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய

தமிழரசு அச்சகத்தில் இச்செய்தி இதழ்கள் அச்சிடப்பட்டன. (1) திட்டம் (திங்கள் இருமுறை), (2) திருக்கோயில் (திங்கள்தோறும்), (3) உழைப்பவர் உலகம் (திங்கள் தோறும்), (4) மின் குடும்பம், (5) தமிழகக் கல்வி (காலாண்டுக்கு ஒரு முறை) போன்ற இதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டன.

(இ) பொருட்காட்சிகள்.

பின்வரும் மூன்று பெரும் பொருட்காட்சிகளை இயக்குநர் அலுவலகம் ஏற்பாடு செய்து நடத்தியது:—

(1) 1979 ஆம் ஆண்டு சூலை—ஆகஸ்டு திங்களில் சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி

(2) 1979 ஆம் ஆண்டு சூன்—சூலைத் திங்களில் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி.

(3) 1980 ஆம் ஆண்டு மார்ச்சு—ஏப்ரல் திங்களில் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி.

2—10—1979 ஆம் நாள் முதல் 8—10—1979 ஆம் நாள் வரையிலும் நடைபெற்ற காந்தி பிறந்தநாள் விழாவில் இவ்வியக்குநர் அலுவலகம் பங்கேற்றுக் கொண்டது.

திரைப்படப் பிரிவு.

நடப்பாண்டில் ரூ. 19,00,271.22 செலவில் 14 செய்திச் சுருள்களும் 6 செய்தித் திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டன. இத்திரைப் படங்கள் திரையரங்குகளில் திரையிடப்பட்டதில் ரூபாய் 2,01,281.08 வருவாய் கிடைத்தது.

(ஈ) தமிழ்நாடு திரைப்பட; தொலைக்காட்சி பயிற்சிக் கல்லூரி.

அரசுச் சார்பற்ற தலைவர் ஒருவரின்கீழ் தமிழ்நாடு திரைப்பட தொலைக் காட்சிப் பயிற்சி கல்லூரி தொடர்ந்து இயங்கியது.

இக்கல்லூரியில் பின் வரும் பட்டயத் தகுதிக் கல்வி பயிற்றுவிக்கப் பட்டன:—

தொடர் எண்.	பாடமுறை	கால அளவு	சேர்த்துக் கொள்ளப் படும் மாண வர்களின் எண்ணிக்கை.
1.	திரைப்படம் இயக்குதல் திரைக் கதை வசனம் எழுதுதல்.	3 ஆண்டுகள்	10
2.	திரைப்படத் தொழிலியல்	3 ,,	10
3.	ஒலிப்பதிவு, ஒலிப்பதிவு பொறியியல் பணி	3 ,,	10
4.	திரைப்படச் சுருள்களை கழுவுதல்	3 ,,	5
3.	திரைப்படத் தொகுப்பு	2 ,,	5
6.	நடிப்பு (சான்றிதழ் தகுதி)	1 ஆண்டு	10 ஆண்கள் 10 பெண்கள்

இக்கல்லூரியில் பயன்படுத்துவதற்காக நடப்பாண்டில் 4,75,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு "ஆரிபிளக்கள்" புகைப்படமெடுக்கும் கருவியும் (Arriflex C mara)திரைப்பட தொகுப்புக்கு உதவுகின்ற ரூபாய் 1,00000 மதிப்புள்ள "ரோட்டா சிங்க்" எனப்படும் திரைப்பட ஒலி, ஒளி ஒத்திசைவுத் தொகுப்புச் சாதனமும் வாங்கப்பட்டன. இக்கல்லூரிக் கட்டிடத்தில் திரைப்படம் எடுப் பதற்கான தளங்கள் (Fl r) இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று மாணவர்கள் பயன்படுத்தினர். மற்றொன்று தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டது. இக்கல்லூரிக்காகிய செலவு ரூ. 13,39,000 இதற்குக் கிடைத்த வருவாய் ரூ. 1,20,600 ஆகும்.

(உ) திரையரங்குகள், வள்ளுவர் கோட்டம்.

அரசுக்குச் சொந்தமான சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம் வேலூரிலுள்ள அண்ணா கலை அரங்கம் ஆகியவை தொடர்ந்து இயங்கின. திரைப்படக் காட்சிகள் நடைபெற்றதோடு பொது நிகழ்ச்சிகளும் இத்திரை யரங்குகளில் நடைபெற்றன. மேலும் இவை பொதுமக்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காகவும் வாடகைக்கு விடப்பட்டன. சென்னையில் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டத்தை இவ்வாண்டில் பெரு மளவில் பார்வையாளர்கள் தொடர்ந்து பார்வையிட்டனர்.

தகவல் நிலையங்கள்.—சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள தகவல் நிலையங்கள் தொடர்ந்து இயங்கின. குறித்த கால வெளியீடுகள், துண்டு வெளியீடுகள், பல்வேறு பொருள்கள் குறித்த புத்தகங்கள் போன்றவை பெருமளவில் இந்நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள நிலையத்தில் சிறுவர்களுக்கான திரைப்படங்கள் முறையாகத் திரையிடப்பட்டன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இந்திய அரசுத் திரைப்படப் பிரிவு போன்றவை வெளியிடும் செய்திச் சுருள்கள் தஞ்சாவூரிலுள்ள தகவல் நிலையத்தில் திரையிடப்பட்டன.

(ஊ) இராஜாஜி மண்டபம் :

பல்வேறு அரசு விழாக்கள், மாநாடுகள், கூட்டங்கள் நடைபெறுவதற்காக இராஜாஜி மண்டபம் ஒதுக்கப்பட்டது. இம்மண்டபம் தனியார் நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டது. சென்னை, மேரினா கடற்கரையிலுள்ள சீரணி அரங்கம் பொதுவாக அரசு பொது நிறுவனங்களும் திறந்த வெளிக் கூட்டங்கள் நடத்துவதற்காக கொடுக்கப்பட்டது.

(எ) அண்ணா நினைவு மண்டபம் :

காஞ்சீபுரத்திலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் விடு நினைவாலயமாகப் பாதுகாக்கும் பொருட்டு இவ்வாண்டில் 2 இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது.

(ஏ) தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் :

1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாளன்று ஈரோட்டில் தொடங்கப்பெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழா 1979-80 ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் வரையிலும் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து கொண்டாடப்பட்டது. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16, 17, 20 ஆம் நாட்களில் சென்னையில் நிறைவு விழா நடைபெற்றது. (i) 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் வரை சென்னையிலும் (ii) 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 12 ஆம் நாள் முதல், பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் வரை திருச்சிராப்பள்ளியிலும் தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஒலி—ஒளிக் காட்சி நடைபெற்றது.

பிறந்த நாள் விழாக்கள் :

காமராசர், அண்ணா, இராஜாஜி ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களும், சுதந்திர தின விழாவும் மற்றும் ஏனைய 21 விழாக்களும் இவ்வாண்டில் இவ்வியக்குநர் அலுவலகத்தால் கொண்டாடப்பட்டன.

சுற்றுலா.

பொது.—சுற்றுலாத் துறை, சுற்றுலாத்துறை இயக்குநர் பொதுத் (சுற்றுலா) துறை அலுவல் முறையிலான அரசு கிளைச் செயலாளரின் கட்டுப் பாட்டின் கீழ் தொடர்ந்து செயல்பட்டது. இயக்குநருக்கு உதவியாக, துணை இயக்குநர் ஒருவரும், உதவி இயக்குநர் ஒருவரும் இருந்தனர். தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியாக சுற்றுலாத் துறை இயக்குநர் அலுவலகம் செயல் பட்டு வந்தது. இம்மாநிலத்தில் சுற்றுலாப் பணியை மேம்படுத்துவது தொடர்பான பணிகளை கவனித்து வந்தது.

சுற்றுலா அலுவலகங்கள், தகவல் மையங்கள் முதலியன.—இவ்வாண்டு சிதம்பரத்தில் சுற்றுலா அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மாமல்ல புரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், உதகமண்டலம் போன்ற இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. மதுரை திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் இரயில்வே சந்திப்புக்களிலும், இராமேஸ் வரம் இரயில்வே நிலையத்திலும் கோடைக்கானல் மலைவாழ் இடம் ஆகிய இடங்களிலும் சுற்றுலா தகவல் மையங்கள் செயல்பட்டு வந்தன. கோடைக் காலங்களில் குற்றாலம், ஏர்க்காடு போன்ற இடங்களில் தற்காலிக சுற்றுலா தகவல் மையங்கள் செயல்பட்டன. பூம்புகாரிலுள்ள (தஞ்சாவூர் மாவட்டம்) சிலப்பதிகாரக் கலைக் கூடமும், பாஞ்சாலம் குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் கோட்டையும் தொடர்ந்து இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இவை ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்தன. சென்னையிலுள்ள இளைஞர் விடுதி, சுற்றுலா இளைஞர்களின் தேவைகளையும் தொடர்ந்து நிறைவு செய்து வந்தன.

நடவடிக்கைகள்.—குறைந்த வருமானமுடைய சுற்றுலாப் பயணிகளுக்காக மாமல்லபுரத்தில் ரூ. 1,81,814 செலவில் ஓய்வுக் கூடம் கட்டும் பணி இவ்வாண் டில் மேற்கொள்ளப்பட்டது. மாமல்லபுரத்தின் இயற்கைச் சூழலையும் எழில்

மிகு பகுதியையும் காக்க இந்த ஆண்டில் 33.95 எக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது. இந்த ஆண்டில், சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் இத்துறை ஒலி—ஒளிக் காட்சி அரங்குகளை அமைத்தது. இத்துறை அனைத்து மாவட்டங்களிலும் பொங்கல் விழாவையும் உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய இடங்களில் கோடை விழாவையும், உதக மண்டமலம், ஏர்க்காட்டில் இலையுதிர் கால விழாவையும் கொண்டாடியது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

பொது.—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அலுவல் சாரா ஒரு வரைத் தலைவராகக் கொண்டு முற்றிலும் மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகச் செயல்பட்டு வந்தது. இக்கழகத்தின் நிர்வாக இயக்குநராக சுற்றுலாத் துறை இயக்குநர் இருந்து வருகிறார்.

சுற்றுலா மாளிகைகள்.—இக்கழகம் பதினான்கு சுற்றுலா மாளிகைகளை பேணி வருகிறது. இந்த ஆண்டில் இராணிப்பேட்டையில் ஒன்றும், உளுந் தூர்பேட்டையில் ஒன்றுமாக இரு சுற்றுலா மாளிகைகளையும் திறந்துள்ளது. கன்னியாகுமரி, மதுரை, கொடைக்கானல், ஏர்க்காடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டு தொடக்க விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்பட்டது.

சுற்றுலா பேருந்துகள்.—இத்துறை சுற்றுலா பேருந்துகளை வைத்து வருகிறது. இவ்வாண்டில் புதிய கவர்ச்சிகரமான சுற்றுலாக்கள் நடத்தப் பட்டன. இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு பெருமளவு அயல் நாட்டுச் செலவாணியை ஈட்டியுள்ளது இவ்வாண்டில், நேரடியாக ஈட்டிய அயல் நாட்டுச் செலவாணித் தொகை ரூ. 18.52 இலட்சமாகும் (2,50,000 அமெரிக்க டாலர்கள்)

கர்நாடிக் உதவித் தொகைகள்.

மறைந்த ஆற்காடு நவாப் சந்ததியினருக்கு வழங்கப்படும் நிதி உதவிக்கு கர்நாடக நிதி உதவி எனப்படும். சென்னை மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் தான் இதனை வழங்கும் அலுவலர் ஆவார். 122 நபர்கள் நிலையாக பண உதவியும் மற்றும் 6 நபர்கள் நிலையில்லா பண உதவியும் பெறுகிறார்கள்.

அறிக்கை ஆண்டில் மொத்தம் ரூ. 1,45,937.08 பண உதவி செய்யப்பட்டது. இவ்வலுவலகத்திலிருந்து பட்டுவாடா செய்யப்படும் உதவிப் பணம் முழுமையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது.

கணக்கெடுப்பு நிறுவனம்.

இந்த ஆண்டில் 1971 ஆம் ஆண்டிற்குரிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய சில பிரசுரிக்கப்படாத வெளியீடுகள் தொடர்பான பணிகள் கவனிக்கப் பட்டன. மக்கள் தொகை கணக்கெடுப்பு அட்டவணைத் தொகுதிகள் "சமூகம், கலாச்சாரம் கருவளம் அட்டவணைகள்", "பொருளாதார அட்டவணைகள்", "இடம் பெயர்ப்பு அட்டவணைகள்" "பொது அறிக்கை பல்வேறு நிலைகளில் அச்சிலிருந்தன. தமிழ்நாடு மக்கள் தொகை வரைபடத் தொகுதிக்கான வரைபடங்களும் வரை படங்களுக்கான குறிப்புகளும் இறுதி ஆய்வு செய்யப்பட்டன. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற் கான கணிசமான பூர்வாங்கப் பணிகள் கவனிக்கப்பட்டன. மக்கள் கணக் கெடுப்புப் பணிக்காக வட்ட வாரியான கிராமங்களின் பட்டியல் தயாரிக்கப் பட்டு அவற்றுக்குத் தனி இட அமைப்பு குறியீடுகளும் கொடுக்கப்பட்டன. இந்தியத் தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் கணக்கெடுப்பு ஆணையாளர் நிர்ணயித்த கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குரிய நகர பகுதிகளின் பட்டியல் முடிவு செய்யப்பட்டன. 1971 ஆம் ஆண்டுப்படியுள்ள நகரக் கூட்டுப் பகுதிகளின் பட்டியல் மறு ஆய்வு செய்யப்பட்டு, மக்கட் தொகை கணக்கெடுப்பதற்காக பிரிவுகளின் தொகுதியுடன் கூடிய நகரக் கூட்டுப் பகுதிகளின் பட்டியல் திருத்தியமைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியல்களை முடிவு செய்வதற்காக 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மாநிலத்தின் சில தெரிந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் 81 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு அட்ட வணைகளின் இரண்டாவது முன் சோதனை நடத்தப்பட்டது. வீட்டு இலக் கங்களை நாளது தேதி வரை சரிப்படுத்தல் முதலியன போன்ற வீடுகளின் பட்டியல் தயாரிக்கும் பணியும் இவ்வாண்டில் கவனிக்கப்பட்டன.

வட்டாரப் படை.

1—12—1979 முதல் 31—1—1980 வரை ஆண்டுப் பயிற்சி முகாம் நடைபெற்றது. அங்கு ஒரே அணியில் பிரதேச இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதுதான் 1979-80 பயிற்சி ஆண்டின் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சியாகும். அதில் நல்ல தரமான பயிற்சியினை இராணுவ வீரர்கள் பெற்றனர். இவ்வறிக்கை ஆண்டில் புதிதாக 96 பேர் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர். ஆள் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக 1980 மார்ச்சில் மேலும் 24 பேர் சேர்க்கப்பட்டனர். கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரையிலுள்ள இராஜேஸ்வரி நகரில் 1—12—1979 முதல் 31—1—1980 வரை ஆண்டுப் பயிற்சி முகாம் நடைபெற்றது. மொத்தம் 575 வீரர்கள் இப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

பிரதேச இராணுவ நாள்.

பிரதேச இராணுவத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவு விழா 1979 நவம்பர் 16, 17 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இராணுவப் படையை ஊக்குவிக்கத் திரளான மக்கள் குழுமியிருந்தனர். கொடி அணி வரிசைக்குப் பிறகு பொது மக்கள் சார்பில் பிரதேச இராணுவப் படைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்தந்த அணியின் மிகச் சிறந்த பிரதேச இராணுவ வீரர்கள் 6 பேருக்கு கைக்கடிகாரங்கள் அளிக்கப்பட்டன.

படைகளிடையே நடத்தப்பட்ட துப்பாக்கி சுடும் திறமைக்கான போட்டியிலும் தென் பிரதேச இராணுவத் தொகுதித் தலைமையிடம் நடத்திய தாக்குப் பிடிக்கும் போட்டியிலும் (Endur nce Tes) பிரதேச இராணுவப் படை முதலாவதாக வந்தது. இந்தியக் கப்பல் படையின் துப்பாக்கிப் பிரிவு 1979 நவம்பரில் மதுக்கரை சரகத்தில் நடத்திய துப்பாக்கி சுடும் பொதுப் போட்டியில் பிரதேச இராணுவப் படை கலந்துகொண்டு இரண்டாவதாக வந்தது. போட்டியில் கலந்து கொண்ட இப்படையைச் சேர்ந்த ஒருவர் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

117 காலாட் படை (பிரதேச இராணுவத்) திருச்சிராப்பள்ளி புதியவர்களுக்குப் பயிற்சி.

புதிதாக 70 பேர் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு 1979 செப்டம்பர்-நவம்பரில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்குப் பிறகு அவர்கள் படையின் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஆண்டுப் பயிற்சி முகாம்.—திருச்சிராப்பள்ளி காஜாமலை திடலில் ஆண்டுப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 90 சதவீதத்தினர் கலந்து கொண்டனர். எட்டு கிலோ மீட்டர் தாக்குப் பிடிக்கும் போட்டி நடந்தது. இப்போட்டியில் முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாக வந்தவர்களுக்கு கைக்கடிகாரங்கள் பரிசளிக்கப்பட்டன.

பிரதேச இராணுவப் படை நாள் கொண்டாட்டம்.

பிரதேச இராணுவப் படை நாள் 18—11—1979 அன்று கொண்டாடப்பட்டது. அப்போது கண்கவரும் அணிவகுப்பு நடைபெற்றது.

பிரதேச இராணுவப் படைப் பொருட்காட்சி.—பொருட்காட்சியில் இடம் பெற்ற படைக்கலங்கள் காட்சிக் கூடமும், சைகைகள் காட்சிக் கூடமும் மக்களை பெரிதும் கவர்ந்தன. பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றன.

பொது மக்களின் பங்கு.—திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் 15—11—1979-ல் படை வீரர்களை வரவேற்று சிற்றுண்டியளித்து மகிழ்வித்தது. கமாண்டிங் ஆபீஸர் லெப்டினென்ட் கர்னல் சுரிந்தரசிங்குக்கு ஒரு பாண்ட் வானொலிப் பெட்டி ஒன்றையும், செகண்ட் இன் கமாண்ட் மேஜர் டார்சன் சிங், கேப்டன் இராமச்சந்திரன், கேப்டன் பி. எ. ஹாப்கிர்க், செகண்ட் லெப்டினென்ட் வி. என். எ. குட்டி ஒவ்வொருவருக்கும் திருச்சி மலைக் கோட்டை மாதிரி உருவம் ஒன்றையும் திருச்சி நகர மக்கள் பரிசளித்தனர். பிரதேச இராணுவப் படைப் பிரிவு 1977 நவம்பரில் வெள்ள நிவாரண மீட்புப் பணிகளின்போது ஆற்றிய தன்னிகரில்லாப் பணிக்காக 1980 ஆம் ஆண்டு குடியரசு நாவில் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது.

1980-ம் ஆண்டு குடியரசு நாள் அணிவகுப்பு.

புதுடில்லியில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் அணிவகுப்பில் பிரதேச இராணுவப் படைப் பிரிவு பங்கேற்றது. இப்படைப் பிரிவைப்

பாராட்டும் வகையில் அழகான நினைவுச் சின்னம் ஒன்றை இராணுவப் படைத் தலைவர் பரிசளித்தார்.

மொழி பெயர்ப்பு.

இத்துறை இவ்வாண்டு 92 சட்ட முன்வடிவுகளையும், 24 அவசரச் சட்டங்களையும், 79 சட்டங்களையும் மொழி பெயர்த்தது. பற்பல துறைகளின் மானியக் கோரிக்கைகள், கொள்கைக் குறிப்புகள், அமைச்சர்களின் உரைகள் ஆகியவையும் மொழி பெயர்க்கப்பட்டன.

குறிப்பாக இவ்வாண்டில் திரு. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனின் நான்கு இடைக்கால அறிக்கைகள், பெல்லி கமிஷன் அறிக்கை, காதர் கமிஷன் அறிக்கை, சதாசிவம் கமிஷன் அறிக்கை முதலிய கமிஷன் அறிக்கைகள் மொழியாக்கம் செய்யப்பெற்றன. சிறைச் சீர்திருத்தக் கமிஷன் அறிக்கையின் மூன்று தொகுதிகளும் இவ்வாண்டில் மொழி பெயர்க்கப்பட்டன. தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, இந்தி போன்ற மொழிகளில் பல்வேறு துறைகளில் பெறப்பட்ட மனுக்கள் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்க்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அவ்வத் துறைகளுக்கு அனுப்பப்பட்டன. அரசிதழில் மலையாளத்தில் வெளியிடப்படவேண்டிய சில அறிவிப்புகளும் மொழி பெயக்கப்பட்டன.

காலம் குறிக்கும்.

அத்தியாயம் XVI

பொதுப் பணித்துறை.

நீர்ப் பாசனம்.

1979-80 ம் ஆண்டில், இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்ட நாள் மூடப்பட்ட நாள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	திட்டத்தின் நீர்த்தேக்கத்தின் பெயர்.	திறந்து விடப்பட்ட நாள்.	மூடப்பட்ட நாள்.
(1)	(2)	(3)	(4)
1.	மேட்டூர் நீர்த்தேக்கம்	12-6-79	28-1-80
2.	மேட்டூர் கால்வாய்த் திட்டம்	5-8-79	19-12-79
		1-3-80	1-5-80 புன்செய் பயிர்
3.	புள்ளம்பாடிக் கால்வாய்	8-8-79	22-12-79
4.	என். கே. எச். எல். கால்வாய்	8-8-79	22-12-79
5.	பவானி சாகர் தலைமைக் கால்வாய்		
	முதல் முறை	15-8-79	31-12-79
	இரண்டாம் முறை	5-1-80	17-5-80 (எள் பயிர் உட்பட)
6.	அமராவதி கால்வாய்	1-8-79	31-1-80
7.	கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்		
	முதல் போகம்	10-8-79	9-1-80
	இரண்டாம் போகம்	10-1-80	18-4-80

தொடர் எண்.	திட்டத்தின் நீர்த்தேக்கத் தின் பெயர்.	திறந்து விடப்பட்ட நாள்.	மூடப்பட்ட நாள்.
(1)	(2)	(3)	(4)
8.	சாத்தனூர் நீர்த்தேக்கம் முறைமான பயிர்	1-1-80	17-5-80
	சாத்தனூர் வலக்கரை கால்வாய்	1-1-80	31-3-80
9.	விடூர் நீர்த்தேக்கம்	1-12-79	1-4-80
10.	கோமுகி நீர்த்தேக்கம்	23-9-79	31-3-80
11.	மணிமுத்தா நதி நீர்த் தேக்கம்	1-10-79 19-4-80	10-4-80 4-5-80 இரண்டாம் போகம்
12.	(அ) பெரியாறு பாசனத் திட்டத்தில் ஒரு போக பயிர்ப் பகுதி	15-8-79	15-2-80
	(ஆ) பெரியாறு பாசனத் திட்டத்தில் இரு போகப் பயிர் பகுதி	1-6-79	29-2-80
13.	வைகை நீர்த்தேக்கம்		
	(அ) திருமங்கலம் கால்வாய்	2-10-79	15-2-80
	(ஆ) வைகை நீர்த்தேக்கம் பெரியாறு புதிய விரிவாக் கப் பகுதி	2-10-79	15-2-80
14.	மஞ்சளாறு நீர்த்தேக்கம்	15-10-79	31-3-80
15.	மணிமுத்தாறு நீர்த்தேக்கம் இரண்டாம் பயிர்	23-1-80 23-3-80	14-3-80 11-4-80
16.	கோதையாறு பாசனதிட்டம்	1-6-79	21-3-80

தொடர் எண்.	திட்டத்தின் நீர்த்தேக்கத் தின் பெயர்.	திறந்து விடப்பட்ட நாள்.	மூடப்பட்ட நாள்.
(1)	(2)	(3)	(4)
17.	பட்டணம்கால்	1-6-79	21-3-80
18.	இராதாபுரம் கால்வாய்	7-1-80	27-1-80
19.	நெய்யாறு திட்டத்தின் கன்னியாகுமரி கிளைக் கால்வாய்	29-5-79	10-3-80
20.	பொன்னியாறு கால்வாய்	1-9-79	29-2-80
21.	சின்னாறு நீர்த்தேக்கம்	20-9-79	19-2-80

1. மருதா நதி நீர்த் தேக்கத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் வட்டத்தைச் சேர்ந்த அய்யம்பாளையம் கிராமத்தில் ரூ. 320 இலட்சம் செலவில் மருதா நதியின் குறுக்கே 174 மில்லியன் கன அடி கொள்ளளவுடைய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதும், இரு பக்கமும் 10 கி.மீ. நீளமுள்ள கால்வாய்களை வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போதுள்ள 2,283 ஏக்கர் ஆயக்கட்டிற்கு நிலையாகப் பாசன வசதி அளிப்பதுடன் புதிதாக 3,700 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும் இத்திட்டத்தால் பயனடையும். மேலும் விட்டுப்போன 73 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும். இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ. 7.57 இலட்சம் செலவிடப்பட்டது.

பி. டி. இராஜன் கால்வாய்.—மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள வேங்கடாசலபுரம் பகுதிக்கு பெரியாறு அணைக்கட்டிலிருந்து நீர்வழங்கும் பொருட்டு கருங்காட்டாங்குளத்திலிருந்து 13.5 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் ஒன்றை வெட்டுவதும் தற்போது நீர் செல்லும்

கால்வாய்களைச் சீரமைத்தலும் வளசமுத்திரம் மற்றும் பிற ஏரிகளின் கரையைத் தரப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். புன்செய் பாசனத் திட்டத்தின் கீழ் புதிதாக 1,625 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதிக்கு பாசனம் அளிப்பதற்கும் விட்டுப்போன 53.67 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிப்பதற்கும் 414.65 ஏக்கர் நிலத்திற்கு நிலையான பாசனம் அளிப்பதற்கும் இத்திட்டம் விழைகிறது. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபாய் 72.27 இலட்சமாகும். இத் திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூபாய் 8.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வெம்பகோட்டை நீர்த்தேக்கத் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம் வைப்பாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 325.60 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ. 21.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

குந்தாறு நீர்த்தேக்கத் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்தில் கன்னிபுள்ளிமேடு கிராமத்திற்கருகே குந்தாற்றின் குறுக்கே 25 மில்லியன் கன அடி கொள்திறனுடைய நீர்த் தேக்கமொன்றைக் கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் முதல் போகத்தில் 1,122 ஏக்கருக்கும் இரண்டாம் போகத்தில் 1,024 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் நிலையாகப் பாசன வசதி கிடைப்பதுடன் விட்டுப்போன 98 ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி கிடைக்கும். இத்திட்டத்தின் மூலம் 34 வட்டங்கள் பயனடையும். இத்திட்டத்திற்கு அரசு திருத்தப்பட்ட மதிப்பீடாக ரூ. 82 இலட்சம் அனுமதி வழங்கியது.

இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 15.50 லட்சமாகும்.

கீழ்வாரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்.

தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்தைச் சேர்ந்த கீழ்வாரப்பள்ளி கிராமத்திற்கு அருகே பொன்னியாற்றின் குறுக்கே 481 மில்லியன் கன அடி கொள்திறனுடைய நீர்த் தேக்கமொன்றை அமைப்பதும் அந்த நீர்த் தேக்கத்தின் இடப் பக்கம் 32.5 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் ஒன்றும், வலப்பக்கம் 22.60 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் ஒன்றும் வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தால் 8,000 ஏக்கர் புதிய புன்செய் நிலப்பரப்பு பாசன வசதி பெறும். மேலும் 1,083 ஏக்கர் நிலப்பரப்பு நிலையான பாசன வசதி பெறுவதுடன் ஓசூர் 'சிப்காட்' தொழிற்சாலைத் தொகுதிக்கும் நீர் கிடைக்கும். இத்திட்டத்திற்கான சமீபத்திய மதிப்பீட்டுச் செலவு ரூ. 606.65 லட்சமாகும். இவ்வாண்டில் ரூ. 42.45 இலட்சம் செலவிடப்பட்டது.

வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் பாம்பாறு நீர்த்தேக்கத் திட்டம்.

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாரம்பட்டி கிராமத்தில் பொன்னியாற்றின் கிளை நதியான பாம்பாற்றின் குறுக்கே ரூ. 248 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2.8 மில்லியன் கனஅடி கொள்ளளவுடைய நீர்த் தேக்கமொன்றைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் நீர்ப்பாசன வசதி குறைவாயுள்ள தருமபுரி மாவட்டத்தின் பிற்பட்ட பகுதியில் புன்செய் பயிர் விளையும் 4,000 ஏக்கர் புதிய நிலப் பரப்பிற்கு பாசன வசதி கிடைக்கும். இத்திட்டம் அனுமதிக்கப்பட்டு வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 50.44 இலட்சம் செலவிடப்பட்டது.

தும்பலஹல்லி நீர்த்தேக்கத் திட்டம்.

பாலக்காடு வட்டத்தில் தும்பலஹல்லி கிராமத்தின் அருகே புள்ளப்பட்டி ஆற்றின் குறுக்கே ரூ. 123.97 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம்

ஒன்றைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தால் 2,184 ஏக்கர் புதிய ஆயக்கட்டு, புன்செய் நிலங்கள் பயனடையும். மேலும், இத்திட்டத்தால் தற்போது பாசனம் பெற்றுவரும் 433 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்படும். இவ்வாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 25,30,456 செலவிடப்பட்டுள்ளது.

பரணியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

8,550 (3,460 ஹெக்டேர்) ஏக்கர் புதிய நிலப்பரப்பினை புதிய நீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டு வருவதும் மற்றும் ஹரூர் வட்டத்தில் தற்போது ஏரிப் பாசனம் பெறும் 1,852 ஏக்கர் பரப்புள்ள (749.50 ஹெக்டேர்) நன்செய் நிலத்திற்கு நிலையான நீர்ப்பாசன வசதி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஹாம்லெட் முள்ளிக்காட்டிற்கு அருகில் அமைந்துள்ள தலைப் பகுதி பணிகளில் 300 மீட்டர் நீளமுள்ள மண் அணை அடங்கும். மேலும் வெள்ள நீரை ஆற்றுக்கு கொண்டு செல்லும் வகையில் இடது பக்கத்தில் உபரி நீர் வெளியேற்றுவதற்கான பொறி மதகு ஒன்றும், இடது பக்கத்தில் உபரி நீரைக் கொண்டு செல்வதற்கான நீண்டதொரு கால்வாயும் அடங்கும். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 616 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ. 40 இலட்சம் செலவிடப்பட்டது.

சாத்தனூர் துணை அணைக்கட்டின் மேலே வலப்பக்கமாகக் கால்வாயை வெட்டுதல்.

வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சாத்தனூர் துணை அணைக்கட்டின் வலப்பக்கமாக (28.6 கி.மீ. நீளத்திற்கும்) புதிய கால்வாய் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தால் 3,557 ஏக்கருக்கு (வட ஆர்க்காடு மாவட்டத்தில் 202 ஏக்கர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 3,355 ஏக்கர்) பாசனம் நிலைப்படுத்தப்படுவதுடன் மேலும் 16,443 ஏக்கர் (1,673 ஏக்கர் வட ஆர்க்காடு மாவட்டம், 14,770 ஏக்கர் தென்னார்க்காடு மாவட்டம்) புதிய புன்செய் நிலப்பரப்பும் பாசனம் பெறும். அமைக்கவிருக்கும் இக்கால்வாய்த் திட்டத்தால் சுமார் 24 ஏரிகளுக்கு நீர் கிடைக்கும். இத்திட்டத்தின் சமீபத்திய மதிப்பீட்டுச் செலவு ரூ. 465 இலட்சமாகும். இந்த ஆண்டில், இத்திட்டத்திற்கென ரூ. 55.02 இலட்சம் செலவானது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் ஒரு பெரிய பலநோக்கு பல பள்ளத் தாக்குத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இந்தியாவின் மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த ஆனைமலைச்சாரலில் உள்ள மாநிலங்களுக்கிடையே பாயும் ஆறுகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீர், மின் வளங்களை தமிழ் நாடு, கேரளா ஆகிய மாநிலங்களின் நன்மைக்காகப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் தற்போது பாசன வசதி பெறும் 30,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்தை உறுதிப்படுத்துதல், பாசன வசதியை அதிகரித்தல் ஆகியவற்றோடு, தமிழ் நாட்டைச் சேர்ந்த கோயம் புத்தூர் மாவட்டத்தின் வறண்ட பகுதிகளில் சுமார் 2,50,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிப்பதும், 185 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதும். இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டுப் பகுதி பெரும் பாலும் பாசனம் பெறும் புன்செய் பகுதியாகும். மொத்த ஆயக்கட்டுப் பகுதியில் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் பகுதி தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதோடு கசிவு நீராலும் பாதிக்கப்படுகிறது. இங்கு மட்டும்தான் நன்செய் சாகுபடி நடைபெறுகிறது. எட்டு ஆறுகளை—இவற்றுள் 6 ஆறுகள் ஆனைமலையின் கிழக்குச் சாரலில் பாய்கின்றன. அணைகள் கட்டுவதன் மூலமும் திசை திருப்பிவிடும் பணிகளை நிறைவேற்றுவதன் மூலமும் குடைவரைகள் மூலமும் ஒருங்கிணைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆறுகள் (+) 380 முதல் (+) 1,050 வரையிலான பல்வேறு உயரங்களில் அமைந்துள்ளன. இதன் விளைவாக, இந்த ஆறுகளின் சரிவுகளிலிருந்து விழும் நீரை புனல் மின் சக்தி உற்பத்தி செய்யப் பயன்படுத்த ஏதுவாகிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8,575.50 இலட்சமாகும். கீழ் நீராறு அணைக்கட்டு குடைவரைகள் நீங்கலாக அணைக்கட்டுக்கள் குடைவரைகள் கால்வாய்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டில், இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 1,15,60,000 ஆகும்.

பெரியாறு பாசனத் திட்டத்திற்கு மேம்பாடுகள்.

பெரியாறு பாசனத் திட்டத்தில் மேம்பாடுகள் செய்து அதன் திறனைப் பெருக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். வைகை அணைக்கட்டிற்குக் கீழே துணை அணைக்கட்டு ஒன்றைக் கட்டுதல், துணை அணைக்கட்டிலிருந்து

பேரணை பொறி மதகு வரை 32 கி.மீ. நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் ஒன்றை வெட்டுதல் தற்போதுள்ள பெரியாறு தலைமைக் கால்வாயை அதன் நான்கு இளைக் கால்வாய்களோடு இணைத்தல், கட்டுமானப் பணிகளை சீரமைத்தல் புல்லாப்பட்டி பொறி மதக்குகு அப்பால் 22 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டி காரை பூசுதல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தால் சுமார் 39,400 ஏக்கர் புதிய நிலங்களும், தற்போதுள்ள 17,000 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களும் பயனடையும். இந்திட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 4,104 இலட்சமாகும். இத்திட்டத்திற்காக, இவ்வாண்டில் ரூபாய் 234.64 இலட்சம் செலவிடப்பட்டது.

தஞ்சாவூர் கால்வாயை நவீனப்படுத்துதல்.

நீரை வீணே செலவிடாது நல்ல முறையில் பயன்படுத்தி தற்போதுள்ள ஆயக்கட்டிற்கு நிலையான பாசன வசதி அளித்து அதிக விளைச்சலைப் பெற தஞ்சாவூர் கழிமுகப் பகுதியின் தற்போதைய பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்த இத்திட்டம் விழைகிறது. இவ்வாண்டில், தஞ்சாவூர் கால்வாயை நவீனப்படுத்துவதற்கும் காவிரி கழிமுகப் பகுதியில் வடிகால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ரூ. 3 கோடி செலவிடப்பட்டது.

இவ்வாண்டில் முடிக்கப்பட்ட பணிகள் வருமாறு:—

1. கால்வாய்களைச் சீரமைத்தல்	116 எண்கள்
2. பொறி மதகுகள்	6 எண்கள்
3. ஆறுகளை மேம்படுத்துதல்	49 மைல்கள்
4. கால்வாய்களுக்கு கரை கட்டுதல்	1

வீராணம் ஏரிக் கால்வாய் சீரமைப்பு.

இத்திட்டத்தின் கீழ் (1) வீராணம் ஏரி அதன் கால்வாய்கள், (2) வடவாறு, மற்றும் வடவாற்றுப் பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. முதல் கட்டமாக லால்பேட்டை, வள்ளிக்குடிக் கால்வாய்களை ரூபாய் 11 இலட்சம் செலவில் திருத்தியமைப்பதற்கான முன்னோடி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக இதுவரை ரூபாய் 7.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சிறப்புச் சிறுபாசனத் திட்டம்.

இவ்வாண்டில் 45 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 129.59 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஏரி-தூர்வாரி புனரமைப்புப் பணிகள்.

இவ்வாண்டில் இவ்விரண்டுப் பணிகளுக்காகவும் ரூ. 3.37 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சிறுபாசன விரைவுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் செப்பனிடத் திட்டமிட்டிருக்கும் ஏரிகள் மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :

1. நூறு ஏக்கரும் அதற்கு அதிகமான ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பவையும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவையுமான ஏரிகள்.

2. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவையும் 100 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் குறைவாகப் பாசன வசதி அளிப்பவையுமான ஏரிகள்.

3. முன்னாள் ஜமீன் ஏரிகள் சிறுபாசன விரைவுத் திட்டத்தின் கீழ் பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏரிகளைச் செப்பனிட ரூ. 47.24 இலட்சம் செலவிடப்பட்டது. 229 பணிகள் இவ்வாண்டில் முடிவுற்றன. ஊராட்சி ஒன்றிய ஏரிகளைச் செப்பனிட ரூ. 38.77 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் 207 பணிகள் முடிவுற்றன. சிறுபாசன விரைவுத் திட்டத்தின் கீழ் முன்னாள் ஏரிகளைச் செப்பனிட ரூ. 5.06 இலட்சம் செலவிடப்பட்டது. 64 பணிகள் இவ்வாண்டில் முடிவுற்றன.

நிலத்தடி நீர் இயக்குநர் அலுவலகம்.

நிலத்தடி நீர் துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் (நிலத்தடி நீர்) இயங்கி வருகிறது. தலைமையிடத்தில் பொதுநிலைப் பணி துணைத் தலைமைப் பொறியாளர் ஒருவர், தொழில் நுட்ப வல்லுநர் ஒருவர் துணைத் தலைமைப் பொறியாளர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட மூன்று நிலத்தடி நீர் வட்டாரங்கள் இத்துறையில் உள்ளன. இம்மூன்று வட்டாரங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த ஆண்டில் 10 கோட்டங்கள் இயங்கி வந்தன.

தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் வள ஆய்வு.

இந்த ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 13 நீர்வளப் பகுதிகளிலும் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 34,083 சதுர

கிலோமீட்டர் தொலைவிற்கு நிழற்படம் மூலம் மண்ணியல் ஆய்வு செய்யப் பட்டது. 2,634 கிராமங்களில் மண்ணியல் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. 2,599 கிராமங்களில் மண்ணியல் சார்ந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. 4,267 கிராமங்களில் கிராமவாரியான தகவல்கள் தொகுக்கப்பட்டன. 4,261 கிராமங் களில் நிலத்தடி நீர் எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 287 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. 163 துளைக் கிணறுகளில் குழாய்ச் சோதனைகள் நடத்தப்பட்டன. 1,927 இடங்களில் நீர்மட்டத் தகவல்கள் தொகுக்கப்பட்டன. 6,028 இடங்களில் நீரின் தரம் குறித்து ஆய்வு செய்யப் பட்டது.

மண்ணியல் ஆய்வுகள்.

1979-80 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 2,599 கிராமங்களில் மண்ணியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இவ்வாய்வுகள் கிராமங்களில் நிலத்தடி நீர்வளம் குறித்து அறிந்து கொள்ளவும் நிலத்தடி நீர் எடுக்கத் தகுதியான இடத்தை அறியவும் உதவியாயிருந்தன.

நிலத்தடி மண்ணியல் ஆய்வு—1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் மின் சக்தி உதவியுடன் 45 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. இவ்வாறு தோண்டப்பட்ட துளைகள் நில அடுக்குகளின் தொடர்பு குறித்து அறியவும் துளைக் கிணறுகள் அமைக்கவும் பெருமளவில் பயன்பட்டன. நீரூற்றுகளி லுள்ள நீரின் தரம் குறித்த ஆய்வும் கடினப் பாறைப் பகுதிகளில் பாறையின் மொத்த அளவில் துளை எந்த அளவுக்கு போடப்பட்டுள்ளது என்பதையும் இயல்வளிக்கப்பட்டு அமைந்த பதமான பரப்பையும் கண்டறிதல்.

சாதனங்கள்—இயக்குதல், பராமரித்தல்.—நிலத்தடி நீர் ஆய்வுப் பணியில் நேர் சுழல் துளைக் கருவி 11-ம் டி.டி. எ. 2 துளைக் கருவி 12-ம் காப்புறை துளைக் கருவிகள் 13-ம் ஆக மொத்தம் 36 துளைக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இச்சாதனங்களை ஆய்வு ஆண்டில் இயக்கி :பராமரித்த வகையில் ரூபாய் 39,34,781 செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் சாதனங்கள், உதிரிப் பாகங்கள், குழாய் உறைகள் ஆகியவற்றை வாங்கிய வகையில் ரூபாய் 15.5 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் 14 துளைக் கருவிகள் பெரு மளவில் பழுது பார்க்கப்பட்டன. மொத்தம் 11,995.52 மீட்டர் ஆழத்திற்கு 253 துளைகள் தோண்டப்பட்டன.

நீர்வள ஆய்வு நிறுவனம், சென்னை.

நீர் வள ஆய்வு நிறுவனம் 30—6—1975 ஆம் நாளன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வந்தது. நீர் நிலைகளில் உள்ள நீர் வடிந்து விடுதல் மழையின் அளவு படிப்படியாக நீர் நிலத்தில் சென்று ஊறிவிடுதல் நீர் ஆவி யாவதால் ஏற்படும் நீர் இழப்பு நீர் ஆவியாக வெளியேற்றப்படுவதால் ஏற்படும் இழப்பு ஆகியவை குறித்து மாநிலத்தில் 258 நிலையங்களில் 50 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட பெய்துள்ள மழையளவின் அடிப்படையில் 16 நீர் நிலை களில் தொடக்க நிலை மதிப்பீடு செய்யப்பட்டது. நீர் நிறுவன கட்டிடம் அனைத்து வசதிகளுடனும் தரமணியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குதல்.

மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள மூன்று கிணறுகளும் அவற்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றுடன் சென்னைப் பெருநகர், குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்திற்கு மாற்றப் பட்டன. கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணு மின் நிலையத்திற்கு பாலாறு நீர் நிலையிலிருந்து தொடர்ந்து நீர் வழங்கப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புதிய கழிமுகப் பகுதியில் கிணறுகள் தோண்டுதல்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புதிய கழிமுகப் பகுதியில் பாசன வசதிக் காக 36 துளைக் கிணறுகள் தோண்டும் பணி முடிக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் ரூ. 20,078 செலவிடப்பட்டது.

தாமரைப்பாக்கத்திலிருந்து மணலிக்கு நாளொன்றுக்கு 11 மில்லியன் கேலன் நீரை அனுப்புதல்.

தாமரைப்பாக்கம் நீரூற்றுக்களிலிருந்து மணலி தொழிற்பேட்டையிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு நாளொன்றுக்கு 11 மில்லியன் காலன் நீரை அனுப்புவது குறித்த பணிகள் முடிக்கப்பட்டன. இவ் வாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 2,09,605 செலவிடப்பட்டது.

நிலத்தடி நீரூற்றுக்களையும் பராமரித்தல்.

சென்னை அணு மின் நிலையத்திற்கு நீர் வழங்கும் பாலாறுக் கிணறுகளின் ஆண்டுப் பராமரிப்புப் பணி இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 1,57,417 செலவிடப்பட்டது.

தமிழ்நாடு மின் வாரியம்.

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மின்சாரத் துறை 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் கீழ் 1—7—1957 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் சட்டப்படிக்கான ஓர் அமைப்பாக ஏற்படுத்தப் பட்டது.

நிறுவுதிறன்.—தூத்துக்குடி அனல் மின்நிலையம் 210 மெகாவாட் திறன் கொண்ட பிரிவு ஒன்றுடன் 9—7—1979 அன்று உற்பத்தி தொடங்கியது. இதனால் தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் மொத்த நிறுவுதிறன் 2,719 மெகாவாட்டாக உயர்ந்தது. அதாவது புனல் மின்சாரம் 1,369 மெகாவாட் அனல் மின்சாரம் 750 மெகாவாட் மத்திய அரசுத்துறையின் கீழ் நெய்வேலி அனல் நின் நிலையத்திடமிருந்து 600 மெகாவாட் ஆகும்.

மின்சாரத்தின் தேவை.—இவ்வாண்டில் தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் உயரளவு தேவை 1,710 மெகாவாட் என 18—8—1979 அன்று பதிவு செய்யப்பட்டது. இத்தேவையின் ஒரு பகுதி வாரியத்தின் மின் உற்பத்திப் பிரிவிலிருந்தும் ஒரு பகுதி நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து மின் சக்தியை வாங்குவதன் மூலமும் அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக் கப்பெற்ற உதவியுடனும் நிறைவு செய்யப்பட்டது. இவ்வாண்டில் ஏற்பட்ட உடனடி உயரளவு தேவை 1,792 மெகாவாட்டாகும்.

மின்சார உற்பத்தியும் கொள்முதலும்.—1979-80 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கொள்முதல் செய்யப்பட்ட மொத்த மின் சக்தியின் அளவு 10,414 மில்லியன் யூனிட்டாகும்.

மின் இழப்பு.—உரிமம் பெற்றவர்கள் ஏனைய மாநிலங்கள் புதுச்சேரி உட்பட பயனிட்டாளர்களுக்கு விற்கப்பட்ட மின் சக்தியின் அளவு 8,190 மில்லியன் யூனிட்டாகும். ஏற்பட்ட மின் இழப்பு 1912 மில்லியன் யூனிட் டாகும். இது 18.93 சதவிதமாகும்.

மின்சக்தி விற்பனை.—இந்த ஆண்டில் பயனீட்டாளர்களுக்கு விற்கப்பட்ட மின் சக்தி 8,190 மில்லியன் யூனிட்டாகும். இவற்றில் 4,144 மில்லியன் யூனிட் உயாழுத்த மின் சக்திக்கும் 4,046 மில்லியன் யூனிட் குறைந்த அழுத்த மின் சக்திக்கும் தொழில் துறைக்கு 3,811 மில்லியன் யூனிட்டும் வேளாண்மை மைக்கு 2,186 மில்லியன் யூனிட்டும் உரிமதாரர்களுக்கு 191 மில்லியன்

யூனிட்டும் புதுச்சேரிக்குக் கொடுக்கப்பட்ட 138 மில்லியன் யூனிட் உட்பட ஏனைய மாநிலங்களுக்கு 301 மில்லியன் யூனிட்டும் வீட்டுப் பயனுக்கு 734 மில்லியன் யூனிட்டும் வணிகப்பயனுக்கு 620 மில்லியன் யூனிட்டும் துறைப் பணிகள் கட்டிடங்கள் நீர்பணிகள் பொது விளக்கு போன்றவைகளுக்கும் 347 யூனிட்டும் தரவாரியாக மின்சாரம் வழங்கப்பட்டது.

மின்சார பயன்பாடு.—1978-79 ஆம் ஆண்டில் 181 யூனிட்டாக இருந்த நபர் வரி மின்சார பயன்பாடு 1979-80-ல் 175 யூனிட்டாயிற்று.

மின்பயனீட்டாளர்கள்.—இந்த ஆண்டில் ஏறக்குறைய 2.59 இலட்சம் புதிய மின்பயனீட்டாளர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி மொத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 39.97 இலட்சமாகும். இவற்றுள் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்ட 1.67 இலட்சமும் அடங்கும். 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி வாரியத்தின் மொத்த மின் இணைப்புத் திறன் 7,432 மெகாவாட்டாகும்.

மின் கம்பித் தொடர்கள்.—1979-80 ஆம் ஆண்டில் 3,053 கிலோ மீட்டர் கூடுதல் உயரழுத்த மின்கம்பித் தொடர்களுக்கும் 15,547 கிலோ மீட்டர் குறைந்த அழுத்த மின்கம்பித் தொடர்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆண்டு இறுதியில் கூடுதல் உயரழுத்த மின் இணைப்பு 77,126 கிலோ மீட்டராகவும் குறைந்த அழுத்த மின் இணைப்பு 2,49,266 கிலோ மீட்டராகவும் இருந்தது.

துணை மின் நிலையங்கள்.—இவ்வாண்டில் 13 புதிய துணை மின் நிலையங்கள் உற்பத்தி தொடங்கின. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி இம் மாநிலத்தில் 355 கூடுதல் உயரழுத்த துணை நிலையங்களும் உயரழுத்தத் துணை நிலையங்களும் இருந்தன.

மின்பங்கீட்டு மின் அழுத்த மாற்றிகள்.—இந்த ஆண்டில் 5,05,743 கிலோ வாட் திறன் கொண்ட 3,426 மின் பங்கீட்டு மின் அழுத்த மாற்றிகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 46,57,881 கிலோவாட் திறன் கொண்ட 48,595 மின்பங்கீட்டு மின் அழுத்த மாற்றிகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது.

கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குதல்.—1979-80 ஆம் ஆண்டில் தெரு விளக்குகள் ஏனைய வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் 33 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் சக்தி அளிக்கப்பட்டது. அவ்வாண்டு இறுதியில் 63,428 நகரங்களும் கிராமங்களும் சிற்றூர்களும் மின்சாரத்தின் பயனை அடைந்துள்ளன. இந்த ஆண்டு 127 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் சக்தி வழங்கப்பட்டது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 25,653 குடியிருப்புக்களுக்கு மின் சக்தி அளிக்கப்பட்டது. ஆதிதிராவிடர் சிற்றூர்கள் அனைத்திற்கும் அதாவது 31—3—1979 ஆம் நாள் நிலவரப்படி உள்ள 25,526 சிற்றூர்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 46,670 வேளாண்மை விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. ஆக 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி 8,87,227 விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

நிதி :—1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை விவரங்கள் அதாவது, மொத்த வருவாய், வருவாய் செலவுகள், மூலதனச் செலவுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	ரூபாய் கோடியில்.
மொத்த வருவாய் (அரசு உதவித் தொகை நீங்கலாக)	254.23
வருவாய் செலவுகள் (சேமநிதிக்கும் வட்டிக்கும் தொகை ஒதுக்கப்படுவதற்கு முன்)	208.48
மூலதனச் செலவு	158.40

31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி வாரியத்தின் மொத்த மூலதனச் செலவு ரூபாய் 1,108.10 கோடியாகும்.

குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்.—தமிழக அரசிடமிருந்து பெற்ற ஆணைகளின் பேரில், வாரியம் 1979 சூலையில் கிராம ஊராட்சிகளிலுள்ள குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கு திட்டம் ஒன்றைத் தொடங்கியது. 1980 மார்ச்சு இறுதியில் சுமார் 1.67 இலட்சம் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

மின்சார நிலைமை.—1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாடு தொடர்ந்து மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டது. 1979 சூன்

இரண்டாவது வாரத்தில் சிறந்த முறையில் பெய்த தென்மேற்குப் பருவ மழையால், நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பி இருந்தது. குந்தா பகுதியிலும், கோதையாறு, பாபனாசம், சர்க்கார்பதி நீர் தேக்கங்களிலும் நீர் ஓரளவு உபரியாகக் காணப்பட்டது. புனல்மின் நிலையங்களின் உற்பத்தித்திறனும் சிறந்து விளங்கியது.

பொது.—வேளாண்மை மின் பயனிட்டாளர்களுக்கு கூடுதல் எண்ணிக்கையில் மின்சாரம் வழங்கியதில் தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தியாவிலேயே முதலிடம் வகித்தது. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் நிறுவுதிறன் அதாவது 2,719 மெகாவாட் இது தென்னிந்தியாவிலேயே உயரளவு நிறுவுதிறனாகும். இந்தியாவில் மகாராட்டிரம், உத்தரபிரதேசத்தை யடுத்து தமிழ்நாடு மின்வாரியம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

மின் ஆய்வாளர் அலுவலகம்

மத்திய அரசு மின் அமைப்புக்கள் சுரங்கங்கள் மற்றும் எண்ணெய் உற்பத்தி வயல்களின் மின் அமைப்புக்கள் நீங்கலாக தமிழ்நாடு மாநிலத்தின் அனைத்து மின் அமைப்புகளுக்கும் அரசுத் தலைமை மின் ஆய்வாளர் சட்டவரி பணியமர்த்தப்பட்ட மின் ஆய்வாளர் ஆவார்.

வருவாய்.

(அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வு வரிச்) சட்டம் 1962-ன் கீழ் வசூலிக்கப்பட்ட வரி விவரம் :

	ரூபாய் இலட்சங்களில்.
(1) தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் சக்தி விற்பனை மூலமாக	219.15
(2) மின் உரிமங்கள் மூலமாக	2.36
(3) மின் சக்தியை உற்பத்தி செய்து நுகர்வு மூலமாக	39.45
(ஆ) 1956 ஆம் ஆண்டு இந்திய மின் விதிகளின் படி வசூலான கட்டணத் தொகை	42.67
3. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரத் தீர்வைச் சட்டத்தின் படி தீர்வை—வசூல் தொகை	39.40
	343.03

இவ்வாண்டு இத்துறையில் ரூபாய் 28.6 லட்சம் செலவு செய்யப்பட்டது.

நடப்பு ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட தமிழ்நாடு மின் வாரிய வருவாய்ப் பிரிவுகள் மற்றும் திட்ட அலுவலகங்கள் 110 ஆகும். 1939 ஆம் ஆண்டு தமிழ் நாடு தீர்வைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் 4 ஆகும்.

தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்கு துறை) விதிகள் 1957 இவ்வாண்டில் இருந்த மொத்த திரையரங்குகள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

(அ) குளிர்சாதன வசதியுள்ள நிலையான திரையரங்குகள்	39
(ஆ) குளிர்சாதன வசதியற்ற நிலையான திரையரங்குகள்	839
(இ) பகுதி நிரந்தரத் திரையரங்குகள்	115
(ஈ) இடம் பெயர் திரையரங்குகள்	988
	1981

438 மின் சான்றிதழ்கள் இவ்வாண்டு புதியதாக வழங்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் 840 ஆகும்.

198 திரைப்படக் கருவி இயக்குநர் உரிமம் புதியதாக வழங்கப்பட்டது, புதுப்பிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை 598.23 இரண்டாம்படி உரிமம் வழங்கப்பட்டது.

இந்திய மின் விதிகள் 1956 மற்றும் இந்திய மின் சட்டம் 1910 ஆகியவைகளின் படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

(அ) துணை மின் நிலையங்கள்	116
(ஆ) மின் மாற்றிகள்	13,784
(இ) விதிகள் 63 மற்றும் 64-இன் கீழ்	655
(ஈ) விதி 46-ன் கீழ்	1,496
(உ) மின் வழித் தடங்கள்	8
(ஊ) மின்னாக்கி	83

(எ) ஒளியுமிழ் விளக்குகள் 47

(ஏ) ஒளிக்கதிர் 11

(ஐ) பிரிவு 30-ன் கீழ் 53

(ஒ) இந்திய மின்சாரச் சட்ட பிரிவு 56-ன் கீழ் ஆய்வு 43

(ஓ) மற்றவை 122

(ஔ) மின் விபத்துப் புலனாய்வு 67

தமிழ்நாடு திரையரங்க விதிகளின் படி செய்யப்பட்ட திரையரங்க ஆய்வுகள்

(அ) நிலையான திரையரங்குகள் 958

(ஆ) இடம் பெயர் திரையரங்குகள் 1826

(இ) பகுதி நிரந்தரத் திரையரங்குகள் 91

இவ்வாண்டில் 1,629 உயர் மின் அழுத்த நுகர்வாளர்கள் இருந்தனர், ஒப்புதல் வழங்கப்பட்ட உயர் மின் அழுத்த தடங்கள் 16 ஆகும். புதிதாக மற்றும் மறு உயிர்ப்பு வழங்கப்பட்ட அனுக்கள் 114 ஆகும். 262 பாதுகாப்பு சான்றிதழ்களும் 154 சோதனை சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 23 மின்னாக்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிறுவனங்களுக்கு இந்திய மின் சட்டப் பிரிவு 27-ன் படி வழங்கப்பட்ட ஒப்பளிப்புகள் 18 ஆகும்.

மின்சார விபத்துக்கள்

1979-80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த மின் விபத்துக்கள் 367 ஆகும். இவற்றுள் 251 உயிர் இழப்பு உள்ளவை; 116 உயிர் இழப்பு இல்லாதவை.

பொதுப்பணிகள் (கட்டிடங்கள்)

தலைமைப் பொறியாளரின் (கட்டிடங்கள்) நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பொதுப்பணிகள் துறை (கட்டிடங்கள்) தொடர்ந்து இருந்து வருகிறது. இத்துறை, தமிழ்நாடு அரசுத்துறைகளான-மருத்துவத்துறை, கல்வித்துறை, குடும்பநலத் துறை, வணிகவரிகள் துறை, வருவாய்த்துறை சமூக நலத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை வளர்ப்புத்துறை, காவல்துறை முதலிய துறைகளுக்கான கட்டிடங்களுக்குத் திட்டம் வகுத்து, கட்டிடம் கட்டி, பராமரித்துவரும் பொறுப்பை வகித்து வருகிறது. நகராட்சிகள், அங்காடிக் குழுக்கள், முன்னாள் இராணுவத்தினர் அமைப்புகள், கதர் வாரியம், கோழிப்

பண்ணை வளர்ச்சிக் கழகம் தனிச்சட்டப்படி அரசால் அமைக்கப்படுகிற ஏனைய குழுக்கள் இவற்றின் திட்ட நிர்மாணப் பணிகளை இப்பிரிவு செயல் படுத்தி வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்து, பொதுப் பணிகள் துறை (கட்டிடங்கள்) மேற்கொண்ட பணிகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

1. வேளாண்மைத்துறை	50.00
2. கால்நடை வளர்ப்புத்துறை	77.17
3. வணிகவரி அலுவலகக் கட்டிடங்கள்	155.00
4. கல்வித்துறை-கல்லூரிக் கல்வி	31.17
பள்ளிக்கல்வி	67.52
5. சிறைத்துறை	292.00
6. சுகாதாரப்பணிகள் உட்பட மருத்துவத்துறை	455.34
7. காவல்துறை	254.55
8. வருவாய்துறை	31.52
9. எழுதுபொருள்-அச்சுத்துறை	2.73
10. போக்குவரத்துத்துறை மோட்டர் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம்	24.75

நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ள முக்கியப் பணிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன):—

(ரூபாய் இலட்சத்தில்)

உதகமண்டலத்தில் இந்திய-ஜெர்மானிய நீலகிரித் திட்டத்திற்கான நிருவாகக் கட்டிடங்கள்	12.00
சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், பெரிய விலங்குகளுக்காக மருத்துவமனைக் கட்டிடத் தொகுதியைக் கட்டுதல்	17.60
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல அடுக்கு மாடித் தொகுதி கட்டுதல்	5.00

(ரூபாய்
இலட்சத்தில்)

நீலகிரி மாவட்டம் சாந்தியா நல்லாவில், கால்நடை இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையக் கட்டிடங்கள் கட்டுதல்.	1.10
காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்	10.17
கடலூரில் மோட்டார் வண்டி பணிக்களரி கட்டுதல்	9.17
திருப்பூரில் வணிகவரி அதிகாரி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.	8.00
ஈரோடில் வணிகவரி அதிகாரி அலுவலகக் கட்டிடம் (மூன்றாம் மாடி) கட்டுதல்.	3.50
மதுரை, கோயம்புத்தூர், வேலூரில் மத்தியச் சிறையில் சிறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டுதல்	36.14
விருத்தாசலம், பெரியகுளம் ஆகிய இடங்களில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்.	7.80
நாகப்பட்டினத்தில் காவல் துறை சூப்பிரண்டுக்கான குடியிருப்பு இல்லமும், புதுக்கோட்டையில், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் அலுவலகமும், வேலூரில் காவல் துறை செய்திக் கட்டுப்பாட்டு பணியாளர் அலுவலகமும் கட்டுதல்	2.63
செங்கற்பட்டு வட்டத்தில் சென்னை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்காக அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.	7.06

புயல்-வெள்ளப் பாதுகாப்புக் கட்டிடப் பணிகள்.

இம்மாநிலத்தில், புயல்-வெள்ளத்திற்கு இலக்காகக்கூடிய இடங்களில் புயல-வெள்ளப் பாதுகாப்பு இல்லங்கள் கட்டும் பணியை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது உள்ளூர் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் மற்ற சமயங்களில் சமுதாய நோக்கங்களுக்காகவும் இக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படும். நடப்பு ஆண்டில், ஒவ்வொன்றும் ரூ. 2.5 இலட்சம் செலவில் 14 புயல்-வெள்ளப் பாதுகாப்பு இல்லங்கள் பதினான்கின் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிறுவன நிதி உதவியுடன் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், புதுக் கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில், ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூபாய் 3.00 இலட்சம் செலவில், புயல்-வெள்ளப் பாதுகாப்பு இல்லங்களை 50 இடங்களில் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன

அயல் துறைப்பணிகள்.

பொதுப்பணிகள் துறை, ரூ. 379.07 இலட்சம் மதிப்புள்ள நகராட்சிப் பணிகள், தொழிலாளர் வாரியப் பணிகள், தொழிலாளர் காப்புறுதிக் கழகப் பணிகள் வருங்கால வைப்புநிதித் துறைப்பணிகள் முதலிய அயல் துறை கட்டுமானப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

அத்தியாயம் XVII

வருவாய் துறை

நில வருவாய்.

நிலவரி வருவாயின் கீழ் பசலி 1389 (1—7—1979—30—6—1980) ஆண்டுக்கான கேட்பு. வசூல், நிலுவை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

	கேட்பு.	வசூல்.	நிலுவைத் தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்)		
பாக்கி	2462	507	1955
நடப்புப் பாக்கி	1632	492	1140

நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கல்.

நிலமற்ற ஏழைகளுக்கு வாரிய நிலை ஆணை 15-ன்படி தரிசு நிலங்களை ஒப்படை செய்யும் பணியை அரசும் வருவாய் வாரியமும் (நி.வ.) பிறப்பித்த வழிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின்கீழ் வட்டாட்சியர்களும் கோட்டாட்சியர்களும் கவனித்து வந்தனர். ஒப்படை செய்வதற்குப் போதுமான நிலங்கள் உள்ள மாவட்டங்களில் 13 பிரிவு தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாண்டு, நில ஒப்படை செய்யும் இப்பணியின் கீழ் 1,614 பழங்குடியினருக்கும் 3,452 ஆதி திராவிடர்களுக்கும் ஏனையோர் 24,862 பேருக்கும் முறையே 1,812.45 ஏக்கர், 3610.20 ஏக்கர், 24,415.41 ஏக்கர் பரப்புள்ள பயிரிடத்தக்க நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டன. முன்னர் நில ஒப்படை செய்யப்பட்டது பற்றியும் இவ்வாண்டில் ஆய்வு செய்யப்பட்டது.

தத்தம நிலங்களிலும் ஆட்சேபனையற்ற புறம்போக்குப் பகுதியிலும் வீடுகள் கட்டியதன் மூலம் செய்யப்பட்ட ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்தல்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் பணிபுரியும் வருவாய் துறை அலுவலர் கள் வாரிய நிலை ஆணை 21-ன்கீழ் 21 வீட்டு மனைகளை ஒப்படை செய்தனர். ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்துவதன்

மூலம் பெருமளவில் வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்பட்டன. இவ்வாண்டில் 1,745 பழங்குடியினர் 5,218 ஆதித் திராவிடர்களுக்கு ஏனையோர் 12,683 பேருக்கும் வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டன.

சென்னை, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நிபந்தனைக்குட்பட்ட ஒப்படையின் பேரில் வீட்டு மனைகளை வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் 11,580 குடிசைகளைக் கொண்ட 26 குடிசைப் பகுதிகள் கொண்டு வரப்பட்டன. இவ்வாண்டு, 10 குடிசைப் பகுதிகளில் 2,427 குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டு, 31—3—1980 வரையில் 922 குடிசைகளுக்கான தகுதிப் பட்டியல், சென்னை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் ஆதி ஆந்திரர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளை முறைப்படுத்துதல்.

அரசு நிலங்களிலும் மாநகராட்சியிடம் நிலை பெற்றுள்ள அரசு நிலங்களிலும் ஆதி ஆந்திரர்கள் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் சென்னை மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களாகப் பணி புரிபவர்கள். 750 ச. அடி வரையில் பரப்பளவு உள்ள நிலங்களுக்கு மனை (Ground,) ஒன்றுக்கு ரூ. 3,000-ம் 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலங்களுக்கு மனை ஒன்றுக்கு ரூபாய் 6,000-ம் செலுத்துவதன் பேரில் அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. 31—3—1980 வரை 207 ஆதி ஆந்திரர்களின் ஆக்கிரமிப்புகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தம்.

தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் எண் 58/1961 சட்டம் (திருத்தப்பட்டவாறு).

பயிரிடு நிலங்கள் வைத்து வருவதற்கு உச்ச வரம்பு விதித்து, உச்ச வரம்பிற்கு கூடுதலாக இருக்கும் உபரி நிலங்களுக்குத் ஒரு தொகை கொடுத்து அவற்றைக் கையகப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. ஒருவர் எவ்வளவு

நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 'நபர்' என்பதில் தனிநபர் அல்லது குடும்பம், நிறுவனம், சங்கம், தனி நபர்க்கழகம், வர்த்தக நிறுவனம் அல்லது பொறுப்புக் கழகம் அடங்கும். ஒரு குடும்பம் என்பதில் கணவன் அல்லது மனைவி, உரிய வயதடையாத மகன்கள், திருமணமாகாத மகள்கள, ஆண் சந்ததியில் வயது வராத பேரப் பிள்ளைகளும், மணமாகாத பேத்திகளும் (அவர்களது தாய், தந்தை இறந்திருக்க வேண்டும்) அடங்குவர் என்று விளக்கமளிககப்பட்டுள்ளது. 5 அல்லது அதற்கு குறைவான நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கத்தக்க மொத்த உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகும். ஒரு குடும்பத்தில் ஐவருக்கும் மேற்பட்டவர்கள் இருந்தால் அவ்வாறு ஐவருக்கும் மேற்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் மொத்த உச்ச வரம்பான 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உட்பட்டு கூடுதலாக ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். இச்சட்டம் செயலுக்கு வரும் நாளில் ஒரு பெண் தன் பேரில் சொந்தமாக வைத்துள்ள நிலம் அவருக்கு வழங்கப்பட்ட சீதன நிலமாக கருதப்படுகிறது. மொத்த உச்சவரம்பான 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு உட்பட்டு குடும்பத்தின் உச்ச வரம்பு நிலத்திற்குக் கூடுதலாக, இத்தகைய பெண் உயரளவு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற வரையறைக்கு உட்பட்டு தனது நிலத்தை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார். ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் என்பது நல்ல முறையில் பாசனம் பெறும் நிலமான 0.8 ஏக்கரிலிருந்து மோசமான நிலையில் பாசனம் பெறாத நிலமான 4 ஏக்கர்கள் வரை வேறுபடுகிறது.

2. மூலச்சட்டத்தின் கீழ் (சட்டம் 58/1961) 'நபர்' ஒருவருக்கான உச்சவரம்பு சீதனம் பெற்ற வகையில் கூடுதலாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலம், கூடுதலாக உள்ள நபர்களுக்காக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலம், ஆகியவை உட்பட மொத்த உச்சவரம்பு அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு உட்பட்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்தது. அவ்வப்போது இந்த உச்சவரம்பு அளவு திருத்தச் சட்டங்கள் மூலம் குறைக்கப்பட்டது. ஒரு நபருக்கு தற்போது உச்ச வரம்பு அளவு, மொத்த உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு உட்பட்டு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்

கள் ஆகும். பொறுப்புக் கழகங்களுக்குத் தொடக்கத்தில் இச்சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் பொறுப்புக் கழகங்கள், பொதுப் பொறுப்புக் கழகங்கள் தனியார் பொறுப்புக் கழகங்கள் என்றும் பொதுப் பொறுப்புக் கழகங்கள் பொது நோக்குடைய சமய பொறுப்புக் கழகங்கள், பொது நோக்குடைய அற அல்லது கல்விப் பொறுப்புக் கழகங்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டன. தனியார் பொறுப்புக் கழகத்திற்கு சொந்தமான நிலங்கள், இப்பொறுப்புக் கழகத்தினால் பயனடையும் நபர்களுக்குச் சொந்த மான நிலங்களாகக் கருதப்பட்டன. பொது நோக்குடைய சமயப் பொறுப்பு கழகங்களிடம் அல்லது சமய நிறுவனங்களிடம் 1—3—1972 அன்று இருந்த நிலங்கள் இச்சட்டம் செயல்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. பொது நோக்குடைய கல்வி, அற பொறுப்புக் கழகங்களைப் பொறுத்தமட்டில் 15 முதல் 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வரை வெவ்வேறு அளவிலான உச்ச வரம்பு அளவு வரையரைக்கப்பட்டுள்ளது. பயிரிடு குத்தகைதாரர் ஒருவர் 5 ஏக்கர் நிலம் வரை வைத்துக்கொள்ள இச்சட்டம் வகை செய்கிறது. இந்த உச்சவரம்பு அளவிற்குக் கூடுதலாக பயிரிடு குத்தகைதாரரிடம் உள்ள நிலத்தை அங்கீகாரம் பெற்ற அதிகாரி கையகப்படுத்தி, அந்த நிலத்தை நில மற்றவர்களுக்குக் குத்துகைக்குப் பங்கிட்டளிக்க வேண்டும், 'பயிரிடுங் குத்தகைதாரர்' என்பதில் நிலத்தை தன் வசம் வைத்துள்ள குத்தகை தாசரும் அடங்குவார்.

உச்சவரம்புச் சட்டத்தில் விலக்கு என்பது மிக முக்கியமான கூறாகும். 1961 ஆம் ஆண்டு முதல் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள மேற்சொன்ன பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நோக்கு அறநிலையங்கள், அறப் பொறுப்புக் கழகங்களின் ஆளுகையில் உள்ள நிலங்கள் முழுமைக்கும் தொடர்ந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பின்வரும் இனங்களில் இச்சட்டத் தின் கீழ் முன்னர் விலக்களித்து பின்னர் இச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்த சட்டங்களின் விளைவாக அவ்வாறு விலக்களிக்கப்பட்டதிலிருந்து அவை நீக்கி விடப்பட்டன.

(1) ஆலைகள் பயனுக்காக கரும்பு விளைவிக்கப்படும் நிலம்.

(2) மேய்ச்சலுக்கென்றே பயன்படுத்தப்பட்ட நிலம்.

(3) மலைப் பகுதியிலுள்ள நிலம்.

(4) பால் பண்ணை, கால்நடை இனப்பெருக்கப் பண்ணைக்காகவென்றே பயன்படுத்தப்பட்ட நிலம்.

மலைத் தோட்டங்கள், தோப்புகள், விறகு மரங்கள், பழத் தோட்டங்கள், முதலியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள், அவ்வாறு தொடர்ந்து பயன்படுத்தப்படும் கால அளவு வரை அவற்றிற்கு விலக்களிக்கப்படுகிறது. மேற்சொன்னவை தவிர நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் வைத்துள்ள நிலம், கிராம தான நிலம், பூதானமாக வழங்கப்பட்ட நிலம் அல்லது இராணுவத்தினர் புரிந்த வீரச் செயல்களுக்கு விருதுகளாக வழங்கப்பட்ட நிலம் ஆகியவை விலக்களிக்கப்படுகின்றன.

நில நடுவர் மன்றங்களை அமைப்பதற்கு தமிழ்நாட்டு 1979 ஆம் ஆண்டு 11 ஆம் சட்டத்தின் மூலம் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடுவர் மன்றங்களில் மாவட்ட வருவாய்துறை அதிகாரிகள் பதவித் தரத்திற்கு குறையாத அதிகாரிகள், தலைவர்களாக இருப்பர். மேல்முறையீடுகள் அதிகமாகச் சேர்ந்து வருவதைத் தவிர்க்கும் பொருட்டு நில நடுவர் மன்றம் ஒன்றிலிருந்து பிறிதொரு நில நடுவர் மன்றத்திற்கு மேல் முறையீடுகளை அனுப்பி வைக்கும் அதிகாரம், நில ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் அதிக மக்கள் பயனடையும் பொருட்டு, ஒப்படை செய்யப்படும் உபரி நிலங்களின் உயரளவு பரப்பளவை, தற்போதுள்ள 5 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 3 சாதாரண ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ சாதாரண ஏக்கர் நன்செய் நிலம் என்று குறைத்து தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை விநியோகம் செய்தல்) விதிகள் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளன.

5. நிலங்களின் மொத்த விளைச்சல் சதவீதத்தின் அடிப்படையில் அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் ஆண்டு நிகர வருவாயின் அடிப்படையில் உபரி நிலங்களாகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு முன்பு தொகை (இழப்பீடு) வழங்கப்பட்டது. இதனால் உபரி நிலங்களுக்குச் செலுத்தத் தக்கத் தொகை, சில இனங்களில் அத்தகைய நிலத்தின் அங்காடி நிலையைக் காட்டிலும் அதிகமாக இருந்தது எனக் கண்டறியப்பட்டது. 11/79 ஆம்

சட்டத்தின் கீழ், செலுத்தத்தக்க நில வரித் தொகையின் அடிப்படையில், நல்ல தரமான நிலத்திற்குச் செலுத்தத்தக்க தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 3,500-க்கு மேற்படாமல் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு தொகை நிர்ணயம் செய்வதால், ஒப்படை பெற்றவர்கள் நிலக்கிரயத்தை செலுத்து வதில் சுமை பெருமளவில் குறைகின்றது. இச்சட்டத்தின்கீழ், 31—3—1980 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட பணி முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(அ) அனுபோகத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பும், அதற்கு பின்பும் ரத்து செய்யப்பட்டவைபோக உபரியாக அறிக்கையிடப்பட்ட நிலங்கள்	1,18,827 ஏக்கர்.
(ஆ) அறிவிப்பு விசாரணை ஆகியவற்றின் கீழ்வரும் நிலப்பரப்பு	25,318 ஏக்கர்.
(இ) அனுபோகத்திற்கு எடுத்துக்கொண்ட ரத்துச் செய்யப்பட்ட நிலம் நீங்கலாக உள்ள ஒப்படை செய்ய வேண்டிய நிலத்தின் நிகரப்பரப்பு	1,13,220 ஏக்கர்.
(ஈ) தகுதிவாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு	72,337 ஏக்கர்.
(உ) தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலப்பரப்பு	4,041 ஏக்கர்.
(ஊ) பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு	7,031 ஏக்கர்.

குறிப்பு.—ஒதுக்கப்பட்ட பரப்பளவில் ஏற்பட்டுள்ள குறைவு இணக்கம் செய்யப்பட்ட புள்ளி விவரங்களைப் பயன்படுத்தியதால் ஏற்பட்டுள்ளது.

1952ஆம் ஆண்டு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்.—இச்சட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பண்ணையாட்களுக்குக் கூலி நிர்ணயம் செய்தல், முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கும் இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இணக்க அதிகாரிகள் துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வகை செய்கிறது. சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு

நீக்கப்பட்டுவிட்டது. இச்சட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வெளியேயும் நீட்டிப்பதற்காகத் தேவைப்படும் சில மாற்றங்கள் 25/1956 ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தின் மூலம் செய்யப்பட்டன. இச்சட்டம், பண்ணைக் கூலியாட்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்குமிடையேயுள்ள நல்லுறவை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இச்சட்டம் 1952 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23 ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் செயலுக்கு வந்தது. இச்சட்டம் 1—7—1959 முதல் தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம், கடலூர் ஆகிய வட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம்

குத்தகை செலுத்தாமல் இருத்தல், நிலம் அல்லது நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு ஊறுவிளைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல். நிலத்தை பயிரிடத் தவறுதல். வேளாண்மைக் காரியங்கள் அல்லது தோட்டப் பணிக்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்காக நிலத்தைப் பயன்படுத்தல் அல்லது நிலச் சொந்தக்காரரின் உரிமையை மறுத்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தாலொழிய மற்றபடி எந்த ஒரு பயிரிடு குத்தகைதாரையும் நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. நிலச்சொந்தக்காரர் ஒருவர் குத்தகைக்கு விட்டுள்ள நிலத்தின் ஒரு பகுதியைத் தாமே சொந்தமாக பயிரிடும் பொருட்டு மீண்டும் எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு வகை செய்யும் 18/1976 ஆம் ஆண்டுச் சட்டத்தின் -எ பிரிவு நீக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நிலச்சொந்தக்காரர் தாமே சொந்தமாகப் பயிரிடும் பொருட்டு, குத்தகைக்கு விட்டுள்ள நிலத்தை மீண்டும் பெற இயலாது.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955) மற்றும் தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) சட்டம் ஆகிய இரு சட்டங்களின் விதித்துறைகளிலிருந்து மைய அரசு அல்லது மாநில அரசு சொந்தமாக வைத்துள்ள அல்லது குத்தகைக்கு எடுத்துக்கொண்டுள்ள நிலங்களுக்கும் மற்றும் உள்ளாட்சி மன்றம் அல்லது மைய அரசு அல்லது ஒரு

மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுமம் அல்லது கழகத்திற்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கும் ஒரு சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட நிலங்களுக்கும் விலக்களிக்க தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்தச் சட்டம்) இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் நியாயவாரம் (செலுத்தல்) (தமிழ்நாடு சட்டம் 24/1956) சட்டம்:

இச்சட்டம் நியாய வாரம் செலுத்துவதைக் குறித்ததாகும். இச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நியாய வாரத்தொகை குறித்த விவரம் வருமாறு:—

(1) நன்செய் நிலம்—சாதாரண மொத்த விளைச்சலின் 40 சதவீதம் அல்லது அதற்கு ஈடான தொகை.

(2) பாசன வாயில்கள் மூலமும் இறைவைப்பாசனம் மூலமும் பாசனம் பெறும் நன்செய்நிலம்—சாதாரண மொத்த விளைச்சலின் 35 சதவீதம் அல்லது அதற்கு மொத்த ஈடான தொகை.

(3) ஏனைய வகையில் வகைப்படுத்தப்பட்ட நிலம்—33-1-3 சதவீதம் அல்லது அதற்கு ஈடான தொகை.

(1) மேலே (2), (3) ஆம் வகைகளின் கீழ் வருகின்ற நிலத்தைப் பொறுத்தவகையில் (நிலச் சொந்தக்காரர் தமது சொந்தச் செலவில் நிறுவிய விசையேற்றங்களின் மூலம் நீர்பாசனம் பெறும் நிலங்கள்) மொத்த உற்பத்தி மதிப்பில் (ரூபாயில்) 40 சதவீதமாக நியாய வாரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

(2) ஒவ்வொரு அறுவடையின்போதும், நிலச் சொந்தக்காரர் அனைத் துப் பயிர்களின் வைக்கோல் அல்லது தண்டின் ஐந்தில் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பயிரிடுவதற்கான செலவைக் குத்தகைதாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும். நிலவரியையையும் அரசிற்கும், உள்ளாட்சி அதிகாரமன்றங்களுக்கும் சேர வேண்டிய, ஏனைய பாக்கிகளையும் நிலச்சொந்தக்காரர் செலுத்தவேண்டும். அத்தகைய ஒரு நிலத்தில் முக்கிய பயிராக கரும்புத் தோட்டம் வெற்றிலைத் தோட்டம் அல்லது பயிரிடத் தொடங்கியதிலிருந்து தொடர்ந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு தொடர்ந்து பயனளிக்காத பிற பயிர்கள் அல்லது விளைபொருளை சேகரிப்பதற்கு அல்லது அறுவடை செய்வதற்காகவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதற்கும் பயன்படுத்தப்படும் நிலத்திற்கு இச்சட்டம் பொருந்தாது. நிலத்திற்குச் செலுத்தத்தக்க குத்தகை தொடர்பான தகராறுகள் குத்தகை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப் படவேண்டும். அந்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக, உயர்நீதிமன்றத்தின் மறு ஆய்விற்கு உட்பட்டு, குத்தகை நடுவர் மன்றத்திற்கு முறையீடு செய்ய லாம்.

பயிரிடும் குத்தகைதாரரால் நிலச்சொந்தக்காரருக்குச் செலுத்தத்தக்க நியாயவாரம் இயல்பான மொத்த மகசூலில் 25 சதவீதமாகவும் குறைக்கவும் அந்த நிலத்திற்குரிய நிலவரி ஏனையவர்கள் ஆகியவற்றைச் செலுத்தும் பொறுப்பு முன்போலவே நிலச்சொந்தக் காரரைச்சேரவும் ஒவ்வொரு அறுவடையிலும் எல்லாப்பயிர்களின் வைக்கோலில் அல்லது தட்டையில் ஐந்தில் ஒரு பகுதி நிலச்சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டு வருவதற்கு வகை செய்யும் தற்போதுள்ள விதித்துறையை நீக்கவும் கரும்பு பயிரிடுவதற்காக பயன் படுத்தப்படும் நிலத்தைப் பொருத்தமட்டில், வழங்கப்பட்டுள்ள விலக்கை நீக்கவும் சட்டமுன்வடிவு இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1958 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி கைஏர்வாரா ; மாட்டுவாரச் சட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள குளித்தலை, முசிரி, கரூர், திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய வட்டங்களில் உள்ள சில கிராமங்களுக்கு இச் சட்டம் பொருந்தும். இந்த சட்டம் 1—4—1959 ஆம் நாள் செயலுக்கு வந்தது. சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு கை ஏர்வாரதாரர்களுக்கும் மாட்டுவாரதாரர்களுக்கும் இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம்.

பண்ணையின் கீழ் இருபது ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கூடுதலான நிலத்தின் எந்தப் பொதுப் பொறுப்புக் கழகமும் பயிரிட முடியாது. பொதுப் பொறுப் புக் கழகங்களின் நிலத்தை பினாமி குத்தகைக்கு விட்டிருப்பது கண்டறியப் பட்டு இருபது ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கூடுதலாக உள்ள நிலம் தனிப்பட்ட வர்களுக்கும், குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இப்பணி நடைபெற்று வருகிறது.

பயிரிடும் குத்தகைதாரரால் நிலச் சொந்தக்காரருக்குச் செலுத்தத் தக்க நியாயவாரம் இயல்பான மொத்த மகசூலில் 25 சதவீதமாகவும் குறைக்கவும் அந்த நிலத்திற்குரிய நிலவரி ஏனைய வரிகள் ஆகியவற்றைச் செலுத்தும் பொறுப்பு முன்போலவே நிலச் சொந்தக்காரரைச் சேரவும் ஒவ்வொரு அறுவடையிலும் எல்லாப் பயிர்களின் வைக்கோலில் அல்லது தட்டையில் ஐந்தின் ஒரு பகுதி நிலச் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டு வருவதற்கு வகை செய்யவும் தற்போதுள்ள விதித்துறையை நீக்கவும் கரும்பு பயிரிடுவதற்காக பயன்படுத்தப்படும் நிலத்தைப் பொருத்தமட்டில், வழங்கப்பட்டுள்ள விலக்கை நீக்கவும் சட்டமுன்வடிவு இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படு வதிலிருந்து பாதுகாப்பு) சட்டம்.

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 36/1976) திருத்தப்பட்டவாறு, 30—6—1976 ஆம் நாளுடன் முடிவடையும் விளைச்சல் பசலி ஆண்டிற்கும், அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டிற்கும் உரிய குத்தகைப் பாக்கியைச் செலுத்தாத காரணத்தால், பயிரிடு குத்தகைதாரர் களை வெளியேற்றுவதிலிருந்து 15—7—1980 ஆம் நாள் வரையிலும், அந்நாள் உட்படவும் பாதுகாப்பு அளிக்கிறது. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடு குத்தகைதாரர்கள்

(தற்காலிக நிவாரண) சட்டம். திருத்தப்பட்டவாறு, 1387 ஆம் விளைச்சல் ஆண்டிற்கும் (30—6—1978 ஆம் ஆண்டுடன் முடிவடையும்) அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளுக்கும் உரிய குத்தகையைச் செலுத்தாத காரணத்தால், குத்தகை வசூல் நடவடிக்கைகளிலிருந்து அல்லது வெளியேற்றுவதிலிருந்து இம்மாநிலத்தின் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த பயிரிடு குத்தகைதாரர்களுக்கு 16—7—1980 ஆம் நாள் வரையிலும் அந்நாள் உட்படவும் பாதுகாப்பு அளிக்கிறது. இப்பாதுகாப்புகளின் பயனாக பயிரிடும் குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்களுக்கு செலுத்தவேண்டிய குத்தகைத்தொகை கணிசமான அளவு பெருகிவிட்டதன் பயனாக, அவைகளைச் செலுத்துவதற்கு நிரந்தர நிவாரணம் அளிக்கும் பொருட்டு சட்ட முன்வடிவுகள் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டம்.

குத்தகைதாரர்களின் நலனைப் பாதுகாக்க, குத்தகைதாரர் உரிமைகள் குறித்த முழுமையான பதிவேடு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இச்சட்டம் இயற்றப்பட்டது. நிலவரி ஏற்பாட்டுப் பணி முடிவுறாமலிருக்கின்ற சில கிராமங்களைத் தவிர மாநிலம் முழுவதும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக 4,35,131 பேர் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 6,23,740 ஏக்கர் பரப்பு குத்தகைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம்.

இச்சட்டம் குடியிருப்பு அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை வழங்குகிறது. (வீட்டு மனைகள்) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு இணங்க 19—6—1971 ஆம் நாள் நிலவரப்படி குத்தகைத்தாரராக அல்லது உரிமதாரராக குடியிருப்புப் பகுதி ஒன்றை வைத்திருக்கும் விவசாயி அல்லது

வேளாண்மை பணியாளர் ஒருவர், இச்சட்டம் செயலுக்கு வரத்தொடங்கிய நாள் முதற்கொண்டு அப்பகுதியின் சொந்தக்காரர் ஆவார். அப்பகுதி வில்லங்கம் ஏதுமின்றி அவரிடம் நிலை பெற்றிருக்கும் மலைத்தோட்டங்களுக்கும், மலைத் தோட்ட துணை காரியங்களுக்காகவுள்ள நிலங்களுக்கும் சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற அதிகாரியின் முன் அனுமதியின்றி பத்தாண்டு காலத்திற்கு இந்நிலத்தைப் பிரிப்பதிலிருந்து குடியிருப்பு அனுபோகதாரரை இச்சட்டம் தடுக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள், குடியிருப்புதாரர்களுக்கு மாற்று இடம் வழங்க 6/1976 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 31—3—1980 வரையில் 1,78,594 பேருக்கு குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. நிலச் சொந்தக்காரர்களுக்கு அரசு நிதியிலிருந்து இழப்பீடு வழங்கப்படுகிறது. குடியிருப்பு உடைமை உரிமை வழங்கப்பட்டிருக்கின்ற குடியிருப்புதாரர்களிடமிருந்து நிலத்தின் மதிப்பிற்குத் தொகை எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராம கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல்) சட்டம்.

1—7—1975 ஆம் நாள் நிலவரப்படி குத்தகைதாரராக அல்லது உரிமதாரராக தமிழ்நாடு மாநிலத்தில் குடியிருப்புகளைப் பெற்றிருக்கும் கிராம கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தைச் செயற்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது. 31—3—1980 வரையில் இச்சட்டத்தின் கீழ் 247 பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 371 பேருக்கு பட்டாக்கள் வழங்கப்படவிருக்கிறது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைப் பணியாளர் நியாய ஊதியச் (சட்டம் எண் 19/1969).

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம் ஆகிய ஏழு கிழக்கு வட்டங்களுக்கு நெற் பயிரிடுவதற்கு மட்டும் இச்சட்டம் பொருந்தும். நியாய ஊதியம் வழங்குவதற்கும், நியாய ஊதியம் முன்னர் திருத்தி

யமைக்கப்பட்டநாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்குள் மறு ஆய்வு செய்து திருத்தியமைக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. அரசு அவ்வப்போது வேளாண்மைப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதிய வீதங்களைத் திருத்தி அமைத்துள்ளது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம்

தஞ்சாவூர் கிழக்கு மாவட்டத்தில் தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை பணியாளர் நியாய ஊதியச் சட்டம் செயலில் இருக்கிறபடியால், அம்மாவட்டத்தைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பிரிவிலுள்ள பணியாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு இறுதியாக திருத்தியமைத்தவாறு கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

			ரூ. காசு.
1.	உழவு மாடுகளையும் ஏரையும் தாமே கொண்டு வந்து உழுகின்ற பணியாளர் ஒருவருக்கு.	நாளொன்றுக்கு	12-00
2.	ஏரின்றி உழவு மாடின்றி வந்து உழுகின்ற ஒரு பணியாளருக்கு.	நாளொன்றுக்கு	7-00
3.	நெற்பயிர் அறுவடை செய்யும் பணியாளர் ஒருவருக்கு.	நாளொன்றுக்கு அல்லது மொத்த விளைச்சலில் 8-ல் ஒரு பங்கில் பணியாளரின் பங்கின் மதிப்பு இவற்றில் எது அதிகமோ அது.	7-00
4.	நெற்பயிரைத் தவிர ஏனைய பயிர்களை அறுவடை செய்யும் பணியாளர் ஒருவருக்கு.	நாளொன்றுக்கு	7-00
5.	நாற்று நடுபவர் அல்லது களை பறிக்கும் பணியாளர் ஒருவருக்கு.	,,	5-00
6.	கரைகளையும் வயல்களையும் ஒழுங்குபடுத்துதல், மரம் ஏறுதல் முதலிய பணிகள் உட்பட ஏனைய வேளாண்மை பணிகளில் ஈடுபடுகின்ற பணியாளர் ஒருவருக்கு.	,,	7-00

இந்த வீதங்கள் 15-9-1979 ஆம் நாளிலிருந்து பொருந்தும்.

நகர்ப்புற நிலவரி.

1—7—1963 முதல் செயலுக்கு வந்த தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் சென்னை மாநகரிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு இதன் அதிகாரவரம்பை நீட்டித்து 1971 ஆம் ஆண்டில் இச்சட்டம் திருத்தப்பட்டது 1—7—1971 முதல் படிநிலை வரி விதமும் இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்டது. வரிவிதிக்கப்படுபவர் ஒருவர் வைத்திருக்கும் மொத்த நிலத்தில் முதல் இரு மனைகளுக்கு 1-7-1979 முதல் வரி விலக்கு அளிக்கும் வகையில் இச்சட்டம் 1972 ஆம் ஆண்டில் திருத்தப் பட்டது. சொந்தக்காரரின் அனுபோகத்தில் இருக்கும் மனைகளுக்கு 50 சத வீதம் வரிச் சலுகையும் அளிக்கப்பட்டது. நன்செய் அல்லது புன்செய் நிலங்கள் என்று பதிவு செய்யப்பட்டு இச்சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னதாக 5 விளைச்சல் ஆண்டுகள் தொடர்ந்து நன்செய் அல்லது புன்செய் பயிர்கள் விளைவிக்கப்பட்ட நிலங்களுக்கும், தொடர்ந்து பயிர் செய்யப்பட்டு வருகின்ற நிலங்களுக்கும் நகர்ப்புற நிலவரியினின்றும் விலக்களிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டுத் திருத்தத்தின் மூலம் சென்னை மாநகர் எல்லையிலிருந்து பதினாறு கிலோமீட்டர் சுற்றளவுக்குள் உள்ள சென்னைப் புறநகர்ப் பகுதியும் இச்சட்டத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டது. வரி விதமும் திருத்தியமைக்கப்பட்டது. நகர்ப்புற நில வரியையும், குடியிருப்புப் பகுதி யாகவும் குடியிருப்புக்கு அல்லாத பகுதியாகவும் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்களுக்கான வெவ்வேறு வரி விதங்களையும் கணக்கிடுவதற்கான அடிப்படை யாக 1—7—1971 ஆம் நாள் நிலவரப்படியுள்ள அங்காடி பதிவு பின்பற்றப் பட்டது.

வரிவிதிப்பு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைவிட 6 முதல் 16 மடங்கு அதிகமாகியுள்ளதெனப் பொது மக்களும் நிறுவனங்களும் முறையீடுகள் செய்துகொண்டதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டில் அரசு சில சலுகைகளை அறிவித்தது. அவற்றின் விவரம் வருமாறு :—

(1) குறிப்பாக அரசுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன் பேரில் கல்வி, சமய, அற, தொண்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் கட்டிடங்கள் கட்டப்பட்டு அக்கட்டிடங்களிலிருந்து வந்து வருமானத்தை

வருமானம் பெறுகின்ற நிலங்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் அந்நிறுவனங்கள் அனைத்திற்கும் நகர்ப்புற நிலவரியினின்றும் முழுவரி விலக்கு அளிக்கப்படும். ஆனால் அந்நிறுவனங்களிலிருந்து பெறும் வருமானம், அந்நிறுவனங்களின் செயல் நோக்கத்திற்காகவும் குறிக்கோள்களுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

(2) சென்னை மாநகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியச் சட்டத்தில் கீழ் குடிசைப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களும் வரி விதிப்புக்கு உட்படாதவையாக கருதப்படுகின்றன.

(3) (அ) சினிமா ஸ்டூடியோக்களுக்கும் மதசார்பற்ற பொழுதுபோக்கு நிறுவனங்களுக்கும் சொந்தமான காலி நிலங்களையும் கட்டிடங்கள் உள்ள பகுதிகளையும் பொறுத்தமட்டிலும்

(ஆ) சங்கீதம், நாடகம் அல்லது ஏனைய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் ஏனைய நிலங்களைப் பொறுத்தவரையிலும்

(இ) கட்டிடங்கள் கட்டப்பட்டு முழுவதும் குடியிருப்பதற்காகவே பயன்படுத்தப்படும் இடங்களைப் பொறுத்தமட்டிலும் நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் குறைக்கப்படும்.

(4) எல்லாத் திரை அறங்கங்களுக்கும் 10 சதவீத வரித் தள்ளுபடி.

(5) சென்னை நகரைப் பொறுத்தமட்டில் 1-7-1971 ஆம் நிலவரப்படி கணக்கிடப்படவிருக்கிற அங்காடி மதிப்பு 1963 ஆம் ஆண்டு மதிப்பைப் போல இருமடங்கிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என வரையறுக்கப்படுகிறது. செல்லுபடியாகக் கூடிய சிறு தொழில் சான்றிதழ்களை வைத்திருக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 25 சதவீதச் சலுகையும் ஏனைய தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 10 சதவீதச் சலுகையும் 1978 ஆம் ஆண்டில் அரசு வழங்கியது.

நிர்வாக அமைப்பு :

நகர்ப்புற நில உச்சவரம்பு நகர்ப்புற நிலவரித் துறை இயக்குநர் இத்துறையின் தலைவராவார். துணை ஆணையாளர் நில அளவை நகர்ப்புற நில உச்சவரம்பு நகர்ப்புற நிலவரி இயக்குநருக்கு உதவி புரிவதுடன் நில அளவை

வேலைகளை மேற்பார்வையிட்டு வருகிறார். உதவி ஆணையாளர்கள் வரி விதிப்பு அதிகாரிகளாவர். இவர்கள் இயக்குனரின் நேர்ப்பார்வையின்கீழ் பணி புரிந்து வருகிறார்கள். நடப்பு ஆண்டில் செய்யப்பட்ட வரி விதிப்புப் பணி களின் விவரம் வருமாறு :—

தொடர் எண்.	விவரங்கள்.	1966 ஆம் ஆண்டு மூல சட்டம்.	1971 ஆம் ஆண்டு திருத்த சட்டம்.	1972 ஆம் ஆண்டு திருத்த சட்டம்.	1973 ஆம் ஆண்டு திருத்த சட்டம்.
1.	31-3-79 ஆம் நாள் நிலவரப்படி நிலுவை யாக உள்ள வரிவிதிப்பு களின் எண்ணிக்கை.	..	..	...	14,171
2.	1979-80 ஆம் ஆண்டில் வரப்பெற்றவை.	..	..	...	447
3.	1979–80 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை களின் எண்ணிக்கை.	..	..	...	9,922
4.	31-3–80 ஆம் நாள் நில வரப்படி நிலுவையாக உள்ளவை.	..	..	...	4,896

மேல் முறையீடுகள் :

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையாளரின் ஆணைகளுக்கெதிரான மேல் முறையீடுகள் நகர்ப்புற நிலவரி நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்யப்படு கின்றன. மேல்முறையீடுகளின் விவரங்கள் வருமாறு :—

ஆண்டுத் தொடக்கத்தில் நிலுவையாக இருந்த மேல் முறையீட்டு மனுக்களின் எண்ணிக்கை	1,598
இவ்வாண்டு வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	222
இவ்வாண்டு முடிவு எடுக்கப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	307
ஆண்டு முடிவில் நிலுவையாக உள்ள மேல் முறையீடு களின் எண்ணிக்கை	1,513

மறு ஆய்வு :

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் 30 (1) பிரிவின் கீழ் வருவாய்த் துறை (நகர்ப்புற நிலவரி) வாரியத்தால் மறு ஆய்வு மனுக்கள் பெறப்படுகின்றன. ஆனால் இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் நகர்ப்புற நிலவரி நடுவர் மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டிராதவையும் இச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டவையுமான ஆணைகள் தொடர்பான மறு ஆய்வு மனுக்கள் மட்டுமே வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டு வரப்பெற்ற 701 மனுக்கள் உட்பட மொத்தம் 945 மனுக்களில் 568 மனுக்கள்மீது முடிவு எடுக்கப்பட்டுவிட்டன. 31-3-1980 ஆம் நாள் நிலவரப்படி 377 மனுக்கள் நிலுவையாக உள்ளன.

கேட்பு வசூல் நிலுவை :

பாக்கித் தொகை உட்பட மொத்தக் கேட்புத் தொகையான ரூபாய் 30 கோடியில் இவ்வாண்டில் ரூபாய் 19.02 கோடி வசூல் செய்யப்பட்டது.

நகர்ப்புற நில உச்சவரம்பு.

நகர்ப்புற நிலங்கள் ஒரு சிலரிடம் குவிந்து விடுவதைத் தடுக்கும் பொருட்டு தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு கட்டுதல் முறைப் படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம், நகர்ப்புறக் கூட்டுப் பகுதியில் உள்ள காலி நிலங்கள் குறித்து உச்சவரம்பு கட்டுவதோடு உச்சவரம்புக்கு மேற்பட்டுள்ள அத்தகைய நிலங்களைக் கையகப் படுத்துவதற்கும் அத்தகைய நிலங்களில் கட்டிடங்கள் கட்டுவதை முறைப்படுத்துவதற்கும் வகை செய்கிறது. சுற்றிலும் 8 கிலோ மீட்டர் பரப்புடன் கூடிய சென்னை மாநகர்க் கூட்டுப் பகுதியிலும் சுற்றிலும் 9 கிலோ மீட்டர் பரப்புடன் கூடிய சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரக் கூட்டுப் பகுதிகளிலும், 1 கிலோ மீட்டர் பரப்புடன் கூடிய திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதியிலும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒருவருக்கு சென்னை மாநகரக் கூட்டுப் பகுதியில் வரையறுக்கப்பட்டுள்ள நில உச்சவரம்பு 500 சதுர மீட்டர் ஆகும். சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரக் கூட்டுப் பகுதிகளில்

வரையறுக்கப்பட்டுள்ள நில உச்சவரம்பு 1,500 சதுர மீட்டர் ஆகும். திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதியில் வரையறுக்கப்பட்டுள்ள நில உச்ச வரம்பு 2,000 சதுர மீட்டர் ஆகும். இச்சட்டம் 1978 ஆம் ஆண்டில் திருத்தப் பட்டது. இச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுள் முக்கியமானவை பின்வருமாறு :—

(1) சென்னை மாநகர்க் கூட்டுப் பகுதியின் பரப்பளவு 1,400 சதுர மீட்டரிலிருந்து 575 சதுர மீட்டராகக் குறைக்கப்பட்டது. ஏனைய நகரக் கூட்டுப் பகுதிகளின் பரப்பளவு முன்னர் இருந்த பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டது.

(2) 1976 ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாளுக்கு முன்னர் குடியிருப்புப் பகுதியுடன் கட்டப்பட்ட அல்லது அந்நாளன்று கட்டப்பட்டுவரும் யாதொரு கட்டிடத்திற்கும் குடியிருப்புப் பகுதியுடன் கட்டக் கருதப்பட்டுள்ள எக்கட்டி டத்திற்காக தகுதிவாய்ந்த அதிகாரியால் விளக்க வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதோ அக்கட்டிடத்திற்கும் அக்கட்டிடத்தைத் தொடர்ந்து அடுத்துள்ளப் பகுதியில் 500 சதுர மீட்டர் நிலத்தோடு அக்கட்டிடப் பரப்புக்கு 500 சதுர மீட்டர் நிலத்தையும் கொண்ட கட்டிடம் முறைப்பாட்டுப் பகுதி அனுமதிக்கப்படுகிறது.

(3) குடும்பம், தொழில் நிறுவனம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் நில உச்சவரம்பு அளவு தளர்த்தப்பட்டுள்ளது.

(4) இச்சட்டத்தைச் சேர்ந்த 25, 26 ஆம் பிரிவுகளில் ஏழை மக்களுக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்ட இடர்ப்பாடு பழைய சட்டத்திலிருந்த 25, 26, 27 ஆம் பிரிவுகளை நீக்கியதன் மூலம் களையப்பட்டது என்பதோடு பத்திரப் பதிவு செய்யும் அதிகாரியின் முன் நிலத்தை மாற்றிக்கொடுப்பவரும் மாற்று கொள்பவரும் உறுதிமொழியைத் தாக்கல் செய்தபின் பத்திரத்தைப் பதிவு செய் வதற்காக 27 என்னும் புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வருவாய்த் துறை (நகர்ப்புற நில உச்சவரம்பு) வாரியம் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. நகர்ப்புற நில உச்சவரம்பு இயக்குநர் அலுவல் முறையில் வாரியத்தின் செயலாளர் ஆவார்.

இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இவ்வாண்டில் 19 தகுதிவாய்ந்த அதிகாரிகள் இருந்தனர்.

இச்சட்டத்தைச் செயல்படுத்தியதில் ஏற்பட்ட பணி முன்னேற்றம் :

1976 ஆம் ஆண்டு சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழும் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் 7 (1) பிரிவின் கீழும் 14,087 விவரக் கணக்குகள் தகுதிவாய்ந்த பல்வேறு அதிகாரிகளிடம் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 10,588 விவரக் கணக்குகள் முடிவு செய்யப்பட்டன ; தனிப்பட்டவர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து 611 இனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டன. 9,977 இனங்கள் நில உச்சவரம்பு அளவிற்குள் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட விவர அறிக்கைகளில் அடங்கியுள்ளது. மிகையாகவுள்ள காலி நிலத்தின் பரப்பு 334.6 இலட்சம் சதுர மீட்டர் ஆகும். 431 விவரக் கணக்குகளைப் பொறுத்தமட்டில் 533.75 ஹெக்டேர் நிலங்களுக்கு 9 (1) பிரிவின்கீழ் வரைவு விவர அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. 75.96 ஹெக்டேர் நிலம் அடங்கிய 99 இனங்களுக்கு இச்சட்டத்தின் 11(1) பிரிவின்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக 10.33 ஹெக்டேர் நிலம் அடங்கிய 13 இனங்களுக்கு இச்சட்டத்தின் 11 (3) பிரிவின்கீழ் அறிவிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்குரிய மேல் முறையீட்டு அதிகாரி வருவாய்த் துறை (நகர்ப்புற நில உச்சவரம்பு) வாரிய உறுப்பினர் ஆவார். இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட 254 மேல் முறையீடுகளில் 237 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன ; 17 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்படாமலுள்ளன.

வேளாண்மை வருமான வரி.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டத்தை 1979-80-லும் வேளாண்மை வருமானவரி ஆணையாளர் செயல்படுத்தி வருகிறார். துணை மாவட்டாட்சியர் பதவித் தரத்தில் வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர்கள் ஐவரும் நேர்முக உதவியாளர்கள் இருவரும்

டுள்ளனர். வட்டாட்சியர் பதவித் தரத்தில் உள்ள வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் 30 பேர், வரி மதிப்பீட்டுப் பணியைச் செய்து வருகின்றனர்.

சிறப்பு அம்சங்கள் :

வரிவிதிக்கப் பெறுபவர் ஒருவரின் நில உடைமையைக் கணக்கிடுவதற்காக சாதாரண ஏக்கர்களை ஸ்டாண்டர்ட் ஏக்கர்களாக மாற்ற விளைவிக்கப்பட்ட பயிர்களை அடிப்படையாகக் கொள்ளும் வகையில் 1979 ஏப்ரலில் இச்சட்டம் திருத்தப்பட்டது. விளைவிக்கப்பட்ட இரண்டாவது, மூன்றாவது போக பயிர்களும் மேற்சொன்ன காரியத்திற்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. விலக்கு வரையரை உயர்த்தப்பட்டுள்ளது.

வரிவிதிப்புப் பணியில் கடைசி முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	முடிவு செய்ய வேண்டிய இனங்கள். (1)	முடிவு செய்யப் பட்ட இனங்கள். (2)	பாக்கி. (3)
பழையது	637	466	171
நடப்பு	60,774	60,535	239
	61,411	61,001	410

1979-80 முடிந்த ஆண்டின் வசூல் ரூபாய் 6,82,32,826.46.

நில அளவை—நில ஆவணங்கள்.

நில அளவை—நிலப் பதிவேடுகள் துறை அறிக்கையாண்டில் பின்வரும் பணி இனங்களை மேற்கொண்டது :—

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் நிலங்களை மறு நில அளவை செய்தலில் எஞ்சிய பணிகளும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள 1963 ஆம் ஆண்டு 2 ஆம் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 3 ஜாகிர் இனாம் எஸ்டேட்டுகளை நில அளவை செய்யும் பணியும், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் குன்றுகளிலுள்ள பெரிய கல்ராயன், மேல்நாடு, கீழ்நாடு இனாம் எஸ்டேட்டுகளில் நில அளவை செய்யும் பணியும் அறிக்கையாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

அரசு எடுத்த முடிவிற்கிணங்க, நீலகிரி மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டம், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கோடைக்கானல் வட்டம், பழைய முறையான அடி-பவுண்டு முறையின்கீழ் மறு நில அளவைப் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்ட கீழ்பவானி திட்டப் பகுதி யின் கீழ் வருகிற கோயம்புத்தூர் மாவட்டம் பவானி, கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு வட்டங்கள் ஆகியவற்றில் 1,817 சதுர மைல் பரப்பளவில் மறு நில அளவைப் பணி தொடங்கி முடிக்கப்படவிருந்தது.

நீலகிரி மாவட்டத்தில் மெட்ரிக் முறையின்கீழ் மறு நில அளவை செய்து முடிக்கப்பட்ட மொத்தப் பரப்பு 349.19 சதுர கிலோ மீட்டர்கள் (134.78 சதுர மைல்கள்). பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள 22 கிராமங்களில் மறு நில அளவை இப்போது முடிக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில், நீலகிரி, சேலம் மாவட்டங்களில் மெட்ரிக் முறையின்கீழ் மறு நில அளவை செய்து முடிக்கப்பட்ட பரப்பு 228.39 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

1979 ஏப்ரலிலிருந்து 1980 மார்ச்சு வரையிலான கால அளவில் 272.39 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நகர நில அளவையும், 1,903.62 கிலோ மீட்டர் நீளத்திற்குத் தெரு அளவையும் செய்து முடிக்கப்பட்டன.

வருவாய்ப் பதிவேடுகள் பத்திரப் பதிவு வைத்து வருதலின்கீழ், பின்வரும் இனங்கள் அறிக்கையாண்டில் மேற்கொள்ளப்பட்டன :—

(a) கண்டுபிடிக்கப்பட்ட காணாமற்போன நில அளவைக் கற்களின் எண்ணிக்கை—

எ. வகுப்பு நில அளவைக் கற்கள்	11,985
பி. வகுப்பு நில அளவைக் கற்கள்	5,87,088

(b) புதுப்பிக்கப்பட்ட நில அளவைக் கற்களின் எண்ணிக்கை—

எ. வகுப்பு நில அளவைக் கற்கள்	512
பி. வகுப்பு நில அளவைக் கற்கள்	1,70,946

(c) அளக்கப்பட்ட நில உட்பிரிவுகளின் எண்ணிக்கை 5,05,379

பதிவேட்டினை நாளது தேதி வரையில் சரிசெய்யும் பணி :

நடப்பு ஆண்டில் கொண்டுவரப்பட்ட, வருவாய்ப் பதிவேட்டினை நாளது தேதி வரையில் சரிசெய்யும் திட்டம் 1-6-1979 ஆம் நாளிலிருந்து இம்மாநிலத்தில் நடைமுறைக்கு வந்தது. சென்னை, நீலகிரி, பெரியார், கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் வரும். தவிர்க்கப்பட்ட பகுதிகளில், "மனு நீதித் திட்ட" நடைமுறையின் மூலம், பதிவேட்டினை நாளது தேதி வரையில் சரி செய்யும் பணி தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

இது சுமார் 30,000 சதுர மைல்கள் (77,700 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐந்தாண்டுத் திட்டப் பணியாகும். இம்மாநிலத்தில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த 29 வட்டங்களில் இத் திட்டப் பணி நடைபெற்று வருகிறது.

நடப்பு ஆண்டில், செய்து முடிக்கப்பட்ட பணி குறித்த விவரங்கள் வருமாறு :—

1. இடவகையில் பணி முடிக்கப்பட்ட பரப்பு :	4,618.80 ச.கி.மீ.
2. நில அளவைப் பணி முடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	552
3. நில அளவைப் பணி முடிக்கப்பட்ட பரப்புகள்	3,550.01 ச.கி.மீ.
4. அளக்கப்பட்ட நில உடைமை உட்பிரிவுகளின் எண்ணிக்கை	4,23,522

மனு நீதித் திட்டம்.

வருவாய்த் துறையின் 28-6-1969 ஆம் நாளிட்ட 1769 ஆம் எண் ஆணை மூலமாகச் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட மனு நீதித் திட்டம் இந்த ஆண்டில் தொடர்ந்து செயலில் இருந்தது. மாவட்ட பிற அதிகாரிகளின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் மாவட்ட ஆட்சியர்களால் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. நில அளவை, ஊராட்சி மேம்பாடு, வேளாண்மை, பொதுப்

பணிகள், மின் துறை முதலிய துறைகளிலிருந்து வரும் பிரதிநிதிகளுடன் வட்டத் துணை ஆட்சியரின் தலைமையில், அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் முன்னதாக கொடுத்த திட்டப்படி, ஒவ்வொரு பிர்க்காவிலுள்ள கிராமத்திற்கும் ஒவ்வொரு திங்களிலும் 5 ஆம், 6 ஆம் நாட்களில் சென்று, அங்கு வாழும் மக்கள் கொடுத்த மனுக்களைப் பெற்று கூடுமானவரையில் அந்தந்த இடங்களிலேயே அம்மக்களின் குறைகளைத் தீர்த்தனர். அவ்வாறு அந்தந்த இடத்திலேயே மனுக்களுக்குத் தீர்வுகளைக் காண இயலவில்லையாயின் சம்பந்தப்பட்ட துறைகளில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை, தீர்வு காணப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை, தீர்வு காணப்படாமலுள்ள மனுக்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

1-4-1979 அன்றுள்ளவாறு தீர்வு காணப்படாமலுள்ள மனுக்களின் எண்ணிக்கை.	இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை.	இந்த ஆண்டில் தீர்வு காணப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை.	31-3-1980 ஆம் ஆண்டு இறுதியில் ஒருவகை செய்யப்படாமலிருந்த மனுக்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
4,039	38,183	39,763	2,459

புயல், வெள்ளம்.

தமிழ்நாட்டில் 1979 அக்டோபர்-நவம்பரில் ஏற்பட்ட பெருமழையின் காரணமாக மனித உயிருக்கும், குடிசைகளுக்கும், சாலைகளுக்கும், வீடுகளுக்கும், பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும், பாசனவாயில்களுக்கும், பொது தனியார் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. இதனால் மதுரை, கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் தக்க நிவாரண நடவடிக்கைகளையும் பல்வேறு உதவிகளையும் செய்துள்ளது. அவை குறித்த விவரங்கள் வருமாறு :—

(1) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராமங்களில் வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த மக்களுக்கு உணவளிக்கும் நோக்குடன் அரசு வான வழியாக ரொட்டிகளை வினியோகம் செய்தது.

(2) பெருமழை அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு புடவையும் ஒரு வேட்டியும் இலவசமாக வழங்கவும் அரசு ஆணையிட்டது.

(3) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரண முகாம்களுக்கும் குடிபெயர்த்தப்பட்டுள்ளோருக்கும், உறவினர்களுடன் தங்கியுள்ளோருக்கும், சேதமடைந்த குடிசையை மீண்டும் கட்டுவதற்கு நிவாரணம் பெறத் தகுதியுடையோருக்கும் 30 கிலோகிராம் அரிசியை இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டது.

(4) பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பி.சி.டி. வகுப்பு அரசுப் பணியாளர்கள் தங்களுடைய விடுகளுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதத்தைப் போக்க செய்ய வேண்டிய உடனடி செலவை ஈடுகட்ட வட்டியில்லா கடன் வழங்க அரசு ஆணையிட்டது.

(5) மாவட்ட ஆட்சித் தலைவரால் பாதிக்கப்பட்டப் பகுதியாக திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் புதிய நாற்றுக்களை வளர்ப்பதற்குச் சிறு உழவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த கிடங்குகள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 30 மதிப்புள்ள விதை நெல்லை இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டது. சிறு தானியங்கள் பயிரிட விரும்புகின்ற விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 10 மதிப்புள்ள சிறு தானிய விதைகளை இலவசமாக வழங்க வேண்டுமென அரசு ஆணையிட்டது. இழப்பு விதத்திற்கு ஏற்ப நிவாரணம் அளிக்கப்பட்டது.

(6) வெள்ளத்தின்போது மணல் மூடிய நிலங்களை அல்லது கிணறு களை சீரமைப்பதற்கு சிறு விவசாயிகள் அல்லது குத்தகைதாரர்களைப் பொறுத்தமட்டில் இலவசமாகவும், ஏனையோருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000-மும், கிணறு ஒன்றுக்கு ரூ. 1,000-மும் வழங்கப்படலாம் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு 50 சதவீத உதவித் தொகையும் வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.

(7) திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம் புத்தூர் மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும், வாழைத் தோட்டங்களை மீண்டும் அமைக்கும் பொருட்டு, வேளாண்மைத் துறை அதிகாரிகளால் சேதமடைந்த தோட்டங்களை மதிப்பிட்ட பின்னர் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 100 உதவித் தொகை வழங்க வேண்டுமென அரசு ஆணையிட்டது.

(8) திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, இராம நாதபுரம் மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வெற்றிலைத் தோட்டங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 500 உதவித் தொகை வழங்கவும், இலவசமாக தென்னங்கன்றுகளை வழங்கவும் அரசு ஆணையிட்டது. பாதிக்கப்பட்ட பகுதி களிலுள்ள சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய 50 என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு நெற் பயிருக்குப் பயன்படுத்தப் பட்ட உரத்தில் ரூபாய் 25 உதவித் தொகையாக வழங்கவும் நெற்பயிருக்கு மருந்து தெளிப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 20 என்ற உச்சவரம்பிற்கும் உட்பட்டு, செலவில் 25 சதவீதம் உதவித் தொகை வழங்கவும் அரசு ஆணை யிட்டது.

(9) தமிழ் நாட்டில் பெரு மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும், பயிரை ஆய்வு செய்வதன் பேரில் பயிரின் மதிப்பு ரூபாய்க்கு ஆறு அணாவாகவும் (37 காசு) அதற்குக் குறைவாகவும் இருந்தால் வாரிய நிலையாணைக்கு இணங்க 1389 ஆம் விளைச்சலாண்டுக்குச் செலுத்தத்தக்க நிலவரி, தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ், கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை தனிவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை போன்றவற்றை முழு

வதுமாக தள்ளிவிட அரசு ஆணையிட்டது. 1389 ஆம் விளைச்சலாண்டிற்கு செலுத்தியிருக்கிற நிலவரி அனைத்திற்கும் உரிய உள்ளூர் செஸ் மேல் வரியை தள்ளிவிடுமாறும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு ஆணையிட்டது. இவ்வாறு தள்ளிவிடுவதால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை அரசு ஈடு செய்ய வேண்டும். 1389 ஆம் நடப்பு விளைச்சலாண்டிற்கு செலுத்தி யிருக்கிற நிலவரி, நிலவரி பாக்கி, தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ், கூடுதல் தண்ணீர்த் தீர்வை, கூடுதல் வரி, தனி வரி, தனித் தண்ணீர் வரியை வசூலித்தல் போன்றவற்றை நிலுவையாகவும் தக்காவிக் கடன் குறித்த நடப்புத் தவணைத் தொகைகளையும் 1390 ஆம் விளைச்சலாண்டிற்கு ஒத்திப்போடுமாறு அரசு ஆணை பிறப்பித்தது. உள்ளூர் செஸ் வரி வசூல் பாக்கியை ஒத்திப்போடுமாறு ஊராட்சி ஒன்றியங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

(10) பெரு மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த நபர் அல்லது நபர்கள் உயிரிழந்திருந்தால், அத்தகைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதல்வர் நிதியிலிருந்து ரூபாய் 1,000 கொடுக்க அரசு ஆணை யிட்டது.

(11) இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நிதி உதவி அளிக்க அரசு அனுமதி வழங் கியது. ரூ. 6,00,000 மேற்படாதத் தொகையைக் கடனாகவும் ரூ. 16,09,200 மேற்படாதத் தொகையை உதவித் தொகையாகவும் பாதிக்கப்பட்ட நெசவாளர் களுக்கு வழங்க அனுமதியளிக்கப்பட்டது.

(12) இம்மாநிலத்திலுள்ள பல்வேறு நகராட்சிகளுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 50 சதவிதம் மானியமாகவும் 50 சத விதம் கடனாகவும் ரூபாய் 200 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

(13) 1979 நவம்பரில் பெருமழையால் சேதமடைந்த பொதுப் பணித் துறைக் கட்டிடத்தைப் பழுதுபார்க்க அரசு 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 50.40 இலட்சம் அனுமதி வழங்கியது. இதற்கு சட்ட மன்றத்தின் ஏற்பளிப்பைப் பெற வேண்டியுள்ளது. 1979 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் சேதமடைந்த அரசு

சாலைகள், ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகளை சிரமைப்பதற்கான செலவிற்காகவும், பணிகளுக்கான கருவிகளையும் தளவாடங்களையும் வாங்குவதற்கும் அரசு ரூபாய் 760 இலட்சத்துக்கு அனுமதியளித்தது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு ரூபாய் 300 இலட்சம் செலவிடப்பட்டுள்ள போதிலும், அரசு சாலைகளுக்கு ரூபாய் 450 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. கருவிகளையும், தளவாடங்களையும் வாங்குவதற்கு ரூபாய் 10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(14) 1979 நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பாசன ஏற்பாட்டு முறையின்கீழ் வரும் கால்வாய்களில் ஏற்பட்ட உடைப்புகளை அடைக்கும் பொதுப் பணித் துறை செலவிற்காக அரசு ரூபாய் 150 இலட்சம் அனுமதித்தது.

(15) சென்னை மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிடும் செலவிற்காக சென்னை மாநகராட்சிக்கு அரசு ரூபாய் 150 இலட்சத்தை மானியமாகவும் ரூபாய் 150 இலட்சத்தை கடனாகவும் அனுமதித்தது.

(16) வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு சென்னை மாநகராட்சிக்குப் பாதி மானியம் பாதி கடன் என்ற அடிப்படையில் ரூபாய் 50 இலட்சம் வழங்க அனுமதித்தது.

(17) கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தை செப்பனிடுவதற்கு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ரூபாய் 9.92 இலட்சமும் தமிழ் நாடு குடிசை மாற்று வாரியததிற்கு ரூபாய் 5.06 இலட்சமும் மானியம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு பாசன ஏரிகளை பழுது பார்க்கும் செலவிற்காகவும் புதுப்பிக்கும் செலவிற்காகவும் அரசு 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 25.00 இலட்சத்தை வழங்கியது.

வறட்சி.

1979-80 ஆம் ஆண்டில் பருவ நிலை தவறிய காரணத்தால் விளைச்சல் தவறிய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகாசி, இராமநாதபுரம் வட்டங்களைத் தவிர மாநிலத்தில் ஏனைய பகுதிகளில் பருவ நிலை சரியாகவே இருந்தது. எனவே வயலுக்கு வயல் சென்று பயிரை ஆய்வு செய்வதன் பேரில் பயிரின் மதிப்பு ரூபாய்க்கு 37 காசும் (50 சதவிதம்) அதற்குக் குறைவாகவும் இருந்தால், நிலவரி, உள்ளூர் செஸ், கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தனிவரி, தனித் தண்ணீர்த் தீர்வை, வணிகப் பயிர் வரி போன்றவற்றைத் தள்ளி விட அரசு ஆணையிட்டது. நிலவரி செலுத்தப்பட்டிருந்தால், உள்ளூர் வரி விதிக்காது இருக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். 1979-80 இல் வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட எந்த நிவாரணப் பணிகளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

முதியோர் ஓய்வூதியத் திட்டம்.

வயது முதிர்ந்தோருக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் சாதாரணத் திட்டத்தின்படி வயது முதிர்ந்தோருக்கு உதவித் தொகை அளித்தல், உடல் ஊனமுற்று ஆதரவற்ற வயது முதிர்ந்தோருக்கு உதவித் தொகை அளித்தல், ஆதரவற்ற வயது முதிர்ந்த கைம்பெண்களுக்கு உதவித் தொகை அளித்தல் என்னும் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன. இவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 1-4-1979 முதல் 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகைக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரியாக வருவாய்க்கோட்ட அதிகாரியும், உதவித் தொகையை வழங்குகின்ற அதிகாரியாக வட்டாட்சியரும் செயல்படுகின்றனர். வயது முதிர்ந்தோருக்கு இந்த உதவித் தொகை பண அஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது. இதற்கான கமிஷன் தொகை கழித்துக்கொள்ளப்படுவதில்லை. இந்த ஆண்டில் இம்மூன்று திட்டங்களுக்காக மொத்தம் ரூபாய் 1,86,24,746.75 செலவிடப்பட்டது.

வயது முதிர்ந்தோர் உதவித் தொகை (சாதாரணத் திட்டம்).

பிழைப்பிற்கு வழியின்றி, ஆதரவளிக்க உறவினர் எவருமின்றி தனியே வாடும் வயது முதிர்ந்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்க இத்திட்டம் 1962-ல் தொடங்கப்பட்டது. கண் பார்வை இன்மை, தொழுநோய், புத்தி சுவாதீனம், முடக்குவாதம் அல்லது கை கால் இல்லாமை காரணமாக பிழைப்பிற்குப் பொருளீட்ட இயலாத ஆதரவற்ற 60 வயதான முதியோர் ஆகியோர் இத்திட்டத்தின் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். மற்றவர்களுக்கு இந்த வயது வரம்பு 65 எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. 31-3-1980 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 79,490 பேருக்கு உதவித் தொகை அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்தோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை (உடல் ஊனமுற்றோர்) :

அரசு நிர்ணயித்த வரம்புப்படி, 50 சதவீதம் அல்லது அதற்கு அதிகமாக உடல் ஊனமுற்றிருக்கும் முதியவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் அரசு 1974-ல் உதவித் தொகை வழங்கியது. இந்த உதவித் தொகை பெறுவதற்கான குறைந்த வயது 45. தற்போது 11,980 முதியவர்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

ஆதரவற்ற கைம்பெண்களுக்கு உதவித் தொகை :

இத்திட்டம் 1975-ல் கொண்டுவரப்பட்டது. இந்த உதவித் தொகை பெறுவதற்கான குறைந்த வயது 40. இத்திட்டத்தின்கீழ், தற்போது 22,500 முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கைத்தறிச் சேலைகள்/வேட்டிகள் வழங்குதல் :

மேற்சொன்ன திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெற்று வரும் வயது முதிர்ந்தவர்களுக்கு சுதந்திர தினத்தன்றும், பொங்கல் திருநாளன்றும் கைத்தறி வேட்டிகள், சேலைகள் வழங்கும் திட்டம் இந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதற்காக ஏற்பட்ட செலவுகள் வருமாறு :—

	ரூபாய்
சுதந்திர தினம் (1979 ஆகஸ்டு)	18,39,320.90
பொங்கல் திருநாள் (1980 சனவரி)	21,63,717.95
மொத்தம்	40,03,038.85

பர்மா இலங்கை அகதிகள் மறுவாழ்வு.

பர்மா, இலங்கை, வியட்நாம் ஆகிய நாடுகளின் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின விளைவாக, இந்திய நாட்டு மக்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் அந்நாடுகளிலிருந்து வெளியேறித் தாயகத்திற்குத் திரும்பி வருகின்றார்கள். பர்மாவின் புரட்சி அரசு பின்பற்றிய தேசியக் கொள்கையும் 1954-ம ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அந்த நாடுகளில் வாழ்ந்து வந்த இந்தியர்களை மிகப்பெரும் எண்ணிக்கையில் வெளியேறுவதை அவசியமாக்கியுள்ளன.

1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் முடிய இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ளவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

பர்மா	1,44,252
இலங்கை	3,33,843
வியட்நாம்	2,034

அகதிகளுக்கு (தாயகம் திரும்பியவர்களுக்கு) மறுவாழ்வளிக்கும் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டுள்ளது. அகதிகளுக்குக் கடன்களும் மானியங்களும் வழங்கி மறுவாழ்வளிப்பதில் ஏற்படும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கிறது.

அகதிகளுக்கு நிவாரணமளிக்கப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அகதிகள் இருவகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். தங்களுக்குந் தாயகத்தில் காலூன்றிக் கொள்ள வசதியுள்ளவர்கள் ஒரு வகையினர் (அதாவது இந்தியாவில் நிலபுலன்கள் உடையவர்கள் அல்லது அத்துடன் உறவினர்களைக் கொண்டுள்ளவர்கள் ஒரு வகையினர்) ; இங்கு காலூன்றிக் கொள்ள வசதியில்லாதவர்கள், அல்லது நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழ்க்கைத் தொடர்பு பெற்றிராதவர்கள் பிறிதொரு வகையினர் ஆவர். இந்தியாவில் வந்திறங்கியதும் முதல் வகையினர் தங்களுடைய சொந்த நகரம் அல்லது கிராமத்திற்கு அல்லது தங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் இடங்களுக்குச் செல்லுகின்றனர். அதே சமயம் இரண்டாம் வகையினரான மற்றையோர் இடைத் தங்கல் முகாம்களில் தங்குவதற்கு இலவசமாக வசதியளிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் இத்தகைய இடைத்தங்கல் முகாம்கள் அமைந்

துள்ளன. ஒன்று, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கும்மிடிப்பூண்டியிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில உள்ள கொட்டப்பட்டுவிலும், இன்னொன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபத்திலும் அமைந்துள்ளது.

வணிகக் கடன் திட்டங்கள் :

இத் திட்டத்தின்கீழ் தகுதிவாய்ந்த அகதிகளுக்கு சிறு வாணிகம் தொடங்க ரூபாய் 5,000 வரை கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்தொகை இருதவணைகளாக முதல் தவணையில் ரூபாய் 3,000 இரண்டாவது தவணையில் ரூ. 2,000 வழங்கப்படுகின்றன. முதல் தவணைக் கடன் ரூபாய் 3,000 முறையாகப் பயன் படுத்தப்பட்டால் அந்த வாணிகத்தை விரிவு படுத்த இயலுமானால் மேலும் அவ்வாறு விரிவுபடுத்துவது தேவையானால் வாணிகத்தின் தேவையை ஒட்டி இரண்டாவது தவணைத் தொகை ரூபாய் 2,000 வழங்கப்படும். தங்களை ஆதரிப்பதற்கு வயது வந்த ஆண்கள் யாருமில்லாத சார்பிலா மகளிர்களான (பர்மா) அகதிகளில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உயர்ந்த அளவு ரூபாய் 5,000-ம் வரை தொழிற் கடன்கள் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். 65 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் தங்களைக் கவனித்துக்கொள்ள எவரும் இல்லாதவர்களுமான அகதிகளுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள், கடன் தொகையைப் பெற்றுக்கொண்ட நாளின் நான்காவது ஆண்டு நிறைவிலிருந்து தொடங்கி 12 சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தத் தக்கவையாகும். 31-3-1980 ஆம் நாள் வரையில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 42,586 அகதிக் குடும்பங்களுக்கு ரூபாய் 559.29 இலட்சமும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 41,935 அகதிக் குடும்பங்களுக்கு ரூபாய் 1,222.58 இலட்சமும் தொழிற் கடன்கள் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புகள் :

வேலைவாய்ப்பகங்கள் மூலமாக மாநில அரசுப் பணிகளில் நியமனம் பெறுவதற்கு அகதிகளுக்கு தனி முன்னுரிமை அளிக்கப்படுகிறது. 31-3-1980 ஆம் நாள் முடிய பர்மாவிலிருந்து வந்த 4,415 அகதிகளுக்கும் இலங்கையிலிருந்து வந்த 3,238 அகதிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை நிலம் வழங்கு திட்டங்கள் :

பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரும் அகதிக் குடும்பங்களில் போதிய உடல் வலிமையுள்ளவர்களாகவும் உரிய வயது வந்தவர்களாகவும் உள்ளோர் இருவருக்கு குறையாதவர்கள் இருந்தால் அவர்கள் பயிர்த் தொழிலில் அனுபவம் உள்ளவர்களாக இருந்து சொந்த நிலமில்லாதவர்களாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வேளாண்மை நிலக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகிறார்கள்.

அங்கு ஒவ்வோர் அகதிக் குடும்பத்திற்கும் மூன்று ஏக்கர் புன்செய் நிலம் வழங்கப்படுகிறது. அரசு நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பயிரிட நிலத்தைப் பண்படுத்தல் பாசனக் கிணறுகளை வெட்டுதல், உழவு மாடுகள், விதைகள், கருவிகள், உரம் முதலியவற்றை வாங்குதல் ஆகியவற்றிற்காக குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 5,990 வரையில் அவர்களுக்கு வேளாண்மைக் கடன் வழங்கப்படுகிறது. பயிர்கள் வளர்ந்து அறுவடை செய்யப்படும் வரை, அத்தகைய அகதிக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் அக்குடும்பத்தின் அளவிற்கேற்ப 21 திங்கள் கால அளவிற்கு 40 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரையில் பராமரிப்புப் படி வழங்கப்படுகிறது. இத்தொகை முதல் ஒன்பது திங்களுக்கு முழு அளவில் உதவித் தொகையாகவும், அடுத்த ஓராண்டுக்குப் பாதி விதத்தில் கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 31-3-1980 ஆம் நாள் வரை பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 375 குடும்பங்களும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2,161 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளன. இதனால் முறையே 11.34 இலட்சம் ரூபாய் 115.18 இலட்சம் ரூபாய் (31-3-1980 ஆம் நாள் வரை) செலவு ஏற்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரும் 5,000 ரூபாய்க்கு மேற்படாத சொத்தினை அந்நாட்டிலிருந்து கொண்டுவந்தோருமான அகதிக் குடும்பங்கள் வேளாண்மை தொழில் பார்க்க விரும்பினால் தனியாரிடமிருந்து வேளாண்மை நிலங்களை வாங்குவதற்குக் கடன் பெற தகுதியுடையோராவர். மூன்று ஏக்கர் வரை நிலத்தை வாங்க, ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு மேற்படாத விதத்தில் உயரளவு 6,000 ரூபாய் கடன் பெறுவதற்கு ஒவ்வொரு குடும்பமும்

தகுதியுடையதாகும். தாயகம் திரும்பியோர் எந்நாட்டிலிருந்து வந்தனரோ அந்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சொத்தின் மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படவில்லையாயின் வேளாண்மை நிலக் குடியேற்றங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளோர்க்கு வழங்கப்படும் அதே வீதங்களில் அவர்களால் வாங்கப்பட்ட நிலங்களில் வேளாண்மையை மேற்கொள்வதற்குரிய வேளாண்மைக் கடன் களையும் பராமரிப்புத் தொகையையும் துணைத் தொழிலைப் புரிவதற்குரிய கடனையும் பெறுவதற்குத் தகுதியுடையோராவர். இத்திட்டத்தின்கீழ் வீட்டு வசதி உதவித் தொகையைப் பெறுவதற்கும் அவர்கள் தகுதியுடையோராவர்.

மாநிலப் பண்ணைக் கழகம் தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு அளித்தல் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 1,300 குடும்பங்களை மாநிலப் பண்ணைக் கழகத் திட்டங்களில் குடியமர்த்துவதற்குரிய திட்டம் ஒன்றிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்தில் இரு வருக்கு குடும்பம் ஒன்றின் திங்கள் வருமானம் 250 ரூபாய் என்னும் வகையில் தொழிலாளர்களாக முறையான வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக நெய்வேலியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தேவைக்கு அதிகமாக இருந்த உபரி நிலங்களில் 1,975 ஏக்கர் நிலத்தை மாநில அரசு வாங்கி மாநிலப் பண்ணைக் கழகத்திற்குக் குத்தகைக்கு கொடுத்துள்ளது. இந்நிலங்கள் இந்திய அரசின் நிதியுதவியோடு வாங்கப் பட்டன.

வீட்டு வசதிக்கு வகை செய்வதற்குரிய திட்டம் :

தாயகம் திரும்பிய ஒவ்வொரு குடும்பத்திற்கும் அக்குடும்பத்திலுள்ளோ ருக்கு சொந்தமாக வீடு இல்லையெனில் அவர்களுக்கு வியாபாரக் கடன் அல்லது வேலைவாய்ப்புக் கடன் அல்லது வேளாண்மைக் கடன் ஏதும் வழங்கப் பட்டிருந்தாலும் தகுதிவாய்ந்த எல்லா அகதிக் குடும்பங்களுக்கும் வீட்டு வசதிக்கு வகை செய்யப்படுகிறது. வீட்டு வசதிக்காக அரசு நிலங்கள் கிடைக்கப் பெறுகின்ற இடங்களில் அவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் தனியாரிடமிருந்து வீட்டு

மனைகளை வாங்குவதற்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. எல்லா வசதி களுடன் கூடிய ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வீடுகளை வாங்க அல்லது வீடு களைக் கட்ட வீட்டு வசதிக் கடன் வழங்கத்தக்கதாகும். இத்திட்டத்தின் கீழ்ப் பெறப்படும் கடன் தொகை கடன் பெற்ற நாளின் நான்காம் ஆண்டு நிறை விலிருந்து முதல் தவணைத் தொகையைச் செலுத்தத் தொடங்கி 22 சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். 31-3-1980 ஆம் நாள் வரையில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 19,371 குடும்பங்களுக்கு 460.04 இலட்சம் ரூபாயும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 20,560 குடும் பங்களுக்கு 593.69 இலட்சம் ரூபாயும் வீட்டு வசதிக் கடனாக வழங்கப் பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி சென்னை மாநகரில் வியாசர்பாடியில் குடிசைகளில் வசித்து வருகின்ற 3,132 பேர்களுக்கு மத்திய அரசிடமிருந்து பெற்ற ரூபாய் 177.62 இலட்சம் கடன் உதவியைக் கொண்டு வீடுகள் கட்டுவதற் கான திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் சென்னைப் பெரு நகர் வளர்ச்சி அதிகார மன்றத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி நெய்வேலி அரசுப் பண்ணைக் கழகத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு அங்கு 600 வீடுகள் கட்டுவதற்கான மற் றொரு திட்டமொன்றுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அத்திட்டப்பணி தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு கடனாக ரூபாய் 13.80 இலட்சமும் மானியமாக ரூபாய் 10.20 இலட்சமும் வழங்கியுள்ளது. கட்டுமானச் செலவு மத்திய அரசு திர்ணயித்த உச்சவரம்பைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால், மாநில அரசு நிதிகளிலிருந்தும் ரூபாய் 10.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி, வேலைவாய்ப்புத் திட்டங்கள்.

கூட்டுறவு நூற்பாலைகள் :

இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு, தாயகம் திரும்பியோர்க்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய மாநில அரசுக்குக் கடன் வழங்குகிறது. தாயகம் திரும்பிய

1,952 பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான விரிவுத் திட்டத்திற்காக, 12 கூட்டுறவு நூற்பாலைகளின் வட்டியில்லாப் பங்குத் தொகையில் முதலீடு செய்யும் நேரடிக் கடனாக மத்திய அரசு மாநில அரசுக்கு ரூபாய் 336.37 இலட்சம் வழங்கியது. இவர்களுள் 31—3—1980 வரையில் 1,958 பேர் கூட்டுறவு நூற்பாலைகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவரின் குடும்பத்திற்கு பராமரிப்புப் படி வழங்கப்படுகிறது. பயிற்சி பெறுபவருக்கு ஆறு மாத காலத்திற்கு மத்திய அரசு நிர்ணயித்த விதத்தில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர், அவர்கள் ஆலைகளில் முறையான பணிகளில் சேர்த்துக்கொள்ளப்படு கின்றனர்.

கும்மிடிப்பூண்டியில் கனரக மோட்டார் வண்டி ஓட்டுநர் பயிற்சித் திட்டம்:

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகின்ற குடும்பங்களின் தலைவர்களுக்கு 32 வாரங்களுக்கு கனரக வண்டிகள் ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவடைந்தவுடன் அவர்கள் போக்குவரத்துக் கழகத்தில் வேலைக்கி யமர்த்திக் கொள்ளப்படுவர். இதற்காக போக்குவரத்துக் கழகத்திற்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி, குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 15,000 என்ற விதத்தில் கடனாக நிதி உதவி அளிக்கும்.

மலைத் தோட்டங்களில் வேலைக்கமர்த்துதல்:

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 1,875 குடும்பங்களைச் சேர்ந்த 3,750 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ரூபாய் 674.03 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீலகிரியில் 3,750 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் தேயிலை வளர்க்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு மறுவாழ்வு நிதிகளிலிருந்தும் வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் கடன் உதவி கிட்டுகிறது. மலைத் தோட்டங்கள் அமைத்துப் பராமரிப்பதற்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கழகம் அமைக்கப்பட்டது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 750 குடும்பங் களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக் கூடலூர் ஜென்மம் நிலங்களில் 1,500 ஏக்கர் பரப்பில் தேயிலைப் பயிரிடும் மற்றொரு திட்டத்தையும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மேற்கொண்டுள்ளது. இலங்கையிலிருந்து

திரும்பிய 285 குடும்பங்களைச் சேர்ந்த 570 தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பதற்காக ரூபாய் 175.58 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் அமைக்கும் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2,011.00 ஏக்கரில் ரப்பர் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 31-3-1980 வரையில் மொத்தம் 234 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தேசிய துணி ஆலைக் கழகத்தின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் தாயகம் திரும்பியோரை வேலையிலமர்த்துதல் :

இத்திட்டத்தின்கீழ் தாயகம் திரும்பிய 7 முதல் 10 பேர் அடங்கிய குழு ஒன்றிற்கு ஒரு விற்பனை நிலையம் விதம் ஒதுக்கப்படும். தேர்ந்தெடுக்கப் பட்ட ஒவ்வொருவருக்கும் வியாபாரக் கடனாக ஒரே தவணையில் ரூ. 5,000 வழங்கப்படும். இதைத் தவிர, வியாபார வளாகக் கடனாக ரூபாய் 1,000 வழங்கப்படும். இத்தொகை தேசிய துணி ஆலைக் கழகத்தில் வைப்பீடு செய்யப்படும். தேசியத துணி ஆலைக் கழகம் காட்சி விற்பனை நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்யும். வியாபார வளாகத்திற்காக வழங்கப்பட்ட தொகை, காட்சிப் பெட்டிகள் விற்பனைப் பகுதி (Sales Counter) முதலியன அமைப்பதற்காகப் பயன்படுத்தப்படும். தாயகம் திரும்பியோர் வைப்பீடு செய்த மொத்த வியாபாரக் கடன் தொகையில் மதிப்புக்கு உரிய சரக்குகள் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படும்.

தாயகம் திரும்பியோரை தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்துதல் :

இத்திட்டத்தின்கீழ் மறுவாழ்வு நிதிகளிலிருந்து கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டு 6-வது திட்டக் காலத்தில் அமைக்கக் கருதப்பட்டுள்ள 5,000 பால் கூட்டுறவுச் சங்கங்களில் தாயகம் திரும்பியோர் உறுப்பினர்களாக சேரலாம். இக்கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலை விற்பனை செய்ய தமிழ் நாடு பால்வள நிறுவனம் உறுதி அளிக்கும். தாயகம் திரும்பிய 60 குடும்பங் களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் பாரத ஸ்டேட் பாங்கின் உடனுழைப்புடன் பால் பண்ணை அமைக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப் புதுவாழ்வுத் துறை இயக்குநர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியோர் :

31-3-1980 வரையில் இந்தியக் குடும்பங்கள் 492 வியட்நாமிலிருந்து தாயகத் திற்குத் திரும்பியுள்ளன. இவற்றுள், 370 குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேறி யுள்ளன. அவர்களுக்குத் தொடக்க புதுவாழ்வு உதவியிலிருந்து மாறுபட்ட வகையிலான நிவாரண உதவி அளிக்குமாறு மத்திய அரசு கட்டளைகள் பிறப் பித்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு மூன்று மாத கால அளவுக்கு குடும் பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ரூபாய் 30 என்ற வீதத்தில் மொத்தத்தில் ரூபாய் 450-க்கு மேற்படாமல் உடனடி நிவாரண உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது.

தொடக்க உதவியைப் பொறுத்தவரையில் தாயகம் திரும்பிய குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 3,000 என்ற வீதத்தில் 355 குடும்பங்களுக்கு வியாபாரக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கல்விச் சலுகைகள் போன்ற ஏனைய சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

அத்தியாயம் XVIII

ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை

ஊராட்சி வளர்ச்சி.

தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் 1958 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி, கிராம அளவில் ஊராட்சிகளும் வளர்ச்சி வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியங்களும் அமைந்துள்ளன. ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் சேர்ந்த கூட்டமைப்பே ஊராட்சி ஒன்றியங்களாகும். ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக்குழுவின் உறுப்பினர்களாகின்றனர். அவ்வுறுப்பினர்களுள் ஒருவர் அக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

கிராம அளவில், ஊராட்சியும், வளர்ச்சி வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியமும், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் குழுவும் ஆக மூன்றடுக்கு முறை அடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகளின் நிர்வாகம் நடைபெறுகிறது. மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் சட்டப்படி அமைந்த அமைப்புகளாக உள்ள போதிலும், அவற்றிடம் நிர்வாகப் பணிகள் ஒப்படைக்கப்படுவதில்லை. அவை கிராம மக்களின் மேம்பாட்டிற்காகவும் மொத்தத்தில் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காகவும் கிராம அளவிலும் வளர்ச்சி வட்டார அளவிலும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குவது பற்றி அரசுக்குக் கருத்துரைகளை நல்கும் ஆலோசனைக் குழுவாக மட்டுமே செயல்படுகிறது. இவ்வாறாக ஆட்சி அதிகாரங்கள், வளர்ச்சி வட்டார அளவிலும் கிராம அளவிலுமே நிலை பெறுகின்றன.

ஆட்சி :

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுவதை நெறிப்படுத்துவதற்கும், மேற்பார்வையிடுவதற்கும், மாநில அளவில் ஊராட்சிகளின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கும், கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்பாவார். மேலும் மாநில அளவில் வளர்ச்சித் துறைகளின் பணிகளையும் அவர் ஒருங்கிணைக்கிறார். மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வளர்ச்சி வட்டார அளவிலும் கிராம அளவிலும் அமைந்த நிர்வாக அமைப்புகள் வருமாறு :

1. மாநில அளவில் கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்
2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
3. கோட்ட அளவில் கோட்ட வளர்ச்சி அதிகாரி அலுவலகம்
4. வளர்ச்சி வட்டார அளவில் வளர்ச்சி வட்டார அதிகாரி (ஊராட்சி ஒன்றியங்கள்) அலுவலகம்
5. கிராம அளவில் ஊராட்சிகள்.

ஊராட்சி ஒன்றியங்களும் அவற்றின் நிதி நிலையும் :

இம்மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவற்றின் மொத்த வருமானம் ரூ. 4,172.60 இலட்சம் செலவு ரூ. 2,606.57 இலட்சம். ஊராட்சி ஒன்றியம் ஒன்றின் சராசரி வருமானம் ரூ. 11.2 இலட்சம் ஊராட்சி ஒன்றியம் ஒன்றின் சராசரி செலவு ரூ. 6.97 இலட்சம்.

வேளாண்மை :

1979-80 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் பின்வரும் திட்டங்களை மேற்கொண்டன :—

(1) வேளாண் விளைபொருள் விற்பனை நிலையம் கிடங்கு கட்டுதல்.

(2) கிராமத் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடனும், ஊராட்சி ஒன்றியங்களால் தெரிந்தெடுக்கப்படும் அந்தந்த உள்ளூர்ப் பகுதிக்கு ஏற்ற தகுந்த பிற திட்டங்கள்.

பின்வரும் திட்டங்கள் 1979-80 ஆம் ஆண்டுக்காலத்தில் மேற்கொள்ளப் பட்டன :—

1. ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கருவிகள் வழங்குதல்.

2. தனி நபர்களுக்குக் கருவிகள் வழங்குதல்.

3. கிராம விரிவாக்க உதவிப் பொருட்கள், கிராம விழாக்கள் பொருட் காட்சிகள், போட்டிகள் முதலியன.

4. வேளாண் விளை நில விரிவாக்கம்-செய்முறை விளக்கப் பாத்திகள் அமைத்தல்.

5. பசுந்தழை உர உற்பத்திக்காக விதைகள் வழங்குதல்.

6. தனி நபர்களுக்கு விதைகளும், நாற்றுகளும் வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டிற்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மானியமாக 28,447 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் உள்ளூர் மக்கள் வழங்கிய தொகை 31,720 ரூபாயும் சேர்க்கப்படவுள்ளது.

கால்நடை பராமரிப்பு :

இத்திட்டங்களின் கீழ் அரசு ரூ. 12 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 6,559 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. இத்துடன் உள்ளூர் மக்கள் வழங்கிய தொகை 8,942 ரூபாயும் சேர்க்கப்பட வுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன :—

1. கால்நடை மருந்தகங்கள் அமைத்தல், தற்போதுள்ள மருந்தகங்களில் மேற்கொண்டும் வசதிகளைச் செய்தல்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்கென குடியிருப்புகள் கட்டுதல்

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்கென குடியிருப்புகள் கட்டுதல்.

பால் பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு, கால்நடைத் தீவனத்

தயாரிப்பு முதலியவற்றுக்கு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநரின் ஆலோசனையுடனும், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடனும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் தெரிந்தெடுக்கப்படும் பிற திட்டங்கள்.

மீனளங்கள் :

மாநிலம் முழுவதற்கும் இத்திட்டத்திற்கென ரூ. 3 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிதிநிலை வருமாறு :

	ரூபாய் இலட்சத்தில்.
1979-80-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தொடக்கக் கல்விக்கான மொத்தச் செலவு.	8,346
1979-80 ஆம் ஆண்டிற்கென சட்டப்படிக்கானதும் வேறு வகையிலானதுமாக வழங்கப்பட்ட மானியம்.	7,345
தொடக்கக் கல்விக்கான செலவுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் தாமாகவே வழங்கிய தொகை.	1,001
1979-80 ஆம் ஆண்டிற்கான வழங்கப்பட்ட தொகை.	7,345

விவர அறிக்கைகள்.

	தொடக்கப் பள்ளிகள்.	உயர்தொடக்கப் பள்ளிகள்.
பள்ளிகளின் எண்ணிக்கை—		
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	20,304	3,069
அரசு மானிய உதவி பெறும் பள்ளிகள்	3,969	1,265
மாணவர்களின் எண்ணிக்கை—		
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	28,32,000	10,01,000
அரசு மானிய உதவிபெறும் பள்ளிகள்	8,01,000	4,86,000
ஆசிரியர்களின் எண்ணிக்கை—		
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	70,262	27,356
அரசு மானிய உதவிபெறும் பள்ளிகள்	20,429	12,943
பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை—		
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	16,772	2,868
அரசு மானிய உதவிபெறும் பள்ளிகள்	3,714	1,213

வேலைக்கு உணவுப் பொருள் வழங்கும் திட்டம் :

மாநில அரசு தாம் நிறைவேற்றிவரும் திட்டப் பணிகளுக்கும் திட்டம் சாராத பணிகளுக்கும் சில புதிய முதன்மைப் பணிகளுக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கும் செய்துள்ளதற்குத் துணையாக வேலைக்கு உணவுப்

பொருள் வழங்கும் திட்டத்தின் கீழ், உணவு தானியங்கள் மாநில அரசுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இது வரவு-செலவுத் திட்டநிதி ஒதுக்கத்திற்கும் மேலாகக் கூடுதல் வருவாய் வாயிலாக அமைவதால், மாநில அரசு இத்திட்டத்திற்கென்று வழங்கப்படும் உணவு தானியங்களுக்காகத் தொகை எதும் செலுத்த வேண்டியதில்லை.

1979-80 ஆம் ஆண்டில் வேலைக்கு உணவுப் பொருள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கும், துறைத் தலைமையிடங்களுக்குமென 73,000 டன் அரிசி வழங்கப்பட்டது. 31—3—1980 வரையில் 55,586.279 டன் அரிசி பயன்படுத்தப்பட்டது. அதன் மூலம் கிராமப்பகுதியில் 1.68 கோடி உழைப்பு நாட்கள் பணி நடைபெற்றது.

பணிகள் :

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், சிலவகைப் பணிகளை, சட்டப்படி நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் என்றும் அவற்றை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நிறைவேற்ற வேண்டுமென்றும் வரையறுத்துள்ளது. இவற்றில் தகவல் தொடர்பு குடிநீர் வழங்கல், நல்வாழ்வு, துப்புரவு தொடக்கக் கல்வி, சமூகக்கல்வி முதலியவை அடங்கும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளவும் ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சிச்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளவுமான பொதுச் சாலைகள் அனைத்தையும் அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் ஆகிய பணிகள், ஊராட்சி ஒன்றியங்களிடம் விடப்பட்டுள்ள சட்டப்படிக்கான முக்கிய அலுவல்களாகும். கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் இப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் ஏனைய திட்டங்களின் கீழும் மானியங்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர ஊராட்சி ஒன்றியங்கள், இப்பணிகளை ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்தே நிறைவேற்றி வருகின்றன.

இவ்வாண்டு இறுதியில் மண் சாலைகள், சரளைக்கற்கள் போட்ட சாலைகள் கப்பிச் சாலைகள், தார் சாலைகள் சிமிட்டிப் போட்ட சாலைகள் ஆகியவை கொண்ட 32,450 கி.மீ. நீளமுள்ள உள்ளூர் சாலைகள் போடப்பட்டன.

குடிநீர் வழங்கல் :

இவ்வாண்டில் கட்டப்பட்டுள்ள குடிநீர் வாயில்கள் (பல்வேறு வகையானவை) பற்றிய விவரங்கள் வருமாறு :—

குழாய்க்கிணறுகளும், துளைக் கிணறுகளும்	4,910
மேல்நிலைத் தொட்டிகள்	7,078
நிலத்தடி நீர்த்தேக்கங்கள்	3,896
தானியங்கி அழுத்தத் தொட்டிகள்	1,363
சாதாரண கிணறுகள்	81,338
கைப்பம்புகள்	42,856

செய்முறை சத்துணவுத் திட்டம் :

செய்முறை சத்துணவுத் திட்டம், இந்திய அரசு யுனிசெப் நிறுவனம், மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962-63 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் முதன்முதலாக தொடங்கப்பட்டது. கிராமப் பகுதிகளின் மக்களின் குறிப்பாகத் தாய்-சேய்களின் ஊட்டச் சத்து நிலைகளை மேம்படுத்துவதும், பெருமளவில் நிதிகளைப் பெருக்கி சமுதாயத்திற்கு உதவுவதும், கிராம சமுதாயத்தில் குறிப்பாக நலிந்தப் பிரிவினருக்கு அவற்றைப் பயன்படுத்துவதும், செய்முறை சத்துணவுத் திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். செய்முறை சத்துணவுத் திட்டம் என்பது கிராம குடும்ப அளவில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கங்களைக் கொண்ட ஒரு கல்வி முறை திட்டமாகும். சுயமுயற்சி மேலான உற்பத்தி பயன்படுத்தல் ஆகியவற்றின் வாயிலாகக் கல்வியின் மூலம், நலிந்த பிரிவினரின் உணவு வகைகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் :

1. இத்திட்டத்தின் கீழ்கொண்டுவரப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை.	339
2. ஏற்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்ட மகளிர் மன்றங்களின் எண்ணிக்கை.	120
3. ஏற்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்ட இளைஞர் மன்றங்களின் எண்ணிக்கை.	31
4. வளர்க்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை.	2,55,000
5. அமைக்கப்பட்டுள்ள குப்பைப் பிரிவுகளின் எண்ணிக்கை.	1,899
6. அமைக்கப்பட்டுள்ள புழக்கடைப் பிரிவுகளின் எண்ணிக்கை.	3,899
7. அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளின் எண்ணிக்கை.	156
8. அமைக்கப்பட்டுள்ள சமுதாயத் தோட்டங்களின் எண்ணிக்கை.	38
9. அமைக்கப்பட்டுள்ள காய்கறித் தோட்டங்களின் எண்ணிக்கை.	56,582
10. கட்டப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகக் கட்டிடங்களின் எண்ணிக்கை.	282
11. குழந்தைகள் காப்பகம் வளர்ப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள்—	
(1) காய்கறிகள்	56,742 கி.கி.
(2) முட்டைகள்	6,34,300
(3) மீன்	2,979 கி.கி.
12. பயிற்சி—	
பயிற்சி அளிக்கப் பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை	6,518
பயிற்சி பெற்ற அதிகாரிகள் அல்லாதவர்களின் எண்ணிக்கை.	1,447

பயிற்சித் திட்டம் :

1978-79 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பல்வேறு பயிற்சி வகுப்புகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொ. எண்.	பயிற்சி வகுப்பு பெயர்.	பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை.				
		புதுக்கோட்டை.	எஸ். வி. நகரம்.	கல்லுப் பட்டி.	கிருஷ்ண கிரி.	பவானி சாகர்.
1.	கிராம நல அதிகாரி களுக்குரிய ஓரண்டுப் பட்டப்படிப்பு.	38	33	..	22	27
2.	கைவினைஞர் ஓராண்டு பயிற்சிப் படிப்பு.	20	20	20	19	20

1979-80 ஆம் ஆண்டிற்குரிய மொத்த மூலதனச் செலவு ரூ. 417.50 இலட்சம் ஆகும். 31—3—1980 வரையில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 369.28 இலட்சம் ஆகும். வணிக வங்கிகள் மூலமாக ரூ. 295.44 இலட்சமும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ரூ. 226.80 இலட்சமும் கடன் வசதிகள் செய்துத் தரப்பட்டன. இதனால் 1979-80 ஆம் ஆண்டில் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 3,10,753 பேர் ஆவர்.

கேடும் அருவருப்பும் தரும் தொழில் :

அவ்வாண்டில் இயந்திரங்கள் கட்டிடங்கள் கட்டியதன் மூலம் கேடும், அருவருப்பும் தரும் தொழிலின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 27.69 இலட்சம் ஆகும். இவ்வாண்டில் கேடும், அருவருப்பும் தரும் தொழிலின் கீழ் 12,452 இனங்களைப் பொறுத்தவரையில் குற்ற வழக்குகள் தொடரப்பட்டன.

இம்மாநிலத்தில் 605 பேரூராட்சிகளும் 12,604 ஊராட்சிகளும் உள்ளன. ஊராட்சிகள் பேரூராட்சிகளின் வரி வசூல் குறித்த விவரம் பின்வருமாறு :—

	ஊராட்சிகள். (இலட்சத்தில்)	பேரூராட்சிகள். (இலட்சத்தில்)
வீட்டு வரி	203.10	372.81
தொழில் வரி	27.78	66.26
வண்டிகள் வரி	11.36	8.73

தேர்தல்கள் :

1—1—1978 ஆம் நாளன்று 21 வயது பூர்த்தியடைந்தத் தகுதிவாய்ந்த நபர்கள் குறித்து வீட்டிற்கு வீடு சென்று கணக்கெடுத்தப் பின்னர் 1972-ல் ஊராட்சிகளின் புதிதாக வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. 1—1—1979 ஆம் நாளன்று 21 வயதமைந்தத் தகுதிவாய்ந்த நபர்களைச் சேர்த்துக்கொண்டதன் மூலம் இவ்வாண்டில் வாக்காளர் பட்டியல்கள் நாளது தேதிவரையிலானதாகத் தயாரிக்கப்பட்டன. வாக்காளர் பட்டியல்கள் இறுதியாக 25—4—1979 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. சட்டப்படியான

தேர்தல் படிவங்கள் (அதாவது 1 முதல் 21 வரையிலான படிவங்கள்) அச்சிடப் பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. தேர்தல்களின் பயன் படுத்துவதற்குரிய சட்டநிறைவு பெறாத படிவங்கள் அச்சிடப்பட்டு வேண்டுமென பிறப்பிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்படவேண்டுமென ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஊராட்சிகளின் தேர்தல் சாவடித்தலைமை அதிகாரிகள், தேர்தல் நடத்தும் உதவி அதிகாரிகள் ஆகியோருக்கு வழிகாட்டுதலுக்காக விளக்கங்கள் அடங்கிய வரைவு சிறு புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. ஆயினும் தேர்தல் நடத்துவதற்குரிய திட்டவட்டமான நாட்கள் வரையறுக்கப்படுகின்ற வரையில் அவை அச்சிடப்படவில்லை. இவ்வாண்டில் இம்மாநிலத்திலுள்ள கிராம பேரூராட்சிகள் அனைத்தும் கலைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அதிகாரிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் 12—9—1979 முதல் ஊராட்சிகளின் தனி அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர். அனைத்து வாக்காளர்களுக்கும் நிழற் படம் ஒட்டிய அடையாள அட்டைகள் வழங்குவது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 1980 ஏப்ரலிலோ அல்லது பின்னரோ தேர்தல்கள் நடத்துவது குறித்து 1—1—1980 ஆம் நாளன்று 21 வயது பூர்த்தியானவர்களின் பெயர்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஊராட்சி வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்குமாறு அரசு மீண்டும் ஆணை பிறப்பித்தது. அவ்வாறே வாக்காளர் பட்டியல்கள் திருத்தியமைக்கப்பட்டு வாக்காளர் இறுதிப் பட்டியல்கள் 10—2—1980 ஆம் நாளன்று வெளியிடப் பட்டன. அறிக்கையாண்டில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் தேர்தல்கள் நடைபெற்றதால் உள்ளாட்சி மன்றங்களுக்குரிய தேர்தல்கள் நடைபெறவில்லை.

வன ஊராட்சி.

மதுரை மாவட்டத்தில் மட்டும் 3,550.18 ஏக்கர் பரப்பளவுள்ள ஐந்து பஞ்சாயத்து வனங்கள் இருந்தன. அவற்றின் விவரம் வருமாறு :—

வன பஞ்சாயத்தின் பெயர்	பரப்பு ஏக்கரில்
1. கொல்லப்பட்டி—வேடசந்தூர் வட்டம்	291.02
2. செங்குறிச்சி—திண்டுக்கல் வட்டம்	1,178 42
3. பள்ளுப்பட்டி—மேலூர் வட்டம்	1,359.83
4. மூங்கிப்பட்டி—நத்தம் துணை வட்டம்	553.01
5. புதூர்—நத்தம் துணை வட்டம்	167.90
மொத்தம்	3,550.18

உள்ளாட்சி நிர்வாகம்.

தமிழ்நாட்டில் எட்டு நகரியக் குழுக்கள் உட்பட 107 நகராட்சிகள் உள்ளன. மாநில அளவில், நகராட்சிகள் இணை நிர்வாக இயக்குநர் உதவியுடன் நிர்வாக இயக்குநர், மாநகராட்சிகளின் ஆய்வு, மேற்பார்வை பணிகளைக் கவனிக்கிறார். வட்டார அளவில், நகராட்சிகள் வட்டார நிர்வாக இயக்குநர்கள் இம் மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் அதிகாரிகளை ஆய்வு செய்து மேற்பார்வையிடுகின்றனர். நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், நகராட்சிகளின் நிர்வாக நிதி ஏற்பாடுகளின் பணிகளைக் கவனித்து வந்துள்ளது.

நகராட்சி மன்றம் :

நகராட்சி மன்றங்கள் 1-7-1976 ஆம் நாளில் கலைக்கப்பட்டன. இந் நகராட்சி மன்றங்களின் அலுவல்களைக் கவனிப்பதற்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். முதல் நிலை, தேர்வு நிலை, நகராட்சிகளின் அலுவல்களை மேற்பார்வையிடுவதற்காக 12 தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகளில் ஆணையாளர்கள் நகராட்சிகளின் தனி அதிகாரிகளாக இருந்து நகராட்சி மன்றங்களின் அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆவடி, அம்பத்தூர், மேட்டூர், கொடைக்கானல் முதலிய நகரியக் குழுக்களில் அந்தந்த நகரியங்கள் அமைந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிர்வாகம் :

நகராட்சி ஆணையாளர் நகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரியாவார். இவருக்கு அலுவல்களில் உதவியாக நகராட்சிப் பொறியாளர், நகராட்சி மருத்துவ அதிகாரி, நகராட்சி நகரமைப்புத் திட்ட அதிகாரி ஆகியோர் பணிபுரிகின்றனர். இந்த ஆண்டில், எல்லா நகராட்சிகளிடமிருந்தும் மொத்தம் 64.69 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. இதில் 60 சதவீதம் பணியாளர் அமைப்பிற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

முக்கிய வருவாய் வாயில்கள் :

சொத்து வரி, கேளிக்கை வரி, கேளிக்கை வரி மீதான மேல்வரி, முத்திரைத் தாள் தீர்வை மீதான மேல்வரி, ஆதாயம் தரத்தக்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் வருவாய் ஆகியவை நகராட்சிகளுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய வருவாய் வாயில்களாகும். அரசு வழங்கும் மானியத் தொகை, கடன் தொகைகள் உட்பட நகராட்சிகளின் மொத்த வருவாய் ரூபாய் 64.69 கோடியாகும்.

அரசு வழங்கும் கடன்களும் மானியங்களும் :

1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் நகராட்சிகள், நகரியக் குழுக்களுக்கு கடன்கள், மானியங்கள், முன்பணங்கள் ஆகியவற்றை அரசு வழங்கியுள்ளது.

அவற்றின் விவரம் வருமாறு :

கடன்கள்	(ரூபாய் இலட்சத்தில்.)
ஆதாயம் தரத்தக்க நிறுவனங்கள் திட்டம்	40
நகராட்சி சாலைப் பணிகள் (முழுக் கடனுதவி)	30
தாசிபடியாத சாலைப் பணிகள (பாதிக் கடனுதவி)	15
கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் கழிவறைகள்	10
வெள்ள நிவாரணப் பணிகள்	100
குடிநீர் திட்டங்கள்	116.28
வடிகால் திட்டஙகள	103.04
முன்பணங்கள்	
வழிவகை முன்பணம்	7.00
மானியங்கள்	
தாசிப்படியாத சாலைப் பணிகள்	15
குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டம்	50
பினதங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாடு	3.00
வெள்ள நிவாரணப பணிகள்	100
சாலை பராமரிப்புப பணிககாக மட்டுமே வாங்கப்பட்ட மானியம்	12.23
கொடைக்கானல ஏரியை பராமரிப்பதற்கான தொடர் மானியம்	0.05

பொதுப் பணிகள் :

இந்த ஆண்டில் குடிநீர் வழங்கல், வடிகால் அமைத்தல், உட்பட சாலைகள், கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள், அங்காடிகள், பூங்காக்கள், பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவற்றிற்காக ரூபாய் 8,51,14,206.30 செலவிடப்பட்டது.

தெரு விளக்குகள் :

நகராட்சி மன்றம் 1,53,775 மின் விளக்குகளைப் பராமரித்து வந்தது. சில நகராட்சிகளில் உள்ள அதிக வெளிச்சம் தரும் விளக்குகள் (பாதரசம் பூசப் பட்ட விளக்குகள் உள்பட) அனைத்து நகராட்சி மன்றங்களிலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து நகராட்சி மன்றங்களிலும் உள்ள தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணி தமிழ்நாடு மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஆண்டில் முதலீடு உள்பட இத்தலைப்பின்கீழ் ரூபாய் 101.68 இலட்சம் செலவிடப்பட்டது.

பொதுச் சுகாதார நடவடிக்கைகள், செலவிடப்பட்ட தொகை :

நகரங்களில் உள்ள உரிய முறையில் அமைக்கப்படாத வடிகால்கள், திறந்த வடிகால்கள் ஆகியவற்றைச் சுத்தப்படுத்தும் பணியுடன் நகரைத் துப்புரவாக வைத்துக்கொள்ளும் பணியையும், நகராட்சிகள் மேற்கொள்கின்றன. சாலைகள்,

சந்துகள் ஆகியவற்றைத் துப்புரவுப்படுத்தல், பொது தனியார் கழிப்பிடங் களைச் சுத்தப்படுத்தல் போன்ற பணிகளை நகராட்சி சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில் துப்புரவு ஆய்வாளர்கள் உதவியுடன் பொதுச் சுகாதாரப் பணி யாளர்கள் மேற்கொள்கின்றனர். தாய்-சேய் நலக் காப்பகங்களை நன்கு பராம ரித்து அவர்களின் நலத்தை நகராட்சிப் பெரிதும் பேணி வருகிறது. 356 தகுதிபெற்ற மகப்பேறு உதவியாளர்கள் உள்ளனர். இந்த ஆண்டில் அவர்கள் 1,65,927 மகப்பேறுகளைக் கவனித்துள்ளனர். மலேரியா, யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டங்கள் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலான நகராட்சிகளில் தாய்-சேய் சத்துணவு வழங்குத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

கல்வி :

நகராட்சிகளில் தொடக்கக் கல்விகளுக்குச் செலவிடப்படும் நிதிபற்றிய விவரச் சுருக்கம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :

சாதாரணமானவை	(ரூபாய் இலட்சத்தில்)
கல்வி வரியிலிருந்து கிடைக்கும் வருவாய்	171.18
தொடக்கக் கல்விச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின்கீழ் அரசு வழங்கும் மானியமும் பிற மானியங்களும்	73.37
பொதுக் கணக்கிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி	24.35
ஏனைய வரவுகள்	11.71
	285.61
பணியாளர்கள் சம்பளம், படிகள், ஏனைய இனச் செலவுகள், உள்பட செலவிடப்பட்ட தொகை	299.47
மூலதனம்	
பொதுக் கணக்கிலிருந்து வழங்கப்பட்ட தொகை	6.44
பெறப்பட்ட மூலதனம்	0.31
ஏனைய வரவுகள்	11.55
	18.30

மூலதனச் செலவு 121.56

பொது வரி விதிப்பு பல்வகை வருவாய் ஆகியவற்றின் வாயிலாக நகராட்சி மன்றங்களுக்கு மொத்தம் ரூபாய் 2,218.53 இலட்சம் வருவாய் கிடைத்தது.

சென்னை மாநகராட்சி.

மாநகராட்சி மன்றத்துறை.—ஆண்டுத் தொடக்கத்தில் நகராட்சி மன்றத்திடமும் பல்வேறு குழுக்களிடமும் 161 பொருட்கள் குறித்த கோப்புகள் முடிவுறாமல் இருந்தன. நடப்பாண்டில் 2,285 பொருட்கள் பற்றிய கோப்புகள் வரப்பெற்றன, அவற்றில் 2,427 முடிவு செய்யப்பட்டன.

வாருவாய்த்துறை.—பல்வேறு வரிகள் கட்டணங்கள் மூலம் இவ்வாண்டில் வருவாய்த் துறை செய்த மொத்த வசூல் ரூ. 1,815.29 இலட்சமாகும்.

மத்திய கணக்குத் துறை.—இவ்வாண்டில் வருவாய்க் கணக்கின் கீழ்க் கிடைத்த வருவாய் ரூ. 1,776.00 இலட்சமாகும். ஆனால் செலவு ரூ. 1,874.17 இலட்சமாகும். முந்தைய ஆண்டில் வருவாய்க் கணக்கு ரூ. (—) 198.12 இலட்சமாக இருக்க இவ்வாண்டில் ரூ. 291.29 இலட்சம் பற்றாக்குறையுடன் முடிவடைந்தது. முன் பணங்கள் அனாமத்து இருப்பு நகரத் திட்டக் கணக்குகள் உட்பட மொத்த பற்றாக்குறை ரூ. (—) 288.81 இலட்சமாகும். அறிக்கையாண்டில் பொது மக்களிடமிருந்து ரூ. 110 இலட்சம் கடன் திரட்டப்பட்டது.

மாவட்ட அலுவலகங்கள்.—மாநகர நிர்வாகம் 12 முன்னாள் ஊராட்சிகளை ஒருங்கிணைத்து 1—5—1979-லிருந்து மாநகரம் 150 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் சீரமைக்கப்பட்டது. இதனால் சாலையின் மொத்த நீளம் 1,384 மீட்டராக உயர்ந்தது. இச்சாலைகளை 5,934 துப்புரவுப் பணியாளர்கள் பேணி வந்தனர். மாநகரத்தில் அன்றாடம் சுமார் 1,470 டன் குப்பை கூளங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. 1979-80-ல் 18,528 மெட்ரிக் டன் கலப்புரம் தயாரிக்கப்பட்டது. 18,128 மெட்ரிக் டன் கலப்புரம் விற்பனை செய்யப்பட்டு ரூ. 1.54 இலட்சம் கிடைத்தது. மொத்தம் 797 பொதுக் கழிப்பிடங்கள் இருந்தன. இவற்றில் 59 பொதுக் கழிப்பிடங்கள் காசு கொடுத்துப் பயன்படுத்தப்படுபவை. இவைகள் ரூ. 1,45,120-க்கு ஏலம் விடப்பட்டன. நெருக்கடியான பகுதிகளில் பகல் நேரத்தில் துப்புரவுப் பணியை மேற்கொள்வது கடினமாக இருப்பதாகத் தெரிந்ததால் 1—7—1979-லிருந்து முதன் முதலாக அப்பகுதிகளில் இரவு நேரத் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. ஐந்து கால்நடை மருந்தகங்கள் உள்ளன. அவை கால்நடைக் கொட்டில்களில்

அமைந்துள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் கடன்கள் மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 83.39 இலட்சம் செலவில் சாலை பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மின்சாரத்துறை.—1979-80 ஆம் ஆண்டில் 2,156 விளக்குகள் புதிதாகப் போடப்பட்டன. 101 எம்.டி. விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டன. இவ்வாண்டில் மொத்தம் 156-137 கி. மீட்டர் நீளத்திற்குப் பல்வேறு அளவு கொண்ட குறைவழுத்த நிலத்தடி கேபிள்கள் போடப்பட்டன. விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இவ்வாண்டில் 764 விளக்குக் கம்பங்களில் ஃப்யூஸ் பெட்டிகள் பொருத்தப்பட்டன.

சுகாதாரத் துறை.—1979-80 ஆம் ஆண்டில் 867 பேருக்குக் காலரா நோய்க் கண்டது என்றும் 21 பேர் அந்நோயால் இறந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாண்டில் 3,96,184 பேருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி போடப் பட்டது. 33,607 பேருக்கு மீண்டும் அம்மை குத்தப்பட்டது. 38,128 குழந்தை களுக்கு அம்மை குத்தப்பட்டது. நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் 33,460 பேருக்கு மலேரியா நோய்க் கண்டது. 2,60,151 பேரிடமிருந்து பரிசோதனைக்காக இரத்தம் எடுக்கப்பட்டது.

குடும்ப நலத் திட்டம்.—மாநகரில் 39 நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலை யங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 24 நிலையங்கள் சென்னை மாநக ராட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

இவ்வாண்டுச் சாதனைகள்.

கருத்தடை அறுவைச் சிகிச்சை	20,942
கருத்தடை வளையம் பொருத்துதல்	8,002
வாலாயமான கருத்தடை சாதனங்களைப் பயன் படுத்துவோர்	8,535
ஆண்களுக்குச் செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சை	42,75
பெண்களுக்குச் செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சை	16,666

கல்வி.—சென்னை மாநகராட்சி நடத்தும் தொடக்க நடுத்தரப் பள்ளிகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டில் 367 ஆக இருந்திருக்க அறிக்கையாண்டில் இந்த எண்ணிக்கை 368 ஆக உயர்ந்தது. படிக்கும் மாணவர்கள் 1,81,940 பேர் ஆவர். 80 மாநகராட்சித் தொடக்க நடுத்தரப் பள்ளிகளில் முறைமாற்றுப் பணி செயலில் இருந்தது. மாநகராட்சி தொடக்க நடுத்தரப பள்ளியிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கும் தகுதியுடைய சிறார்களுக்கும் நண்பகலுணவு இலவசமாக தொடர்ந்து அளிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் நண்பகலுணவு அளிப்பதற்காக ரூ. 22,00,000 செலவிடப்பட்டது. அறிக்கையாண்டில் மாநகராட்சி தொடக்க நடுத்தரப் பள்ளிகளைப் பேணி வருவதற்கு ரூ. 4,19,33,000 செலவு செய்யப்பட்டது. இவ்வாண்டில் 25 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளையும் 9 மேல் நிலைப் பள்ளிகளையும் நடத்துவதற்கு மொத்தம் ரூபாய் 1,25,00,790 செலவு செய்யப்பட்டது.

வெள்ளக்கால் பிரிவு :

வெள்ளக்கால்.—1979-80-ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மாநகர வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழும் ஏனைய கடன் நிதி வைப்பீடுகளைக் கொண்டும் ரூ. 75.91 இலட்சம் செலவில் வெள்ளக்கால் அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டது.

தோட்டக்கலைத் துறை.—மாநகரில் 96 பொதுப் பூங்காக்கள், 42 சாலைத் திட்டுகள் ஆகியவை இருந்தன. இவற்றைத் தவிர 5 நாற்று விற்பனை நிலையங்கள் இருந்தன. செடி விற்பனையிலிருந்து இவ்வாண்டு ரூ. 1.48 இலட்சம் கிடைத்தது.

கட்டிடத் துறை.—1979-80 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் மருந்தகங்கள், மின்சாரப் பண்டகசாலைகள், உணவுக்கூடம், ஆவண அறை, அச்சகம் ஆகியவை கட்டுவதற்கு ரூ. 28.53 இலட்சம் செலவிடப்பட்டது.

மதுரை மாநகராட்சி.

மதுரை மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 65 பேரும் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் 9 பேரும் உள்ளனர். இவ்வாண்டில் மாநகராட்சி மன்றம் 1,046 பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுத்தது.

இவ்வாண்டில் பின்வரும் வரிகளும் கட்டணங்களும் வசூலிக்கப் பட்டுள்ளன :—

வரிகள்—கட்டணங்கள் குறித்த விவரம். (1)	1979-80 ஆம் ஆண்டிற்கான மொத்த வசூல். (2)
	(ரூபாய்.)
சொத்து வரி	2,12,19,695.95
தொழில் வரி	16,92,923.53
(வண்டிகள்—கால்நடை)	
V & A வரிகள்	35,740.00
விளம்பர வரிகள்	2,24,518.00
உரிமக் கட்டணங்கள்	8,24,783.00
குடிநீர்க் கட்டணங்கள்	19,71,478.00

தெரு விளக்குகள் :

இவ்வாண்டில் திண்டுக்கல் சாலை மேற்கு வெளித் தெரு, கிழக்குச் சித்திரை தெரு, வடக்குச் சித்திரை தெரு, தெற்குச் சித்திரை தெரு, மேற்குச் சித்திரை தெரு ஆகிய இடங்களில் ஏற்கெனவே இருந்த விளக்குகளுக்குப் பதிலாக 525 குவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள 924 விளக்குகளுடன் இவ்வாண்டின் இறுதியில் 1,449 ஒளி குவி விளக்குகள் உள்ளன. தற்போதுள்ள 8,062 குழல் விளக்குகளுடன் 1,220 குழல் விளக்குகள் புதிதாக பொருத்தப் பட்டுள்ளன. இவ்வாறாக 1979-80 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு தற்போது 9,282 குழல் விளக்குகள் உள்ளன.

கல்வி :

இம்மாநகராட்சி நிருவாகத்தின்கீழ் 8 மேல்நிலைப்பள்ளிகளும் (ஆண் களுக்கு 3-ம், பெண்களுக்கு 5-ம்), 12 உயர்நிலைப்பள்ளிகளும், 12 உயர் தொடக்கப் பள்ளிகளும், 71 தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இம்மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 12,974 மாணவர்களும், தொடக்க உயர் தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றில் 35,645 மாணவர்களும் படிக்கின்றனர்.

இம்மாநகராட்சியின் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 7,45,000 செலவில் தொடக்கப்பள்ளி மாணவர்கள் 18,200 பேருக்குச் சுவையான உணவு வழங்கப்படுகிறது.

போக்குவரத்து :

நெடுஞ்சாலைகள், கிராமப்பணிகள் துறை 13.4 இலட்சம் ரூபாய் செலவில் கைப்பிடி கிராதிகள், நடைபாதைகள் அமைப்பதற்கான திட்டத்தை நிறைவேற்றியது.

புதிய பேருந்து நிலையம் :

வட கிழக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகளுக்கு இட வசதி அளிப்பதற்காக ரூபாய் 13 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டப்பட்டது.

சாலைகள் :

இவ்வாண்டில் மொத்தம் 435—460 கிலோ மீட்டர் நீளமுள்ள வெவ்வேறு வகை சாலைகள் பராமரிக்கப்பட்டன. உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக முதல் கட்டமாக 47 தார் சாலைகளைப் புதுப்பிப்பதற்காக அரசு ரூபாய் 78 இலட்சம் அனுமதித்தது. இப்பணிகள் நெடுஞ்சாலைகள் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு இவ்வாண்டில் முடிக்கப்பட்டுவிட்டன. 1979 நவம்பரில் வரலாறு காணாத அளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக குருவிகாரன் சாலைப்படுகைப் பாலம் பெருமளவில் சேதம் அடைந்து நேரடிப் போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டது. போக்குவரத்து இடையூறு களைத் தவிர்க்கும் பொருட்டு ரூபாய் 2½ இலட்சம் செலவில் மாற்று வழிப் பாதை உடனடியாக அமைக்கப்பட்டது. இத்துடன் சாலைகளைப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு இதற்கு ரூபாய் 50 இலட்சம் அனுமதித்தது.

துப்புரவு :

குப்பைக் கூளங்களை அகற்றுவதற்காக லாரிகள் பத்தும், மாட்டு வண்டிகள் 212-ம் இருந்தன. நிலத்தடி சாக்கடை ஏற்பாடு அல்லது திறந்த வெளி சிமிட்டி வடிகால்கள் இல்லாத பகுதிகளிலிருந்து கழிவு நீரை அகற்றுவதற்காக 6 லாரிகளும், 70 மாட்டு வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. கலவை உரக் கிடங்குக்கு மலத்தைக் கொண்டு செல்வதற்காக மூன்று லாரிகள் பயன்படுத்தப்பட்டன. வண்டலை அகற்றுவதற்கும் கழிப்பிடத் தொட்டிகளிலிருந்து கழிவுப் பொருள்களை எடுத்து செல்வதற்கும் மூன்று லாரிகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம்.

இம்மாநிலத்தில் கிராமங்களிலுள்ள சுமார் 25.70 மில்லியன் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இடையறாது கிடைக்க வகை செய்வதே கிராம குடிநீர் வழங்குத் திட்டத்தின் நோக்கமாகும். இந்நீர் வழங்கல் முறையில் தடை ஏற்பட்டால் அதனை உடனடியாகச் சரிசெய்து மிக விரைவாக நீர் வழங்க ஏற்பாடு செய்ய வங்கி நிர்வாக அமைப்புக்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில், ரூ. 2,477.18 இலட்சம் மதிப்பீட்டு செலவில் குடிநீர் வழங்கலுக்காக 31 புதிய திட்டங்களுக்கும் மேம்பாட்டுப் பணிகளுக்கும் வடிகால் திட்டம் ஒன்றுக்கும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. 1980 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 84 குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கும் (புதுத் திட்டங்கள், மேம்பாட்டுப் பணிகள்) 10 வடிகால் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன. அறிக்கையாண்டில், 10 குடிநீர் வழங்கல் திட்டங்களும் மேம்பாட்டுப் பணிகள் இரண்டும் முடிக்கப்பட்டன. இவற்றால், 2.60 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். நகர்ப்புற குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக சுமார் ரூ. 1,280 இலட்சம் செலவிடப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், கடனாக ரூ. 492 இலட்சம் (சிறுவானத் திட்டம் நீங்கலாக) வழங்கியுள்ளது. மாநில அரசு, அறிக்கையாண்டில், சென்னை மாநகரத்தைத் தவிர ஏனைய நகர்ப்புற குடிநீர் வடிகால் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 314.00 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

1, 2 வகைகளிலுள்ள 5,420 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தொடர்ந்து வழங்குமாறு மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி 1977 செப்டம்பரில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு இருவகையிலும் 2 597 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.

வகை 3 திட்டங்கள்.—1979-80 ஆம் ஆண்டில் 3 ஆம் வகையிலுள்ள 47 குடியிருப்புகளுக்கு ரூ. 68.42 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப்பட்டது. இதனால், 12,280 மக்கள் பயனடைந்தனர்.

நிதி ஒதுக்கீடு.—1979-80 ஆம ஆண்டில் தமிழ் நாட்டில் கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக மாநில அரசு ரூ. 600 இலட்சம ஒதுக்கியது. கிராமப்புற குடிநீர் வழங்கல் விரைவுத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 213.52 இலட்சம் வழங்கியது. இவ்வாறு, இத்திட்டத்திற்காக 1979-80 ஆம் ஆண்டில் மத்திய அரசும், மாநில அரசும் ஒதுக்கிய மொத்த தொகை ரூ. 813.52 இலட்சமாகும்.

கிராமப்புற குடிநீர் வழங்கல் :

1979-80 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணி, செலவிடப்பட்ட தொகை.

ஆண்டு	திட்டங்களின் வகைப்பாடு	முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1979-80	1, 2 வகைகளின் கீழ் மத்திய அரசின் கிராமப்புற குடிநீர் வழங்கல் விரைவுத் திட்டம்	296	463.69
	1, 2 வகைகளின் கீழ் மாநில அரசின் கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டம்.	504	558.62
		800	1021.31

கைப்பம்புகள் பராமரிப்பு.—ஒவ்வொரு 100 பம்புகளுக்கு ஒரு இயந்திரக் கம்வுயர் பொருத்துபவர் நியமிக்கப்படுகிறார். அவர் வட்டார வளர்ச்சி அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழும், தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் தொழில் நுட்ப மேற்பார்வையின் கீழும் பணி புரிந்து வருகிறார்.

விசைப் பம்பு பராமரிப்பு.—செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் கிராமப்புறங்களில் விசைப் பம்புகளைப் பராமரிக்கும் பணியை 1-4-1978-லிருந்து தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம் எடுத்துக்கொண்டது. சோதனை நடவடிக்கையாக மேற்சொன்ன 3 மாவட்டங்களிலுள்ள 2,788 விசைப் பம்புகளைப் பராமரிக்கும் பணியை தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. அரசு ஆணை எண் 2003, நாள் 20-12-1979-ல் தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள விசைப் பம்புகளின் பராமரிப்பை 1-1-1980 முதல் தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம் மேற்கொள்ளும் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 1-4-1978-ல் ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட விசைப் பம்புகளின் பராமரிப்பு பணியையும் சேர்த்து மேற்கொள்ளும்.

பூமி தானமும், கிராம தானமும்.

1954-56 ஆம் வருடங்களில் ஆச்சாரிய வினோபாபாவே அவர்களால் பெறப்பட்ட தான நிலங்கள் தமிழ் நாடு பூமிதான சட்டம் 1958-ன்படி முறைப்படுத்த தமிழ்நாடு பூமிதான வாரியம் 1959-ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

பூமிதானம்.—15,822 நபர்களால் தானம் கொடுக்கப்பட்ட 23,664.13 எக்கர் நிலங்களை முறைப்படுத்தி பூமிதான வாரியத்திற்கு சட்டப்படி உரிமையாக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 172.13 எக்கர் நிலங்கள் 43 நபர்களால் புதிதாக தானம் கொடுக்கப்பட்டுள்ளது.

பூமிதான நிலங்களின் அபிவிருத்திப் பணிகள்.—இரண்டு திட்டங்களின் மூலம் ரூ. 6,85,000 செலவில் 143.94 எக்கர் நிலத்தை முழுமையாக சீர்திருத்தம் செய்யப்பட்டு இந்த நிலங்களை எந்தவித வில்லங்கமும் இல்லாமல் எல்லா விதமான வசதிகளுடனும் 50 வினியோகதாரர்களுக்கு சாகுபடி செய்வதற்காக பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமதானம்.—இதுவரையில் 22030 கிராமதான பத்திரங்களில் 1,419 கிராமதான பத்திரங்கள் பரிசிலனை செய்யப்பட்டு ஒப்புதல் செய்து விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. இதில் இந்த வருடத்தில் புதிதாக பெறப்பட்ட 121 பத்திரங்களும் அடங்கும். இதுவரை 282 கிராமங்கள் அரசாங்கத்தால் கிராமதான கிராமங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி கிராமங் களில் 1/20 பங்கு நிலமாக இதுவரை 256.08 ஏக்கர் நிலங்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட கிராமங்களில் உள்ள நிலமில்லா ஏழைகளுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ரூ. 28,248.80 கிராமப் பொது நிதி வசூல் செய்யப் பட்டு இந்தத் தொகை மேற்படி கிராம அபிவிருத்திப் பணிக்காக கிராம சபையால் செலவிடப்பட உள்ளது. இந்த வருடத்தில் 1972.82 ஏக்கர் நிலம் 1/20 பங்கு நிலமாக தானம் பெறப்பட்டும், கிராமப் பொது நிதியாக ரூ. 6005.80 வசூல் செய்யப்பட்டுள்ளது. கிராமதான கிராமங்களில் அபிவிருத்திக்கான திட்டங்கள் ரூ. 7 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டு பல தனியார் சேவா ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தற்சமயம் சேவா ஸ்தாபனங்களால் மேற்படி திட்டங்களுக்கான ரூ. 1,02,83,015.75 செலவு செய்யப்பட்டு இதனால் 4,889 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

32 கிராமதான சர்வோதய கூட்டுறவு சங்கங்களும் 13 தான சேவாக் கூட்டுறவு சங்கங்களும் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன. பூதான போர்டு நிதியில் இருந்தும் அரசாங்கம் மற்றும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்டகாலம் கடனாகவும் மத்திய கடனாகவும் ரூ. 25 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகைகளில் அரசாங்கத்திற்கு ரூ. 2,37,971-ம் வாரியத்திற்கு ரூ. 97,350-ம் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 1,90,102 மட்டும் நிலுவையில் உள்ளன.

நகராட்சி தேர்தல்.

நகராட்சி தனி அதிகாரிகளின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் 30—9—1979-ல் முடிவடைய இருந்தது. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவிருந்ததால் நகராட்சிகளின் தேர்தல்களை, நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்த ஒரு சில மாதங்கள் கழித்து நடத்தலாமெனக் கருதப்பட்டதால் நகராட்சித் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 30—9—1980 வரை மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டது.

அத்தியாயம் XIX

சமூக நலத்துறை

சமூக நலம்.

சமூகநலத் துறை இயக்குநர், அத்துறையின் தலைவராவார். துறைத் தலைமையிடங்களில் அவருக்கு உதவியாக இணை இயக்குநர், துணை இயக்குநர், ஏனைய அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். மாவட்டங்களிலுள்ள மாவட்ட மகளிர் நல அதிகாரிகள், மாவட்டங்களில் துறைப் பணிகளைக் கவனிக்கின்றனர். இத்துறை மகளிர் நலனையும், குழந்தைகள் நலனையும் கவனிக்கின்றது.

குழந்தை நலம்—பாலர் பள்ளிகள்.

இம்மாநிலத்தில் மொத்தம் 4,433 பாலர் பள்ளிகள் இருந்தன. இப்பள்ளி களை நடத்துவதற்கென பயிற்சி பெற்ற பாலசேவகிகள் நியமிக்கப்பட்டனர். அரிசனக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு, இந்த ஆண்டில் 50 பாலர் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் அரிசனக் குடியிருப்புகளில் அரிசனக் குழந்தைகளின் நலனுக்கென்றே தனியாக 300 பள்ளிகள் நடத்தப்பட்டன. தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அஜீஸ்நகர் குடியிருப்பில் குற்றப் பரம்பரையினருக்காக பாலர் பள்ளிகள் நடத்தப்பட்டன. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங் களில், 79-80 ஆம் ஆண்டுக் காலத்தில், பழங்குடியினரின் குழந்தைகளின் நலனுக்கென 30 பாலர் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. 31—3—1980 இறுதியில் 205 பள்ளிகள் இயக்கி வந்தன. ஒவ்வொரு பள்ளியிலும் பயன் பெறுவோர் 70 பேர். அதில் பாலர்கள் 60 பேர், கருவுற்ற தாய்மார்கள் 10 பேர். இவர்கட்குச் சத்துணவு 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப் பட்டது. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்ட கட்டிடங்களில் 939 குழந்தை நல இல்லங்கள் இயங்கி வந்தன.

EMARA PUBLIC LI

குழந்தை வளர்ச்சி ஒருங்கிணைந்த பணித் திட்டம்.

இந்த ஆண்டில் குழந்தை வளர்ச்சி ஒருங்கிணைந்த பணித் திட்டம் சென்னை, தருமபுரி மாவட்டத்தில் தளி, மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 100 நிலையங்களுடன் தொடர்ந்து பணிபுரிந்தன. அந்நிலையங்களில் பாலர் கல்வி, சத்துணவு, சுகாதார பரிசோதனை முதலிய பணிகள் கவனிக்கப்பட்டன. தாய்-சேய் நலப் பணித் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் இந்த ஆண்டில் 42 நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடங்கப்பட்ட 68 நிலையங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஒவ்வொரு நிலையமும் 140 பாலர் நலனையும், குழந்தைகள் காப்பகத்திலுள்ள 30 குழந்தைகளின் நலனையும் பேணி வருகிறது. பூந்தமல்லியில் அமைந்த குழந்தை நல ஒருங்கிணைந்த செய்முறை விளக்கத் திட்டம் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் 50 பாலவாடிகள், 10 குழந்தைகள் காப்பகங்களுடன் 1979-80 ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது.

உலக வங்கிச் சத்துணவுத் திட்டம்.

உலக வங்கிச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டம்பட்டி என்னுமிடத்தில் முன்னோடித் திட்டமொன்று தொடங்கப்பட்டது. அதன் பொருட்டு பணியாளர்களுக்கு முதற்கண் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆதரவற்ற குழந்தைகள் நலத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், 1979-80 ஆம் ஆண்டுகாலத்தில் சென்னையிலுள்ள பஞ்சாப் சங்கத்திற்கு 17,062.05 ரூபாயும், ஸ்ரீசேவா மந்திருக்கு 46,000 ரூபாயும் வழங்கப்பட்டது. சென்னை-8-ல் உள்ள சென்னை சமூக நலப் பணிப் பள்ளிக்கு 32,733.80 ரூபாயும், சென்னையிலுள்ள தொண்டு நிறுவனத்திற்கு 33,012 ரூபாயும் வழங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 59 தொண்டு நிறுவனங்களுக்கு 38,00,000 ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அனாதை இல்லங்கள்.

இந்த ஆண்டில், சென்னை, சேலம், கன்னியாகுமரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 250 அனாதைக் குழந்தைகள் தங்குவதற்குரிய வசதியுடன் கூடிய

அனாதை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இவை 5 முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற குழந்தைகளுக்குரிய அனாதை இல்லங்களாகும்.

சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

பழங்குடியினர் வாழும் பகுதிகள் உட்பட 55 நிலையங்களில் 1,35,495 பேர் பயன்பெறும் வகையில் சிறப்புச் சத்துணவுத் திட்டம் செயலாக்கப்பட்டது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சிங்காநல்லூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 1,41,035 பேர் பயன் பெறும் வகையில் சிறப்பு மற்றும் சத்துணவுத் திட்டம் செயலாக்கப்பட்டது. பொருளாதார நிலையில் மிகவும் நலிந்த மக்களுக்குச் சத்துணவுத் தேவையை ஈடு செய்யும் பொருட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டது. திருத்தப்பட்ட இத்திட்டத்தின்படி ஒவ்வொருவருக்கும் 700 கிராம் "பாலகார்" உணவு வழங்கப்பட்டது. இத்திட்டத்தால் பயன் பெறுவோர் காலமுறைப்படி மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டனர். பாலகார் உணவு "கேர்" நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. இத்திட்டம் உள்ளாட்சி மன்றங்களின் மூலம் செயலாக்கப்பட்டது.

மகளிர் நலம்.

வறிய நிலையில் வாழும் கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மனைவிகள், ஆதரவற்ற பெண்களின் (18 வயது முதல் 40 வயது வரையிலுள்ள) இன்றியமையாத தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டும், குறுகிய காலத்தில் நேரடியாக எஸ்.எஸ்.எல்.சி., இ.எஸ், எல்.சி, தேர்வுகள் எழுதுவதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டும், தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் ஐந்து மகளிர் நலப்பணி இல்லங்கள் நடத்தப்பட்டன. இம்மகளிருக்குக் கல்வி அறிவு புகட்டப்படுவதுடன் அவர்களுக்குத் தையல் உடைகள் தைத்தல், பூவேலைப்பாடு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கைத்திறத் தொழில் பயிற்சிப் பிரிவு ஒன்றும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி அளிக்கும் பொருட்டுச் செயலகப்பணி கல்விப் பிரிவொன்றும் தொடங்கப்பட்டன. இத்துறையைச் சேர்ந்த நலப் பணி இல்லங்கள் மூலம் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்த உரிய வயதடைந்த மகளிரின் நலனுக்காக இளநிலை,

முதுநிலை வகுப்புகள் கொண்ட, இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி சென்னையிலுள்ள பல்லாவரத்தில் நடைபெற்று வந்தது. இந்த ஆண்டில் மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பிலும் 40 பெண்கள் பயிற்சி பெற்றனர்.

பணிபுரியும் மகளிர் இல்லம்.

இத்துறையின் பொறுப்பில், சென்னை மாநகரில் பணிபுரியும் மகளிருக்கென, மகளிர் இல்லம் ஒன்று நடத்தப்பட்டு வந்தது. அதில் பணிபுரியும் மகளிர் 25 பேர் தங்க அனுமதி அளிக்கப்பட்டது.

தையல் பணி நிலையங்களும் உற்பத்தி பிரிவும்.

இந்த ஆண்டில், கோயம்புத்தூரில் ஒன்றும் பழங்குடியினரின் நலனுக்கென சேலம் வட்டத்திலுள்ள கொல்லி மலையில் ஒன்றும் ஏர்க்காட்டில் ஒன்றும், கல்ராயன் மலையில் ஒன்றும் ஆக மொத்தம் நான்கு தையல் பணி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இம்மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதிவரையில் 50 பணி இல்லங்களும் உற்பத்திப் பிரிவுகளும் செயல்பட்டு வந்தன.

சமூக நலப் பிரிவுகள்.

இந்த ஆண்டில் நகராட்சிப் பகுதிகளின் அமைந்த 50 சமூக நலப் பிரிவுகள் தொடர்ந்து பணியாற்றின. இப்பிரிவுகள் இவற்றைப் பொறுப்பேற்று நடத்துபவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தன. இரண்டரை வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு காலையில் அடிப்படை முன் வகுப்புகள் நடத்தப்பட்டன. தையல், பாய் முடைதல் முதலிய பயனுள்ள தொழிலில் மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. " கேர் " நிறுவனத்தின் உதவியுடன் இப்பிரிவிலுள்ள குழந்தைகளுக்கு " பாலகார் " உணவுத் தரப்பட்டது.

மகளிர் மன்றம்.

கிராமப் பகுதியில் வசிக்கும் மகளிர் அனைவரையும் ஒன்றுசேர்க்கும் பொருட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் 30 மகளிர் மன்றங்கள் எனனும் வீதத்தில் மொத்தம் 11,220 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இம்மன்றங்களின் பல்வேறு பணிகளைக் கவனிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும்

4,000 ரூபாய் செலவாயிற்று. 184 மகளிர் மன்றங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் நிருவாகிகளுக்கு ஒருங்கிணைப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு 6,575 ரூபாய் செலவில் செயலாக்கப் பட்டது.

தனித்திட்டங்கள்.

வறிய நிலையில் வாழும் மகளிரின் பயனுக்காக அவர்களுக்குத் தட்டச்சில் வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிப்பதற்குரிய திட்டம் 10 தவணைகளில் 150 ரூபாய் பயிற்சி, உவிதத்தொகையை அளித்ததின் மூலம் நிறைவேற்றப் பட்டது. இத்திட்டத்தால் 1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் 9,212 பெண்கள் பயனடைந்தனர். இதற்கான செலவு 1,50,000 ரூபாய்.

கைம்பெண்களின் குழந்தைகளுக்கு புத்தகங்கள், குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்.

ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த கைம்பெண்களின் குழந்தைகளுக்குப் புத்தகங்கள், குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் பயனடைந்தனர்.

கைம்பெண் மறுமணம்.

கைம்பெண்மறுமணத் திட்டத்தின்படி மறுமணம் செய்து கொள்ளும் கைம்பெண்களுக்கு 5,000 ரூபாய் ஏழு ஆண்டுகள் கழித்தே அத்தொகையை பெறும் வண்ணம் வைப்பீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 18 வயது முதல் 30 வயது வரையிலான ஆதரவற்ற கைம்பெண்களுக்கு (விவாகரத்து செய்தவர்கள் அல்லர்) அல்லது கணவனால் கைவிடப்பட்ட மனைவிகளுக்கும் மட்டுமே உரியதாகும். 1979-80 ஆம் ஆண்டில் 100 தம்பதியர்கள் இத் திட்டத்தால் பயனடைந்தனர். இத்திட்டத்தின் கீழ் 5,00,000 ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

தையல் மிஷின் வழங்குதல்.

இந்த ஆண்டில் ஒருவருக்கு ஒரு தையல் மிஷின்கள் என்ற வீதத்தில் 2,500 பேருக்கு வழங்கப்பட்டது. இதன் பொருட்டு ரூபாய் 15 இலட்சம் செலவிடப்பட்டது.

மகளிர் நலக் கழகம்.

கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோரின் நலனுக்கென, சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மகளிர் நலக் கழகங்கள் நடைபெற்று வந்தன. 1979-80 ஆம் ஆண்டில் கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோரின் 2,500 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டது.

கிராமத்துப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்யும் தனித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கதர்-கிராமத்தொழில் வாரியம் 153, தீப்பெட்டித் தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும், 6 சுண்ணாம்புக் கட்டி தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும், 3 எழுதுபொருள் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும், 20 பனைப் படு பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் பிரிவுகளையும் பனை ஓலையால் முடையப்படும் பாய்; பனை நார் பொருட்கள் தயாரிப்புப் பிரிவுகளையும் அமைத்து அவற்றின் மூலம் கிராமப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தது. மேலும், 3 சுண்ணாம்புக் கட்டி தயாரிப்புப் பிரிவுகளும், 3 மெழுகுவர்த்தி தயாரிப்புப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு அவை செயல்பட்டு வந்தன.

தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசு வழங்கும் மான்யம்.

ஆதரவற்ற மகளிர் குறுகிய காலத்தில் நேரடியாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கென பின்வரும் நிலையங்களுக்கு தேர்வு எழுதும் மகளிர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு 50 ரூபாய் என்னும் வீதத்தில் மானியம் வழங்கப்பட்டது.

1. அவ்வை ஆசிரமம், சிவசைலம் (திருநெல்வேலி மாவட்டம்).
2. சேவாகிரமம், மதுரை.
3. கஸ்தூரிபா சேவா ஆசிரமம், காந்தி கிராமம், மதுரை.
4. திருச்சி சேவா சங்கம், திருச்சி.

இதேபோன்று, சென்னையிலுள்ள ஸ்ரீசேவாமந்திர் செயலகப் பணிப்பாட வகுப்புகளை நடத்தியது; வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் படிப்புதவித் தொகை அளிக்கும் பொருட்டு மானியம் வழங்கப்பட்டது.

ஆண்டு மானியம்.

தமிழ்நாட்டிலுள்ள சமூக நல இந்தியக்குழு, பம்பாயிலுள்ள சமூக நல இந்தியக்குழு, பம்பாயிலுள்ள சமூக நலப்பணி டாடா நிறுவனம் ஆகியவற்றுக்குப் பயனுள்ள நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக. 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் ஒவ்வொரு குழுவுக்கும் 2,000 ரூபாய் ஆண்டு மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் 1976 ஆம் ஆண்டில் மது அருந்தி உயிரிழந்தோரின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள், சென்னை தாம்பரத்திலுள்ள வள்ளுவர் குருகுலத்திலும், சென்னை-9-ல் உள்ள இளைஞர் கிறித்துவச் சங்கத்திலும் சேர்க்கப்பட்டனர். இவ்வகையில் 1,20,696 ரூபாய் செலவு செய்யப்பட்டது.

கட்டிட நிதி.

சென்னையிலுள்ள காமராசர் நினைவுக் கட்டிட வளாகத்தைக் கட்டி முடிக்கும்பொருட்டு, சென்னை பால மந்திர் மருத்துவ மனைக்கு ரூ. 3.50 இலட்சம் வட்டி இல்லாக் கடன் அளிக்க அரசு 1979-80-ல் ஒப்புதல் அளித்தது.

நவீன பயிற்சி—உற்பத்திப் பணிக்களரி, முட்டுக்காடு.

இதுகாறும், உடல் ஊனமுற்றோர் 68 பேருக்கு இப்பணிக்களரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் பயிற்சி முடிந்தபின்னர், அப்பணிக்களரியிலேயே தற்காலிகத் தொழிலாளர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

காது கருவிகள் வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டுக் காலத்தில் பள்ளி செல்லும் பாலர்கள் 700 பேருக்கு காது கருவிகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீசேவாமந்திரில் பயிற்சி அளித்தல்.

உடல் ஊனமுற்ற மகளிர் 29 பேருடன் 2 ஆம் தொகுதியினருக்கான பயிற்சி 1979 ஜூன் திங்களில் தொடங்கப்பட்டது. பயிற்சி பெறுவோர் மாணவர்கள் இல்லத்தில் தங்கியிருப்பவர்களாயின் அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு 75 ரூபாய் உதவித் தொகையும், வீட்டில் தங்கிப் படிப்பவர்களாயின் 40 ரூபாய் உதவித் தொகையும் அளிக்கப்பட்டது.

செவிடர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி.

இத்திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 14 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி வகுப்பு சென்னை-6, சிறுவர் பள்ளியில் நடத்தப் பட்டது. பயிற்சிக் காலத்தின்போது பயிற்சியாளர்களுக்கு, அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளத்துடன் திங்கள் ஒன்றுக்குச் சிறப்பு ஊதியமாக ரூ. 25 வழங்கப்பட்டது.

முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்குதல்.

இந்த ஆண்டில் உடல் ஊனமுற்ற வறியவர்கள் 877 பேருக்கு முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்கப்பட்டன.

மன வளர்ச்சிக் குன்றியவர்களின் ஆசிரியர் பயிற்சி.

மன வளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு பயிற்சியளிப்பதற்காக பாலவிகாருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 45,600 மானியம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 19 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பராமரிப்பு மானியம்.

இந்த ஆண்டில், இளம்பிள்ளை வாதம், மூளைக் காய்ச்சல், மன வளர்ச்சிக் குன்றுதல் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட 8 முதல் 14 வயதுடைய சிறுவர்களைப் பராமரிப்பதற்காகத் திங்கள் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 20 வீதம் ஆறு தொண்டு நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியமாக ரூ. 63,000 வழங்கப்பட்டது. தொழுநோயால் துன்புறும் குழந்தைகளையும் தொழுநோயால் பீடிக்கப்பட்டோரின் பராமரிப்பிற்காக 1979-80 ஆம் ஆண்டில் மூன்று தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 39,942.25 அனுமதிக்கப்பட்டது.

படிப்புதவித் தொகைகள்.

உடல் ஊனமுற்றவர்களுக்கான இந்திய அரசின் படிப்புதவித் திட்டத்தின் கீழ் 1,000 பேர்களுக்குப் படிப்புதவித் தொகையாக ரூ. 5,72,222 அனுமதிக்கப் பட்டது.

பார்வையிழந்த மகளிருக்கான புதுவாழ்வு இல்லம்.

பார்வையிழந்தோருக்கு சென்னை-4 மைலாப்பூரில் வசதிகளுடன் கூடிய புதுவாழ்வு இல்லம் தொடர்ந்து இயங்கி வருகிறது. ஏழை மற்றும் ஆதரவற்ற பார்வையிழந்த கல்வித் தகுதி எவ்வாறு இருப்பினும் 40 வயதுக்கும் குறைவான மகளிர், 1979-80 ஆம் ஆண்டில் இந்த புதுவாழ்வு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். இந்த புதுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்களுக்கு நெசவு, சுண்ணாம்புக் கட்டித் தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்களில் ஆறு திங்கள் கால அளவிற்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

உடல் ஊனமுற்றவர்களுக்கு 1979-80 ஆம் ஆண்டில் மாநில வாரியம் ஆற்றிய பணி.

(உடல் ஊனமுற்ற 74 பேர்களுக்குச் செயற்கை உறுப்புகள்/கருவிகள் வாங்குவதற்காக ரூ. 1,990 அளவுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. உடல் ஊனமுற்ற 32 பேர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்காக அல்லது உதவிக் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 10,400 அளவுக்கு மானியம் வழங்கப்பட்டது. உடல் ஊனமுற்ற ஒருவருக்கு ரூ. 750 விலையில் சக்கரத்துடன் கூடிய தள்ளுவண்டி ஒன்று வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்ற 57 பேர்கள் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகுநர்களாக அமர்த்தப் பட்டனர். 1,000 ஊறு ஏற்பட்ட காலுக்கு இழுத்துக்கட்டப்படும் வரிச்சல் வழங்குவதற்காக சென்னை, மருத்துவக் கல்வி இயக்குநருக்கு ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டது. உடல் ஊனமுற்ற 25 பேர்களுக்கு பெட்டி கடைகள் வைத்து நடத்துவதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற உதவி அளிக்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகம் ரூ. 500 உதவித்தொகை வழங்கியது.

அரசுக் காப்பு இல்லம், மேல்பாக்கம்.

பூவிருந்தவல்லிக்கு அருகில் மேல்பாக்கத்திலுள்ள பிச்சைக்காரர் புதுவாழ்வு இல்லம் தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்த புதுவாழ்வு இல்லத்திற்கு 770 ஆண்களும் 180 பெண்களும் அனுமதிக்கப்பட்டிருக்க 1979-80 ஆம் ஆண்டில் 305 பேர்கள் (261 ஆண்கள், 44 பெண்கள்) இருந்தனர். இந்த இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கு மருத்துவ வசதிகளுடன் இலவச உணவும் இருப்பிடமும் மருத்துவ வசதிகளுடன் அளிக்கப்படுகிறது.

மாநில சமூகநல வாரியம்.

அரசுச் சார்பற்ற ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநில சமூகநல வாரியம், சமூகநல நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் துணை நிறுவனமாகும். இது சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சமூக நலத்துறை இயக்குநர், வாரியத்தின் அலுவல் முறையிலான செயலாளராவார்.

ஆண்டு மானியமும் திட்டக்கால மானியமும்.

1979-80 ஆம் ஆண்டில், ஆண்டு மானியத்தின் கீழ் 307 நிலையங்களுக்கு ரூ. 4.78 இலட்சம் மானியமும், திட்டக்கால மானியத்தின் கீழ் 38 நிலையங்களுக்கு ரூ. 3.10 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டன.

சத்துணவுத் திட்டம்.

133 நிலையங்கள் மூலமாக 5,103 குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 4,32,455 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

குழந்தைகள் காப்பகம்.

219 பிரிவுகள் 5,400 குழந்தைகளுடன் இயங்கிக் கொண்டிருந்தன. 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 12.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

விடுமுறை இல்லம்.

ஏழைக் குழந்தைகள் வெளி இடங்களில் தங்கி 15 நாட்களுக்குச் சுற்றிப் பார்ப்பதும் கூட்டுணர்வு முதலியவற்றை வளர்த்துப் பயனடைவதும் இதன் நோக்கமாகும். இந்த ஆண்டில் 3,500 குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்றனர்.

ஒரு தடவை மானியம்.

222 நிலையங்களுக்கு சாதனங்கள் வாங்குவதற்காக மானியமாக ரூ. 1.87 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டம்.

81 நிலையங்களுக்கு வெவ்வேறு பாடத்திட்டங்களுக்காக மொத்த மானியம் ரூ. 11.70 இலட்சம் வழங்கப்பட்டது.

முதியோர் (மகளிருக்குச்) சுருக்கக்கல்விப் பாடமுறை.

ஏழு பாட முறைகளுக்காக ரூ. 1.14 இலட்சம் மானியம் அனுமதிக்கப் பட்டது.

பணிபுரியும் மகளிர் இல்லம்.

இத்திட்டத்தின்கீழ் ஏழு இல்லங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

சமூக பொருளாதாரத் திட்டம்.

சிறு தொழில் பிரிவுகளின்கீழ் ஐந்து பிரிவுகளுக்கு ரூ. 2.25 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டது. பால் வழங்கும் திட்டத்தின்கீழ், 53 பிரிவு களுக்கு மொத்தம் ரூ. 6.86 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மூன்று பிரிவுகளுக்கு ரூ. 30,000 அனுமதிக்கப் பட்டது. வாரியம், கோயம்புத்தூர் எல். ஜி. பாலகிருஷ்ணன் சன்ஸ் என்ற நிறுவனத்தின் உடனழைப்புடன் தொழில்களுக்குத் தேவையான சங்கிலிகள் தயாரிப்பதற்காக ரூ. 90,000 மொத்த மூலதனத்துடன் தனது முதல் துணைத் தொழில் பிரிவைத் தொடங்கியது.

தொண்டு நிலையங்களுக்கு மாநில அரசு மானிய உதவி.

தொண்டு நிலையங்களுக்கு மானியமாக வழங்குவதற்காக, மாநில சமூக நலத்துறை வாரியத்திற்கு, மாநில அரசு வழங்கும் ரூ. 1 இலட்சம் மானியம், குழந்தைகளுக்கான வழி காட்டு நிலையம் அறிவியல் கருவிகளை வாங்கு வதற்காக 20 நிலையங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூ. 5,000 வீதம் வழங்கப் பட்டுள்ளது.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன்.

பள்ளிகள்.

ஆதி திராவிடர்களின் நலனுக்காக ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை 942 ஆதி திராவிடர் நலப்பள்ளிகளை நடத்துகிறது. 942 பள்ளிகளில், 4 மேல்நிலைப் பள்ளிகளாகும் ; 19 உயர் நிலைப் பள்ளிகளாகும் ; 79 நடுத்தரப் பள்ளிகளாகும் ; 840 தொடக்கப் பள்ளிகளாகும். 840 தொடக்கப் பள்ளிகளுள்

ஒரு ஆசிரியர் மட்டுமே பணியாற்றும் பள்ளிகள் 100 உள்ளன. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் படிக்கும் சிறுவர், சிறுமியர் பற்றிய விவரங்கள் வருமாறு :—

சிறுவர்		85,633
சிறுமியர்		76,795
மொத்தம்	..	1,62,428

ஊக்கப் பரிசுகள்.

ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லும் ஆதி திராவிடர் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கப் பரிசுகளாக உடைகள் அளிக்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் மாணவ மாணவியர் வருகை தரும் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு/தலைமை ஆசிரியைக்கு வெள்ளிப்பதக்கம் பரிசாக வழங்கப்படுகின்றது. இதைத் தவிர பள்ளியிறுதித் தேர்வில் மாநிலத்தில் அதிக மதிப்பெண்கள் பெறும் நான்கு ஆதி திராவிட மாணவ மாணவியருக்கு (2 மாணவர்கள், 2 மாணவியர்கள்) ரூ. 500, ரூ. 250-ம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு புத்தகங்களாக வழங்கப்படுகின்றன. மேற்சொன்ன பரிசுகளுடன் பள்ளியிறுதித் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட அளவில் ரூ. 150, ரூ. 100, ரூ.50 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மாணவிகளுக்கு உடைகள் வழங்கல்.

ஆதி திராவிட நலப் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களுக்கும் அதை நடத்தும் அரசினர் மாணவியர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் இலவசமாக இரண்டு ஜோடி உடைகள் அதாவது கல்வியாண்டுத் தொடக்கத்தில் ஒன்றும், பொங்கலின் போது மற்றொன்றுமாக வழங்கப்படுகின்றன.

வெவ்வேறு வயது உடையவர்களுக்கான உடைகளின் விலை வருமாறு :

வயதுத் தொகுதி.	இரு ஜோடி உடைகள் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புத் தொகை.
1. 5—8 9—11	ரூ. 18
2. 12—14	ரூ. 30
3. 15-ம் அதற்கு மேலும்	ரூ. 40

மாணவர்களுக்கு உடைகள் வழங்கல்.

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 வகுப்பு முதல் 8 வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும், இத்துறை நடத்தும் அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் ஒரு ஜோடி உடை ரூ. 10 என்ற விதத்தில் இரு ஜோடி உடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் வழங்கல்.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் எந்த இனத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும், அவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1—5 வகுப்பில் படிக்கும் எல்லா மாணவ மாணவியருக்கும் எழுது பலகைகள் வழங்கப்படுகின்றன. 3—10 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 1—10 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் மேற்சொன்னவற்றிற்காக ரூ. 25,82,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கலப்புத் திருமணப் பரிசுகள்.

1979-80-இல் பழைய திட்டத்தின்கீழ் 138 தம்பதியினருக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 23 தம்பதியினர் ஒவ்வொருவருக்கும் ரூ. 4,300 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. மீண்டும் கலப்புத் திருமணம் செய்த

கொள்ளும் விதவை/மனைவியை இழந்தவருக்கும் 21—8—1979-லிருந்து மேற்சொன்ன கலப்புத் திருமண சலுகைகளை அளிக்க அரசு ஆணையிட்டது. 1979-80 இல் இதற்காக ரூ. 1,26,400 செலவிடப்பட்டது.

தீண்டாமையை நீக்குதல்—ஆதிதிராவிடர் வார விழா :

எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 முதல் 30 வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1979-80 இல் இதற்கென ரூ. 33,000 வழங்கப்பட்டது. அரசுக்கு எவ்வித செலவுமல்லாமல் டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் 14 ஆம் நாள் தீண்டாமை ஒழிப்பு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1980 சனவரியில், ஆதிதிராவிடர்களின் உயர்வுக்காக ஆதிதிராவிடர் நலத்துறை செய்த பல்வேறு பணிகளைப்பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி நாளிதழ்களில் சிறப்புச் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கல் :

ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வசதிகளை அளிக்கும் பொருட்டு தேவையான இடங்களில் ரூ. 6,000 செலவில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ரூ. 15,000 செலவில் நீர்த்தேக்கம் கட்டப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டில், இதற்கென, ஆதிதிராவிடர்களுக்காக ரூ. 24,00,000-ம் கிறுத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களுக்காக ரூ. 2,18,000-ம் வழங்கப்பட்டுள்ளது.

இ.நி.ப., இ.வ. பணி தேர்வுகளுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையம், சென்னை-35.

புது டில்லி, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் இந்திய நிர்வாகப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய பணிகளுக்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டும், தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டு முதல் பயிற்சி நிலையத்தின் செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்று வருகிறது. இந்நிலையத்திற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. இது தமிழ்நாடு அரசினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தியா முழுவதிலுமுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்த

விண்ணப்பதாரர்கள் இந்நிலையத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்நிலையத்தில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 60 தேர்வுக் குழு இவர்களைத் தெரிந்தெடுக்கிறது. மேற்படி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்களைப் பாராட்டும் பொருட்டும் தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறந்த மாணவர்களை இந்நிலையத்தில் சேருவதற்கு ஊக்கமளிக்கவும் அனைத்திந்திய பணித் தேர்வுகளில் வெற்றிபெற்று, அந்தந்தப் பணிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்கள், முசெளரியில் அல்லது வேறு இடத்தில் பயிற்சி பெறுவது தொடர்பான செலவுகளுக்காக அரசு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வழங்க அனுமதியளித்துள்ளது. 1979-80 இல் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ரூ. 3.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் முதன்மைத் தேர்வுக்கு முன்னதாக நடத்தப்படும் தேர்வுக்கு 43 விண்ணப்பதாரார்களும், முதன்மைத் தேர்வுக்கு 19 விண்ணப்பதாரார்களும் அனுமதிக்கப்பட்டனர். இதில் 41 பேர் முதன்மைத் தேர்வுக்கு முன்னதாக நடத்தப்படும் தேர்வையும் 19 பேர் முதன்மைத் தேர்வையும் எழுதினர். தேர்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பொது வீட்டு வசதித் திட்டம்:

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், 1974 இலிருந்து, அரசு அளிக்கும் நிதியிலிருந்து ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் கட்டப்படும் வீடுகள் 207 சதுர அடி கட்டிடப் பரப்பளவைக் கொண்டதாயிருக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ. 4,400 ஆக (இத்துடன் விலை ஏற்றத்தின் காரணமாக 15 சதவீதம் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்) இருக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. மலைப் பகுதிகளில் வீட்டின் மதிப்பீடு 50 சதவீதம் அதிகமாகயிருக்கும். இம் மதிப்பீட்டில் நிர்வாகச் செலவுகள் குறித்து 10 சதவீதம் சேர்த்துக் கொள்ளப் படுகிறது. 1979-80 இல் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்திற்காக தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ரூ. 1.70 கோடி அளிக்கப்பட்டது.

பழங்குடியினர் கல்வி—அரசினர் பழங்குடியினர் நலப் பள்ளிகள் :

1979-80 இல் பழங்குடியினரின் நலனுக்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை, பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் அரசினர் பள்ளிகள் 103-ஐயும், தங்கிப் பயில வசதி இல்லாத பள்ளி ஒன்றையும் நடத்தி வருகிறது. பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் 103 அரசினர் பள்ளிகளில் தங்கியிருக்கும் மாணவர் களின் மொத்த எண்ணிக்கை 6,338. தங்கிப் பயில வசதி இல்லாத பள்ளியில் படிக்கும் மாணவர் எண்ணிக்கை 30 ஆகும்.

பல்வேறு திட்டங்கள் தவிர துணைத் திட்டப் பகுதிகளில், பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழும் பள்ளிகள் திறக்கப் படுகின்றன. ஒவ்வோராண்டும் வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மதிய உணவு :

பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் அரசினர் பள்ளிகளில் வெளியிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நிதியிலிருந்து மதிய உணவு அளிக்கப்படுகிறது. வெளியிலிருந்து வந்து படிக்கும் 1,583 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர்.

பழங்குடியினர் நலத் திட்டம், பழங்குடியினருக்குக் குடிநீர் வழங்கல் :

பழங்குடியினருக்குக் குடிநீர் வழங்குவது அடிப்படை வசதிகளுள் ஒன்றாகும். பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறு ஒன்று தோண்ட ரூ. 6,000-மும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நீர்த்தேக்கம் கட்டுவதற்காக ரூ. 15,000-மும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் துணைத் திட்டத்தின்கீழ் ரூ. 10.00 இலட்சமும் (ஒருங்கிணைக்கப்படாத) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தின்கீழ் ரூ. 3.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டன.

கொத்தடிமை.

“கொத்தடிமை” என்னும் பொருள் குறித்து இதுவரை வருவாய்த்துறை வாரியம் கவனித்து வந்தது. 1978-79 முதற்கொண்டு இதனை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர் கவனித்து வருகிறார். மொத்தம் 16 மாவட்டங்

களில் தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், பெரியார், சேலம், நீலகிரி, தருமபுரி ஆகிய 10 மாவட்டங்களிலுள்ள கொத்தடிமைகள் மட்டுமே இனங்கண்டு கொள்ளப் பட்டுள்ளனர். இம்மாவட்டங்களில் மொத்தம் 27,874 பேர் உள்ளனர். இவர்களில் 27,223 பேருக்கு ஆண்டு இறுதியில் மறுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளது. கொத்தடிமை நிலையிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் வகையில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருதல், கோழி வளர்ப்புப் பிரிவுகளை அமைத்துக் கொடுத்தல், கறவை மாடுகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பின்தங்கிய வகுப்பினர் நலன்.

பிற்பட்டோர் நலத்துறை இம்மாநிலத்தில் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக 275 பள்ளிகளை நடத்தி வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் இந்த 275 பள்ளிகளிலுமுள்ள மாணவ, மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 47,054 ஆகும்.

இவ்வாண்டில் பிற்பட்ட வகுப்பினருக்காக 261 மாணவர் விடுதிகளும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக 60 உணவு இல்லங் களும் நடத்தப்பட்டன. இவற்றால் பயன் பெற அனுமதிக்கப்பட்ட மாணவர் களின் எண்ணிக்கை முறையே 17,052, 3,855 ஆகும். பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகளிலும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தினைச் சேர்ந்த மாணவர் உணவு இல்லங்களிலும் பின்வரும் விழுக்காட்டில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் :—

பிற்பட்ட வகுப்பு மாணவர் இல்லங்கள்.		குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச்சேர்ந்த மாணவர் உணவு இல்லங்கள்.	
பிற்பட்ட வகுப்பினர்	65%	குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தோர்.	60%
தாழ்த்தப்பட்ட வகுப்பினர்	25%	பிற்பட்ட வகுப்பினர்	10%
முன்னேறிய வகுப்பினர்	10%	முன்னேறிய வ்குப்பினர்	5%
		தாழ்த்தப்பட்ட வகுப்பினர்	25%

இவ்வில்லங்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்குரிய வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 2,500 என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மதிய உணவு :

குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்குரிய பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் மதுரை மாவட்டத்தில் அரசு கள்ளர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் ஆகியோர் அனைவருக்கும், ஒவ்வொரு மாணவருக்கும் 20 காசு என்ற அளவில் மதிய உணவு வழங்கப் பட்டது. 1975 மார்ச்சுத் திங்களிலிருந்து "கேர்" நிறுவனம் அளிக்கும் உணவும் வழங்கப்படுகிறது. ஓராண்டில் 100 நாட்களுக்கு "கேர்" நிறுவனம் அளிக்கும் உணவும் எஞ்சியுள்ள 120 நாட்களுக்கு அரசு செலவில் அரிசி உணவும் வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் மதிய உணவு வழங்கியதற்காக ரூ. 8.24 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

சீருடைகள் :

குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர் உணவு இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவர்கள் பிற்பட்ட வகுப்பினருக்குரிய (உயர்நிலைப்பள்ளி) மாணவர் இல்லங்களில் தங்கிப்படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் கள்ளர் பள்ளிகளில் மூன்றாம் வகுப்புவரை படிக்கும் மாணவர் களுக்கு, இதர மாவட்டங்களில் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தார்களுக்கான பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்பட்டன. தீபாவளிக்கு ஒரு செட் சீருடையும் பொங்கலுக்கு ஒரு செட் சீருடையும் வழங்கப்படுகின்றன. இவற்றிற்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 13.34 இலட்சம் செலவு செய்யப் பட்டது.

புத்தகங்களும் சிலேட்டுப் பலகைகளும் வழங்குதல் :

மதுரை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களிலுள்ள குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் 1 முதல் 8-ம் வகுப்புவரையிலும் மாணவர்களுக்கும் மதுரை மாவட்டத்திலுள்ள அரசு கள்ளர் பள்ளிகளில் 1 முதல் 10-ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கும்

பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுப் பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ரூ. 3.36 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

உணவு மானியங்கள் :

பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த, மற்றும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த, தகுதி வாய்ந்த ஏழை மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்கும் மேற்படாதிருந்து அங்கீகாரம் பெற்ற தனியார் இல்லங்களில் தங்கிப்படித்தால் அவர்களுக்கு உணவு மற்றும் தங்குவதற்குரிய செலவுகளுக்காக உதவித்தொகைகள் வழங்கப் பட்டன. உணவு மானியம் ஒரு மாணவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 ஆகும். 1978 டிசம்பர் திங்களிலிருந்து இம்மானிய வீதம் பின்வருமாறு மாற்றி யமைக்கப்பட்டுள்ளது :—

	தற்போதைய வீதம். (1)	மாற்றியமைக்கப் பட்டுள்ள வீதம், (2)
சென்னை மாநகர் மாவட்ட தலைமையிடங்கள், வட்டத் தலைமையிடங்கள் ஆகிய இடங்களிலுள்ள மாணவர் இல்லங்கள்.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 25.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 35.
ஏனைய இடங்களில் உள்ள மாணவர் இல்லங்கள்.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 25.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 30.

1979-80ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ள உணவு மானியங்களின் விவரங்கள் வருமாறு :—

	மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை. (1)	அனுமதிக்கப் பட்டுள்ள மானியங்களின் எண்ணிக்கை. (2)	செலவு செய்யப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) (3)
பின் தங்கிய வகுப்பினர்.	42	2,395	6·12
குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தோர்.	3	74	0.13
மொத்தம் .	45	2,469	6.25

மாநில அரசு படிப்பு உதவித் தொகைகள் :

இவ்வாண்டில் அனுமதியளிக்கப் பெற்றுள்ள படிப்புதவித் தொகைகள் குறித்த விவரங்கள் வருமாறு:

	பயன் பெற்றுள்ள மெட்ரிக் வகுப்புக்கு முந்தைய வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை.	அனுமதியளிக்கப்பட்டுள்ள மெட்ரிக் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குரிய உதவித் தொகைகளின் எண்ணிக்கை.	செலவு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). மெட்ரிக் வகுப்புக்கு முந்தைய வகுப்பு.	மெட்ரிக் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு.
	(1)	(2)	(3)	(4)
1. பின்தங்கிய வகுப்பினர்.	75,581	1,03,911	18.71	242.90
2. குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்.	1,45,498	6,939	14.11	19.49
மொத்தம் ..	2,21,079	1,10,850	32.82	262.39

ஏனைய பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்குத் தொழிற்கருவிகள் முதலியவை வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை வருமாறு :—

தொழிற்கருவிகள் பற்றிய விவரம். (1)	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. (2)	செலவு செய்யப் பட்ட தொகை. (3) (ரூபாய்)
சிகை அலங்காரத் தொழிற்கருவிகள்.	4,000	3,96,000
சலவைத் தொழிற்கருவிகள்.	4,000	13,12,920
போயர் தொழிற்கருவிகள்.	250	25,000
மொத்தம் ..	8,250	17,53,920

குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தை சேர்ந்தவர்களுக்கு இலவசமாகத் தொழிற்கருவிகளை வழங்குதல் :

குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பயிற்சி யாளர்கள், பொதுப் பொறியியல் பட்டறைகளில் பயிற்சியை முடித்ததும், கருமார் தொழில், பொருத்துதல், தகரத்தொழில் ஆகிய தொழில்களில் தாங்களே சொந்தமாகத் தொழில் செய்ய இயலும் பொருட்டு, தொழிற் கருவிகள் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 0.10 இலட்சம் செலவிடப்பட்டது.

வேளாண்மை.

குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தை சேர்ந்த ஏழைகள் பாசனக் கிணறுகளைத் தோண்டும் பொருட்டு மூன்று தவணைகளில் உதவித் தொகையாக ரூ. 2,500 வழங்கப்பட்டது. இவ்வாண்டில், 50 புதிய கிணறுகளைத் தோண்டுவதற்காக ரூ. 1.40 இலட்சம் செலவிடப்பட்டது.

குடிசைத்தொழில்கள்.

செக்கானூரணி (மதுரை மாவட்டம்), முதுகுளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்), விரகேரளம்புதூர் (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் பொதுப் பொறியியல் பட்டறைகள் மூன்று நடத்தப்பட்டு வந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலையில் ஒரு பிரம்புத் தொழிற்பயிற்சி நிலையமும் குழித்துறையில் நார்ப்பொருள் தொழிற்பயிற்சி நிலையமும் நடத்தப்பட்டு வந்தன ; தென் ஆர்க்காடு மாவட்டம் அசிஸ் நகர் குடியிருப்பில் ஒரு தச்சுக்கூடமும் ஒரு நெசவுக் கூடமும் நடத்தப்பட்டு வந்தன. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, கம்பம் ஆகிய இடங்களிலும் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியிலும் திருநெல்வேலி மாவட்டம் குலவணிகபுரம், தேவர் குலம், ஆகிய இடங்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டம் அசிஸ் நகர் குடியிருப்பிலும், கன்னியாகுமரி மாவட்டம் கிருஷ்ணன்கோயில், நாகர்கோயில் ஆகிய இடங்களிலும் ஏழு தையற்பணிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வந்தன. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 2.82 இலட்சம் செலவிடப்பட்டது.

தனிப்பயிற்சி நிலையங்கள்.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் தேர்வு எழுதும் பொருட்டு தனிப்பயிற்சி நிலையம் (பின்தங்கிய வகுப்பினர்) தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1979-80 ஆம் ஆண்டில் இந்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு நடத்திய ஆரம்பத்தேர்வில், 49 மாணவர்கள் எழுதியதில் 21 பேர் தேர்ச்சி பெற்றனர்.

கள்ளர் சீரமைப்பு.

மதுரை மாவட்டத் தனித் துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) கள்ளர் சீரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பேற்று தொடர்ந்து

அப்பணியைப் புரிந்து வருகிறார். இவர்களுக்கான பள்ளிகள், உணவு இல்லங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.
1. ஆரம்பப்பள்ளிகள்	206	29,152
2. உயர்துவக்கப்பள்ளிகள்	32	11,014
3. உயர்நிலைப்பள்ளிகள்	8	1,984
4. மேல்நிலைப்பள்ளி	1	657
	247	42,807

கள்ளர் வகுப்பைச் சேர்ந்த உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கானத் தனிக் கட்டணங்களை பிற்பட்டோர் நலத்துறை செலுத்தியது. மதுரை மாவட்டத்தில் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய பள்ளிகளுக்கென மாவட்ட சாரண சங்கங்கள் தனியாக அமைக்கப்பட்டன ; கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய பள்ளிகளில் 258 சாரணர் பிரிவுகள் இருந்தன. அனுமதிக்கப்பட்ட 3,540 மாணவர்களைக் கொண்ட 28 உணவு இல்லங்களும் நடத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்பிற்குரிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியது தொடர்பாக ரூ. 131.15 இலட்சம் செலவிடப்பட்டது.

அசீஸ் நகர் குடியிருப்பு.

1979—80 ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள அசீஸ் நகர் குடியிருப்பின் பொறுப்பினை வட்டாட்சியரின் பகவித் தரத்திலுள்ள மேலாளர் ஒருவர் தொடர்ந்து நிருவகித்து வருகிறார். இங்கு குடியிருப்பவர்களின் முக்கியத் தொழில் வேளாண்மை தொழிலாகும். அவர்களுக்கு நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. அவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் அளிக்கும் பொருட்டு இரு பிரிவுகள் அதாவது தச்சுக்கூடமும், நெசவுக்கூடமும், இங்கு நடத்தப்பட்டன. இவை தவிர இக்குடியிருப்புப் பகுதியில்

ஐந்து குழந்தைகள் காப்பகங்களும் ஏற்படுத்தப்பட்டு நன்முறையில் செயல் பட்டு வந்தன. 20 பயிற்சியாளர்களைக் கொண்ட தையற்பள்ளி ஒன்றும் நடத்தப்பட்டது. இவ்வாண்டில் மேற்சொன்ன திட்டங்களைச் செயல்படுத் தியதற்காக ஏற்பட்ட செலவு பற்றிய விவரம் வருமாறு :—

	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1. தச்சு-நெசவுக் கூடங்களை நடத்தியது	0.10
2. குழந்தைகள் காப்பகங்களை நடத்தியது	0.01
3. தையற்பள்ளியை நடத்தியது	0.69

மொத்தம் 315 மாணவர்களைக்கொண்ட ஆரம்பப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. 1979—80-ம் ஆண்டில் ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் மாணவர் களுக்கு மதிய உணவு, பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுப் பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன. இம்மாணவர்களுக்கு இரண்டு 'செட்' சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. ஊராட்சி மன்றம் இக்குடியிருப்பாளர்களிடையே ஏற்படும் சிறு தகராறுகளைத் தீர்க்கும் நடுவர் மன்றமாகத் தொடர்ந்து செயல்பட்டது. ஒரு மருந்தகத்துடன் மருத் துவர் ஒருவரும் ஏனைய பணியாளர்களும் இங்குள்ளவர்களின் உடல்நலத்தைக் கவனித்து வந்தனர். இங்குள்ளவர்கள் சுகாதாரம் நிறைந்த சூழல்களில் வாழ்ந்து வந்ததோடு அரசு அளித்துவந்த அனைத்து சலுகைகளையும் நன்குப் பயன்படுத்திக்கொண்டனர். அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது.

அத்தியாயம் XX.

போக்குவரத்துத் துறை

போக்குவரத்துக் கழகம்.

மக்கள் பயணம் செய்வதற்காக நடப்பாண்டில், அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் எட்டை தமிழ்நாடு அரசு நடத்திவந்தது. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும், முழுநேர நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் முழு நேரத் தலைவரைப் பெற்றிருந்தது. போக்குவரத்துத் துறையின் அரசுச் செயலாளர் ஏனைய கழகங்களின் தலைவராவார்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) :

இக்கழகம் 1—1—1972 அன்று தொடங்கப்பட்டது. அப்போது இக் கழகத்திடம் 1,029 பேருந்துகள் இருந்தன. இக்கழகம், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் பேருந்துகளை இயக்கி வந்தது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி 1,690 பேருந்துகள் இயங்கின. இக்கழகத்தில் 10 சிறு பேருந்துகளும் இயங்கின. 31—3—1980 அன்றுள்ளபடி கழகத்தில் 14,152 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். இக்கழகம் 1979-80 ஆம் ஆண்டில் தன் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த அளவு 8.33 சதவீதம் ஊதியக் கொடையுடன், கருணை மானியம் ரூ. 100-ம் வழங்கியது. நாளொன்றுக்கு சராசரி 23.44 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்துள்ளனர்.

பல்லவன் போரக்குவரத்துக் கழகம் (மாவட்டம்) :

இக்கழகம் 15—9—1975 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இக்கழகம், செங்கல்பட்டு மாவட்டத்தில் பேருந்துகளை இயக்கி வந்தது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி 442 பேருந்துகள் இயங்கின. மேற்குறிப்பிட்ட நாளில் இக்கழகத்தில் 3,387 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இக்கழகம்; 1979-80 ஆம் ஆண்டில், தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த அளவு 8.33 சத

வீதம் ஊதியக்கொடையுடன் ரூ. 100 கருணை மானியமும் வழங்கியது. நாளொன்றுக்கு, சராசரி 1.80 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்துள்ளனர்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்:

இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைமையிடங்களையும் இணைக்கும் வகையில் 15—1—1980 வரை நெடுந்தொலைவு விரைவுப் பேருந்துகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் (விரைவுப் பேருந்து) பெயரில் இயக்கப்பட்டது. இக்கழகம் 16—1—1980 ஆம் நாளிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் பேருந்துகள் மாநிலம் முழுவதும் இயங்கி வந்தன. 31—1—1980 ஆம் நாள் நிலவரப்படி 394 பேருந்துகள் இயங்கின. மேற் சொன்ன நாளில் இக்கழகத்தில் 4,078 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். நாளொன்றுக்கு சராசரி 34,000 பயணிகள் விரைவுப் பேருந்துகளைப் பயன் படுத்திவந்தனர். இக்கழகம் 1979-80 ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தளவு 8.33 சதவீதம் ஊதியக் கொடையுடன் ரூ. 100 கருணை மானியமும் வழங்கியுள்ளது.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம், 17—1—1972 முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி இக்கழகத்தில் 931 பேருந்துகள் இயங்கின. இக்கழகத்தின் பேருந்துகள் மதுரை, இராமநாதபுரம், புதுக் கோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்கின. இக்கழகத்தில் சுமார் 6,902 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். இக்கழகம், 1979-80 ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு ஊதியக்கொடையும், கருணை மானியமும் சேர்த்து மொத்தம் 20 சதவீதம் வழங்கியது. நாளொன்றுக்கு, சராசரி 9.10 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்தனர். இக்கழகம் நிலக்கோட்டை வட்டத்தில் இரண்டு சிறு பேருந்துகளையும் தேனி பகுதியில் ஒன்றையும், இராமேஸ்வரம் தீவில் சிறு சக்கரப் பேருந்துகள் இரண்டையும் இயக்கி வந்துள்ளது.

சேரன் போக்குவரத்துக் கழகம் :

சேரன் போக்குவரத்துக் கழகம் 1—3—1972 அன்று தொடங்கப்பட்டது 31—3—1980 அன்றுள்ளபடி இக்கழகத்தில் 860 பேருந்துகள் இயங்கின. இக் கழகம் கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கி வந்தது. மேற்சொன்ன நாளில் இக்கழகத்தில் 6,140 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். 1979-80 ஆம் ஆண்டில், தொழிலாளர்களுக்கு உயரளவு 20 சதவீதம் ஊதியக்கொடையும் கருணை மானியமும் வழங்கியது. இப்பேருந்து களில் தினசரி சராசரி 7.28 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

சோழன் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் 1—3—1972 அன்று செயல்படத் தொடங்கியது. 31—3—1980 அன்றுள்ளபடி இக்கழகத்திடம் 689 பேருந்துகள் இருந்தன. 5,033 தொழி லாளர்கள் இக்கழகத்தில் பணியாற்றினர். 1979-80 ஆம் ஆண்டில் தொழி லாளர்கள் அனைவருக்கும் 8.33 சதவீதம் ஊதியக்கொடையும் 8.67 சதவீதம் கருணை மானியமும் வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 5.88 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

அண்ணா போக்குவரத்துக் கழகம் :

அண்ணா போக்குவரத்துக் கழகம் 15—2—1973 அன்று தொடங்கப் பட்டது. 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி, இக்கழகத்திடம் 434 பேருந்துகள் இருந்தன. 1979-80 ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் அனைவருக் கும் 8.33 சதவீதம் ஊதியக்கொடையும் 11.67 சதவீதம் கருணை மானியமும் வழங்கியது. மேற்சொன்ன நாளில் இக்கழகத்தில் 2,667 தொழிலாளர்கள் பணியாற்றினர். இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 2.78 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் 1—1—1974 அன்று செயல்படத் தொடங்கியது. இக்கழகம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கிட வந்தது. தொடக்கக் காலத்தில் 458 பேருந்துகள் இருந்தன. பின்னர், 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி 626 பேருந்துகள் இருந்தன. 31—3—1980 நிலவரப்படி இக்கழகத்தில் 4,604 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். 1979-80 ஆம் ஆண்டில், தொழிலாளர்களுக்கு 20 சதவிதம் ஊதியக் கொடையும் கருணை மானியமும் வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் நாள்தோறும் சராசரி 5.71 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம், 16—1—1975 அன்று தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் பேருந்துகள் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் இயங்கின. இக் கழகத்தின் தலைமையிடம் விழுப்புரம். 31—3—1980 ஆம் நாள் நிலவரப் படி இக்கழகத்திடம் 336 பேருந்துகள் இருந்தன. இக்கழகம், 1979-80 ஆம் ஆண்டில், தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தளவு 8.33 சதவிதம் ஊதியக்கொடையும், ரூ. 100 கருணை மானியமும் வழங்கியது. மேற் சொன்ன நாளில், இக்கழகத்தில் 2,437 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இக் கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு சுமார் 1.66 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

மோட்டார் வண்டிகள் நிர்வாகம்.

போக்குவரத்துத்துறை வருவாய்த் துறை வாரியத்தின் முதல் உறுப்பின ராக இருந்த போக்குவரத்து ஆணையாளரின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தது. போக்குவரத்து ஆணையாளர் மாநிலப் போக்குவரத்து அதிகாரி யும் ஆவார். அவருக்கு உதவியாக போக்குவரத்து ஆணையாளரின் செயலாள ராகிய இணைப் போக்குவரத்து ஆணையாளரும், இரண்டு துணைப் போக்கு வரத்து ஆணையாளர்களும், அவர்களில் ஒருவர் மாநிலப் போக்குவரத்து

அதிகாரியின் செயலாளராகவும் இருந்தனர். இம்மாநிலத்தில் நான்கு மண்டல துணைப் போக்குவரத்து ஆணையாளர்களும், 18 வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளும் இருந்தனர். மாவட்டங்களிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர்களாகிய வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் செயலாளர்களாகச் செயல்பட்டனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரை, வட்டார துணைப் போக்குவரத்து ஆணையாளர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக செயல்பட்டார். இத்துறை 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம், தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அவற்றின் விதித்துறைகளை செயல்படுத்தியது.

பேருந்துகள்—பேருந்து உரிமையாளர்கள்—வழித்தடங்கள்.

இம்மாநிலத்தில், ஏழு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இருந்தன. அவற்றிடம் 6,243 பேருந்துகள் இருந்தன. ஒன்றுமுதல் 49 பேருந்துகளைக் கொண்ட 2,655 தனியார் பேருந்து உரிமையாளர்கள் இருந்தனர். தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 5,064 ஆகும். 339 பெருநகர் பேருந்து வழித் தடங்கள், 1,749 மாநகர நகரப் பேருந்து வழித்தடங்கள், 4,622 சாதாரண வெளியூர் பேருந்து வழித்தடங்கள், 144 வெளியூர் விரைவுப் பேருந்து வழித்தடங்கள் ஆகியவை இருந்தன.

ஒப்பந்த ஊர்திகள் :

1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் இம்மாநிலத்தில் 16,256 ஒப்பந்த ஊர்திகள் இருந்தன. அவற்றில் சொகுசு பேருந்துகள் ஓம்னிப் பேருந்துகள், சுற்றுலா வாடகைக் கார்கள், சாதாரண வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆகியவையும் அடங்கும். அவ்வாண்டில், மாநிலப் போக்குவரத்து அதிகாரி, 375 வாடகைக் கார்களுக்கான அனுமதிகளையும், 11 அனைத்து இந்திய சுற்றுலா வாடகைக் கார்களுக்கான அனுமதிகளையும், வழங்கினார்.

சரக்கு வண்டிகள் :

இவ்வாண்டின் இறுதியில் இம்மாநிலத்தில் 26,267 வாடகைச் சரக்கு வண்டிகளும், 3,265 தனியார் சரக்கு வண்டிகளும் இருந்தன. அத்துடன் அனுமதிச் சிட்டுகளின் கீழ் வாராத 2,692 சரக்கு வண்டிகளும், சரக்கு வண்டிகளின் 73 தொடர் வண்டிகளும் இருந்தன.

டிராக்டர்கள், வேளாண்மைப் பணி தொடர்பான வண்டிகள் முதலியன :

இவ்வாண்டில் இறுதியில் இம்மாநிலத்தில், அனுமதி பெற்ற 7,878 டிராக்டர்கள், அனுமதி பெறாத 8,129 டிராக்டர்கள், 501 வேளாண்மைத் தொழில் தொடர்பான வண்டிகள் அனுமதி பெறாத 1,97,651 ஏனைய வண்டிகள் ஆகியவை இருந்தன.

ஓட்டுநர்—நடத்துநர் உரிமங்கள் :

இவ்வாண்டில், 59,235 புது ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டன. 1,13,693 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன. இவ்வாண்டில் வழங்கப்பட்ட புது நடத்துநர் உரிமங்கள், புதுப்பிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கைகள் முறையே 26,743-ம் 13,231-ம் ஆகும்.

மோட்டார் வண்டிகள் வாங்குதல்.

போக்குவரத்துக் கழகம், மின்சார வாரியம் ஆகியவை தவிர ஆனால் உள்ளாட்சி மன்றங்கள் தன்னாட்சி நிறுவனங்கள் உட்பட ஏனைய அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் மோட்டார் வண்டிகளை வாங்குவதில் போக்குவரத்து ஆணையாளரே தொடர்ந்து வாங்கும் அதிகாரியாக இருந்தார். அவ்வாண்டில் ரூ. 2,61,61,259. விலை மதிப்பீட்டில் 588 வண்டிகள் வாங்க தேவைப்பட்டியல் அனுப்பப்பட்டது.

செயற்படுத்தல்.

நான்கு மண்டல அலுவலகங்களையும் சேர்ந்த பறக்கும் படைப் பிரிவினர் வரி ஏய்ப்பு, அனுமதிகள், தகுதி சான்றிதழ்கள் முதலியன இன்றி போக்குவரத்துப் பணிகள் நடத்துதல் ஆகியவற்றைக் கண்டுபிடித்தனர். போக்கு

வரத்து துறை அதிகாரிகள் இவ்வாண்டில் 2,30,479 வண்டிகளைச் சாலைகளில் சோதனையிட்டனர். 1,344 தேர்வுகளில் அதிகப் புகை வெளியிட்டதற்காக CFX அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன. இவ்வாண்டில் 35,385 தேர்வு களில் சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டன. இணக்கக் கட்டணத் தொகையாக ரூ. 9,50,893-ம் வரியாக ரூ. 82,912-ம் வசூலிக்கப்பட்டன. 64 அனுமதிச் சீட்டுகள் ரத்து செய்யப்பட்டன; 9,613 அனுமதி சீட்டுகள் தற் காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. 561 ஓட்டுநர்களுக்கும் 343 நடத்துநர் களுக்கும் தண்டனை வழங்கப்பட்டன.

மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம்.

மாநில போக்குவரத்து அதிகார மன்றம் அதன் செயலாளர் வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றங்கள் அவற்றில் செயலாளர்கள் ஆகியோரின் ஆணைகளுக்கெதிரான மேல் முறையீட்டு அதிகார மன்றம் உள்ள மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம் ஆகும். மாவட்ட நீதிபதி யின் பதவித்தரத்தில் உள்ள ஓர் அதிகாரி இப்பதவியை வகிப்பார். இந்த நடுவர் மன்றம் 238 மறு ஆய்வு மனுக்களையும் 900 மேல் முறையீடுகளையும் அவ்வாண்டில் செய்து முடித்துள்ளது. இவ்வாண்டின் இறுதியில் 507 மறு ஆய்வுமனுக்களும் 2,162 மேல் முறையீடுகளும் முடிவு செய்யப்படாமல் இருந்தன. அவ்வாண்டில் 188 ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. 451 ரிட் மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் முடிவு செய்யப்படாத ரிட் மனுக்களின் எண்ணிக்கை 478 ஆகும்.

வருவாயும் செலவும்.

மோட்டார் வண்டி வரிகள் கட்டணங்கள் வாயிலாக கடந்த ஆண்டு வரு வாய் ரூ. 68.57 கோடி ஆகும். ஆனால் இவ்வாண்டு கிடைத்த வருவாய் ரூ. 78.38 கோடி ஆகும். அவ்வாண்டில் துறை நிர்வாகத்திற்குச் செலவான தொகை ரூ. 172.83 இலட்சம் ஆகும்.

மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம்.

மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம், தனித் துறையாக 1977ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அமைக்கப்பட்டது. இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளைச் சொந்த சுமார் 6,000 வண்டிகளை நல்ல நிலையில் பராமரித்து வருவது இந்நிறுவனத்தின் பொறுப்பாகும். சென்னை, தஞ்சாவூர், சேலம், மதுரை, காஞ்சிபுரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள ஒன்பது பணிக்களறிகளும், திருநெல்வேலியிலும் தலைமைச் செயலக வளாகத்திலும் உள்ள இரண்டு பணி நிலையங்களும் இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவருகின்றன.

கொள்முதல்-சேகரிப்பு மையப் பிரிவு, குறைவான விலை விதங்களில் உதிரிப்பாகங்களையும் துணைப் பாகங்களையும் மொத்தமாக வாங்குகிறது. 1979-80-ல் ரூ. 52 லட்சம் மதிப்புடைய உதிரிப் பாகங்கள் வாங்கப்பட்டன. கிளை அலுவலகங்கள் உள்ளூரில் 28.8 சதவீதம் அளவிற்கு உதிரிப் பாகங்களை வாங்கின. அது 18.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. சொந்தமாக வண்டிகளை வைத்திருக்கும் அலுவலர்களுக்குத் தேவைப்படும்போது டயர்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டில் செய்த பழுதுபார்த்தல் பணிகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பெரிய அளவில் பழுதுபார்க்கும் பணிகள்	328
இரண்டாம் முறையாகப் பழுதுபார்க்கும் பணிகள்	4,154
சிறிய அளவில் பழுதுபார்க்கும் பணிகள்	9,626
செப்பணிடும் பணிகள்	2,391
ஏனைய பணிகள்	392
	16,891

அரசுத் துறை வண்டிகளுக்குப் பழுது ஏற்படாமல் அவற்றைப் பராமரிப்பதற்கான திட்டம், வகுக்கப் பட்டுள்ளது.

பயனற்ற வண்டிகளை ஆய்ந்து அறிய வேண்டி, ஒவ்வொரு மாவட்டத்திலும் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில், மூன்று உறுப்பினர்கள் இருப்பர் ; தானியங்கி பொறியாளர், இக்குழுவின் தலைவர் ஆவார். இக்குழு வண்டிகளை ஆராய்ந்து அது தொடர்பான தொழில் நுட்பக் கருத்தைத் தெரிவிக்கிறது. இக்குழு இவ்வாண்டில் பல வண்டிகளை ஆராய்ந்து 189 வண்டிகள் பயனற்றவை எனக்கூறியது.

சிறு துறைமுகங்கள்.

மாநிலத் துறைமுக அதிகாரியே தொடர்ந்து தமிழ்நாடு துறைமுகத் துறையின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக கடலூர் துறைமுக அதிகாரியும், நாகப்பட்டினம் துறைமுக அதிகாரியும் தூர் வாரும் பணியைப் பார்வையிடும் பொறியாளரும் நிர்வாகப் பொறியாளரும் (சிவில்) உள்ளனர். கடலூர், நாகப்பட்டினத்திலுள்ள நடுத்தரத் துறைமுகங்களும் இராமேஸ்வரம், பாம்பன், கீழக்கரை, கொளச்சல் ஆகிய இடங்களிலுள்ள சிறு துறைமுகங்களும் மாநிலத் துறைமுகத்துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

துறைமுகத்தின் பணிகள்.

இந்த ஆண்டில் இடைநிலை, சிறிய துறைமுகங்கள் அனைத்திலும் 2,493 மீன்பிடிப் படகுகள் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்டன. நடுத்தர நிலை அல்லது சிறிய துறைமுகங்களில் சரக்குப் படகுகள் எதுவும் புதிதாகப் பதிவு யெ்சயப்படவில்லை. மொத்தம் 514 சரக்குப் படகுகள் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்டது.

வழிகாட்டி.

1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் 12,839.56 செ.மீ. டன் எடையுள்ள 86 கப்பல்கள் பாம்பன், கீழைக் கரைக் கால்வாய்கள் வழியாகச் சென்றன.

தூர்வாரும் பணிகள் :

கடலூரில் தூர் வாரும் இயந்திரங்கள் இரண்டும் மணல் வாரி இயந்திரங்கள் இரண்டும் உள்ளன. நாகப்பட்டினத்தில் தூர்வாரும் இயந்திரம் ஒன்றும் மணல் வாரி இயந்திரம் ஒன்றும் மண்டபத்தில் தூர் வாரும் இயந்திரம் ஒன்றும் உள்ளன. துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணியில் இந்த இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் கடலூரில் 60,640 மெட்ரிக் டன், நாகப்பட்டினத்தில் 1,819 மெட்ரிக் டன், மண்டபத்தில் 5,365 மெட்ரிக் டன் எடையுள்ள வண்டல் மண் வாரப்பட்டது.

சரக்கு:

இவ்வாண்டில் நடுத்தர சிறிய துறைமுகங்கள் மூலமாக மொத்தம் 64,309.04 மெட்ரிக் டன் எடையுள்ள வெங்காயம், இரும்பு, வண்ண மணல் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. மொத்தம் 5, 655.5 மெட்ரிக் டன் எடையுள்ள இரசாயன உரங்கள், பவழம் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன.

கப்பல் போக்குவரத்து :

இவ்வாண்டில் கடலூர் துறைமுகத்திற்கு 12 நீராவிக் கப்பல்களும் 20 பாய்மாக் கப்பல்களும் வந்தன. அதில் 12 நீராவிக் கப்பல்களும், 16 பாய்மரக் கப்பல்களும் புறப்பட்டுச் சென்றன. இவ்வாண்டில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் 65 நீராவிக் கப்பல்களும், 5 பாய்மரக் கப்பல்களும் வந்தன. அதில் 65 நீராவிக் கப்பல்களும், 3 பாய்மரக்கப்பல்களும் புறப்பட்டுச் சென்றன. இவ்வாண்டில் நாகப்பட்டினம், இராமேஸ்வரம் துறைமுகங்களில் வந்து சென்ற பயணிகளின் எண்ணிக்கை முறையே 90,618, 72,954 ஆகும். இவ்வாண்டில் நடுத்தர சிறிய துறைமுகங்கள் வழியாக முறையே 1,278 மெட்ரிக் டன். 14 மெட்ரிக் டன் ஆக பண்டகசாலை பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்பட்டன.

மேம்பாட்டுப் பணிகள்—

கடலூர் துறைமுகத்தில் ரூ. 53,033 செலவில் கப்பல் போக்குவரத்துக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. நாகப்பட்டிணம் துறைமுகத்தில் ரூ. 1,19,692 செலவில், இடைத்தங்கல் சரக்குக் கொட்டகை சுற்றுச் சுவர், கப்பல் துறை மேற்பார்வையாளர் குடியிருப்பு நான்கு ஆகியவை கட்டப்பட்டன.

நெடுஞ்சாலை கிராமப் பணிகள்.

நெடுஞ்சாலைகள்.—கிராமப் பணிகள் துறை, தமிழ்நாட்டிலுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைப்பது குறித்துத் திட்டமிடல் வடிவமைத்தல்--கட்டுமானம் பராமரிப்பு ஆகியவற்றின் பொறுப்பினை ஏற்றிருப்பதுடன், ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்படும் கிராமப் பணிகள் திட்டத்தைப் பொறுத்தவரையில் தொழில் நுட்ப அறிவுரையினை வழங்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைகள்.—கிராமப் பணிகள் துறை பின் வரும் வகைப்பட்ட சாலைகளை பராமரித்து வருகிறது. ஒவ்வொரு வகை சாலைகளின் நீளம் வருமாறு :—

	கிலோ மீட்டரில்
தேசிய நெடுஞ்சாலைகள் (நகர் பகுதி)	137
மாநில நெடுஞ்சாலைகள்	1.814
மாவட்ட நெடுஞ்சாலைகள்	13,948
ஏனைய மாவட்டச் சாலைகள்	17,569
மொத்தம்	33,468

மாநிலச் சாலைத் திட்டம் :

1979—80 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்த பின்வரும் பணிகளை நிறைவேற்றத் துறை நடவடிக்கை மேற்கொண்டது.

	பணிகளின் எண்ணிக்கை.	செலவு (ரூ. இலட்சத்தில்).
அ. மாநிலச் சாலைகள் திட்டம்		
தேசிய நெடுஞ்சாலைகள் (நகரப் பகுதி).	16	10.00
மாநில நெடுஞ்சாலைகள். ..	32	78.00
ஆ. மாவட்டச் சாலைகள். ..	28	60.00
இ. பாலங்கள்.	4	115.00

சேலம் உருக்காலைக்கு செல்லப் பயன்படும் சூரமங்கலம்—தாரமங்கலம் சாலையை ரூ. 130 இலட்சம் செலவில் மேம்படுத்தும் பணி விரைவில் நிறைவு பெறவுள்ளது. பின்வரும் பாலங்களின் கட்டுமானப் பணிகள் முடியும் நிலைமையில் உள்ளன.

	இலட்சம்.
(1) கொற்றலையாறு ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலம் (செங்கற்பட்டு மாவட்டம்)	17.00
(2) பொன்னேரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் மூழ்கு பாலம் (வட ஆர்க்காடு மாவட்டம்)	25.00
(3) வாச்சுக்கல் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் உயர் மட்டப்பாலம் (சேலம் மாவட்டம்)	5.30

நிழல் மரச்சாலை :

நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறை காடு வளர்ப்புத் திட்டத்துக்கு உறுதுணையாக அமையும் வகையில் சாலைகளில் நிழல் மரங்களை பரவலாக வும் முனைப்பாகவும் வளர்க்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது ; இத்திட்டத் தின்மூலம் வெட்டு மரங்களாகவும் விறகாகவும் பயன்படும் மரங்கள் மற்றும் தைல மரங்கள், பழந்தரும் மரங்கள், மலர் மரங்கள், நிழல் தரு மரங்கள் ஆகிய எண்ணற்ற வன மரங்களைப் பெருமளவில் நட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 18 இலட்சத்திற்கும் அதிகமான பனங்கொட்டைகள் நடப்பட்டன, அவை நீங்கலாகப் பிறவகை 6 இலட்சம் மரங்கள் சாலையின் இரு மருங்கிலும் நடப்பட்டன.

பழங்குடியினர் பகுதி மேம்பாடு :

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களின் பழங்குடியினர் பகுதிகளில் ரூ. 209.25 இலட்சம் செலவில் 171.10 கி.மீ. தொலைவிற்கு 12 சாலைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

கிராமச் சாலைகள் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் 31—3—1980 வரையில் ரூபாய் 18.50 கோடி செலவில் மொத்தம் 3,514 கி.மீ. நீளமுள்ள சாலைகள் போடும் பணிமேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 1979—80 ஆம் ஆண்டில் ரூ. 299.25 இலட்சம் செல விடப்பட்டது.

மண்சாலைகள் :

இத்திட்டத்தின்கீழ் 31—3—1980 வரையில் 8.56 கோடி செலவில் 6,227 கி.மீ. நீளமுள்ள சாலைகள் போடும் பணிமுடிக்கப்பட்டுள்ளது. இந்த 6,227 கி.மீ. நீளத்தில் 8.40 கி.மீ. நீளத்திற்கு கருங்கற்சாலை போடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் ரூபாய் 141.50 இலட்சம் செலவில் 16 பணிகள் அனுமதிக்கப்பட்டு ரூபாய் 31.38 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது.

கரும்பு பயிரிடும் பகுதிகளில் சாலை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 147.65 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சாலைகளை மேம்படுத்தியது, அமைத்தது, பாராமரிப்பிற்கு மேற்கொண்டது ஆகியவை தொடர்பாக 1—4—1980 ஆம் நாளன்றுள்ளபடி பணிகள் முடிக்கப் பட்ட மொத்த நீளம் 553.2 கி.மீ. ஆகும்.

உலக வங்கிக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் :

சென்னையில் வால்டாக்ஸ் சாலையில் சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகிலும், வடக்குக் கடற்கரைச் சாலையில் சென்னை கடற்கரை இரயில் நிலையத்திற்கு எதிரிலும், அண்ணா சாலையில் சஃபையர் திரையரங்கிற்கு அருகிலும், சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகிலும், இந்து நாளிதழ் அலுவலகத்திற்கு அருகிலும், பூவிருந்தவல்லி சாலையில் கீழ்ப்பாக்கம்

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அருகிலும் சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணி நிறைவு பெற்று அவை போக்குவரத்திற்கு திறந்து விடப் பட்டுள்ளன.

தமிழ் நாடு மாநிலக் கட்டுமானக் கழகம்.

மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு "தமிழ் நாடு மாநிலக் கட்டு மானக் கழகம்" அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கழகம், ரூ. 5 இலட்சமும் அதற்கு அதிகமாகவும் செலவு பிடிக்கும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும். ஒப்பந்தக்காரர்களால் கைவிடப்பட்ட பணிகள், ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெறாத பணிகள், ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவாக இருந்தபோதிலும் இக்கழகம் அப்பணிகளையும் மேற்கொள்ளும். இக்கழகம் 11—2—1980-ல் செயல்படத் தொடங்கியது.

தேசிய நெடுஞ்சாலை.

தேசிய நெடுஞ்சாலை பிரிவு ஒரு தனி தலைமை பொறியாளரின்கீழ் இயங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலை இந்திய அரசிற்கு சொந்தமானதாகும். தமிழ் நாட்டில் உள்ள நகரப் பகுதிகளில் உள்ள சாலைகள் உட்பட தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 1,865 கி.மீ. ஆகும். இவற்றுள் 125 கி.மீ, ஒருவழித்தடம் ஆகும். மீதமுள்ளது இருவழித்தடம் ஆகும். தேசிய நெடுஞ் சாலைகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்காக இந்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. மாநில நெடுஞ்சாலைத் துறை பணிகளைச் செயல்படுத்துகிறது.

தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளின் செயல்களும், இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளின் திட்டங்களும் கீழே தரப்பட்டுள்ளன :—

	ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை.	ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. (இலட்சம்)
1. நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கு முன்	25	78·189
2. 31-3-80 க்கு முன் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்	609	3932·300
3. பாம்பன் பால வேலை	1	532·870
	635	4543·359

நான்காவது ஐந்தாண்டு திட்ட கால அனைத்துப் பணிகளும் முடிந்து விட்டன. நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத் துவக்கம் முதற்கொண்டு அனுமதி அளிக்கப்பட்ட 609 சாலை மற்றும் பால வேலைகளில் 501 பணிகள் ரூ. 2,445 இலட்ச ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு விட்டன. எனைய பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1978-83) அனுமதி அளிப்பதற்காக ரூ. 2,411 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு இந்திய அரசு தற்காலிகமாக ஒப்புதல் அளித்தள்ளது. இது தவிர 427.45 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 30 பணிகள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. பாம்பன் பால வேலைத் திட்டத்தையும் சேர்த்து 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 528.00 இலட்சம். செலவு ரூ. 528.553 இலட்சம்.

தேசிய நெடுஞ்சாலைப் பராமரிப்பு :

இந்திய அரசு 1979-80 ஆம் ஆண்டிற்கான தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பிற்காக ரூ. 137.75 இலட்சம் அளித்துள்ளது. இந்த ஆண்டில் ரூ. 142.19 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

மத்திய சாலை நிதி திட்டப் பணிகள் :

ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ. 332.395 இலட்சம் மதிப்புள்ள 13 வேலைகள் இந்திய அரசினரால் அனுமதியளிக்கப்பட்டன. இவற்றுள்—

(அ) கீரவண்டிக்கருகே, பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி கர்நாடக அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான தமிழக அரசின் பங்கு செலுத்தப்பட்டு விட்டது.

(ஆ) இராமேஸ்வரம் தீவில் அருள்திரு கோதண்டராமசாமி கோவிலிலிருந்து மதுரை-தனுஷ்கோடி சாலையை இணைக்கும் சாலை அமைக்கும் பணி முடிந்துவிட்டது.

(இ) இரண்டு மலைச்சாலைப் பணிகள் ஆய்வில் உள்ளன.

மீதமுள்ள 9 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.

மத்திய அரசால் நிதி ஒதுக்கிடு செய்யப்படும். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கிழ், கிழ்க்கண்ட ஆராய்ச்சிப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

தொ. எண்.	பணியின் பெயர்.	தோராயமாக மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1.	முன்பே உருவாக்கப்பட்ட சிறு பால கட்டுமானங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு	2.70
2.	நெய்வேலி நிலக்கரியிலிருந்து சாலைகளுக்கான ஒட்டுப் பொருள் தயாரித்தல் மற்றும் சாலைப் பரப்புகளைப் போடுதல் ஆகிய பணிகளுக்காக ஒரு முன்னோடித் திட்டத்தினை உருவாக்குதல்	2.40
3.	மனித மற்றும் இயந்திர உழைப்பு பெருமங்களை உபயோகப்படுத்துவதற்காக இடைப்பட்ட சாலைக் கட்டுமான தொழில் நுட்பயிலை மேம்பாடு செய்தல்	3.50
		8.60

மேற்கண்ட வேலைகளுக்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 4.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சிறப்பு வேலைகள்.

செங்கற்பட்டு மாவட்டம் தொழுப்பேடு ரயில் நிலையத்தின் அருகில் தேசிய நெடுஞ்சாலை 100/8-10 கி.மீ. ரயில்வே மேம்பாலம் ரூ. 11,86,600 செலவில் கட்டி முடிக்கப்பட்டு 31—12—1979 அன்று பொது போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டம் சென்னை புலிகாட் கோட்டில் கி.மீ. 38-ல் அரணியார் மேம்பால வேலை ரூ. 21.85 இலட்சம் செலவில் இந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

வெள்ள நிவாரணப் பணிகள்.

1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள் மற்றும் கட்டுமானங்களின் மதிப்பீடு ரூ. 2,790.34 இலட்சங்களாகும். மத்திய அரசின் தூதுக்குழு நேரில் டிசம்பர் 1979-ல் பார்வையிட்டபோது அக் குழுவிடம் இச்சேத விபரம் கொடுக்கப்பட்டது. மத்திய தூதுக் குழுவின் அறிக்கையின்படி இந்தியப் பேரரசு கீழ்க்கண்டவாறு தனது பங்குத் தொகை யாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது :

	(ரூ.இலட்சத்தில்)
சாலைகள்	555.00
கட்டிடங்கள்	10.00
சிறு நீர்ப்பாசன குளங்கள்	23.00

1979-80 ஆம் ஆண்டில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும், செலவழிக்கப்பட்ட தொகையும், இனங்கள் வாரியாக தொகுத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

இனங்கள்	1979-80	
	நிதி ஒதுக்கீடு	செலவு.
அரசு சாலைகள்	339.90	346.31
ஊராட்சி ஒன்றியச் சாலைகள்	215.10	212.16
சிறு நீர்ப்பாசனக் குளங்கள்	23.00	23.05
கட்டிடங்கள்	27.00	26.88
	605.00	608.40

எழுது பொருள் அச்சகத் துறை.

பணியிலமர்த்துதல், பயிற்சிகள், பணிமேலாண்மை, தொழிலாளர் நல்லுறவு, உற்பத்தி குறியீடு ஆகியவை குறித்து முடிவுகள் எடுப்பதில் தனிக் கவனம் செலுத்துவதற்காக தனி இயக்ககம் 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டு இயக்ககம் அண்ணா சாலையிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

வள்ளலார் நகரிலுள்ள மைய அச்சகம், எழுது பொருள் இடங்கு, அண்ணா சாலை மற்றும் உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் உள்ள வெளியீடுகள், விற்பனை நிலையங்கள், சென்னை உயர்நீதி மன்றம், மத்திய சிறைச்சாலை மற்றும் சூளை ஆகியவிடங்களிலுள்ள கிளை அச்சகங்கள், புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம், சேலம், திருச்சி, விருத்தாசலம் மற்றும் மதுரை ஆகியவிடங்களிலுள்ள வட்டார அச்சகங்கள் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

அச்சு நூலின்படி உள்ள 6,693 படிவங்களை சீராய்வு செய்து நடைமுறையிலில்லாத 3,156 படிவங்கள் நீக்கப்பட்டன. 1,384 படிவங்கள் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டன. காகித தட்டுப்பாட்டை முன்னிட்டும் பொருளாதாரச் சிக்கனத்தை கருத்தில் கொண்டும் அஞ்சல் உறைகளுக்கு பதிலாக உள்நாட்டு அஞ்சற்கடிதங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பயிற்சியாளர் திட்டம்.

அச்சுத் தொழிலின் பல்வேறு பிரிவுகளிலும் 301 பயிற்சியாளருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் (திருத்தம்) சட்டம் 1973-ன் படி 45 பயிற்சியாளர்கள் (டிப்ளமோ மற்றும் சான்ட்விச் மாணவர்கள்) மைய அச்சகத்தில் பயிற்சி பெறுகின்றனர்.

மைய அச்சகம், வள்ளலார் நகர்.

இவ்வச்சகத்தில் இவ்வாண்டு அரசின் முக்கிய அச்சக பணிகளான வரவு-செலவு கணக்கு, பரிசுச் சீட்டு, சட்டமன்ற நடவடிக்கைகள், உணவுப் பங்கீடு அட்டை, பால் அட்டைகள், பள்ளி மேல்நிலைக் கல்விக்கான வடிவங்கள், உறைகள் மற்றும் விடைத்தாள்கள் போன்றவற்றை மேற்கொண்டது. இங்கு இவ்வாண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள், பாராளுமன்ற பொதுத் தேர்தல், இரண்டு பட்டதாரிகள் மற்றும் இரண்டு ஆசிரியர் தொகுதிகளுக்கான மற்றும் மூன்று தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன், சதாசிவம் கமிஷன் அறிக்கைகளும், "பெரியார் புரட்சி மொழிகள்" என்ற நூலும் அச்சிடப்பட்டன.

எழுது பொருள் கிடங்கு.

தலைமை இயக்குநர் வழங்குதல் மற்றும் நிறைவேற்றுதல், புதுதில்லி ஒதுக்கீடு செய்யப்பெற்ற 367 மெட்ரிக் டன் காகிதத்தில் 265 மெட்ரிக் டன் காகிதமே ஆலைகளால் அளிக்கப்பட்டன. ஒதுக்கீடு செய்யப்பட்ட 510 குவின்டால் ஸ்டிராபோர்டுகள் முழுவதும் வரப்பெற்றுள்ளன. தலைமை இயக்குநர் வழங்குதல் மற்றும் நிறைவேற்றுதல், புதுதில்லி ஒதுக்கப்பெற்ற காகிதம் தேவைக்குப் போதுமானதாக இல்லாததால் சேஷசாயி பேப்பர் அண்டு போர்டுஸ், ஈரோடு நிறுவனத்திலிருந்து 1,500 மெட்ரிக் டன் விலை நிர்ணய ஒதுக்கீட்டுக்கு கோரப்பட்டு 700 மெட்ரிக் டன் பெறப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 482 படிபெருக்கிகளுக்கும், 179 கணக்கிடும் பொறிகளுக்கும், 50 தமிழ்த் தட்டச்சுப் பொறிகளுக்கும், 290 ஆங்கில தட்டச்சுப் பொறிகளுக்கும் ஒரு காசோலை எழுதும் பொறிக்கும் வழங்காணை பல நிறுவனங்களுக்குப் பிறப்பிக்கப்பட்டது. பயனற்றதாகக் கழிக்கப்பெற்ற தட்டச்சுப் பொறிகளும், படிபெருக்கிகளும் பல்வகை எழுது பொருட்களும் ஏலத்தில் விட்டதில் ரூபாய் 83,743.21 கிட்டியுள்ளது. முன்பணம் கொடுத்து எழுது பொருள் வாங்கும் அலுவலர்களுக்கு எழுது பொருள் வழங்கியதின் பொருட்டு அவர்களிடமிருந்து ரூ. 4,53,346.16 பைசா வசூலிக்கப்பட்டது.

வெளியீடு விற்பனை நிலையம்.

அண்ணா சாலையிலுள்ள வெளியீடு விற்பனை நிலையம் மற்றும் உயர்நீதி மன்ற கட்டிடத்தில் உள்ள விற்பனை நிலையத்திலும் மத்திய மாநில அரசு களின் வெளியீடுகள் விற்கப்படுகின்றன. அண்ணா சாலை வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் மூலம் ரூ. 2,22,586.06 வசூல் ஆகியது. உயர்நீதி மன்ற கிளை விற்பனை நிலையம் மூலம் வசூலான தொகை ரூ. 43,920.80 ஆகும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி நேரத் தலைவரும், முழுநேர நிர்வாக இயக்குநரும் ஆறு அலுவல் சார்புள்ள இயக்கு நர்களும் உள்ளனர் இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4,30,00,000 ஆகும்.

பணி செயல் முறைகள்.

எம். வி. " தமிழ்ப் பெரியார், ஈ.வெ.ரா." (கப்பல்) நிலக்கரி, உப்பு, சிமிட்டி ஆகியவற்றை ஆண்டு முழுதும் கடலோரப் பகுதிகளில் கொண்டு சென்றது. அதே வேளையில் எம்.வி. " தமிழ் அண்ணா " 1979 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பாதி வரை நிலக்கரியினைக் கொண்டு செல்வதில் ஈடுபட்டது. அக் கப்பல்களால் கொண்டு செல்லப்பட்ட பொருட்களின் மொத்த எடை 73,353 டன்களாகும். இவ்வாண்டில் இக்கழகம், தமிழ்நாடு மின் வாரியத்தின் தூத்துக் குடியிலுள்ள புதிய மின் சக்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியினைக் கொண்டு செல்ல மூன்று கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியது. இக்கப்பல்கள் இயக்குதலுக்காகும் உள்ளபடி செலவு மற்றும் நிர்வாகச் செலவுத் தொகை ஆகியவற்றை மட்டுமே வசூலித்து இயக்கப்பட்டன. இம்மூன்று கப்பல்களும் 79,632 மெட்ரிக் டன் எடையுள்ள நிலக்கரியினைக் கொண்டு சென்றன. இவ் வாண்டில் இக்கழகம் கொண்டு சென்ற சரக்கின் எடை பின்வரும் விவரப்படி 1,52,985 மெட்ரிக் டன்களாகும்.

நிலக்கரி	1,41,312 டன்கள்
உப்பு	4,102 டன்கள்
சிமிட்டி	7,571 டன்கள்
ஆக	1,52,985 டன்கள்

" தமிழ் அண்ணா " என்ற கப்பலுக்குரிய சான்றிதழ் 1979 ஆம் ஆண்டு சூலையில் முடிவுற்றது. அக்கப்பலைக் கட்டி முடித்து 21 ஆண்டுகள் ஆயின. மேற்கொண்டு இக்கப்பலை இயக்க வேண்டுமாயின் அதனை அதிகச் செலவு செய்து பழுது பார்க்க வேண்டியிருந்தது. கப்பலைப் பழுது பார்ப்பது சிக்கனமற்றதாகும் என்று கருதப்பட்டது. ஆகவே இக்கப்பல் பயனற்றதென கழித்து விற்கப்பட்டது.